Q 23138. 2197. 1
N26

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
223899
சென்னை
நூலகம்

600
291.535

உ
சிவமயம்

ஸ்ரீமத் கைலாச பருவதச்சாரிபில் சைவமுனி குருபரம்பரை
சிவதருமணி அதிவருண சிவாசிரம குடிசிகசந்யாச
சுத்தசைவம் புலியூர்மடம் ஆதீனம் வித்வத்
அழகிய திருச்சிற்றம்பல தேசிகரவர்களால்
அருளிச்செய்த.

தென்காசித் தலபுராணம்.

மூலம்.

இராஜஸ்ரீ பேட்டை,
ஆறுமுகநயினார்பிள்ளை அவர்களது
அரும்பதவுரையுடன் அச்சியற்றப்பெற்று.

திருநெல்வேலிஜில்லா இந்து கலாசாலை
தலைமைத் தமிழ்ப்பண்டிதர்
ஸ்ரீ ல ஸ்ரீ,
மே. சொ. சுப்பிரமணிய கவிராயரவர்களால்
பரிசோதிக்கப்பெற்றது.

THE REGISTRAR
9 - FEB 1927
MADRAS

ஸ்ரீலோகாம்பிகா சமேத விசுவநாதசுவாமி தேவஸ்தானம்
மகா-ராஜ-ராஜ ஸ்ரீ தருமகர்த்தர்கள் அனுமதியுடன்
ஷை கோவில் பொருளுதவியைக்கொண்டு.

தென்காசி,
ஸ்ரீ ராமாநுஜம் அச்சுயந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

அக்ஷய ஞு
முதல் பதிப்பு காப்பி 1000.
இதன் விலை ரு 1] 1926 [ரிஜிஸ்தர் செய்யப்பெற்றது

சிவமயம்

தட்சணாமூர்த்தி தேசிகரவர்களியற்றிய
சிறப்புப்பாயிரம்.

சீராரு மதிகுலத்துப் பாண்டியர்தம் பரம்பரையிற் சிறப்புற் றோங்கிப்
பேராரும் விந்தகல்லூர் மன்னவன்சண் பகமாறன் பெட்பாற் கந்தன்
ஏராரும் பதம்பரவக் கவனமா குளிகையினை யெய்திக் கங்கை
நீராருங் காசிநிதந் தரிசித்துத் தொழுதவரும் நியமம் பூண்டான். (௧)

அன்னதனாற் காசிகண்ட பராக்கிரம னெனவிருந் தரசா வந்த
மன்னவனாற் சிவபெருமா னருளியவா சண்பகமா வனத்தி ருத்தித்
துன்னியகாற் றிசைபுகழ்தென் காசிமான் மியந்தமிழிற் சொல்லுகென்றத்
தென்னவனாட் டுறைசைவ சிரேட்டரெலா மன்புகொடு தெரிவித் தாரால்.

வேறு

ஆங்கவர்தம் ஞானவுப தேசஞ்செய் குருவா
யமர்ந்தசிவ தருமணிய வாசிரிய னென்னத்
தீங்கில்வட மொழியினுந்தென் மொழியினிலுஞ் சிறந்து
திகழ்பலசாத் திரங்களையுந் திரிபறக்கற் றுணர்ந்தோன்
பாங்கினொடு திருநீறு மக்கமணி யணியும்
பரமுத்தி சாதனமாம் பண்டமென வணிவோன்
ஓங்கியநித் தியநைமித் தியகாமி யமென
உரைப்பவைக ளநுட்டிப்போன் சிவயாக முடையோன் (௩)

மிச்சிரகே வலசுத்த பூசையொடு மிளிரு
மெய்கண்ட சந்தான சிவாச்சிரம மேலோன்
நச்சுருகா மாதியோரா றுட்பகையை நலிதல்
நாடுறுவட் குண்டலமுங் காதணியா வுகந்தோன்
மெச்சுகுடி சிகசந்நி யாசனுப வீத
மெய்பணியா நங்கள்குல மேலோன்சித் தாந்த
அச்சைவ குலகுருவா மழகியதி ருச்சிற்
றம்பலகு மாரகவி திருவுள்ள மமைந்தே. (௪)

வேறு

ஆரியத்தி லுள்ளதிருத் தென்காசிப் புராணகதை யாராய்ந் தெண்ணிச்
சீரியற்று செந்தமிழா லுலகமெலாம் புகழ்ந்தேத்தச் செய்து வானோர்
நாரியற்று விசுவேசன் பதம்பணிந்து மையாளு முலகாண் முன்னே
நேரியற்று சைவமகா சபையிலரங் கேற்றியிசை நிலைபெற் றானே. (௫)

திருவளழ கியதிருச்சிற் றம்பலகு மாரகவி செய்தென் காசி
யருமையுறு புராணமிதை யத்தலத்துத் தருமகர்த்த ராய சைவப்
பெருமையினர் சுந்தரமா வுடையராய கம்வேலா யுதமாம் பேர்கொள்
தருமகுணர் புவிபரவ வச்சியற்றி னாரவர்மே தகவின் வாழி. (௬)

22.3.8

சிவமயம்

படல அட்டவணை.

இலக்கம்	படலத்தின் பெயர்.	பக்கம்
1	கடவுள் வணக்கம்	௧
2	புராண வரலாறு.	௫
3	சிறப்புப்பாயிரம்.	௮
௧	நாட்டுச்சிறப்பு	௯
௨	நகரச்சிறப்பு	௨௰
௩	தலவிசேடம்	௩௮
௪	தீர்த்தவிசேடம்	௪௮
௫	மூர்த்திவிசேடம்	௫௯
௬	நாரதன் தென்காசிமான்மியங் கேட்டபடலம்	௬௮
௭	நாரதன் வரம்பெறு படலம்	௭௫
௮	கவுசிகனுபதேசம்பெற்ற படலம்	௮௰
௯	புரந்தரன் மலையின்சிறகரி திறல்பெற்ற படலம்	௯௰
௰	மைநாகம் வாழ்வுபெற்ற படலம்	௯௮
௰௧	வச்சிராயுதம் கூர்மைபெற்ற படலம்	௱௪
௰௨	அகத்தியன் திருமணக்காட்சிபெற்ற படலம்	௱௯
௰௩	குலசேகரப்பாண்டியன் மகப்பேறடைந்த படலம்	௱௰௯
௰௪	குழல்வாய்மொழியம்மை திருமணப்படலம்	௱௨௯
௰௫	மிருகண்டு வரம்பெற்ற படலம்	௱௫௯
௰௬	தேவிக்குக்குடிலையுபதேசஞ்செய்தருளிய படலம்	௱௭௨
௰௭	தரணிபீடச் சிறப்புரைத்தபடலம்	௱௭௭
௰௮	சிலாதரன் மகப்பேறடைந்த படலம்	௱௮௩
௰௯	நந்தியுபதேசம்பெற்ற படலம்	௱௮௯
௨௰	நந்திக்கு முடிசூட்டுவிழாப்படலம்	௱௯௩
௨௧	சிரும்பாசுரன் திக்குவிஜயஞ்செய்த படலம்	௱௯௮
௨௨	சிரும்பாசுர சங்காரப்படலம்	௨௱௯
௨௩	வாலிவரம்பெற்ற படலம்	௨௨௰
௨௪	கண்ணுவருக்கு ஆனந்தநடக்காட்சியருளியபடலம்	௨௨௫
௨௫	செண்பகபாண்டியனுற்பத்தியாட்சிப்படலம்	௨௩௩
௨௬	செண்பகபாண்டியன் குளிகைபெற்ற படலம்	௨௪௭
௨௭	செண்பகமாறன் காசிகண்டபடலம்	௨௫௪
௨௮	தென்காசித்திருநகராக்கிய படலம்	௨௬௧
௨௯	திருக்கோயின்மகிமையுரைத்த படலம்	௨௬௮
௩௰	ஆசாரவிதியுரைத்த படலம்	௨௭௨
	படலம் முற்றும்	

பரிசோதவணப்பத்திரம்.

பக்கம்	பாடல்	வரி	பிழை	திருத்தம்
5	4	6	பாரணதகை	புராணத்தை
10	6	3	டதகி	டத்தி
,,	11	4	பதிடடித்	பதிட்டித்
14	31	2	கடுபப	கடுப்பப்
,,	32	4	காதது	காத்து
15	37	3	லாம	லாம்
16	44	1	பது	புது
,,	,,	4	ருபப	ருப்ப
,,	,,	,,	கிளங்கெடுத	கிழங்கெடுத்
,,	45	3	கொன	கொன்
,,	,,	4	பொன	பொன
17	55	2	ணி	ணிப்
21	9	4	கழ்து	கழ்ந்து
,,	11	2	நாய	ஞய
22	13	3	பகர்நது	கர்ந்து
,,	14	,,	வெய்போ	வெய்யோ
24	29	2	பொழில்பூ	பொழிற்பூ
29	63	4	பலவளக்	பல்வளக்
30	68	2	புறக்	புறக
31	76	2	மீட்டி	மீட்டிச்
32	82	3	விழிதக	விழிதக்
39	11	,,	பனனி	பன்னி
,,	,,	4	னமம	னம்ம
44	34	1	திகழ்	திகள்
46	50	3	வேள	வேள்
48	61	2	கடன	கடன்
,,	,,	,,	ளனப	ளன்பு
,,	,,	2	மூடித்	மூடித்
52	27	3	தாத்து	தாத்து
54	39	,,	ணிமபரு	ணிமபரு
57	60	2	கிளற்று	கிளத்து
60	8	3	திரம	திரம்
,,	,,	4	மாததான்	மாத்தான்
61	14	2	மைமபத்	மைம்பத்
,,	18	,,	பேசி	பேசிப்

பக்கம்	பாடல்	வரி	பிழை	திருத்தம்
61	19	3	துறவு	துருவு
63	31	4	மனி	மணி
64	38	1	கற்றுளி	கற்றுளிக்
65	40	4	னெனு	னென
69	7	4	போலி	பொலி
71	18	1	முருக	முருகக்
,,	,,	2	முருக	முருகச்
,,	,,	3	முருக	முருகப்
,,	20	,,	மூன	மூன்
,,	,,	4	டயில	யபிற்
,,	,,	,,	னெனற்	னெனல்
72	30	3	யுறஞ்	புறஞ்
,,	31	4	ஞேறையநின்	ஞேறைநின்
73	34	2	நிங்கிட	நீங்கிட
,,	39	3	பழிச்சற்	பழிச்சக்
80	,,	4	சிததிரை	சித்திரை
81	4	2	வததா	வத்தா
,,	6	,,	புததி	புத்தி
,,	10	3	பிததே	பித்தே
84	31	4	ரார	ரார
,,	32	3	ஞாதஞ்	ஞதாஞ்
85	37	2	கைததின	கைத்தின்
,,	,,	3	கைதகோ	கைக்கோ
,,	,,	,,	டமப	டம்ப
92	17	2	நிற்ப	நிற்பச்
,,	,,	3	நிற்ப	நிற்பக்
96	44	2	வற்	வெற்
97	51	2	தரும்படி	ரும்படி
99	8	,,	காகவி	காகம்வி
,,	10	4	வாழ்விஃ	வாழ்வி
104	3	3	கூடுமொ	கூடுமோ
105	9	2	பான்மை	பான்மையின்
106	19	1	ாண்	மாண்
,,	21	4	பொங்கன்	பொங்கல்
107	26	3	புடம்பி	யுடம்பி
,,	28	2	வுலகவம	உலகவம்
108	33	3	கரீஇப	ரீஇப்

பக்கம்	பாடல்	வரி	பிழை	திருத்தம்
109	7	1	வமா	வுமா
110	9	2	போலு	போலும்
112	24	3	கென்ன	கென்னத்
113	30	2	நிற்ப	நிற்பக்
,,	34	4	லேனே	லேன்றே
116	59	1	சகங்	சகங்
124	35	3	ஞப	ஞய
126	4	,,	சாவா	சாவரப்
127	13	,,	ாஞ்சற	மஞ்சட்
130	31	,,	ஞந	ஞநம்
132	47	4	கவு	கவும்
133	54	1	வின்று	லின்று
134	57	3	தவு	தவும்
,,	62	4	மென்றக்	மென்று
135	63	3	மெயான்	யீயான்
137	80	,,	லாரு	லாரும்
139	88	,,	லமமை	னம்மை
142	109	,,	றற	றா
143	113	1	தெலிங்கர்	தெலுங்கர்
,,	118	2	ம	ம்
144	123	1	களவங்	களும்வங்
,,	,,	2	வனைத்துவங்	வனைத்தும்வங்
,,	,,	4	ரலாரு	ரலாரும்
146	133	2	டுததா	டுத்தா
152	176	,,	ளார்த்	ளார்தத்
154	193	,,	குழீக்	குழீஇக்
166	71	1	மிககத்	மிகக
,,	72	4	நனமைய	நன்மைய
168	82	3	கெழின்	கெழில்
169	92	,,	குறுகல	குறுகல்
,,	93	2	மிப்பாற	மிப்பாற்
171	109	3	யியன	யியன்
173	6	,,	திகழுவாய்	திகழும்வாய்
,,	6	,,	சொலு	சொலும்
,,	,,	4	வகர்க்கு	வகர்க்கும்
175	20	3	திரண்டு	திரண்டும்
182	25	,,	மஞ்சல்	பஞ்சள்

பக்கம்	பாடல்	வரி	பிழை	திருத்தம்
182	26	1	ணெடிய	ணெடிய
191	40	,,	நிற்குண	நிர்க்குண
193	52	2	வததிர்	வத்திர்
,,	1	4	பல	யலசெ
194	3	,,	றனன	றனன்
,,	4	,,	ரலாம்	ரலா
195	13	3	கொடுதத	கொடுத்த
,,	15	2	பஞசகும	பஞசகும்
,,	16	4	கழாதிடி	கழ்ந்திடி
198	1	3	நும	ரும்
205	45	1	போய்	போய்த்
208	13	4	டுறப்பிலா	டுறபலா
,,	,,	,,	விவிங்கம்	விவிங்கங்
209	21	,,	ரனுக்	ரனத்
241	57	3	புண்மை	யுண்மை
,,4	63	4	றுற்றனர்	றுற்றனர்
245	79	,,	ழைத்தான்	ளைத்தான்
,,	83	,,	னின்றுமா	னின்றும்
24	88	3	வல்மி	வல்வி
,,	91	1	பாண்டியின்	பாண்டியன்
248	6	4	றுரை	றுறை
250	26	,,	ஞபிஞன்	ஞன்
253	46	,,	சாத்	உதாய்ப்
254	1	4	வோ	வா
256	14	,,	றறி	றரி
,,	18	3	கெரிப்பட்டுப்	கெறிப்பட்டுப்
258	32	4	தூங்கிலா	துறங்கிலா
265	27	2	மிலர்	மலர்
268	48	1	னிரைக்த	னிறைந்த
,,	49	2	ணலணைலரந்	ணலனைவாந்
,,	50	1	கூடடு	கூட்டு
,,	51	2	ஙூல	ஙூல்
,,	,,	4	செபது	செய்து
269	4	2	னீணி	நீணி
,,	8	4	தனிலு	தனிலுந்
270	10	3	றறிப்பிற்	றரிப்பின்
271	14	4	செரிந்த	செறிந்த

பக்கம்	பாடல்	வரி	பிழை	திருத்தம்
271	16	4	விடத்தம	விடத்தம்
272	2	4	ஞத்திரி	ஞதிரி
,,	3	1	றனப்	ரனப்
,,	4	4	[illegible]	வம்மை
273	6	1	னறு	[illegible]
,,	6	4	நிலததி	நிலத்து
,,	8	2	வேண்	வெண்
,,	9	,,	வட்சு	வட்டு
,,	,,	3	னில்லாமம்	நில்லாம்
,,	,,	4	வுயுற்குக்	வுயிர்க்குக்
,,	,,	,,	யுரு	யுறு
274	11	2	லும	லும்
,,	,,	4	நன	நன்
,,	12	1	கொலைபிற்கொ	கொலைக்கொடி
,,	,,	,,	சொறுத்	தொறுத்
,,	,,	,,	கூழ்களை	கூழ்களைக்
,,	,,	3	படை	புடை
,,	,,	4	வுரைக்கிலலா	யுரைக்கில்லா
,,	13	1	கிரை	கிறை
,,	,,	2	காண	காண்
,,	,,	3	கண	கண்
,,	15	2	வாழித்	வாழி

775/1-27

OFFICE OF THE RE... MADRAS
9 - FEB 1927

உ
சிவமயம்

முகவுரை.

உலகத்தில் ஓரறிவுயிர்முதல் ஆறறிவுயிர் வரையுள்ள அனைத்துயிர்களுமின்பத்தையே நாடுகின்றன. ஆயினும், அவைகளுள் தாம் நாடுமின்பத்தைச் சிறப்புவகையானனுபவித்தற்கு ஆறறிவுயிராகிய மக்களுயிரே உரிமையுடையது. தீயொழுக்க மிக்க தூர்த்தன்முதல் நல்லொழுக்கந்தலைநின்ற சிவஞானியீறாகவுள்ள அனைவரும் நாடுவது இன்பமேயென்றாலும், அவ்வின்பங்களெல்லாம் ஒரு நிகரனவாகாமல் பல பல படிமுறைகளாக் அமைகின்றன. உலகப்பற்றே மருவிய ஒருவன் கட்காமாதிகளா லின்பம் வருகின்றதென்று கொண்டு அவ் வின்பங்களைப்பெற விரும்பி அவைகளையனுபவித்து இன்பம் நுகர்கின்றான். உலக நிராசையுள்ள சிவஞானியொருவன் சிவபெருமான் திருவடிக்கண் அன்பு செலுத்துவதனாலே யின்பம் வருகிறதென்று கொண்டு அவ்வின்பத்தைப்பெற விரும்பிச் சிவபெருமானைத் தலையாக்கும் பிட்டு மனமார வாயார வழுத்தித் தான் கருதுமின்பம் நுகர்கின்றான். இவ்விருவகையின்பமும் பொதுவகையான் இன்பமெனப் படினும், அவை தம்முள் ஒப்பனவல்ல.

சுவையுடைய 'பொருளொன்றையுண்ணுமொருவன் அப்பொருளை யுண்ணுங்காலத்து ஓரின்பங்கொள்கின்றான். மிகுந்த வாசனையுடைய பொருளை முகரும் ஒருவன் அப்பொருளை முகருங்காலத்து ஓரின்பங்கொள்ளுகின்றான். இவற்றுள் உண்ணும் பொருளினும் முகரும்பொருள் சிறிது நீண்டகாலமிருத்தலின் உண்ணுதலான் வருமின்பத்தினும்முகருதலால் வருமின்பம் சிறந்ததாகின்றது. இதனாலறியக்கிடப்பதென்னவென்றால், பொருள்களின்கால நீட்சியைப்பொறுத்தே அவற்றால் வருமின்ப நீட்சியுமுள்ளதென்பதேயாம்.

இனி உண்மையால் நோக்குவார்க்கு உலகத்திலுள்ள பொருள்களனைத்தும் அழியும் பொருள்களாயிருத்தலின் அவற்றால் வருமின்பமும் அழிவுள்ளதேயாகும். ஆகவே, உயிர்கள் உலகப்பொருள்களாலனுபவிக்குமின்பம் நிலையற்றதே. பின்னை நிலையுள்ள வின்பந்தான் யாதோவெனின், எப்பொருள் எக்காலத்துமுள்ளதாய், என்றும்ஒருபடியாயுள்ளதாய் ஆனந்தமயமாயுள்ளதோ அப்பொருளால் வருமின்பமே யென்றும் மாறாதவின்பமாம்.

அப்பொருள் பரமபதங்களப்பொருளாகிய சிவபரம்பொருளையன்றி வேறின்மையின் சிவபெருமான் தருமின்பமே பேரின்பமாம்.

இதுபற்றியே:-

நிறைவெண் கொடிமாட நெற்றி நேர்தீண்டப்
பிறைவந் திறைதாக்கும் பேரம் பலத்தில்லைச்
சிறைவண் டறைபோவாச் சிற்றம் பலமேய
இறைவன் கழலேத்து மின்ப மின்பமே.

யென்னுஞ் சுருதியுமெழுந்தது.

இனி யிப்பேரின்ப நிலையை நாமடைவது அச்சிவபெருமானுடைய திருவருளாலேயன்றி மற்றெதனாலுமன்று. கடவுளுடைய திருவருளை நாமடைவதற்கேற்பட்ட சாதனங்கள் சரியை கிரியை, யோகம், ஞான மென்னும் நான்குமாம். இந்நான்கினையும் நாம் பயின்றுவரின் அவ்வந்நிலைதோறும் அநுபவப்பயனாக அன்பு நிகழும் இவ்வன்பினாலே கடவுளருளைப்பெற்று அப்பேரானந்தத்தை நாமடையலாம்.

ஒருவனுடைய சிறந்த வீரச்செயல்களைக் கேட்டமாத்திரத்தில் வீரர்களுக்கு அவன்மீது அன்பு உண்டாவதும் ஒருவனுடைய அகடிதகடன சாமர்த்தியத்தைக்கேட்குங்காலத்து உலகத்தார்க்கு அவன் மீதன்புண்டாவதும் நாமநுபவத்திலறிவோம். ஆகவே சிவபெருமானிடம் அன்பு நிகழவேண்டுமாயின் அப்பெருமானுடைய அனந்த கல்யாண குணங்களையும் அப்பெருமான் மெய்யன்பர்களுக்கு அருள்புரிந்த செயல்களையும் நாம் செவிமடுத்தல்வேண்டும். இங்ஙனம் சிவபரம்பொருளின் குணங்களையுஞ்செயல்களையுங்கூறும் நூல்கள்பலவாம். ஆயினுமவற்றை விரித்துக்கூறவெழுந்த நூல்களே புராணங்களாகும். இப்புராணங்கள் சிவபெருமானதுபொருள்சேர் புகழைக் கூறுதலோடு வேதமந்திரங்களுக்கும் பொருள் விரிப்பனவுமாகும். இதனையறிவுறுத்தவே "சூதனொலிமாலையென்றே கவிக்கோவை சொல்லே" என்னுஞ் சுருதியும், "சிறப்புடைய புராணங்களுணர்ந்தும் வேத சிரப்பொருளை மிகத் தெளிந்துஞ் சென்றாற் சைவத்திறத்தடைவர்" என்னும் அருள் மொழியும் எழுந்தன. இதனை விளக்கவே,

நாளாண்மை யில்லாதார் வேளாண்மை செலுத்துவதுந்
தரையமே லென்றும்
வேளாண்மை யில்லாதார் மனைவாழ்க்கை செலுத்துவதும்
விசயம் வேட்டு

வாளாண்மை யில்லாதார் மண்செமர்க் கேறுவதும்
வளர் புராணங்
கேளாதார் கதிவிழைவும் விழியிலார் வழிநடக்கும்
கிரம மாமால்

என்று பெரியோர் கூறியுள்ளார்.

இதனால் மேலானவின்பமடைய விரும்பி அன்பு வளர்ந்து மேற்கதியடைவார்க்கு முக்கியசாதனமாயுள்ளவை சிவபுராணங்களென்பது துணிபாம், புராணங்கள் பதினெட்டாம். கயிலையங்கிரியில் ஸ்ரீகண்டபரசிவம் திருநந்திதேவருக்கு உபதேசிக்க, அவர் சனற்குமாரர்க்கு உபதேசஞ்செய்ய, அவர்வியாதபகமுனிக்கு உபதேசிக்க, அவர் சூதமுனிக்குபதேசித்த பதினெண் புராணங்களுள் சிவபுராணங்கள் மச்சம், வாமனம், கூர்மம், வராகம், மார்க்கண்டேயம், பவிடியம், காந்தம், இலிங்கம், பிரமாண்டம், சைவமெனப்பத்தாகும்.

அநாதி மல முத்த நித்த வியாபக சச்சிதானந்தப்பெருங் கருணைத்தடங்கடலாகிய சிவபெருமான் ஆன்மாக்கள் தம்மை வழிபட்டுப் பத்திசெய்துய்யும் பொருட்டுத் தமதருவுருவத்திருமேனியாகிய சிவலிங்கத்திலமர்ந்து திருக்கோயில்கொண்டு தேவர், சித்தர் முனிவர், மானுடர் முதலியோர்கள் பரவ, இஷ்ட சித்தி முத்திப் பேறுகளையீந்து தமது கருணைவிலாசங்காட்டி யெழுந்தருளியிருக்குந் தலங்கள் பலவற்றின் சரித்திரங்களே அச்சிவபுராணங்களுட் டொகுத்துக்கூறப்பட்டிருப்பன.

இச் சிவதலங்களுட் சிறப்புற்ற தென்காசித்தலமானது திரிகூட வரைச்சாரலிலுள்ள திருக்குற்றாலத்தின் வடகிழக்கின்கண் சித்திராநதிக்கரையின்பாலுள்ளது. இத்தலமகிமை சூதமுனிவரால் மற்றைய முனிவர்களுக்குப் பவிடியோத்தர உபரிபாகம் லிங்கபுராணம், காந்தம் இவைகளினின்று எடுத்துக்கூறப்பட்டனவாம்.

இத்தலம், சச்சிதானந்தபுரம், முத்துத்தாண்டவநல்லூர், ஆனந்தக்கூத்தனூர், சைவமுதூர், தென்புலியூர், குயின்குடி, சித்தர்வாசம், செண்பகப்பொழில், சிவமணலூர், சத்தமாதரூர், சித்திரமூலத்தானம், மயிலைக்குடி, பராலிங்கப்பாடி, வசந்தக்குடி, தென்காசி, கோசிகைஎன்னும் சோடசநாமங்கள் அமைந்துள்ளது.

இந்தத் தலம் தனக்குச்சமீபித்துள்ள விந்தைநல்லூரை இராஜதானியிடமாகக்கொண்டு அரசாண்டுவந்த செண்பகமாறன்

குமாரக்கடவுளை வழிபடு தெய்வமாகக்கொண்டு தியானித்துவரும் நாளில், அப்பெருமானருளாற் கிடைத்த கவன குளிகையால் நாடோறுங் காசி சென்று, கங்கை நீராடி, விசுவேசனைத்தரிசித்து வருநாளிலோர்நாள் அம்மன்னவன் தேவி தன்னாயகன்பால் தன்னையுமழைத்துச்செல்லுமாறு வேண்டினளாக, அவ்வாறழைத்துச் சென்று திரும்பி வருங்கால் மதுரைப்பதியையடைய, அவ்விராஜமாதேவி பூப்பெய்தினளாக, ஆங்குத்தங்கித் தன்னித்திய விரதந் தவறுவதை யெண்ணிக் கவன்று நித்திரை செய்யுங்கால் காசி விசுவேசப்பெருமான் அம்மன்னவன் கனவிற்றோன்றியருளி மன்னவ! நினது நகருக்கணித்தாயுள்ள முனிவர் பலர் தவஞ் செய்யுஞ் செண்பக வனத்துட்சென்றால் ஆங்கோரெறும்பொழுக்கஞ்செல்லும். அதனைத் தொடர்ந்து செல்வாயாயின் ஆங்கோர் நந்தி தோன்றும். அதன்பாலின்று தியானஞ்செய்யின் அந்நந்திக்கருகேயுள்ள மடுவில் தேவர் முனிவராதியோர் வழிபட வெழுந்தருளியிருக்குஞ் சிவலிங்கப்பெருமான் வெளிப்படுவர். அவரைத் தரிசித்து ஆலயங்கட்டுவித்துப் பூசித்து வணங்குவாயாயின் காசி தருவதிலுஞ் சிறந்த பேறடைவாயென உரைத்தருள, அவ்வாறருளப்பெற்ற அம்மன்னவன் எம்பெருமான் திருவருளிருந்தவாறென்று ஆனந்தவெள்ளத்தமிழ்ந்து அப்பெருமான் அருளிச் செய்தவாறே தன்னூர் சென்று செண்பகவனத்தையடைந்து சிவலிங்கப் பெருமானைத்தரிசித்துத் திருக்கோயில் கண்டனன். அவ்வாலயத்திலுலகுயிரனைத்தும் வழிபட இறந்தார்க்கு முத்தி தருங்காசியினும் பிறந்தார்க்கு மிறந்தார்க்கும் வழிபட்டார்க்கும் பேறருளும் விசுவேசமூர்த்தி வீற்றிருக்கும் பெருமைவாய்ந்தது.

பராக்கிரமபாண்டியன் காசிகண்ட பராக்கிரமபாண்டியனெனப்பெயர்பெற்ற செண்பகமாறனவ் ஆலயங்கட்டிக் காரணாகம விதிப்படி பூசை நித்திய நைமித்தியவுற்சவாதிகளும் நடைபெறச் செய்து அதற்குவேண்டும் நிதி நிகேதனங்களுமேற்படுத்தி நகரவமைப்பிலக்கணப்படி திருநகரமுமமைக்கப்பட்டு அவ்வாலயத்தினெண்டிசைகளிலும் சுத்த சைவாசாரியர் திருமடங்களும் நிறுவப்பட்டன. அவைகளுள் கீழ்த்திசையில் அரசருக்கு முடிசூட்டும் சிவந்தபாதவூருடையாராதீனமென்னும் சந்நிதிமடம் சிவாகமங்களோதியுணர்தற்கும், தென்கீழ்த்திசையில் சமிதேவநாயனுநகோ தேவாதீனமென்னுமடம் சிவ தீட்சை பெற்றுக்கொள்வதற்கும், தென்றிசையில் குருவாசாராதீனமென்னும் வேம்பத்தூர் மடம் கல்விகற்றுத் தேர்வுறற்கும், தென்மேற்றிசையில் பௌராணிக ஆனந்தக்கூத்தராதீனமென்னுமடம், சிவபுராணங்கள்கேட்டுணர்வடைவதற்கும், மேற்றிசையில் தத்துவப்பிரகாசராதீன

மென்னுமடம் தத்துவ விசாரணை செய்வதற்கும், வடமேற்றிசையில் மெய்கண்டாராதீனமென்னுமடம் சைவசித்தாந்த சாத்திரங்களையோதியுணர்ந்து ஞானோபதேசம் பெறுவதற்கும், வடதிசையில் உமையொருபாக குருவாதீனமென்னும் மடம் சைவருக்கு உபதேசஞ்செய்வதற்கும், வட கீழ்த்திசையில் இடிவலஞ்சூழ் பாஞ்சோதி தேவாதீனமென்னும் மடம் சிவயோகிகள் யோகஞ் செய்து வாசஞ்செய்வதற்குமாக நிறுவப்பட்டன. இன்னும் அறச்சாலைகள், கழகங்கள் முதலிய வேண்டுவனவெல்லாமமைய எவ்வகைப்பேறுமெளிதிற் பெருமாறமைக்கப்பட்டு விளங்கும் தலமகிமையுடையது.

வடகாசியின்கணுள்ள மூர்த்தி தீர்த்தம் தலமென்னுமூன்றனுள் முன்னையவிரண்டும் பெற்றுக்கொண்ட காசிகண்ட பராக்கிரமபாண்டியன் எஞ்சிய தீர்த்தமும் அநுக்கிரகிக்கவேண்டுமென்று பிரார்த்திக்க அவ்விசுவேசமூர்த்தி திருவருளாற் கங்கைபொங்கியெழுந்த கூவற்றீர்த்தம், உலகத்திலுள்ள உயிர்களின் பாவங்கள் தீர வேற்றுக்கொண்ட தன் பாவந்தீரக்கங்கையால் முதுவர லாட்டிப்பூசை செய்த சித்திரகங்காநதி முதலாகிய தீர்த்தங்களில் மூழ்கினார்க்குப்பேறுதரும் பலபுண்ணிய தீர்த்தங்களையுடையது.

இன்னும் அரிபிரமேந்திராதிகள் பூசித்துப் பேறுபெற்ற இத்தென்காசியாலயங்கண்டகாலத்தையாராயுங்கால் சாலிவாகன சகாப்தம் 1171-ல் ஆலயமுயர்ந்ததாக இப்புராணங்கூறுகின்றது. திருக்குற்றாலப்புராணமுதலிய அருளிச்செய்த மேலகரம் திரிகூடராஜப்பக்கவிராஜ மூர்த்திகள் தாஞ்செய்த திருக்குற்றாலக்குறவஞ்சியில் குறத்தி குறிசொல்லுவதில் "கொல்லந் தாண்டொரு நானூற்றிருபத்துநாலில், தென்காசியாலயமோங்கக், குறி செண்பகமாறற்குச் சொன்னபேர் நாங்கள்" என்று கூறியுள்ளார்கள். இவ்விரண்டும் ஒத்திருக்கின்றதால் இவ்வாலயம் விருத்தியான காலந்தொட்டு இன்றுவரை 677-வருடங்களாயினவென்பது தெளிவாம்:

இத்தென்காசிப்புராணமியற்றியவர் நெல்லைகண்ட குலசேகரபாண்டியன் தென்காசியில் நிலைநிறுத்திய சந்திரசேகர குருபரம்பரையில் 42-வது தலைமுறையில் வந்த அழகிய திருச்சிற்றம்பலதேசிகராகிய குமாரகவிராய தேசிகராவர். இப்புராணத்தைத் தமிழிலியற்றியருளவேண்டுமென்று சைவநெறிக்குரிய ஆன்றோர் பலர் பிரார்த்தித்து வேண்ட, அக்குமாரகவிராயதேசிகர் இப்புராணத்தைக் கொல்லம் ஆண்டு ஆயிரத்துப்பதினாறிற் செய்துமுடித்தனரென்பது இப்புராணவிறுதிச்செய்யுளால் விளங்குகின்றது.

பின்னர் அறநெறியுஞ் சித்தாந்த சிவாகமச் சைவநெறியுந் தழைத்தோங்கி நிறை செல்வம் பெற்று இத்தென்காசியில் வாழ்ந்துவந்த சொக்கலிங்கம்பிள்ளை முதலான வேளாளர் குலத்தலைவரும் கார்காத்த குலோத்தமரும் தொண்டை வேளாண்குலசிரேட்டருமாகிய சுத்த சைவோத்தமர் வேண்டிக்கொள்ள அழகிய திருச்சிற்றம்பல குமாரகவிராயதேசிகரால் 1030-ம் ஆண்டில் உலகம்மை சந்நிதியில் இப்புராண மரங்கேற்றியதாக அக்காலத்துடனிருந்து கேட்டு ஆனந்தித்த சங்கரலிங்கம்பிள்ளை கூறிய சிறப்புப்பாயிரத்தால் தெரியவருகின்றது.

இத்தென்காசிப்புராணத்தை யியற்றியருளியவர் சுத்த சைவ மெய்கண்ட சந்தான சிவதருமிணி குருபரம்பரையினராதலால் வைதிக சைவநெறிப்பூஜாவிதி முதலியவ நன்கு விளக்கிப் புராண விலக்கணமமைதா இனிய செந்தமிழ்ப் பாக்களாற்கூறி முடித்திருக்கின்றனர்.

இவ்வாறு சிறப்புற்றோங்கிய இத்தென்காசிப்புராணத்தை - யாவருமுணர்ந்துய்யுமாறு கருதித்தற்காலம் அத்தலத்துத்தரும கருத்தர்களாய்த்தேவாலய கைங்கரியங்களை நெறிபெற நடத்திவரும் வேலாயுதம்பிள்ளை யவர்கள், ஆவுடைநாயகம்பிள்ளையவர்கள், கரணுகோ சுந்தரம்பிள்ளையவர்களாகிய இவர்கள் புராண ஆசிரிய பரம்பரையினரும் தென்காசி சந்நிதிமடம் சிவந்தபாதவூருடையாராதீன கர்த்தாயுமிருக்கின்ற தட்சிணாமூர்த்திதேசிகாவர்கள்பால் தமது கருத்தை வெளியிட அனைவர் மனமுவந்து தம்பாற் சேமஞ்செய்து வைத்திருந்த தென்காசித்தலபுராண வேட்டுப்பிரதியைக் கொடுத்தருள அதனைப்பெற்றுப் பேட்டை, ஆறுமுகநயினார்பிள்ளையவர்களைத்தப்பாற் சிலகாலமிருக்கச்செய்து அன்னாரற் காகிதத்தில்வழுவின்றி எழுதுவித்தும் பலவற்றிற்குக் குறிப்புரை வரைவித்தும், அச்சேற்றியுலகினுலவுமாறு செய்து சிவபுண்ணியப்பேறெய்தினர். இவர்கள் செய்தபேருதவிக்கு நந்தமிழ்மக்களனைவரும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டுள்ளார்கள்.

தாம் செய்துவருஞ் சிவ புண்ணியங்களுளிதுவு மொன்றெனக்கருதித் தென்காசித் தலபுராணத்தைத் தமிழுலகமுணர்ந்துய்யுமாறு செய்து புண்ணியஞ்செய்த பூதவுடம்போடு புகழுடம்புமபெற்றவர்களாகிய தருமகர்த்தர்களின்னுமநீண்ட ஆயுளும்

நிறைபெருஞ்செல்வமும், பேரறிவும் அளவிலாற்றலும் பெற்றுச் சிவபெரும்புண்ணியங்கள் செய்து சகல குண சம்பந்நராய்ப்பெருவாழ்வுற்று விருத்தியடையவேண்டுமென்று எல்லாம் வல்ல கடவுளை மனமொழி மெய்களாற்சிந்திக்கின்றேன்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

இங்ஙனம்

மே. சொ. சுப்பிரமணியக்கவிராயர்,
திருநெல்வேலி
இந்து கலாசாலைத்தலைமைத் தமிழ்ப்பண்டிதர்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9 - FEB 1927
MADRAS

9 - FEB 1927
MADRAS

உ
சிவம்

தென்காசித் தலபுராணம்.

காப்பு.

முக்கட் சோதிதென் காசிமுன் னோன்கதை
மிக்க வேதவி யாசன்வி ரித்ததைத்
தக்க வாய்தமி ழாற்சொலச் சண்பகக்
கைக்க ளிற்றின் கழல்பணிந் தேத்துவாம்.

கடவுள் வணக்கம்,

விசுவநாதர்.

உலகதி னேற்ற மான வுவணமா லன்ன வூர்தி
பிலகிவர் மனவாக் கிற்கு மெட்டொணு வருமை காட்டிப்
பலன்மிகத் தருதென் காசிப் பதிவளர் புனல்சேர் சென்னி
நலனுறு விசுவ நாதர் நறுமலர்க் கழலுட் கொள்வாம். (௧)

உலகம்மை. (வேறு)

முருகோங்கு குழலாளைச் சிந்துரநன் னுதலாளை முதுமீனோக்காற்
கருவோங்கிக் குடிதழைய வருள்சுரந்து மடைதிறந்தகண்ணினளை
யுருவோங்குகளபமணிமுலையாளைக்கொடியிடைப்பட்டுடையினளை
மருவோங்குபதத்தாளைத்தென்காசியுலகாளைமனத்துள்வைப்பாம்.

திருநடராசர்.

நாமேவு மிசைவாணி மணவாள னொருதாள நாதங்காட்டக்[தூதத்
கோமேவு திருமான்மத் தளமுழக்கித் தித்திமிதெய்க் கோடேய்ந்
தேமேவு கற்பகக்கா வாசமுனி வருமிறைஞ்சத் தேவிகாணப்
பூமேவு மறைச்சிலம்பு புலம்பநடம்புரிசிவனைப்போற்றல்செய்வாம்.

சிவகாமியம்மை.

மாற்கருமை புரிந்திகிரி கொடுத்தானை யிடப்பாக மருவி வாழ்செங்
கோற்கருது பெண்ணரசா யடியவர்க்கு வேண்டுவன கொடுப்பா ளாகிப்
பாற்கழுத பாலனுக்கும் பால்கொடுத்தென் றனையாளும் படிக்கு நீண்ட
சேற்கருணை விழிவைத்த சிவகாமித் தாய்மலர்த்தாள் சென்னிசேர்ப்பாம் (௪)

௧. கோடு—மூங்கிற்கொம்பாலாக்கப்பட்ட குழல்.

மயேச்சுரர்.

சகளவடி வாயெழுந்து தோன்றுசரா சரமனைத்துந் தழைவித் தேத்து
முகளவடி வாமனத்தேச் சுரசோதி யெனவடிய ருகந்து வாழ்த்தத்
துளைறவெள் விடையேறித் துறக்கமுத லியபதங்க ளெய்க்க நல்கித்
திகழுவொளி யொருபரமா னந்தசிவன் சேவடிபைச்சிந்தை செய்வாம். (ரு)

மயேச்சுரி.

உலகமுழு வதுமீன்று தானுடை வுலகுயிர்க டாமு மாட
லகருணை பெருகாரு மையவகைத்தா யாரயெருமை கடாத்தோ ரீயாய்த்
திலகமணி முடிபுனைந்து சேற்கணருள் பரித்தவகை திறத்தி னூற்றி
யிலகன்மை யருளுமெம தம்மைமயேச் சுரிமலர்த்தா ளிதையஞ் சேர்ப்
[பாம். (சு)

தென்முகத் தெய்வம்.

காரணகா ரியமாகி யகாதிவிதி கற்பனையுங் கடந்த சோதிப்
பூரணமாம் பொருடன்னை நால்வருக்கும் புகலாமற் புகல வேண்டித்
தாரணமெய் யறிவின்ப மாய்வனக்கல் லானிழலிற் றழைத்த பண்டை
யாரணவா கமவித்தாந் தெக்கணு மூர்த்திபத மகத்துட் கொள்வாம். (எ)

சண்பகப்பிள்ளையார்.

உருவமலி காகத்தை மாவிலங்கை யொருகோட்டை யுடையு வாவை
வெருவமுனைத் தருட்கண்ணை விரும்பலரைச் சிந்துரத்த வேழக் தன்னை
கருவுயிர்க்கப் பாலமுன்னுக் காக்கவெழு முன்னோனை யவாசிக் காசித்
திருவளரத் தியினரைச் செண்பகவா ரணத்திலையாஞ்சிந்தை செய்வாம். ()

முருகவேள். (வேறு)

தருக்குடை யரசா லத்தி தான்கொதித் திடவே வன்னி
முருக்கிட வேலை யேவி முன்னைமா விருகூ றுக்கி
யிருப்பையு மடுத்தே சேவற் பிடித்தும யூர மேறுந்
திருக்கிளர் குமர வேடன் சேவடிக் கடிமை செய்வாம். (கூ)

கலைமகள். (வேறு)

கரிய சரித்த குழலாளைக் கமல முகவின் னுதலாளை
விரிய மலர்க்கண் ணருள்வாளை மிகநல் வாக்குத் தருவாளை
பெரிய குரும்பை முலையாளைப் பிறங்கு காரான் குடையாளை
யுரிய வளத்தென் காசிநகர்ச் சரித முரைப்பக் கருதிடுவாம். (ய)

ரு. உகளவடிவாம்—இரண்டு திருமேனியுமாகும், இட்டமாகிய திரு
மேனி கொள்ளும்.

நந்தியெம்பெருமான். (வேறு)

சந்தி கேசவர் சதக்கிரு தேசது முகனுர்
பந்தி கேசரம் வீசிட வேத்திரப் படையால்
வந்தி கேசனென் றேவரும் வாழ்த்திடக் காக்கும்
நந்தி கேசரி னடிமலர் நாமுடிக் கணிவாம். (யக)

தண்டியடிகள்.

பாலெ லாங்கறந் தானுரு மணலினுற் பண்ணி
மேலெ லாகிரம் பிடவபி டேகித்து விமலற்
காலெ லாம்பட வுதைத்ததந் தையினிரு காலைக்
கோலெ லாம்படத் தடிதண்டி குரைகழல் பணிவாம். (யஉ)

திருஞானசம்பந்தர். (வேறு)

தோடேற்றிய செவியானெனுஞ் சொல்லேற்றிய செய்யு
ளேடேற்றிய தமிழாகர னலமேற்றிய மதுரை
வீடேற்றிய வழன்மீனவன் மீதேற்றிவெல் வைகை
யேடேற்றிய சம்பந்தர்சொல் லெதிரேற்றடி தொழுவாம். (யங)

திருநாவுக்கரசர். (வேறு)

வெப்ப மாகிய வமணர்க ணீற்றறை வெகுளி
செப்ப மாகிய திருமலர்ப் பொருட்டெனத் திளைத்தே
யொப்ப மாகிய கருங்கற்றாண் டோணியா வுகைத்த
வப்பர் தாண்மல ரடியமோந் தலைமிசை யணிவாம். (யச)

திருநாவலூரர்.

சொல்ல டற்கரா வுண்டசேய்த் தோற்றுவித் தின்ற
நல்ல வட்களித் தற்புதம் பலபல நடாத்தி
வில்ல வன்றொடர் வேழமீ தேறிவெண் கயிலை
செல்ல முந்திய சுந்தரர் திருவடி துதிப்பாம். (யரு)

யக. சந்திகேசவர்—சந்திக்கவந்த திருமால். பந்திகேசரம்—கூட்டமாக
வந்துநெருக்குபவாது முடியின்கண். வந்திகேசான்—தலைவரே (நீர்அடிப்
பது) வலிக்கிறது, தலைவரே உமக்கும் வணக்கம் எனப்பொருள் கூறு
வாருமுளர்.

திருவாதவூரர்.

போத வூதியந் தருதிரு வாசகப் பொருளை
வேத மூழ்முறை பயின்றுள விமலவாத் திகர்கட்
கோத வேபுகுந் தரனுட னம்பலத் துறையும்
வாத வூரெமா னடிமலர் முடியின்மேல் வைப்பாம். (௰௬)

அகத்தியர்.

முகத்தி யங்கிய விருகணின் முன்புகாண் பொருள்போ
லிகத்தி யற்கையோர் விஞ்சையஃ தீரொன்பா னெழுத்தாற்
சகத்தி யங்குரு முறைகலை ஞானத்தைத் தந்த
வகத்தி யன்செழுந் தாண்மல ரகத்திலே வைப்பாம். (௰௭)

அறுபத்துமூவர். (வேறு)

முத்த மூசிடை மொய்பல ளக்கொத்தி
லுத்த மோத்தம வொண்குணக் குன்றனார்
நித்த நாயக னிட்டையிற் சேரறு
பத்து மூவர் பதமலர் போற்றுவாம். (௰௮)

தேசிகர். (வேறு)

மனற்கு மாரக மிதழிகூ விளமிள மதிவெண்
புனற்கு மாரபாந் தழைசடை மறைத்தொளிர் போதம்
பனற்கு மாரக சியவுப தேசமே பணிக்குஞ்
சனற்கு மாரபா ரதிகுரு சரணமே சரணம். (௰௯)

அடித்தொண்டவழுதி.

முகில னுபனென் றடிதொழ முறையர சளித்து
நகில னுயகிக் கிடப்புறங் கொடுத்துநம் படியார்
புகில னுயறு திங்கண்முன் னவர்பதம் புகச்செய்
யகில னுயக னடித்தொண்ட வழுதிக்கஞ் சலிப்பாம். (௨௰)

௰௭. சகத்தியங்குருமுறை—உலகத்திலே சொல்லப்பட்ட ஆசிரியநெறி, உலகத்திலே நடைபெறும் உருப்போடுமுறை. எழுத்தால் என்பதிலுள்ள மூன்றனுருபை இவ்விடத்துங் கூட்டிப்பொருள் கூறுக. ௰௯. மனற்கு மாரகம்—நிலைத்த நன்மை வடிவாகிய மாவிலங்கம். குமாரமா—ஒட்டவைத்த பொன்போல உம். முகிலன்—இந்திரன். நகில்—கொங்கை. அன்னுயகி—தன்னில்வேறல்லாத் தேவி. புகிலனுயறு—புகலிடமில்லாத சூரியன் (அடையாத சூரியன்). அகிலனுயகன்—எல்லாவுலகங்களையும் தன்னுடைமையாக்கொண்டவனாகிய தலைவன்.

சைவாசிரியர். (வேறு)

இந்திர தருவை போலத் திருவெலாம் நல்லா நீட்டி
மந்திர கும்ப புட்ப மாரிகள் சொரிந்து வாசத்
தந்திர தூப தீப மனைகளே தனச மத்தம்
பந்திர சதத்தா லத்திற் பலிசெய்வார்க் கன்புசெய்வாம். (௨௧)

சைவத்தொண்டர்.

பூசனை புரியு மாதி சைவர்பூ சுரர்பூ மாலை
வாசனைச் சாந்த மீவோர் மணிவிளக் கிடுவோர் தூபம்
யோசனை வீச வுய்ப்போ ரொலிமுழ வொடுசங் கீர்த்தித்
தீசனைப் பரிவிற் காண்போ ரிவர்களுக் கன்பு செய்வாம். (௨௨)

கடவுள் வணக்கம் முற்றிற்று.

காப்பு ௧. கடவுள்வணக்கம் ௨௨,

ஆகப்பாட்டு ௨௩.

புராணவரலாறு.

எறித்த செஞ்சுடர்க் கதிர்களொண் கண்ணொளிக் கிசைவாக்
குறித்த பல்பொருட் காட்டலிற் கூறுமைந் தெய்வம்
பிறித்த மூவறு புராணங்கள் பிறங்குளக் கிசைவாச்
செறித்த வற்றைநல் கினன்முதல் வியாசனுஞ் செய்யோன். (௧)

அன்ன வன்றனை யடிதொழு திரத்தலி னன்பாற்
பின்ன வன்றவச் சூதனுக் குரைத்தனன் பிறங்கு
மென்ன ரற்கொரு பத்துமாற் கிரண் டிரண்டே
ரன்ன னுக்கெரிக் கொன்றரிக் கொன்றவை யாமே. (௨)

வேறு.

கைதாஞ் சைவம் பவுடிகமார்க் கண்டமி லிங்கங் காந்தமச்சம்
மதிசேர் வராகம் வாமனங்கூர் மம்பிர மாண்டம் பாகவதம்
பதுமங் கருடம் விண்டுபிர்மம் பகர்நா ரதம்பிர் மகைவர்த்த
மதியாக் கினேய மெனப்பெயர்கொண் டறிவாத் திமைவை பதினெட்டே

வேறு.

பன்னெண் காதையிற் பவுடிகோத் தாமதிற் பிறைவேய்
சென்னி யெம்பிரா னுறைசிவச் சேத்திரப் பெருமை
சொன்ன பந்தியா முபரிபா கத்தது தூக்கி
நன்ன ராய்திறற் சூதனே னைமிசர் குரவன். (௪)

முனிவ ரேத்துதங் குரவனை முறைதொழு திறைஞ்சித்
தனிவ ருந்தலந் தீர்த்தமூர்த் திகள்புகழ் தழைப்பக்
கனிவ தாங்கதை கேட்பவெம் மவாக்கதித் தெழலா
லினிவ ழுத்துகென் றிரந்தன ரியைந்தனன் சூதன். (௫)

பாக்கு மஞ்சுதண் மழைபொழி தலுமிசைப் பரிதி
வாக்கு ணக்கதிர் வீசலும் வள்ளல்க டம்பா
லிரக்கு நர்க்கரு ளலும்பிறர்க் கிடர்தவிர்த் தறவோர்
புரக்குந் தன்மையுந் தமக்கொரு பொருள்குறித் தன்றே. (௬)

ஆத லாலெமை யறிந்துநீர் கேட்டது மதையே
யோத லாமென உகந்தியான் வந்தது முயிர்த்தோர்
காத லானதைக் காதலர்க் கறிந்தருள் கடனி
லீத லாலற மியைந்தது சுதினமென் றிசைப்பான். (௭)

திருந்து மேலவர்க் கரும்பசிக் கமிழ்தெனத் திளைப்பப்
பொருந்து நற்கதை களிலுள தொருகதை புகலஃ
தருந்து வோர்செவிக் கின்பமா மிருமையு மாகும்
மருந்துண் மிக்கசஞ் சீவிதென் காசிமான் மியமே. (௮)

உரைக்கு மிக்கதை கேட்பவர்க் கதிசய முயர்தென்
றுரைக்கு கந்தது வடசொலிற் பயின்றுவித் தாரத்
திரைக்கு ளோங்கமிழ் தெனச்சுரர் தேருவ ததுதான்
வரைக்கு மேல்விளக் காயதென் காசிமான் மியமே. (௯)

இப்ப டிக்கென நற்றவ மாரிரு டிகள்கேட்
டப்ப டிக்குயர் சூதனன் கருள்கதை மடுத்தார்
தப்ப டிக்கொளத் திறத்தின ராகிய சதுரர்
முப்ப டிக்குமேற் றினர்கதை வந்ததிம் முறையே. (௰)

வேறு

வேதனைப் பிறவி தீர்க்கும் வேதத்தின் ஞான பாகைப்
போதனைத் திறமெடுத்துப் போதத்தேன் வைத்தாற் போலு
மீதனை வோருங் கொள்ள வடசொலான் முன்னர்த் தந்த
சூதனைப் பணிந்து மூவாத் தமிழினிற் சொல்ல லுற்றேன். (௰௧)

தூயமா மறையோ ராதி சைவர்க டொன்னூல் கற்ற
வாயமாம் பெரியோர் மேழி யாதியர் நிறைய வைக்கண்
மேயமார் தோளி பாகன் விசுவநா யகவி டங்கன்
ஞாயமார் கதைசொ லென்னு நலோருரை நயப்பினாலே. (௰௨)

அவையடக்கம்.

ஓதுவ தியைந்தேன் முன்னா ளுவரியுண் முனியொப் பாய்க்கான்
மோதுவல் லெறும்பு முந்நீ ருண்ணமுன் னினவாய் முன்னே
போதுவ் வாஞ்சை யுள்ளம் பொருதுவ பின்போய் நாண
மீதுவந் திடினு மிக்க வாஞ்சையே வென்ற தம்ம. (௰௩)

வேறு.

கவுரி சங்கரக் களத்தனா மிறைவனற் கருணை
யவுட தத்தமிழ் தன்னவாம் புராணநூ லதனுட்
கவுசி கர்பவந் தொலைத்ததென் காசிநற் காதை
பவுடி யோத்தர புராணத்தி லுபரிபா கத்தில். (௰௪)

எடுத்த காதையு மிலிங்கமா புராணத்து மிசைவாற்
றொடுத்த கேள்வியார் காந்தமா புராணத்துஞ் சொல்லிக்
கொடுத்த மற்றிது பொழிப்புரைக் கோப்பிருந் திசைப்பேன்
மடுத்த தேனொடு பால்பழம் கலந்தென வயங்க. (௰௫)

சிங்க மற்றவைக் கதிகமாத் தெரிதமிழ்க் காசித்
துங்க மத்தியி லொருவனென் மழலைமென் சொற்று
ணங்க மச்சர மாய்க்கொள்வ ரோவழ கழகே
பங்க மற்றதென் றவர்குறு நகைகொளும் பரிசே. (௰௬)

வாழ்த்து. (வேறு)

தருமமழை முகில்பொழிக தரணியெலாம் பயிர்விளைக சைவ மேற
பெருமணமங் கலமாதர் மைந்தர்குழா மக்களொடும் பெருகி வாழ்க
மருமலர்மார் பாசர்குடி மகிழ்வெய்தும் படிகாக்க மாருச் செல்வத்
திருமருவு தென்காசிச் சிவபெருமான் பூசனைகள் சிறக்க மாதோ. (௰௭)

புராணவரலாறு முற்றிற்று.

ஆகப்பாட்டு ௪௰.

புலியூர் சிதம்பரேசுவரர்பா லன்புடையவரும்,
நூலாசிரியரைச்சேர்ந்த சந்நிதிமடத்து மாணாக்கரும்,
சிவபூசைச்செல்வரும், தமிழ்வித்துவானும், அரசாங்கக்கணக்கருமாகிய,
சைவத்திருவாளர்,

ஆ. சங்கரலிங்கம்பிள்ளையவர்களியற்றிய

சிறப்புப்பாயிரம்.

முன்புலியூ ராயதில்லை கண்டகுல சேகரனு முதலின் லைதக்கோன்
மன்புலியூ ரிருந்துகொணர் சந்திரசே கரகுரவன் வழிக்க ணன்காப்
பன்புலியூர்க் குருமாபிற் கனகசபா பதிக்குரவன் பயிற வச்சேய்
தென்புலியூர் கண்டவழ கியதிருச்சிற் றம்பலதே சிகனு மன்னே. (க)

ஐந்தாய தலைமுறைச்சே யாமவன்பின் மூப்பத்தே ழாந்தலைப்பால்
வந்தாய கவிஞனழ கியதிருச்சிற் றம்பலவன் மாட்டன் பார்ந்தோர்
மூந்தாய தென்காசிப் புராணத்தை வடசொனின்று மொழிபெயர்த்துத்
தந்தாயே னன்றெனவேண் மார்கேட்பப் பாடியிது தந்த தாமல். (உ)

ஆற்றலழ கியதிருச்சிற் றம்பலராங் குமாரகவி ராய வாசான்
றாற்றதென்கா சிக்கதையாண் டாயிரத்து முப்பானி னேன்மை வேண்மார்
பாற்றிலகன்சொக்கலிங்க மான்முதலோர்வேண்டுவண்ணம்பலருங்கேட்பா
னேற்றிறைபா லுலகம்மை திருமுனர்கைத் தன்பொடாங் கேற்றினனே.

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

ஆகப்பாட்டு சங.

முதலாவது நாட்டுச்சிறப்பு.

உலகம் போற்றுசெங் கோல்வள் மோங்கமிக் குயர்வா
னிலகங் கைபடி மழைநல னீடவல் விகலார்
கலகந் தீர்தர யாவரு முரிமையிற் கனியத்
திலக ராமகி லேசர்பூ சனைதினஞ் சிறக்க. (க)

கண்டு பாகுதேன் போன்றமுத் தமிழ்க்கலை மகடன்
மண்டு பானிற மேனியி னெழீஇக்கடல் வாரி
யுண்டு பேர்ந்துமை யருட்டிரு மேனியி னுருவங்
கொண்டு தண்ணென மின்னிவந் ததுகருங் கொண்டல். (உ)

விண்ணெ லாங்கரு மயிர்ப்படாம் விரித்தென விம்மித்
தண்ணெ லாமொரு புடையினிற் றடுத்தெனத் தகைந்து
பண்ணெ லாமயங் குறக்குரல் காட்டிமேற் பரந்து
மண்ணெ லாம்புகழ்க் கிடமலர்த் தெழுந்தது கொண்டல். (ங)

புரக்கும் பைஞ்சிலை பிடித்தப்பு கோலியே புழுக்கம்
நிரக்குங் கோடையைத் தொலைத்திடப் புரவலர் நெறியே
சுரக்கு மம்பெலா முதற்றிணைக் குறிஞ்சியிற் சொரிந்து
பரக்குந் தண்மையாற் படிக்குநன் கருள்வது கொண்டல். (ச)

நிலஞ்செ ழித்திடப் பெய்யுநன் மழைவள னீடி
நலஞ்செ ழித்திட மலையெலா மருவிக ளணிகூர்ந்
திலஞ்செ ழித்திடப் பெருகியா றெலாமீவர்ந் தறவோர்
குலஞ்செ ழித்திடப் பொருதைசித் திரைவெள்ளங் குலவும். (ரு)

ச. அம்புகோலி—பாணத்தை அள்ளி, நீரைமுகந்து. அம்பெலாம்—நீரெலாம். ரு, இலஞ்செழித்திட—இல்வாழ்க்கை சிறப்புற. 'இல்லம், என்பது இடைகுறைந்து நின்றது.

ஆரமும் புழுகு முத்து மாடகத் துகளு மஞ்ச
ளீரமு மலைக்கை வீசி யீட்டுபா கிலையை நீட்டு
நாரமுந் தகரச் சாந்துங் கோட்டகத் தறிய சேறும்
வாரமு மலருந் தாங்கு மங்கைசித் திரைப்பூங் கங்கை. (௬)

வண்டகப் பதுமக் கண்ணும் வெள்வல்வெண் ணகையும் பாசி
கொண்டகத் திகையு ரோமக் கூந்தலும் வளைக்க காது
முண்டக முலையும் வாழைத் தண்டையுமு சலரின் றூளுங்
கண்டக நெய்தல் வேலைக் கணவனைக் கூடிற் றன்றே (௭)

மயந்தரு வாழை தேங்காய் மாம்பழத் தேற லாலும்
நயந்தரு பனிநீ ராட்டு நறும்பலாப் பழச்சாற் றாலுங்
குயந்தரு மணச்சாந் தாலுங் கோதையின் பூந்தே னாலும்
வியந்தரு கடற்றுண் டாய்த்தே விரையென் றொருபே ரம்ம. (௮)

வேறு.

பெருகுஞ் சித்திர கன்னிகற் றிணைகளிற் பிறங்கு
முருகு வீசிய பொருளெலாம் கொடுசெலன் முதகற்
றருகு ணத்தபெற் றவனவன் மகட்கொளுஞ் சலதி
மருத வப்புற வழங்கிய மகட்பொருண் மான. (௯)

பொலங்க லக்கரித் திருங்குழற் பாசிமேற் போர்த்தங்
கிலங்க லந்தளி ராசிடை யீகமோ டெய்திக்
கலங்க லந்தட வுவரிம ணாளற்குக் காத
ணலங்க லந்தகங் கைபவனப் போந்தபொன் னதியே. (௰)

பருப்ப தத்தெறி யருவித்தெண் மணிகொழி பாறைக்
குருப்ப ளிக்கொளிச் சிவலிங்க மொத்ததவ் வுருமேற்
றருப்பந் தர்ந்ததோர் நிழல்செய்ய தாகத றூனை
குருப்ப ரற்பதி டத்துள கோயிலை யொக்கும். (௰௧)

௬. நாரமும்—வெள்ளத்தையும். வாரமும்—அன்புக் கரையையும், அணையையும். ௭. பாசிகொண்டகத்திகை—பாசிபோன்றமாலையையுடைய. ௮. விரை—மணமுடையது. (விரை—வாசனை, விரையெனமூரனிண்டது) ௯. முதகல்—பொதியமலை. மகட்பொருள்—சீதனம். ௰. பொலங்கலம்—பொன்மணிப்பூண் இலங்கலந்தளிராசிடை—பிரகாசித்தலையுடைய அழகியதளிராசிலை. ஈகம்—சந்தனம். கலங்கலந்தடவுவரி—கப்பல் கப்பலோடு உராய்ச்செல்லுங்கடல்.

ஒளிநன் சிற்சபை குவட்டிடை நாளுநீ ரொழுகன்
மிளிந வான்சிவக் குறியைநீ ராட்டலும் மேற்பூத்
தளிரு திர்ந்திட லருச்சனை புரிதலுந் தழங்கல்
குளிரு மாறுளம் பழிச்சலும் போலவே குலவும். (௰௨)

கலப்பு கன்றிடும் பொற்பொறை முக்கிரி கலாண்மார்
தலம்பு கழ்ந்திடு மிருவாநந் தருநதிச் சுதைகள்
குலம்பு ரிந்தமுற் றவத்தினு லெதிருக் கொளும்பா
ரலப்பு காதுபேண் செவிலியை யொத்தன வாமால். (௰௩)

சலச மேந்தலாற் றிசைமுகம் படைத்தலாற் றங்கு
கலசம் பாணியேய் தலானற்றண் டுறைபெறு கையிற்
ணிலச மங்கொளப் புள்ளுமே லூர்கலா னொருங்கப்
பலச மாக்கிடுஞ் சித்திரை பங்கயன் போலும். (௰௪)

பரவப் பாயிசைப் பண்ணையே வழங்கலாற் பதுமக்
கரவ லாழிகொண் டேந்தலாற் சங்கணி கையிற்
லரவந் தாங்கலான் பலருந்தி பதலைதோன் றழகால்
விரவ நீண்மரு துதைத்தலான் வெள்ளமால் போலும். (௰௫)

இமைய வல்லியி னுடன்கலந் திவர்தலா லிரக்க
மமைய வாடலா லம்பல முகத்ததாற் பாசங்
குமைய வேசுற்றிச் சேடலாற் குறையிலாச் சைவ
சமைய வீசனை நிகர்த்ததே சித்திரத் தடநீர். (௰௬)

௰௨. நதிச்சுதைகள்—ஆறுகளாகியமக்கள். இவைகுற்றாலத்துஞ் செலகோட்டைகண்ணும் இருந்து வருவன. அலம்-அலமால். ௰௪. சலசம்—தாமரை. பாணி-நீர், கை. தண்டுறைபெறுகை-தண்ணியதுறைபெற்றிருக்கை, பிரமதண்டம் விலக்கப்பெற்றகை. புள்ளு—அன்னம், பறவை. பலசம்—வயல். ௰௫. பாயிசைப் பண்ணை—நீர்பாய்தற்கமைந்த வயல், மேய்க்குழற்கண் இசையமைந்த பண்ணினை. ஆழி—சுழி வட்டம், சக்கரம். அரவம்—ஒலி, ஆதிசேடன். பதலை—பின்னை, தோணி. மருது—மருதமரம், ஓரசுரன். ௰௬. இமையவல்லி—மயில்போலும் சாயலையுடைய உமையம்மையாகிய கொடி, அறிவுபடர்கொடி. இரக்கமமையவாடல்—உயிர்க்கருணையேயத்தால் ஐந்தொழிற் கூத்துச்செய்தல், இறையருள் உண்டாம்படிநீராடல். அம்பலமுகத்தது—(கூத்து) மன்றின் கண்ணது, வெள்ளம் கலப்பைத் தொழில் கைபெறும் வயலின்கண்ணது. பாசங்குமையவே சுற்றிக்கோடல்—மலம் கெடும்படி அன்பர் சூழ்ந்து பற்றல், வேர்கொள்ளாத நீர்ப் பாசி குழையச்சூழ்ந்து பற்றிக்கிடத்தல்.

தேக்கு நின்றெழீஇத் தேனரு விப்பெயர் பொங்கு
மக்க டற்பெயர் கொடுகுறும் பலாநிழல் வழியாய்
மேக்கி ருந்துதென் காசிவாழ் சண்பக விமல
ராக்க மார்திரு முன்வழிக் கொளுஞ்சித்தி ராறே. (௧௭)

நலங்கி ளத்திய வேதவா கமவழி நன்றாத்
துலங்கி லார்வினை யுளபெனத் துளங்கிய பெருநீர்
கலங்கி லாதசை வோத்தம ரறிவுயர் கருத்தி
விலங்கி யோங்குசித் திராநதி மிகத்தெளிந் தெழுந்த (௧௮)

கரங்க ளாயிரங் கொண்டுவா ணுசான் கரகத்
தாங்க மீசனுக் காட்டவி னிருகரைக் கரணு
வரங்க ளீந்திட வாசநீ ராலய வலஞ்சூழ்ந்
திரங்க லாயின வலைகள்கான் மதகுக ளொங்கும். (௧௯)

இழிந்த வெள்ளங்கண் டிடையிடை மள்ளர்பாம் புருட்டி
வழிந்த வோடையிற் கொண்டுபோய் மடைதொறும் பாய்ச்சிச்
சூழிந்த பண்ணையி னிரப்பிநன் குறக்குளிர் வித்து
மொழிந்த நன்னிலப் பயிர்வினை வேற்றிட முயல்வார். (௨௰)

பகடு பற்பல நிறத்தவைப் பூட்டியே பழனத்
தகடு கீண்டிய மள்ளர்க ளாழமா வுழுது
தகடு போன்றுமேட் டாம்பிறை போன்றுமச் சாலின்
முகடு காட்டுமி ரேகைவைக் குநர்முறை யொருபால். (௨௧)

மேழிச் செல்வங்கோ ழைபடா தெனுமொழி விழையு
மாழி சூழ்பொழி லறிஞரி னிருநதிக் கரனூண்
வாழி யிந்திர வருணநல் கெனவாங் கிடந்தே
பூழி யின்புறப் பணைதொறு முழுகுந ரொருபால். (௨௨)

நிரப்புச் செய்குநர் காலினீ ரியாக்குந ரொருபால்
வரப்புச் செய்குநர் வாரிவித் தெறிகுந ரொருபால்
பரப்புச் செய்குநர் மாமடித் தூன்றுந ரொருபா
ஊரப்புற் றேறுநர் கட்குடித் தாடுந ரொருபால். (௨௩)

௧௭. தேக்கு—தெக்கு. எதுகைநோக்கி நீட்டல் விகாரம்பெற்றது. ௧௮. துளங்கிய—கலங்கிய. ௧௯. கரகத்தாங்கம்—கமண்டலநீர். இதில், நீர்த் திரைப்பெயராகிய தாங்கம் நீருக்கு ஆகுபெயராயிற்று. ௨௰. பாம்புருட்டி—வரம்பு (வரை) எடுத்து. ௨௧. முகடு—உச்சி. ௨௨. பொழில்—பூமி.

இடுகை யேற்குமிந் நிலமென ஞனிலத் திணைக்க
மொடுகை வந்தெனப் பசுமையாய் விளைபயி ருழையி
னடுகை தேறின காப்பாண் மள்ளர்க ணயப்பாய்
விடுகை காட்டலின் வளர்ந்தன விளைவுறு செந்நெல். (௨௪)

அளைக ளைக்கடைந் தாலென மள்ளிய ரடுத்த
களைக ளைப்புலந் தோறுநின் றெடுத்திடக் கருத்தாய்க்
கிளைக ளைக்கொடு தாநிரை நிரைநின்று கிளறி
முளைக ளைப்பல மலமொடும் பறிக்குநர் முயன்றே. (௨௫)

சுறவு பூத்தசெந் தாமரை முகமெனச் சொல்லார்
நறவு பூத்தசெவ் வல்லிவாய்க் கிளையென நயவார்
மறவு வேந்தரின் முறைகொடு செல்லுமள் ளியரவ்
வுறவு காண்பரோ காணினென் னுமல ருளுற்றே. (௨௬)

கயலை மேற்கொளும் கமலமங் ககழ்கயற் கண்ணு
ரியலை யென்னென வுருநிழன் மலையினீ ரிருக்குஞ்
செயலை வீழ்ந்துபின் னிமிர்ந்திடக் கண்டிலர் திகைத்தம்
மயலை யாற்றுவர் முறுவலாய்ச் செவ்விதழ் வாயார். (௨௭)

வேறி யற்கையின் செயற்கையின் மள்ளர்கள் விருப்பா"
லாறி யற்புதக் கழனிகட் காவன வமைக்கும்
பேறி யற்றிய பதப்படு பயிர்வளம் பெருகித்
தேறி மிக்குயர் வான்றலை நிமிர்ந்தது சிறந்தே. (௨௮)

கறுவ மேறினோர் நிமிர்வென க்கதித்துலாங் கிளியி
னுறுவ னத்தபாற் கதிர்திரள் பெயர்ந்ததாக் குற்று
மறுவ றுங்குலை சைவபா தவர்மகிழ் மனம்போன்
முறுவ லார்ந்துபாற் கோவின கோத்தமுத் தெனவே. (௨௯)

எதிர்த்த வான்பொறி வாணமே மலரும் பேபோல்
விதிர்த்த நீள்கதிர் விதவித மிளிர்தரு செந்நெல்
முதிர்த்த தண்குலை விளைந்தது முதல்வனோர் தொண்டர்
கதிர்த்த செங்கைதஞ் சென்னிமேற் குவிப்பதிற் காட்டும். (௩௰)

௨௫. அளைகளை—தயிர்களை. முளைகளை—முளைத்தகளையை. ௨௬. சுறவு—சுறா. இம்மகாமீன் பெயரை இனம்பற்றிக் கயலுக்கும் கொண்டால் சுறவுபூத்த முகம் எனப்பொருளாம் போலும். சுறா தாமரையின் மேற்கிடப்பதாயின் மலர்போலுமுகத்திற்கயல்போலுங் கண்ணுள்ளமை காண்க. மறவு—வலிமை. இதில்வந்த உகரம் சாரியை. ௨௯. தாக்குற்று—எனக்கொண்டு.

குலம ணித்திரட் கோவையைக் குன்றவில் வியின்கட்
கலம ணித்தொடை யினைநவக் கோளினைக் கடுப்ப
பலம ணிந்திர திசைமுதற் றிருவளம் பவிப்ப
கலம ணித்தரா வோங்கின நறியபூஞ் சாலி. (௩௧)

குலைவ ளைந்தடுக் கடுக்கதாய்க் கோலமும் பலவாய்
நிலைவ ளைந்தநீள் வாழையின் கடுங்குலை நிகராய்த்
தலைவ ளைந்தவிந் திரவிலாய்த் தயங்கலார் மள்ள
ருலைவ ளைந்திலார் முத்துகட் காத்துகந் திடுவார். (௩௨)

வளைத்த வல்லிரும் பகங்கையிற் றாங்கியே மள்ளர்
கிளைத்த நெல்லறுத் தெடுத்திடக் குணத்தொடு கெழுமி
யுளைத்த சும்மைகொண் டுய்த்தனர் மலையினஃ துடைத்துத்
தளைத்த வாயுசேய் வெற்பெடுத் திட்டதிற் றயங்கும். (௩௩)

அடுக்குச் சும்மைகட் பொற்றைபோற் குவித்துட னவற்றை
விடுக்கு மாறுகை விளைஞர்நீள் கயிற்றினை விரைவிற்
றடுக்கு றுத்தெடுத் திடுவது வாசவன் சயில
முடுக்கு வன்சிற கரிந்தருட் டியதையே யொக்கும். (௩௪)

கருங்க டற்பொருங் கொண்டலை நிகர்த்தகார்ப் பகடு
நெருங்கு தும்புறப் பிணைத்தவை நிரைநிரை பிணைத்த
பிருங்க மாலைபோத் திடுகதி ரிடைவிடாப் பெய்து
மருங்கு சுற்றுதன் மதிமிசை முயற்கறை மானும். (௩௫)

பிணையல் வட்டமேற் பிடுங்கியிட் டணியணிப் பிறிவா
யணைய வேற்றிபெண் புரைமலை யனையபோ ரடுக்கி
யிணைய பொன்மலை வெள்ளிவெற் பெனக்குவித் தெழின்மெய்த்
துணைய நெற்பொலி பற்பல கட்டுவர் தொடர்பால். (௩௬)

---

௩௧. கட்கலமணித்தொடை—கண்மணிப்பூணுகிய மாலை. இதிலெடுத்துக்காட்டிய குலமணிகளும், கண்மணிகளும், நவக்கோள்களும் பலநிறத்தனவாகலின் பலநிறங்களையுடைய நெல்லுக்குக்காட்டாதலறிக. ௩௨. உலைவளைந்திலார—மனக்கலக்கம் பொருந்தமாட்டார்கள். (உலைவு—மனக்கலக்கம். அளைதல்—கலத்தல்.) ௩௩. வளைத்தவல்லிரும்பு—கூனலாய் வலிய இரும்பினுலாக்கப்பட்ட அரிவாள். குணம்—கயிறு. வாயுசேய்—அநுமான். ௩௫. பிருங்கமாலை—வண்டுகளின் அணி. ௩௬. பொரடுக்கி—சூடுவைத்து. இதனிடை வட்டமுதறலும், வீசப்பதர் களைதலுஞ்சேர்ந்தன. மெய்த்துணையநெல்—உடம்புக்குறுதி தருவதாகிய நெல். இதில் எழின்மெய் என்றது பாடுபட்டுண்ண வலிபெற்றுள்ள நல்லுடம்பைக்குறித்ததாம்.

மணியெ லாமரக் கால்கொடு கணிக்குமுன் மள்ளர்
பணியெ லாம்புரி பதினெண்மர்க் கடையினிற் கொத்துந்
துணியெ லாம்விரித் தடைகளப் பிச்சையுஞ் சொரிந்திட்
டணியெ லாம்பெற வாசிறைக் காறிலொன் றளந்தே. (௩௭)

உள்ள நெல்லளந் தகன்றகோ ணியின்வரிந் துருளை
கொள்ள வேற்றியிற் றுய்த்துவித் தாக்கொளல் கொண்டு
வள்ளன் மார்முறை தென்புலத் தார்தெய்வம் வாத்து
தள்ள ருக்கிளை தானுணை வேள்வியாற் றழைவார். (௩௮)

ஆட கந்தினை சாமைகொள் ளெள்பய றருநெல்
மாட கங்கட லைகளென் றெண்பது வகையாங்
காட கத்தவுங் கடுகுமொச் சைவயற் பயறு
கோட கும்மிவை முதற்சிறு விளைவுங்கைக் கொள்வார். (௩௯)

முருகு வீசுமின் னறுசுவைக் கறிபல முறையே
பெருகு பாகமாச் சமைத்துவா ழையின்றழைப் பெய்து
தருகு ணத்தறச் சாலையின் மனைதொறுந் தாய்மா
ருருகு மன்புட னின்புற வூட்டுவர் தவர்க்கே. (௪௰)

வேறு.

குமரியந் துறைசூழ் நாட்டிற் கோகன கத்தோ னும்ப
ரமரிய மடகே ராஞ்சோ றருளற மடநீர்ப் பந்தர்
விமரிய நகர்க்கண் கோயில் விளக்கொளிப் பதக்க மென்னத்
தமரியம் பிடமாண் கோலந் தாங்கிவீற் றிருக்கு மாதோ. (௪௧)

வேறு.

விரியு மைந்திலொன் றொழிந்தநாற் குலத்தினை விளைவே
புரியு யிர்க்குறு திப்பொரு டருமென்ப புலவர்
தெரியு நாற்றிசை விரவிய பொருட்கொடு திகழுங்
கிரியு டன்முல்லை மருதநெய் தலுங்கிளத் திடுவார். (௪௨)

---

௩௮. உருளை—வண்டி. வாத்து—விருந்து. வரவெதிர்பார்ப்பதாகலின் ஈண்டுப் புதியோர் எனப்பொருள் தரும் விருந்து வாத்தெனப்பட்டது. ௩௯. ஆடகம்—துவரை. அருநெல்—யவம் எனப்படும் ஒருவகைநெல். அதுதினையாவிடின் யவமெனப் பெயர்கொண்டவாற் கோதுமையைக்கூட்டி நவதானியஞ்சேர்ப்பதும் வழக்கு. மாடகம்—உழுந்து. மாடம் (மாஷம்) என்பதே உழுந்துக்குப்பெயர். ஈண்டுக் ககரம் நீக்கமாம்போலும். கோடகும்—கொள்ளுத்தரும். ௪௧. விமரியநகர்—ஞானக்கேள்வியுள்ள பதி. (விமரிசம்—கேள்வி.)

முல்லை யம்போது வியர்மகார் மலைப்புலின் முன்னி
நெல்லை யங்கரிந் திறக்கின ரெடுத்தனர் நீள்வார்
வில்லை யம்பிணை வேடுவச் சிறார்கொடு வருகை
கொல்லை யம்புற முயலினைத் தொடர்வருங் குறித்தே. (௪௩)

பொருப்ப மைந்திடு வேடுவச் சிறுமியர் புதுநீர்த்
தருப்ப நீண்மலர் கொய்துதம் முச்சிமேற் றரிப்பார்
கருப்ப வெங்கழை முத்தினைக் கண்டெடுத் தன்னே
ரிருப்ப வாய்ச்சியர் வள்ளியின் கிளங்கெடுத் திடுவார். (௪௪)

முறையு றுத்திய குறிஞ்சியின் கொப்பரின் மூசி
யறையு மென்குருந் தணிமலர் சொரிவன வழகாய்
நிறையுந் தேக்கதி னெண்பொடி கொன்றைமே னிரப்ப
வுறையு மற்றது பொன்னுருட் டாமல ருகுக்கும். (௪௫)

பூங்கு ழற்சுழ விளம்பிடி யுழத்தியர் போந்தே
தீங்கு ழற்புரி யிசையினுய் மகிழ்ந்ததிற் றிளைப்பார்
பாங்கு ழக்கிய செவ்வினைப் பசுக்களின் பாங்கர்த்
தூங்கு ழத்தியர் மென்முலை கன்றுகள் சுவைக்கும். (௪௬)

கனைப்பு றப்புலிப் பாலைமான் கன்றுணுங் கடமை
நினைப்பு றத்தருந் தேனுவின் கன்றுண நிறைபால்
சுனைப்பு றத்ததா ராக்களின் றேழமை யெடுத்துத்
தினைப்பு னக்கிளி புகன்றுதென் காஞ்சியிற் றிருக்கும். (௪௭)

மள்ள ராடிநீ ரருவியின் மணத்தசந் தணிவார்
கள்ள ரும்பலந் தருசில்லர்க் குதவுவார் கழைகள்
கொள்ள ருந்தினைக் களையைமட் டிற்குமாக் குடவர்
வள்ள மாற்றியெள் ளளங்குமீன் வாங்குவர் மகிழ்ந்தே. (௪௮)

குரும ணிச்சுடர் வெயில்விரி முப்படவாக் குறவர்
தரும லைப்படு புதியதேன் சரிச்சரி யளப்பார்
திரும கட்பொரு முழத்தியர் நெற்றாத் திருந்தும்
பரும வல்குலம் பரத்தியர் முத்தளப் பாரே. (௪௯)

---

௪௩. நீள்வார்—ஓடுவார். கொல்லை—முல்லைநிலம். ௪௪. நீர்த்தருப்பம்—தண்ணிய பெருமையையுடைய. ௪௫. குறிஞ்சி—குறிஞ்சிமரம். ௪௭. கடமை—காட்டுப்பசு. தேனு—எருமை. காஞ்சி—காஞ்சிமரம். ௪௮. அரும்பலம்—அரிதாகிய கிழங்குகளை. கொள்ளு—காணம். அளையை—தயிரை. வள்ளம்—வட்டில்.

விளரி யாழினைச் செவ்வழி பூவையும் வினவுங்
களரி கூறிய வன்றிறெங் கரும்பனங் காவின்
வளரி ளஞ்சிறைப் பேட்டுடன் கூட்டுண்டு மகிழும்
முளரி விண்டிற வாவிமீன் குதிகொண்டு மோதும். (௫௦)

தரித்த வாழையின் பழக்குலை யொருபுறஞ் சாயத்
தெரித்த வாவிபைங் குவளைக்கண் காட்டியுண் சித்த
முரித்த வாய்பனை முகமசைத் திடவளை மூன்று
வரித்த றேற்றமுத் தினஞ்சிரித் தனபொழில் வளமே. (௫௧)

இசையி லாசைகொண் மருமலர் பாடலிக் கெனத்தேன்
பசையி லாதருள் செய்யவண் டுண்டுண்டு பாடும்
விசையி லாகிரி யேறளிப் பாக்கொளா மேலோர்
வசையி லாச்சிவ கீதமே பாடுவார் வாழ்வார். (௫௨)

வேறு.

கற்பகம் போலுந்தாரு காமதே னுவைப்போன் மேகம்
விற்பகர் பசுமைவிற்றூன் விளம்பலவ் விடியே போலும்
கற்பக விரவிமோலி நாகர்கோன் மூன்று லோகம்
பொற்பகங் கருதி யாளல் போற்றிரி கூடக் காப்பே. (௫௩)

வேறு.

காய முந்திய கானயா றெறிமலை முக்க
ணாயன் முன்னைநாட் பகீரதற் காக்கங்கை நல்கி
யாய முத்தெறி யந்நதி சித்திரை யாக
வேய சன்னுமா விநடிதென் காசியா யிலங்கும். (௫௪)

இரவி யிந்துகண் ணிரண்டெனத் தெங்குக ளேந்தி
வரவி ளங்கியுள் வெளியெலாம் வெள்ளிதா மன்னி
பரவி யம்பர முட்டிமே னீரருள் பரிசா
விரவி யண்ணல்கே ரடிநிழ றந்தென்றும் விளங்கும். (௫௫)

---

௫௧. உண்சித்தமுரித்தவாம்—கள்ளுண்டவர் சிந்தையை வேறுபடுப்பன வாகும். முரிப்பவென்பது முரித்தவென ஈண்டு எதுகைநோக்கிக் கால மயங்கி நின்றது. வரித்தல்—கட்டுதற்கு. இதில் நான்காம்வேற்றுமை தொக்கது. தாக்குற்ற குலைவிழுக்க வாழைகளை முட்டுக்கொடுத்துக் கட்டுதல் நாட்டு வழக்கு. ௫௨. பசையிலாது—தன்னிடத்தில் தேனில் தான் பற்றுவைக்காமல. ௫௪. கானயாறெறிமலை—கானயாறுகளைத் தோண்டினமலை.

வேறு.

வாவிமாண் குண்டஞ் சூழ மலர்ந்தசெங் தோன்றி நீநீ
ராவிமா கஞ்செ றாம மாமகக் குளங்கள் காட்டும்
கோவிமா னத்தி லிங்கக் கோலமாம் பலாக்கா யெல்லாந்
தூவிமா மலர்மிக் கோங்குந் தூயசண் பகங்கண் மாதோ. (ருசு)

வேறு

குங்கு மச்செழுங் கொம்பரிற் றுகளளி கொடுப்பத்
தங்கு மட்கிடை முன்பொழி யிலவிதழ் தாங்க
வங்கு மத்தியிற் சுடரொழுந் தனையநீண் டரிதிற்
பொங்கு மன்னபுற் புதவழ கண்டமே போலும். (ருஎ)

அடரு கோட்டமி லவங்கங்குங் கிலியமோங் கார
வகிருந் தீத்திவர் புகைவளத் தினைப்புனம் வாரித்
துகிரும் வெஃகிடந் தூயவா யிரத்துணை வேலி
பகிரும் வேட்டுவர் சிறந்தசிற் றூர்பல வளத்த. (ருஅ)

யாவ ருக்குமட் டிடுகல்வித் தாமமு மரிய
தேவ ருக்கருள் சருநைவேத் தியப்புரைப் புகையும்
காவ ருக்கமீ தகிலனுக் கப்புகை கமழ்ந்து
பாவ ருக்கநெய் வேள்வியின் புகையொடு பரவும். (ருகூ)

கருமு கிற்றொடுத் தெறிமழை யாலியின் கல்லும்
வெருமு ரட்கரி முத்துவேய் முத்தரி முத்துந்
திருமு கக்குறச் சிறுமியர் கவணிடைச் சேர்த்துப்
பொருமு கத்தெறிந் தோச்சுவர் கிளிதினைப் புனத்தே. (சுய)

வசிய மோகனம் பேதனந் தம்பனம் மாரண
மிசிய வேடணங் கருடணஞ் சாடன மெட்டும்
பொசிய நல்கிலை யொட்டுவோர் புற்றொலி சாற்றோ
டொசிய நீண்முனி வினைகளாற் செயுமுயர் பொதியம். (சுக)

ருசு. செங்தோன்றி—செங்கழுநீர், சிவந்தகாந்தள். காய்—பழம். ருஎ. புற்புதம்—நீர்க்குமிழி. ருகூ. கல்வி—அடுப்பு. சரு—தேவருணவு. (சருக்கரைப்பொங்கல்) அனுக்கம்—சந்தனம். அகிலனுக்குப்புகையானது ஆமமும் புகையுங்கமழ்ந்து வேள்விப்புகையொடு பரவும் என இக்கவிப் பொருள் காண்க. சுக. வசியமுதலிய எண்கருமம்—இணக்கம், மயக்கம், பிரிப்பு, தடை, அழித்தல், மாறுபாடு, அழைத்தல், வெல் என்னும் எட்டுமாம்.

பூவ தேயுநா ளனைத்துமப் பூம்பொழில் சுற்றி
யாவ தேழ்கிரி யொன்பது கோள்களு மமைந்தின்
மீவ தேய்ந்துநாற் பக்கமுக் கோணமா நிலைக்காத்
தேவ தேவுரு வாந்திரி கூடமே சிறந்த. (சுஉ)

கூடன் மூன்றகில் சந்தனங் கோட்டமு மூன்று
லாட மூன்றரு வியதேன் மலர்புன லாமால்
வேட மூன்றுவெண் ணீறுகண் மணிசடை மேலா
மீட மூன்றுபன் னவபணி யிலிங்கமூன் றினிதாம். (சுஙு)

மாண்செங் கோட்டையா றுயகங் கைபுந்தவர் வணங்கிக்
காண்செ மூந்திரி கூடவா றுமே கலந்தங்
கேண்செய் பாதல நதியுமுக் கூடலா வெழுந்தே
ஆண்செய் நாடிய வோங்குதென் காசிநின் றொழுகும். (சுச)

ஒருமுக் கூடலா வுருத்திரிந் தாயசித் திரைப்பேர்
வருமு தன்மைகொள் வளத்ததென் காசிமா நதிதான்
கருமு கிற்படி கமுகுமா தெங்கெலாங் காத்தே
திருமு கப்புலம் பேணிமான் பொருநையிற் சேரும். (சுரு)

பாம முத்தியைத் தருசிவன் வாழுமிப் படிக்கோர்
சிரம தாயதென் காசிநன் னகர்நதி சிவர்
புாம தற்குண வமிழ்தமா யிறையருள் பொருந்து
வாம வப்பதாய் மலங்கழீஇ யின்பருள் வளத்த. (சுசு)

வேறு.

ஆவ லாயிருப் பிடமது கயிலையும் பொதிலையு மழகென்றே
மூவ ரான்மொழி பதிகமு முகின்முலை முதலொடு முனிகாணத்
தேவ தேவன்ற னெல்லையுங் கூடலுந் திருப்புடை மருதூரும்
பாவ நாசந்தென் காசிமுக் கூடமும் படைத்தது தமிழ்ப்பாண்டி. (சுஎ)

வேறு.

கொத்த லங்களு மழகுபாண் டியும்பொழி குயினு
நத்த லப்புசித் திரைபொரு நையும்பெறு நலமு
மெத்த லங்களிற் றீறடினுங் கிடைக்குமோ வியம்போன்
முத்த லப்புகழ் சிறப்பதிந் நாடென மொழிந்தான். (சுஅ)

சுஉ. அமைந்து—அடங்கி. (கீழ்ப்பட்டு.) சுரு. உருத்திரிதல்—சித்திரித்தல். இப்பெயரடியாக வந்ததே சித்திராநதி யென்ப.

இன்ன வாறுநை மிசத்துறை மாதவ ரியாரு
மன்ன வாவொடு கேட்டனர் மற்றதன் சார
முன்ன வார்ந்தெழு மன்பினி வினித்தன ருறமேயான்
சொன்ன வாய்மையி னினிநகர்ச் சிறப்பினைச் சொல்வாம். (௬௬)

நாட்டுச்சிறப்பு முற்றிற்று.

ஆகப்பாட்டு, ௯௰௨.

இரண்டாவது நகரச்சிறப்பு.

திங்க ளன்னவா னுதற்கன்னி பாண்டிமா தேவிக்
கங்க மாகிய கூந்தல்சோ லையம்பதி யலர்ப்பூங்
கொங்க விழ்ந்திடு மதுரைபொன் முடிகுளிர் முகமே
மங்க லத்ததென் காசியந் நகர்வளன் வகுப்பாம். (௧)

இசைய வேய்வன நெல்லையூ ரேயிரு தோளாம்
வசைய கன்றிடு வளசைமே யிழையணி வளையாம்
நசைய டுத்திடு களங்களங் காட்டுமா நகரம்
விசைய நன்மொழி யோங்குபா கூதா விளங்கும். (௨)

இலவை யூரித முாகுமா னாிரு கண்ணும்
பலவை யேயொளிர் மணிமுத்தூர் கொங்கையிற் படிந்த
கலவை மாமணப் படைநகர் நுதற்குறி சாலும்
நிலவை யூர்தனுக் கோடியே புருவமா நிலவும். (௩)

இருந்து ணைத்தனந் திருமலை பொதியவெற் பெனலாந்
திருந்து காசிதென் னிலஞ்சிசீ ரடிபற்ப னேரி
தருந்து லக்கமா ரேடகம் புறவடி சாகை
பொருந்து மென்விர லகடுமுத் தாலமா புரமே. (௪)

இன்ன வாறிசை யோங்குதென் காசிமா நினுக்கு
மன்ன வாழ்வுய ருருவக வடிவமூர் மகிழச்
சொன்ன வாய்மணம் பெறுதலி னினியதன் றொன்மைப்
பொன்ன வாய்ப்பையும் பொருள்வளச்சிறப்பையும் புகல்வாம். (௫)

புறங்கு லாவுபொன் னெடுமதிற் கொடிகள்போர்ப் பருண
னிறங்கு லாவுதேர்க் காலத்தி யெடுத்தலு நீடவ்
வறங்கு லாவுமெற் குருப்பற வணங்கனூர் விசிறி
கறங்கு லாவுற வீசிவேர் வாற்றலுங் கடுக்கும். (௬)

உலகு மங்கையின் றிருமுடி பாண்டியர் மௌளிகா
றிலக ருங்குல மணியெலாம் புறநக ரிடையிற்
பலக வின்றரு மிடுமொனை சிறியபட் டிகண்மேற்
றிலக நாயக மணியதா மோங்குதென் காசி. (௭)

பரவு வாவியி லியானைபோய்ப் படிகையிற் பதும
வுரவுத் தாட்கொடி தனையொரு துதிக்கையன் றுயர்த்தக்
கரவு காட்டுசெந் தாமரை முகைவிரி கனவி
விரவு தீத்தழ லெனவெரூஉக் கொண்டன மயங்கும். (௮)

இருளைத் தின்றொளி யெண்டிசை பரப்பினின் னினர்க்கு
மருளைத் தந்தெழு மாடம்வெள் ளியங்கிரி மான
வுருளை யொன்றுகே ரிவாந்துபோ தனைப்பவ னூர்க்குத்
தெருளை யாக்கிமேற் றிகழ்துயர்ந் ததுசெழு மாடம். (௯)

வடிகற் சுண்ணநீற் றியசுதை பூசுமா ளிகையிற்
றொடிக லந்தகை மினார்கழங் காடுகாற் சோர்ந்து
கடிக மழ்குழல் சரிந்திடக் காண்மணிக் கானீள்
படிகப் பசுதிகன் முத்தரீ காட்டலிற் பரிக்கும். (௰)

மாக தத்தொளி மாடநீ டெழில்வெளி வானின்
கிரக நாயபாற் காணதேர்க் கீழ்ப்படா திர்க்குங்
குரக தங்களக் கதிர்க்கொழுந் திளம்புலாக் குறிக்கொண்
டூரக தத்தொடு வளைத்துநாச் சுவைத்திவ ருவவே. (௰௧)

வெள்ள நீர்ப்பனை விரித்தெழு வாவிபெண் காவி
பள்ள நன்மலர் பானுநீ ரொளிபாந் தேறி
யுள்ள வானொற் பொன்னுறு வாக்கின வொளியாங்
கொள்ள நோற்றில மெனமுரன் றனகருங் கொண்மூ. (௰௨)

நலம்ப கர்ந்துவின் மினார்தின நறுஞ்சுனை யாடிப்
பலம்ப கப்புதுத் தேன்பொழி பலாநிழல் வாழ்வை
வலம்ப கர்ந்துதாழ்ந் துவப்புடன் வந்துதென் காசி
யிலம்ப கங்கொளெம் மிறையையேத் தினரரு ளிசைவார். (௰௩)

பன்ன லாகிய பாசடை மேலன்னம் பயிறல்
பொன்ன னார்தவ னொடுமெஞ்சம் பயிறலே போலும்
மின்ன னார்நுதல் வைத்தசிந் தாத்தையே வேய்யோ.
னென்ன மாமலர் விரிந்தமை தேவர்கண் ணேயும். (௰௪)

வெண்ணி லாவெறிந் தோங்குமா ளிகைவெளி யிருளை
மண்ணி லாமலே துரத்திவாள் வீசிவா னுலவிப்
பண்ணி லாரிசை பயின்றுய ராம்பையர் பதியுங்
கண்ணி லாவலாய்க் காண்டிரு நகரையுங் காட்டும். (௰௫)

நெல்லை வாவிய கழையதாய் நிறைகழை கமுகாய்
வல்லை நீள்கமு கினையுயர் தெங்கதாய் வளர்த்தே
சொல்லைச் சூழ்கொடி நடுவளர் கமுகினைச் சுற்றி
யொல்லை வல்லியே றுதல்கொடி விழாச்செயு முரச்செய். (௰௬)

முருந்து வாணகை யுருத்திரி பாகனார் மூதூர்
பொருந்து பாரதி யாள்மண வாளனார் புரநீ
சருந்து சங்கமம் பொதிபமா மலர்மகண் மணாளன்
றிருந்து மூர்குறுங் குடிசிவ னுலகுதென் காசி. (௰௭)

சிரும்ப னாபவோர் சூரனைச் சீறியே செயித்து
வரும்ப லும்பரைக் காத்துவெந் தீவினை மாற்றித்
தரும்ப ஏற்கவ ரைந்தருந் தந்துவாழ் வதுபோற்
சுரும்ப ரார்பழந் தேன்மலர் வழங்குவ சோலை. (௰௮)

முறுக்கு டைந்துபொற் சுருள்விரி சண்பக முகிழ்த்தே
யிறுக்குந் தேனொடுந் தாதொடு மரைக்கனாழ்த் திவர்தல்
சிறுக்கு மின்னிடைத் தேவியை மணந்தருட் சிவனை
பொறுக்கு மென்றுபா ருரைவார்த் தருள்வதே போலும். (௰௯)

௰௩. தென்காசியிலம்பகங் கொளெம்மிறை—தென்காசியிலே எழுந்தருளிய எம்மிறைவன். (அம்பகம்—எழுச்சி.) ௰௬. சொல்லை—நெற் பயிரை.

கமல வாவியிற் செம்மலர் மலர்வழுக் கணன்பா
லமல வாழ்வரு ளெனச்சைவ ரித்தனை ராம்பெட்
புமல ரிற்சிவ தீக்கைபெற் றுயர்கடன் புரிந்து
விமல மாக்குமே லவருடல் போன்றவெண் பதுமம். (௨௰)

மருணை வாலய னரிமுனம் நின்றுமல் லாடத்
தருணை யாகிய நாயகி பங்கனுட் டயுவா
யருணை யோதியின் சிறுசுடர் சிற்பர மாகுங்
கருணை நாயகன் கவினெனச் சிவந்தகல் லாரம். (௨௧)

நிதிய சங்கமு மலர்களு நிறைந்தநீர்ப் பொய்கை
மதிய மூந்தியே பார்த்தகண் பறிக்குமோர் வயங்கும்
முதிய கார்படி யகழியின் முகிழ்த்தபொன் முளரிப்
பொதிய விழ்ந்தவாழ் கிடங்கிது புரிசைமேற் புகல்வாம். (௨௨)

ஆன மூன்றையுந் தந்துமே லாயினோ னருளாப்
பான மூலிகை சதுரமா கிரியுறை பாங்காய்க்
கான மூங்கிலின் றேருளியர் மணமெனக் கருத
வான மூடுற வுயர்ந்ததென் காசிசூழ் மதில்கள். (௨௩)

குடக்கு வார்தரு கவுரியுங் கங்கையுங் கூடி
நடக்கு பாதல நதிகொண்முக் கூடலார் நலங்கூர்
வடக்கு லாவியா முகமென வதிகுளிர் மாலை
கிடக்கு நீண்மதிற் காடையாக் கிளத்தலாந் தகைத்தே. (௨௪)

குருப்ப ளிங்கொளி வீசியே குறைவிலாத் தவஞ்செய்
பருப்ப தங்களே கோபுர மாயின பரம
னிருப்ப வானளாஞ் சிவகிரி யிதுவெனத் திகழும்
விருப்ப மாமறை யிருகதிர் தவழுமேற் சிகரம். (௨௫)

௨௰. பெட்புமலரில்—பெருமை தங்கிய மும்மலப்பசக்களில். ௨௧. ஓதியின்—மலையினிடத்துள்ள. கல்லாரம்—செங்குவளை. ௨௩. ஆனமூன்றை—சிலவரண், நீரரண், மலையரண் என்று மூன்றரண்களை. செங்கதிர், வெண்கதிர், செந்தீயென்னு முச்சுடர்களை எனக்கூறுதலுமாம். அருணொப்பான மூலிகை—நோவாமூலிகை, மூவாமூலிகை, சாவாமூலிகைகளையுடைய. பாங்காய்—மாதிரியாய். ௨௪ கவுரி—வெண்ணிறமுள்ள குற்றாலநதி. கங்கை—செந்நிறமுள்ள செங்கோட்டை நதி. பாதல நதி—ஊற்றெழுகல். இம்மூன்றுங்கூடியது முக்கூடல். ௨௫. சிகரம்—கோபுரத்தின் முடி.

புரங்க டந்தபுட் கூக்குரல் பொற்பொடுஞ் சுருதிச்
சிரங்க டந்தவற் கோதுமைம் பாடலிற் சிறக்கும்
வரங்க டந்திட வேண்டுவோர் புகழென வளநீர்த்
தரங்கம் வீசுதென் காசிநொச் சியினிசை தழைக்கும். (௨௬)

பரிசை பொற்கம டங்கடாழ் கயத்தெதிர் பாங்கர்
திரிசை யார்ந்தவெண் சங்கின முத்தெறி திரைநீர்
வரிசை யாகமே றென்றிகிழ் வடக்குறுங் குடிஞைப்
புரிசை மாண்பிது பொன்னகர் வீதிமேற் புகல்வரம். (௨௭)

தோர ணங்களும் வாழையுந் துவசமுந் தூப
தார ணங்களுந் தீபமும் பாகசா தனன்செல்
வார ணங்களு மணவிழாத் தினமென வயங்கும்
வீர ணங்கமழ் சீரதென் காசியன் வீதி. (௨௮)

முந்தி ரக்கமுற் றன்பருக் கருள்செயு முதல்வற்
கிந்தி ரன்மலர் மழைதின மிறைப்பதிற் பொழில்பூ
சந்தி ரக்கதிர் வீசநீர் தந்திவர் காந்த
வெந்தி ரக்கன்மே டையிற்சிந்தும் வளத்ததிவ் வீதி. (௨௯)

ஈச னைத்தினம் பூசனை புரிதவ ரிதைய
மாச னைத்தையுங் கழீஇயருள் வளம்பெறு வண்ணந்
தேச னைதரு சராசர நிழல்கவர் சிதக்கற்
பூச னைவலார் வளாமனை பொலிந்ததிவ் வீதி. (௩௰)

சதத்த ளம்பொலி பாகமட் டுண்டுசஞ் சரிக
மிதத்த வின்னிசை பாடுவ வெண்டிசை யினுமும்
மதத்த டுக்கரி பரூஉக்கைகொண் டெறியுமட் பூழி
கதத்த நாவிரா ணம்மிவை தெருத்தொறுங் கமழும். (௩௧)

அந்த ரங்கமா ராங்கமும் மாடமு மழகார்
மந்த ரத்திவர் மேடையு மடமடைப் பளியுஞ்
சுந்த ரப்பதச் சுவடொடு நங்கைமார் துணைமாண்
டந்த ணம்புனை களபகா றிலக்கணந் தயங்கும். (௩௨)

உசா. இம்பாடலில்—தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணங்களில். உஎ. சையார்ந்த—ஆக்கம்பொருந்திய. குடிஞை—ஆறு. உஅ. வீரணம்—இலாமிச்சைவேர். ஙய. தேசனை—ஒளிவடிவாகிய உமை. சிதக்கல்—வெள்ளியகண்ணக்கல். ஙஉ. அந்தரங்கமார்—ஆலோசிக்கப்பொருந்தும்.

மூாச மூன்றுமுக் காலமு முழங்கிடும் முதுசீர்
பாசு பஞ்சவாத் தியங்களெக் காலமும் பயிலும்
சிரசு றுப்படாந் திகழ்ந்துமுக் கடங்களைத் தினமு
மாசு வாபொழிந் தொழுகுவ தானசீ ராறு. (௩௩)

சூட கம்புனை மாதர்தங் கணவர்தோட் டோய்காற்
பாட கஞ்சிலம் போச்சிடு மொலிபரம் பாமல்
நாட கம்பயில் கிளியொடு நாகண வாயு
மாட கங்கரை குரலினுற் கவ்வையை மறைக்கும். (௩௪)

மதிமு கத்தியர் முகங்களு மலர்களுங் குழையு
விதிமு றைக்கணுங் குவளையும் விளங்குவ வரிகள்
பொதிமு லைகளுஞ் சேவகங் களும்புகுங் களபந்
துதிமுன் னங்கையுஞ் சுல்லியுந் தோய்வரு டகமே. (௩௫)

தருமல ர்களு முளரியுந் தருவண பாகம்
பருமஞ் ஞாமு மாலையு மணப்பன பாந்து
திருமணும் பனுவ் லீணையுஞ் செறிவன தந்தி
குருமணிக்கலுஞ் சுல்லியுங் குலவுவ வன்னம். (௩௬)

திரைம னைந்துப டுக்கையின் மகிழ்ந்துதே மொழிபன்
னுரைம றுத்தலிற் சினந்துசிந் தியமணி யோதைத்
தரைம றைத்தொளிர் நித்திலத் தாழ்வடந் தழைத்த
வரைம டுத்தெனக் கூட்டின மதிற்கடைக் குப்பை. (௩௭)

தேசி கன்றெய்வ யானைக்கு நாயகன் சிவந்த
கோசி கந்தரித் தவன்றரு குளிகையை வாங்கிக்
காசி கண்டவன் காண்சொயஞ் சோதிமுக் கணன்றென்
காசி கண்டிடத் தவஞ்செய்த கவினதித் தெருக்கள். (௩௮)

வேறு.

பெருந்துசங் குடங்கண் ஞாடி பேசிசா மாமொண் டபம்
பொருந்திணைக் கபலே தோட்டி புகழ்வெண் மங்கலத்த
திருந்துதென் காசி மான்றுன் றேரல்கு னைகைபொற் றாவி
யருந்துவண் மூலகும் பப்பொன் னலர்முகங் கொடுசி றந்தாள். (.)

ஙரு. களபம்—சாந்து, யானைக்கன்று. ஙசா. திருமனும்பல்—அழகிய இராசயானை. ஙஅ. சிவந்தகோசிகம்—செம்பட்டை.

அருத்தியமுழவி ேனுைத யவிர்மணி முரசி னேதை
பொருத்திவெல் பேரி யோதை புரவிகள் கனைக்கு மோதை
பெருத்ததும் பிதவி னேதை பிறங்கருட் கொண்ட லோதை
திருத்தவை முழங்கு மோதை சிறந்தன முதுதென் காசி. (௪௰)

கணிகையர் வீதி.

உவரியுப் பதுகாய்க் கெல்லா முறுசுவை தருதற் போலத்
துவரித ழமிழ்த வாயார் சுருள்பகிர்ந் தளவ ளாவி
யெவரினு ஞரின்மூத் தோரி ளிருப்பினு மிரந்தாற் செம்பொன்
கவரிரும் போகம் விற்குங் கணிகையர் வீதி சொல்வாம். (௪௧)

விரும்பினார் கருத்துக் கேற்ப மெய்யன்பு செலுத்து வார்போ
லரும்பினை னேரீ இகல் லின்ப மருந்தவீழ்ந் தருத்து வார்போற்
கரும்பினன் காம னூலுங் கண்டவர் போற்கண் டோர்கண்
டிரும்பினன் மடமொன் பார்போற் சித்திரஞ் சுவரிற் செய்வார் ()

விலைமுதிர் பவளத் தூடே விரவுமுத் தாரந் தாங்கிச்
சிலைமுரி புருவம் வாங்கிச் செங்கணை யேவிக் காயன்
கலைமுழு வதுமெண் ணேற்றிக் கண்கவர் வனப்பு வாய்ந்த
முலைமுனை சிறிது காட்டி முயக்கிமுப் பொறியுங் கொள்வார் (௪௩)

பூரண மதிய வீசும் புதுநிலா வெறிமுற் றத்துத்
தோரணக் கருப்பம் பந்தர்த் தொடைபல தூக்கிப் பன்னீர்
வாரணத் தென்றல் வீச மலரம ளியைக்கொள் கட்டிற்
றூரணத் திருந்து பாடி யிசையினி தாத்தந் தேய்ப்பார். (௪௪)

ஐயல சரும்பு வேடன் ஞணையிற் செங்கோ லோச்ச
மையலர் விழியுஞ் சீத மதிமுக வொளியுங் கானம்
பெய்யல ரிதழி ஞவிற் போமிழ் திறைத்துத் தேவ
மையலர் தமக்கு முண்ணுண் டாமணத் தனியுண் பிப்பார். (௪௫)

குரவனூல் கேட்போர் பண்புங் குறிப்புமோர்ந் திசையுக் கேற்பத்
தரவவை சார்பிற் கேட்ட தவச்சிறார் சொலல்போற் கற்கு
மாவக லல்குலார்பாட் டமைதியாக் கிளிகள் கேட்டுப்
பாவவாய் விட்ட ாற்றும் பண்விறு வுகார்க்கின் பாக்கும். (௪௬)

௪௰. திருத்தவை—உலகத்தைச் சீர்திருத்துங் கற்றறிவுடையர் கூட்டம்.

அத்திக்கு ணீரை வாரி பருமுகில் பொழிந்து மண்ணில்
வத்திக்கும் பயிருண் டாக்கு வனம்பொது மினார்கண் மாயா
புத்திக்கு ண்மோக முண்டு பொதிவெறி தினருட் பெய்து
தித்திக்குங் காமப் பைங்கூழ் தெளிவுற வளர்ப்பர் மாதோ. (௪௭)

சுருப்பமர் கண்வாய் மூக்கு துணைச்செவி மெய்தொ ழிற்பட்
டிருப்பபோ னீங்கா தொன்று யினித்தவின் பமிழ்தா யெட்டுத்
திருப்பசி யகற்ற [illegible]
விருப்புற பட்டுத் விற்போர் வீதியின் சிறப்பீ தாமால. (௪௮)

வேளாளர் வீதி.

கங்கையங் குலமு மேழிச் செல்வமுங் காவிப் பூவுஞ்
செங்கையங் கொடையு மன்புந் தெரியுமுக் காலத் தேர்வும்
நங்கையர் கற்புஞ் சைவ கப்பணு மருளு நாளு
மிங்கைய மிலாக்கொள் வேண்மா ரிருக்குவீ தியின்சீர் சொல்வாம்.

வேறு.

எல்லைகாண் பரிய கல்வியெந் நாளு மிடைவிடா மனங்கொளப் பயின்று
சொல்லையாண் முதுசீர் பெறநெறி விழைந்து துலாத்தினுவெணாடுநின்று
வல்லையா ரின்பந் திளைத்துமேன் மாயை வழக்கறிந் தகைக்கடந் தேறி
யொல்லையேழ் பிறப்புந் தீவினை தீண்டா தோங்கின் மக்களின்றுளிர்வார்.

இல்லறம் புரிந்து பசித்தவர் வரினு மிரக்கமார்ந் தினிதுண வருள்வார்
நல்லறத் தமர்தம் மவரலா ரிடையெஞ் ஞான்றுமே வுணவுகொண் டறியார்
தொல்லற நூல்க ளுணர்ந்துணர் வுறப்பார் தொடர்புறும் பிறர்க்கிடர் தவி
[ர்ப்பார்
கொல்லறம் மறமென் பவர்பலி முதற்செய் குறும்பிறர்க் கொதுங்கிவாழ்
[வாரே. (௫௧)

வேறு.

அன்னநான் முகனு மாய னதனூறு சுவையாஞ் சைவ
முன்னத மகேச னுவா முணவுகண் சுவைநா கான்மூக்
கின்னய வார்த்தை காது வேற்றதோ லுணவென் னீவக
மன்னறு சரணந் துய்க்கும் வணந்தால் வேண்மார் சீரே. (௫௨)

இவனிவர் சார மெல்லா மேற்பவன் சிவனே யாவ
னவனிடை யுயிரி ரண்டற் றமர்தலிற் குறையொன் றின்றாய்ப்
புவனியா சமவே தங்கள் புகறிரு நெறித்த வங்கூர்ந்
தவனிலு மெதிலு முற்றீ யிறையருள் பெறுவார் வேண்மார். (௫௩)

---

௪௭. பொதிவெறிதினர்—பொதிந்த மூடத்தையுடையவர். ௪௮. எட்டுத்திருப்பசி—ஆசையாகிய அழகியபசியை.

வேறு.

சிறிய வெற்பென நறுஞ்சுவை சிறந்தவா லன்னம்
பிறிய வாய்ந்தபல் குன்றெனப் பலகறி பிறங்க
நெறிய மைத்துநன் னெய்பொழு காறென நிறைய
மறிய வூற்றியூட் டுவாறக் கிழவருண் மகிழ்ந்தே. (௫௪)

திருவு ருச்சிவ வடியார் சைவரைத் தேடி
யருவு றிற்களித் திறைஞ்சிநல் லடிகழீஇ மலர்தூ
யொருவு றும்புகை தீபமேந் தவர்துதித் துகந்தே
குருவு ருச்சுவை யுணவிட லருள்பதி குறித்தே. (௫௫)

விருந்தி னைந்துசெல் லடியர்பின் னேமுடி மேற்போய்
யருந்தி னித்தசொல் லாடுவர் வந்துவந் தடியார்
பெருந்தி ருத்திகொண் டுண்ணவூட் டுவாருள் பெருகித்
திருந்தி வாழிளங் கோக்களாள் வளத்தெரு சிறக்கும். (௫௬)

வேறு.

பருகினோர் மகிழ்ந்து செல்லப் பருகுகின் றூரு மாங்கே
வருகவெ னனவ ழைப்ப வருகரு மினிப்ப நாளும்
பெருகிள முலைப்பா லுண்ணப் பேர்ந்திவ ரான்கன் றேபோ
லருகிய வுளத்த ராய வூட்டுதா ளாளர் வாழ்வார். (௫௭)

நண்ணிய கல்வி ஞானம் நல்லொழுக் கங்க ளோங்கிப்
புண்ணியக் குடிப்பி றப்பும் புகழுமா முழவு பேணி
யெண்ணிய வணிகஞ் செய்தே யிறையமைச் சாய்ப்பார் காத்து
நண்ணிய நூல்க ளாக்கி நோன்மைவே ளாளர் வாழ்வார். (௫௮)

வருகவென் றழைக்கு மோதை மணநினித் திடப்பே சோதை
யுருகுநெய் படிசி லூட்டி யுகந்தருண் முகம னோதை
பெருகமுத் தமிழ்கொ ளோதை பெருஞ்சொலார்க் குதவுமோதை
மருகற்கு மகனல் கோதை வானிடி யடக்கு மோதை. (௫௯)

குருவுரை தவறு நட்புங் கொடையுமன் னவர்செங் கோன்மைத்
திருவுய ரமைச்சுந் தேவ பத்தியுந் திரிலோ கம்போய்த்
தருவுமெய்ப் புகழு நாளுந் துணைப்பயிர் காக்குமாபோன்
மருவுமுத் தமிழ்பேண் பற்று மானமுங் காப்பார் வேண்யார். ()

௫௯. பெருஞ்சொல்—பிரசங்கம்.

வணிகர் வீதி.

நாற்றிசைப் பண்டங் கொள்வார் நயந்துகேட் பவையின் றியின்
வேறதிசை பொருளைக் கூறி வேண்டிடிற் றருது மென்று
தேற்றிசைத் தவையுண் டென்னிற் றிடமென வெடுத்துக் காட்டி
யாற்றிசை யளவி லாப மடைவணி கரின்சீர் சொல்வாம். (௬௧)

வேறு.

மதிக்கு நீலமே னித்திலம் புனைசுவர் வகுத்துப்
பதிக்குஞ் செம்மணிக் கானிறீஇ வயிரமீப் பரப்பி
விதிக்கு வெண்ணிலா வெறியொளி வீசுபொன் மாடங்
கதிக்கு மாலைபோற் பெறுந்தெருத் தெற்றிபேர் காட்டும். (௬௨)

உடுத்த வாவியின் சாயைகாட் டுவவொளி யாடி
கொடுத்த காந்திநன் னிலைக்கத வங்களின் குயிழ்கண்
மடுத்த வொன்பது கோளிரா சிகளபுகு வான்போ
லடுத்த பலவளக் கவினவிர் தருமணி மாடம் (௬௩)

இரவி ரித்தகார்க் கமபலம் விரித்தசி வினமபோற்
பரவி வெண்மணி செம்மணி பொன்மணி பசுங்கல்
தரவி ளக்குவை டூரிய வைரமே தகுகல்
திரவி லக்கொணி லம்பவ ளபமுறல் சிறப்பே. (௬௪)

குருமணிச்சுடர் விளங்குநன் னுடிநீர்க் குடஞ்செவ்
வருமணிக்கொடி யாழிமீப ரிவைகுடை யுருவந்
திருமணிற்றெளில் வட்டமங் கலஞ்சிறந் தயல்சூழ்
வருமணித்துள பீடிகை மணவரை மாலும். (௬௫)

பருத்தி பட்டெலாம் பரிதியின் விளங்குநூல் பயக்க
விருத்தி செய்சிலம் பிகளிளம் பரிதிகண் மிகக்காண்
குருத்தி கழ்படி கங்களிந் திரவிலாங் குருந்த
முருக்கி றத்துடுக் கணமியா ளிருமவ் வீதி. (௬௬)

௬௩. கொடுத்தகாந்தி—ஒளிகொடுப்பன. கொடுத்தவென்பது எதுகை நோக்கிவந்த காலமயக்கு. ௬௪. பசுங்கல்—மரகதம். ௬௫ அட்டமங்கலம்—எண்வகை மணப்பொருள். இதன் ௩௯-ஆம் பாட்டிற் கூறியதினின்றும் சாமரம், இணைக்கயல், தோட்டி என்னு மூன்றனைத் தள்ளி ஆழி, குடை, உருவம் (ஸ்வற்சம்) என்னு மூன்றனை இதிற் சேர்க்கப்பட்டமை காண்க. இதனால் அட்டமங்கலப்பொருள் இருவகையாக வழங்கினமை கண்டு கொள்க. ௬௬. சிலம்பிகள்—பட்டுப்பூச்சிகள். குருந்தம்—குருந்தக்கல். (வச்சிரக்கல்.)

நீலக் கல்லினா லம்மிக ணெடும்பொனா லுலக்கை
சாலக் கல்வயி ரத்தினா லுரலது சமைத்து
மேலக் கம்புனை வெண்பொனின் கலத்துமுத் தரிசி
யேலக் கந்தமர் சிறுமியர் சமைப்பர்சிற் றிலினே. (௬௭)

சிறந்த வெள்ளியின் சுவர்நிலை வயிரமாச் செழித்து
புறங் யங்குபொற் கதவுபொற் சிப்புறு பொலிவி
னிறந்த ணந்திடா வளைகளன் னிதியமெண் மடங்குற்
றிறந்த மைத்தவை சியர்தெரு வளந்துரைப் பரிதே. (௬௮)

மடுத்த பேரொளி மரகதஞ் செய்யணி வயிர
மடுத்த முத்துதப் பாதிய குப்பைக ளலகிட்
டெடுத்த ரிப்பவர்க் காண்டுதோ றும்பொனா யிரங்கைப்
படுத்த லாற்பிர புவெனவாக் கிடுந்தெருப் பண்பே. (௬௯)

சூரி யன்றரு மொளியினா லுலகுயிர்த் தொகைகள்
காரி யப்படு மிங்கணார் பயனெலாங் கருதி
வாரி யிக்கரை யக்கரைப் பொருளெலாம் வணிகர்
கோரி வைத்தருள் கடைத்தெரு பலவளங் குலவும். (௭௰)

வேறு.

தாதியன் மலர்தே னல்கத் தனித்தனிப் பலதே னுண்டு
காதியன் றினிதி சைச்சல் காட்டலிற் கடல்க ளார்ப்பி
லோதியப் பதினெண் சொல்லோர்ந் துகந்துரை யாடு மிப்பர்
வீதிய தொனிகல் யாண விழாவொலி யேய்க்கு மாதோ. (௭௧)

அவரவர்க் குடைபூ ணூணைந் தற்குமீ சுவைப்பண் டங்கண்
கவரழ லியக லங்கள் கமழ்பல பொருள்கண் முன்றா
வியலா லறுபா னான்கு கலையருள் குரவ ரேய்ந்துந்
துவரணி கணிகை யொத்துந் துலங்குமவ் வணிகர் வீதி. (௭௨)

வேறு.

பன்ன கச்சடைப் பரம்பர னருள்விசு வேசன்
றன்ன கர்வட காசியுந் தொழுததென் காசி
பொன்ன கர்க்கிறை யைந்தரு மலர்வனம் பொருந்தி
மன்ன கன்மணி வளத்தது வணிகரா வணமே. (௭௩)

௬௭. அக்கம்புனை—பொன்பூசிய. ௬௮. சிப்பு—தாழ்க்கோல். ௬௯. பிரபு—நூறாயிரம் பொன்னுடையவன். (லட்சப்பிரபு) ௭௨. ஊணைந்தற்கும்—விழுங்கல், குடித்தல், கடித்தல், நக்கல், உறிஞ்சல் எனவழங்கும் உணவுப்பொருளைந்தனுக்கும். துவர்—பவளமாலை, செவ்வுடை, தாம்பூலவழகினையுடைய.

அரசர் வீதி.

பரவு விண்ணிரு ளொதுக்கிநீள் பான்மதி பரிதி
வரவு வானினா லெண்டிசை விளக்கலின் வயவ
ரிரவு போக்கியே யுலகமுங் காக்கலிற் றிருக்கு
முரவு வேலுடைப் புரவலர் வீதிமாண் புரைப்பாம். (௭௪)

இலக வீசிய செங்கதிர் வெண்கதி ரிமைப்பப்
பலக லின்றரு விளைச்சலுஞ் சுவையுமாம் பாரின்
றிலக மாமன ரோச்சுசெங் கோலினென் றுருவா
முலக மின்புற வாழ்தலை யுறையுதென் காசி. (௭௫)

உரசு மாடகக் கட்டுடை வாளிருப் புலக்கை
யரசு மார்வில்வேல் வாளெறி யாயுத மீட்டி
சிரசு சூழ்தவண் முதலவன் றடிமுதற் சிலம்பம்
பரசு சக்கர முதலவும் பயிலிடம் பலவால். (௭௬)

வலைய காவிரு துளையவாய்ச் சுற்றிரு வட்டச்
சிலைய ணிப்புயஞ் சுற்றுரத் தடிதிண் டுருணீ
ணிலைய தண்டமுன் பலவுமல் லாடலு நேர்ந்தாற்
றொலைய விட்டிடு குத்துமோ ரிடம்பல தொகையால். (௭௭)

பிடிகள் பூட்டுக டட்டுக ளடிகளெப் பிடிக்குட்
படினு நீக்குதல் பூட்டுகட் கழற்றுதல் படாது
கடித றட்டுக ளடிக்கிடங் கொடாதுகான் மாறல்
மடிபொ றித்தட்டு விலக்குண ரிடம்பல வயங்கும். (௭௮)

நிலம்பு கழ்ந்திடு நீலவொண் மாடமு நிலவாற்
செலம்பு ரிந்தெறி சிலைபுனை மாடமுஞ் செம்பொன்
கலம்பு னைந்ததென் காசியாங் கன்னியங் காண்மே
லலம்பு நூபுர பாதிக ளணிந்ததொத் தனவே. (௭௯)

௭௬. அரசமார்—இளவரசன்மார். (யுவராஜர்) எறியாயுதம்—பிண்டிபாலம். ஈட்டி—குந்தம். (கைவேல்) வன்றடி—வலியகம்பு. பரசு—மழு. ௭௭. வட்டச்சிலை—வட்டக்கல். உரத்தடி—மார்பினைத்திறுத்தித் தோள்களைச்சுற்றி வீசுஞ் சுற்றுதடி. (சுவடி) தண்டம்—தண்டாயுதம். ௭௮. பொறித்தட்டு—வறமத்தட்டு.

வேறு.

நெஞ்சிய லளக்கொ ணாத நெறியகற் புயரின் மார்தம்
மஞ்சிய னுளம ளக்க வலாளக் கரிய னுண்டோ
வெஞ்சினத் தொனுமொ நிர்த்து மேலிடின் வலிய ளந்து
மிஞ்சிய வலிமை காட்டு வீரரார் வாரவ் வீதி. (௮௰)

கடுந்திற லாளர் கண்ண னுணிட வெழுந்து துள்ளி
யடுதிறன் மணிகள் கட்டி யார்த்திடுங காற்றெட் டத்தின்
சடுதியுங் கடந்தெட் டோணுத் தனிமன வேகங் கொண்டே
திடுதிடென் றோங்கு செல்வஞ் சிறந்தேர் நடாத்து வார்கள். ()

எல்லினைத் துதிக்கை நீட்டி யெடுத்தெறி யனமாய் வான
வில்லினைப் பிடுங்கி வீசி வெங்கய வலார்மாற் றார்மேற்
கல்லினை நொறுக்கு வன்காற் கழலராய் விழிதீக காலுறு
செல்லினை நிகரார்த் தேறுஞ் செருக்களி றூட்டு வார்கள். (௮௨)

ஆடவர் மார்பிற் சாந்து நாவியு மாரத் தென்றல்
கூடவந் தெறிம ணத்த பொடிகளுங் குளிர்பூந் தோட்டிற்
பாடவண் டினமி றைக்கும் பாகமு மார்துள வான்றோய்
மாடவண் சிகரம் போர்ப்ப வாம்பரி நடாத்து வார்கள். (௮௩)

தாந்தரஞ் சுவடாய் மற்போர் தாம்புரிந் தறிவார் வென்றி
யுரந்தரச் சிலம்ப வீசி யுளங்களி துளும்பி நிற்பார்
புரந்தர னுணை வில்வாட் போர்த்திற னுடிக் காண்பார்
நிரந்தர னருள்கூர் சைவ நிருபரின் மக்க ளம்ம. (௮௪)

அமையறன் மான நீத்திங் காடவ ரெனத்த மைப்பேண்
சுமையமெய் யெதற்கோ விப்பார் சுமக்கநாண் கொளுமென் றெள்ளி
குமையவேல் முனையின் வெற்றி கொளுங்குறிக் கொண்ட வீர
ரிமையசே வலைக்க டாவை யிகலவிட் டுணர்த்து வார்கள். (௮௫)

உருப்பகை யெனுஞா னிக்கு முடம்புவேண் டுவதே யாங்கிங்
கிருப்பமெய் காப்ப மென்பார்க் கெண்படா துறினன் றென்ன
விருப்பமா னவர்நி லைத்து விமலனா ரருள்சை வங்காத்
தொருப்படு மொழுக்கங் காத்தூர்க் குவப்பரு ளாக்காண் பிப்பார். (௮௬)

௮௰. இன்மார்—மனைவிமார். ௮௨ வெங்கயவலார்—வெம்மையை யுடையயானைவீரர். களிறூட்டல்—யானையை நடப்பித்தல். ௮௬. ஞானிக்குமுடம்பு வேண்டுவதே யென்பது:—

"அறிவி லறியாமை யற்றறிவாய் நின்று
பிறிவறவா னந்தமயம் பெற்று—குறியவிழ்ந்தா
லன்றைக் குடல்வேண்டே னையாவிவ் வாக்கையையே
யென்றைக்கும் வேண்டுவனே யான்". —எனத் தாயுமானார்

திருமொழியாலு முணரக் கிடந்தது.

ஆண்டலை தகரி னம்போ ராற்றவிட் டடல்காண் வீரர்
மாண்டவொன் னார்பான் முட்டி வாகைசூ டுவரே யில்லோ
னீண்டமின் களைப்பி டிக்கு நேசரா காரந் நேசர்
கோண்டனு யினுங்கீ ழென்றூர் குறிக்கொள வதுகாட் டாட்டே.

சித்திர மன்ன கன்னிச் சிறுமியர் குழீஇத்தா மாடச்
சித்திர நதிதான் வீசு தெள்ளொளி முத்தை வாரிச்
சித்திரப் படக்கட் டிப்பெண் சிற்றிலைச் சிறுகு றும்பாற்
சித்திரச் சிதைவு செய்வார் சிறுவர்தே ருருட்டு வார்கள். (௮௮)

பெருகுமின் கொடிது ழாவும் பெருமதி லிடப்பாற் கங்கை
பொருகுமி ழியினீர் மாறப் புணரிநேர் வலஞ்சூழ் காப்பண்
முருகுகொப் புளிக்கும் போந்து மாருமுன் பிருபா னிற்பச்
செருகுவேம் பலர்த்தார்த் தென்னர் திருமணிக் கோயிலோங்கும்.

வேதியர்வீதி.

தருமமும் பொருளு மின்புஞ் சார்புறு வீடு நான்குங்
கருமமு மின்றென் பார்கா வறுந்தெறி கத்தி யேபோல்
மருமநூல் விதிவ ழாத மானவை திகமே பேணூல்
திருமறை பவரை வேள்விச் செயல்வளர் வீதி சொல்வாம். (௯௰)

மருக்குலா களினக் குஞ்சி வயங்குநூன் மார்பு மின்ன
திருக்குரா ணிறுக்கி முஞ்சி யிடையுடைத் தானை சேரச்
சுருக்குமுன் றானை நாலத் தொழுபுர சக்கோல் கைக்கொண்
டிருக்குமு னூல்வே தந்தே ரிலந்தொறுந் தீமூன் றோங்கும். ()

இரவையு மகற்றுந் தீவேட் டியன்மறைச் சிறுவர் வேதப்
புரவையுட் கொளுங்காற் சந்து புகன்றுறும் பூவை கேட்டவ்
வரவையுற் றறிந்து மன்றி னெய்தலின் வழுத்தி வைகப்
பரவையும் புளினங் கேறிப் பாப்பியே படிக்கு மாதே. (௯௨)

௮௭. ஏதில்—அயல். (பிறர்) கோண்டனுயினும்—கீழ்மகனுகிய சனனிலும். ௮௮. சிறுகுறும்பு—பாலசேட்டை. ௯௰. மருமநூல—இரகசிய மறை. ஐவேள்வி—யாகங்களினுலே தேவர்களையுஞ், சந்திகளினுலே பிதுர்களையும், வேதாத்தியயனங்களினுலே முனிவர்களையும், அன்னங்களினுலே அதிதிகளையும், பூதபலி கருமங்களினுலே பூதங்களையுந் திருப்தி செய்தல். ௯௧. குஞ்சி—குடுமி. முஞ்சி—முஞ்சம்புல். புரசக்கோல்—தீக் கடைகோல்.

சுருதியு மங்க மாறுஞ் சொற்கலை யறுபா னாலு
மிருதியுந் தெரிந்து மந்தோர் புறமத மெலக்கெட் டாமை
கருதியுத் தரிக்கு வாய்பா டுடையவாய்க் கசடு தீர்ந்து
வருதிற லுடைவ ளத்துச் சார்குழா முடைத்தவ் வீதி. (௬௩)

வேறு.

துதிக்கை யேந்தலிற் றூயலர்க் குண்டிகைக் கையர்
வதிக்கை செங்கலேய் துகிலினர் தண்டுகோ லணைத்தர்
கதிக்கை பிச்சையை யேற்றமழு வாந்தவங் காண்போர்
விதிக்கை வல்லியர் மாதவ ருறையுளவ் வீதி. (௬௪)

அடுக்க லைப்புகை மினார்குழ லகிற்புகை யளாவோங்
குடுக்க லைக்கறை செயுமகப் புகையொளிர் விந்த
மடுக்க லைப்படி மஞ்செனக் கருத்தது வாரி
கடுக்க லைத்தர வணிகளக் காட்சிய தன்றே. (௬௫)

ஆதிசைவர் வீதி.

துறைவி ளங்கியஞ் செழுத்தெணித் தூயவெண் ணீற்று
நிறைவி னன்பரேழ் பிறவியாம் வினைக்கட னீந்திக்
கறைவி ரிந்தகண் டனதடி யின்பவாங் கனிவி
னுறைசை வோத்தமர் திருமட வீதிவாழ் வுரைப்பாம். (௬௬)

வேறு.

நேசவான் மார்த்த பூசை நிமலனா லயப ரார்த்தந்
தேசமுற் றிடப்பூ சித்தல் செய்துவந் திடுவார் நானு
பேசனா கமங்க டேர்வா ரிறையுயிர் மலங்கண் மூன்று
பாசற வுணர்ந்து ணர்த்தி மலக்கழீஇ வாழ்வார் மாதோ. (௬௭)

சைவாசிரியர். (வேறு)

பதியி னுண்மைஞா னத்தராய்ப் பகர்சைவா கமங்கண்
மதியி னுய்த்துணர் சாதகர் போதகர் மைந்தர்
விதியி னுள்ளவ ராய்ச்சிவத் துவவிளக் கத்த
அதியி னார்தவ யோகியர் சூழிடம் பலவால். (௬௮)

வேத வாகம விருமுத னூலையு மிகத்தேர்
போத வாசகின் புறவிடை பிங்கலை புகுதும்
வாத வாசா னைவநு வாசராய் மனுவா
சாத வாதராய்ச் சிவத்தம வியோகிய ரநேகர். (௬௯)

---

௬௯. வாதவாசானைவநுவாசர்—வாசிதாசனையை அநுட்டித்து நிட்டைகூடி யிருப்பவர். மனுவாசாதவாதர்—மன்ருட்டிடன் வணங்கிமுறையிடுவர்.

எட்டுத் திருமடங்கள்.

அரசருக்கு முடிசூட்டப் பண்ணவராய்ச் சந்நிதியுற் றாகமங்கள்
சரசருக்கு முதன்முழுதோர் சிவபாத மூருடையா சானு தீனம்
பரசருக்கு முடியோனிற் றீக்கைசெல்கத் தென்கீழ்பாற் பதிந்தஞ் ஞானச்
சிரசருக்குந் திறற்சாமி தேவசபி னாகோர தேவா தீனம். (௭௰)

தென்பால்வித் துவவேம்பத் தூர்மடமாந் துருவாசா தீனந்தென்மேற்
கின்பார்பெண ராணிகமெய் தேற்றுனந் தக்கூத்த ரெழிலா தீனம்
மின்பாண்டி யற்கிறையைக் காட்டுதவப் பிரகாசர் மேற்கா தீனம்
மன்பஞ்சித் தாந்தசைவந் தரவதன்பால் மெய்கண்டார் வன்ரா தீனம். ()

வடதிசையிற் கவிப்பரையா னுலமயொருபா சக்ரவன் வதியா தீனந்
திடமருவீ சானத்தி னிடிவலஞ்சூழ் பாஞ்சோதி தேவா தீனம்
மடமிவெட்டும் பராக்கிரம னேகிலையிட் டியர்சைவம் வளர்க்க வேண்டித்
தடமலிமா னியநிரம்பக் கொடுத்தோங்குஞ் சிறப்பதின்பந் தழைதென்கா
[சி. (௭௨)

சிவன்கோயில்.

பொருந்து தும்புரு நாரத ரியாழிசைப் பொலிவா
விருந்து தான்செவி வழிக்கொள விசையவெள் ளன்ன
மிருந்து வீசவே ழிசைக்குழற் பண்ணொடு மெதிர்நின்
றருந்து மும்முர சறுதலா ரருட்சிவன் கோயில். (௭௩)

இடக்க லந்தவள் கொழுநர்தா மெட்டுரு விசைந்தாங்
கடங்க நீண்டவ ரவர்தபா லயநடு விந்தாய்த்
திடங்க வோங்கிய மேருவாய்ச் சுற்றுடைத் தாகி
மடங்க லாழ்புவி தாங்கவி னமைந்ததோர் வனப்பே. (௭௪)

செண்பகப்பொழில்.

பலவ ரப்பெறு சிரும்பினை வென்றயும் படிமுன்
வலவ னுதியோர் வந்துசெய் தவத்தினு வரமாக்
குலவ நாளெலாஞ் சண்பகங் குளிர்மலர் தூவல்
புலவ ரின்புறப் பொன்பொழி வள்ளியோர் போலும். (௭௫)

---

௭௩. வெள்ளன்னம்—சரச்சோதி. ௭௪. எட்டுரு—மண்ணிற்பவர், நீரிற்சர்வர், கனலிலுருத்திரர், காற்றில் வீமர், வானின் மகாதேவர், சூரியனிற் பார்க்கர், சந்திரனிற் சோமர், ஆன்மாவிற் பசுபதி என நின்றருளுஞ் சிவத்தினது எட்டுநிலை. விந்து—சிவக்குறி (வட்டம்). மேரு—சத்திபீடம் (பெருவரை). சுற்று—மதில். மடங்கலாழ்புவி—உகமுடிவிலாழுகின்ற வுலகை. ௭௫. வலவன்—விட்டுணு.

கொடையி ஞுல கடக்கிய வேந்தரிற் குளிர்பூந்
தொடையி னீள்கமழ் மலர்சொரி செண்பகச் சூழ
லிடையின் மாங்குயி லம்பலர்த் தேனமிழ் தெடுத்துப்
பெடையி னப்பசி தீர்த்தனைத் தின்பமே பெருகும். (௭௬)

விமானங்கள்.

சுரிகம் புள்ளொலி திரையொலி தொனிக்குமே மாழி
யிரிக விட்டரைந் தெழுந்தசித் திரையுடு தெயில்சூழ்
புரிக வின்றர் கடுப்பொருப் போககலிற் பொலிந்து
விரிக திர்ப்பரி தியிஞெளி பரப்பின விமானம். (௭௭)

கோபுரம்.

அரவு வாசுகி முதலவை ராவத முதல
வரவு மந்தர முதலபேண் மாடமோ ரெட்டும்
பரவு மேற்கொடு துர்க்கைமா ரெண்மரும் பார்க்கப்
புரவுத் தண்மதி தவழவோங் கியதுகோ புரமே. (௭௮)

இருபொருள் வளம்.

சொயந்த பங்கொளிக் காமதே னுவின்முலை சொரிபா
லயந்த னிற்குழூஉம் பெருக்கிலாக் தாமரை யாளு
வியந்த பாரதி யுஞ்சுழீஇ யுலகுபேண் மேன்மை
நயந்த ழைத்தமாண் வளத்ததென் காசிமா நகரம். (௭௯)

பொது.

உணவி றைந்தபாற் கலங்கடல் பெய்சுனை யோங்கல்
வணவி றைந்தெதிர் மழலையுற் றுகந்தள வளாவிக்
குணவி றைந்துனுங் குடிகடல் கடைவதிற் காண்வான்
கணவி றைந்துகண் ணிமைத்தில வளத்ததென் காசி. (௮௰)

அருத்தித் தேத்துதன் கபவுருத் தீர்ந்தது மசல
முருத்தி றப்பணிந் தருமிற கடைந்தது மோங்கு
விருத்தி வேந்தனேர் குளிகைபெற் றுகந்ததும் விமலை
யொருத்தி யால்வினை ருய்ந்ததும் படைத்ததென் காசி. (௮௧)

எகூ. அயம்—நீர். அ௰. பாற்கலம்—பாற்பொங்கல் வைத்துண்ணும் வள்ளம். சுனை—பசைச்சுனை. ஓங்கல்—மந்தரமலை. அக. அருத்தித்தேத்துதன்—இரந்து யோற்றிய சயமுகாசான்றனது. ஓங்கு விருத்திவேந்தன்—செண்பகமாறன்.

செவிக்கு ணவமிழ் தாயபண் முறைநெறி தெளிந்தோர்
கவிக்கு மாகம சுருதிக்கு மிருதிவிள் கரும
புவிக்கு ணற்றிசை போற்றற்கும் புண்ணியப் பொலிவுற்
பவிக்கு முத்தமிழ் கற்றுநாட் கழிகுழாம் பலவால். (௮௨)

வேறு.

பனியவிழ் மலர்க்கோம் பன்னூர் பாதமு மிசையும் வேட்டு
மனியகண் செவிநி றைத்து வயங்குமா னந்த மூழ்கி
யினியகண் ணமிழ்தன் னூரை யிங்கிதத் துறையாற் றேய்ந்து
கனியவா யூற லுண்டு களிமணம் பெருகிற் றன்றே. (௮௩)

தலம்பக விரிநீர்ச் சென்னித் தலைவனைக் கண்டுந் தாழ்ந்து
முலம்பக வுருக்கு பாட லோதியுங் கதைகள் செய்துங்
கலம்பக விசைவா சித்துங் கனிபெருஞ் சொற்பு ரிந்தும்
நலம்பக ரன்ப ராகி நாளெலாங் கழிப்பார் பல்லோர். (௮௪)

கற்றது கருத்தி ருத்திக் கதைபல பெருஞ்சொல் சைவர்
சொற்றது கேட்டுத் தேறித் தூரமா னவர்பி தற்றுள்
ளுற்றது மறுத்தொ துங்கு முானுடை யோராய் நாளும்
பற்றது சிவன்றாட் காக்கிப் பல்கிவாழ் வுறுவோர் பல்லோர். ()

இந்நகர்ப் பெருமை சொல்லற் கெளியதோ வெழிற்செஞ் சூட்டுப்
பன்னகத் தவனு மன்னப் பதுமனு மளக்க லாமே
யென்னக மெம்மட் டம்மட் டிசைத்தன னென்றான் சூதன்
மன்னக முனிவர் கேட்டன் மகிழ்ந்தன ரோங்கன் பார்ந்தார். (௮௬)

நகரச்சிறப்பு முற்றிற்று.

ஆகப்பாட்டு உ௨அ.

அ௩. மணம்—கூட்டம். அ௪. தலம்பக—பூமியைப்பிளக்க. உலம்பக—திரண்டகல்லையு முடையும்படி. கலம்பகவிசை—யாழினின்றும் பிறந்தியலுமிசையை.

மூன்றாவது தலவிசேடம்.

தலவி சேடமேல் விழைதவர் மகிழுமா தவன்று
னிலவி யப்புறச் சொல்லுவா னீடுதென் காசி
பலவி சேடமு முள்ளது பாம்பான் மகிழ்வாய்க்
குலவி வாழ்வது கயிலையி னுயர்ந்ததாங் குறித்தே. (௧)

ஆதி யாகிய சிறப்பெலா விவரமா வறியப்
போதி யாமறை வியாதனே சொலவல புலவ
னோதி யாவெவ னுரைப்பலென் னுணர்வுண ளவி
னீதி யார்ந்ததென் காசிமா தலப்புக ணெடிதே. (௨)

எண்ணி லாவுயிர்க் குயிராதா யிருந்தரு ளிறையைத்
தண்ணி லாவமிழ் தைத்தனில் வைத்ததிற் றணவா
துண்ணி லாவுற வைத்தமே லோங்குதென் காசி
மண்ணி லாம்பிற சிறப்பெனே சொலவது வலிதே. (௩)

வென்றி தேவிகொள் வானருள் விமலர்தென் காசி
நன்றி தேர்ந்துதோய் பவர்மலங் கழீஇபரு ணல்குந்
தென்றி தேன்மலர் வீசுசித் திரைப்புன றினமாட்
டொன்றி தேர்நலோர்க் காக்கல லிலிங்கமொன் றுளதால். (௪)

சச்சி தானந்த புரமுத்துத் தாண்டவ நல்லூர்
மெச்சு மானந்தக் கூத்தனூர் மிளிர்சைவ மூது
ருச்ச தென்புலி யூர்குயின் குடிசித்தர் வாசஞ்
சொச்ச செண்பகப் பொழினறுந் தொல்சிவ மணலூர். (௫)

சத்த மாதரு ரோங்குசித் திரமூலத் தானம்
பைத்த நன்மயி லைக்குடி பலாவிங்கப் பாடி
சுத்த மார்வசந் தக்குடி துலங்குதென் காசி
யததர் கோசிகை சோடச நாமவைப் பாமால். (௬)

வார ணாசியோ வரணையு மசியுமா ராதி
தார ணாபிதா னத்தது தயங்குதென் காசிச்
சீர ணாவிய சித்திரை பாலொடு தேன்சேர்
நீர ணாரிவை யநாதியித் தலப்புக ணெடிதே. (௭)

௧. குறித்து—குறியை (அடையாளத்தை) யுடையது. ௨. புலவன்—அறிவன். ௭. பால்—பாலாறு.(கௌரி.) தேன்—தேனாறு.(செங்கோட்டையாறு.) நீரணாரிவை—நீர்பொருந்தியவழகிது.

அநாதி யாகவீன் டலர்ந்தசண் பகநிழ லமர்ந்து
மனாதி மானவர் வானவர் மாதவர் வணங்கி
யெனாதி யென்றுபோற் றிடவொரு சிவக்குறி யென்றுந்
தெனாதித் தாடளிக் குழலுமை பாலதாய்த் திகழும். (௮)

சாலி வாகன சகமொரா யிரத்துநாற் றெழுபான்
மேலி வர்முத லாண்டினிற் சண்பக வேந்தன்
வேலி யாயுல காண்டுமாண் விந்தையி லிருந்தெக்
காலி னுஞ்சிவ குமாரனட் புடையனாய்க் கதித்தான். (௯)

ஓங்கி லஞ்சிவாழ் குமாரனவ் வேந்தனை யுகந்து
பாங்க கத்தியர்க் கருளியாங் கொருமணி பயந்தா
னாங்க ருள்குளி கையின்றுணை யாலவன் காசி
தாங்கண் டுண்ணுநோன் பாற்றின னாடோறுந் தழைத்தான். (௰)

வழுத்து சண்பக மாறனப் பராக்கிர மன்றான்
கழுத்துக் கார்த்தவெம் பிரான்வழி பாடுகள் கழித்துட்
பழுத்துக் காசிகண் டுண்ணுவா னொருதினம் பனி
யழுத்த மாத்தொடர்ந் தனளமைத் தேகின னபம. (௰௧)

நாலு நாளிடை யாலவாய் தங்கினர் நயந்தப்
பாலு கந்தெழீஇ வந்தனர் விந்தைபாண் டியன்செங்
கோலு தாரமேத் திற்றவன் பூசைகொண் டருள்கோன்
மேலு யர்ந்ததென் காசியின் சீர்விளக் கிட்டான். (௰௨)

மகிழ்ந்தெ மானருள் வழியெறும் பொழுகுபின் வந்து
திகழ்ந்தெ மான்வளர் சண்பகம் பலாநிழல் தேடி
நெகிழ்ந்தெ மானையங் குணர்ந்துவார் கேடின னிருந்தான்
புகழ்ந்தெ மானோரந் தணனில்வந் திறைக்கிது புகல்வான். (௰௩)

அரச விவ்விடை யநாதிலிங் கம்பெரு காறு
சரச மாவகழ் மடுவிதி னுளதைத் தானோன்
பரச வேயுயர்த் தருளுக னெனவெளிப் படுத்தான்
பிரச நிமபனுங் கண்டுகண் டின்பமே பெருதும் (௰௪)

௮. தெனாதித் தாடளிக்குழல்—அழகிதாக வொலித்தாடும் வண்டுகள் மொய்க்குங் கூந்தலையுடைய. ௯. விந்தை—வித்தல்லூர். ௰. மணி—குளிகை. ௰௨. உதாரம்—மகத்துவம், வீரம். ௰௪. சரசமா—இனிய குணமுடையதாக.

கண்டெ ழுந்தரு ளிலிங்கத்தி லதனைமுன் காட்டிக்
கொண்டெ ழுந்தவந் தனைன்புகுந் தனன்கண்ட கோமான்
வண்டெ ழுந்திரை குழலியோர் பங்கனை வந்திக்
குண்டெ னத்தெரித் தழைத்துயர்த் தருளிற்றென் றோர்ந்தான்.

ஆடிப் பாடின னடுத்தநல் லோரைத்தேர்த் தருணிர்
கூடி வாழ்திருக் கோயிலைக் கட்டினன் றொழுதான்
பீடி லங்கவூர் புதுக்கின னகரமும் பெரிதா
நாடி யாக்கின னறுபெரு நலத்ததென் காசி. (௰௬)

வளப்ப ராக்கிர மன்னெனுஞ் சண்பக மாற
னுளப்ப ரன்விசு வேசனு முலககா பகியு
மளப்ப ருந்திரு வருள்பொழி யாலயங் கண்டான்
கிளைப்பக் காசிகாண் பராக்கிர மன்னவன் றானே. (௰௭)

ஊன்று சாலிவா கனசக மாயிரத் தோடு
மூன்று நூற்றறு பானெட்டின் முதுமதிக் குலத்துத்
தோன்று மாணரி கேசரி தேவனுத் துலங்கிச்
சான்று காண்பராக் கிரமனன் றெடுத்ததித் தலமே. (௰௮)

அம்ம னுயபொன் னின்பெரு மானுசி தன்றான்
செம்ம லார்கன வினிலரு ளியபடி திகழ
மிம்ம னுண்டறு பானெட்டி லிருந்தெண்பா னுன்கு
பொம்ம லாண்டுமட் டும்பதி னேழனுட் புதுக்கும். (௰௯)

ஈச னுலய மீசொரி யாலயஞ் சகத்தி
ரேச னுலயந் தாணிபீ டாலய மிடப
தேச னுலயந் திருத்தொண்ட ராலயம் விமானம்
வாச வன்பதி தொடுமகா கோபுர முதல. (௨௰)

சொக்க லிங்கமா சத்திபீ டத்தளி தொடர்பாப்
பக்க மாரரி கேசரி கங்கைகாம் பாவு
முக்க ணுரரி கேசரி முன்னவ னுராட்
டுக்க மைந்தமண் டபமுத லமைத்தன னுவந்தே. (௨௧)

௨௧. ஆராட்டுக்கு—தாலாட்டுக்கு.

நித்த முன்விழாப் பூசனைக் காயநன் னிலங்கள்
வைத்த வாடைபொன் பணிவினை பொருள்களைட் படிக்காஞ்
சுத்த மாரரி சருக்கரை முதலிய தொகுப்பா
முத்த ரத்தவேற் படுத்தினன் பெருகளி முதிர்ந்தே. (௨௨)

௨௨. காட்படிக்காம்—அன்றாடகப் படித்தரத்துக்கு ஆகவேண்டிய. முத்தரத்த—மூன்றுவகைப் பட்டனவாக. அவை தேவஸ்வம் தேவதாத்திரவியம் நைவேத்தியம் எனப்படும் கிராமபூமியாதிகளும், வெள்ளி பொன் மணி பணி பட்டு பாத்திரபண்டங் கன்றுகாலிகளும், அர்ப்பணமாகாத நிவேதனப் பொருள்களுமாம். இவற்றினின்றும் அர்ப்பணமாகிய போகலாதிகட்கு நிவேதிதமென்றும், சண்டாதிக்ருதமென்றும், பஹிஷ்கிப்தமென்றும்மூவகைப்பெயர்கூறுப. முன்னையமூன்றும் தொடத்தகாதனவும் அறிஞரனைவராலும் பாதுகாக்கத்தக்கனவுமாம். பின்னையமூன்றன் மூலத்தான நிவேதிதப்பொருள் சைவரே பெறுதற்குரியதாம். அதுவும் "ஒவன் சிவத்துவிஜோத்தமர் (பட்டர்) கொடுக்கப் பெறாமல் தனக்குத்தானேயோ அதிகாரிகளாகிய பிறராலேயோ சிவநின்மாலியத்தை யெய்தப்பெறுவானோ அவன் நரகத்தையடைவான்," என்ற பொருள்தரும்.

"சிவாக்ரே சிவநின்மால்யம் க்ரஹீத்வா சிவத்விஜாத்
ஸ்வயமேவா ததாஞல்ரேத் நரகம் ப்ரதி பத்யதே." —என்னும்

இலிங்க புராண வசனமும் பிறவுங்கண்டு சைவாசிரியரிடமே பெற்றுக்கொள்க. அங்ஙனம் பெறும் சிவநின்மாலியம் புசிக்குஞ்சைவர் "சிவநின்மாலியத்தை எவன் புசிப்பானோ அவன் சகலார்த்த வேத்தாவாகிச் சக்ரேசுவரனுவான், அவனுக்குத் திரிகால ஞானமும் நித்திய பூபாலத்துவமும் விசேஷ சௌந்தர்யமும் உண்டாகும்" என்று பொருள்படும்,

"மஹ்யமந்நம் ப்ரயத்நேந நிவேத்யாச நாதியஸ்ததா
ஸபூபாலஸ் ஸர்வவேத்தா பவித்யேவ ஹிதா ஸர்வதா".
"அதீதாநாம் கதம்க்ஞாநம் பூபாலத்வஞ்ச சாஸ்வதம்
ஜாதிஸ்ம ரத்வம் சௌந்தர்யம் அந்நவேத் யஸ்ய பக்ஷணாத்"

என்றற்றொடக்கத்த பிரமாண்ட புராண வாக்கியங்களின்படி பெரும்பேறடைவரென் றுணர்க. அடுத்த சண்டாதிக்ருதமும், பஹிஷ்கிப்தமும், சுத்தசைவருக்காகா. போலிச்சைவரும், அசைவருமே அவற்றிற்குரியவராவர். இவ்வளவில் உண்மைச்சைவருக்கு முன் மூன்றும், பின்னுள்ள சண்டேசுரப்பிரீதிகரம். பிசாசப்பிரீதிகரம், என்னும் இரண்டும் ஆக ஐந்துமே விலக்கப்பட்டன எனவும், காலாவதாகிய சிவநிவேதிதம் விதிக்கப்பட்டதெனவும் அறிவார் மேலோர். ஆனால், "அநர்ஹம் மமநைவேத்யம்—எம்முடைய நின்மாலியம் புசிக்கத்தக்கதன்று." என சைவ ஸம்ஹிதையில் சிவபெருமானே திருவாய்மலர்ந்தருளிய தென்னை? எனின், அதனையே முன்னொருக்கால் சைமினியர் எடுத்துக்கூறி உண்மையை வினவியபோது வியாசபகவான், "தேவதேவஸ்ய வடஸோவிஷயோயம் நபைம்னே ||

ஏ வீரபத்திர ஸபிதா சிவபக்தி பராங்முகா ||"
"ஸம்போ ரந்யத்ர தேவேஷு ஏபக்தா ஏநதீக்ஷிதா ||
தேஷாமநர்ஹ மீஸஸ்யம் தத்பிரஸாத சதுஷ்டயம் ||"

(வீரபத்திர மூர்த்தியாற் சபிக்கப்பட்டவர்களும், சிவபக்தியிற் பராமுகராயிருப்பவர்களும், சிவபெருமானைவிட்டு, வேறுதெய்வங்களிடத்துப் பற்றுவைத்துள்ளவர்களும், சிவதீக்கை பெற்றுக்கொள்ள மாட்டாதவர்களுமா

இறைதென் ஞறுநாட் டினியதென் காசியே யிலஞ்சி
நறைதென் குன்றைதென் புலிநகர் பாட்டநற் குறிச்சி
யுறைதென் வீரபாண் டியனூர் முதலிய வூரக்கா
னிறைதென் பண்ணையூ ரெலாந்தெய்வ தானமா நிறைத்தான். ()

அடர்ந்த காடெறிந் தகன்றகா லணைகுள மமைத்துத்
தொடர்ந்த யாண்பராக் கிரமபாண் டியனூர் துளிர்த்துப்
படர்ந்த சீர்விசு வநாதநல் லூரம்மேல் பத்திற்
றடந்த ஞச்சக வீரரா மன்பதி தந்தான். (௨௪)

தஞ்சைக் காத்தவழ் வள்ளைமுட் டம்பன்றி முட்டம்
கஞ்சத் தண்ணமை கற்றுச்சே றைமுதற் பத்தும்
மஞ்ச தார்குறு மரைகாட்டு மாண்டுவ ரங்காட்
டெஞ்ச வில்லிடை தவணைமுன் வயலெலா மீந்தான். (௨௫)

கிய அநதிகாரிகளுக்குத் தமது நின்மாலியங்கொள்ளத்தக்க தில்லையென்ற சிவபெருமான் அருளினர்) எனக் கூறிய வாக்கியத்தைக்கொண்டு மெய்யறிவுறுத்தமையால் கண்டு கொள்கவென்க. இதனல் சிவப்பிரசாதத்தைத் தீண்டத்தகாதவர் பிறரெனவறிக.

௨௩. தென்குன்றை—தெற்கேயுள்ள குன்றக்குடி. தென்புலிநகர்—தெற்கேயுள்ள புலியூர். வடக்கேயுமிப்பெயருள்ள வூர்கள் வேறனவென்றறிக. ௨௫. தஞ்சைக்காத்தவழ்—தஞ்சாவூர்க்காடேறும். பத்தும்—பத்துக்காடும். இது, வயற்காடுகளில் இறைவனல் அமைக்கப்பட்டுள்ள நாற்றமும் (கெந்தியும்), கரும்பொன்னும் (இரும்பும்), காக்கைப் பொன்னும் (கறுப்பு நிமிளையும்), சுக்கான்கல்லும் (சுண்ணக்கருவும்) என்னும் பெயரினவாய், பயிர்நணவுகளாய், பிறவுணவுகளையிழுக்கும் வலிமையைப் பயிருக்கு வேர்வழியேற்றி நிற்கும் இயற்கை யுரங்கள் நான்கு, நீர்ப்பாய்ச்சலால் வந்துகூடிப் பயிருக்கு உயிரை நிலைபெறச்செய்யும், நீர்க்காற்று உயிர்க்காற்று என்னும் காற்றுரங்கள் இரண்டு, ஏருழவாலும் நாங்கள் முதலியவை கிளைத்துச்செல்லுதலாலும், நிலத்தினுட் படிந்து செடியையுந் தழையையும் வளர்க்குங் கரிக்கால் (மலவாயு) சுவையைத்தரும் உப்புக்கால் என்னும் சேர்க்கைக் காற்றுரங்கள் இரண்டு, தாள் தண்டுகிளைகளைச் செழிப்பாகக் கிளைக்கச் செய்து பயிரை நிலைபெறச்செய்யும் குழைச் சாம்பல்களிலுள்ள காரமேற்றதலாகிய வைப்புரம் ஒன்று, பாய்ச்சற்காலமெல்லாம் உயிர்பெற்றெழுந்து, காய்ச்சற்காலத்தின் மடிந்துபோம் நண்டு நத்தை ஊமச்சி முதலியவற்றின் ஓடுகளுடன் நீர்ப்பாம்பு தவளை மீன் முதலியவற்றின் பொடியெலும்புகளும் கொறக்குண்டு தூளாயதினின்றும் பயிருக்கு மணிபிடித்தலாகிய வளந்தரும் மூறுகலுரம் ஒன்று ஆகப் பத்து உரங்களைக்கொண்டு விளைவு செய்யப்படுதலின் பத்துக்காடெனப்பட்டது. அறியாதார் பற்றுக்காடென்பர் சாட்டுப்பத்து, கோயிற்பத்து, பிராட்டிபத்து, குறுக்காட்டுப்பத்து, காமக்குறப்பத்து, காருகுறிச்சிப் பிள்ளையார்பத்து, வீரசோமணிப்பத்து, மேல்பத்து, கீழ்பத்து, தென்பத்து வடபத்து, என வழங்கலறிக.

குரும ரைப்பொழிற் குறுங்கடப் பத்தினிற் றிருத்தித்
தருதென் காசிக்கு வாய்த்தபே ரேரியுந் தழைத்து
வருக மக்குறப் பத்திற்றென் காசிக்கு வாய்த்த
பெருந லூருநீ டாறணுட் டினறசங்கப் பேரி. (௨௬)

இன்க ணர்வித ரணவிறை தவளகா டென்னு
நன்கண் ஞற்றதாம் விசுவநா தப்பெயர்க் குளமுந்
தென்க ரைக்காரு குறிச்சியைக் கான்குளப் பத்தும்
மன்க ளித்தரு ளினனினு வழங்கின பலவே. (௨௭)

செப்பக் கல்லக நாட்டுள வீரசி காம
ணிப்பத் திற்றுட்ட ராயர்கா ணேரியுந் தருவேந்
தொப்பத் தாலிறைக் குடியென வுதவலும் பதிவுங்
குப்பப் பட்டடைக் குடிகளாட் கொருபணங் கொடுப்பும். (௨௮)

ஆயத் துக்கொரு பணவரி யாதிகற் பித்துக்
கோயிற் பூசனை முட்டின்றி நடொறுங் குலவப்
பாய சீர்ப்பதி னெட்டுநாட் டுள்ளவேண் மார்பா
லேய செப்பிதழ் தந்துகல் லெழுத்துநாட் டினனே. (௨௯)

ஆண்டுப் பாண்டியன் னெட்டுநாட் டரசிளங் கோபரர்
வேண்டு பத்திர வழியேயை விதப்புரி வார
ரீண்டு நிற்பத்தென் காசியா லயம்புரந் திறைபல்
லாண்டு நல்கவாழ் வாரவண் சிறந்ததத் தலமே. (௩௰)

முன்னர் காசிகாண் பராக்கிர மன்கண்ட மூதூர்
பின்ன ரோங்குபொன் னின்பெரு மாள்கண்ட பேரூர்
தென்ன ராண்டது சண்பையூ ராயதென் காசி
நன்ன ராருமத் தலப்புகழ் நான்சொலற் பாற்றே. (௩௧)

காசிக் கண்ணுள கல்லெலாஞ் சிவலிங்க மாந்தென்
காசிக் கண்பலாக் கனியெலாஞ் சிவலிங்க மகன்மேன்
மூசிக் காண்குறு முள்ளெலாஞ் சிவலிங்க மதனுள்
ளாசித் துண்கொட்டை யனைத்துமே சிவலிங்க மாமால். (௩௨)

௩௰. ஐவிதப்பரிவாரம்—பூசகர், தமிழ்மறையோதுவார், வேதபாராயணர், புரோகிதர், மணியகாரர் ஆகிய கோயிற்றொழிலாளர்.

வளர்ந்த தெங்கருள் முக்கணார் காயெலா வளமாக்
கிளர்ந்த நீள்கமு கருள்பழுக் காயெலாங் கிளைத்துத்
தளர்ந்த வாழையின் மலரெலாங் காயெலாந் தழைகா
விளர்ந்த பூவெலாஞ் சிவலிங்க மாமன்பு விரிந்தால். (௩௩)

அருத்தி யார்தலந் தீர்த்தமூர்த் திகழ்சிறந் தவிரும்
விருத்தி மிக்கது சித்திரை வளத்தது விரிந்த
கருத்தி னார்விழை யூற்றுள நிலத்தது கார்சூழ்
திருத்தி கழ்ந்தது நலந்தரு வளத்ததென் காசி. (௩௪)

எத்த லத்தினுந் தருமமே மிகுதல மேற்ற
மத்த லத்தினுஞ் சைவமா தலமதே யதிக
முத்த லத்தினும் பொழினதி வளத்ததே யுயர்ச்சி
முத்த லத்தினுஞ் சிறந்ததென் காசியே முதற்றால். (௩௫)

தலங்க ளெண்ணில வாயிரத் தெட்டோ தலமே
யிலங்க வற்றிரு நூற்றெண்பா னைந்துமே யேற்றந்
துலங்க வற்றிரு நூற்றெழு பானன்கு தூய்தா
லலங்க டத்திடு மவைதிகழ் காடுபத் தாமால். (௩௬)

வடபொ ழிற்கணைந் திரண்டிழுந் துளுவமொன் றுமால்
குடம லைக்கணைன் றேழ்கொங்கு தொண்டையெண் ணான்கு
இடபொன் னித்துறைத் தென்கரை நூற்றிரு பானே
ழிடவ டக்கறு பத்துமூன் றிடைபன்னொன் றிரண்டே. (௩௭)

நெடிய பாண்டிபன் னான்கிவை யாலவாய் நெல்லை
கடிகொ ளாப்பனூ ரிராமேசங் கானப்பேர் புத்தூர்
குடிகொ ளேடகம் பரங்குன்று கொடுங்குன்றஞ் சுழியல்
வடிகுற் றாலமா டானைபூ வணம்புன வாயில். (௩௮)

இப்ப னான்கினுட் சுழியனீக் கிருந்தசம் பந்தர்
செப்ப லாயிரு பத்துமூப் பதிகமேற் றிகழு
மப்ப ரைந்துசுந் தரரைந்து பதிகமு மமைந்த
தப்ப லாதநன் னகரமும் பாடலார் தலமே. (௩௯)

௩௫. உத்தலத்தினும்—அந்தத்தலத்தினும்.

சண்ப கம்பலா வுந்தழைத் தோங்குதென் காசி
வண்ப திக்கடந் தன்றிமாண் காழியர் கோமான்
பண்ப முக்குறும் பலாநிழ லாதர்முன் பாடற்
றொண்ப தம்பிறி தில்லையான் மெய்மையுய்த் துணர்க. (௪௰)

பொன்னிவடகரைப் பெருந்தலம்.

ஓங்கு தில்லைவெண் காடுமாண் பெரும்புலி யூர்நற்
பாங்கு சம்பனந் தாள்சிர புரமழ பாடி
தாங்கு சீர்கொளை யாறுவெண் ணாவலூர் தமினு
மீங்கு யர்ந்ததென் காசிமா தலமதே யேற்றம். (௪௧)

பொன்னித்தென்கரைப் பெருந்தலம்.

பசுப தீச்சரஞ் சத்திமுற் றஞ்சிராப் பள்ளி
சிகவுங் கன்றுநேர் பார்க்குமா ரூர்திருக் கடவூர்
வசும யூரமா வடுதுறை திருமறைக் காடு
விசுவ நாதர்தென் காசியே யிவற்றெலா மேலாம். (௪௨)

நடுநாட்டுப் பெருந்தலம்.

அதிகை நாவலூர் முதுகுன்ற மருணையா மாத்தூர்
பதிவெண் ணெய்நலூர் பாதிரிப் புலிநகர் கருவூர்
துதியி வற்றினுந் துளுவமீ ழங்கொங்கு மலைநா
டுதித லத்தினுஞ் சிறந்ததா முயர்ந்ததென் காசி. (௪௩)

தொண்டை நாட்டுப் பெருந்தலம்.

மயிலை வான்மியூ ரொற்றியூர் கழுக்குன்ற மாற்பே
றெயிலை யார்கச்சி காளத்தி யாலங்கா டிவற்று
மொயிலை யாள்வட நாட்டிலைந் தலத்தினு முயர்சீர்
பயிலை தார்ந்ததென் காசியே வுயர்வெனும படித்தே. (௪௪)

பாண்டி நாட்டுப் பெருந்தலம்.

பாண்டி யிற்பதி னான்குமேம் பட்டமா தலமே
யீண்டி வைக்கிலாத் தென்முடி சூடிய வியல்பால்
வேண்டி னார்க்குவேண் டுவவெலாம் வேண்டியாங் கருள்சீர்
பூண்டி லங்குதென் காசிமாண் புணர்வரான் புலவர். (௪௫)

௪௧ வெண்ணாவலூர்—திருவானைக்கா. ௪௨. வசுமயூரம்—ஒளியை யுடைய மயிலாற் பூசிக்கப்பட்ட தலமாகிய மாயூரம். செல்வம் பொருந்திய மாயூரமெனினுந் தகும். வசு-ஒளி, பொன். பசுமையென்னும் பண்பினடிப் பிறந்த வுருவே வசுவென்ப.

முப்ப திற்றிரண் டினும்பிற வற்றினு முதுதெற்
குப்ப ஞங்கலை களைக்குழை படியினிப் புறல்போ
லிப்ப திப்பிறங் கிடினெண்ணி னேக்கிடி னிறப்பின்
செப்ப முத்தியெய் தலாமன்பு செயினன்றூங் கிறந்த. (௪௬)

வேறு.

தெக்கண காசியே தருமத் தேட்டதாங்
தெக்கண காசியே தேக சித்தியாங்
தெக்கண காசியே சிவன்றெனன் மைத்தலங்
தெக்கண காசியே சிவைகன் னேக்கதாம். (௪௭)

உத்தர காசியோ வுயர்தென் காசியோ
வெத்தனை முதிதெனி னிருந்த மிழ்ப்புவி
யத்தன்மக் கனேமுத லாக்கு காடெனு
முத்தமிழ் வலாரதை முதிதெ ஞரெங்க. (௪௮)

காசியி னுனிருடு வணகி னுட்டமு
மூசியி னொருவிர னன்றி நிற்றது
வாசியி னிடகலை மறித்து ரேசகந்
தேசியி னிசைத்தவை திகத்தின் சித்தியும். (௪௯)

வேறு.

சிசுவ ரத்தவம் பேறவாய்ச் செயுக்கிற னதுவும்
பசுவ தைத்திடு முறைமையாற் செயுமகப் பலனும்
விசுவ சித்துவேள வியாலுறு பெரும்பலன் விளைவு
மசுவ மேதமே யாற்றலின் வரும்பல னனைத்தும். (௫௰)

தரைக்கு ளொக்குமா சுவாகத மகந்தரு பலனும்
நிரைக்கு மின்புறு மிராசசூ யப்பல னிறைவும்
புரைக்கு றூதியல் சவுத்திரா மணிமகப் பொலிவு
முரைக்கு மாதிக வேள்வியா லுதவுநல் வளனும். (௫௧)

வெருட ராதியல் சதுரபா கத்தினல் வினைவுங்
கருட வேள்விகன் றூற்றலால் வருபல கதியும்
மருட மானுமோம் பிடுபுண்ட ரீகத்தின் வரமுந்
திருட கற்றிடு கல்லன்வி பாற்றியாந் திருவும். (௫௨)

மனுவ ழுத்திடு மிந்திராத் திகமா தவமு
முனுவ தற்புத வாசிபெய் திர்த்துளார்த் தாரமும்
பனுவ திற்றெளி பிரமமே தப்பலப் பாங்குந்
தனுவ சித்திடு முயிர்கா மேதத்தின் றகவும். (௫௩)

வேறு.

விரதவின் னவையு வேறு மிகுதவப் பேறு யோங்கு
மாதனு காத்தென் காசி யதிற்புரிந் திடுதல் வேண்டா
வுரதபு வொடுமி றக்கோ ருறுகணற் றூது வாழ்ந்தா
விரதமார் கலங்க டாமே யிவையுமீ துன்மை யாமால். (௫௪)

மறுவறுங் காசி முத்து வயிரமா ணிக்க நீல
முறுவயி டூயம் புட்ப ராகமே தகமொண் பச்சை
பெருவனைப் பவள மின்ன பெருமணி வகையுங் காஞ்சி
தெறுவமை கலையுந் தானஞ் செய்பலங் காண்பார்க் கியும. (௫௫)

மின்னவ வொளிக்கல் லாலே யேனிகொள் கலைசன் கந்தன்
பொன்னவள் புணரு மாலி னரிகா புதல்வன் வீரன்
சொன்னவை ரவன்மாண் டுர்க்கை தொழுமன்பர்க் கருளுமாகக்கம்
மன்னவிற் பொன்பூ ணுடை வயற்றானம் புரிவெற் றிற்கே. (௫௬)

வேறு.

ஓதன மெவர்க்குமே யுதவு தானமும்
மாதகை நீர்தனீர்ப் பந்தர் வைத்தலுங்
தீதறு மாணவர்த் தேற்று பள்ளியும்
வேததென் காசியில் விளைவொன் றாயிரம். (௫௭)

வேறு.

உத்தர காசிக் கங்கை முதற்கும ரிவரை யொன்பான்
வித்தர கஇக ளோடு விளங்குமற் றுளவு மின்ப
மித்தாங் தலமார் தீர்த்த கித்தமா டுநர்கொள் பேறோர்
சித்தான் றுடையா னந்த தீர்த்தமுங் கொளுந்தென் காசி. (௫௮)

சுத்தலங் கனமே யாதி தொடங்கிய விரத சிலர்
சித்தலங் கடையும் பேறோர் சிவலிங்கடைய சீட்டும்
முத்தலங் கருதா னந்த தீர்த்தமுந் தியுமே னல்கு
மித்தலந் தீர்த்த மூர்த்திக் கிணைகம்பற் குன்றே டுண்டால். (௫௯)

---

௫௫. காஞ்சி—எண்கோவைமணி, ஓருபண், மேகலை—எழுகோவைமணி.

தெக்கண காசி சூழுந் திடனுறு காலே காலாந்
தெக்கண காசி நாதர் சீர்சொலு நாவே நாவாந்
தெக்கண காசிக் கோன்பாற் சிவையைக்காண் கண்ணே கண்ணாந்
தெக்கண காசிக் காதை விழைஞ்செவி செவியா மென்றான். (௬௰)

கேட்டன முனிவ ரின்பங் கிளர்ந்தன ர... கன்ன
...டனு மம்மை யப்பாக குறுகடன மக்க ளன்பு
காட்டனு மாணை நாளுங் காத்தலுங் கடனு வுள்ளார்
கூட்டனுக் கருளு மணபுங் குலாவலும் வேண்டு மன்றோ. (௬௧)

ஆதலி னெம்பா லன்பாய்ந் தரனரு ளெக்கு பார்த்து
காதலி னொழுந்த நீதென் காசிமா தலச்சீர் சொற்று
யீதலி னினித்தற் காக விருந்ததே யிதன்மே லெங்கட்
கோதலி னறன்வே றின்றென் றொழுகின்பக் கண்ணி ராழ்ந்தார்.
(௬௨)

தலவிசேடம் முற்றிற்று.

ஆகப்பாட்டு ௨௬௰.

நாலாவது தீர்த்தவிசேடம்.

அடியவர்க் கெளியன் காதை யவாம்பசி யிருந்தன் பார்த்து
கடியடைப் பிலாக்கா தங்கர் திருகணீர் காண்று வேண்டும்
படியறி வார்த வத்தார்ப் பார்த்தில்லை யெனுத வள்ள
னெடியகு தன்றென் காசிநிறைந்ததீர்த் தச்சீர் சொல்வான். (௧)

நிருமல வண்ண லார்தந் நியமத்தை முடித்தற் காகப்
பெருமகிழ் வொடுகும் பாதி முனிவரர் பிரியத் தோடு
திருமலர் கறந்தே னூற்றுஞ் செண்பகா டவிவந் தன்றைக்
கருமமு முடித்து மாயோ கனைந்துபின் கண்வி ழித்தார். (௨)

தடங்களின் மழைபெய் யாதே தகைவளங் குறைந்து மற்றை
யிடங்களின் வறந்து மாக்க ளிருந்தவர் வருந்தல் கண்டு
விடங்களத் தமைத்த ஸவயர் விரிமலர்த் தாளேத் திட்டிக்
கடங்களுந் தழைக வான்பெய் வானருள் கென்றி ரந்தார். (௩)

ஆனந்த தீர்த்தம்.

அரவநீர்ச் சடைபெம் மண்ண லவணெழுந் தருளி வேண்டு
முரவரின் பார வான்பெய் தலகெலா மகிழச் செய்தான்
பரவவர் தடமொன் றிங்கே பணித்திட வேண்டு மென்றார்
கரவரோ ரான்கைச் சூல மோச்சினன் கார்பொங் கிற்றே. (௪)

பொங்குநீர் வானத் தாறே பொருமெழு கடலோ வேழு
மங்குலோ சிரமீ ரைஞ்ஞூ றுளவா நதியோ வென்ன
விங்குள முனிவ ரஞ்சி யிஃதொரு தடத்து ளாக
வங்குளக் கண்ணு செய்திவ் வவனிகாத் தருள்கென் றூரால். (௫)

கடமுனி முதலோர் வேண்டு கருத்தமைத் தமலன் சூல
மிடமுகிழ் கங்கை நீத்தத் தினையருட் கண்ணாற் பார்த்தின்
னடமுறே லிவணோர் பாலா யருந்தவர்க் கமிழ்த மாகித்
தடமுறு முதன்மை நீராய்த் தயங்குகென் றபய மீந்தான். (௬)

அன்னவா றிணை நல்க வாயிர முகத்தா ளொன்றாய்த்
துன்னவா வியளாய்த் தண்டேய் சுனையிலே யமைந்தாள் சொல்ல
முன்னவாக் கொடுமெ ஞறிக் கராதியா முதல்வன் வாவி
மன்னவா னிலிங்கத் தாடு மறைந்தன னிருந்தான் மன்னே. (௭)

பெருமையிற் றனக்கொப் பின்றிப் பிறங்குகல் வளத்தென் காசி
யொருமையுற் றறமெண் ணான்கு மோங்கவே வளர்க்கு நீரா
லிருமையும் பெறுமு ரத்த திறைவிசு வேச னன்பா
ரருமையம் மகவ ளர்க்குஞ் செவிலிபோன் றதேயவ் வாவி. (௮)

அருவமா யுருவ மாகி யருவுரு வாகித் தாமே
யிருவகை யுருப்பெண் ணாணு யெவற்றினு மிசைந்து காட்டு
மொருவராம் போல நின்றே யுத்தம குணங்கண் மன்னித்
திருவளர் வாவிக் கூவற் சிறப்பியா னளக்கற் பாற்றோ. (௯)

காணினும் பாவம் போக்குங் கங்கையா மந்நீர் தோய்காற்
பூணினுந் தீங்கு நீக்கும் புன்றுளி படினன் றாக்குஞ்
சேணினுங் கொடுபோ மந்நீர் தீண்டிடிற் புலமை யுண்டா
மாணினும் பெணினுந் தோய்வார்க் கருள்வருமுனினின் பார்வார்.

முந்திய பிறவி தோறும் முயன்றநற் றவத்தி னாலே
பிந்திய பிறப்பிற் றுய்க்கப் பெறுநல மனைத்து மாமா
லுந்திய நல்லூ ழாலின் குறிஞொருக் கானீர் தோய்ந்தாற்
சிந்திய தீமை வேண்டுந் திருவெலாம் பெறுத லாமால். (௰௧)

தேவரு முனிவன் மாருஞ் சித்தரும் பூத ராரு
மேவரு மித்தீர்த் தத்தி லெள்ளுநீ ரும்மி றைத்துத்
தாவரும் பவித்தி ரத்தாற் றருப்பணை திகளாற் பெற்றோர்க்
காவரும் பேறீ வாரா லறிந்திதை மதிப்பார் மேலோர். (௰௨)

பிறபுனற் சந்தி பண்ணிற் பெறுவதி னாறு பங்கும்
பிறபுன லாடு நோன்பாற் பெறலினு யிரம டங்கும்
பிறபுனற் றருப்ப ணாதிக் குதவுபே றயுதங் கூறும்
பிறபுன ணனைத்தும் பிறங்கிதே விசுவ தீர்த்தம். (௰௩)

போதக மாறித் திண்டாப் பூவையைப் புணர்தல் கோறற்
பாதகஞ் செயல்கள் ளுண்ணல் பார்பொருட் களவு செய்தல்
சேதகக் குருவை யெள்ள லிவற்றினுந் தீமை யெல்லாம்
வேதகர்த் தரின்றென் காசி விசுவதீர்த் தந்தான் றீர்க்கும். (௰௪)

சகத்திர தாம கங்கை.

சகத்திர நாம கங்கை தழைபெய ரொவ்வொன் றிற்கும்
பகத்திரி தளமார் வில்வ பத்திர மொவ்வொன் றிட்டு
முகத்தினீ ராட்டன் மூழ்கன் முற்றுடன் மூழ்கொண் ணாதாற்
சுகத்தினுக் கிரும்பை கொண்டு தோயலா மறைநூற் றெட்டே. ()

வேறு.

விமலை காந்தி கவிபாணி விசையை வித்தை விபூதியொளி
யமலை யமுதை தயையதுலை யநந்தை யனகை யபிராமி
கமலை கவுரி கந்தவதி கங்கை காயத் திரிகருணை
நிமலை வாம தேவிசுநீதி நிதியை நியதி நிமித்திகையே. (௰௫)

இரதை யுதாரை யோங்காரை யீசு வரிவல் லபைதாரை
விரதை யேகை யானந்த வல்லி வியாசை பாரந்தி
வரதை பாகீ ரதிசிலா வதிப வானி விப்ரவதி
சரதை சாந்தை குணாதீதை சாசா சாரை சானுவீயே. (௰௭)

௰௪. போதகம்—நூல்கள் போதிக்கும் நெறிதேர்ந்த அகமானது. சேதகம்—செம்மையாகிய உள்ளத்தையுடைய.

சித்தி ரூபை தவரூபை சிற்சொ ரூபை சிதாகாசை
முத்தி கூடை வேதமுகை முனீசை குடிலை சுமுகைபரை
பத்தி ரமா திருபோக வதிபா பகாசை தவசித்தி
யித்தி ரகசை மனப்பிரியை வேத வதியம் பிகைசோமை. (௰அ)

ஞானுண் மருவுஞ் சிவைசை சருவோத் துங்கை யுத்தமையே
தேனுண் மதுர விரம்மியையே சிறந்த நிரிப தாகைசுதை
சானு மதியே வசுதாரை தரும ரூபை நிராலம்பை
பானு மதிகு லினிதேவை யகோரை தவையே பராசத்தி. (௰௯)

வேறு.

சருவ மாகரு மப்பல தாபை சருவாங்கை
சருவ தாயினி சருவயோ கினிசர் வப்பிரியை
சருவ சோபனை சருவமா சுசியை சர்ச்சரையே
சருவ மங்கலை சகளைசர்ம் பிராச்சி பைசலசை. (௨௰)

சருவ விடிதை சருவவா கினிமன் சருவவெங்ஞை
சருவ கத்திரு சருவமோ கினிசா விடாகினியே
சருவ பத்திரை சருவகந் திரைமான் சருவவம்ஷச
சருவ வெதிதாயி வரமிகு சதச தாசிரையே. (௨௧)

சருவ காமிய கோசையே சருவோத் தாரணையே
சருவ பூடண பூசிதை சகத்ர முக்தாபை
சருவ பூரண வாகமாச் சரியை யென்றிவற்றை
சருவ மாந்தருஞ் சொல்லியே மூழ்கிற் றவமாமால். (௨௨)

வேறு.

இப்ப டிச்சகத் திரஞ்சத மெனுமறை யியம்பி
யப்ப டிக்கடந் தெடுத்துநீ ரருச்சைசெய் தாடின்
செப்ப டிச்சரோ ருகவாயி யேமகா திவ்யே
முப்ப டிச்சிவே கரவெண மூழ்குக மூழ்கின். (௨௩)

இட்ட காமிய மெளிதினி துலைவிலா தெய்துங்
கட்ட காலமுந் தீர்ந்திடுங் கங்கையின் பெயரை
வட்ட காதலால் வரையினு வரைந்ததைத் தொழினுந்
திட்ட காமமாந் தறிவுறா லறிநெறி தெரிவார். (௨௪)

௰அ. முத்திகூடை—முத்திரகசியை. சோமை—சந்திரி. ௰௯. இரம்மியை—நிறைய மகிழ்ச்சிதருபவள். இலப்பியையெனவும் பாடம். ௨௧. சருவநடிதை—எல்லாப்புகழு முடையவள்.

சைவ வாசிரி யாபிடே கஞ்செயந் தணரந்
தெய்வ தேசிக ரின்னமந் திரஞ்சொலித் தீர்த்தம்
பெய்வ ளக்குட மாட்டிடப் பெறுதவர் தேரிற்
கைவ ருப்பல னவளவிற் கோடியாக் காண்பார். (௨௫)

வேறு.

போற்றிருக் கோதித் தேர்ந்த புனிதர்கண் மாதந் தோறும்
பாற்றிருக் கங்கை தீர்த்தம் படிந்துசந் தியுஞ்செய் தாற்று
மேற்றிருஞ் சிருக்கி னோடு சிருவநெய் பூர்ணை மத்தா
லேற்றிருந் துசத்த ரந்தண் கயிலையிற் றிருப்பா ரென்றும். (௨௬)

காசிக்கிணறு.

கூவலி னுருவங் காட்டிக் கொடியபா வங்க டீர்ப்ப
மேவலி னிலயத் தின்மீ சுரந்திரி வேணி வாணி
பாவலி னிறைதென் காசிப் பாமருத் தாத்து நீத்தம்
பூவலி னஃதொன் றென்னிற் புராரிநேர் பிறர்காண் சீரே. (௨௭)

இச்சகத் தோர்க ளுக ரிமையவர் முனிவர் சித்தர்
மெச்சவெத் தலைபேர் மூழ்கி மேன்மையிக் கடைந்தா ரிந்நீ
ரச்சனச் சிருயாழ் வல்லார்க் கறிவரு ளிதுபோ லுண்டோ
முச்சகத் தினுமி தன்பேர் முதியதென் காசிக் கூவல். (௨௮)

வயிரவ தீர்த்தம்.

வயிரவ தீர்த்த மொன்று கோயிலின் வடகீழ் பால
துயிரவ நெறியிற் சோர துணர்வெழுப் பிடுமஃ தாடின்
செயிரவர் சாந்த ராவா ரெளியவர் செல்வ ராவா
ரயிரவ ரையந் தீர்வா ராசுவல் லாசா வாரே. (௨௯)

ஈன்றவர் மகார்த்தி ருத்தற் கிரக்கமேன் மறைத்தொ றுத்தே
யான்றவ ராக்கு மாப்போற் செருக்குறி னயன்மா லேனு
மூன்றவன் சூலங் கைக்கொ ளாயதோத் தார ணங்கார்
மான்றவர்ப் பிணிக்கு வந்தா டிடிற்குணந் தருமருந் தாம். (௩௰)

உடம்புநோ யெல்லாந் தீரு மொளிபெறு நலங்கள் சேரு
மடம்புகு மூட மாறு மகந்தெளிந் தறிவ தேறுந்
தடம்புரள் கவலை நீங்குந் தழைத்துவாழ் வின்ப மோங்கும்
மடம்புகா மக்க ளுண்டாம் வடுகதீர்த் தந்தோய் வார்க்கே. (௩௧)

௨௭. மீகாம்—மேலான. ௩௰. மான்றவர்—மயங்கிக்கிடப்பவர்.

அன்னபூரணி தீர்த்தம்.

திகழ்மடைப் பளிப்பா லன்ன பூரணி தீர்த்த மொன்றுண்
டகலதின் மூழ்கி னின்பம் பொருளறம் கிடைக்கு வீடுந்
தகவரு மதன்கண் சைவர் வைதிகர் தாந்தோய் வார்மே
னிகரிலா லயமூர்த் திக்கந் நீரபி டேக யாமால். (௩௨)

அன்னபூ ரணிதீர்த் தத்தா லாக்கமிழ் தொருபி டிக்கு
மன்னரா வாரே லந்நீர் மாண்பளந் துரைப்ப தாமோ
மென்னிலங் கிரந்துண் டோரந் நீராடி னுலை யீசந்
குன்னத தோழன் போல்வா ருஞற்றுவா ரறமெண் ணன்கும். (

ஐந்தகத் தீர்த்தத் தொகை.

சிவைமூனு னந்த தீர்த்தம் பின்சகத் திராம தீர்த்தம்
நவையி லுத் தாத்துக் காசி நளிரதன் கீழ்பா லெட்டுச்
சுவையருள் வடுக தீர்த்தஞ், சுவைமடைப் பள்ளித் தீர்த்த
மிவையைந்துங் கோயி லுள்ளா மினிவெளித் தீர்த்தஞ் சொல்வாம். (௩௪)

ஈசான தீர்த்தம்.

அதிகனு விசுவே சன்றென் காசிநா யகற்கீ சானம்
பொதிகளார் மலர்க்காத் தென்றற் புதுபணைக் தலமேரார் தீர்த்தந்.
துதிகம ழூரா வுமாவித் துணைப்பெயர் நெடில்சேர்ந் தோமின்
பதிகண்மூன் றுடையாய் போற் பயிலதே யிராம தீர்த்தம் (௩௫)

சைவனு மயோத்தி மன்னன் றயரதன் வசிட்ட ருனை
கைவரச் சிவன்பேர்த் தேர்ந்து கண்டுகொ ளிராமப் பேர்செய்க்
குய்வருள் வான ளித்த தோக்குமப் பெயரார் தீர்த்தந்
தெய்வதீர்த் தம்மத் தீர்த்தஞ் சிவன்சிவை வடிவ மாமால். (௩௬)

௩௫. பொதி—பொதியமலைக் கண்ணுள்ள. ஓமின்பதி கண்மூன் றுடையான்பேர்—பிரணவ சத்தியாகிய உமாபதி என்னும் முக்கட்பெருமானது பெயர். இதனை, "ராமாபிராமாம் சௌந்தர்ய சீமாம்" எனவும், "ராமக்கிரி க்ஷேத்ரம்" எனவும் வழங்கும் ராமசகஸ்ரநாம நிக்ஷேத்திர ராமதாபினியுப நிஷத்துகளாற்றெரிந்து கொள்க. ௩௬. அயோத்திமன்னன் சைவன் என்பதை "த்யாத்வா ரகுபதிம் க்ருத்தம் காலாநல மிவாபரம்—பீதக்ருஷ்ணாஜிநதரம் பஸ்மோத்தூளித விக்ரஹம்" எனவரும் இராமாயண ஸ்லோகத்தாலுமறிக.

உம்பரெலா மிரமிப் பிப்ப துமாபதி குமார மேசப்
பெயரனீ சானப் பொய்கை பிறங்குமா னைந்திற் றெனித்
றபிரிள நீர்பால் சாற்றிற் றயிலமைந் தமிழ்தின் மேலா
வபிடேக தீர்த்த மானுறு மதுமாண் சேர்த்தே. (௩௭)

அகத்தீர்த்தம் ஐந்தின் முதலாகிய ஆனந்ததீர்த்தம், புறத்தீர்த்தம் ஐந்தின் முதலாகிய ஈசானப் பொய்கை இவற்றின் பெயர்.

முன்னதைச் சூல தீர்த்த முனிதீர்த்தம் விசுவ தீர்த்தம்
பன்னரு மின்ப தீர்த்தம் பாதல தீர்த்த மென்ப
பின்னதை யிராம தீர்த்த மிலங்குமீ சான தீர்த்தம்
பொன்னுமா பதிதீர்த் தங்காண் புதுமணத் தீர்த்த மென்ப (௩௮)

நித்திய மாவெங் கோமா னிருமல விசுவே சற்குப்
பத்திமஞ் சனமெ டுத்துப் பாம்பரை யபிடே கித்து
மித்திருத் தத்தின் மூழ்கி னிம்பரு மும்ப ராருஞ்
சத்திய முத்த ராவார் சஞ்சல வினைக டீர்வார். (௩௯)

அரவணி சிவன்வெண் ணீற்று நிறத்துமைப் பசுமை யார்ந்து
விரவலா லைப மின்றி விளங்குமா பதிதீர்த் தத்தை
யிரவகற் றிரவி யுச்சிக் காலையிற் றெரிசித் தேகுங்
கரவறு மதியு டக்கோள் களுந்தெரி சிக்குங் காண்மின். (௪௰)

சிவவென வங்கை யள்ளிச் சென்னியிற் றெளித்துக் கொண்டாற்
பவமொழிந் துலகி லெட்டுப் பாக்கியம் பெறுத லாகுந்
தவமுயர் சந்தி யாதி தருப்பண திகளித் தீர்த்தத்
திவராற் றிடினெ வற்று மியைபலத் திலக்க மேலாம். (௪௧)

சித்திராநதித் தீர்த்தங்கள். (நவகங்கை.)

சித்திரா நதிதென் னூற்றிற் றீர்த்தமோ பலவ வற்று
ணத்தியல் காசித் தீர்த்த நவமவை சித்தி ராங்கை
கத்திசை மயேசை பத்மை மணிகன்னி கைபி ராமி
சத்திகௌ மரிவ ராகி சமுண்டிபிந் திரையா மென்ப. (௪௨)

௩௭. இரமிப்பிப்பது—மகிழச்செய்வது. ௩௯. பத்தி—அன்பாக; கடப்பாக, வழிபாடாக. ௪௨. சௌமரி—கௌமாரி. சமுண்டி—சாமுண்டி. மாரி—மரியெனவும், சா—சவ்வெனவும் நின்றமைகுறுக்கல் விகாரம்.

நவ கவுசிகை.

சிவகங்கை யாமிவ் வொன்பான் றீர்த்தமு மின்ன போராற்
றவமுறல் லரலா ரோர்காற் றழைதரத் தோன்று மற்றோர்
நவகவு சிகையா மோன்கா ணாதை மான்முன் னோர்முன்
னிவர்சிரும் பனிவெல் வான்றோய்ந் தெழுந்தா மகாக யந்தான்

மும்மடுக் குடிலைத் தோற்ற மூலெழுத் தாகி முன்னோன்
றம்மடுக் கவினு தாந்தந் தன்மய மேயாய் நின்ற
வெம்மடுக் களுக்கு மேலா யிலங்குமா மேருக் கீர்த்திக்
கம்மடு மூன்றுங் கின்ன வருளிலை யிவைமே லாமால். (௪௪)

குலவுசொக் கேச தீர்த்தங் குடிலைபந் தீர்த்தங் கோதி
லலவுரை கயத்தின் றீர்த்தம் காரணன் றீர்த்தங் கீர்த்தி
கலவுயர் சாப தீர்த்தங் கவிரா சிங்க தீர்த்தம்
புலவுகுஞ் சூல பாணி புரந்தரு ளிவையெயான் பானே. (௪௫)

சோடச தீர்த்தம்.

பிரமனார் பிரம தீர்த்தம் பிறங்குசித் திரையா தீர்த்தந்
திரமலி முனிவர் சூழ்வந் தாடகத் தியதீர்த் தஞ்சீர்
வரமணக் கணேச தீர்த்த மகிழுமச் சுவாத தீர்த்தந்
தாமதி நந்தி தீர்த்தந் தாளவெண் சலசை தீர்த்தம். (௪௬)

தருமலக் குமிதீர்த் தந்தாய் தருசத்தி வேலோன் றீர்த்தம்
பெருமண கடேச தீர்த்தம் பிறங்குசங் காமா தீர்த்தந்
திருமனும் பதஞ்ச லிப்பேர்த் தீர்த்தமாண் புலியார் தீர்த்த
மருமலி கால கால வயிரவி தீர்த்த மாதோ. (௪௭)

இபப்புசார்த் தாலதோலார் கணபதி தீர்த்த மென்றும்
வயப்புது வாலிதீர்த்த மாண்புறு மிவைபன் னூறே
விபம்புகன் றளவு மன்றி விண்டுதொட் டறுபா னூறு
நயம்புணர் துறைவே றுண்டா னடுமுக் கோடி யாடும். (௪௮)

கோமளா தீர்த்தம்,

சாமளை யமுனை பென்னத் தாணுவி னுதித்துத் தாரு
பூமழை சொரியப் போகிப் புனலலை திவலை வீசி
யாமளை யவள்முக் கோணத் தம்முனைச் சூலத் தாய
கோமளை தீர்த்த மங்கர் வாகினி கோடித் தேதும் (௪௯)

௪௭. பதஞ்சலிப் பேர்த் தீர்த்தம்—புலியூருக்குத் தெற்கிலுள்ளது. ௪௯. கோடித்து—கோஷித்து.

திரிவேணி சங்கம்.

சித்திர வடிவ மான திரிவேணி சங்க மாத
லத்திர தேவ னென்ன வருபவ பழிப்ப தால
பத்திரன் பொருந்தி நின்றான் பவனமேல் பாலா மந்த
முத்திர வளத்தீர்த் தத்தின் மூழ்கினோர் முதன்மைத் தாவார்.

திரிவேணி மூழ்கினோர் பெறும் பலன். (வேறு.)

முருகுமொய் தடந்துறை யதனின் மூழ்கினோர்
பெருகுகட் டங்தொலைந் தின்பம் பெற்றுய்வா
ருருகுமன் பொடுபவித் திரத்தங் கீருளே
பருகுவோ ரனைவரும் பலனன் காரவரே. (௫௧)

மாகமா மதியிலே வளங்கொள் பூரணை
யாகமா மதிகளி னறைக சங்கற்பம
பாகமா நிலாதுவாய் பாடித் தேடுளச்
சோகமாற் றிடுகதி தோய முத்தியே. (௫௨)

வேறு.

சகத்தி லேதமே தீர்த்திட வெளியவர் தாழ்விற்
சுகத்தி லாபமே தருதிரி வேணிநீர் தோய
வகத்தி லெண்ணிய மனுவொடு தருப்பிக்கு மவரே
யிகத்தில் வேந்தராய்ப் பின்சிவ னுலகமெய் துவரே. (௫௩)

அந்தர் வாகினி கவுரிதரும் பலன்.

குச்ச கன்படிந் துய்ந்தகோ மளப்புனல் குளித்தா
லச்ச கட்டமெல் லாமறுங் கவுரிநீ ராடிற்
றச்ச கத்திதீர்ந் திடுமண மங்கலந் துய்ப்பா
ரெச்ச சுத்தினு மேற்றமாங் கதியுமெய் துவரே. (௫௪)

கங்கைதரும் பலன்.

கங்கை தேன்றுறை யாய்ச்செல் வியதால் கனிநன்
மங்கை யோங்குதென் காசியின் வந்துசேர் துறையி
னங்கை நம்பியோ டுயிர்த்ததம் மகார்குழீஇ நயந்தே
யிங்கை தன்பொடா டிடினற வாழ்க்கையா மின்பாம் (௫௫)

௫௰. ஆலபத்திரன்—சிவபெருமான். (விடத்தைப் பத்திரப்படுத்திய வன்.) திரிவேணி—தடத்துறை. பவனமேல் பால்—கோட்டைக்குமேல் பக்கம். ௫௨. மாகமாமதி—பெருமை பொருந்திய மாசித் திங்களில். ௫௪. கோமளப்புனல்—அந்தர்வாகினி.

அறுபத்தாறு தீர்த்தப் பலன். (வேறு.)

அறுபதோ டாறுதீர்த்த மாதியென் றுறு சென்னி
பெறுபணி யண்டுகண்மணம் பிரான்வழு திக்குச் சொற்றான்
மறுவறு மனுதேர்க் தன்னோன் மகிழ்ந்தவை பேணியாடி
யுறுபல னனைத்தும் பெற்று னுலகெலாம் புரந்தின் பார்ந்தான். ()

ஆதரத் தருமத் தீர்த்த மறுபதோ டாறுங் கூறின்
சீதரன் றீர்த்த மைந்து திருநந்தி தீர்த்த மொன்று
மாதா மாதே வற்கைந் தீர்த்தமான் மகற்கோர் தீர்த்தம்
பூதரப் பொறிக்கோர் தீர்த்தம் புகழ்கலை மகட்கோர் தீர்த்தம். ()

கன்னிய ரொன்பான் பேரற் காண்டீர்த்த மொன்பான் சேய்க்கு
மன்னிய தீர்த்த மேழு வயிரவன் றீர்த்தம் பத்து
தன்னிய கணேசற் கைந்து தீர்த்தமா சாத்தன் றீர்த்தந்
துன்னிய பன்னொன் றேனைச் சுரர்தீர்த்தம் பத்தே யாமால். (௫௮)

சிறந்தவித் தீர்த்த மெல்லாஞ் செறிந்துசித் திரைமா தீர்த்தம்
பிறந்ததிக் காசித் தீர்த்தம் பிறங்குமேற் குங்கி ழக்கு
மறந்தனைத் தருளி னாடற் களவையோ சனைக ளாமீங்
கிறந்தவர் பிறந்தோர் தேவ ரிறைவராய் கலந்துய்ப் பாரே. (௫௯)

சோடச தீர்த்தப் பலன்.

சோடச தீர்த்த மாடிற் றொன்மறைப் பொருள்வி ளக்குங்
கேடறு மழகு டம்பாங் கிளற்றுமெண் சித்தி யுண்டாங்
கூடலர் நடுங்க வென்றி கூடிடு மாண்மை மீறுந்
தேடரு காத மோங்குந் திருத்தரு கற்பாந் தேறும். (௬௰)

நிறைந்தசெல் வங்க ளுண்டா நீடுல கேத்து வாழ்வா
மறைந்தவா றுலகஞ் செல்லு மணியணி மணவாழ் வுண்டா
முறைந்தவன் போங்கு பீசன் றொண்டலா மொழுங்கா மன்னு
மறைந்திடன் மறனு டாத வாழ்வுகை வருமின் பாமால் (௬௧)

---

௫௭. பொறிக்கு—இலக்குமிக்கு. ௫௮. கன்னியரொன்பான் பேர்—பிராமி, இந்திரை, கவுமாரி, சாமுண்டி, நாராயணி, மகேசுவரி, வராகி, சித்திராங்கி, மணிகன்னிகை என்னும் ஒன்பதின்மர். தன்னிய கணேசற்கு—செல்வக்கணபதிக்கு. ௬௰. அடன்மறன்—வலிய எமன்.

நவகங்கைப் பலன்.

பகருமட் டாங்க போகம் பலித்திடுந் தூய்மை யுண்டாம்
நிகருயர் விலாத்தென் காசி நிமலர்தீர்த் தப்பே றீதே
சுகருணை பதகன் வித்தாய் மார்தீர்த்தஞ் சுகமே நல்கு
நகருமெண் டிக்கு மாடி நலனெலாம் பெறுவ வாமால். (௯௨)

நவ கௌசிகைப் பலன்.

கௌசிகை சாம கானங் கதுவெமா னருள தாமால்
கௌசிக நார தைதோய் கன்னியர் சுரந்தோர் வாரால்
கௌசிக மகாக யந்தான் கலுழிடர் தீர்த்தேத் தியும்
கௌசிக முக்க யம்மோங் கணிப்பவர் பெறுஞ்சீர் நல்கும். (௯௩)

ஓங்குசொக் கேச தீர்த்த முயர்சிவ ஞான நல்கு
மாங்குடி னைக்கா ரின்ப மளிக்குநா ரணனீர் கீர்த்தி
தாங்குசா னுதவு வீரந் தருமெழிற் சாபத் தீர்த்தம
பாங்குறு காசிக் கக்கார் பதப்படுத் துயர்த்து மாலோ. (௯௪)

மதகய தீர்த்த மின்பு வழங்கிடுஞ் செருக்கொ ழித்தே
பதகருந் தோயிற் றூய்மை பயக்குமோன் பதஞ்சி றீதால்
சிதகனுங் குருவுந் தோரச் சிறப்புறுந் தீர்த்த மெல்லா
மதகமாம் பிறவி நோய்க்கே யமிழ்தமா முயிர்த்தொ கைக்கே. ()

வேறு.

கூதன் மாரி நுண்டுளி தூங்குங் குளிராட்டி
வேதண் டத்து முதுகுற் றூல விரிநீர்தோய்ந்
தீதல் வடிவா மெம்மூல கம்மை யிடப்பால்வாழ்
நாத னுறையு நன்னகர் காண்பார் நல்லாரே. (௯௬)

பழங்குற் றூல நின்றழு காறு பாய்ந்தேறி
முழங்குந் திரைக்கை யால்வினை செய்பார் முளைபேணி
வழங்குங் கடைவா யூர்வளங் காத்து மகிழ்சங்கம்
புழங்கும் நலனுர் சித்திரை கூடற் புதத்தென்றான். (௯௭)

தீர்த்தவிசேடம் முற்றிற்று.

ஆகப்பாட்டு ௯௭.

ஐந்தாவது மூர்த்திவிசேடம்.

தெக்கண காசித் தீர்த்தச் சிறப்பினைக் கேட்ட மெய்ய
சக்கணைத் தமிழ்தந் தய்த்த வமாரிற் சிறந்தா ரிவைப
மிக்கண மூர்த்தி சீர்த்தி யியம்புகென் றிறைஞ்சச்சூதன்
முக்கணம் பிரானி லிங்க முதன்மையா தியசீர் சொல்வான். (௧)

வேறு.

செகத்தின் முச்சுட ருளவவற் றுள்ளொளி திகழு
மகத்தி னின்றொளிர் வதுபிர தானமா மிலிங்க
மகத்தின் மற்றவற் றடங்கலு நிறைந்தமாண் சோதி
யிகத்தி னிற்றெழு லிலிங்கியென் றிருந்தன னருளால். (௨)

தூல சூக்கும காரண மாகியே சொரூப
மூல காரண தீதமாய் நிற்குமோர் முதரூ
லுல மார்களத் தெந்தையா யருள்வினை யாடற்
கோல னெழத் தொழுமெய்யில் வருவுருக் குறியே. (௩)

வேறு.

இவ்விய லிலிங்கந் தானு மிசையுமைம் புலனே யின்றி
நவ்விய வுணர்வே யின்றி நவில்கரு விகளே யின்றிக
கவ்விய வகில முற்றுங் கவர்ந்தறிந் தனுப வித்துந்
திவ்விய விமல மேயாஞ் சிவமிதே விசுவ லிங்கம். (௪)

வெல்லியற் சமட்டி காதன் விசுவமே முவைதா மாமால்
புல்லிய பிராண னென்று புகலுமந் திரமி ரண்டு
செல்லிய னுடி மூன்று திகழ்பிரா சாத நான்கம்
மெல்லியற் சத்தி யைந்து காலமா றேழு ததவம். (௫)

எழுவித விசுவ மான வவற்றொரு பிராண னுக்குத்
தழுவிய மனமே சீடன் றானுமான் மாவு மொன்றாய்க்
கொழுவியு மிரண்டின் றூய வயிக்கியக் கூட்டுட் பட்டே
வழுவிலா வியற்கைத் தாயோர் மார்க்கமுற் றிருப்ப தாமால். (௬)

மந்திர விசுவ மூலா தாரத்து மனுப்பிரா சாத
மந்திர மிரண்டுந் தீர்க்கப் புலுத்த தானத்து மன்னி
யந்தர வான்மா வோடு மயிக்கமா மகார மாதி
யந்தர விந்து மட்டும காணுமோர்ந் தப்பா லாமால் (௭)

௭. தீர்க்கப்புலுத்த தானத்தும்—நிறையும் பத்தாகிய தந்தானங்களி லும், அந்தரவான்மா—இடையில் சாக்கிரத்து நுதலினும், சொப்பனத்துக் கண்டத்தினும், சுழுத்தியில் இதயத்தினும், துரிய துரியாதீதங்களில் வே றிரண்டிடங்களிலுந் தங்குமுயிர்.

அருத்தசந் திரனி ரோதி நாதநா தாந்த நாற்கொவ்
வொருத்தல மாக வோது மிருதயங் கண்டத் தாலு
புருத்தனி நடுவி தன்மேல் பிரமரந் திரமபோய் மீண்டே
யிருத்தலு மாததான் போய்மீண் டிலங்கிடு மிதன்சி ரீதே. (அ)

சூடிய விசுவம் வீணை தண்டொடு துவாத சாந்தங்
கூடிய பத்துத் தானங் கிரந்தியுங் கூறு வேறு
பூடியற் படுத்துப் பேசித் அடலொளி பிரலே சிக்கு
முடிய பத்துத் தான நிறைவினை மொழிவல் கேண்மோ. (கூ)

ஏற்றிய மூலங் குய்ய மிருங்கிழங் கிதைய மேற்கம்
போற்றிய கண்டத் தாலு புருவகள் ளாறு தாரஞ்
சாற்றிய நிராதா ரம்மீ தானமேற் பிரம ரந்த்ர
மாற்றிய துவாத சாந்த மாகவிப் பத்தே தானம். (ய)

ஆகிய முடிச்சுப் பத்து மூலமந் திரகு லத்தாற்
போகிய வாப்பே தித்துத் தசநாதம் பொலிவித் தந்தப்
பாகிய நாடி யோடுங் கூடுத லாகப் பண்ண
வூகிய பிராசாத தந்தான் விசுவமே யுரைத்து நின்றே. (யக)

அகாரமே யுகாரத் தோடு மகாரவிந் துருத்த சந்த்ர
னகாரமைந் தாம்நி ரோதி நாதநா தாந்த மூன்றும்
பகரவொன் றுயா றாகும் பதிவிட்டங் கேழாந் தானம்
கிகாரை தன்னி யாக்யம் பணித்துயிர் தியங்க ணீக்கி. (யஉ)

கூ. சூடிய விசுவம்—தலையாகிய புகழையுடைய விசுவம். கிரந்தி—முடிச்சு. ய. கிழங்கு—கந்தம். இது ஆயிரத்தெட்டு நாடிகளாற் சூழப்பட்டு எல்லா நாடிகளுக்கும் வேர்த்தானமாகக் கோழி முட்டையைப்போன்ற ஒருகிழங்கு வடிவாயிருக்கும் மணிபூரகத்தானம். கண்டத்தாலு—அடிநாத் தானம். (விசுத்தி.) நிராதாரம்—தலையுண்ணடிவிலுள்ள சத்தித்தானம். மீதானம்—அர்த்தநாரீசுவர சிவநிலை. சத்தித்தானத்தை விந்துவட்டமென்றும், சிவநிலையை நாதத்தான மென்றுங் கூறுவாருமுளர். ஆதாரம் க. நிராதாரம் க, மீதானம் க, ஆக எட்டுத்தானமே பிறரெல்லாங் கூறுகிறபவும் இவர் பத்துக்கூறுவாராயினர். யஉ. நாதநாதாந்த மூன்றும்—பரநாதம், அபரநாதம், நாதாந்தம் என்னும மூன்றனையும். பரநாதசிவமே அறிவென்றும், பரவிந்து சத்தியே மனமென்றும், அபரநாதம் பிங்கலையாகிய சூரியன் என்றும், அபரவிந்து சத்தி இடைகலையாகிய சந்திரன் என்றும், நாதாந்தம் சுத்தசிவநிலையாகிய வெளியென்றும் ஒரு சாரார் கூறுப. நல்லாசிரியர் பால் வினவி உண்மையறிக. ஏழாந்தானம்—

"வட்டங்க வேழு மலர்ந்திடு மும்முனே
சிட்ட னிருப்பிடஞ் சேர வறிகிலீர்
ஒட்டி யிருந்தன் னுபாய முணர்ந்திடக்
கட்டி யிருப்பிடங் காணலு மாமே." திருமந்திரம் 768-காண்க.

சத்தியி னடுவே நின்ற நாதமா னதுமேற் சார்ந்து
பொத்தியல் சமனை தன்னி னளவாக யாதொ ருக்கா
லெத்திய செல்லா நிற்கு மியங்குமேற் சத்தி யன்ன
முதநிற காலப் பேரான் மொழிபடு விசுவ முன்னின். (யங)

தானமன் சத்தித் தானந் தனின்மிசை யிருந்து நாத
மானது சமனை தன்னி னளவதா யையபத் தொன்றும்
போனது மிமைகொட் டாமற் சைதன்யம் புகுஞ்சஞ் சார
மீனமில் கால மான விசுவமென் றிசைக்கு மம்ம. (யச)

முன்னிய சத்தி யோடு வியாபினி சமனை மூன்று
மன்னிய தானத் திரெட் டிமைக்கொட்டிற் சத்தி பன்னும்
பன்னிய வியாபி னிக்கோ விமைக்கொட்டுப் பதினோ ராகு
மன்னிய சமனைக் கான விமைக்கொட்டுப் பதினெட் டாயால். (யரு)

இயங்கிய வைம்பத் தொன்றே யிமைக்கொட்டுத் தொகையா மீதி
னுயங்கிய காலம் போல விசுவமோர் பதினு றுதந்
தயங்கிய விரா கால மிமைத்தட்டுப் பதினே ழுயா
மயங்கிய பரகா லப்பே ரிமைக்கொட்டீ ரொன்பான் மன்னே. ()

தத்துவ விசுவ மான நுன்மனை முடிவி லேதா
னொத்துறிற் சூனி யத்தின் முடிவிலோர் பாரப ரத்தி
னத்திசை சைதன் யப்பேர் விசுவம்யோ சிப்ப தாமான்
முத்தியிற் சிவானு போக விசுவமே விசுவ மூர்த்தி. (யஎ)

வேறு.

அயனு மாயனுந் தாம்பொரு ளெனவளப் பரிய
வியனு றுந்தம மதியினால் வீம்புகள் பேசி
புயனு னுக்குற வடித்துடன் பொருதன ரவர்க
ளையனு வன்றிட வனலுரு வாமிறை நடுவே. (யஅ)

அளவில் சோதிகண் டஞ்சின ரிகலலை விடுத்தே
களவி லானெறி வடிவதை யளப்பது கணித்தார்
துளவி னன்கிடி யாயடி தறுவுவ லென்று
னிளவி ரிஞ்சனோர் குவன்முடி யெனுமன்ன மானன். (யகூ)

யச. தானமன் சத்தித்தானம்—கொடைநிலைபெற்ற சத்திமண்டலம்.
"மேலாந் தலத்தில் விரிந்தவ ராரெனின்
மாலாந் திசைமுகன் மானந்தி யாயவர்
காலாந் திசைத்தி னடுவான வப்பொருள்
மேலா யுணர்ந்த மின்னுடை யாளனே."-திருமந்திரம் 810-காண்க.

ஓறிப் போயமால் குறைமுக மாயினன் இளர்ந்தான்
மீறி யன்னமா னவன்சிறை யிழந்தனன் மீண்டான்
தேறி லாவள வினன்சிவ னென்றனன் றிருமான்
மாறி மான்மகன் கோயிலிற் கிழந்தனன் மன்னே. (உ0)

அநந்தை யாரளக் கொளுதவ னடியவர்க் கெளிய
னுநந்தை யன்மகார்க் குதவலின் வேண்டிடா தருளாற்
சுநந்தை வங்கடா மேகா லோர்கிலா துணிகோ
னிநந்தை காக்கி மாததொழு துய்ந்தன ரிப்பால். (உக)

வேறு

ஒன்றவன் றானே யிரண்டதாய் மூன்று யோதுகான் காயைந்தா யாறாய்
நின்றவ னேழா யெட்டதா யொன்பா னிலையதாய் நிறைந்தமை யறிய
நன்றவ னிருக்கு கான்கொடு மேலா யெத்தவாகமமெழு வான்குஞ்
சென்றவர் தெளியி னிதழிகு டிறைவே சிவலிங்க காரண னெனுமால். ()

இலிங்கமே புவியு மிலிங்கமே புனலு மிலிங்கமே கனலுமா ருதமு
மிலிங்கமே வானு மிலிங்கமே கதிரு மிலிங்கமே யிலிங்கமே மதியு [வே
மிலிங்கமே யுயிர்வா ழுடம்புமாக் காணி னிலிங்கமாண் பளந்துரைப் பது
விலிங்கமே முளைக்கு முளையெலா முளைக வெளவெளி னதுபெருந்
[தகைத்தே. (உங)

வேறு.

இலிங்க மேமலர் தொழுகடு விருந்திலங் கிடுமே
லிலிங்க மானவ ருணுவினுக் குருகக்கொடுத் திலகு
மிலிங்க மல்லறுத் தொளிவிளக் கினுக்குரு வீயு
மிலிங்க மேனியே யுயிர்தொறு நண்ணுடம் பென்ப (உச)

விசுவ முற்றுமி லிங்கமெய் கொளுமறை விவேகித்
தசுவ தந்திரர் விசுவலிங் கத்தையே யன்பார்
சிசுவ ளர்ப்பவர்த் தொடர்கலிற் றொடர்ந்திடிற் றினமும்
பசுவ னக்கொடி யானெடுத் துச்சுமப் பானால். (உரு)

உக. சுகந்தைவந்தன்—இன்பமும் செல்வங்களும். தாமேதால்—"தா மேதரு வன்னைத் தம்வலியி னுற்சுருக—லாமே யிவார நதற்கு." என்னுந்திருவருட்பயனறிக. ஐகாக்கிரம—ஏகாக்கிரம். (ஒத்நோக்கம்) உரு. பசு—விடை. எடுத்துச் சுமப்பான்—"இடைக்கத் தருமோநற் கேண்மையர்க் கல்லா—லெடுத்துச் சுமப்பானை யிங்கு." என்னுந் திருவருட்பயன்கொண்டோர்க.

ஐந்தொ ழிற்செய விடைக்கொடி யுயர்த்தரு ளமல
சுந்த ரன்விசு வலிங்கவெம பிரானடி தொழுவோர்க்
கிந்த மாநிலத் திந்திர போகமு மேலைக்
கந்தண் டாணிழ லுந்தா வுமையொடு மமர்ந்தான். (உசு)

அம்மை யப்பனு வுலககா யகியொடு மமர்ந்த
செம்மை யின்புரு விசுவா யகனையாழ்ச் செல்வன்
மும்மை யங்கணு முதியதென் காசிவாழ் முதல்வா
வெமமை நாளுமா ளுடையவா வெம்பிரா னென்று. (உஎ)

வேறு.

தலைவணக்கா மோருறுப்பாற் றலைவ லக்கை
சார்த்திறைஞ்சு மீருறுப்பாற் றலைமேற் கைகள்
குலைபலரிற் குவித்தேத்து மூன்று றுப்பாற்
சவின்முழங்கால் கைத்லைதா ழைந்து றுப்பான்
மிலைகைமுட டு தலையுரங்கண் செவிவாய் மூக்கு
மோதினிதோ யெட்டுறுப்பா லடியு யர்த்து
நிலைதுரிசா சாதுதொழு மெறுழு றுப்பா
னிறையளியாற் பணிந்துகண்டான் புகழ்பா டேற்றான். ()

எழிசைகா ரதன்பாட லமிழ்தெங் குங்கா
தெனநிறைந்தென் காசிவிசு வேசன மாந்தி
யாழிநக ரெழிவியின்மின் னனவெ பூந்தன்
பருளினனு லவணங்கா மகிழ்ச்சி பொங்கி
வாழியவென் றருளியவெம பெருமவென்றும்
மங்காதிவ் விலிங்கமன்னி வாழ்கென் றேற்றான்
போழிளவெண் கதிர்குடி யாங்க மர்ந்தான்
புகழ்முனிவேயம் காளிருந்தேத் தினன்சென் றானால். ()

வேறு.

அவ்விலிங் கத்தி னடியினு வுடையா னடியினேங் காரமா மதனிற்
செவ்விலின் பருளு மத்திய கண்டஞ் செப்பிய வகாரமாஞ் சோத்து
னுவ்விய லெழுதா மதனினுன் வட்ட மகாரமா மதனினு னோங்கும்
பவ்வினிக் கலைபோல் விந்துவக் குழிதான் பாவிலிங் கம்பர நாதம். (௩0)

வேறு.

தேனிதலை தெற்கடி வடக்கது திருத்தாட்
பூவிகழ்கள் கோமுகி புயாந்தமலை மத்தி
பாவிதனுட் சக்கரம பயப்புது மிலிங்கந்
தாவிதஞ் சதாசிலம மேனுமணிய தாமால். (௩க)

உஅ. எறழ்—தண்டம். ௩0. வட்டம்—விந்து. (குழி) பவ்வு—பவ்வமாகிய. இன் றுக்+அலைபோல்—இனியகருப்பஞ்சாற்றுக்கடலொலிபோல். (நாதம்.)

வேறு,

ஓரொரு தலத்தி லொவ்வொரு வருக்கா வுகந்தவர்க் கருளைக் கொடுக்குந்தா
னொவ்வொரு விளையாட் டாச்சில வுய்த்தா னுய்த்தவவ் விலிங்கமார்ந்துறைவா
னொவ்வொரு பொருளா யொளிர்கவ பேதத் துள்ளொளி காதமா யகிலத்
தோவொரு படிவத் துயிர்க்குயி ராய்கின் றேங்கினன் விசுவமா மொருவன்.

வேறு.

பொருந்திகின் றெவருந் தேராப் பொருளவன் றானே முன்னி
யிருந்தினி தாடல் செய்தோர் வழுதியுள் ளிசைவி னாலே
வருந்திய காலு நீசிக் காசிநீ மறத்தி தென்பாற்
றிருந்தியா னுறைவல் காண்டி யெனச்சிவ லிங்கஞ் சேர்ந்தான். ()

அவந்திகை துவாரை மாயை யயோத்தியா மதுரை காஞ்சி
நவந்திகழ் காசி யேழு நகருறை சுயம்பைக் காண்கைக்
குவந்திவர் தென்கா சிக்க ணுறுதிகொள் விசுவ லிங்க
சிவந்திரு முன்போய்க் காணின் சேர்நலம் பெரிதாந் தேர்மின். ()

உத்தரங் கிழக்கு தெற்கு மேற்கென வொளிர்நாற் பாலுங்
குத்தரந் தாம்போய்ச் சூழ்காண் குறிபெலா மெய்பி ரற்கு
முத்தர மாலே தோன்று மவற்றுளுத் தமமா மூர்த்தி
வித்தர தென்கா சிக்கோ விசுவலிங் கந்தா னம்மா. (௩௫)

சித்தம தொருமைப் பட்டோர் தெளிந்திடு முருபா ரூப
வுத்தம விசுவ லிங்கங் கண்டவ ரூழிப் பாவந்
தத்தம திடன்விட் டேகித் தனைப்பிடும் பஞ்சிற் போகச்
சுத்தமன் சிவபு ரம்போய்ச் சுகந்திழைத் திருப்ப ரம்மா. (௩௬)

உரவியற் கருட னாலே விடம்பட மொடுக்கு மாபோல்
பாவுமா ருதத்தி னாலே முகிறிசை பறியு மாபோ
லிரவிகா லொளியி னாலே யிருளிம மிரியு மாபோல்
வாவிசு வலிங்கர் நோக்கால் வல்வினை நடுங்கிப் போமே. (௩௭)

கற்றுளி கல்லுரா னத்தாற் கருண்மடக் கீரு மாபோற்
பற்றுளி வீர ராலே பகைபெலா மழியு மாபோற்
சிற்றுளி பெரிய கல்லைச் சிதறுதுண் டாக்கு மாபோற்
சுற்றுளி விசுவ லிங்கங் கண்டிடிற் றுயரம் போமே. (௩௮)

விதியினை யாசான் பார்வை வீட்டிநன் றருளு மாபோற்
பதியினைப் பேண்கற் பின்மார் பழிபடா திவக்கு மாபோன்
மதியினை யுடையார் சிற்ற மாறியுட் குளிரு மாபோற்
றுதியினைப் பெருக்கித தீமை தொலைத்திடும் விசுவ லிங்கம். (௩௯)

உலகுயர் விசுவ நாத னுலகம்மை தவனோ சேயோ
விலகுறு தந்தை யோமுன் றியையுமுற் றெளியா ரெல்லா
யலகுகட் டற்கின் றிப்பா லமரவ ளோடி ருந்தும்
நலகுணத் திரண்டி லர்த்த நாரீச னெனுநிற் பானால். (௪௰)

அருளவ ளருளா ளன்று னுமுல கம்மை பாகன்
மருளவ ரெனினுங் காணின் வல்வினை யொழித்தின் பீவன்
பொருளவ னெனத்தேர்ந் தேத்தும் புலவரோங் கறிவு தேர்வார்
தெருளவ ராறு காலந் தெரிசித்துச் சிவமா வாரே. (௪௧)

இருட்சிதை காலை காணி னிடரொழிந் தின்ப மெய்தும்
மருட்சிதீ ருச்சி காணின் வரமகப் பேறு வாய்க்கும்
வெருட்சிதை மாலை காணின் வேண்டிய செல்வ முண்டாந்
தெருட்சியா ரர்த்த யாமஞ் சேவிப்பி னிருமை நன்றாம். (௪௨)

குலவுயர் பள்ளிக் கேழல் கும்பிடி னறஞ்சிறக்கும்
நலனுயர் துயிலெல் பூச்சி நற்குடிப் பிறப்பா வைக்கும்
வலனுயர் திருமுன் பார்ந்தைத் தெழுத்தெணின் கதைவா சிக்கின்
பலனுயர் கதைகள் கேட்பின் பாடிடின் பெரும்பே றுண்டாம். ()

விசுவமா மிலிங்கங் கண்ட விழிமூடித் திறக்கு முன்னே
பசுவதி யாகப் பேறு பலிக்குமன் பவிழ்ந்த ரோரோர்நாள்
சிசுவழக் குரைப்ப வேமற் செற்றது செந்தீ தீவிழ்
கொசுவதிற் செமித்தான் கூற்ற னேற்றமுங் குறைந்த தோர்மின்.

தருமசொ ரூபி காசித் தலத்தான் றிருநா மத்தைப்
பெருமகிழ் சிறப்பக் காதிற் கேட்பவர் பிறவி தீர்வார்
மருமலர்க் கொன்றை யானை மனத்திடை யறுதெண் ணன்பர்
கருமவெம் பிணிக டீர்ந்து கடவுளர் போற்ற வாழ்வார். (௪௫)

௩௰. "வாயு மனமுங் கடந்த மனோன்மனி
பேயுங் கருணைப் பெரிதுடைப் பெண்பிள்ளை
யாயு மறிவுங் கடந்த வரனுக்குத்
தாயு மகளுநற் றாரமு மாமே."—திருமந்திரம் 1178-காண்க,
ஒளியார் எல்லாய்—செங்கதிர்போலுமாசி. (கதிர்—சத்தி, கதிரோன்—சத்திமான்.)

வேறு.

காசி நாயகன் கழலிணை வணங்கவேண் கதித்தால்
பேசி ஞன்முது தீமைக டொலைந்திடும் பெட்பாந்
தேசி ஞயலஞ் சூழ்வரின் மனக்கவ றீரும்
நேசித் தேத்திடி னமார்கோ ளுகுத னிசமே. (சசு)

புழைக்கை மால்வரை சுரரொடும் பொன்னுல கேகித்
தழைக்கை நல்கிய விசுவநா யகன்றெரி சனத்துக்
குழைக்கை மானவர் பரிமக மாயிர முஞற்றன்
மழைக்கை யாத்தால் சிறப்பரில் வான்புரப் பாரால். (சஎ)

வேறு.

அடியலம் பிடவி லாமிச் சறுகுவெண் கடுகு சந்திவ்
விடிகொணீர்ப் பாத்தி யத்தோ டிவர்முக மலம்ப வேலங்
கடிபுலின கிழங்கு சாதிக் காய்பளி தங்கி ரம்பு
வெடிமுகைச் சண்ப கத்துள் விராயவா சமணீரும். (சஅ)

அரிசிபால் புனற ருப்பை வரியவங் கடுகெள் ளார்நீர்
விரிசிரங் கழுஉமர்க் யத்தோ டியன்முநீ ரமைத்து வேதப்
பரிசிலேஞ் சுத்தி செய்து பசுபதி பூசை யாற்றின்
றுரிசிலாத் திருமாற் பேறு துய்த்துமேன் முத்தி சேர்வார் (சகூ)

நரந்தமும் புழுகுங் கூட்டு நறியசந் தனச்சே றூட்டிற்
பரந்தநா னிலத்தி ராச பலந்தரும் பசும டிக்கண்
சுரந்தபால் பவநோய் தீர்க்குஞ் சுகந்தருஞ் செல்வ நல்குஞ்
சிரந்தழை மாலை சாத்திற் றிருவொடு மாவூர் வாழ்வார். (ரு0)

சிறந்தகண் பன்னீர் சாந்த மத்தர்செய் தயில மாட்டிற்
பிறந்ததன் னுடனன் ருகிப் பெண்டவா மழுகும் பேறும்
புறந்தரா திகல்வென் மாண்பும் பொலிந்துமன் வாழ்வுண் டாயா
லறந்தனை வளர்க்கு லோகாம் பிகைதவ னன்பே செல்வம். (ருக)

போனகி நிவேதித் திட்டார் பொம்மலெவ் வொன்றுக் காண்டு
வானகத் தொளிர்வை லக்கண் வாழ்வது திண்ணந் திண்ணம்
கானகக் கனிவெவ் வேறு கடவுளுக் கருப்பித் திட்டோர்
தேனகத் தமிழ்த முன்னுஞ் சிவயோகி யாதன் மெய்யே. (ருஉ)

சுருதிகண் முழங்கு காசிச் சோதியம் பாமற் றிடு
தருதிருக் கலசங் கும்பஞ் சங்குகள் சகத்ர தாரை
விருதிசை மிருகக் கொம்பு வேதிகை பிவைக ளீய்த்தோர்
பருதிவா மூலகி லேறும் பாக்கிய சிரேட்ட ராவார். (ருந)

தூபக்கா லொன்றே தீபஞ் சோடச மவைதாம் புட்ப
தீபமே நாக வாண்மா திண்டிபுண் டரீக மன்னஞ்
சோபன வாசி பத்ரஞ் சூலமே கும்ப மேறு
தாபரங் குருக மூங்கட் சாஞ்சத்தி தீப மாயால். (ருச)

சோமஞ் மாடி தர்மங் குடையுமை சுருட்டி வாணி
சாமரம் விசிறி வாயு சாற்றிவை தூப தீப
மாமனைத் தினுந்தத் தம்மா லாமள விறைகோ யிற்கு
நேமமா வாங்கித் தந்தோர் நீடுழி வாழ்வார் மாதோ. (ருரு)

மூரசங்க ணிருத்தங் கீத முழக்கல்பூ சனைகொண் டாடல்
பாசங்க வோசை யார்த்தல் பரன்றிரு விழாக்கள் செய்தல்
வாகரோ ருகமே யாதி மாலைகள் சூட்டல் செய்தோ
ராசராய்ப் புவியில் வாழ்வா ரதற்குமேன் முத்தி சேர்வார். (ருசு)

தத்தமா லுழைத்த தேட்டந் தம்முனோ ரறத்தா றீட்டி
வைத்ததேட் டிவற்றூ லேது வழங்கினும் பலன்கை கூடு
முத்தமர் குடித ழைத்தற் குறதியி தாமான் மற்றீங்
கத்தனன் பினாற் செய்விப் பதுபொரு விலார்க்கே யாமால். ()

ருந. வேதிகை—பீடப்பலகை. ருச. ஆண்மா—புருஷா மிருகம். திண்டி—கஜம். புண்டரீகம்—வியாக்கிரம். ஏறு—ரிஷபம். தாபரம்—விருக்ஷம். குருகு—குக்கிடம். அமூங்கு—கூர்மம். இது மகுடாகமமுறை. இதனின் வேறுசப்புட்பதீபம், ஏகதீபம், கேதுதீபம், கஜதீபம், வியாக்கிர தீபம், அமலதீபம், வாசிதீபம், சிம்மதீபம், சூலதீபம், பூரதீபம், ரிஷப தீபம், புருஷாமிருகதீபம், குக்குடதீபம், சிருக்குதீபம், அட்சர தீபம், சத்திதீபம் எனப்பதினாறு கூறவாருமுளர். இதில் விருக்ஷதீபம், கும்ப தீபம், கூர்மதீபம் என மூன்றுந் தள்ளப்பட்டுப் பூரதீபமும், சிருக்குதீப மும், கேதுதீபமும் மிகையாயின. சிருக்கு மலராகலின், அதேபத்திரமெனவும், பத்திரம் வாகனமாகலின் அதே சிம்மதீபமெனவும், வழங்குவர். சத்திதீபம் 1, 2, 3, 5, 7, 9, நாளங்களை யுடையதாய் முறையே கலைமகள் அசுவினிதேவர்கள், இச்சையாதி மூன்றுசத்திகள், பஞ்சகலைகள், சப்தமாதாக்கள், நவக்கிரகங்களின் வடிவாமெனபாருமுளர். புட்பம்—பூமி, நாகம்—சேடன், ஆண்மா—ஆசிரியன், யானை—ஐங்கரன், புலி—ஐயனர், அன்னம்—பிர்மா, வாசி—இந்திரன், பத்ரம்—இலக்குமி, சூலம்—அஸ்திரதேவர், கும்பம்—அகத்தியன், இடபம்—நந்தி, விருக்ஷம்—கற்பகம், குருகு—முருகன், கூர்மம்—அரி, அட்சரம்—சரசோதி, சத்தி—வகாட்சரி எனப்படுதலின் இக்ரமமந்திரத்தால் தீபங்காட்டுக.

விள்ளரும் பலாமா வாழை விளவுமா தழைப்ப முங்கள்
கள்ளவிழ் தமரத் திந்து நரந்தமுந் திரிகை கொய்யா
வுள்ளநற் பழங்கள் தேங்கா யுழுமணப் பொருடாம் பூலம்
வெள்ளரிக் காய்க ளேட்டின் விமலனா ருணவுக் குண்டாம். (௫௮)

காசியின் வாசி பேதென் காசியீ தெனக்க ளவின்
வீசியிப் படித்தென் ளுீ காண்கென விளம்பி நன்றாப்
பேசியிங் கிலிங்கங் கண்டு பிறங்கிட வருளெம் பெம்மாற்
காசியின் றெட்போ லீந்தா லவன்றரு மேருச் செல்வம். (௫௯)

இன்னவ வடிவ னெண்ணி லிலிங்கமித் தரையி லுண்டா
முன்னவ ரிருவர் முன்பு முளைத்தவன் காசி நாதன்
றென்னவன் கண்டா னந்தந் திளைத்திட வருள்பு ரிந்த
மன்னவன் வலஞ்சூழ் வேழ வாழ்வித்த விசுவ லிங்கன். (௬௦)

செண்பக லிலிங்க மாதி தெக்கண காசி லிங்கம்
நண்பகத் துளமை நாகேச் சுரலிங்கம் நந்தி போற்றும்
பண்பக லகில லிங்கம் வாசியும் பணிந்த லிங்கம்
விண்பக வெழுந்த சோதி விரிந்தமா விசுவ லிங்கம். (௬௧)

பாதல மூலங் கீண்டு முளைத்தவிப் பரம லிங்கன்
மாதல மாந்தென் காசி வந்தருள் சிறந்தா னென்று
னீதலஞ் செவிசாய்த் தேற்ற விருந்தவர் களிது ளும்பி
யாதலன் பாயு ரைத்தீ டேத்தது மளித்தி சென்றார். (௬௨)

மூர்த்திவிசேடம் முற்றிற்று.

ஆகப்பாட்டு ௪௦௬.

ஆறாவது நாரதன் தென்காசி மான்மியங் கேட்ட படலம்.

மூர்த்தியின் விசேடா மிழ்த முகந்துளங் களித வத்தீர்
பூர்த்தியி னினிக்கு மோர்மாண் புலவன்றென் காசிச் சீர்தேர்
கீர்த்தியிக் கதைநீ ரன்பாக் கேண்மினென் றிடவுந் துள்ளி
யார்த்தினி தறைமி னென்று ருந்தவ ரறைவான் சூதன். (௧)

மிசைதிரே தாயு கத்தின் வெறிமலர்த் தருநீ ழற்க
ணசையமிழ் தருந்திச் சாவா கலந்தயிந் திராணி யோடு
மிசையமா றிந்தி ரன்முன் பிசைவலான் வந்து பாட
லசைபரி மித்த ரன்செய் வஞ்சவுழ்ந் தீர்வி தாமால். (௨)

வேறு.

உருகுமன் புடையசீ ருள்ள மெய்த்தவன்
பருகுகான் றமாயினன் பாலும் பற்றினன்
றிருகுறு வஞ்சமோர் சிறிது மற்றவன்
பெருகுகந் திருவன்யாழ் பெரிதுங் கற்றுளான். (௩)

சீரதன் முறையினா டக்கஞ் செப்பினும்
வாரதன் மையிற்பல வ்லார்க்குஞ் சொல்லுவான்
சாரதந் தியினிசைச் சமத்தின் வல்லவ
ஞரத னெனுந்திரு நாம மாமுனி. (௪)

போயினன் பொன்னகர்ப் புலவர் சூழ்சவை
வாயினர் சங்கமின் பதும மாநிதி
வேயினா ரின்னிசை விழைய ரம்பைய
ராயினர் பாடல்கொண் டாடவ் வேளையே. (௫)

அரியவெண் சாமர மசைப்பர் வீசிறி
யுரியபீ லியுமினா ரொசிதல் செய்குவார்
பெரியகற் பகமலர்ப் பிணைய னூற்றிடும்
விரியரி யாசன மிளிரு நாப்பணே. (௬)

நிரந்தர மிடைந்திடு வயிர நீடொளி
தரந்தரந் தெரிதிடு சரங்கள் போலணி
பரந்தபன் னிருகதிர் பரப்பும் பொன்முடிப்
புரந்தரன் றவிசதிற் போலிந்துற் றுனரோ. (௭)

இந்திரன் கொலுமுகத் திருப்ப வின்புறு
மந்திரத் தலைவர்கள் வரிசை யாய்நிற்பத்
தந்திரந் தோமுனி முகப்பிற் றங்கலை
வந்திரஞ் சிதப்பட வழுத்து மேவலன். (௮)

முனிவரன் வரவவா முகரி மைவலார்
கனிதவ னிருப்பது கடாவெ மீஇவர
பனிவளர் முகையவிழ் பாக சாதனன்
றனியகங் களித்தெழீஇ யழைப்பச் சார்ந்தனன். (௯)

அ. தந்திரம்—யாழ் நரம்பு, கூ. முகரிமைவலார்—மிக்கதீவினை யுடைய தேவர்.

சிறந்தமா தவமுனிச் செல்வ வின்றுதான்
பிறந்தது யோகமுன் னெழுக பேரியாழ்
கறந்தபா லமிழ்தமுங் கைப்ப வுண்டுவா
னறந்தழைத் திடுமென வழைத்து வந்தனர். (௰)

இரைக்கட லமிழ்தருந் தியவ லாரிநன்
றுரைக்கனு முகமனன் குளுற்ற லுங்கொடு
சிலைக்கல மெடுத்துளே சென்று நாசனத்
திரைக்கடை கொண்டன னின்ப மார்ந்தரோ. (௰௧)

மருத்துவர் வந்தித வாய்மை கூறலாற்
றிருத்துயாழ் முனியிசைத் தேன்றெ விட்டுறப்
பொருத்துத லெண்ணியுட் புனித னாகிமெய்க்
கருத்துகந் தகாரமுன் கனிந்தெ ழூப்பினான். (௰௨)

செவ்வியா ழிடந்தழீஇத் தெறித்துத் தாக்கியவ்
வுவ்வியா டகந்திரீஇ திவவி னார்தலாய்
நவ்விநே ரொழுக்கினர்த் தெழுப்பி நற்சுதி
மூவ்விர லூசலின் முயலப் பாடுவான். (௰௩)

சீரத னெறிச்செலுந் திறப்ப ரீட்சண
நாரத விருடியாழ் நரம்புங் கண்டமும்
மாரத யாமந்த மதுரந் தாரமோர்
சாரதந் திபின்முறை சமைவ ரித்தரோ. (௰௪)

வேறு.

களரியில் ஆசு னவ ஐஔள கார மேழும்
வளரிரு பாணி ரண்டு மாத்திரை குரலே துத்த
முளரிசைக் கைக்கி ளைமா றுழையொடு மிளியே மற்றை
விளரியே தார மென்ன விளங்கிசை யேழிற் காட்டி. (௰௫)

மருவிய குரன்மி டற்றில் வயந்தருந் துத்தம் நாவிற்
பொருவில்கைக் கிளையண் ணத்திற் புகழுழை யுயர்சி ரத்தி
லருவிளி நெற்றி யின்மா ணார்தரு விளரி நெஞ்சிற்
றிருவியற் றாரம் மூக்கிற் றிகழுமே மிசைசி றப்ப. (௰௬)

௰௧. சிலைக்கலம்—நரம்புக்கருவி. இரைக்கடை கொண்டனன்—இருப்பிடங்கொண்டான். (இரை-இருப்பு, கடை-இடம்.) ௰௩. அவ்வுவ்வி—அத்தலை. திரீஇ—திரித்து. திவவின்—வீணைவலிக்கட்டின். வார்தல்—பார்த்தல். மூவ்விரல்—பயிற்சியின் மூத்தவிரல்.

இசையமிழ் தொழுக்க வும்ப ரியக்கர்கந் தருவர் சித்தர்
வசையிலெழ் கோள்க ளெட்டு மாசுணம் மதக யங்கள்
திசையிலெண் வசுக்க ளேகா தெசவுருத் திரர்க டேனு
பசையினு ரின்ப வெள்ளம் படிந்தனர் செவிசாய்த் தம்மா. (௰௭)

மண்ணது முருக கானன் மணலது முருக மங்குற்
றண்ணது முருக சாந்தத் தருக்களு முருக தாமப்
பெண்ணது முருக பேசாப் பெருமலை யுருக விண்டப்
பண்ணது பொழியாழ் வல்லான் பாடினன் றேவ கீதம். (௰௮)

இன்னின தெனவி ழுள்ள மேதொரு செயலும் பற்று
துன்னிசை மயமே யாய்ச்சித் திரமென வொசியா துற்று
நன்னிலம் நிற்ப தானல் நல்லிசை முனிவன் பாடற்
கென்னினி யொப்பா மொப்பி லிசைவலான் சிறப்போங் கிற்றால்.

அவையினி லிருந்தோர் கீத மதிசயி ததிக மிந்தச்
சுவையையஞ் செவியா லுண்டு தூயவின் பார்ந்தோம் வல்லூழ்
நவையெலாந் தீர்ந்தோம் மெய்கொ ணலமெலாம் பெற்றோம் மூன
சுவையயில் சிவனி சைக்கா டும்பிரா னெனற்கண் டேபால () [-ற

ஆடின வரம்பை மாத ரதிசயித் தாடல் விட்டுள்
வாடின ரெனினுங் கீதம் மாந்திமா மகிழ்ச்சி பூத்தார்
சூடின வாகை வேந்தன் றுப்பத்தே வமிழ்துங் கைப்ப
நாடினன் சுசியோ டார்ந்து நல்லிசை நலந்தி ளைத்தான். (௨௧)

கரியவல் லிருள்வி ரட்டிக் கதிரொளி காட்டு மாபோற்
பிரியவுண் டாமூ டற்றீர்த் தருள்பெறும் புலவ ரோபோ
லுரியசொற் பொருள்வி ரித்தின் பூட்டுமாண் கவிஞ ரேபோ
லரியவின் னிசைவி ழும்பர்க் காசிலின் பளித்தான் யாழோன் ()

கன்னலம் பாகி னுக்கக் கட்டியா மதற்குந் தீவேட்
டின்னெய்யூன் வேவ லிக்கு மினிப்புள கண்டா ரேனும்
பின்னது சிலர்க்கே யாமாற் பிறங்குமுன் னதுவெல் லார்க்கும்
நன்னயந் தருமா லன்ன நலத்தயாழ் முனிவன் பாட்டே. (௨௩)

பாவருஞ் சீர்த்தி யெங்கும் பரந்திட மகிழ்ச்சி பொங்கி
யோவருஞ் சபையோ ரெல்லா முகந்தினி திருக்குங் காலை
மேவரும் பொறாமை நீடு விழுத்தரி மித்தி ரன்று
ளுவருங் கொடுமை செய்ய நாடின னெஞ்செய் வானே. (௨௪)

நன்னயம் பேசான் கோட்டி காவடங் கிடயாழ் பாடு
மின்னவன் வலிகுறைத்தற் கென்செய லாமென் றெண்ணி
பன்னத ரந்து டித்துப் பன்னெறு நெறுவெ னப்பேச்
சுன்னலின் முனுமு னுப்போ டொருவழி துணிந்தான் மன்னே.

அடந்தனி லாய்க்க ளத்தூட வார்த்துயிர்த் தெழீஇப்பாற் சிந்து
கிடந்தமா லிடம்போய்த் தாழ்ந்து கேசவா யாழோ னீதி
கடந்தனன் வலாரி தோட்டிற் கலனிடந் தழீஇக்கார் வண்ணா
குடந்தாய் வரியே மாலே கோபதீ யெனப்பெட் பேற்றி. (௨௯)

பாடினன் மகிழ்வித் தும்பர் பாவுத னிரப்புற் றானை
னேடியே பொருட்ப டுத்த நினைத்தினம் பாடு மன்னே
னீடிவிந் திரனை நின்னி விசைத்தியாழ் பாட லென்னே
கோடினன் போலு மென்றான் கொண்டல்வண் ணனக னன்றான். ()

ஒப்பிலா வெனின்வ லாரி யொத்ததா முகமன் காட்டித்
தப்பிலாழ்ந் தவன்யாழ்க் கானந் தவறுபட் டிடப்பி டித்தி
கொப்பிலாச் சாபமென்ன நொடித்தரி மித்தி ரன்றான்
வெப்பிலா தேற்றின் பார்த்தான் வெம்மையா முவற்பற் றிற்றே.

மாயவன் றிறந்தா னென்னே மாயவன் பாலன் பார்ந்த
தூயரி மித்தி ரன்வன் றப்பெனே சாப நல்க
லாயவல் லமைதா னென்னே யபலது பெறுஞ்சீ ரென்னே
பேயதார் தருமாண் பென்னே புலவரோர் புதுமைத் தாமால். ()

சாபமே விட்ட தோரான் றன்னிழல் கருத்தி லார்க்கும்
நீபமுன் மாக்க ளுக்கு நிறைநன்னெய் திரியிட் டேற்றுந்
தீபமுன் பலவற் றுக்குந் திரிதாரப் புறஞ்சார்ந் தாற்போற்
கோபமாற் கெதிரி யாழோன் கோலொலி வசையாக் கிற்றே. (௩௰)

சவித்தரங் குறைந்து போதல் தகையகா ரதங்க ணித்துப்
பவித்தவிக் கெடுதி யாரே பண்ணின ரிஃதோ ரேனெற்
குவித்தமண் ணாவென் றீர்த்துக் கொளாவிடிற் பிணமா வேனென்
றவித்தவைம் புலனோ னுய்ந்தின் றமலயோ தமர்ந்தா னன்றே. (௩௧)

உண்மையோர்ந் தனன்மீண் டானீ தனுற்றனோ ரபிசா ரத்தீ
வண்மையோ ரல்ல ரெட்டுக் கருமமோர் வல்லா ரல்லர்
றிண்மையோன் மானகோ ளல்லர் தீவினை வழிய தல்ல
வெண்மையோ னரிநன் பன்கோ ளியானினிக் கவலே னென்றான்.

௩௧. சவி — அழகு, வலி. ௩௨. அரிகன்பன் — அரிமித்திரன்.

வேறு.

இன்னண நாத னிசைத்தெ ழும்பொழு
துன்னவை தோமா னுவன்சொன் மெய்யென
நன்னரூழ் வழியெணு னம்பி வன்மொழி
சொன்னதீ தெனவிணிற் றோன்றிற் றோர்சொலே. (௩௩)

எழுந்தசொற் கேட்டபின் னிதுநன் றென்றுமேற்
றொழுந்தக வுடையவென் றுயா நீங்கிட
வழுந்தவே றென்னையுண் டரிய யன்பணி
கொழுந்தணிப் பிறைமுடிக் கோன லாதெனா. (௩௪)

சிதவலா னெழுந்தனன் றேவ வேந்தனற்
புதமகிழ் கொளவிசை பொழிநன் றோர்ந்தியாழ்
விதாணன் மாநகர் மேவ வீழ்தாற்
கிதமுடன் வழியனுப் பினன்வை குற்றனன். (௩௫)

மாநகர் வந்தனன் மாத வற்பணிந்
தீனயாழ் தழீஇயிசை யிறங்கப் பாடினன்
கானவா னிமிர்ந்திவண் டம்ம லென்னெனக்
கோனரி கேட்பயாழ்க் கோனி தோதுவான். (௩௬

மதகரி காத்துமுன் முதலை மாய்த்தவா
பதகனே துதல்பொருட் படுத்த தென்னைநீ
சிதகன்கண் குறைந்தறந் தேற்ற னேரிதா
லுதகவான் மாறிலு முலக யர்க்குமோ. (௩௭)

யாவனோம் நமோநா ராய ணாவென
வாவலோ டுரைப்பினு மவனைக் காத்தரு
ணீவலோ னுடொரு நிகழ்த்து மென்னினுங்
காவலோய் கோளனைக் களன்கொண் டாடினாய். (௩௮)

சாத்திர மறைகளுஞ் சார ணப்பயன்
றோத்திரம் புரியெனைத் துயர்ப்ப டுத்தசற்
பாத்திர னீயெனப் பழிச்சற் கேட்டவம்
மாத்திரங் கேட்டவன் மகிழ்ந்து கூறுவான். (௩௯)

அழுக்கரி மித்திர னடைந்து கோட்சொலப்
புழுக்கமு வவனுளம் புகுந்த தீவினை
யிழுக்கதென் றுனக்குள தெனியுந் தேர்ந்திலாய்
வழுக்கலை காவிவண் வந்த தோர்திமேல். (௪௰)

௩௩. எஞ்ஞன் — என்ஞ்ஞனி. ௩௫. விதாணன் — விவேகி. ௩௮. களன் — உள்ளம்.

கோளனை நோக்கிலை சூல்குன் றற்கிவண்
மூளலை நோக்கிலை முக்க ணெம்பிரா
னாளலை யென்னிடத் தமைத்த நீதாற்
சூளலை யேற்றது தொலைத்தி யென்றனன். (௪௧)

தருமகன் றேர்ந்தியாழ்த் தவனெம் மாதவ
கருமமீ தொழிவழி காட்டு கென்னலுந்
திருமறு மார்பினன் சிந்தை செய்தொரு
மருமமீ தன்பொடு வாங்கென் றோதுவான். (௪௨)

மனோவதி நமதுவை குண்டம் வான்மலை
முன்னோதுமா தலங்களின் முதன்மை பெற்றதாய்ப்
பனோன்மைய தாய்த்திரி கூடப் பான்முதி
தெனோர்திருத் தலமுண்டஃ தெழிற்றென் காசியே. (௪௩)

ஓங்குதென் காசியி னுலக நாயகி
பாங்குறை விசுவநா யகனைப் பார்த்திடிற்
றீங்குக டீர்ந்திடுந் திருத்த மாடியே
யாங்குகந் தருந்தவ மழைப்பின் வாழ்வதாம். (௪௪)

நீயுடன் சென்றரு ளீரிற் றோய்ந்தலை
காயுட னப்பனை யருச்சை செய்திடின்
காயுமென் சாபமுங் கழிந்தி யாழிசை
யேயுமுன் னினுஞ்சிறந் தென்று ணர்த்தினான். (௪௫)

மாலருள் வாஞ்செவி வாங்கி யின்பமாய்ச்
சீலயாழ் முனியுடன் றிருத்தென் காசிபோய்
ஞாலநா யகிதவ னனோக்க மெய்திடச்
சாலவன் புடனடந் தானென் றோதினான். (௪௬)

நாரதன் தென்காசி மான்மியங் கேட்ட

படலம் முற்றிற்று.

ஆகப்பாட்டு ௪௬.

---

௪௧. சூளை—சாபத்தை. ௪௩. வான்மலை—வெள்ளிமலை. ௪௪. அழைப்பின்—செய்தால்.

ஏழாவது நாரதன் வரம்பெறு

படலம்.

கார்வண னோங்குதென் காசி மான்மிய
மார்வண நாரதற் கருள வீதுமேற்
சீர்வண யாழிசை திறம்ப டப்பிரா
னேர்வணங் கிப்பெறு வரநி கழ்த்துவாம். (௧)

என்னனை மிசத்தவ ரின்ப மார்ந்தியா
முன்னமா தவமிக முயன்று ளோங்கொலோ
மன்னருள் சுரந்துநீர் வழங்க வென்றனர்
நன்னரார் சூதன்மே னவிற்று வானரோ. (௨)

பாவினோர் கவியினின் றெழுந்த பண்ணவன்
மேவிவர் வான்வழி விரைந்து மாசலம்
மேவினான் முகன்பதி முகுந்தன் வைகுண்டஞ்
சூலிவாழ் கைலையுந் தொழுது போந்தனன். (௩)

காசிய யோத்திமா யாவ வந்திகை
மாசிலா மதுரைது வாரை காஞ்சியிற்
காசிபா டடவெண மாயொண் ணாமையிற்
கூசினான் கண்டனன் கும்பிட் டேகினான். (௪)

காஞ்சியி னின்றிடைக் காண்சை வத்தல
வாஞ்சைசீ டொறுமன மடக்கி யார்குவ
லேஞ்சுதென் காசிபோ யிசைவ ரங்கொடிங்
காஞ்சரி கமபத நிசவ மார்த்தெனா. (௫)

ஆலவாய்ப் பரங்கிரி சுழிய லாதிவிட்
டேலரு னெல்லையுங் கடந்து யாழ்முனி
சாலநன் றூர்ந்ததென் காசிச் சண்பகக்
கோலமா மலர்ப்பொழிற் குளிரக் கண்டனன். (௬)

காலையன் றூடகக் கடன்செ யற்கெணி
லாலையன் னங்களார் மலர்த்த டத்துறை
மேலைய திற்படீஇ வெணீறிட் டேகிமான்
சோலையில் விசுவநா யகன்முன் றன்னினான். (௭)

வேறு.

முன்புகுந் தோன்றி ரண்டு மூன்றைந்தெட் டுறுப்பாற் றாழ்ந்து
மன்புகுன் றாது தண்டா காரமாப் பணிந்து மேத்தித்
துன்புகுத் துளங்க னிந்து துள்ளிநீ டலையா மோரண்றேர்ந்
தின்புகுப் பெனக்கொண் டாடி யெடுத்தனன் மலர்க்கை யாழே.

தழுவிமா டகமு றுக்கித் தடவிணை கிளைப கைநட் [தார்த்
பெழுநரம் புகளைத் தேர்ந்தாங் கெழுதன்மாத் திரையு மோர்ந்
தொழுகதா வயர்ந்தி ழிந்தின் றெனைசையா ராய்தன் முன்னு
விழுமுதற் றொழில்க ளாற்றி வீணைமீட் டினன்பாண் செய்வான் ()

காருளி மதுரந் தாரங் கணக்கமைந் தேழ்சு ரப்பால்
வாருதேன் கிழமெய் யேலம் வாழையா துளப்ப ழம்போன்
றாருமின் னிசைப்பாண் கேட்டெம் மம்மையா முலகா ளோடும்
பாருறு மிசைக்கா டும்பாப் பணிப்பான் விடைமேல் வந்தான். (௰)

இன்னிசை பாடு மன்ப வினிதுவா ழியவு னக்கிங்
கென்னது வேண்டுங் கேட்டி யெனத்திரு வாய்மலர்ந்தா
னன்னதோர்ந் துளவி லின்பார்ந் தாகா வரமென் றாடி
யென்னையா ளம்மை யப்பா விலங்குதென் காசி நாதா, (௰௧)

வாமமா ரம்மை யோடான் மிசைமகிழ்ந் திவரெங் கோனே
கோமகார் வேண்டி யேதங் கொடுப்பதில் லாவ ழக்கா
ஆயையாழ் குழதொண் டைக்கு மாந்தரு திருமுன் றந்து
மாமணு ளன்கோ டுஞ்சொல் வலியழித் தடறந் தாயால். (௰௨)

மாயவ னறிந்து ரைத்த வாய்மையுங் கண்டேன் மேனி
நேயவா ழியவென் றீந்த நிறைமொழி சிறப்பாப் பெற்றேன்
றாயனு யினன்வே றேரேன் றென்றிமேற் றாற்கு முண்டே
னயனல் கியதென் றேற்று மயப்பமென் றேத்து வானல். (௰௩)

வேறு.

செஞ்சு டர்க்குளே சிவஞ்சு டர்ந்தவா
நஞ்சு டற்றுநா ணைவெயா ழித்தவா
வெஞ்சு டங்கின்முப் புரமெ ரித்தவா
வஞ்சு டம்புயிர்க் காத ரத்தவா. (௰௪)

அடிமு டிக்கள வறியொண் ணாதவா
படியன் பர்க்கெளி தாய பண்ணவா
மிடிய றுத்தருள் வெணீற்று மெய்யவா
கொடிய ணைந்தபாற் கொண்ம ணத்தவா. (௰௫)

வேறு.

சோதி யானசொ ரூபவி யாபக
மாதி யானம னேகா பாபல
நீதி யானிறை நின்மல நிட்கள
வேதி யாவா வெள்விடை யாய்நமோ. (௰௬)

கால காலக பாலகங் காதர
பால லோசன பத்தச னப்ரிய
நீல கண்டநி ராமய நிர்த்தன
சூல பாணிசு போதநம் பாநமோ. (௰௭)

எண்ணி வந்தநி சக்குமுன் னீந்தவ
பண்ணி னேழிசைப் பாகமு ணர்ந்தவ
நண்ணி வாழிய வென்றந லத்தவ
கண்ணி னிப்புறுங் காட்சிதந் தாய்நமோ. (௰௮)

கங்க ராவிடை யாழ்கயங் காத்தவ
வெங்க ராசல வீத்துரி போர்த்தவ
வங்க ராமடை யார்க்கறி வார்ப்பவ
சங்க ராவா சம்புசி வாநமோ. (௰௯)

ஏல மார்குழ லெம்முல் கம்மைகண்
ணீல மாமலர் நித்தம லர்ந்தவிங்
கால மார்களத் தப்ப வெனக்கருள்
கோல மிவ்விடைக் கொண்டமர் வாய்நமோ. (௨௰)

ஆசித் தெய்துநர் வேண்டுமுன் னுவுணர்ந்
தேசித் தக்களி செய்பவ பாடிடி
னேசித் தான்மிசை நீடுல காளோடும்
பேசித் தான்வரு பிஞ்ஞக னேநமோ. (௨௧)

ஆத்தி சூடிநன் றாருள் கூருனை
யேத்திப் பூசைபண் ணற்கருள் செய்தெனைக்
காத்தி யென்றிரு கைதலை கூப்பினான்
றோத்தி ரஞ்செவிக் கொண்டிறை சொல்லுவான். ()

கொத்த லர்ந்துகு ளிர்பொழில் சூழ்ந்தொளிர்
முத்த கப்புமு ழங்குநன் னீர்க்கிளர்
சித்தி ராநதித் தீர்த்தம தாடிநீ
பத்தி யால்வழி பாடுசெய் யென்றரோ. (௨௩)

தொன்று தும்புரு வோடுதொ டர்ந்தெனக்
கென்று மின்னிசை பாடியின் பாக்குவா
னென்று மன்பினொ ரீஇச்சிறு தேவரை
நன்று பாடிந யந்தனை யாகலின். (௨௪)

அழுக்கு றுத்தரி மித்திர னுடினன்
வழுக்கு ரைத்தனன் மாலது தீர்த்தரு
ளொழுக்கு றுந்தடத் துள்ளது வண்மைமேற்
பழுக்கு ளன்பொடு பாடிநன் ருர்ந்தனை. (௨௫)

மூத்த லத்துமு யன்றநல் லூழ்ப்பய
னத்த னென்றிரு முன்வரி னுர்ந்திடுங்
கத்தி ருத்துவ மோங்குதென் காசியா
மித்த லத்தினெய் தாதநன் றில்லையால். (௨௬)

வேண்டு நல்வரம் வேண்டிடு முன்றரு
மாண்ட கையெனை யன்பொடு பாடினை
பாண்ட நல்வர் முற்று வழங்கினே
னீண்டு வாழ்கென்றி லிங்கத்து ளாயினன். (௨௭)

வேறு.

கங்கையஞ் சடையுந் திங்கட் கதிருட னரவி ருப்புங்
கொங்கையார் களப நாறுங் கோமளை பங்கின் வைப்புஞ்
சங்கையொத் தியல்வெள் ளான்மேற் சார்தலு மாவந் தெம்மான்
செங்கையாழ் முனிக்கு நல்குந் திறவர மேற்ற மாமால். (௨௮)

ஈசநிக் கிலங்தும் பொய்கை யினிலொரு காலே மூழ்கி
நேசமா விசுவ நாத நிமலனிக் கம்ப ணிந்து
மாசறு கீதம் பாடி வரம்பெரி தாகப் பெற்று
வீசருஞ் சீர்த்தி யாழோன் மேல்வனஞ் சூழ்வ தானன். (௨௯)

முறுக்குடைந் தெழிற்றே னூற்று முருகவிழ் சண்ப கத்தை
வெறுக்குமா விருப்பி யாட மேற்கொடி படர்ந்த தோற்றம் [ர்ந்
பொறுக்குமா வெனச்சி றுத்துப் பொறைகடாங் கிடைச்சி பாற்சே
திறக்குமெம் பிரானே போன்ற தெண்ணிலா தனகண் டானல். ()

ஏத்தனை யருட்க ணேச விறையையா மருது கந்த
சாத்தனை வடகீழ் பால்வா ழரசரு ணங்கை தன்னை
மாத்தழை வராகி காரா யணிமகே சுவரி காளி
காத்தளிந் திராணி வாணி கௌமரி யெழுவர்க் கண்டான். (௩௧)

பவுரிகொண் டிடுசிற் றுற்று வீரியைப் பதும வாவிக்
கவுரியைக் கருணை பூத்த நெடுங்கயத் தையன் றனை
செவுரியைப் போர்த்த கோனைத் திருநதிப் புறத்தின மேவுஞ்
சவுரியைப் பிறதெய் வங்க டாழ்தலைச் சிறப்பாக் கண்டான். (௩௨)

கண்டுநன் முகம லர்ந்திக் கமழ்தரு செண்ப கக்கா
மண்டுதிக் கெல்லாஞ் சூழ்காற் சேடனுர் மணிகொள் சென்னி
விண்டுமுன் மேரு வைச்சூழ் மிளிர்ந்தது போலச் சுற்றிக்
கொண்டுயர் மாந்தொ றும்பூங் கொடிமல ருடுக்கள் போலும். ()

வேறு.

திகைத்த சிந்தையுந் தெளிவுறத் தென்றிவந் துலாவல்
குகைத்த டங்கரை யிகலுமாக் குழீஇமகிழ்ந் திருத்தல்
பகைத்த லின்றிமஞ் ஞைபினொடு பச்சோந்தி பயிறல்
முகைத்த லர்ந்தபூக் களிற்பல வண்டுகண் மொய்த்தல். (௩௪)

பலசத் தோப்பிடைத் தமரத்துங் கொழுமிச்சும் படர்தல்
குலச மன்பெறு மெலுமிச்சு நாரத்துங் குழைத்தல்
கலச மாதுமா துளத்தொடு பப்பளி கலத்தல்
சலச மேற்றுகள் பெய்முண்ட சுங்கரை தழைத்தல். (௩௫)

கனியு மாம்பழ முதிர்கையி னுடைபலாக் கவிழ்தே
னனியு றுங்கத லியின்கனித் தேறலு நதியிற்
றனியு றழ்ந்தெழீஇ மலர்நற வளாமபல தடம்பாய்ந்
தினியு ளைத்திவர் பெருக்குகள் சித்திரை யெய்தல். (௩௬)

வண்டு பண்மிழற் றிடமயி லாடவா னரங்கை
கொண்டு மாவருக் கைப்பழ மத்தளங் கொட்ட
கண்டு பூங்குழ லிசைக்குயின் முறையொத்துக் காட்ட
வுண்டு நட்டுவ னெனக்கிளி தலையசைத் துவத்தல். (௩௭)

வேறு.

சாகையு பதினுயர் தருவின் மந்திகள்
போகையுங் குயில்புருப் பூவை வேறுவே
ருகையுந் தொழுவரு மமரர் போற்றிசெய்
வாகையு முனிவரர் வசிக்கை யும்பெறல். (௩௮)

வேறு.

சித்தி வன்மையார் சித்தகோ டிகள்பன்ன சாலை
நித்தி யத்தவ ருறைவிட முத்தர்க ணிலயம்
பத்தி பத்தியா லயங்களிவ் வளவெலாம் பார்த்துப்
புத்தி யாழ்முனி சித்திரைத் துறைக்கணே புகுந்தான். (௫௯)

வேறு.

விடுங்கணை போலவான் மீது வெண்ணிலா
வடுங்கழை நிழறரு மருகிற் றூமலர
யொடுங்கமழ் குவளைசே தாம்ப லோங்கிவாழ்
நெடுங்கயச் சார்பிலே நீடி வந்தனன். (௬௰)

பாலையிற் செய்கடன் வயக்க வாற்றினன்
சோலையங் குழலுமை தொடிக்கைப் பற்றியோ
ஞாலையந் தன்லமர்ந் தன்றி ராகழி
காலையி னாத தீர்த்தங் கண்டனன். (௬௧)

ஆசையொ டாடின னருச்சை காமொடா று
மீசனுக காற்றியங் கிருந்து ளானிசைத்
தேசிகன் கௌசிகற் றேற வென்றனன்
மாசிலை மிசத்தவர் மகிழச் சூதனே. (௬௨)

நாரதன் வரம்பெறு படலம் முற்றிற்று.

ஆகப்பாட்டு ௩ளஎ.

எட்டாவது நாரதன் பூசித்துக்
கவுசிகனுபதேசம் பெற்ற படலம்.

அருந்தவ யாழ்முனி யரியின் சாபநீக்
கிருந்தடம் படிந்துதென் காசி யெம்பிரான்
தருந்தனி வரம்பெற விதசி வார்ச்சையுந்
திருந்தருட் கௌசிகன் றேற்று மோதுவாம். (௧)

நைமிசத் தந்தனீர் கம்ப ஞானையிற்
கைமிகு மன்பினாற் சித்தி னைக்கனை
செய்மிழற் றியாழவன் றேர்ந்த வோர்துறை
யைமினத் தோய்ந்தனுட் டான மாற்றினான். (௨)

ஆந்தரம் பாகிய மாமி ரண்டனுண்
மாந்தருக் காந்தர மான பாவனை
மாந்தரி னியோகியின் வாய்மைக் காட்சிகொ
ளாந்தா பூசைசெய் வான மர்ந்தனன். (௩)

வேறு.

இன்பொடைஞ் சுத்தி யாற்றி யிதையநற் கமலத் திங்க
ணன்பொடு மனோபா வததா லமைத்தமா மாலை யின்மேன்
மன்பொலி தவிசி னும்பர் வளர்விளக் கொளிபோன் மேனிப்
பொன்பொது விசுவ நாதற் போற்றியுட் கருதி னானால். (௪)

எண்ணியே யழைத்தா வாகித் தெழுந்தருள் வான்றா பித்தீண்
டண்ணிய சந்நி தான மடைந்துநல் ளுத்த டுத்தல்
பண்ணிடுஞ் சந்நி ரோதம் பயின்றமுத் திரையாற் செய்தே
புண்ணிய விசுவ நாதற் பூசனை செய்வான் மன்னோ. (௫)

மானத சுத்தி யாநன் மலரிட்டுப் பொறுமை யாய
நானநீர்ப் பாத்தி யாதி நல்கிநன் னிலைகொள் புததி
யானகுங் குமங்கற் பூரஞ் சந்தமுன் னனைத்தும் பூசி
யீனமின் மனத்தா பக்கா லெரியுயிர்ப் பகப்பு கைத்தே. (௬)

சத்திதீ பங்கள் காட்டித் தகையகந் தாதி யைந்தும்
புத்தியிற் றிருத்தி செய்யும் போக்கியப் பொருளா நல்கி
யத்திசார் மண்முன் னைந்து மநாதிபோச் சியமாக் கண்டு
பத்தியூண் குடிமுற் றும்முன் பருகுவத் தாகத் தேர்ந்தே. (௭)

ஆடிமுன் னெலாப்வி ளக்கு மவைகளாம் விசிறி யாதி
சூடியல் சிரம நீக்கும் பொருள்களாத் தோத்தி ராதி
யீடில்கேள் விகளாப் பாவித் தினித்தகத் தாற்பூ சித்தே
நாடியுள் ளியற்றி யாங்கு நாபிகுண் டத்தீ வேட்பான். (௮)

மீண்டுமா னதயோ கத்தால் விதியினு லாக னாதி
நீண்டகுண் டத்த மைத்த சிவாக்கினி யினுமெய் மானோ
யாண்டுளே பூசித் தாற்போ லருச்சித்து விந்துத் தானங்
காண்டொரு கமிழ்த நெய்யைக் கனிந்திடச் சொரிவத் தாலே. (௯)

முகந்துமா குதிநூற் றெட்டு முடித்துமே னடுச்சி ருக்கா
லுகந்துமா குதிபூ ரித்தன் புடன்சிவன் பாற்பொ றுக்க
வகந்துமித் தாந்து பெற்றுற் றருச்சனைப் பயனைப் பிதத்தே
பகந்துணை யப்ப டாத்து வாதசாந் தப்ப திந்தான். (௰)

---

௬. எண்மலர்—கொல்லாமை, ஐம்பொறியடக்கம், பொறுமை, அருள், அறிவு, தவம், வாய்மை, நல்ல நினைவு என்னும் எட்டு மலர்கள்.
௭. போக்கியம்—அனுபவிக்கப்படும் பொருள். போச்சியம்—போஜ்ஜியம். அது அன்னாதிகள். (நைவேத்தியாதிகள்.)

அங்கிலை மூல மாதி துவாதசாந் தாந்த மட்டுஞ்
சின்னிலை யேகா கார சிவத்தியா னச்ச மாதி
யிங்நிலை யிதையப் பூவி னிலஞ்சிகுண் டத்தீ யின்க
ணன்னிலை பவாய்ப்பூ சித்து நயச்சமா தியின்வாழ் சீரே. (௰௧)

இங்கணம் புருவ மத்தி யிற்சரற் காலந் தோன்றுந்
திங்களி லொளிரி லிங்கந் தெரிந்தெணிப் பிராண னுள்ள
மங்கடைந் தொடுங்கு யோகி யானவன் றன்ம யத்தாய்ப்
பொங்கக முனையா தாக்கிப் பொலிசிதா னந்தந் துய்ப்பான். (௰௨)

வேறு.

இத்தகைச் சிவவழி பாடி யற்றிய
பத்தரி யாழ்முனி பதிவி னின்றெழீஇ
யத்தனெம் விசுவநா யகன்ற னாலய
சித்தனைத் தெரிசனை செயமுன் வந்தனன். (௰௩)

கண்டனன் பணிந்தனன் கனிந்தி யாழ்கரங்
கொண்டனன் பாடினன் கோதை பாகனார்
விண்டனர் நாரத விளங்கு கூகையோன்
றுண்டதை மானசோத் தாஞ்சென் றேர்கென. (௰௪)

கேள்வியின் விழுச நீரி கேட்கவே
யாள்வினை கொண்டிறை யானை யாதிரு
தோள்விமித் தேனுவின் சுதையொ டைந்தரு
வேள்விடு தேன்சுதை விராயு னின்பனாய். (௰௫)

வேறு.

ஈச திக்கினி லெய்தின னங்ஙனே
வாச சத்திக ளோழ்வரும் வாவியிற்
றாச மூக்கறத் தோய்த்தனர் மூழ்கினர்
வீச மஞ்சள்வி ளங்குமெய் பூசினர். (௰௬)

காரி னுன்றக ருங்குழற் கன்னிமார்
போரி னுண்மலர் போனெடுங் கண்கயற்
சீரி னுடிய தாமரைத் தெண்டட்
நீரி னுடினர் நீள்கரை யேறினர். (௰௭)

காத்தி ரத்துடை கட்டினர் பாற்றியே
மாத்தி ரத்திரு நீறுவ னைந்தனர்
சாத்தி ரத்தசெந் தாளுநுதல் சாத்தின
ரேத்தி ரத்தினக் கச்சிறுக் குற்றனர். (௰௮)

௰௮. காத்திரம்—உடம்பு. மாத்திரம்—பெருவலி.

பரிய வாய்க்கொய்து டுத்தபட் டாடைமே
லரிய மேகலை யார்த்தனர் பொற்றொடி
யுரிய பீலிகா லாளியொண் மோதிரம்
பெரிய பாடகந் தண்டைபி றங்கவே. (௰௯)

சிலம்பு பாதச ரங்கள்சில் லென்றிட
வலம்பு ரிக்களன் வாழ்யணிப் பல்பணி
நலம்பு ரிந்தொளி நாற்றிசை வீசிடப்
புலம்பு னார்முகப் பூண்பல மின்னவே. (௨௰)

முருகு நாண்மலர் மொய்குழ லுக்ககிற்
றருகு ணப்புகை யூட்டினர் தண்ணருள்
பெருகு கன்னியர் பேணுநன் மக்களைக்
கருகு ருவழிக் காக்கவி ருந்தனர். (௨௧)

வேறு.

காலையிற் செய்கட னாற்றிபெங் கண்ணுதன்
மேலையி யம்புவி திப்படி கூகையைச்
சோலையிற் காணவ ருந்தவன் றாயவிம்
மாலையி ருங்குழன் மாதரைக் கண்டனன். (௨௨)

முனிதனி யேவா முண்டகப் பொய்கைமாட்
டினிதமர் கன்னிமா ரியாழ்வல னென்றின்பாய்ப்
புனிதவிங் கமர்கெனப் போற்றின னமமைமீர்
மனிதா ரீண்டுநீர் வதிவதென் னென்றனன். (௨௩)

வேறு.

கச்சி ரத்தது தின்மணி காலவே
மெச்சி ரத்தக பாலம்பி நாகவின்
முச்சி ரத்தவிர் சூலியெம் முக்கண்ணி
வச்சி ரத்தம யேசைநல் லம்மையே. (௨௪)

ஆட கத்தம்பு யத்திரு வத்தமேற்
சூட கத்தள் சுதரிச னத்தினுள்
வாட கத்தவர் வன்றுயர் தீர்ப்பவள்
பாட கப்பதப் பத்தினி நாரணி. (௨௫)

௰௯. மேகலை—எழுகோவை மணி. ௨௰. முகப்பூண்—தலையணிமுத்தம். ௨௫. சுதரிசனம்—சக்கரம்.

நிலவு கோடிநி ரந்தரித் தாலன
வுலவு மேனியொ ளிர்புத்த கக்கரம்
நலவு ரைச்சுவை நல்குநல் வாக்கருள்
குலவு கண்மணி ராமியாங் கோமளே. (௨௬)

இரும்பு போனுவன் னெஞ்சருள் ளஞ்சவும்
சுரும்பு போலடி சூழ்ந்தன்பா பற்றவும்
கரும்பு பாசாங்கு சஞ்சத்தி கைக்கொடு
வரும்பு கல்சின மல்குமெள் மாரியே. (௨௭)

சீய மேறிடு செவ்வியள் பல்வகை
மாய மேவிய பேய்வாக னத்தினன்
நேய முக்கண்ணி நீவிகெ டுஞ்சூலி
காய தாருகற் செற்றநக் காளியே. (௨௮)

முரிக்கு நீள்புரு வச்சிலை மொய்கணை
லெரிக்குந் தீயெழி னேயிக லாருட
லுரிக்குந் தோல்கொழுப் பூடறுத் தூர்ச்சிதம்
விரிக்கு நாஞ்சிலண மீறுவ ராகியே. (௨௯)

கற்ப கங்காம தேனுசிந் தாமணி
பற்ப கட்புல மெய்தல்ப வித்தெழில்
வெற்ப கச்சிறை வீட்டிடு வச்சிரம்
பொற்ப ணிக்கைப்பு லோமசைப் பூவையே. (௩௰)

ஏறு புள்ளர சன்னமெ ழின்மயின்
மீறு பெயரி வேழமே ழின்முறை
சாறு கொண்டிவண் டங்குந பேழ்வரும்
வேறு ளாரிரு மிகணீ ராரவர். (௩௧)

மோக னத்திர முண்டகக் கையினள்
பாக னண்மொழி பண்ணுசெவ் வாயினள்
சோக னாதஞ் சூழ்ந்திகல் சாய்ப்பவாழ்ந்
தாக னடிநல் காயசித்தி ராங்கையே. (௩௨)

பதத்தி னென்றுபற் பத்தலை யூன்றியொன்
றிதத்தி னேமடித் திட்டுமுட் டிற்கைசேர்
விதத்தி னுசிவி ளிப்புகண் மேன்மாண்
சிதத்தி னார்மணி கன்னிகைத் தேவியே. (௩௩)

---

௨௭. சத்தி—வேல். புகல்—அடைக்தாருக்குப் பற்றக்கோடானமொழியும். சினம்—அடையாருக்குச் சிற்ற மொழியும். ௩௧. நீரார்—தீர்த்தமாதர். ௩௨. பாகன்—புதன். சோகு—பிசாசம். அனுதாம்—எப்பொழுதும். ஆகல்—ஆகுதலை. ஆய்—அம்மை.

ஆய கன்னிய ரேழிரு நீரணங்
கேய வொன்பது சத்திக ளாயியாம்
நேய மாயுல கம்மையி னீடருட்
சாய லாற்றிவ ணணையிற் றங்கினோம். (௩௪)

தவத்தை நாடிய மாதவர் சைவனுஞ்
சிவத்தை யர்ச்சனை செய்யவ ருந்தவர்
பவத்தை யஞ்சித்து றந்தவர் பற்றுறி
னவத்தை நீத்தவர்க் காக்கவ மர்ந்துளோம். (௩௫)

ஈச தீர்த்தமி தன்கண்கு ளிப்பவர்
வாச நீறிடு மானவ ராய்விசு
வேச ரன்பாய் மேவின வர்க்கியாம்
பாசந் தீர்த்துநற் பாக்கிய நல்குவோம். (௩௬)

கோவ தைத்துனு மூணருங் கோக்களிற்
சாவ தைத்தின்சண் டாளரு நீறுவர்த்
தூவ தைக்கொளு டம்பா ழுன்கடே
வாவ தைப்பரு மாடின்வ ருந்துவார். (௩௭)

தீயர் தீண்டினத் தீயரை வாட்டுமித்
தூய தீர்த்தநாந் தோயுநன் னீரிதிற்
பாய சீர்விசு வேசான் பார்தினந்
தோய னாமவர்த் துன்பறுத் தாளுவோம். (௩௮)

தருமம் வேண்டினர் சந்ததி வேண்டினர்
திரும ணஞ்செய வேண்டினர் செய்தகு
கருமம் வேண்டினர் காசுபொன் வேண்டினர்
பெரும கார்க்கனை போற்றந்து பேணுவோம். (௩௯)

எழுது சித்திர கூடத்து மேழ்புவி
முழுது மோடிமு ழக்குடன் மீளுவோம்
பொழுது திக்குமுன் பூம்புன லாடியோர்
பழுது றுதிவண் பார்க்குந மென்றனர். (௪௰)

கன்ன வின்வரி கற்றுயர் நாரத
னென்ன விந்தநன் னீர்படிந் தென்னுடை
யின்ன றீர்ந்ததெம் மீசனைப் பாடியா
னன்ன செய்தநீர் நல்கரு ளென்றனன். (௪௧)

தேவ ருக்குவப் பாக்குமைத் திதெனே
யேவ ருத்திய தென்னவி ஞயினர்
பாவ ருக்கம வாஞ்சுரர் பாற்புகுந்
தேவ ருக்குமின் பாவிசை பாடினேன். (௪௨)

இசையி லாச்சொலி ழுக்கற வின்புறத்
திசையி னேழ்வருந் தேவரு மூவரு
நசையின் விழுக லந்திளைத் தோங்கரி
வசையின் மாலென வாழ்த்தினன் வேந்தனே. (௪௩)

பாடி னேன்சவை பாட்டிசை கேட்டுகந்
தாடி சைமிக வாங்கழுக் காறுகூர்ந்
தோடி யேயரி மித்திர ஞெறுகோ
ளீடின் மால்வினை யிட்டதோர் சூளலால். (௪௪)

திருத்தி யாமொடு கண்டமுஞ் சீர்கெடக்
கருத்தி ஞன்கலன் றேகவுங் கார்வண
னிருந்தி யோங்குதென் காசியி னேற்றமெற்
கருத்தி யிங்கணுய்த் தான்வர லாயினேன். (௪௫)

வந்திவ் வீசம லர்த்தட மூழ்கினேன்
சிந்தி மாய்ந்ததத் தீயவெஞ் சாபமே
முந்தி சைத்திறன் முற்றுநி ரம்பலா
னந்தி தாள்பராய் நல்வரம் பெற்றனன். (௪௬)

வால லத்துமுன் வாய்த்ததுங் காட்சியென்
றால லத்தொரு கூகையிற் குள்ளதாய்ப்
பால லத்தன்ப கர்ந்தநின் மானசோத்
தால லத்தடை தற்கெழல் சாற்றினான். (௪௭)

ஓது கௌசிகற் றேடியு மூல்கலே
யீது வேலையி லிங்கவ னெய்துவன்
போது மாய்த்தெனப் பூங்குழற் கன்னிமார்
சாது வாமவர் வந்திழிந் தார்தடம். (௪௮)

ஓறுக்கு முண்டிய னுற்றுள கூகையாய்
முறுக்கு டைந்தம லர்த்தட மூழ்கினான்
பொறுக்கு வன்சிறைப் புள்ளுரு நீங்கியே
யிறுக்கு லெங்கதி ரேய்மெய்த்தோண் டேறினான். (௪௯)

மாத வத்திரு மேனிவ யங்கவன்
காத ணிந்தகு ழைகவின் வீசவே
பாத மூட்டிதுண் மாறல்ப யின்றுகன்
ருத ரத்தொட மர்ந்தன ளுதனம். (௫௰)

கூறி டுங்குநிங் கால்குதங் கோசக்கீழ்
மாறி டக்குடங் கைவளர் சானுவி
ஞறி டவ்விழி நாசிநு னிப்பட
வாறி யங்கண யர்ந்தன னிட்டையே. (௫௧)

முக்கு ணம்புல னைந்துமு ணக்கியே
யெக்க டிக்காலெ ழுப்பியி ரண்டடைத்
தக்க ஞேர்வழி யைத்திறந் தாடொலி
பக்க லாயைந்தெ ழுத்தொர்ப ரற்பராய். (௫௨)

சோதி யுள்ளுறை மேகஞ்சு மூல்வபோ
லாதி யெண்டிசை போயடங் காதகால்
வீதி யுட்புக மின்னொளி கோடிநே
ரோதி யுன்மனு நீதமு கந்துறீஇ. (௫௩)

சிற்ப ரானந்த வாரிதி ளைத்திதப்
பொற்ப ராயவர் கூகையிற் போதலே
நிற்ப ராயினன் கௌசிக நிற்கென
முற்ப ராவிசை மாமுனி வந்தனன். (௫௪)

வருக வென்றனர் கௌசிகர் மாகலம்
பெருக நென்னனீ சண்பகம் பெய்மலர்
முருக தாடுல கம்மைமு திர்பண
மருக லாத்திரு முன்னிசை யாடினே. (௫௫)

போதி னப்பிழி தேனொடாண் புண்ணுகர்ந்
தூதி னத்தொடெ ழுந்துநல் லார்தொடைத்
தாதி னங்களிற் றூழ்ந்தும ணந்துறீஇத்
தீதி னட்புறச் செய்தவ் வின்னிசை. (௫௬)

௫௨. முணக்கி—அடக்கி. எக்கடிக்கால்—எறவல்ல மூலவாயுவை. ௫௫. முருகதாடு—தேனுகின்ற. மணமருகலாத்திருமுன்—நித்திய கலியாண சந்நிதியில். ௫௬. வதினம்-ஆராவாரக்கூட்டம். தாதினம்—பூவிதழ்க்குழாம்.

கோது நீக்கெனை யுங்குளிர் வித்தநின்,
போது புட்களு மூர்வவு மாககளு
மேதுந் தன்வய மற்றிசை யார்ந்தன
நீது லக்கநி நீஇயினை வாழ்கென. (௫௭)

தவத்தி னேங்குகோட் டானுருத் தாங்கிமேற்
சிவத்தி னுற்றின மேனிகொள் கௌசிகன்
அவத்தி னீண்டுநீ துன்னலென் னென்றனன்
நவத்தி யாழ்முனி நன்றாகந் தோதுவான். (௫௮)

பொறுமை யாசரி மித்திரன் போந்துமாற்
கறுமை யாக்கின னன்னவன் சாபமொன்
றுறுமை செய்தியா மோசைகெ டுப்பினும்
மறுமை யாலவன் மாட்டடைந் தேற்றனன். (௫௯)

இத்தென் காசியி னேற்றமு ரைத்தனன்
றெத்தெ னுவனுந் தோய்ந்தல கம்மைபா
லொத்தெ னுளுமு றும்பர மேசனை
நத்தெ னக்கவ னல்வர மீந்தனன். (௬௰)

இன்றுன் பாலெனை யேகநல் காணையா
னன்றுன் சேவைந யந்துவந் தேனென
வொன்று ளன்பொடு னக்கரு ளெம்பிரான்
மன்று வெல்லுரன் வாக்குத வென்றனன். (௬௧)

ஓதி னுன்மறை யுட்டெரி குத்திரச்
சூதி னுற்சொலுஞ் சாபந்தொ லைத்திடு
வாதி னுவறுத் தோட்டிடு வாகையாங்
காதி னுடுவேங் கற்கென நல்கினன். (௬௨)

மந்தி ரத்துயிர் மாணிக்க மீதொனுர்
தந்தி ரத்தைநொ றுக்கிடுஞ் சங்கரன்
சிந்தி ரத்திந சீவனெ னத்தரு
வெந்தி ரத்தது மேலதென் றோதினன். (௬௩)

வேறு.

பெரியவர் வாக்கதே பிசகி லாமறை
பெரியவர் வாக்கதே பிழையி லாகமம்
பெரியவர் வாக்கதே பெருங்க லாதிகள்
பெரியவர் வாக்கதே பிறங்கு மந்திரம். (௬௪)

௫௮ சவம்—செல்வம்.

விரியலா ழியைவளி மிக்க கத்திய
னுரியவா யுண்டுமிழ்ந் தாரமு ணர்த்தலெற்
கரியவே னும்மருந் தவமு னுற்றிவாழ்
பெரியவர்க் கண்டயான் பெறுத தென்னையே. (௬௫)

கண்ணினுற் பெரியவர்க் காண்ட லும்முயர்
பண்ணினுற் சிவன்புகழ் பாட லுஞ்சிவ
மெண்ணினு னுந்தவ மியற்ற லுந்தரு
மண்ணினுர் பயனெலா மெனுமெய் வாய்த்ததால். (௬௬)

தாழ்ச்சியோட் டியவருட் டாமோ நின்முகக்
காட்சியோ வெற்றியே காணு ரங்கொளு
மீட்சியோ தலம்புனல் விசுவ நாதர்மும்
மாட்சியோ வுறைதவர் மாண்பொ பேச்சுவேன். (௬௭)

நவையிலாக் கவுசிக னயமுன் னர்ப்பாய்க்
கவையிலா நாரதன் கானம் பாடினன்
சுவையிலாழ் கௌசிகன் றன்மை யிற்பெரி
தவையிலாம் பேறென வறைந்தின் பார்ந்தனன். (௬௮)

அரனரு ளேக்கமா டரிய மந்திரத்
திரனருள் கௌசிகற் சேரக் கூறலவ்
வரனருள் வானருள் வழங்கன் முற்றுமேபோர்க்
தரனருள் பதிமுனி விடைகொண் டேர்ந்தனன். (௬௯)

நாடொறும் பூசனை நயந்தங் கேழுநாள்
பாடொலி நாரதை பகரி ராமசீர்
பீடொளி ரைந்தகப் பெருந்தி ருத்தமு
மாடொருப் பாட்டமர்ந் தான்பின் சென்றனன். (௭௰)

சைவமா தலந்தொறுஞ் சைவ னுஞ்சிவன்
றெய்வமென் றறிமுனி தெரிசித் தேத்தியே
மெய்வா மார்ந்தான் விண்டு வேதனூர்
மைவரை வேந்தனூர் வாழ்வ னென்றனன். (௭௧)

நாரதன் பூசித்துக் கவுசிகனுபதேசம் பெற்ற படலம் முற்றிற்று.

ஆகப்பாட்டு ௫௭௮.

ஒன்பதாவது புரந்தான்

மலையின் சிறகரி திறல்பெற்ற படலம்.

ஆத சந்தனக் காவன பிறர்க்குமா வனமோன
மாத ரம்பெறு கௌசிக னறிமறை தாக்கவ
காத ரன்புகாந் தியாழ்முனி பெறவிது காரி
பூத ரத்திற கரிதிறல் பெறலினிப் புகல்வாம். (௧)

நல்ல காதைகேட் டென்றுநாட் போக்குநை மிசத்தோ
ரல்ல றீர்தா லெங்களுக் கிறைகதை யமிழ்தஞ்
செல்ல நற்செவி வழியருத் திடவருள் சிறந்தோய்
சொல்ல வேண்டுந மென்னமேற் சொல்லுவான் சூதன். (௨)

அத்தி ரத்தவா யிறகவாய் மலையெலா மகிலத்
தெத்தி ரத்தரும் கடப்பரு மிடர்ப்பட வெழுந்து
மைத்தி ரத்தமா லையுமதி யமுழுதை யத்து
முத்தி ரத்தகா லமுமழி வாற்றுதன் முயன்ற. (௩)

வேறு.

சிறையடித் தெழுதலிற் சீறு காற்றினாற்
குறையலூர்க் குடியெலாங் குழீஇச்சி தர்ந்திடும்
பொறையவண் கோபுரம் புரியன் மாளிகை
மறையவர் திருந்துமின் வானெ ழும்புமே. (௪)

அவனியெண் டிசையினு மந்த ரத்தினுங்
கவனிரப் பிரிகள் கறங்கு காற்றினாற்
சிவனிய மத்தவர் குகையுந் தேளத்துவர்
றுவனிலை பையுமொரீஇ றுழைவர் சோலையே. (௫)

அடங்கலும் பறந்துபோ யலைக்க ழித்திடத்
தொடங்கலைக் கண்டுளந் துடிக்கு வேந்தெலாந்
திடங்கழித் தெழுந்துவச் சிரப்ப டைக்கையா
னிடங்கலந் தொருவழி யியற்றப் போந்தனர். (௬)

கூடிய வாசரின் வரவைக் கோபதி
நீடிய மகிழ்வுள னிறைவொ டேற்றழைத்
தாடிய முகமனோ டவர்வ ருந்திற
னாடிய ளாயினு னவிற்றி னானரோ. (௭)

க. பூதரத்து—மலைகளின். ங. அத்திரத்தவாய்—நிலையில்லாதனவாகி.
௫. கிரிகள்—மலைகள்.

சந்திரன் மறுவகன் றனையுந் தன்மைபோன்
மந்திரத் தலைவரு மன்ன ரேவரும்
புந்திர மணியமே பொருந்தத் தாணியி
னிந்திர னிருந்துளத் தென்னா லாயினான். (௮)

சங்கிவர் பதுமமைமந் தருக்க ளார்பொழில்
பொங்கிவன் டுணுமதுப் பொழியுந் தொங்கலா
னிங்கிதத் தொருவழி யெண்ணிக கனைடதுவ
கங்கிலன் பார்ந்தளந் [illegible]வான். (௯)

குருதியி னொளிபடி குலிச பாணியான்
பருதியிற் பகையிருள் பாற்று வேனெனக்
கருதியிங் கடைந்தனங் கவலை தீர்த்திடத்
திருதியிப் பொழுதியான் செய்வ லஞ்சலீர். (௰)

வேறு

வெற்பெலா மிறகு பெற்ற வீறுகொண் டியிர்க்கி ரக்க
மற்பழு மின்றி யங்கோ வலைக்கழி வாற்று நின்ற
சிற்பா னுறைதென் காசிச் சிவனரு ளிறக ரிந்தாற்
கற்பமட் டினுமச் சின்றாங் கட்டளை யதற்கு வேண்டும். (௰௧)

நாளையா மங்குச் சென்று நாயகன் விசுவ நாதன்
றாளையா ராதித் தன்னோன் றன்னிடை யுணர்த்தி யுள்ளக்
கோளையாய்ந் துலகுய் தற்குக் கூறுநள் வடிவன் மேற்றுஞ்
சூளையான் கொடுவந் தன்னை துணித்திற கொழிப்பே னென்றான்.

புரந்தா னுரைத்தல் கேட்டுப் போங்குகப் பார்ந்த வேந்தர்
தரந்தரம் புகழ்ந்தி ருந்தார் சபை[illegible]தி தனைம இத்தோர்க்
குரந்தர முறைவைந் தருஞ்ழ்க் குதேன் மலர்மை பெய்யும்
பரந்தசீர் வசந்த மண்ட பத்திலுக் கழைத்துச் சென்றான். (௰௩)

எண்ணின ரிடுக்கண் டீர்ப்பா னீரைஞ்ஞா றுடைய கண்க
ணண்ணின வருளும் பாங்கி னன்மருப் புவாவாழ் சீரும்
விண்ணின தம்ப யின்று விஞ்சையர் பாண்செய் மாண்பும்
மண்ணின தருமை கண்டோர் மதித்திடக் காண்பித் தானால். ()

௮. அத்தாணி—அரசிருக்கை. (சிம்மாசனத்தமர்கை.) ௰௩. வசந்த மண்டபம்—இளவேனிற் காலத்தில் இந்திராணியோடு இந்திரனமர்ந்து தேவர்சூழத் தேவப்பெண்களாட்ட பாட்டங்கண்டு களிக்கு மாளிகை, இந்திரன் மாளிகைக்கே வசந்தமென்ற பெயருண்டு. ௰௪. விண்ணினதம்—விண்ணெலி.

பஞ்சவாத் தியத்தி னோசை படபடென் றொலிப்பத் தாளக்
கஞ்சவாங் கலிக லிப்பக் காலச மசையத் தூம
மிஞ்சவால் விளக்கு மின்ன விளங்குச்சைச் சிரவந் தோன்ற
நெஞ்சவாய் நிற்பச் சங்க நிதிபற்ப நிதியுங் கண்டார். (௰௫)

குலவுபன் மணிவெ யிற்குக் கொங்குநீர் குளிமே னல்க
மலைவிற முரசுமின் னுரின் னிசையினு னந்த மோங்க
கலவுசா மரத்தி னுலுங் கனகபா வாடை யாலு
நிலைமை வெக்க நிச்சை யெழுதவாய வியமுங் கண்டார். (௰௬)

ஏறின தேவ தத்த முறைவழி யெதிரி னிற்ப
மீறின கணங்க ளெல்லாம் மென்கரங் குவித்து நிற்ப
சீறின வடைய லார்கள் செங்கைவாய் பொத்தி நிற்ப
கூறின வமைச்சர்க் கெல்லாங் குளிர்விடை கொடுப்பக் கண்டார்.

விருந்தமிழ் களித்தா லன்ன மேனகை யுருவ சிப்பெண்
டிருந்தணி யரம்பை மேலாந் திலோத்தமை நால்வ ரந்நாள்
பொருந்தவே யாடல் பாடல் புரிந்தசிங் காரம் பார்த்தாங்
கிருந்தவிந் திராணி போல யிவர்வள மெலாம்பார்த் தாரால் (௰௮)

கண்டவ ரிதுது றக்க கதியிவண் வாழ லாமேன்
மண்டம ராகோன் றூனம் வழங்குமோ வெனநி னைக்கை
விண்டவ னறிவிற் றூக்க வேந்தர்கா ளியானு ரைத்தாங்
கெண்டகப் புரிவ னுளை யேகுமி னீவி ரென்றான். (௰௯)

வந்தன ருலக வேந்தர் மஞ்சிவ ரரியெ முந்து
சந்தமார் வளத்தென் காசித் தலத்திறங் கினன்ம கிழ்ந்தான்
கொந்தவிழ் கருமு கைப்பூங் கொடிதழுவஞ் சண்ப கத்தி
னந்தணீ ழலின்கண் வாழுந் தணியொடந் தனனைக் கண்டான்.

வேறு.

ஆவிவ்வா னந்தவனத் தானந்த புரத்திடையா னந்த தீர்த்த,
வாவியும்பா லிருவாச்சி படர்தருசண் பகநிழலின் வைய மீன்ற,
தேவியுல கம்மையுடன் விசுவேசர் வாழ்வுமன்னித் தென்கா சிக்
குப், பூவியலேந் தருநாடோப் பரமேயா னதையன்றோ பொரு
ளாக் கொண்டேன். (௨௧)

௰௫. காலசம்—போலவட்டம். ௰௬. எச்சரிக்கை—அமைதியாயிருக்கச்சொல்லுகை. ௰௭. தேவதத்தம்—அருச்சுனன் சங்கு. ௨௰. கருமுகை—இருவாச்சி.

இலங்குளத் துப்புளிச்சாத் தன்கோயிற் கணவாயா மிடைத்தொண் டாறே, யலங்கிவரு கொல்லதார் கலிக்காற்றும் பொறைமூலி யனைத்தின் சத்தாம், நலங்கவர்தென் றலுங்கண்ணுப் புளிமேட்டி னின்றுவந்து நாளு வீசிக், கலங்குபிணி யோட்டெடுப்ப வுடற்குறுதி குடிகொளுநந்தென் காசி நன்றே. (௨௨)

வண்டிசையுங் குயிற்குரலுங் கிளிபூவைப் பேச்சுகளும் வானரம்பைப், பெண்டுகளின் மொழிக்குயர்வாச் சிறந்தனவென் றிந்திரன்றன் பெரிது மெச்சி, யெண்டிசையும் பரவுநல்லா னந்த திருத் தத்தினிடை யிறங்கி மூழ்கி, வெண்டிருநீ றிட்டுவிசுவேசன்பூ சனைதொடங்கி விதிமு யன்றான். (௨௩)

தனிக்கிழங்கி விருந்துமுனை போற்கிளர்ந்த சிவாதனவா தாரசத்தி, முனிக்கிலுயர் மாயையின்மேற் சிவசத்து வத்தளவும் மொழிபீடத்தி, னினிக்கிளர்த் துவாக்களின்மேன் முப்பாகங் கோமுகங்கொ ளிலிங்கா காரப், பனிக்கதிர்சூ டியின்றிருமெய்ச் சிவலிங்க மூர்த்தியையுட் பரிந்து கொண்டே. (௨௪)

ஆதார சத்தியனந் தாசனமே லனந்தன்சிம் மாச னக்கான், மாதாரத் தறமறிவு துறவுசெல்வ நான்கதன்மேன் மயங்கந் நான்காம், பேகார காத்திரமே லகமூர்த்தச் சதனங்கள் பிறழ்கி ழங்கு, சாதார விரைமுளைதண் டிதழ்கேசரங் கருணிகைபூ தனிப்பார்த் தேத்தி. (௨௫)

தாமரைமே லனந்தாதி யெண்மருடைச் சத்திகளீ சானத் தின்கண், கோமளையா மனோன்மனியா லொன்பதுதாய் மார்க்கண்டு குட்டிட் டின்பாய், வீமருகா யடியினெல்லிற் பிரமனடுத் திங்களின்மான் மேலார் தீயிற், காமரான் சத்திபிடை மகேசன்மேற் சதாசிவனைங் கடவுட் போற்றி. (௨௬)

௨௨. அலங்கிவரும்—அசைந்து வருகின்ற. ௨௪. தனிக்கிழங்கு—மணிபூரககந்தம் முனிக்கிலுயர்—முதலாகத் தடையின்றி மேற்பட்ட, முப்பாகம்—பிரமவிஷ்ணுருத்திர பாகமாகிய பீடத்தினடி நடு முடிகள். ௨௫. அகமூர்த்தச் சதனங்கள்—உள்வீடு மேல் வீடுகள். கேசரம்—கேசரம். கருணிகை—தாமரைக்கொட்டை. ௨௬. அனந்தாதி யெண்மர்—அனந்தர், சூக்குமர், சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏகருத்திரர், திரிமூர்த்தர், சிகண்டர், சிகண்டியென்பவர். அவர்சத்திகள்-வாமை, ஜ்யேஷ்டை, ரவுத்திரி, காளி, கலவிகரணி, பெலவிகரணி, பெலப்பிரமதமனி, சர்வபூததமனி யென்பவர். வீமருகாய்—தாமரை மலரினது வாசனையையுடைய காயின். சத்திபிடை—சத்திபீடத்தின்கண்.

பாமலர்மே லெரித்தூணில் வித்தையொளி யிலிங்கதண்ட பங்கி
கண்டு, மூமுகங்கை யடிவிழியா யுதமாக்கு முண்டபங்கி முடிமு
கங்கண், டாமமைவத் திரபங்கி களைபங்கி நிறீஇக்கலைதத் துவம்
பண் ணூறி, சேமவரு ணம்பதமந் திரமெனுமத் துவநியசஞ் செய்தி
றைஞ்சி. (௨௭)

உலகுடைமை யுயிரடிமை யாக்கொளொரு பாசிவன்பா லூறு
மன் பார்ந்து, நலகுணத்தா வாகனந்தா பனஞ்சந்நி தானஞ்சந்
நிரோத நான்கா, விலகுறுதத் புருடோர்த்து வக்கிழக்கி லபிமுகமா
யிடவ மைத்து, வலகுணஞ் யெழுந்தருளித் திருமுன்றந் தெனைக்
காத்தாள் வாயென் றேத்தி. (௨௮)

அவகுண்ட னஞ்செய்து காட்சிபெற்றுத் தேனுவினு லமிழ்தாக்
கற்பித், துவகையொடு பாத்தியமா சமனமர்க்கி யங்கொடுத்தே
யுயர்பூத் தூவி, யிவகைபத்துந் தேவரையின் பாக்கியசு ரரைத்து
ரத்து மிலாஞ்ச னத்தாற், சிவகடனுச் செயலாவா கனநிசெய்தர்க்
கியங்கொடுத்துச் சிரத்தையோடே. (௨௯)

சிவாங்கநியா சஞ்செய்து தேனுபத்மந் திரிசூல மகரஞ் சிர்க்
கென், றவாம்பஞ்ச முத்திரையெண் ணூற்காட்டிக் காற்கிருகா
லருளிப் பாத்பம், நவாங்கருணை முகத்திற்கா சமனமுக்கா றலைக்
கொருகா னல்கி யர்க்யஞ், சுவாங்கமஞ்ச னம்பஞ்ச கவ்விபம்பஞ்
சாமிருதஞ் சுவைம்ப லாலம். (௩௰)

கந்தோத கஞ்சுத்தோ தகமாட்டி நூற்றெட்டுக் கனிமூ லத்
தாற், சிந்தோத கத்திருமஞ் சனமாட்டி யொற்றுடை திருந்தச்
சாத்தி, தந்தோங்கு பாத்தியமுன் கலவைவிரை யிண்டைதொடை
தனிப்பூச் சாத்தி, யிந்தோங்க முடியிறையைப் பன்னொருமந்
திரத்தாலே யேத்திப் போற்றி. (௩௧)

ஆசமனுக் கியங்கொடுத்து மனோதமா முத்திரைகளளித்தின்
பாருந், தேசிலயாங் கம்புரிந்தே யூர்த்துவமீ சானத்திற் றிசைதி
ழுக்கா, மாசறுதற் புருடத்திற் றெற்காய வகோரத்தில் வடவா
மத்திற், பேசுகுடக் காஞ்சாதத் தவ்வத்தே வரைவாங்கிப் பெரி
தர்ச் சித்தே. (௩௨)

௨௭. மூ—முதன்மையையுடைய. (மூத்த) பன்னூறு—224-புவனங்கள். நியசம்—நியாசம் (கிரியை.) ௨௮ அபிமுகம்—நேர்முகம். ௨௯ இலாஞ்சனம்—முத்திரை. (முத்-மகிழ்தல், திரா-போதல்.) ௩௰. சுவாங்கமஞ்சனம்—நன்றாவலங்கரிக்கப்பட்ட ஸ்நானநீர். சுவைம்பலாலம்-நல்ல ஐம்பழச்சாறு. ௩௨. மாமுத்திரை—மகாமுத்திரை. இலயாங்கம் —இலயாங்கபூசை.

இருதயத்தை யீசானத் தங்கிசிர நிருதிசிகை யிலங்கு வாயு
வொருகவசங் கீழ்த்திசைநேத் திரமக்கீழ் திசைமுதலா வொளிர்
நாற் றிக்கிற், றெருளுமத்தி ரம்போற்றி முகங்களுக்குத் தேனு
பத்மந் திரிசூ லத்தோ, டருமகாஞ் சிருக்கெனுமுத் திரையைந்து
மடைவருளி யகம லர்ந்தே. (௩௩)

திராசனிமுத் திரையங்க தேவருக்கிட் டனந்தாதி சிவபெண்
மர்க்கும், வராசனங்கண் டடைவேகீழ்த் திசைமுதலெண் டிசை
யுமர்ச்சை மாயினூற்றி, யுராசனியா முமைமுதலெண் மருக்குவடக்
காதிவல னூற்றெண் டிக்கும், பராசயமின் றருச்சித்திந் திரன்
முதற்பன் மரைப்பத்தம் பரத்தும் போற்றி. (௩௪)

வச்சிரமாண் சத்திதண்டு கட்கம்பா சந்தோட்டி வளர்கதைகூர்
முச்சிரவேல் பதுமஞ்சக் கரமிப்பத் தாயுதமு முறைவ ணங்கி
யச்சனுக்கா சமனமர்க்கி யங்கொடுத்து நிவேதநியஞ்செய் தவிர்
பாத் யாச, மிச்சருணீ ரருளித்தாம் பூலமுற்டன் னறுமுகபன்
விதியா னல்கி. (௩௫)

மூலஞ்சங் கிதைசெபித்துச் செபபலனை வரதசிவ முதல்கைச்
சேர்த்தி, ஞாலஞ்பின் வணங்கிப்போ காங்கமுற்றி யெழீஇயங்கி
நனிவ ளர்த்தீ, யேலம்பூ ரித்திடையா லுட்கொடுபோ யுதாவிந்து
வெரிகட் கூட்டிக். காலங்கி மூன்றுமிரே சகவலத்தாற் பாத்திரத்
திற் கண்டெண் ணிட்டே. (௩௬)

சங்கிதையா னிரீக்கணுதி களாற்சுத்தி செய்துமுற்றஞ் சரியா
வாற்றி, யங்கியின்பூ சனைப்பலனைச் சிவன்பாலைப் புகித்தேத்து
மக்கா லன்ப, விங்கிதமுன் பூசனைநீ வேண்டிவந்த வாறலகத்
திடுக்கண் டீர்ப்பான், பொங்கியெழும் பொறைகளிற கரிதிறலை
யுனக்களித்தோம் புரிதி யென்றான். (௩௭)

வானிலச ரீரியினெம் பிரான்விசுவ நாயகனிவ் வாறு கூற
நானிலமின் பெய்தவரி நயந்துதுள்ளி யெம்மானே தாயி னேனைக்
கோனினரு ளாற்பொருளாக் கொண்டனையோ வென்றேத்திக்
கொண்டா டிப்போய்க், கானிலவுங் கிரிகளைவன் சிறகரிய வச்
சிரத்தைக் கைக்கொண் டானால். (௩௮)

௩௩. சிருக்கு—ஓமசாதன பாத்திரம். ௩௪. உமைமுத லெண்மர்—உமை, சண்டன், நந்தி, மகாகாளன், இருஷபன், கணேசன், பிருங்கி, உமாசேனன் என்பவர். பராசயமின்று—தோல்வி யில்லாமல். இந்திரன் முதற்பன்மர்—இந்திரன், அக்கினி, எமன், நிருதி, வருணன், வாயு, சோமன், ஈசானன், பிரமன், விஷ்ணு என்பவர். பத்தம்பரம்—பத்துத்திக்கு. ௩௫. பன்னறுமுகமன்—சோடசோபசாரம். அவையாவன – தாமபூலம், பாத்தியம், ஆசமனம், அர்க்கியம், கந்தம், புட்பம், தூபம், தீபம், ஆராத்திரிகம், தர்ப்பணம், சத்திரம், சாமரம், நிருத்தம், கீதம், வாத்தியம், தோத்திரம் என்பனவாம். ௩௬. காலங்கி மூன்றும்—வெளிவிடும் பூரகரேசக விந்து எரிகளும்.

வேறு.

பேறி னன்பெரும் பூதர வக்கிர
விறி னுண்மைவி லக்கவி ரைந்துமுன்
னேறி வன்பகை சாய்க்குமி ரும்படை
தேறி யுய்த்தனன் சென்றன வார்த்தரோ. (௩௯)

மாணுச் சைச்சிர வத்திவி வர்ந்தரி
தாணு முற்றுக டுங்கிடச் சார்ந்தனன்
காணு முன்னவை கண்டகண் டவ்விடை
பேணு ரத்தொடெ ழுந்துமெ திர்ந்தன. (௪௰)

உலவை வேகவுச் சைச்சிர வத்தொடுஞ்
செலவைக் கொண்டதெய் வேந்திரன் சீறியே
டலவை கற்பட ராற்றுப ருப்பத
மிலவைப் பஞ்சென வாகவெ திர்ந்தனன். (௪௧)

முரச திர்ந்திட முன்செல்கொ டிப்படை
யரச னேவவி னுமலை யைவளைந்
திரச தத்தெரி தாரைகள் சிந்தநின்
றுரசம் பங்கொடு ஞற்றினர் நீடுபோர். (௪௨)

வீசி னுவலஞ் சுற்றிவி ரைந்திகன்
ரூசி னுகமன் வச்சிர மத்திரி
பேசி னுர்த்தன பேழ்சிறை பற்றிவீழ்
தூசி னுகநி மிர்ந்தது ணிந்தனன். (௪௩)

எந்த வெந்தவெற் பெங்கிவர்ந் தேகினு
முந்த வந்தவற் பைத்தடித் தங்கனே
முந்த முந்தநின் ருர்த்துமு ரட்சிறை
வந்த வந்தவா றீர்ந்தும டக்கினன். (௪௪)

வச்சி ராயுதம் பாய்மலை பிஞ்செழு
மச்சி ராய்ப்புணீ ராறுக ளாயின
வுச்சி ராப்பக லாகவு தைப்பிசின்
பிச்சி ராதபெ ரும்பொறை யில்லையால். (௪௫)

தெரும ரற்பட வீழ்ந்தசி றைப்பொறை
பெரும ரத்தொடும் பின்னவு லங்களாய்க்
கரும ரத்தங்க லந்தகண் ணர்ப்பிசின்
வரும ரத்தலத் தெய்திவ யங்குமால். (௪௬)

௪௨. இரசதத்தெரி—இரத்தம்போலுமனலை. தாரைகள்—கண்கள், சம்பம்—இடி, வச்சிரம். ௪௩. பேசின்—இடியேற்றின். பேழ்சிறை—பெரிய இறகுகளை. வீழ்துசின்—உதிருந்தசன்போல. ௪௬. பெருமரம்—பெரியமரங்கள், பிசாறிமரம். கருமரத்தம்—பெரியமரத்தபணி. மரத்தலம்—மரத்தினிடை.

சூழ்ந்த மாண்டசு டர்க்குலி சத்தினல்
வீழ்ந்த பட்டவி றகரி வெற்பெலா
மாழ்ந்த துன்பொரீஇ யாருயிர் முற்றவும்
வாழ்ந்த தாழ்ந்தமை காகம லையெழீஇ. (௪௭)

மேக வாகன வெஞ்சிறை கட்டுணித்
தேக லாயினே யெங்கட்கி ருப்பிட
மாக வெற்புக ளங்கங்கு கல்கியெஞ்
சோக வாரிதொ லைத்திடு கென்றலும். (௪௮)

மூப்ப டிக்குமூ தன்மைகொ ளிந்திர
னப்ப டிக்கப யங்கொடுத் தன்புட
னிப்ப டித்திசை யெட்டினு மேற்றமா
வைப்ப வென்குல வெற்புகள் வாழ்ந்தவே. (௪௯)

உருத்தி ரிந்தவெற் பொக்கவி றக்கையீர்ந்
திருத்தி னனரி யீதுசிட் டர்த்துயர்
வருத்தி டாவழி மாநிலத் துட்டரைத்
திருத்தி டுந்திறன் வேந்தறச் செய்கையே. (௫௰)

மறந்த யங்குவேல் வாட்கையொன் னர்களைப்
புறந்த ருப்படி போக்கச னிக்கான்
பறந்த கன்றமை காகப ருப்பதந்
திறந்த ரித்திடச் செல்லிடந் தேடினன். (௫௧)

அடுத்த தூதர கேகர லைந்தலை
யுடுத்த பூவிலின் றென்பது ணர்த்தினர்
வடுத்த ராதும றைத்துவிண் ணேறினு
னெடுத்த வென்றியொ டிந்திர னென்றனன். (௫௨)

வேறு.

டனங்களி துள்ளி யைய வொருமலை யெழீஇப்போய் வாழ்வான்
வீனக்கரி விடுத்த தென்னவ் வெற்பெவண் டாழ்ந்த தென்றூர்
னங்கமில் வீரீ தன்றே கதைவினு வழகஃ தாழி
துனக்கலுற் றமிழ்ந்த தோடிற் றாத்தொனுத் திறனிஃ தென்றான். (௫௩)

புரந்தரன் மலையின் சிறகரி திறல்பெற்ற

படலம் முற்றிற்று.

ஆகப்பாட்டு ௯௧.

பத்தாவது

மைநாகம் வாழ்வுபெற்ற படலம்.

இந்திரன்ம லைச்சிறைக ளீர்திறல்கொள் காதை
முந்திரச மாப்பெறமொ ழிந்தனமு ரண்பட்
டுந்திரகி தத்தமர்மை நாகமது கந்து
வந்திரமி யத்திறைவ ரம்பெறல்சொல் வாமால். (௧)

கானமயி லன்றில்கிளி பூவைகுயில் காடை
நானமுயல் பன்றிவரை யாடுமரை நாகு
வானவைக ளெங்கணுமு ணங்குகிலை யாவே
வானமுழு துங்குலவு மாவளமை நாகம். (௨)

அந்தமலை மீதுபொழி யாற்றருவி கோடி
யுந்தமலி வார்தடமொ லிப்பவுரை சாந்தக்
கந்தமது வேயெழுதல் காதவழி போகிச்
சிந்தமது வூற்றலர்சி லைதொறும ணப்ப (௩)

அம்பரம டைக்குமுல வந்தழைப டர்ந்த
கொம்பரவை மூசுபல கோகிலமி முற்ற
விம்பரத னுக்கிணைப தில்லையினி மேலா
மும்பரவர் தன்னகரு மொப்பிலைய தற்கே. (௪)

வானமதி னூடரவு வேணிவனை மானார்
வானமதி மாமுகிகள் வேடரைம ணப்ப
கானமதின் வீசுசிறு காலுலவி யேற்றீ
கானமதி யேலமில வங்கமழ்வ தாண. (௫)

நாகமலை வெண்ணிலவு ஞாயிறுக ளங்காய்
நாகமலை வுற்றநவ நாணிழைநல் லார்சூழ்
நாகமலை யாளியளி நல்லொலிகள் கூர்மை
நாகமலை நின்றமைந விற்றமுடி யாதே. (௬)

க. உந்திரகிதத்து—விளம்பி நீங்கியிருத்தலின். வரம்—விருப்பம். உ. கானம்—வானம்பாடி. அன்றில்—கிரவுஞ்சம், அன்றிற்பறவை. நானம்—கத்தூரி மிருகம். நாகு—இளங்கன்று. அணங்குகிலையாவே—அச்சுற்றுதிற்பனவாக. ச. உலவம்—இலவமரம். ரு. அரவவேணி—நாகப்பணிமுடித்த சடை. வானமதி—அமிழ்தம் பொழியுமழகிய சந்திரன். கானமதி—வாசனைநிறைந்து. இதில்வரும் அமதி—அமைதி யென்பதின் மரூஉவாம். சா. நாகம்—வானத்து. களக்கு—அடையாளம். நாகம்—பாம்புகள். அகவ—ஒலியாநிற்ப. நாகம்—யானை.

இன்னவகை யானமலை யெண்டிசையு மோடி
மன்னவச மின்மையின்ம ருக்கொணன்ற யூற்றித
துன்னவளர் செண்பகவ னத்தினிடை தோயி
னன்னருறு மென்றெணிந டுக்கடல்கி டந்த. (௭)

வேறு.

வருத்தி டாதும றைந்துகி டந்துளா
விருத்தி மிக்கமை நாகவி சும்பெழீஇத்
திருத்தி கழ்ந்துள செண்பகப் பூம்பொழில்
கருத்தி ருத்திவந் திட்டது கண்டனே. (௮)

மறைந்தி ருந்தமை வாசவன் கேட்பினு
நிறைந்த மாண்விசு வேசனை டுந்தலத்
துறைந்தி டிற்பிடித் தாறுசெய் யான்செயிற்
குறைந்த காலமென் றுட்கொடங் குற்றதே. (௯)

நன்ன யத்தமை நாகம கிழ்ந்தவண்
முன்ன வன்றனை முன்னிமுன் னின்றினிப்
பின்ன விந்திரன் பீடையி னீங்கலாய்
மன்ன லங்கொடு வாழவிஃ தாற்றுமே. (௰)

மறைந்து மேவட கீழ்த்திசை மன்னிநெஞ்
சுறைந்து கந்தசொ ரூபமொன் றுற்றது
நிறைந்து கொண்டவச் சங்கம நீடுரு
பறைந்து சொல்லிடும் பான்மைய தில்லையால். (௰௧)

தென்ன ருக்குரு சேகரஞ் சூட்டிவாழ்
மன்ன ருக்குவ னைந்தருள் வேணியான்
முன்ன ருக்குதற் கில்லென முன்னிவந்
தின்ன ருக்குற வேத்துமை நாகமே. (௰௨)

அஞ்சி லோதியென் னம்மையோர் பங்கனை
மிஞ்சி யிந்திரன் வெற்பிற கீர்ந்துளான்
வஞ்சி யாதும றைந்துன டைக்கலத்
துஞ்சி டற்குவந் துற்றனன் காத்தியே. (௰௩)

௰க. பறைந்து—குறைத்து. ௰உ. உருசேகரம்—வயிரமுடி. மன்னருக்கு—கிலையுள்ள எருக்கமலர். உக்குதற்கு—பயப்படுதற்கு. இன்னருக்குற—துன்பம் கடுக்கும்படி. (இன்னல்-இன்னரென நின்றது.) ௰௩. அஞ்சிலோதி—அழகிய சில்லென்னும் வண்டுகளினொலியமைந்தகூந்தலையுடைய. அல்லது பின்னிமுடிக்குஞ்சுருளாகிய பனிச்சை, சுருட்டிமுடிக்குங்குழல், பக்கன் முடித்தலாகிய கொண்டை, உச்சியின் முடித்தலாகிய உச்சிக்கொண்டை, செருகிமுடித்தலாகிய செருகு கொண்டை என்னும் ஐம்பாற்கிடமாகிய கூந்தல். உஞ்சிடற்கு—நானீடேறுதற்கு.

சாமி யென்றடி சாரவ ருட்சிவ
காமி பாகன்க ளிந்துமை நாகனே
கேமி யந்தரை கிற்றிவி ளுவனக்
காமி தந்தையென் றுனச ரீரியாய். (௰௪)

கோட்டி னுகமுற் றுஞ்சிறை கொய்தரி
வீட்டி னுன்குலி சத்தின்வி றற்கொடு
வாட்டி னுற்குல லத்தைவ ழங்கினே
யீட்டி னுர்சிறை யெற்கரு ளென்றனன். (௰௫)

கம்ப லேவிடு கண்ணுத லாமெமை
வம்ப ருமல ரால்வழி பட்டரி
யிம்பர் வெற்பிற கிர்திறல் பெற்றதி
னெம்ப தம்பணி யீதுமென் றுனரோ. (௰௬)

என்ன லுந்தமி யேற்கிவை யெப்படிப்
பன்ன லாகுமப் பான்மைதெ ரிக்கென
நன்ன ரோர்குரு வாகமை நாகனோர்
சின்ன பன்குறி இத் தேற்றிம றைந்தனன். (௰௭)

இதையங் கண்டமி சைவுற தாலுமே
லுதையச் செங்கதி ரோடுநி லாவுகு
சுதைய பாலத்தி லேய்ச்சுழி லேமிசை
விதைய தற்பா மின்னேவி ழிக்கோடே. (௰௮)

தங்கு மாதவன் தான்றவ ருதென
வெங்கு மாங்குரு நாதனி சைத்தவா
றங்கு மாபதி யர்ச்சனை யாற்றிடக்
கொங்கு மாப்புன ரேய்ந்துகொ ணர்ந்தனன். (௰௯)

மலையச் சேற்றைம ணத்திட வள்ளியுத்
தலைய தைச்சம னுத்தள மாக்கியே
நிலைய மன்னதி ரைத்துமி லிங்கமாச்
சிலைய கேமுஞ் சேரவ டுக்கினன். (௨௰)

ஈச னைச்சொயஞ் சோதியி லேயெழு
தேச னைமனர் தேர்ந்துகொண் டேவெளி
யோச னைக்குரு பாநுப மூர்த்தியாப்
பூச னைசெயப் புந்திகொண் டானரோ. (௨௧)

௰௮. விதைய—பெருமையையுடைய.

புத்தி ரஞ்சித மாப்புதுப் பூவிரைப்
பத்தி ரங்கள்ப ரித்தனன் பானநீர்
சித்தி ரப்பட வட்டகை தேய்த்ததின்
முத்தி ரத்தநுள் பெய்துமுன் வைத்தனன். (௨௨)

திருவு ருசம ஞர்க்கிய பாத்தியத்
தொருவு நீரையு கந்துநி ரப்பியே
குருவு ரைப்படி சந்தனங் கோவினெய்
மருவு நீடளிர் பூவளர் தர்ப்பையும். (௨௩)

எள்ளு நீறு க்டுகுசெந் நெல்லிவை
கொள்ளு நீண்மனு வைந்துடன் கூட்டங்க
மள்ளு னீடிய வாசன மூர்த்தியுந்
தெள்ளு நீரிடை மூலமுஞ் சேர்த்தரோ, (௨௪)

அருக்கற் கோமெனு மர்க்கிய நல்கிநற்
றருக்க ணீடலர் சந்தனந் தத்துவப்
பெருக்கப் பீடவா வாகனம் பெட்புயர்
திருக்க திக்கபி டேகமுஞ் செய்தரோ. (௨௫)

துகிலி னுற்றுவர்த் திததுக டர்புகை
யகிலி னுற்சந்த னத்தவிர் தூமமே
மிகிலி தற்கிணை வேறிலை யென்னபூ
முகிலின் கூட்டமெ னச்சுற்றி மொய்ப்பதே. (௨௬)

சந்த னுட்சதை தூர்வைசிரீ புட்பங்
கந்த மீறுக வின்மலர் யேகலே
யெந்த நாளுமி லங்கொளிப் பூடண
மூந்த நாயக மேவுமு கிழ்முடி. (௨௭)

223898

நிலவு மங்கையர் நிற்பவி ரண்டுபா
லுலவு கோட்களு கந்தணி மாலையாய்க்
கலவு தண்டியும் பிங்கலை யுங்கனங்
குலவு மைங்கா லுங்குரு வுங்கொடு, (௨௮)

௨௪. அள்ளுன்—உன்னே பொருந்திய ௨௭. தூர்வை—அறுகு. சிரீ புட்பம்—வில்வம். ௨௮. நிலவு மங்கையர்—ஒளிவடிவாய உஷாதேவியும், பிரத்துஷாதேவியுமாவர். பிங்கலை—பார்வதி,

பருதி கோடிப வீரென வந்ததி
லொருதி றத்தரு வப்பிர காசமாக்
கருதி யுட்குகைக் கண்ணுறு காட்சியிற்
சுருதி யார்க்கோற் காயசு வாவென. (௨௯)

புகைக்குந் தூமமும் பொன்விளக் கும்பல
வகைக்குண் டாயவ ளத்தபொங் கல்களுந்
தகைக்கு ணத்தசிற் றுண்டிகள் சாலவு
மகைக்கும் பல்பழ வர்க்கமு மாக்கியே. (௩௰)

சூரி யார்ச்சனை செய்தது வார்மாள்
வாரி னர்ச்சனை மாடிய ருட்கொடு
நேரி ழைக்கொரு பாகனை நீடளி
கூரி தத்தொடு கும்பிட லாயினான். (௩௧)

தூப தீபநை வேத்தியந் தூமனக்
தாப ரித்தத கைக்கொட ருச்சனை
கோப திக்கருள் கூரவி யற்றியே
மாப றம்பன்ம கிழ்ந்துது தித்தனன். (௩௨)

ஒன்றி டப்புறத் தோங்குமை வைத்தவா
வென்றி டக்கண ணைவாழ் வித்தவா
மன்றி டக்கலி வல்லியன் காளிவி
யென்றி டப்படு மன்பரை யேற்றவா. (௩௩)

தோத்தி ரங்கொடு தூவருள் செய்பவா
சாத்தி ரத்தத னிப்பொரு ளானவா
நேத்தி ரத்துநி லாவொளி யாயவா
காத்தி ரத்துயி ராய்நின்ற காரணா. (௩௪)

மங்கு லம்புவி நீரனல் வாயுவான்
கங்கு லற்றிடக் காண்கதிர் வைத்தவா
வெங்கு லத்தவர் போவிட வெய்திடாப்
பொங்கு லச்சிறை நல்கெனப் போற்றியே. (௩௫)

கார ணாசின் மயகரு ணாநிதே
பார ணாநித வானந்த வம்பரா
பூர ணாசிவ ரேசக பூரகே
வார ணாசிதென் காசியின் வாழ்பவா. (௩௬)

௩௰. அகைக்கும்=செலுத்தும். ௩௧. மாடி=செய்து. ௩௨. கோபதி =சிவன், சூரியன், விடை. ௩௩. கலி=வலிய.

உன்னை யொப்பவ ரின்றுல கத்திலே
மன்னை யொப்பநன் மக்களை யாளுவோ
யன்னை யொப்பவ ராரம்மை யப்பனே
யென்னை யொப்பவோ ரேழையிங் கில்லையால். (௩௭)

இழிய னென்றெனு ரைக்கிலங் காயெனின்
மொழிய வேறிலை முற்றுமொர் தாபரம்
பொழிய ருட்கட்பு ராதன காத்திலை
பழிய டுக்குமுன் பக்கலென் றேத்தினான். (௩௮)

விழுந்து நான்முறை வேண்டிவ ணங்கினான்
முழுந்து மன்புயர் மூரிமை நாகனைக்
கொழுந்து மாபதி கோட்டிலிங் கத்தினின்
றெழுந்து னர்ச்சையு மேத்துமு கந்தனம். (௩௯)

மாமை நாகநீ வன்சிறை யோடுறற்
காமை யூர்தென்க டற்கண மிழ்திமான்
மீமை யூர்ந்தச னிப்படை வீசுவான்
பேமை நீத்துனைப் பேணுது மென்றரோ. (௪௰)

அந்த லிங்கம திற்கரந் தானரன்
வந்த நாகன்ம கிழ்ந்தெழீஇ வச்சிரஞ்
சிந்தல் வென்றுபோய் முத்தெறி தென்கடல்
சொந்த மாக்கொடு துன்னிவாழ் வானரோ. (௪௧)

வெருவ தீர்ந்துவி ளங்கின னவ்விடை
பொருவ வேனுமு யிர்க்கிடை யூறுறச்
சருவ வேனுமெண் ணாமையிற் சக்கிரி
மருவ லின்றிம கிழ்ந்ததென் றுனரோ. (௪௨)

மைநாகம் வாழ்வுபெற்ற படலம்

முற்றிற்று.

ஆகப்பாட்டு ௯௭௩.

பதினோராவது,

வச்சிராயுதம் கூர்மை பெற்ற படலம்.

உடலி னெண்சிறை போடுமை நாகந்தென்
கடலி னின்றமை யோதினங் காணரி
யடலி னார்ப்பரித் தாண்மைசெய் வச்சிரம்
விடலி னூற்றிய விறினி யோதுவாம். (௧)

மாத வேசமை நாகமுன் வாயுவி
னூத மேற்கொட ரிக்கொளித் துய்ந்ததா
வோத துண்மையன் றோவென கற்றவர்
சூத னோதைது னம்பியி தோதுவான். (௨)

பண்டைக் கேள்வம ரூதன பான்மையீர்
கண்ட துண்மைகா கன்னெலி யின்றுனைக்
கொண்டி லாதெழல் கூடுமோ பிற்கதை
விண்ட திஃதென வேண்டினர் கூறுவான். (௩)

மந்தி ராகமத் தார்த்தம னுக்களுஞ்
சந்தி ராதவர் சார்புள யோகரு
மெந்தி ராக்கர தேவரு மேவரு
மிந்தி ராதிப னேத்தினன் றீவரே. (௪)

வீறி னூற்பல வெற்பினி றக்கைகள்
கீறி நாற்றிசை கீழ்ப்பட விட்டபின்
மாறி னுலொளித் தோடுமை நாகமே
சீறி நாஞ்செயித் தேமெனச் சென்றதால். (௫)

புலவ ருக்கர சம்பர்பு குந்தபி
னிலவ லர்த்தரு நீழலி னூற்றெணிக்
கலவ வச்சிரங் கைக்கொடு கொண்டனூர்ந்
துலவங் நாக னெடுக்கிவெல் வானிற்ப (௬)

பாயக் கண்டடை யார்கள்ப கிரென
வேயப் பார்வினை வென்னையோ வென்றுட்க
மேயக் கார்ப்பரி வேந்தன்று ரீஇயினன்
ஞேயக் கன்மகிழ் கீடியெ ழுந்ததே, (௭)

௨. மாதவேச=சூதமுனிவரே! ஆதமேற்கொடு=துணையைமேற்கொண்டு அரிக்கு=இந்திரனுக்கு. கற்றவர்=நைமிசத்தவர். ௩. கண்டது=நீவிராராய்ந்தறிந்தது. ஒலி=வாயுதேவன். ௪. மந்திராகமத்து=வேதாகமங்களில். ௬. கலவ=போர்த்தொழிலையுடைய. நாகன்—மைநாகனை.

எடுத்து வீசினன் வச்சிர மேறிவெற்
படுத்தக் கொய்சிறை யார்த்தெதிர்த் தாடவிற்
படுத்தக் கூர்மழுங் கிப்பறிந் தோடிமா
னடுத்து வங்கரி காணமுன் வந்ததே. (௮)

சுற்றிப் பார்த்திதென் சூரமை நாகனும்
வெற்றிப் பான்மை வெட்கவெ திர்த்தனன்
மற்றிப் பாங்கெவன் வந்தது கண்பரார்
சற்றிப் பானுறை வார்தமி யில்லையால். (௯)

அருக்க னேரொளி யாரச னிப்படை
கருக்க லாயது கண்ணிமை யாரிறைக்
கொருக்க லான்மதிப் பின்மையு முற்றது
பெருக்க மென்னினிப் பேசிடற் குள்ளதே. (௰)

ஒட்டி வைத்துறக் கத்துவீழ்த் தூக்கியாங்
காட்டி யூழ்வழி யாருயிர்க் காவது
கூட்டி யின்பதுன் பங்கொளக் காண்சிவன்
சூட்டி தேற்பிறர்த் தூற்றலென் றய்ப்பதே. (௰௧)

வேறு.

ஈசனை யருச்சைசெய் திருந்தி றற்கொடு
வாசவன் மலைச்சிறை மடிப்ப வோர்கலவ்
வீசனைப் பூசைசெய் திருஞ்சி றைக்கொடு
வாசவ னசனியை மழுக்கிற் றூர்வலார். (௰௨)

இல்லையென் பவாக்கர சீத ளுள்ளவர்க்
கல்லையென் றெழிததனு டுதல்செய் தன்புமேர்
முல்லைநக் கவிற்கொலை வன்பு முன்னிகல்
கெல்லையிந் தெரிக்கணம் மிறைய ருட்செயல். (௰௩)

இம்மியும் பிழைத்திடா விறைய ருட்செய
னம்மிடைப் பிழையெனி னைகவி ளைக்குமால்
விம்மித மிதனிடை விளங்கல் வேண்டுமன்
றம்மிட வத்தெனென் றருச்சைக் கேகினான். (௰௪)

௮. மானடுத்தனங்கரி—மேகத்தினடுவிலே விளக்குமிந்திரன். ௯. ஒருக்கலால்—ஒருமலையால். ௰௨. ஓர்கல்—மைநாகம். ௰௩. உட்குதல்செய்தனும் என்றது இராவணேச்சுரனுக்கருளிச் செய்ததும், ஏர்வல்லை நக்கவிற் கொலைவன்பும் என்றது முப்புரமெரித்தருளியதுமாமென வறிக. ௰௪. அம்மிடவத்தெனென்று—அழகியவுலகத்திலே எளிமையாமென்று.

சித்திரை யாற்றரி தீர்த்தங் கண்டுதோய்ந்
தத்திலக் கடன்முறை யாற்றி னானவன்
புத்திசா லேவலர் போய்க்கொ ணர்ந்தருள்
முத்திப் பொருள்கொடு முயல்வன் பூசையே. (௧௫)

பங்கய மணங்கமழ் பாரி சாதமுன்
அரவிந்த மலர்பல தொடையின் டைசார்ந்
தரவமே கட்டியுஞ் சந்த னாதியும்
நிரந்தர காநிவேத னியமுங் கண்டனன். (௧௬)

தாமரை யலரிமத் தம்மந் தாரகற்
பூமாற் கொன்றைபொற் கொன்றை பூஞ்சரா
மாமலர்க் கள வம்மை வில்லுவங்
காமர்க் லேம்பவன் னொருக்கு காந்தனே. (௧௭)

புரசுசெவ் வந்திமுட் சிவந்தி புன்னைநீ
டரசுதும பைபனீ ரறுகு குல்லைமா
வரசுகந் தத்திரு வாட்சி மல்லிகை
திரசுகந் தருகுட முல்லை செண்பகம். (௧௮)

செருந்தி வண் பிச்சிமுன் றிரும லர்க்குலம்
பொருந்திவங் கவற்றரிற் போக்கி வைத்துமே
தருந்தில செய்பயந் தயிர்ம துக்குடந்
திருந்தின நீர்குழை திரவி யங்கொடு. (௧௯)

ஐங்கனி யாதிய வமைத்த ருச்சனை
யிங்கித மாவரி யியற்று வான்முறை
மங்கல மாவபி டேக மாடிமெய்
யங்கமா ரணிகொளொற் றுடை சாத்தியே. (௨௰)

பொற்கலை யுடுத்துநற் பணிகள் பூட்டியே
பெற்கதி ரார்முடி யிலங்கச் சூட்டியே
முற்கநற் பருப்புமுன் முதிர்ந றுஞ்சுவைப்
பற்கவின் பொங்கலும் பாற்பொங கன்முதல். (௨௧)

௧௫. மூத்திரப்பொருள்—மலர்தழைகள், சந்தன முதலியவைகள், நைவேத்தியாதிகள் என்னு மூவகைத்திரவியங்கள். ௧௬. நிரந்தர—கடவுள். ௧௭. காமரார்—அழகிய ஆத்தி. ௧௮. பனீர்—பன்னீர்ப்பத்திர பட்பகங்கள். ௧௯. பயம்—பால். குழை—சந்தனக்குழம்பு. ௨௰. ஐங்கனி—வாழை, பலா, மா, மாதளை, எலுமிச்சைப்பழங்கள். ஆதிய—பஞ்சாமிர்தம், பஞ்சகௌவியமுதலியவை மாடி—செய்து. ௨௧. முற்கநற்பருப்பு—நல்லபாசிப்பயற்றம்பருப்பு. பாற்பொங்கல்—பயசாளம். (பரமான்னம்.)

விதவித மாயனை வேத்தி யங்களு
மிகமித மாம்பழ வினங்கண் முற்றவும்
நிகநித மூட்டவி னிறைய வூட்டியே
மதமத மருச்சனை யாடி னானரோ. (௨௨)

பூசனை முற்றியப் பூச னைப்பய
னேசனைக் கொள்கென நிகழ்த்தி நல்கியெம்
மீசனை யருளுல கேசை பேண்விசு
வேசனை யன்புகூர்ந் திரந்து வேண்டினான். (௨௩)

ஒருவரு மறிகிலா துளப் ராம்பரா
குருவருட் கோலமாக் கொண்ட மூர்த்தியே
யிருவரு மறிகிலா தெழுந்த பேரொளி
யுருவரு வுருவரு வுறீஇயப் பாலவா. (௨௪)

மதியினி லமிழ்தமாய் மலரின் வாசமாய்த்
துதிமதச் சுவையதாய்ச் சுருதி யுண்மையாய்ப்
பதிசொலிற் பொருளதாய்ப் பண்ணி னோசையா
யெதினுமாய்ப் பயன்கொளா விறைவ போற்றியே. (௨௫)

வோறி யாப்பவி வினோத ராக்கனி
காரறி யாச்சொரீ கடவி லாமனி
யூரறி யாவிலே புடம்பி லாருயிர்
போறி யாத்தவர் பெரும போற்றியே. (௨௬)

முக்கண நாற்புய முதல்வ நின்மல
வக்கண பங்கமா வகிலம் காட்டியோய்
தெக்கண காசியா தேசி காசிவா
மக்கணன் மழலைவிழ் மனத்தை போற்றியே. (௨௭)

சயிலவெள் ளியங்கிரிச் சம்பு வேதியா
மயிலன வுலகவம மனைம ணாளனே
யயிலவ னைக்கா னப்ப வன்புளார்
பயிலா சங்கா பாத யானுவே. (௨௮)

உனததா பரமலா லொருநிக் கில்லையான்
மனதுகந் தருளென வாச வன்றுதி
சொனதுகண் டிரங்கிய சூலி வச்சிரீ
தினதுபூ சனைதுதி யிறையன் போர்ந்தனம். (௨௯)

௨௨. மதமதம்—சமயத்துக்குச்சமயம். ௨௩. அருளுலகேசை—அருள் வடிவாகிய உலகேச்சுவரி.

கொத்தலர் சண்பகக் குளிர்வ னத்துறை
சத்தம ரித்தலந் தனிலு யிர்க்கரு
ளத்தனை யியான்பணிந் தவர்வி ருப்பெலாங்
கைத்தல நெல்லியங் கனியி லீகுவோம். (௯௰)

ஆகையான் மலையிற கரிதி றற்குலீ
யோகையாற் றொழுதகா ளுகந்து பெற்றவா
றீகையார் தரப்பணிந் திறக டைந்தனன்
வாகைமை காகனும் வாகை யின்னதே. (௯௧)

என்னெனி னுனக்குல கிடர்த விர்ப்பதொன்
றுன்னென லறிகுவே முயன்சி றைக்கொடுந்
தென்னெடுங் கடலினுட் சிறைப்பட் டான்வெளித்
துன்னெலின் றன்னமெய் துணிந்து கோடியால். (௯௨)

உனக்கட னுண்மையை யுணர்ந்தி லாயவன்
றனக்கருள் வாபலக தனைம தித்திலாய்
மனக்கவ லாபெறி வச்சி ரங்கரீஇப
பனக்கரு திரைகமைப் பணிந்துய்ந் தாயரோ. (௯௩)

வலிமிக வொளிமிக வயிரங் காரெனை
யிலிமிகத் தந்தனங் கேடின் றேகென
வொலிமிக வுரைத்தன னும்பர் வேந்துதன்
குலிசமோக் கினனுளங் குளிர்ந்து மெச்சினான். (௯௪)

பொன்னகர்க் கிறைபிறை பூசை யாற்படை
மன்னகக் கூர்மையார் வளங்கண் டேகினான்
கன்னகம் பூசையாற் கடவுள் வாழ்ந்ததென்
றன்னகந் நீர்தவ னுரைத்தின் பாக்கினான். (௯௫)

குளிர்ந்திரு செவியுளங் குளிர்ந்து டம்பெலாங்
குளிர்ந்திரு மையும்பெறக் கோன்க தைச்சுதை
குளிர்ந்திரு தபமெனக் குளிர்ந்திட் டாபெனக்
குளிர்ந்திரு னையிசர் கும்பிட் டாரரோ. (௯௬)

வச்சிராயுதம் கூர்மைபெற்ற படலம் முற்றிற்று.

ஆகப்பாட்டு ௭௱௯.

பன்னிரண்டாவது அகத்தியன்

திருமணக்காட்சி பெற்ற படலம்.

வச்சிரா யுதங்கூர் மிக்க வளம்பெறு கதையு ரைத்தாம்
மெச்சிராப் பகலோ லிக்கும் வெண்டிரைக் கடல்கு டித்துக்
கச்சிரா நீர்கான் மைபோற் கான்றரு ளகத்தி யன்று
னுச்சிரக் கதிர்பி றைவே யுமைமணங் காண்டல் சொல்வாம். (௧)

இறையவ ரொருகா லத்தி னிமையமீன் றெடுத்த தெய்வப்
பிறையணிர் நுதலி தன்னைப் பிரசமா லிகைசூட் டற்கா
மறையவன் மான்மற் றுள்ளோ ரிமையபேன் மணச்சர் லைப்பா
லுறையவை யகஞ்ச மன்விட் டொருவட தலைசாய்ந் திற்றே. (௨)

அன்னது தெரிந்து மாயோ னயன்மக வான்மற் றுள்ளோர்
தன்னது கொண்டோ கும்பன் றாயதென் பால்வ ரற்கோ
தென்னது மணங்காண் டற்கோ தென்றலை யுயர்ந்தென் றீசன்
முன்னுற் றுரைத்தார் கேட்ட முற்றறி வினனுய்த் தோர்வான்.

திடமுற வலங்கா ரித்துத் திருமிகப் பொலிவி மானத்
திடமுதற் பந்தர்ப் பார்த்தாங் கிருக்குமா தவர்தே வர்க்குட்
சடமுயர்ந் தோர்ப்ப ருத்தோர்த் தள்ளியோர் குள்ளற் கண்டோ
குடமுனி வருக வென்றான் குளிர்ந்தெழீஇத் தொழுது வந்தான்.

கொங்கலர் புனைகல் யாணக் கோலமார்ந் திருந்த பெம்மான்
றங்கணிப் பீடத் தின்முன் றாழ்ந்தெழீஇ நிற்பக் கும்ப
பங்கலம் நாப்பண் டாழ்ந்து வடாதுதெற் குயர்ந்தாற் பூமி
பொங்கயர் வறநீ தெற்குப் போய்ச்சமன் செயல்வேண் டாவோ. ()

கலையமா கனவா னேநீ கந்தமால் வரைய டுத்தா
னிலையக விடந்தா னைத்த நிலைபெறு மதுசெய் கென்றான்
வலையநீ ருண்டோ னென்னை மறமியான் செய்தே னிதென்
றலையதி லெழுத்தோ மன்றற் சாறுகண் டிடல்வேண் டாவோ. (௬)

அகத்திய னிலாக்கல் யாண மாவுமா பதிக்கின் பாய்த்தென்
முகத்திரு விழிம ணங்காண் முதுதவ மில்லா தாய்த்தோ
சுகத்திரு மணங்காண் கில்லாத் தூரத்த னென்று னைந்து
சுகத்திவர் குப்ப சன்றான் றாழ்ச்சியாற் றற்கோ வென்றே (௭)

---

௬. கந்தமால்வரை—வாசனையையுடைய சந்தனமடர்ந்த பெரிய பொதியமலை.

மாற்றரும் பிறிது தேறேன் மறுத்துரைத் தலுமா காதாற்
கூற்றமுன் புதைத்தோற் கிது கூறுவ லெனவுட் டோர்ந்து
தேற்றமுற் றெம்பெம் மானே திருமணங் காண்ட லொட்டா
தாற்றமுன் னியதென் னேநின் னடிமைகை விடலை யென்றான். ()

என்னது மீச னன்ப வியானுனை வெறுக்க கில்லை
னுன்னனுன் போலு வல்லா ரொருவரு மிலாமை யாற்றான்
பன்னனுட் கொடு போய்த் தூக்கிற் பார்நிலைப் படுத்தென் மன்றன்
மன்னனுற் றிடநீ செய்தான் மணகாட் பித்தோ னாவாய். (௯)

கமையவி ரிமைய மீன்ற கன்னியா முலகத் தாயை
நமைமற வாநீ செய்பிக் கன்றிமே னன்றி யின்று
லெமைமணப் பித்தற் காதெற் கேகிநீ பொதியில் வாழ்தி
யமைபமா மணக்கோ லங்காட் டற்கவண் வருது மென்றான். (௰)

காதனல் லுரையி தாயி னவிற்றலே றென்னை யுண்டே
போதனன் றெனக்கொண் டொன்று புகலுவான் றமிழ்நாட் டின்க
ணூதன மெனது செல்கை நுவலிரு மொழியுந் தேர்ந்தோர்
சோதனைத் தொருசொல் வல்லேன் றோற்றிட தருடி யென்ன. ()

தண்டமி ழிலக்கி யத்தைத் தருமிலக் கணத்தை யென்னை
மண்டமிழ் தினிற்பு கட்டி மகிழ்வரு ளினனு யாங்குக்
கண்டமின் னெழுவ ருள்ளோர் காவிரி தனைய ழைத்தில் [ன.
லொண்டமிழ் முனிபின் போய்த்தெற் குலகுவாழ் வித்தி யென்று

வாகதி குமரி கோதா வரிநரு மதைகா வேரி
சரசொதி யமுனை யென்னுஞ் சத்தமா தீர்த்த மாதர்
மாயினி லொருகா வேரி வள்ளலி னுனை யாறே
பாசகத் திபன்பின் போந்தாள் பழந்தமிழ் நாடுய் தற்கே. (௰௩)

போந்துநித் திபகல் யானைப் புதுமணத் தாய்பாற் பொன்னி
மாந்துமா மலர்த்தாள் போற்றி வாங்கொடு மகத்தி யன்றான்
காந்தனித் திபகல் யானன் கழன்முறை வழிபட் டேத்தி
யிந்தபல் வரம்பெற் றுஞ்சீ ரியல்வழிக் கொளலா னால். (௰௪)

அவ்விடைப் பாவி நின்ற விருவருக் கருள்வ ழங்கிச்
செவ்விடை கொடுத்துய்க் குங்கால் சிவன்றிரு முனரி யாழோன்
வெவ்விடை யூர்தி யாபோர் விந்தமோங் கியமே ருத்தாழ்த்
தொல்விடை யிருக டர்க்கு மூதர் தடுத்திற் றென்றான். (௰௫)

விடைத்தகி லுயர்த்தைந் தாற்று விமலனங் கதனைக் கேளா
விடைத்தடை செயின்விந் தத்தை விடலமட் டாத்தாழ்த் தாறுங்
கொடைத்தாத் தருளி யுய்த்தான் கும்பமா முனிதெற் கேக
நடைத்தகக் கொண்டான் வேட்ட னடந்துதன் குலக முய்ய. (௰௬)

முனிவரு வழியி லாறு முரட்பால் குவடு சோலை
நனிவளர் கழனி வாவி நறியபூங் கமலக் காடு
பனிவதி குறிஞ்சி முல்லை பலவுதண் கதலி தேமாக்
கனிவள மிகுதி காட்டிக் கமழ்வன கண்டு வந்தான். (௰௭)

எல்லையில் வனங்கள் கான்யா றிவைகடந் தேகும் போது
முல்லையி னடுத்த பாலை முதிர்சுர மதனோர் பாலாக்
கொல்லையி னெருங்கு நீங்காய் கொழுங்கனி குலைத்தார் தேங்கள்
வல்லையி னிறைக்குந் தன்ம மடமதோர் சாலை கண்டான். (௰௮)

அங்கணம் முனிவ னன்று டகக்கடன் செயற்கு வைகித்
தங்கருத் துவப்ப வாற்றுஞ் சந்திக டருப்ப ணாதி
செங்கனல் வளர்க்கு மோமஞ் செய்வன செய்தி ருப்பத்
துங்கநா ரதன்விந் தப்பாற் றுன்னியீ தியன்ற தக்கால். (௰௯)

மருவிய தறிந்த வித்தன் மாதவ விவணீ வந்தாற்
பெருவியப் பேதோ வுண்டாற் பிறங்கதை யுரைத்தி யென்ன
விருவியத் திறைஞ்சி வேண்ட விராசவெற் பியானே தேவர்
துருவிய துருவ னேனே யென்றுமா மேரு சொற்றான். (௨௰)

உமையவன் குலந்தா னென்று மொப்பிலாச் சூர பன்மன்
கமையவா யிரத்தெட் டண்டங் காத்தவ னவனு லுந்தான்
குமையது செயவொண் ணாத குலகிரி யெட்டுந் தாமுஞ்
சிமைபபொன் மலைய தென்றுஞ் செங்கதிர் மதிசூழ் மாண்பும். ()

சுற்றிய முடிக ளோரா யிரமுள தோற்றச் சால்பும்
பற்றிய புகழோ டென்றும் பகர்ந்திட மாத்த லன்றிச்
சிற்றியல் விந்த மென்ன திறத்ததென் றிகழ்ந்த துன்பான்
முற்றிய வன்பாற் சொற்றேன் முனத்திறீஇக் கோடி யென்றான்.

௰௬. ஐந்தாற்றும்—ஐந்தொழில் (பஞ்சகிருத்தியம்) செய்யும். ௰௮. இறைக்கும்—அள்ளிச்சொரியும். ௨௧. குமையது—அழிவது. சிமைய—குடுமியையுடைய.

நார்த விந்தவாரே கவின்றதம் மேரு வக்கற்
சிரதப் பியநீ தேர்வாய் திரிபுராந் தகனை வில்லாய்ப்
போரதற் குதவா தாகப் புரநகைத் தெரித்தான் முன்னோன்
பாரத மெழுதற் கோலே படிப்பவ ரதன்கண் ணோரே. (உ௩)

வெட்கமு மின்றி மேரு விண்டதற் பெருமை யெந்தப்
பக்கமுஞ் சிரிப்பா மென்று பாங்குயர்ந் தெழுந்து விந்த
முக்கமுற் றிலாம றித்தங் கோங்கியென் சிர்தேர் கென்ன
துக்கமுற் றிரவி திங்கள் சுழன்றில மறுகு மாலோ. (உ௪)

வானவர் செயலோ மாயை மக்களின் செயலோ விஞ்சைக்
கானவர் செயலோ வேற்றுக் கருடரின் செயலோ சித்த
ரானவர் செயலோ தைத்தி யரின்கொடுஞ் செயலோ வாகா
வினவுஞ் சகமீ தாமோ வியற்றலென் றலக மேங்கும். (உ௫)

அகலிய விந்த மேரு வதனையெள் ளித்தா னோங்கற்
கிகலிய செய்கை யீதா வீதுநா ரதன்சொ லாலே
நகலியல் பாய்த்தே னும்பர் நடுங்கிதற் கெதிரி யாரே
புகலிய கோளுட் கொண்ட பொருப்பதே பொறுப்பாய்த் தம்மா.

நல்லவர்க் குற்ற தீதுந் தீயவர்க் குறுநல் வாழ்வும்
மெல்லவற் றூற்று நீர்போற் போய்விட விழப்பார் மேற்பர்
செல்லவ னுதிப்ப நாழி யொன்றிரண் டேழெட் டுப்பத்
தொல்லமு வைந்தென் றெண்ணி யொழித்தலிற் றுய்க்குந் தானே.

ஆதலி னியாழோன் விந்தத் தகந்தனி யடக்குங் காலங்
காதலி னிறைவன் மன்றற் காலமாம் போலுந் தெற்கே
போதலி னினிய கும்ப முனிவனும் புராரிதானே
யோதலி னிதுநன் றேமே லுறுவது காண்பே மென்றும். (உ௮)

ஆபத்தை மாற்றிப் பாரி னறனிறீஇ யருளுங் கும்பன்
தீபத்தை மலைமே லேற்றுந் திறம்படு தெற்கே குங்காற்
கோபத்தை யுயர்ச்சி தானே கொளவள ரிவ்விந் தத்தின்
றூபத்தைத் தாழ்த்து மென்றுந் தவனுற வடுத்தா னன்னோன். ()

உ௩. அக்கற்சிரதப்பியம்—அப்புறம்பினுடைய சிறப்பானது சயைக் கடாத சொல்லாகும். உ௪. உக்கம்—இடைவெளி. உ௬. நகலியல்பாய்த்தேனும்—சிரித்தற்றகுதிய வாயிற்றாயினும். எதிரி—உத்தரவாதி. உ௭. எல்ல—என்ன. (மெல்ல—பைய) ஒல்ல—பொருந்த. உ௯. கோபத்தை—விந்தத்தின் சினத்தையும், தாபத்தை—அதனுடைய ஆசையையும். தவன்—நாரதன். அன்னோன்—அகத்தியமுனிவன்.

அடுத்தமா தவன்செ லற்கு மதரிலை யாக விந்த
மெடுத்ததன் னுயர்ச்சி காண்கைக் கிவர்ந்திறு மாந்து நிற்ப
கடுத்தவின் றினிய வார்த்தை கழறிவேண் டினனவ் வேண்டுட்
படுத்தவெற் பச்சோர் பாலோர் பாற்சமழ்ப் பார்ந்தீ தோதும். ()

கோதிலாய் வேண்டி யானுட் கொடுவழி விடினென் சீரை
பேதிலார் பழிப்ப ரன்றோ விசைவிடேன் பசிதீர்க் கின்றேன்
வாதிலார்த் தெழின்வெல் வேனீ மடங்கியோர் கரையாச் சேரிப்
போதிலா திரத்தல் வேண்டப் போதியென் றிசைத்திட் டானால்.

எமக்குநீ வழிவி டாயேல் விக்கனத் தெங்கை நீட்டிச்
சமக்கிடக் கையினுட் டாழ்ந்தித் தானியாஞ் செல்வே முட்கொண்
டிமக்குல கிரியி னென்று யிருக்கநோக் கென்றான் கும்பன்
சுமக்குமண் குவட்டோ னேதுஞ் சொற்றிலன் வாளா நின்றான்.()

ஒன்றலுன் னியமுனீச னுயர்ந்தய னார்மட் டோங்கி
நின்றவிந் தத்தைத் தாழ்த்த நினைந்தொரு கையை நீட்டி
மன்றவ னாணை யாமே யாநிலத் தமிழ்த்தி விட்டான்
சென்றதற் கிரங்க லென்னே சிலம்பது புகல்வே றின்றி. (௩௩)

புலம்பியிப் படியோ தாழ்ந்தேன் பொருட்பெருக் குடற்கோ ரூப்
நலம்பிறழ் காற்பெட் பாக நயப்பவர் இளைப்பாய்த் தெற்கென் [பை
றலம்பிறந் தழுங்கு விந்த மாறுத லடைவான் மேலோன்
சிலம்பியான் சொலல்கே ளாய்மேற் சிந்தையா னைத லேனை. ()

உருவரைச் சிறக ரிந்தா னும்பர்கோ னுனையான் றாழ்த்தே
னருவரை நிலைமா றுமை யாலிசை பெறுந்தி ருப்பி
வருவரை யிலவண் வாழ் கப்பான் மதிப்பரு ளுவனென் றேகி
யிருவரை யறவோர் போன்முன் னிருப்பக்கண் டார்நீ ரென்றான்.

என்றலும் பெரியீர் நீவி ரெதிர்வரக் கண்டேம் பூவு
மன்றலும் போல மேலோர் மாதவ மெமக்குண் டாய்த்தால்
கொன்றலுங் களவுங் கள்ளுங் காமமுங் குறுக்கு ரோகந்
துன்றலுந் தொலைக்கு மன்னந் துய்த்துநீர் செல்வி ரென்றான். ()

௩௨. சுமக்குமண்குவட்டோன்—மண்சுமக்கு முச்சியையுடையோனாகும் விந்தம். ௩௩, மன்றவன்—சிவன். ௩௪. அலம்பிறழ்கால்—அழியாமை மாறுங்காலத்து. சிந்தையால்—வருத்தத்தால். ௩௫. இருவரை—வில்வலன் வாதாபி என்னும் இரண்டசுரரை.

குழைத்தபா கட்டல் போலுங் குளிர்தம் பலவும் பேசி
யழைத்தவன் கூட்டிப் போயோ ராசனத் திருத்தி யன்பாற்
பிழைத்தவா தாவி யென்போன் பின்னொரு பாலா டாகித்
தழைத்ததா வாழுன் னோனுந் தருவவில் வலன்பி டித்தான். (௩௭)

அன்னியன் போலம் மாவென் றலறிட வறுத்து ரித்துப்
பன்னிய வூன்வெவ் வேறு பகிர்ந்துபல் சுவையா வாக்கித்
துன்னிய வமுது துய்ப்பச் சுசிருசி யுபசா ரத்தோ
டின்னிய மத்தான் போற்போ யிரந்துகும் பனைக்கொ ணர்ந்தான்.

பெரியபீ டிகையின் வைத்துப் பெருகளி யுளான்போற் பூசை
யரியவாச் செய்திவ் வேழை யன்பிலே னளிக்குஞ் சோற்றை
யுரியவாக் கொள்கென் றன்புத் துருக்குநெய் நிறையப் பெய்தான்
பொரியலா திபகூட் டெல்லாம் பொதியிலான் சுவைதேர்ந் துண்
டான். (௩௯)

உண்டிடு முனிவ னுள்ள முகந்தினி திருந்தா னக்காற்
கண்டிடு குடில னுமுன் கருத்துமுற் றிற்றென் றின்பாய்
மண்டிடு கைநொ டித்து மந்திரஞ் சொலிவா வென்ன
மிண்டிடு பின்மே டேர்ந்து வெளிவா முயன்றான் றேர்ந்தான். (௪௰)

களம்பிற ரறியா ரந்தக் கபடவில் வலன்வா தாபி
யுளம்பிழைத் திவண்வந் தோருக் கூட்டிமாய்த் தானென் றின்பார்
குளம்பிறழ் மகா மாமை குதித்தெனப் புரளுங் காலைத்
தளம்பிய தகடு கண்டான் றடங்கடல் குடித்த கோமான். (௪௧)

அகத்திய முனிவன் குக்கி யகைக்கலக் கிடுவா தாபி
மிகத்தியங் கிடவே செங்கை விரித்தனன் றடவி னன்மேற்
சுகத்தியல் வாச்சே மிப்பச் சொனன்சீ ரணத்தி யென்று
சகத்தியன் றிடுமித் தீமை தாளற வவனீ றிட்டான். (௪௨)

அன்னது வில்வ லன்கண் டகமிகச் சினந்தெ ழுந்தின்
றென்னது பின்னோற் கொன்று யினியுனைக் கொல்வே னன்றே
துன்னது கைபாற் சாவே னுறதியென் றுடன்வில் வாங்கி
மன்னது தாங்கி யம்பு மழைபொழிந் திட்டான் மன்னோ. (௪௩)

---

௩௭. தருவவில்வலன்—அசாவில்வலன். ௩௯. பொதியிலான்—கும்பன். ௪௰. மண்டிடு—மிகத்துடிக்கிற. மீண்டிடு—மதத்தாற்பிழை செய்கின்ற.

தூர்த்தன கணைக ளங்கி தொடுத்தவை யகியச் சாபம்
போர்த்தன னனைத்தும் பொன்றிப் போகவின் முறிந்து வீழப்
பார்த்தனன் முனிவன் றெவ்வோன் பதறிவீழ்ந் திறைஞ்சி வாழா
தார்த்தன னின்றெ திர்த்தா னுயுண்முற் றியதென் செய்வான்.

கெடுதலி னென்ன மெண்ணிக் கெடுதொழிற் செய்த பாவி
யடுதலி னிடைவி டாமல் லாடுதற் கவாய்முன் னின்று
விடுதலில் லாமை கண்டு வெகுண்டொரு சொற்றீ யேவிச்
சுடுதலின் மடிந்தான் வின்மற் றூயவர் சொற்கீ டாமோ. (௪௫)

வில்லினன் மல்லாற் றெவ்வை வெல்லுவில் வலனோர் மேலோன்
சொல்லினன் மடித லோர்ந்தோர் தூயமா முனிவர் தொண்டர்
மெல்லினு வலர்பா வல்லோர் மெலிந்தமை குறித்தெள் ளில்லார்
வல்லினு லெதிர்த்தாற் சாவார் வலிமைவாய்ச் சொல்லி னுண்டே.

வாழ்கவென் றக்கால் வாழ்வார் மாய்கவென் றக்கான் மாய்வார்
போழ்கதிர் பிறைவேய் வேணிப் புண்ணியன் றமிழ்தேர் மிகவோர்
தாழ்கவென் றசலந் தாழ்த்திச் சாய்கவென் றிருவ ரைச்சாய்த்
தேழ்கட முனிவன் வந்தா னிருந்தமிழ் நாட்டின் மாதோ. (௪௭)

காவிரி நங்கை யைப்பார் காக்குமா றுச்சோ ணுட்டின்
மேவிவாழ் கெனவைத் தான்றென் விசும்புறு பொதியச் சார்பாப்
பூவிரி செண்ப கக்காப் புடைவா விதுபோ லுண்டோ
நாவிரி தமிழ்ம ணக்கு நல்லிட மெனவ மர்ந்தான். (௪௮)

குழுகுமென் றிருவாய்ச் சிப்பூங் கொடிதழுஉஞ் சண்ப கத்தின்
சமுகநல் குலகாள் பாகன் றக்குமா லயங்கண் டின்பார்
சுமுகனுச் சித்தி ரைக்கண் டோய்ந்துநா டொறும்பூ சித்து
விமுகமாத் திரும ணங்காண் விழைவொடாங் கமர்ந்தான் கும்பன்.

அங்ஙன மிருக்குங் காலை யவாசியின் மெலிவ டக்கின்
பங்கமார் வலிதீர் வானுன் பாரது தாழ்ந்த பார்க்குச்
சங்கடந் தீரச் சற்றே தணிந்தது சமனுய்த் தீது
துங்கசோ டேச மில்லார்த் தூக்கிவாழ் வித்தற் போலும். (௫௰)

நடுவிகந் தொருபாற் கோடி நலிபவ ருளம்போ லாழ்பார்
கொடுவிதி வரினு மோர்பாற் கோடாமை பேண்சான் றோருள்
வடுவிலா நடுநிற் றற்போல் வளத்தபார்ச் சமனு நீற்றல்
கெடுவிரு வினையாப் பென்றாங் கிளத்தலாந் தகைத்து மாயால் ()

உலகெலா மவர வர்முன் புனற்றிய வினைதி னைப்ப
விலகெலாம் படைத்துங் காத்து மிறுதிசெய் வித்து மீண்டு
மலகெலா மவ்வா றேசெய் தணிமறைத் தருளி நிற்போன்
விலகெலா மெனுதெல் லாமும் விதித்தவிற் சமனுய்த் திப்பார். ()

கண்டனர் முனிவர் தேவர் களிதலை சிறந்தெம் பெம்மான்
மண்டருட் கழல்வ ணங்கி பணைனு யிடவ னைந்தார்
கொண்டலைப் பழித்த கூந்தற் கோமளக் கன்னித் தாயைப்
பெண்டன வூர்தி மாமுன் பிராட்டிமார் புனைதல் செய்தார். (௫௩)

நித்திய கலியா ணிக்கும் நித்திய கலியா ணற்கு
மொத்திய லியற்கைக் கோலத் துடன்செயற் கையும்பு னைந்த
பத்தியின் மகிழ்ந்து மாவும் பாமனு மெல்லெல் லோனிற்
சத்தியின் சத்தி மானின் றான்விடா தொருப்பா டுற்றே. (௫௪)

அம்மையா யப்ப னாகி யறன்வளர்த் துலகம் பேணுஞ்
செம்மையே விளையாட் டாய திருமணம் புரித லானுன்
மும்மையோர் பணிய நாதி முதலருட் பெருக்கா லன்ன
வெம்மையா னுடையோன் மன்ற லியன்றதத் தாமீ னத்தே. (௫௫)

பங்குனி யுத்த ரத்துப் பாமனைக் கும்பன் பூசித்
திங்கனே யெனக்குக் காட்சி யீவதா யருளிச் செய்தாங்
கங்கயற் கணிவ லப்பா லமரவெம் மான்ம ணப்பான்
மங்கல மியான்கண் டன்றி வாழ்கிலே னெனவெண் ணுங்கால்.

உலகநா யகிவ லப்பா லுலகநா யகனி டப்பா
லிலகநன் கிருப்ப வேத னியன்மணச் சடங்கி யற்றப்
பலகட வுளர்த வத்தர் படைத்தவன் களிப்ப மன்றற்
றிலகமா நடக்குங் காட்சி சிவன்முனி வனுக்கிங் கீந்தான். (௫௭)

இமையமீ தியல்கல் யாண மியலுமக் காலை தானே
கமையசெண் பகக்கா வாந்தென் காசியிற் பூசித் தோங்குஞ்
சமையசை வச்செவ் வேடத் தாய்த்தவன் காணப் பெற்று
னுமையொரு பாக னெங்கு முளானென றேற்ற மன்றே. (௫௮)

கண்டனன் திரும ணத்தின் காட்சியெஞ் சகங்கு ழைந்து
விண்டளி களிசி றந்து விழிகுளிர்ந் திருகை கூப்பித்
தெண்டனிட் டெழுந்தெம் மானே சிவையொரு பாகா தாட்காட்
டொண்டனே யோகா யெனைக் குறியனும் பொருளா னேனே. (௫௯)

அண்ணலே போற்றி போற்றி யயனொடு மாலுந் தேராப்
பண்ணவா போற்றி போற்றி பரையொரு பாகா போற்றி
புண்ணியா போற்றி சித்தா போற்றியென் மதிதி யாமுக்
கண்ணனே போற்றி மூல காரணா போற்றி போற்றி. (௬௰)

மெய்யறி வின்பா போற்றி விடையிவர்ந் துயர்த்தோய் போற்றி
துய்யனே போற்றி யன்பார் தொண்டர்க்குத் தொண்டா போற்றி
செய்யனே போற்றி சைவத் திருவனே போற்றி மானூர்
கையனே போற்றி வானோர் கடவுளே போற்றி போற்றி. (௬௧)

கடுவமிழ் தாக்கொ ளால கண்டனே போற்றி நக்குச்
சுடுபுர மூவர்க் காத்த தூயனே போற்றி நானு
மிடுமறம் பொருளின் பம்வி டயம்புகான் மறையோய் போற்றி
படுசிவா கமங்கள் கூறும் பாசிவ ஞானா போற்றி. (௬௨)

மாலயன் முனிவர் சித்தர் வானவ ராருங் காணிக்
காலருண் மணக்கோ லந்தென் காசியி லெனக்குங் காட்ட
லாலணித் திமய யோயா னறிதனீ யறிவாய் முப்பார்க்
கேலவிக் காட்சி யன்ப ரியாவருங் காணல் வேண்டும். (௬௩)

என்றிரந் தனன்கண் டாடிப் பாடின னிறைஞ்சி னன்காண்
வென்றிவெள் விடையு கைத்தோன் வேண்டுளங் கொண்டு கும்ப
னன்றிது நீகொள் பேறு நாடெலாம் பெறவ வாமுன்
முன்றிரு மணக்காட் டிந்த மூதுல கறிந்துய் வானே. (௬௪)

இன்றுமீ னத்த ரத்தி லியாந்தரு காட்சி யேபோ
லென்றுமே துலோத்த ரத்தி லியாருமோர் தாவு னக்கு
நன்றுவந் திங்கு நல்க நயந்தன மொவ்வோ ராண்டு
மொன்றுளன் பொடுவந் தேத்தி யுகப்பவர்க் கருணைக் கீவோம்.

எனவருள் செய்து விண்ணி லெழுமினின் மறைந்தா னெம்மா
னனவருட் காட்சி பெற்ற வகத்தியன் மனத்தக் காட்சி
யுனவர வமைத்துக் கண்டே யுகந்தவன் வைகுற் றானல்
பனவனக் காட்சி யேயைப் பசியினுந் தாத்துங் கண்டான். (௬௬)

மானவர் கண்டார் சித்தர் மாதவர் முனிவர் கண்டார்
கானவர் கண்டார் வான்வாழ் கடவுளர் கண்டார் நாகர்
தானவ ராக்கர் கண்டார் தமிழகப் பறைமா ஊர்வ
வேனவுங் கண்ட வெம்மா னெழின்மணக் கோல மாதோ. (௬௭)

அனைவரு மனைத்துங் காணு மைப்பசி யுத்த ரத்துப்
புனைவரன் மணக்கோ லத்தைப் போற்றுதென் காசி புக்கு
மனைவளர் பக்க ளோடே மகிழ்ந்துகாண் பவர்க்கின் புண்டா
மினைவனைத் துந்தீர்ந் தெண்ண லெண்ணியாங் கெய்து வாரால். ()

வந்திகள் மக்கட் பேறு வறியவர் செல்வப் பேறு
நந்திய பிணியர் நோய்தீர் நலமுடற் றிறனி லாதோர்
செந்திற லுடம்பு மூடர் திருந்திய கல்விப் பேறீண்
டுந்திய வெலாநன் கார்வா ருமைமண விழாக்காண் பாரேல் (சுசு)

ஒங்குசீர் முனிவி மூக்கா ணொருநூறு முனிதென் காசிப்
பாங்குசீர் பெறவி ருந்து படாமரீ பொதியி லாய
தாங்குசீ ரிருநா தத்தார் தவத்தருஞ் சித்த ராருந்
தேங்குசீர் கொடுசூழ்ந் தென்றுந் திகழ்தர வாழ்வா ரென்றான்.

கேட்டன ருகந்தா ரன்பு கெழீஇயவை மிசத்தோ ரைய
வாட்டமில் சண்ப கக்கா வாம்பிரு காவ தத்துங்
கூட்டமா தவர்மா யோகர் குகையுறை முனிவர் சித்த
ரீட்டமெவ் வளவி ருக்கு மென்றனர் சொல்வான் சூதன். (எக)

மக்கணூற் றிருப தாண்டு மற்றதிற் பதின்ம டங்காண்
டக்கமொன் றுநங் காக்கை யதிற்பதின் மடங்கு கூகை
மிக்கதிற் பதின்ம டங்கா விடவரா வாணு ளாங்குத்
தொக்கமா தவர்முன் னோரின் றொகையள விடற்பாற் றன்றே. ()

மாக்களா யிருப்பார் பல்லோர் மாங்களா யிருப்பார் பல்லோர்
விக்களா யிருப்பார் பல்லோர் விடவராப் போல்வார் பல்லோ
ரீக்களாய்த் தேன்சேர்த் தாட்டி யிறையருட் காளா வாரேன்
மோக்கமே யவாய்வாழ் மேலோர் முழுத்தொகை காண்ப தாமோ.

பிணிகளை யறிபார் மாலைப் பிரமனை யறிவா ரீசன்
பணிகளை மறவார் மக்கட் பதடிகள் செயன்ம றப்பார்
குணிகளை நட்பாக் கொள்வார் கொடியருக் கெட்ட மாட்டா
ரணிகவ ரிமையூர் கூற்றுக் கஞ்சிலார் வாழ்வார் பல்லோர். (எச)

மூலமு ணூலு கோட்டை முபற்சிபாற் கண்டு கந்தே
பேலவொவ் வொன்றுந் தாண்டி பேறிதி ராதா ரங்கண்
டாலமீ தானஞ் சேவித் தமிழ்ந்தமே நுகர்ந்து நாளுஞ்
சாலமா யோகஞ் செய்யுந் தகவின ராயி ரம்பேர். (எரு)

எக. நட்டல்—நெருங்கல்.

தலம்புனன் மூர்த்தி மூன்றுந் தாத்தவா மனுதி யென்னும்
நலம்புலப் படலா லாங்கு நயந்திருந் தாடிப் பூசித்
திலம்புற மாவி லங்கா வெனமா நிழற்புல் லால்வெய்ந்
தலம்புபொற் றொடியோ டுற்ற வருந்தவ ராயி ரம்பேர். (எசு)

அறம்பொரு ளின்பு விடு மறைமுது மறைநான் கோதித்
திறம்பொரு ளுணர்த்தா சான்பாற் சிறந்தநல் லன்ப ராகிப்
புறம்போதுங் காதா ராய்ந்தே பொழுதெலா மோட்டி ஞான
மறம்பொலி யறமே பேணி வாழுவா ராயி ரம்பேர். (எஎ)

சைவவா கமங்க டேர்ந்தே சரியையா தியநான் காற்றாற்
கைவரும் பயன்கை மேலே காண்பவ ராய்வாழ் வாரும்
பொய்வளர் மூன்று லோகப் போகமு முவர்த்தோ டம்பொன்
மைவரை பெறுதொப் பக்கண் மனத்துற வாய்வாழ் வாரும். ()

மாயனிற் பலவு கங்காண் வல்லவாய் வாழ்கின் றாருந்
தூயநற் சிகைபு நூலுந் துறக்கிலாத் துறவுற் றாருந்
தாயகப் பெத்த கேசித் தவந்தருஞ் சடைகொண் டாரு
மேயமுண் டிதமே லொரு மெத்தனை பேரோ வுள்ளார் (எகூ)

கரும்பொனைச் செம்பொ னாக்கிக் கிழவரைக் காளை யாக்கி [லோர்
யரும்பொரு ளுடையோ ராய்ப்பொன் னனூருடன் வாழ்வார் சில்
பெரும்பொலி வருளெண் சித்திப் பெரியராய் வாழ்வார் சில்லோ
ரிரும்பொதி யத்திற் பன்னெண் சித்தரு ளிவர்மே லென்றான். ()

அகத்தியன் திருமணக்காட்சி பெற்ற படலம்

முற்றிற்று.

ஆகப்பாட்டு எஅகூ

பதின் மூன்றாவது

குலசேகரபாண்டியன்

மகப்பேறடைந்த படலம்.

திருமணக் காட்சி குப்பன் றெரிசனை செய்தல் சொற்றும்
வருமணக் காட்சிக் கேது வாய்க்குல சேக ரப்பேர்ப்
பெருமணப் பொதிய வெற்பன் பெறுமகப் பேற டைந்த
வருமணக் கதைபி னிப்பா மதையினி யறைகு வாயால். (க)

எஅ. மை—பற்றியழுக்கு. வரை—தன்று.

களிதலை சிறந்து நேமிக் காத்தவ ரிருடி கேச
தெளிதமி ழகத்துக் காதை செவிக்கினித் தவர்ப்பில் லாம
லளிதலை சிறந்து கேட்டற் கவாமிக வாவ ரக்கா
நளிதாப் பெயலி னுய்த்தா னவில்கென நவில்வான் சூதன். (௨)

வயக்குமா ரோக நாட்டின் மாறன்பங் கலத்தை நாளும்
வியக்குமோர் தலைப்பே ரூரா னிரும்பீ னம்பொ[illegible] நித்தேர்
பயக்குமான் கொடியு யர்த்தப் பாண்டியான் [illegible]கை வென்ற
சயக்குல சேக ரன்றான் றனியா சுனுற்றி [illegible] (௩)

நரேந்திர னெனப்பா ராளு நற்குல சேக ரற்றுஞ்
சுரேந்திர னெனவின் னுளுந் துச்சவன் றனக்கு நட்பாய்ப்
புரேந்திர ரிருவ ரானோர் பொலிந்தவக் ந[illegible] லர்ந்த
மரேந்திரன் சயந்தற் பெற்றான் வரேந்திரன் மகவேட் புற்றான். (௪)

ஓங்குமூந் நக்க ரெற்கிவ் வுலகெலாம் மேலமுன் னின்று
நீங்குயர் செல்வ மெல்லா மிந்திர னுணைத் தந்தார்
பாங்குறு மகப்பே றொன்றே பயந்தில ரவரால் லாந்தங்
தாங்குசெய்த் தால்கேட் பானன் றருந்தில னிலங்கி டந்தான். (௫)

அன்பனுண் ணுனைப் பூம்பஞ் சணைவிடுத் தறைபொற் றுளி
லூன்படுத் தறங்கா னுய்ப்பா ருழிக்கிடை நோன்பு கொள்ளற்
றென்பழை யோர்வ ழக்கத் திறந்தெரி வரனி வர்கின்
றின்பரு ளிலையே லேச லெழுமென விரைந்தெ ழுந்தான். (௬)

இந்திரா வாழ்த்தி யுன்னி னேற்றமர் மகப்பே றூர்நாள்
வந்ததான் மகிழ்ந்தி நீநின் மலைபனால் கரிற்றென் னூர்ந்
துந்துசெண் பகக்கா வுங்கண் டுகந்துபூ சித்து வாவென்
றந்தணன் போல்வந் தாடி னன்றென னறிந்தெ ழுந்தான். (௭)

கண்டில னெம்பெம் மானே கண்வள ராவெ னக்கிங்
கொண்டிரு மேனி யேய்ந்தந் தனனில்வந் துரைத்தொ ளித்தாய்
மண்மைய வருடா னென்னை மாண்பதென் றருகி யன்பு
கொண்டினி தேத்திப் பாடிக் கூத்தனுப் மகிழ்சி றந்தான். (௮)

நங்கையா ரெனுமா தேவி நரேந்திரற் கிறைக ணுளி
னங்கையி னெல்லி போல வருள்வாங் கொளவ டுத்துக்
கங்கைநா யகன்று னென்னே கழறின னென்றாள் சொல்லச்
செங்கைமேற் கூப்பி யின்னே செண்பக வனஞ்செல் கென்றாள். ()

தொடர்ந்தனள் வழுதி யோகை துளும்பின னமைச்சர்க் கோதிப்
படர்ந்தனன் றேவி யோடும் பாடளி யாடா நாறுஞ்
சுடர்ந்தபொன் மலர்க்கா னண்ணித் தூயசித் திரப்பூங் கங்கை
யடர்ந்தனர் வளனெல் லாஞ்சூழ்ந் தாய்ந்தனர் களிசி றந்தார். (௰)

வந்திவண் காண மாட்டா வாணுளெத் தனைக ழித்தேஞ்
சிந்தனை சிவன்பால் வைத்த [illegible]த்தி
தெந்தா ளினும் ருப்ப வியாமெனை யறியா துற்றே
மந்தணன் கயிலை தானு மழகிவா றமையா தென்றார். (௰௧)

அத்தலைத் துணைவி யோடாங் கமருமா முனிவ ராரு
முத்தமிழ்க் கோன்வந் தானென் றெழீஇவா முடிமன் றாழ்ந்து
கைத்தலை மேற்கொண் டன்னோர் கழறுவாழ்த் தருளப் பெற்று
மெய்த்தவ வலீரீண் டுள்ள வியப்பெனை யென்றான் சொல்வார் ()

முனிவரர் பெருமை சித்தர் முதுதிறன் மாத வத்தோர்
கனிவளர் சீர்த்தி யோகர் நயம்பெறு காட்சி மாப்புள்
ளனிவள மாம ராமுன் கண்டபல் லாருயந் தாங்கித்
தனிவனக் கழல்சிந் தித்தார் தவத்தர்மாண் பெலாஞ்சொல் லிப்பின்

தீர்த்தமாண் பனைத்துஞ் சொற்றார் செண்பக நிழலின் வாழான்
மார்த்தனைச் செண்ப கத்தை யவாய்ப்பட ரிருவாய்ச் சிக்கிழ்ப்
பார்த்தவர்க் கிங்குந் தாயைப் பற்றிவிண் டனரின் பக்கண்
ணீர்த்தளி தனியு திர்த்து நிறைதரக் கேட்டு கந்தார். (௰௪)

காட்டுமி னெங்க ளம்மை யப்பனைக் கண்டி யாமுந்
தாட்டுணை பெறுவே மென்னத் தவமுனி வரர்கோன் பானு
மாட்டுறை முனிவர் பன்னி மாரா சியின்பா லுஞ்சூழ்ந்
தீட்டுவல் வினைதீர்த் தின்ப மீயுமா றணைந்து மூழ்கி. (௧௫)

ஆனந்த தீர்த்த மாடி யன்றுடக் கடன்மு டித்துத்
தானந்த மாதி யில்லாத் தனிவளர் திருமுன் புக்குக்
கோனந்த மாவில் லோடுங் கும்பிட்டர்ச் சனைபு ரிந்து
கானந்தன் கனிவிற் பாடிக் களிதலை சிறந்தா னக்கால். (௧௬)

அரசியோ டரச னங்கா ருந்தவ ரவரின் மார்கள்
பரசிடு மெவருங் காணப் பானிலிங் கத்திற் றோன்றிப்
பிரசின நங்கை யார்கைப் பிடித்தவிந் திரரவு னக்கோர்
வரசிசு வெம்பேர் கொள்சீர் வலியனுந் தந்தோமென்றான். (௧௭)

கிரந்தன னிலிங்கத் துள்ளக் காட்சிகாண் வேந்த மில்லுஞ்
சுரந்தபே ரன்பி லாழ்ந்து துதித்தனர் களிசி றந்தார்
நிரந்தர னருட்கா ளாமந் நெடியமன் மனைசீர் சூழ்ந்தோர்
பரந்தமா தவரின் ஞேரென் பார்பரா வுவர்பே றுற்றார். (௧௮)

பழந்தமிழ் நாடு காக்கும் பாண்டியர்க் கருள்பெம் மானைத்
தழந்தயிர் பால்மயா கன்னற சாறுசந தனக்கு ழம்பு
குழந்தைநீர் முதலா வாட்டிக் குளிர்நறுந் தழைபூத் தூவி
யிழந்திலா விதியாற் பொங்க லின்கனி வகைக ளூட்டி. (௧௯)

அன்பொடு பூசித் தேத்தி யாறுநா ளிருந்தே ழாநா
ளின்பொடு விடைகொண் டண்ண லில்லொடும் போந்து வந்தான்
மன்பொதி யிறைபாற் கொள்சீர் மாறன்மங் கலத்தார் தேர்ந்து
துன்பொழி தாநா ளும்போய்த் தொழுதுயத் தொடங்கி னூரால்.

அருள்பெறு நங்கை யார்கூ லாயினர் மூன்றுந் திங்கள்
பொருள்பெற வலமுக் கினகட் பொழிமருந் தூற்றி யாசான்
றெருள்பெறு புஞ்ச வன்னஞ் செய்முறை செயவின் பார்ந்தார்
சுருள்பெறு மலர்வி ரிந்த தோற்றமார்ந் ததுமாண் பாண்டி. (௨௧)

தமிழக வாசி னத்துத் தருமகன் னெறிவ ழாவாழ்
விமிழகந் திகழ வாறுந் திங்களி னிறைவி யுச்சி
சிமிழறன் மயிர்ச லத்தாற் றிருந்தவார்ந் தியல்சீ மந்தங்
கமழ்தாக் குருவந் தாற்றக் களிசிறந் ததுமன் பாண்டி. (௨௨)

மதிதிகைந் தீன்றுண் மேலோர் மகிழுநன் னளிற் றென்றற்
பொதியிலா ருலகம் மைபாற் புகழுவா ழூலக நாத
பதியெனும் விசுவே சன்பேர் பரித்துல காள வந்த
துதிமகப் பிறந்தான் வானஞ் சொரிந்தது பொன்பூ மாரி. (௨௩)

பெற்றவர் மகிழ்ந்தார் சைவப் பெருந்தவர் குரும கிழ்ந்தார்
நற்றவர் மகிழ்ந்தார் பாண்டி நாடெலா மகிழ்ந்த வார்த்தார்க்
கொற்றவன் மகிழ்ந்திக் கோமான் கொடைக்கரம் பிடிக்கப் பெ
பற்றலாய்த் தவமு யன்றுன் பாண்டி துதித்தான் சோன. [ண்ணின்

௧௯—தழம்—தயிலம். குழக்கைநீர்—இளநீர். ௨௨—இமிழகம்—இனி தாகிய உள்ளம். சிமிழறல்—கட்டமைந்த கருமணலையொத்த. சலம்—பன் னிருமுன்னால். வார்த்து—வகிர்ந்து

முத்தமிழ் நாடு மின்ப முதிர்தாப் புறநா டஞ்ச
வுத்தமோந் திரன்சேய் தோன்ற வுகந்தெழீஇ யுடுத்த தூசோ
டெத்தலத் திருத்த மூழ்காழ்த் திவர்தமிழ்ப் பொருநை யாடி
யத்தனைக் கெணிப்பொன் வெள்ளி யரியநற் றானஞ் செய்தான்.

கதிர்மகற் கண்டு தேனெய் கலந்துபொன் னுரைத்தி ழைத்து
மதிகுலந் தழைக்க வந்த மைந்தனுக் கூட்டி வேட்டுப்
பிதிரரை மகிழ்வித் தாற்றும் பிறங்கியற் சாத கன்ம
மெதிரிலா சிரிய னூலே யியற்றவின் பாய்த்துப் பார்க்கே. (௨௬)

அறநெறிப் படுத்து நன்மை யாக்குமிச் சாத கன்மம்
மறநெறி யுவர்த்துத் துய்தே யாக்கொளுத் தாப ன்ந்தான்
பிறகுபத் தாநாள் வீடு தொநீஞ்சுசி பிறங்கச் செய்தா
ருறவொடு மாறு நாளி லுலகநா தன்பே ரிட்டார். (௨௭)

அவாவுமா ணையுமாய் நாம காணநல் காக்கங் கொண்டு
தவாமறை வடிவா வூட்டிச் சருகுகாய் கனிமு லாதி
யெவாறுண வாலுந் தீதின் றியையனப் பிராச னந்தா
னெவாறுதிங் களிற்செய் தார்முன் னுலகமு முவக்க மாதோ. (௨௮)

ஆண்டதோன் றாக வந்த வாண்டுதொட் டெந்த வாண்டுங்
காண்டகு தோடந் தீரக் கடவுளா லயத்திற் காய
நீண்டநல் விழா வெடுத்து நிருபனை யெடுத்துப் போகி
யீண்டருட் சேவை செய்வித் தியல்பிர வாசஞ் செய்தார். (௨௯)

பிணிதடுத் தொளிமு கத்துப் பிறங்குவித் துடனன் றாக்கித்
திணிதரும் பிண்ட விர்த்தி செய்முறை புரிந்தா ரப்பாற்
கணிதமார் மூன்று மாண்டிற் காவல னெனக்காண் பிக்கத்
துணிதரு சிகைகாண் சௌளத் தூவினை முறைசெய் தாரால். (௩௰)

அறிவுநோக் காக்குந் தீக்கை யாமுப நயனஞ் செய்தார்
நெறியினை ருவ தாண்டி னெஞ்சினூற் காதிற் பூண்கள்
செறிதர வணிந்தார் வன்மை திகழ்தரச் சிவஞன் போங்கக்
குறிகுரு விடைகாண் டோயக் கிரமனங் கொளுத்தச் செய்தார்.

௨௬—கதிர்மகன் — சந்திரகுலமகனை. (செல்வப்புதல்வனை.) ௨௭— வயக்கொள்—ஆசைப்படும். ௨௮ —அவாவுமாணையுமாய் — நன்காதலும் இறைவனாணையுமுண்டாய். ௩௰—கொளுத்தல்—கலைகற்பித்தழுத்தல்.

சைவநற் குரவ னெல்லாக் கலைகளுந் தகவாத் தேற்றித்
தெய்வநல் லிருமு தற்சொற் றிருந்தவாய்ந் திருக்குங் காலை
கைவரு தவத்தின் சோழன் கன்னிபொன் மாலை தன்னை
மெய்வள ரன்பாற் பேசி வேட்பது குறித்தார் மன்னோ. (௩௨)

ஒருமையிற் கற்ற கல்வி யெழுமையு மூரஞ்செய் நீர்த்தா
லருமையா வுலக நாத வரசுவா சாந்தி பாடங்
குருதிரு முனர்மு டித்துத் தக்கணைக் கொடைத்தி றத்தாற்
றருநலா சீரர் காண்ட மோசனந் தகவா வாய்த்தே. (௩௩)

ஆசிநன் குறப்பெற் றோர்க்கே யதிசயப் படறா லுண்மை
பேசிடத் தோன்றும் வெற்றி பிறங்கிடு மப்பான் மன்னன்
தேசிக னிடத்தொ ழுங்காத் தேருநா ளெல்லா நோற்ற
வாசிகொள் பயன்சி வார்ப்ப ணைச்சமா விருத்தம் மாடி. (௩௪)

மணமக னாகித் தந்தை மனமகிழ் தாமா லீன்ற
குணமக டனைம ணந்து குவலய மதிப்ப வாழ்ந்தான்
பணமக னுப சேடன் பதுங்குமா னறிவார் தந்தை
தணமக்கற் காட்சி நல்கித் தவவனஞ் செலல்நு றித்தான். (௩௫)

ஞாலபா ரத்தை மைந்த னறுமலைத் தோள்சு மத்திக்
கோலமா மணிக்கி ரீடங் குளிர்ந்தநிம் பத்தார் செங்கோல்
சேலவிர் கொடிகொ டுத்துச் சிறப்பமா முடிசூட் டாற்றிச்
சாலவுண் மகிழ்வ தானான் றனிக்குல சேக ரன்றான். (௩௬)

மற்றவன் மைந்தற் கன்பா வழுத்துவா னெந்தா யிப்பார்க்
கொற்றவ னுவெற் குன்னைக் கொடுத்தவ னுலகம் மைபா
ஊற்றவோ ருலக நாத னேங்குமவ் விசுவே சற்கண்
டெற்றவ முலகா ளின்னே யென்னொடும் புறப்படென்றான்.( )

தந்தைசொன் மந்தி ரத்தைத் தலைக்கொடில் லுடன்கோ மானுந்
தந்தைதா யரும மைச்சுந் தகைப்பரி சனமு மின்பார்
சிந்தைய ராகிப் போந்தார் தென்மலைச் செண்ப கக்கா
வெந்தையார் வழிபா டாற்றி யின்பமிக் குடைய ரானார். (௩௮)

மாறன்மங் கலத்தை நோக்கி வரத்தொடங் குங்காற் றந்தை
சேறணன் றெந்தா யிந்தச் செண்பக வனந்தேன் பூக்கார்
காறலர் மணிபொன் பூக்க ணொடொழுந் தூவற் றென்ற
லேறவி சிடன்முத் தங்க ளிரவிலா தொளிர்தற் காண்டி. (௩௯)

௩௪—மாடி-செய்து. ௩௮—தென்மலை—பொதியமலை.

சுவைவருக் கைப்ப லாமா வாழைமா துளந்தென் னங்கா
யிவைமுதற் கனிவ ளங்க ளிலங்குமிங் கியோகர் சித்தர்
நவையிலா முனிவர் செய்மா தவரெலா நாளும் வாழ்வார்
சிவையொரு பாகன் பூசை செயற்கிது தகுவ தாமால். (௪௰)

ஆகவி னியானிங் கேயே யமர்ந்திறை வழிபா டாற்றி
யோகயர்ந் துறவுட் கொண்டே னுகந்தருள் விடையென் றிட்டா
னீகவ லலையெங் கட்கிந் நிலைதா ரூன்சேய் பெற்றோர்க்
கிசையென் றனடன் றுயு மிதுதடுப் பரிதா லொத்தான். (௪௧)

வேறு.

குலசேக ரேந்திரன்மா தவச்சாலை யென்றழகாக் குயின்ம
டத்தின், குலசேக ரேந்திரன்றன் மனைவிநங்கை யரொடுற்றுக்
குயிற வத்தர், நலசேக ரஞ்சூழ விசுவேசர் வழிபாடே நாளு
மாற்றல், வலசேக னுயமர்ந்தா னதேகுலசே கரமுடையார் மனை
னுங்கோயில். (௪௨)

நற்றவப்பெற் றவர்த்தவச்சா லைக்கணுற வைத்துலக நாத
மாறன், மற்றவர்தம் விடைகொண்டு சிவைபாகன் விடைகொண்டு
மகிழ்ந் திவர்ந்து, கொற்றமுயர் தருமாறன் மங்கலத்தெய் தரித்த
விசிற் கொலுவிற்றோங்கிப், பற்றலரெல் லாந்தாழப் பசுவறத்தர்ப்
பதியறத்தர்ப் பாராய்கா டாள்வான். (௪௩)

ஓங்குலக நாததென்னன் பொறைநீக்கி யுலகாளு முறுதி தேர்
ந்தூர், நீங்குகுல சேகான்சென் பகவனத்துத் தவச்சாலை நிறீ
இப்பன்னாளாத், தாங்குலக நாயகிபால் வளருலக நாயகன்றன்
றாள்பூ சித்தே, பாங்குநவ வடிவிறந்த சிவனருளாற் சிவனுலக
மடைந்தான் வாழ்வான். (௪௪)

குலசேகரபாண்டியன் மகப்பேறடைந்த படலம் முற்றிற்று.

ஆகப்பாட்டு ௮௩௩

௪௨—நலசேகரம்-நல்ல கூட்டம். ஆற்றல்வலசேகன்-ஆற்றலாகிய வலியசெயலிற்சமர்த்தன்.

பதினான்காவது

குழல்வாய்மொழியம்மை திருமணப்படலம்.

வழுதிகுல சேகரன்ம கப்பெறுவ ரங்கொள்
பழுதில்கதை யீதவன்ப யந்தமக னின்பா
ருழுவல்குழல் வாய்மொழியெ னும்மகளு டைத்தா
யெழுதவுல கம்மைதிரு மணமினியி சைப்பாம். (௧)

என்றனும ருந்தவரி ரண்டுகையெ டுத்தன்
பொன்றலொடி றைஞ்சினரு வந்தருண்மு னீச
மன்றலிது கேட்டுயர்வ ணந்தவழு ளேங்கோ
னன்றறைகெ னப்பரவ நல்கிடுவன் சூதன். (௨)

போற்றுலக நாதசெழி யன்புவிபொ றுத்தாண்
டேற்றுயர்கொ டிப்பானி லங்குமுள னாகி
நீற்றுநெறி முத்தமிழ்நி லம்பரவ வாழ்நாள்
கூற்றுளக டுங்குமெனின் கோன்சொலள வைத்தோ. (௩)

மாணுலக நாததெ னாட்சிவலி யாலே
காணுலக நூற்றிருப தாண்டுகழி யீற்றிற்
றாணுலக நாதனடி சாருமிடை சாவா
பேணுலக மெச்சுமிவன் பெற்றிபெரி தாமால் (௪)

முப்பொழுது மீசனைமு தன்மையளி யார்ந்தவ்
வப்பொழுது பூசனைய ழுக்கறவு னாற்றி
யெப்பொழுது மைந்துபய மில்லெனமண் காப்பான்
றப்பொழுது போக்குவன்க லைத்தொகைது ணிந்தே. (௫)

பெற்றவர்ம கிழ்ந்தருள்பி றங்குதவ மாற்றி
யுற்றபொதி யத்தருகு யர்ந்தபொன்ம லர்க்காப்
பொற்றலம டிக்கடிபு குந்துவழி பட்டுந்
தற்றலமுந் நக்கரடி தாழ்ந்துமுறை செய்வான். (௬)

௩—கோன்சொல்-அரசனதுபுகழ். ௬—தற்றலம்-தன்னுடையமாறன் மங்கலம்.

என்றவர்மு திர்ந்துலக நாதனுல கெய்த
லான்றவுல காண்டவனி றிந்துமகிழ் வோர்பா
லேன்றபிரி வாற்றலிய லாமையொரு பாலாய்ச்
சான்றவர்கு ழாத்தமர்த லாற்றணிவ தானான். (௭)

நாளுமொரு தீதுலக நாதனறி யானா
யாளுமவ னோர்குறைய டுத்தறித லாமோ
வாளுமுறை யிற்கிடைகொள் வானெதிரி யின்றே
சூளுமுல கெங்குமவன் சொன்னபடி செல்லும். (௮)

இங்ஙனமி ருக்கவுமொர் மைந்தனிலை யென்றில்
லங்ஙனம யங்கிடல றிந்தனனன் மாற
னெங்ஙனமு னக்கவனை னக்குமென முண்டாய்த்
துங்ஙனந மக்கினியஃ துள்ளாதுகொ லென்றான். (௯)

தேவியென னையனொரு செல்வனில னாகிப்
பூவினெடு நாட்பினொரு போக்கினுல கேச
னீவிலெனை நல்கியதெ டுத்தறைத லோர்வா
யாவியனை மேயவணி யாமடைவ மென்றான், (௰)

இருவருமி வாறுதனி யெண்ணினரெ ழுந்தார்
திருவருள்வ ளங்குலவு செண்பகம லர்க்கா
வருவதுது ணிந்துதனி வந்தனர்வ சந்த
பொருவலில வண்வழுதி யுற்றமட முற்றார். (௰௧)

வேறு.

முத்தோடு பொன்னுங் கொழிக்கு முதுதென் றாடி
நத்தோடு மானந்த தீர்த்தத்து நயந்து மூழ்கிப்
பத்தோடு நித்தப் படித்தாங் கழித்தான் மார்த்த
மத்தோடு மாற்றி யுலகம்மை கோன்முன் பணிந்தான். (௰௨)

வேறு.

தாப்புற மணத்த முந்தூத் தழநன்மாக் காப்பு மஞ்சற்
காப்புநெல் லிக்காப் பைந்து கல்லியஞ் சுவைச்சா றைந்து
தோப்புறு பலச்சா றைந்து சுரைநெய்பா றயிர்தேன் கன்னல்
கோப்புய சருணம் நாரங் கொழுமிச்சை தமரத் தாட்டி. (௰௩)

௮—சூளும்-ஆணையும். செல்லும்-கடைபெறும். ௯—உங்ஙனம்-அத்தன்மையால். ௰௨—அத்தோடும்-செவ்வையோடும். ௰௩—தழம்-தயிலம். சுரை-பசு, அருணம்-எலுமிச்சை. நாரம்-நார்த்தை.

த்ராடிம மிளநீர் காண்ட கத்தனீர் சததா ரைக்கர
ரீடிலா யிரதா ரைக்கா ரீகைபூ வில்வ நீர்கள்
பீடியத் தாட்டி யன்ன பிடேகமும் புரிந்து சந்தங்
கூடிய குழம்பு மாட்டிக் கும்பநீர் வளைநீ ராட்டி. (௰௪)

அருக்கியங் கொடுத்து மேலா கமவழி யனைத்துஞ் செய்து
பெருக்கிய நிவேத ஞதி பிறங்குற வமைத்துப் பூசை
திருக்கிளர் தாச்செய் தேத்திச் சித்தமெஞ் சிவன்பால் வைத்து
முருக்கிதழ்க் கனிவா யோடு முனரமர்ந் தியோகம் பூண்டான் ( )

வேறு.

அரச நீயிவண் மகவு வேட்டுவந் தனையு னக்குல கம்மை
யே, பாச ருந்தவப் புதல்வி யாகியுன் பால டுத்தனள் காண்
டிநீ, சரச மாரிவண் மணந டந்தபின் றழைபொன் மாலைவ யிற்
றிலே, வாச யக்குல சேகரத்திரு வழுதி சேயெனத் தோன்று
வான். (௧௬)

என்றெ மானருள் செயலொ டுந்தென னினிய யோகநினீங்
கினன், முன்றெ ளிந்தபொன் மாலையின்புற முன்பொர் கன்னியெ
ழின்மயி, னன்றெ லாந்திரண் டோர்மெய் கொண்டன நடைகொ
டம்மவென் றீன்றதன், மன்றெ ரிந்தவொர் மகளில் வந்துள
மகிழ வன்புகொண் டாடினள். (௰௭)

இறைவன் வந்துகண் டறிமு ஞவவ னெதிரொ னப்பவெ
னம்மையோ, டுறைய றத்திரு மடஞ்செல் வேமென வுரைத்தெ
ழுந்தனண்மூவருந், துறைய டைந்தன ரூட்டுந் தாயறு சுவையு
ணப்படைத் திட்டன, னிறைய வுண்டனர் நாடொ றும்பயி
னீர்மை யாயினர் நால்வரும், (௰௮)

அன்ன ரூனறி வானக் கன்னியிவ் வகில மீன்றவ ளென்
றதோ, ரென்ன மார்மனை விக்கு முட்டனை யினுக்குந் தேற
றவெண் முற்றவாங், கொண்ண லாளுமை யுண்ட தான்மயங்
குற்று றங்குவள் போன்றிறை, வண்ண மார்தவப் பாயன் மீத்து
யின் மன்னி னுளது போதரோ. (௰௯)

௪௪-தாடிமம்-தாதுமாதுளம். காண்டகம் - காண்டாமிருகக்கொம்பு.
ஈகை-பொன் பீடியத்து-பெரியவாத்தியத்துடன்.

தேவி யேநமைத் தொடரிக் கன்னியைத் தெரிதி யோவெ
னக் கேட்கமன், மாவி யப்பிவ ளியான்ப யந்தவொர் மகளில் வந்த
னள் பன்னரு, மாவி யன்னவிவ் வணங்கி யாரென வவன்ம கிழ்
ந்துல கம்மையே, பூவி னம்மையு யர்த்து செல்வியிற் போந்த
னண்மண மானபின். (௨௰)

தின்வ யிற்றிலெ னைப னைதமிழ் நிலம்பு ரக்கமு ளைப்பதா,
மன்வ ளத்தநிட் டையின மர்ந்துழி வரனெ னக்கருள் செய்த
னன், தென்வ ரைப்புர வலனெ னக்கிம சிகரி மன்சம னுவுல,
குன்வ னஞ்சிவன் றிருவு ளங்கொள னுறுத வப்பயனென்
றனன். (௨௧)

நாளை யான்பெறு மகவ ளர்த்தவ னன்ம னஞ்செபல்
காணவவ், வாளை மேலறி வேமின் றேயுல கம்மை யென்னை
யம் மாவெனக், கேளை யார்த்தழைத் தால்வ ளர்த்திடக் கிட்டி
னண்மணஞ் செய்யவென், காளை யூர்திநம் மருக னுவருங் காண்டு
மென்றுளு கந்தனள். (௨௨)

குழலி னின்மொழிப் பரைக்கி யாம்பெயர் கொடுப்ப தென்
னையென் றுனிறை, நிழலின் வாய்க்கவட் பெற்ற வன்பெயர்
நிகழ்த்து கென்றன டேவியாங், கெழலி னெண்ணமு மொழி
யு மொத்துவி னிருந்து பேர்குழல் வாய்மொழி, மழலை நங்
கையென் றழைமி னென்றொரு வாக்கெ ழுந்ததின் பார்ந்தவர். ( )

அருந்துங் தாயவண் வந்திக் கன்னியை யாரெ னத்தெரி
தற்கவாப், பெருந்து ளேனெனப் பணிந்து வேண்டினள் பெரிது
மன்பொடெம் மம்மையென், றிருத்து ரைத்தன ளிறைவி யோடி
றை யேற்ற கன்றனள் கன்னியுந், திருத்து றங்கியெ ழுந்த
தின்முகந் தேய்ப்ப நீர்வர வேண்டினள். (௨௪)

நீர்கொ ணர்ந்தனை முகங்க ழீஇத்திரு நீறளித்துமுன்
வைத்தவிர், கார்கொ டின்னுரை யாடி யைகினர் நயந்தக் காற்கு
ழல் வாய்மொழிப், பேர்கொ டேயழைத் துப்ப யின்றுளம் பெ
ரிது வந்தனர் நாடொறுஞ், சீர்கொ ளத்தமிழ் சைவ மோங்க
றந் திகழ வம்மைவ ளர்ந்தனள். (௨௫)

புரவ லன்மக ளோடு மில்லொடும் போந்து வந்தவண்
வாழ்நால், பாவ லாய்முனி வாரு மன்னவர் பன்னி மாரும
றிந்துவந், தாவ ளம்படக் கண்டு கண்டுசெல் லுவாவ் வாறெழு
மாதருந், தாவ ரைக்குல கன்னி மாரெனத் தாமெ ழீஇச்சதி
யராயினர். (௨௬)

உருப்ப மிக்கிள வேனில் வந்தமை யுணர்ந்தி ணங்கிக
ளோடமர்ந், திருப்ப வேகுழல் வாய்மொ ழிக்கிறை யெழின்வ
சந்தவ ரண்மனை, விருப்ப மோடெடுத் தற்கு ளங்கொடு வினை
தெ ரிந்தசிற் பர்க்கொணர்ந், துருப்ப டுத்திட மாறன் மங்கலக்
கோலை யுய்த்தனன் காணவே. (௨௭)

முதல மைச்சிருங் கோம கிழ்ந்துடன் முதற்ற ரத்துள
சிற்பரை, நுதல ருந்திற லுழைய ரைப்படை கோன்கும யோர்
த்தெரிந் துய்த்தனன், கதழ தரப்பெறும் பொருளு முய்த்தனன்
கண்டு தென்னன்ம கிழ்ந்துதன், புதல்வி யாருளங் களிதுறும்
பிடப் புதுக்கி னானொரு மாளிகை. (௨௮)

வேறு.

சூழச் சண்பகம் பவள மல்லிகை தூய சந்தனம் பாரி
சாதமே, யிழக் கொன்றைபா திரிமந் தாரைவெள் ளெருக்கு
நந்தியா வட்டை காந்தளே, நீழல் வெட்சிசெம் பாத்த மாத்தி
யன் னிர்செ ருந்திவெள் ளலரி குங்குமம், பேழக் காஞ்சிசெந்
தோன்றி மாதுளம் பிச்சி முல்லைநன் மயிலை காந்தியே. (௨௯)

இன்ன பன்மலர்த் தோட்ட மாவமைத் திலங்கு வேலி
நாற் புறமுங் கோலியே, நன்ன ராரண் செய்து வாயில்க ணான்
கி னும்படை காப்பு வைத்தவன், கன்னி கைதனை யேழு பாத
ராங் கன்னி மாரொடு தாய்பொன் மாலையும், முன்னின் றேய
ழைத் தேகல் வேளையின் முடிம னையிற் கொடுவைத் தாரரோ.

நாளோர் வண்ணமும் பொழுதோர் மேனியு நலம்பெ றக்
குழல் வாய்மொ ழிக்கரு, காளொ ரம்மையுந் தோழி மார்களு
மன்பொ டுற்றனர் வளர்த்து வந்தனர், வாளொண் கண்ணியுந்
தோழி மார்களு வனம லர்க்கொய்த லாற்றி னாடுதல், கேளொ
டுங்கழங் கம்ம னைமுதற் கேளி யாவிரு வேனிநீர்ந்தவே. (௩௧)

ஆடன் முற்றவுஞ் சிவன ருச்சனை பாவி பங்குமா லான
றிந்துளான், மாட மர்ந்துள தோழி மாரெழு மாத ருக்குமவ்
வுண்மை தோன்றுமா, றுட னைத்துமன் மகட்கு நல்வா னன்னை
விசனை நாடி நிற்குமால், நீட ருட்பெறு முலக நாதமன் னிறை
யில் லேடிறை பணிம றந்திலான். (௩௨)

௩௧. கேளியால்—மகளிர் விளையாட்டாலே.

அரன ருட்பணி வடிவ மாகியே யாரு யிர்த்தொகை நிற்
கு மந்தநா, ளுரன தாகவே யாட்சி மந்திரி யுழிவி டுத்திறை
மகண்ம ணந்தருள், பரன தாகவிங் கமர்ந்து செல்விபின் பணி
பு ரிந்தனன் வாழ்வ தாயினான், றிரன தாவிதைத் திருவு ளங்
கொளுஞ் சிவன ருள்விளை யாட னாடினான். (௩௩)

வேறு.

சாரலுள் விடாது தூற்றத் தகைக்குளிர் வாடை வீசச்
சோரவிந் திரகோ பங்கள் செம்மணிக் குலங்க ளூர்த
னோவெங் கணுமி வர்ந்து நிலவமா யினை டிப்பத்
தீரகே கயப்புள் ளோகை தினைப்பநற் கார்தோன் றிற்றே. (௩௪)

வேங்கைவண் கடம்பு கொன்றை மிளிர்குருந் தழகாப் பூத்த
தாங்குசெங் காந்தள் வெண்காந் தள்தள வங்கா யாப்பூத்
தோங்கெழின் மணங்க மழ்ந்த வுறுகரு விளைகூ தாளி
யீங்கலர்ந் தனவம் மைக்கிங் கிசையணக் குறிகாட் டற்போல். (௩௫)

தாமரை முதலா நீர்ப்பூத் தரணிநீள் கதிர்க்கை நீண்டா
தேமரு தோற்ற மெங்க ளிறைவிதோ ழியராய் வாணி
பூமரு திருவு நின்றார் புதுமண மவாய்க்கை கூப்பிக்
கோமதி நின்றார் நாமுங் குவிவமென் றிலங்கல் போலும். (௩௬)

அங்குமை நடைக்கு நாணி யன்னங்க ளுலாவ மாட்டா
செங்குழல் வாய்மொ ழிக்குச் செவிதருங் குயில்கூ வாவே
மங்குகார்க் கிர மைந்து வணக்கிளி வெள்ளை பச்சை
செங்கிளி யம்மை சொற்கற் றடங்குமீத் திரிதராவே. (௩௭)

இத்தகைக் காரி லம்மை யிலங்குசித் திரைத்தென் னாற்றை
யுத்தியா னத்தி னூடோ ரோடையாய்த் திருப்பி விட்டாங்
கத்தனன் பால மைத்த வழுகுபூ சனைம டத்து
ணித்தியன் பூசை செய்ய நித்தியம் போய்வ ரற்போல். (௩௮)

புறப்படுங் காலை யன்றப் புரிகடன் புரிந்து பூசை
சிறப்பமா மலர்வ னத்துச் சிவசிவ வகத்துட் கொள்கை
மறப்பிலா வம்மை புக்கு மலர்கொயு மொருநன் னாளம்
பிறப்பரி ரவிக திர்நாள் பிறங்குமப் பூங்கா வின்சார். (௩௯)

௩௩. உரனதாக—உள்ளக்கிளர்ச்சியுடையவனாக. மணந்தருள் பரனதாக—கலியாணஞ்செய்துகொடுக்கும் பொறுப்புடையவனாக. ௩௫. கருவிளை—காக்கணம். ௩௬. தரணி—சூரியன். கோமதி—சூரிய சந்திரர்கள். ௩௭. மீ-வானில். ௩௮. உத்தியானம்—பூந்தோட்டம்.

ஒருதனி மழவுக் காளை யுருவனாய்த் தோழர்க் தூர
மருவுமோவ் வோரா டற்கண் மனங்கொடு பிரிய விட்டோர்
திருவிளை யாட லாடிச் செல்லுநன் போல வந்து
கருவிழி யமிழ்தன் னாளைக் கண்டனன் முக்கட் பெம்மான்.(௪௰)

அயலக லாத தோழி யனைவரு மொவ்வோர் செய்கை
செயலிடைத் தலைநிற் பாராய்த் திரிந்தனர் நீங்கி நிற்ப
வியல்குழல் வாய்மொ ழித்தா யினிதுதான் றனித்து வேலி
வியலரா னுண்ணின் றோர்ந்தாள் வெடுக்கெனக் கவிழ்ந்து கொண்
டாள். (௪௧)

வேலியின் வெளிநின் றுக்கான் விமலனித் தியகல் யாண
னாலிய லணியின் மிக்க நோக்கமைந் திக்கு நிற்கு
நீலிய வுச்சி யென்மின் னிலவொளி வொசிவென் னென்றக்
காலியன் முக்கண் போலுங் காட்சியி லீடு பட்டான். (௪௨)

கண்டன னிம்மின் றெய்வக் காமரா ரணங்கோ வெற்பீ
னொண்டளிர்க் கைப்பெண் மானோ வொளிர்மணிச் சுடிகை நாகர்
பெண்டன மோநீர்த் தெய்வம் பெறுமிளம் பூவை போவென்
றெண்டகவயிர்ப்புற்றான் போன்றினைந்தன னிலைதேற்றெய்யான்.

அழகுயர்ந் துறினுந் தெய்வ வரம்பையேற் கற்பி லாள்வெற்
புழலிள பானேற் றாய்துற் றுறைகிலா னாக யின்னேற்
பழகியன் மாறிச் சீறும் பான்மைய னீர்வாழ் பெண்ணேற்
குழலிலா ளிவணன் காருங் கோமக ளெனத்தெ ளிந்தான்.(௪௪)

என்றனு ருயிரே யுன்னை யினிநியான் மணப்ப னானே
யுன்றனுட் கொளுமோர் நாத னுனக்கிவை யழகன் காண்டி
தென்றலார் மாடத் துற்ற தேவியே வசந்த வல்லீ
மன்றலா ருன்கா வின்மேன் மாடக்கோ யிற்க னுள்ளேன்.(௪௫)

என்னதே யுலக மெல்லா மென்னுடைப் பெருன் றந்தை
நன்னரார் தாக்கொண் டென்பா னன்புமிக் குளனாய்ப் பாராண்
மன்னனு னீ யென்னை மறக்கிலை விடைமேல் வாரா
வின்னவ னோ யென்றுள் ளெழுஞ்சினந் தணிதி யென்றான்.(௪௬)

உட்கருத் துணர்ந்து சொற்ற துணர்ந்துளந் தணிந்து மெண்ணங்
கட்கவர் குறிகா ரன்போற் கரணிலற் கடிவே யின்றென்
றெட்கனல் காலை தங்கா யியான்விடை மீது லாநீ
வெட்கவு வருவே னாளை விழாவது காண்டி யென்றான். (௪௭)

மேனுநீ மகிழ்வா னுடல் விழைந்துளே யின்று தொட்டுச்
சானுமென் வடிவுட் கொண்டு தவமது புரிதி வாழ்தி
யேனுமுன் றந்தை பாற்பெண் ணினிதுகேட் டுனைம ணப்பேன்
கோனுகா டிலாத்த ரந்தான் குளிர்திமென் றகன்றான் பெம்மான்.

வந்தன ளம்மை பூசை மடப்புகுந் தனண்மு கங்காண்
டந்தமென் மாறி யேழு தாயரு மேதோ நங்கை
சிந்தையுட் சினமு மின்புஞ் சேர்த்ததாய்த் தேதுஞ் சொல்லா
ளந்தணன் பூசை யாய்பின் னதைவினு வுவமென் றுற்றார். (௪௯)

பூசையாய்த் தெழுந்தா ளேந்தல் புதல்விபுத் தமிழ்தன் னாள்பா
லாசையா வுற்றுற் றுப்பார்த் தடரிணங் கிகளை நோக்கி
யேசையார் தாத்த னித்திங் கெனைவிடுத் தகன்றீ ருங்க
ளோசைநன் றெனச்சி னந்தாங் குரைத்தனண் முறுவல் பூத்தாள்.

புதுமையாச் சினத்த லென்னே புதுமுகப் பொலிவீ தென்னே
முதுமையா வுமது தொண்டே முயறவ மெனக்கோ னாங்கள்
வதுவைகண் டுவக்குங் காலம் வாலெதிர் பார்க்கின் றேமோ
லதுவுமார் நிமித்த முண்டின் றறிந்தியா மகன்றே மென்றார்(௫௧)

நல்லது பிழைத்த தூஉமென் னலங்கொடோ வெனாந கைத்தா
ளில்லது சொலினு மக்கின் பேதெனச் சகிமார் சொற்றார்
வல்லதும் பேசி னுண்மை வருவெளி யெனவ மைந்தாள்
சொல்லதுட் படநக் குற்றுச் சூழ்தலா யினர்மெய் தேர்வான் (௫௨)

மகேசைமுன் போனு ளோர்சார் வந்தனள் பின்னே காளி
சகேசைபால் வாகி விட்டுத் தனைப்பக்கெள மாரி போந்தா
ளகேசனில் விந்தி ராணி யகலநா ரணியுஞ் சென்று
விகேசையா முலக மாதா விருந்தன னுசாவி னாளால். (௫௩)

ஞானகா ரணியா மம்மை ஞானமூர்த் தியின்பா லின்றுச்
சூனநான் கொய்காற் காலைச் சூரியன் போல வந்தோர்
மானவ னென்னைத் தானே மணப்பலென் றனனஞ் சாமற்
கோனவ னார்பே ரெல்லாங் குயின்றன னியான்வி திர்த்து.(௫௪)

௫௰. இணங்கிகள்—தோழிகள். வசையார்தர—வசலை (வைதலை) ப் பொருந்தும்படி. ஓசை—கீர்த்தி. ௫௧. நிமித்தம்—சகுனம், காரணம். ௫௩. அகேசனில்—மருதநிலத்தலைவனாகிய இந்திரனுடைய மனைவி. (அகம்—மருதம்.) இகேசை—உலகைப்படைத்ததலைவி. ௫௪. சூனம்—மலர். விதிர்த்து—நடுக்குற்று.

விடைமிசை வாராமை நோக்கி வெகுளவுள் ளதைய றிந்து
விடைமிசை நாளைக் காண்டி வெகுளலிற் றணியின் றென்றான்
விடைமிசைக்குறிகாரன்போல்விளங்கினன்வெகுண்டேனென்னுள்
விடைமிசை வேறு மாடல்விழைந்தனம் புரிவே மென்றான். (௫௫)

ஐப்பசி யுத்த ரத்தி லவன்மணம் புரிவ தென்று
மெய்ப்பதின் றுரைத்துச் சென்றான் விளம்பித னுண்மை சோறி
கைப்படுந் துர்யா ளென்னக் கனிந்தவ ளுய்த்து ணர்ந்து
துய்ப்பறி வாற்றேர் மட்டிற் றுணைவனிற் கவன்று ளம்மா. (௫௬)

அஞ்சலை விடைமே னாளை யவனுலா விழாவுங் காண்பாய்
தஞ்சமாத் தாயு மானான் றொன்றொரு குறத்தி யாயும்
வஞ்சமில் குறியு னக்கு வழுத்தவு வருவான் காண்பாய்
மிஞ்சலர் துலோத்த ரத்தில் வெட்டலா மென்றாள் வாணி. (௫௭)

பிரதம மகாசிட் டிக்கண் பெருமகேச் சுரனெங் கோமா
னாமதி லசனோ டேநீ யுதித்தவ ளன்றோ வெள்ளாய்
வாணிவ னென்று மென்பால் வசந்தவல் லியெனக் கூய்த்
தாலெனைமொழியென்றாடாய்தருமதுதிறப்பேரென்றாள். (௫௮)

வாணிவாய் மொழிகேட் டன்னோன் வசந்தமா டத்தா ரேதுக்
காணிய லுணர்த்தே சொற்றான் கட்டிநீ யென்றுற் றாடாய்
பேணிவாழ் கால்வெ ளிப்போம் பிறைகடா ணியாம கேசை
யேணிவர் சூலி முன்னே றிணங்கிமார் வந்தா ரங்கண். (௫௯)

வந்ததும் மகிழ்வான் வாணி வசந்தவல் லிக்கெங் கோமான்
சுந்தர வடிவ னுய்க்கை தொடத்துலாத் தாநாள் வைத்துப்
பந்தியிற் சென்று னென்றாள் பலித்தது தவமென் றின்ப
வுந்தியிற் படிந்தா ரன்னோ ருகந்தெழீஇ வாணிசென்றான். (௬௦)

ஆசிவாழ் சாலை புக்கென் னம்பநம் மம்மைக் கின்று
பாசிவன் வந்தின் னின்ன பகர்ந்தனன் சென்று னஞ்செய்
வரதவம் பலித்த தென்று மறைப்பிலா தெல்லாஞ் சொற்றாள்
சாசோதி நீநல் வாக்குத் தந்தனை யினியா முய்ந்தேம். (௬௧)

எனமுக மன்பல் வாறு மியப்பியா னிதோவென் னம்மை
யனமுனைக் கொணர்வே னென்று ளவனுநன் றெனச்சென் றாளான்
மனமுக மலர்ந்து கோமான் மாட்டடைந் திறைஞ்சி நாமே
கனமுற லானே மென்றுக் கழறினள் செய்தி யெல்லாம் (௬௨)

௫௫. (3-ம்) விடைமிசை—அவனது எதிர்மொழியின்மேல். ௫௬. துய்ப்பறிவால்-அநுபவ அறிவால்.

கேட்டன னிருகை கூப்பிக் கிளர்ந்தெமான் கோயி னேக்கி
நாட்டமின் பக்கண் ணீர்கா லதிபினு டினனு மெற்கோ
சாட்டநீ திருவு ளங்கொண் டனையயான் காணேன் கைமா
றேட்டடிமலர்க்காட் கொண்டு விதோவெனப்பணிந்தேத்துற்றான்.

களவியன் முறைந டாத்திக் காட்டுவான் போலு மீச
னுளவிரா டொடுத்தைம் பானன் கொரீஇமண நாள்கு றித்த
தளவினைத் தினிநா ளைத்தா னுண்மிசை வருவ லென்றல்
வளவிரி காண்டு மென்றுண் மகிழ்ந்தன னிருந்தான் மன்னோ.()

அன்னைபொன் மாலை யூட்டு மன்னையோ டுறைக்கொண் டேகி
யன்னையே வசந்த வல்லி யமுதுகொள் ளெனப்பா லுற்று
என்னைநின் சொற்றட் டாதா னருந்துவ லின்று நாளை
யன்னைமார்க் குறைவெற் கோவே றறைகுவ லஃதி யென்றாள்.()

ஏதுநீ கேட்டா லுந்தா னியானிலை யெனமாட் டேனிப்
போதுணீ யென்று ளுண்டாள் புதல்விதாய் மகிழ்ந்தாங் குள்ள
பாதுகாப் பனைமார்க் கூட்டிப் பரிவுசெய் தெழீஇவந் தன்பற்
கோதுண வருத்தித் தானு முண்டனள் வழக்கம் போல. (௬௬)

ஈண்டிவ ளிருக்குங் காலை யினன்பிரா னுலக நாதன்
பாண்டிவி னேறி நாளைப் பவனியார் தால்கா ணற்கா (போன்
வேண்டிமுழ் கிச்செய் தற்செய் விழைவொடு போய்மீ ணவான்
மாண்டிரை குளித்தான் றிங்கள் மங்குலா றூடிற் றன்றே. (௬௭)

கதிரவ னுதிப்ப வெங்கள் கண்ணுத லமைச்சா நந்தித்
துதிபெற நிறீஇமால் வேதன் றோழரா வாச்சு ரேசன்
பதிமுத லெட்டுத் திக்குப் பாலரு முழைய ராகக்
கதியதா வாநி னைந்தான் களித்துடன் வந்திட் டாரால். (௬௮)

வேறு.

பழகுங் காலைக் கதிர்கோடி படிவொன் றுறல்போற் றிரு
மேனி, யழகி தாக்கொ ளிளங்காளை யாகி மறைக்கோ லணைம
சைத்துக், கழகம் பயினூற் கலையுடுத்தா கமவல் லவாட்டு
மேற்கொண்டு, குழகங் கக்கொய் சகநூற்றோள் கொடுகோ
மகன்போ னின்றான்கோன். (௬௯)

௬௬. ஈவிதோ-தேவசபையிதுவோ. ௬௭. திரை-மேலைக்கடல். மங்குலாறு-கொண்டலாகியவானதி.

மறைமுப் புரிநூல் வலம்படக்கேழ் வயங்க மார்பிற் பதக்க மின்ன, வறைமெயற் படுகுண் டலஞ்செவியுற் றசையத் தோளங் கதம்பிறங்க, நிறையொன் பதுகோ ணொளிக்கன் னிரையாப் பதித்தமுடி துலங்க, வுறைபொற் கழல்பூந் தாளொளிர வுகந்தெ ழீஇ நின் றருளிறைநேர், (எ௰)

நந்திப் பெருமா னாணைவழி நலமா ரணிகள் செயப்பட்டு, வந்தித் திடப தேவனன்பா வந்து நின்றான் கண்டுவப்பாய்ச், சிந்திப் பவர்க்கின் பருள்கோமான் சிங்க வேற்றி னடந்தேற் றிற், புந்திப் பரிவி னேறினன்பூப் பொழிந்து வானோர் துதித் தனரால், (எக)

இருபாற் றோழ ரடுத்துவர வியலா ரமைச்சு முன்னடப்ப, வொருவா துழைபோர் சூழ்ந்தியங்க வொருகோ மகன் வெள் விடையிவர்ந்து, வருவான் கன்னி மஞ்சுதவழ் வனத்தின் வளங்காண் பான்போலத், திருவார் முனிவ ரிருக்கைதொறுந் திருக்கண் சாத்திப் படர்கின்றான். (எஉ)

முனிவ ரியோகர் தவர்சித்தர் முதலாங் குளமாண் பினர் சூழ்ந்தார், நனிவெள் விடையூ ரிவனெந்த நாடா ளரசோ வென் பாருந், தனிவெண் பொடிப்புண் டரம்பொட்டாற் சைவ னிவ் வேந் தென்பாரும், பனிவெண் டிங்கட் குலக்கொழுந்தின் பதி யிம் மனனென் றறிவாரும். (எங)

உலகாள் குழல்வாய் மொழியெனப்பே ருமீஇமன் மகளாய் வளர்கின்றாள், குலவா வவள்காண் பான்விடைமேற் கொண் டா னிறையென் றுணர்வாரும், நிலவா வுலாவை யவரவர்தம் நிலைபோற் கண்டு களிகூர்வார், கலவா ரொருவர் தமையொரு வர் கண்முன் றுடையான் செயலதுவே. (எச)

அக்கான் முனிவ ரவர்மனைமா ரண்ண லுலாக்கண் டுருகு சுற்றி, யிக்கா வின்ன வளத்ததிக்கா வின்ன வளத்த தெனச் சொல்வார், மிக்கா ரழகன் வழுதிமகள் விழைதக் கான்கண் டாலவளுஞ், சொக்கா திராளிச் சொக்கனைபார் சும்மா விடுவ ரென்பர்மின்னர். (எரு)

எரு. சொக்காதிரான் — மயக்காதிருக்கமாட்டாள். சொக்கன் — அழகன்

ஓரா ளாவந் தானிலனே யுழைய ரமைச்சுந் தோழரொ டுஞ், சேராள் பலர்சூழ் தாவரினுஞ் செயலென் னுப்பல் வரி சையென்னே, நாரார் மணிவாய்ப் பொலிவென்னே நவிலு மின் சொற் பொழிவென்னே, காரார் மணிக்கட் பார்வையென்னே கமழ்நன் முகத்தின் விளக்கமென்னே. (எசு)

மார்பைத் தோளைக் கைமலரை வயிற்றைத் தொடையை மணிக்கழலை, யேர்புற் றுற்றுற் றுப்பார்த்தே யெறிவார் பெரு மூச் சிவனொருக்காற், சேர்புற் றினபார் தவமிலநாந் தினங் கண் டிடவு மீண்டிலையாற், சார்புற் றிவனுள் ளளவுமொன்றாய்ச் சரிப்பே மெனவுட் கொடுவருவார். (எஎ)

அம்பொன் வளைவீழ்த் தெடுத்தணிவா ரரைப்பூந் துகிலை யவிழ்த்துடுப்பார், செம்பொன் வரைவார் நெகிழநிற்பார் திருமுன் னிமிர்வார் தலைகவிழ்வார், வம்பொன் றியமார்ச் சாந்துகுப்பார் மலரார் குழல்சோர் தாமுடிப்பார், தம்பொற் பார்நா ணிழந்த ரைநாண் டனையு மிழப்பார் வருவாரால். (எஅ)

மெய்தான் பசப்ப தோராராய் விடைமேல் வருவான் றனை யுட்கண், டைதா ஊளந்து மகப்பட்டா னுன்மேற் கொளலு மெனையிவனெக், கைதா ஞனன் விடுகிலமேற் கன்னி மாடத் தருகிதிங்கென், செய்தான் காண்டு மெனநின்றார் சிறிது நேர நின் றுவந்தான். (எகூ)

உலகாள் பாகன் கோயிலினை ருானர் விடைநின் றிழிந் துள்புக், கிலகா விறைவன் குழாத்தொடுற விடப தேவு முட் புகுமால், விலகா முனிவர் முதலாரு வெளிநின் றகன்றார் தொழு தேத்தி, நலமா ரரிமுன் னோர்தத்த நாடு புகுந்தார் விடை கொண்டே. (அ௰)

வேறு.

உலக நாதனு நந்தியு விடையுமங் குவந்தமர்ந் தனராகத், திலக மால்விடை மேலழ கன்வரு திருவுலாக் கண்ணுற்றுங், கிலக ருட்குழல் வாய்மொழி நங்கைதன் னிறையெழிற் றேனு ண்டு, கலக வேண்மலர் வாளிதூ வாவழிக் கடிந்துள மயல் கூர்வாள். (அக)

எஅ. வார்— கச்சு. வம்பு— கச்சு. அரைநாண்— அரைப்பட்டிகை.
எகூ: ஐதான்— அழகுதான். செய்தான்—செய்வான். (காலமயக்கின்றது.)

வசந்த வல்லியம் மாகுழல் வாய்மொழீ வயவிடைப் பரியே
றிக், குசந்த ழைத்தமின் னார்முனி வோர்வளங் குழீஇயொரு
மழக்கோமான், புசந்த ழைத்தலைச் சுழையர்சூழ் வரவிதோ
போந்தன னிவனென், றெசந்த லைத்தயாழ்க் கலைமகள் சொல
விரைந் தெழீஇப்பல கணிப்பாலாய். (அஉ)

மறைந்து நின்றவள் கண்டன ளிவன் முனாள் வந்தவ
னெனவாணிக், கறைந்தி லாதுணர்த் தினளவ ளுணர்த்தலி னா
சியு மாசுந்தா, முறைந்த வில்லுளா யயலறி யாதுகண் ணுற்று
ளங் குளிர்ந்தாராய், நிறைந்த வன்பொடுற் றனரவன் வணங்கா
ளுணர் நிருபனுப் பிறர்கண்டார். (அங)

தலைவி கண்குளிர் தாவறி தற்கிவர் தலைவனூர் விடையங்
குக், கலைவி ளங்குமுக் கணிபல கணிவழிக் கண்டுகண் டின்பார,
நிலைவி டுத்தெழ நடத்துவான் வியப்பவந் நிலைபெய ராநிற்ப,
மலைவி யங்குமங் கயற்கணைப் பார்த்தனன் வானவள் கவிழ்ந்
திட்டாள். (அச)

விடைந டந்தது வசந்தவல் லிக்குள விழைவது பெரிதா
ய்த்தோண், ணுடைநெ கிழ்ந்திலை குழலசரிந் திலைவளை யுதிர்ந்
திலை வார்கிழ்ந்தின், றடைகு ழப்புகுந் திலையரைப் பட்டிகை
யவிழ்ந்திலை நாண்டீர்ந்தின், றிடைகு ழைந்திலை வனப்பசந் திலை
யுளந் திறையைவைத் துவக்கின்றாள். (அரு)

கருப்பு வின்மலர்க் கணைவலாற் கண்டிடே கருத்தழிந்
திடாய்வீணீ, யுருப்பு ரத்தவின் றனங்களு கியதிற லுணர்தியா
லுன்செய்கை, விருப்பு றேனெரிந் தெழுதவி னைதிசென்
மித்தைவாய்ப் பட்டார்ப்பார், திருப்பு கென்றன ளனையழைத்
தணைன்மணந் திகழ்நோற் பேனென்றாள். (அசு)

அம்ம நீயுள விடினெவ ருன்பரு ணயின்றிடா விடினும்
பாற், செம்ம ணப்பழ மெனினுமுண் டுறைகெனச் சேடிய ரிரந்
தார, னும்ம னத்தினுக் கிசைகுந னென்றனனுவலதைப்
பொன்மாலைக், கெம்ம னத்துறை கலைமக ளுணர்த்தவாங் கியன்
றதந் தரடொட்டே, (அஎ)

அஉ. குசம்- தனம். புசம்-தோள். எசம்- நரம்பு. பலகணி- சாளரம்.
அச. மலைவியங்கு-ஒத்தஒளியினையுடைய,மயக்கமுலாவுகிற,ஒத்தபெருமை
பிரிவாற்குறைந்த. அரு. குழம்புகுந்திலை-கலவையுதிர்ந்திலை.அசு. திருப்புக
-திரும்புக.வலித்தல்விகாரம்.

வேந்தன் செல்வியா வம்மைபோந் தகத்திபன் விழைந்
தவா தமிழ்நாடுங், காந்த னுழல கேசனை மணஞ்செயற் கண்
டுபக் காட்டாடற், பாந்த ராகிய வம்மையப் பரினம்மை பயினி
லைத் தவந்தானு, நீந்த னற்படு மெழுகென வுருகுநண் ணீர்
மையன் பரின்வாழ்வாம். (அஅ)

வேறு

ஊர்பெய ருருகுணங் குறியொன்றிலாச்சிவ னொளிர்வெண்
ணீற்றுச, சீர்பெறு முப்புண்ட ரத்தமுக் கூடத்துத் தென்ம
லைக்கோன், நார்பெறுஞ் சித்திரை யாற்றினன் பாண்டினன்
னுடன் பொன்பூ, கார்பெரு மணிபொழி கார்தவழ் பொழில
தென் காசி யூரான். (அகூ)

அறம்பொரு ளின்புவீ, டாயநாற் பொருள்பக ருந்தமிழ்
ப்பார், திறம்பொலி நான்மறைப் பரியின னேழுகத் தெய்வ
வேழன், மறம்பொடித் தோங்கற விளவிடைக் கொடியினன்
மன்றலிகை, புறம்பொதி வென்றியார்த் தறக்கமின் றோங்கு
முப் புகழ்மு ழாவான். (கூ0)

தண்ணரு ணிழல்புரி திங்கள்வெண் குடையினன் சடா
முடிக்க, ணெண்ணறை வாடாத கொன்றைமா லையனின வுயர்த
சாங்கப், பணணவ னடியவர்க் கடியனன் பர்க்கன்பன் பசுப
திப்பே, ரண்ணலொர் குறத்தியா வுருக்கொடு வெளிப்படலாயி
னனல். (கூக)

அறுபது வயதுள சுமங்கலை யாய்த்தள ராதசெய்ய, மறு
வறு யாக்கையண் மஞ்சளின் பூச்செசடு வயங்கு வெண்ணீ,
றுறுதிரு நுதலினள் சிந்துரப் பொட்டின ளுயர்கண் டாங்கி,
முறுகுடை யினள்சிறு மணிப்பாசி செங்குன்றி முத்தப்
பூணாள். (கூஉ)

சூடிய பிறையொரு கூடையா யிடுக்கினள் சூலந் தன்னை,
நீடிய பிரம்பதா வலக்கையின் வைத்தன ளொல்லி வெற்பி,
னேடியல் வானதிக் கரைக்குறக் குடியினின் றற்ற வள்போ,
லாடிய வந்தன ளுலகெலாம் பேர்பெற்ற வழகியன்னாள். (கூங)

அஅ. நீந்து-நீத்து,நிலைகடந்து (நீற்றென்பதன்மரூஉவெனினுமாம்.)

வசந்தமா டத்தயல் வந்துநின் றுள்வட வாயில் காப்பா,
ரசந்தநீ யாரையென் றுரியா னெல்லிவெற் பழகி யென்று,
ணிசந்தனைச் சொலவல குறத்தியே லென்னுள நினைத்தல்
சொற்பொன், றசந்தரு வேனென வொருவனஃ தாந்துலோத்
தாத்தி லென்றாள். (கூச)

மாடமீ சுமர்குழல் வாய்மொழி சே. ட. ன் வாயி லின்
கண். ..-மா னிற்பனை கழைத்தலென் றொளாரு வேலைக்
காரி, காடவ டனையழைத் தேகின ளோரிடை நண்ணி யாங்
கேழ், சேடிய ரோடம்மை வந்தனண் முனர்ப்பசி தீர்வித்
தாளால். (கூரு)

வயிறது நிறைந்தேப்ப மிட்டுவந் துட்கார்ந்து வாழ்த்தி
யம்மா, வுயிருவப் பான்குறி சொல்லறப் பயன்கைவந் துற்ற
திக்கால், வெயிலிடைக் காவத நடந்திளைத் தேன்களை விடாய்த
ணித்தல், டயிர்கரு காவழிப் பெயல்போலும் புரிதவம் பலித்த
தென்றாள். (கூசு)

வயதுபோ கியமட்டுஞ் சொலிச்சொலிக் குரியுங்கை வந்தி
ருக்கும், வயதுபோ கியவட்கு மறதியு முண்டாமுன் வலியென்
னென்றாள், வயதுபோ கியளலேன் குறிகேட்பி னுண்மைதான்
ம்பங்கு மென்னே, வயதுபோ கியளென மதித்ததென் னெனக்
குறி வழுத்து கென்றாள். (கூஎ)

குறத்திகள் வழக்கதாத் தெய்வமுன் வரித்துளங் குளிர்
வித் தமமை, யறத்திருக் கைமலர் நீட்டுவித் ததிற்பிரம் பமர்த்
துப் பார்த்துப், பிறத்தலா முண்மையை யுளமகிழ் தாச்சொலப்
பிரட்டெ னற்போற், சிறத்தலாய் மனக்கிடை சொலனிற்க
வென்பெயர் செப்பு கென்றாள். (கூஅ)

வேறு.

கண்ணு யிரத்தாற் காத்தவர் காளி கவிழ்வா னடிப்பவர்
பெண்ணு மிவள்பேர் சொல்லவா பெயரோ குழல்வாய்மொழிகனி
வண்ணார் வசந்த வல்லியா வயங்கிற் றெனவீ துரையினுந்
தண்ணார் மாடத் தினுமிளந் தலைபி னுங்காண் பென்றனள்.

கூச. அசந்த—அயர்ச்சியுற்ற, நகையிலையுடைய. (அசதி—அயர்ச்சி, நகைப்பு. தசம்—பத்து. கூரு. வேடமான்-குறத்தி, தன்கோலம்விட்டுவேறுகோலங்கொண்டபெண். கூசு. காவதம்—காதவழித்தூரம். கூஎ. வயதுபோகியளலேன்—(வய + து + போகி + அன் + அலேன்) வலியஅனுபவத்தையுடையஉலகவியாபாரியல்லேன். உன்வசத்தினின்றும்பிரிந்தமையால்வேறுசுகமனுபவித்தேனுமல்லேன், தளர்ந்தவளல்லேன் கூக. இளந்தலை—இளமைப்பருவம். காண்பு—காண்டல்.

பக்கத் திருக்குந் துரைச்சிமீர் பார்த்தீ ருங்க ளாசிசொல்
பொக்க மெனவின் றிருவரும் புகறல் சரிதான் புகலென
சொக்கக் குறத்தீ வயதுசொல் சோறுங் கேண்மி னீசனை
முக்க ணுசொல் வயதுபன் மூன்றிற் கொன்று குறைவென. (எ)

மணந்தோன் டன்னீர் கைப்பெரு மாளோ வப்பேர் சொற்றிலை
தணந்தோ ளாலுய் பார்குறி சரியா வெனவெம் முமாபதி
பணந்தோ ளணியா பகரிரு பக்கங் கழிந்தாற் கேட்டைநீ
குணந்தோண் மணந்தே யூரந்தினங்குறிக்கிற்பிறந்தநாளென. (எக)

குறிநீ சொலவிவ் வளவதோ குறத்தி சிறுதெய் வங்களைச்
செறிவா வரிப்பா ணீபெருந் தெய்வ மதூஉமாண் டெய்வமே
வெறியாவரித்துச்சொனுபதால்வேடத்தியோசொல்லென்றனள்
கிறியாசொனேன்பார்துலோத்தாங்கிட்டிற்றெனவே றென்னென.

வானுய்த் தேழு முனிவரர் வருவார் காளை மணமது
திரமுற் றிடுங்கா ணெனவிதே செப்ப நீகற் றதையலா
லூரமுற் றறிந்தின் றேவென வுனக்குத் தலங்குங் குறியிதா
விரமுண்டெனிற்சொல்லெனச்சுமாவிருந்தாள்குறத்திசென்றனள்

எணந்தேர் குறிசொல் வலாளென வியான்கொ ளெணம்
பொய்த்திடாவழி, வணந்தேர்ந் தடைந்தான் வலானென மகிழ்ந்
தா ளிருந்தாள் மகளதூஉம், மணந்தேர் தவப்பெற் றோருணர்
வராயின்புற் றமர்ந்தனர், குணந்தேர்ந் திடினோர் வடிவிலன்
குணற்காட் டெதூஉமாம் போலுமால் .(எச)

வேறு.

காசிபன் கௌதமன் புலத்தியன்மார்க் கண்டனுங் கீரசன்
வசிட்டனகத், தீசனிவ் வெழுதமிழ் வல்லுநரை யிறைவனுண்
ணுடின னுடன்வந்தார், மாசிலம் மாதவர்ப் பார்த்தருள்வாய்
மலர்ந்தனுப் பினனவர் பாண்டிநன்னுட், டீசனு மூலகநா தச்
செழிய னிடத்துவந் தனர்மகட் பேச்னாால். (எரு)

எ பொக்கம்—பொய், இன்று—பொய்யில்லை. சோறும்— சொல்லுதும். எக. தணந்தோன்—தப்பினவன். பணம்—பாம்பு இருபக்கம் - அமரபட்சம் பூர்வபட்சங்கூடிய ஒருமதி. குணந்தோன் — இலக்கணமமைந்ததோன். எஉ வெறியா —ஆவேசம்போல. வேடத்தியோ — குறத்தியோ, வேடக்காரியோ, கிறியா—பொய்யா, வேறு—வேறுள்ளகுறி, எங-இரம்—இருப்பது. எச-ஆட்டு—விளையாட்டு.

வந்தவ ருளமகிழ் வான்முகமன் வரிசைகள் பலபுரிந் தாசி யிடை, யந்தரங் கத்தருட் கலைமகளை யழைத்துளங் கலந்தறை திறஞ்சொலெனச், சிந்தனை மகிழ்ந்தவ ளறிந்துசொலத் திருமண வுறுதிசெய் துடன்முழுத்தஞ், சுந்தர னமைத்தலோர்ந் தந்தநன்னாட் டுணிந்தியன் மணவினை தொடங்கினரால். (௱௬)

வளர்கயி லாயமந் தரங்கந்த மாதன மேமகூ டம்மியயங், கிளர்தரு விந்தநீ லம்நிடதங் கேடிலிவ் வெண்குல மலைதூணாத், தளர்விலா மேருகள் சட்டமதாத் தனுதவான் பரப்புமேற் கொட்டகையா, வுளர்மழு மஞ்சுமேற் கட்டியதா வெளிர்பல நாள்களும் பதிமணியா. ○ (௱௭)

ஏழுகோள் களுமெழு வான்விளக்கா யியைந்ததிற் பந்தரான் றமைத்தழகாய், வாழுமைந் தருக்களா லோன்பதோளி வளக்குலக் கற்களான் வேள்விவரை, சூழுல கெலாமகிழ் தாப்படைத்துத் தொன்மையா கமப்படி யலங்கரித்துக், கேழுறு மட்டமங் கலங்கணிறீஇக் கேடிலாச் சிறப்பெலாம் புரிந்திட்டார்.()

வேறு.

குலசேக ரத்தென்ன் குயிறவச் சாலையே குலசேக ரம்முடை யார்மணஞ்செய், வலசேக ரத்திரு மணச்சாலை யாயிட வான்றொடு கரவண மமைத்ததன்கண், பலசேக ரத்தபொற் பாலிகை வாய்முளை பயிறரத் தெளித்தன ரயன்முதலோர், நலசேக ரத்துற மணிவிரிப் பிட்டனர் நடுமண வானுறத் தவிசிட்டார். (௱௯)

வான்றமர்க் கிருக்கையு மடுத்தமைத் தனர்நடு மணவரை மேற்கழ லியவூசற், றிரன்பெற மணிகளா லொளிர்தர நாட்டினர் திகழிருங் கற்பகம் பொலந்துகில்பூண், டான்பெறத் தேனுபா லறுசுவை யுண்டிசிந் தாமணி வேண்டுவ தாத்தரப்பெற், றான்பெறு வானகர் நாணவெல் லாமமைச் சுய்த்தனன் வந்தனனிருந்துகொண்டான். (௱௰)

அண்ணலு மமைச்சனுங் கலந்தன ராய்மகட் கருங்கடி விழாமிகச் சிறப்பாகப், பண்ணலுக் கருளொடு மன்பொடும் வருபொருட் பலவுநன் கமைதர மகிழ்கூர்ந்து, வெண்ணலுக் கியைதரத் திருமுகத் துடனுல கெங்கணு மரசரும் பெருங்குடியுங், கண்ணலுற் றறியவிழ் முனிவரு மன்பருங் கனிந்துவந் திடமுர சுழுமுப்பத்தார். (௱௰௧)

கலகமா ரியமனிங் கிடையிறப் பிலாமலுங் கடையினுஞ் சிவனடி சேர்வானன், கிலகற நெறியர சாட்சிசெய் மாறனுவியன்பத மிழப்பனே யெனவோச்சுங், குலகவு ரியன்கவுரியைமக ளாக்கொடெண் குணன்மரு கனின்வரக் குயிறவங்கூ, டுலகரா தத்தென்ன் றிருமுகங் கண்டன ருச்சிமேற் கொண்டனர் வருகின்றார். (௱௧௨)

வேறு.

கொல்லர் சோழர் கோளரே கொங்கர் தெலிங்கர் கருநாடர்
பல்ல வர்கன் னடர்போடர் பகர்சா வகர்குந் தளர்குடகர்
வில்லர் குலிங்கர் செஞ்சையரே விதர்ப்பர் விராடர் கல்யாணர்
வல்லவிவர்பன்னெண்மருமுண்மகிழ்வுற்றெழீஇவந்தனரன்பால்,()

அங்கர் கலிங்கர் காம்போச ரருணர் மராடர் பப்பரரே
வங்கர் துளுவர் கௌடர்சிந்தர் மகதர் சீனர் கௌசிகரே
கொங்க ணத்தார் கான்மீரர் கோச லத்தார் சோனகரே
சிங்க ளத்தாரெனும்பதினெண் டேய மொழிவல் லுநர்வந்தார்()

காசர் கிராடர் குருநாடர் கரிச ரிலாட ரொட்டியரே
யாசி னிடதர் நேபாள ரவந்தி யர்பாஞ் சாலர்சகர்
மாசவ் வீரர் யவனர் மச்சர் மாள வர்கூர்ச் சார்குருகர்
காசில் சூர சேனர்கே கயர்வை தர்ப்பர் வங்காளர். (௱௧௫)

சால வர்காந் தாரர்யுகந் தரா ரியர்தெங் கணர்கங்கர்
வேல மிலேச்ச ராம்புலிந்தர் விதேகர் குலிந்தர் சௌராட்டர்
சீல ராமுப் பதிற்றிரண்டு தேயத் தவரும் வந்திட்டார்
ஞாலப் பாண்டி பதினெட்டு நாட்டு வேண்மார் வந்திட்டார்.(௱௧௬)

வாத்தக் கார்வந் தனரோயார் வராதா ராரொனத்தெரிகா
லாத்த கடாரர் கூவிளர்முன் னோர்வ ரமை யுணர்ந்தசைக்குஞ்
சிரத்த மைச்சன் முன்னவருஞ் சேர்ந்தார் வந்து மகிழ்ந்தெழீஇப்
பேரய்த்
தாத்தாம்போல்வருவழிக்கண்டகைதீர்த்துய்ப்பார்ச்சரிபார்த்தான்

வேறு.

நிலவுல கத்தி லுள்ள நிருபர்தம் பரிச னத்தோ
டிலகுற வந்தா ரன்ப ரிருந்தவ ரொலாரு வந்தார்
விலகிட மிலாப்ப ரந்து விமலனு ரடிம லர்ப்போற்
பலருறற் கிடந்த ருஞ்சண் பகப்பொழி னிழறந் திற்றால். (௱௧௮)

௱௧௬-சிலர்—தருமச்சேத்திரத்தார். (குருசேத்திரத்தவர்.)

அவரவர் தரத்தின் மிஞ்ச வன்புட னமைச்சி ருங்கோ
விவர்தரு முகம னாற்றி யிடவச திகளு நல்க
நிவரவ னிருந்து ம்பாய்ப்போய் நிருபனைக் கண்டின் பாடி
நுவல்வசந் தப்பொன் மாட நோக்கியேத் தினர்மீள் வாரால். (௱௧௯)

உலகநா யகியே றாய்வேந் தொளிர்மக ளாய்த்த வஞ்செய்
திலகலா னாலகே சன்று னுயிரெலா மிழந்த போக
மலகலாப் பெறவு ளங்கொண் டனனறி நந்தி யெம்மான்
பலகட வுளர்வந் தாக நினைத்தனன் பரிந்து வந்தார். (௱௨௰)

மாலொடு மலரோள் கோடி மான்மக னவனாள் கோடி
மாலொடெண் டிசைகாப் போரவ் வாழ்க்கைய ரெட்டுக் கோடி
சூலொணா தியல்வ ளைக்கைத் துணைவியர் சகிமார் கோடி
சூலொணாப் பெறுந்து றக்கக் கணிகையர் கோடி சூழ்ந்தார். (௱௨௧)

புகழுருத் திரக ணங்கள் பூதமா கணங்கள் வீரந்
திகழ்குறட் படைக்க ணங்கள் பாரிடத் திறற்க ணங்கள்
நிகழ்கணத் தலைவ ரோடு நெடியபே ரன்பாய் வந்த
பகர்கண பதிசேய் வீர பத்திரர் வடுகர் வந்தார். (௱௨௨)

இருகதிர்ச் செல்வர் வந்தா ரேழுகோள் களுவந் துற்ற
குருவுடு வனைத்து வந்த குயிறவச் சனகர் முன்னோ
ரருள்வியாக் கிரபா தேசர் பதஞ்சலி யாரும் வந்தார்
வருதவ ரெலாரு வந்தார் வரன்றம ராக மாதோ. (௱௨௩)

பிள்ளைவீட் டார்பெண் வீட்டார் பிரிகிலர் செறிந்து வைக
வெள்ளைய திரைப்பா லுந்தி வெளியதி னுயிர்க்கு மூஞ்சேர்
தொள்ளையிற் பூமிதேவி துயலவுய்ப் பவனு நந்தி
யுள்ளைய னம்மை யன்ன வுடைமையா னிலைகன் றாய்த்தால். (௱௨௪)

மதுக்கிளர் செண்ப கப்பூ மானிழற் கட்பொற் கோயிற்
புதுக்கியுள் ளலங்க ரித்தோர் புதியபீ டத்திற் கோடி
விதுக்கிளர்ந் தெனப்பொ லிந்து விளங்கினான் வானுங் கெய்தன்
பொதுக்கமார்ந் திறைஞ்சிச் சூழ்ந்தா ருடனெழீஇ விடைமேற் கொ
ண்டான். (௱௨௫)

௱௨௰-அலகலா—அளவில்லாமல். ௱௨௧-மால்-விட்டுணு-மால்—இந்திரன். சூலொணாதியல்வளை — குடைந்தாக்கப்படாதவியற்கையாகவமைந்தவளையல்கள். சூலொணா-கருக்கொள்ளாமல். ௱௨௪—வெளி—ஆகாயம். தொள்ளை-மரக்கலம். உள்ளையன்—உள்ளதன்மை. ௱௨௫—ஒதுக்கம்—ஒழுக்கம்.

திருமணக் கோலன் வந்தான் சிலைதவன் வந்தா னித்தப்
பெருமணத் தவன்வந் தானான் பெருங்கொடி யுயர்த்தோன் வந்தான்
தருமவெள் ளேற்றன் வந்தான் றனிமுதல் வந்தான் வந்தான
மருகுழல் வாய்மொ ழித்தாய் வாவெனச் சின்ன மார்ப்ப. (௱௨௬)

பார்கதிர் போல்வெண் ணீற்றுப் பரன்றமர் கடல்போற் சென்னி
மேற்கா ராய்வா னோர்வான் மினார்தனித் தனிச்சூழ்ந் தேழக்
கோற்கா மீட்ட ரம்பை குழீஇவாச் சுராரைம் மேளஞ்
சூற்கரு முகிலி னார்ப்பச் சுபமுரா சரக்கர் கொட்ட. (௱௨௭)

விஞ்சையர் தாளந் தட்ட விறலிமார் பாடி யாட
வஞ்சலித் தருள்கொள் வாண னவிர்குட முழாமு ழக்கத்
தஞ்சமார் பானு கம்பன் சங்கநா தம்மெ ழுப்ப
நஞ்சையர் களற்பா டன்பார் நாகர்வாய்த் துதியிக் கோங்க. (௱௨௮)

ஆற்றுமின் மாரேழ் பேருஞ் சாமர மசைப்பத் திங்கட்
பேற்றுவெண் குடைகு றட்கைப் பிடித்தெழ விடிவா லன்னம்
சாற்றுபுள் ளரசு தாழத் தனிவிடைக் கொடியு யர்த்தோங்
கேற்றுறை யிறைவ லத்தெண் கணனரி யிடத்தி யங்க. (௱௨௯)

வரன்வர வெதிர்பார்த் தோங்கு வழுதியு மமைச்சு மேலாந்
தரன்வல வரசன் மாருந் தவவலா ரியோகர் சித்தர்
திரன்வளர் முனிவ ரனபர் திருநெறி யறவோ ராரும்
பரன்வழி நிற்ப வேழு பரவையாத் தெழல்போற் கண்டார். (௱௩௰)

முழுமுகம் பொருள்வந் தானான் முகனரி யான்றாழ்ந் தேத்து
முழுவல்கண் டருள்வோன் வந்தா னுயிர்க்குயி ரானோன் வந்தான்
பழுதினான் மறைதே றாமெய் யறிவின்பப் படிவன் வந்தா
னெழுதரு வசந்த வல்லி யிறைவந்தா னெனும்பொற் சின்னம். ()

கேட்டனர் கிட்டக் கண்டார் கெழீஇயெதிர் சென்றார் போற்றி
நாட்டமிக் குகந்த ழைத்து நடந்தனர் வந்தார் முன்றில்
கூட்டமாத் தமிழ்ப்பார்ச் சைவ குரவர்பொற் கலச நன்னீர்
சூட்டா சிலைசேர் தர்ப்பை தோய்த்துவாழ்த் தினர்தெ ளித்தார். ()

௱௨௭-கோல்-யாழினரம்பு. ஐம்மேளம்-தோற்கருவி, தொளைக்கருவி, கஞ்சக்கருவி, நரம்புக்கருவி, மிடற்றுக்கருவி. சுபமுரசு— மணமுழவு. ௱௨௮—விஞ்சையர்-வித்தியாதரர். விறலி—பாடன்மகடூஉ. நாகர்- வானவர். ௱௨௯-இடி-இடிக்கொடி.

மங்கலப் பாட்டி மார்முன் வந்தவர் தமிலொ ருத்தி
தங்கலட் டிற்க னிராஞ் சனஞ்சுழற் றினள்வி டுத்தா
டுங்கநெய் விளக்குச் சத்தி தோட்டிசா மரங்கண் ணாடி
யங்கடம் மணிமு ழாக்கண் டவிர்சுடர் சூழப் பார்த்து. (௱௩௩)

நான்மறை யோர்சு வத்தி நயந்துரத் தோத நந்தி
கோன்மலர்த் தடக்கை பற்றிக் குணவிடை நின்றி றங்கி
மான்மல ரவனீட் டுங்கை மகிழ்ந்திரு மருங்கும் பற்றிக்
கான்மலர்ப்பாவல்வைத்துக்கவின்குடைபற்றிச்சென்றான். (௱௩௪)

திருமணப் பந்தர்புக்குத் திகழ்தவி சமர்ந்து சூழ்ந்தார்
மருமலர் யன்மால் வேந்தன் மானுருந் திரர்முன் னோரைத்
தருமவ ரவரி டத்திற் றங்கிடப் பணித்தே னோரை
யிருமனிக்கம்பலத்தென்றிறைகடைக்கணித்தானுற்றார். (௱௩௫)

வேறு.

மூவுலகத் தருமிமய முடிகவிழ வம்மையப்பர்
மேவுமண விழாக்காண மிடைந்துவந்தார் தென்மலைக்கண்
பூவுலகாய் வடாதுகும்பற் போக்கலின்றிப் பொறுத்ததிறன்
மேறவுநடு நிலைச்சைவஞ் சிறந்ததமி ழகநலமே. (௱௩௬)

மணித்தவிசார் மணளனென வந்தபாஞ் சுடர்திருமுன்
கணித்தமுன்னைத் தயத்தமெல்லாங் கண்டுபணிந் தேத்தியருட்
கணித்தவரா யினர்வதுவைக் காமோரை படுக்குமட்டுங்
குணித்தவரம் பையராடுங் கூத்தருட்கூத் தன்காண்பான் (௱௩௭)

மேனகையூர் வசியரம்பை திலோத்தமைமாண் விசுவாசி
மானகிரு தாசியலம் புடையபலை வாசபதி
பானுமதி சகசநியை பூர்வசித்தி பஞ்சசிகை
மீனனங்க திலகையனு மிலோசைபுஞ்சி கத்தலையே. (௱௩௮)

கேடிலிரம் மியைமிசிர கேசிகிரு தத்தலைமுன்
னடிபலோ ரமகளி ராங்கணிகை மார்நடித்தார்
காடிமகிழ் தமிழகத்து நாடகநூற் பாடினிமார்
கூடினர்வந் தாடினரெங் கோமானுட் களிசிறப்ப. (௱௩௯)

இருகாத்தார் நடனமுங்கண் டினிதுசிருங் காரமது
கருதரனைந் தொழிற்கூத்தன் கனியருளாட் டமைந்ததிது
கிருதாவ ரவர்தெரிந்த கேடினடஞ் சிறந்ததென்று
வருதரம்போ லருட்கொடையான் மகிழ்வித்தா னிருந்தானால்.()

ஆட்டங்கண் டிறையுறைகா லம்மைகுழல் வாய்மொழியைக்
கூட்டங்கத் திருத்திமின்மார் குழீஇநான மணிந்துகுழம்
பீட்டங்கை முகந்தப்பி யின்மணநன் னீராட்டிப்
பேட்டங்கத் தொற்றுடை பிறட்டநண்பொற் கலையுடுத்தாள்.()

தென்னரினத் தாற்றிற்சை வாசிரியர் செங்கையின்கண்
நன்னருறு தானங்க ணறுமலர்க்கை யாலருள்வித்
தன்னநடை வசந்தவல்லி யணிமணக்கோ லம்பெறுவான்
பொன்னனையுங் கலைமகளும் புனிதவத்தாற் புனைந்திட்டார். (௱௪௨)

வேறு.

குழம்புதோய் பஞ்சிமெல் லடியமுத்திக் குழன்மிசை மணமயிர்ச் சாந்தொழுக்கிப், பிழம்புகொண் ணகின்மிசைப் பனிநீரிற் பிறங்குதேஞ் சந்தனக் கலவைகொட்டி, மழம்புதுப் பிடிநடை மலரடிக்கண் வளத்தபா டகந்தண்டை பாதசர, முழம்புகிண் கிணிச்சிலம் பொலிரப்பெய் துகந்துகண் டிறைஞ்சிமுத தாடினரால். (௱௪௩)

விளங்குமுப் பதிற்றிரண் டணிக்கோவை விரிசிகை யேழுமூன் றியைகலாபங், களங்கமி லேழிரண் டவிர்பருமங் கணித்தவெண் கோவைய மேகலைப்பூண், டுளங்கிரு கோவைய காஞ்சியைந்துந் தூயதாய் நடுநிலை புகழுமண்ணி, வளங்கவின் சதங்கைகொண் டொளிப்பசும்பொன் மணியகூரப் பட்டிகை மேவிறுக்கி.()

சங்குநந் திப்பிமீன் கொக்கருண்முத் தம்மணி யவிர்மலர்க் காத்தாழி, யங்குலி தொறுமிளிர்தா வணிந்தோ விர்சரிகடகமொண் டொடியுமிட்டுச், செங்கதிர்ப் பவளமா லிகைபெருகித் திலச்சர மாகத மணியரித்தார், பொங்கழ குக்கழ காக்கழுத்திற் புனைந்து பாற் குடத்தொளி பொலிவித்தார். (௱௪௫)

குருவயி ரப்பெருங் கற்பதித்துக் கோமதி நாமெனொளி விடு
ம்கா. வுருவபொற் றேடிரு நெடுஞ்செவிசேர்த் துயர்ந்தமூக்
கினிற்றழுக் கொளிருநத்திட், டருவளக் குழன்முகின் முகம
திக்கூ டாக்கிடை யரிவிலிற் பட்டநுதற், றிருவணி வனைந்து
மேற் பிறைவட்டஞ் செறித்துமா மணிமயிர் மாட்டிகொளீஇ ()

தலையணி யுத்திரன் ருத்திருத்திச் சங்கிரு தொளிர்மணி யின்
றுசற்றி. நிலையணி யாவுறல் போற்கழுத்தி னீடுமுத் தலங்கலுட்
கட்டிட்டு, விலையணிக் களக்கொளுப் பெருமையவா விரித்தவுஞ்
செவிமலர் கிராம்பலர்ப்பூண், மிலையணிப் பொடிகளும் பூட்டினர்
மேல் வெணீறிடுங் கடன்முறை செய்வித்தார். (௱௪௭)

மலர்க்கரு மணிவிழிக் கழகுசெய்வான் மையெழு தினர்பிறை
நுதலினெல்லார்ந், தலர்க்கதிர் வீசலிற் சிந்தூரப்பொட் டமைத்
தெழிற் குயத்துநற் கலவையட்டி, யுலர்க்கரி விசிறிடா ளர்சு
ழற்ற வுழுமணக் குங்கும மான்மதந்தொட், டிலர்க்கமின்
னிடைச்சியென்றுய்மேனிக்கியைந்தகோலத்தொயிலெழுதிட்டார்.

மணிப்பொனு கப்பணிப் பின்னலின்மேல் வனைந்தனர் பெருந்
தகை வழுதிதிரு, மணிப்பொனு லளகையோ னிந்திரனின் மடங்
கியோ னலனெனல் போன்றுவெள்ளை, யணிப்பொனு ளணிதர
வெடுத்தெடுத்தன் பார்ந்தரு ளினன்செல வணிந்தவர்மே, லணி
ப்பொனர் பிச்சிமுல் லைமயிலை யாதிநன் மலர்த்தொடை சூட்டி
நின்றார். (௱௪௯)

வேறு.

மாணுலக நாதசெழி யன்றவம கட்கண்
டேணுறுக லன்பொடுவ லஞ்செய்திரு கண்ணுட்
காணுவகை யார்ந்தனர்க ருப்புரவி ளக்கா
லாணுறுக ணைச்சில்கழி வாற்றினரி ருந்தார். (௱௫௰)

இந்தவண மெம்மிறைவி ருங்கடிய ணிக்கா
னந்தவுடை யார்த்தணிக யந்துகொ டிருந்தான்
செந்தமிழ கத்தியல்சி றப்பமண வெற்பி
னந்தணனை வாசிரிய னுவதுசெய் தாற்றான். (௱௫௧)

௱௪௬. அரிவிலின்—இந்திரதனுசைப்போல. பட்டம்—நெற்றிப்பட்டம். வட்டம்—சூரியவட்டம். ௱௪௭. தலையணி - தலைக்கோலம்- உத்தி- இணைக்கமுற. ௱௪௮ எல்—சூரியன். உலர்க்கரி—உலர்தற்குக்காற்றவா. இலர்க்கமின்—இல்லையெனும்படி சுருக்கமாய் மின்போலும். ௱௪௯ மணிப்பொனகப்பணி— கவாத்தினங்களமைத்துப்பொன்னாற்செய்யப்பட்ட சடைநாகம். அணிப்பொனர்—அணியத்தக்க அழகுபொருந்திய.(அழகிய பொன் பேதன்றஆத்தி) ௱௫௧ ஆனந்தவுடை—முழுத்தவேட்டி, மணவெற்பு-மணவறை

வைத்தநுண லோனாவா மாவிசைம டந்தை
யுத்தமியை மாலொடய னுத்தமனை யாங்காங்
கத்தமலர் பற்றினா ழைத்தனர்கொ ணர்வா
ரித்தலர்வி ணோரினிமை யெற்றிலக ணுற்றார். (௱௫௨)

விண்ணவரோ லிக்கருவி யைந்துநனி விம்ம
மண்ணவரா வைந்தையும வம்பெற முழக்க
வண்ணனுறு பேரிரா சார்ப்பமறை யெங்கப்
பண்ணமா ருந்தமிழ்ப ாவுதொனி யோங்க. (௱௫௩)

ஆர்த்தனவ லம்புரிக ளம்பொனலர் மாரி
தூர்த்தனவிண் சாமரைக ளங்கினயி ரூர்வாய்
சீர்த்தநுதி வாழ்த்தொலிசி றந்ததுத மிழ்ப்பார்
நீர்த்தணிக லார்குரவை நீடிமிழ்க லைத்தால். (௱௫௪)

பைப்பயம லர்ப்பொனடி பார்மகிழ வைத்தே
யெய்ப்பறுமொர் வேழமுனி ளம்பிடியின் போந்து
தொப்பநடை கொண்டனரொ ரிர்மணவ ரைப்பா
லப்பனிட மம்மைவல மாகணிய மர்ந்தார். (௱௫௫)

தந்தையொடு தாய்மகிழ்த ருங்கடிசி றப்ப
மைந்தனைமுன் பூசைசெய்வ ழக்குமிசை காப்ப
தந்தணனு மாபதிகை யாப்புறுவ முக்கு
மிந்தநில னுளுமிய றற்கியல்வ தாய்த்தால். (௱௫௬)

ஆங்குலக நாதிதென னன்பொடுமெ மான்பொற்
போங்கருள்வ லக்கையினு கந்துமக ளாய்மெய்
தாங்குமை வலக்கைமலர் தந்துமறை சொல்லித்
தேங்கமழ்ம்பொன் மாலைபுனல் சிந்தவா னேற்றான் (௱௫௭)

இக்கனிகை நாளுமு னிரும்பொருள தாவா
டக்கன கார மொடு தானமத ளித்தேன்
முக்கணிறை சீரிவனே முன்னமகிழ் வாகல்
கொக்கலோடி யானுனுவ குற்றிடநல் கென்றான். (௱௫௮)

௱௫௨ இத்தலர்—இவ்வுலகத்தவர், இமையெற்றிலர்—இமைகொட்டிலர். ௱௫௪ இமிழ்தல்—ஒலித்தல். ௱௫௬ கடி—மணம். ௱௫௭ சிந்த-வார்க்க. ௱௫௮ தக்கனகாரம்—தகுந்த பொன்னாபரணம்.

சப்புவிடை யிம்மறைத முங்குகனி காதா
னம்புரிம னல்லறந யந்துயிர்கள் வாழ
வம்புலிவ ளக்குலம னைத்துமுயர் சைவன்
பம்புலக மேறவருள் பற்றுதவ னுனன். (௱௫௯)

எங்குநிறை யெம்மிறையை யேத்துகுர வன்பாற்
றங்குயிர்தன் மூர்த்தியின்மன் வித்தையெரி தண்ணீ
ரங்கமறை வேதிசிவ லிங்கமடி யார்பான்
மங்கலவர் காண்பர்மரு காமுனர்மன் கண்டான். (௱௬௰)

கவுதமனே டாங்கிரசன் காசிபன்வ சிட்டன்
றவமுயர்பு லத்தியன்மார்க் கண்டனொடு சான்றோ
ரிவர்தமிழ கத்தியனு மின்பதுசி றந்தே
நிவரிமய வெற்புமண நேரிதுக ணுற்றார். (௱௬௧)

எண்டிசையு மும்பருமு னிம்பருமு டிப்பூ
மண்டிலமு மெம்மிறைம ணம்புரிபந் தர்க்கண்
மிண்டியடி வாணரின்வி ராய்ப்பிரிவி லாதே
கண்டிருக ணாமகிழ் காட்சிபெற லானார். (௱௬௨)

அவலமின்ம ருத்துவர்மு வங்கிவளர் வான்யோ
கிவர்தவருண் முச்சுடரி லங்கபக நீட
சிவ்மணவ ரைக்குருசி வத்தருண செந்தீ
யுவகையின்வ லஞ்சுழிகொ டோங்கவளர் வித்தான். (௱௬௩)

சிவக்குறியு ருப்பணுறு செம்பொன்வண நாண்மா
ணவக்குளிர்வ சந்தவல்லி நங்கையின்க ழுத்தெண்
டவக்குணன்ம ணப்பறைத முங்கிடவி மிழ்த்துப்
பவக்கடல்க டப்பவர்கள் பார்க்கவருள் செய்தான். (௱௬௪)

வேறு.

சத்திமான் சத்தி யெல்லோன் றன்கதிர் போன்றேன் றுவே
நித்திய மிருப்ப வேறு நின்றரு ளாடல் செய்த
லெத்திறன் சருவ சத்தி யினனெனல் காட்டல் போனு
மத்திற னெல்லோற் காமோ வாவிதாச் சரிய மென்பார். (௱௬௫)

௱௬௨. அடிவாணரின்-திருவடி சேர்ந்தார்போல. ௱௬௩. மருத்துவர் மூவங்கி-காடாக்கினி, கமலாக்கினி, தீபாக்கினி.

குறுமுனி பொருட்டிக் காட்சி கொடுப்பதோ வலக நாத
நறுமுடிச் செழிய னுய்ய நடிப்பதோ வுலக மெல்லாம்
பெறுமுறைமணந்தில்வாழ்க்கைபிறங்கவோதனக்கென்றேன்றுந்
துறுமுறா னருளரட் டாரே துணிதாத் தக்கா ரென்பார். (௱௬௬)

கைப்பிடி யாய்த்துத் தாலி கட்டுத லாய்த்துப் பெம்மான்
செப்பிளங் கொங்கை நல்லா டிருமலர்க் கைகைப் பற்றி
யொப்பிலாக் காட்சி கண்ணுற் றும்பர்கள் வாழ்த்த நின்றான்
வைப்பிலா வளர்சிவத்தீ வலங்கொடு பொரித்துாய் வேட்டான்.

உன்மனைச் செய்கை யாற்கர் புறுதிறன் காட்டற் கீசன்
றென்மனை மறைக்காற் றாக்கித் துளங்கிலம் மியின்வைத்துக்கால்
கன்மிதித் தங்கை சுட்டிக் காட்டிமீ னின்று ளம்மை
தன்மனங் களிப்ப வின்பாந் றனியுல கேசன் கண்டான். (௱௬௮)

பழுதிலா வான்பால் கன்னற் பாகுதேன் புதுநெய் கண்ட
பொழுதினு மினிக்குந் தேமாப் பொற்கனி குலவ ருக்கை
யெழுதிருச் சுளைநல் வாழை யின்கனி மதுபர்க் கந்தான்
கெழுதிருமுன்வைத்துத்தொட்டருள்கெனக்கோளத்தொட்டான்.

வேள்விமண் டபத்தி னின்றும் மிளிர்மணக் காட்சி தந்து
வாள்விழி மங்கையோடு மணவரைத் தவிசி னீங்கி
யாள்விளக் கத்த தென்ன னமர்திரு மனையுட் புக்கு
நீள்விழா மணிப்பீ டத்தி னிலைகொடு சுனிபா லேற்றான். (௱௭௰)

ஆறுநாட் காலை மாலை யவிர்மண வேள்வி யாற்றி
யாறுநாண் மாலை மாலை யசைதரு மூச லாடி
யாறுநாண் மலர்ப்பந் தாட்டங் காயுருட் டாதி கண்டு
யாறுநாண் மூற்று யிர்க்கு மருள்செய வமர்ந்தா னன்பால். (௱௭௧)

நாடொறு மறுசு வைப்போ னகமுத லைந்து ணாக்க
ணாடொறு முகம னோடே யருளவெம் மான்ம ணங்கண்
டூடொளிக் கண்கு ளிர்ந்தன் பிவருளங் குளிர்ந்தோ ருன்வான்
றோடொரீஇ யுலகோ ரெல்லாந் துய்த்திறை வனைப்பு கழ்வார்.

உம்பரு மனித்த ராரு மொருங்குகூ டினர்கெ ருக்குற்
றெம்பரா பரன்ம ணங்கண் டினித்திறை கைதொட் டுந்த
வெம்பவங் கழிக்குஞ் சேடம் வீழ்ந்துதுய்த் தவருள் வானோர்
பம்பமிழ் தயின்று ராகிப் பாண்டியன் றனைவாழ்த் திட்டார். (௱௭௩)

௱௬௬. துறுமுறான்-நெருங்கமாட்டாதவன். ௱௭௨. தோடு-கூட்டம்.

குணப்பனி நீருஞ் சந்தக் குழம்புமே கமழ்நன் மெய்யர்
வணப்பழுக் காய்த ளிர்வெற் றிலைமணஞ் சுவைசெவ் வாயர்
தணப்பலவிரைகொண்மோப்பர்தகையரம்பையர்பாண்மின்னார்
பணப்பறை நடங்காண் கண்ணர் பாடலுண் செவிய ரானோர். ()

அனைவரு மன்பா ரின்ப மவிர்தரு நெஞ்ச ராகி
நினைவதூர் மறந்து வாழுந் நேரமெம் பெருமா னாளும்
புனைவள வுலகா ளோடும் பொற்றவி சமர்ந்தான் கண்டு
நனைமலர்த் தாடாழ்ந் தின்ப நாட்டமார்ந் ததிர்நின் றாரால். ()

கண்ணுளங் குளிரக் கண்டு கண்டுநின் றிடுமன் னோரின்
விண்ணுளார்த் தத்த மூர்போய் மிளிர்தரக் கடைக்க ணித்தான்
பண்ணுலாந் துதிகள் செய்து பணிந்தன ரகன்றா ரப்பான்
மண்ணுளார்க் கருட்கண் வைப்ப மகிழ்ந்தனர் செல்வ ரானார். ()

செல்வரெல் லாருஞ் செல்லத் திருமனை யுலக நாத
வெல்வளத் தென்ன னோடே விளங்குபொன் மாலைத் தாயுஞ்
சொல்வள வமைச்சுந் தாருந் தொழுதனர் நிற்பச் செல்வி
நல்லவா னாக வந்த நம்பனா முலக நாதன். (௱௭௭)

தென்னரெல் லாருஞ் சைவத் திருவாளர் வழிவ ழித்தொண்
டென்னவன் னவரை யாமே யென்றுமாட் கொண்டே மன்னோர்
மன்னர சானா ரந்த மாபினுன் றந்தை நம்பா
னன்னரா ரன்ப னுன்னை நயந்தவன் மகவாத் தந்தேம். (௱௭௮)

உதவுநம் வரத்தா னம்பே ருடையநின் மருக னையா
மிதவுய ராட லொன்றி னிருந்தன திடைக்கோ னோக்கற்
புதவுணர் வுளநீ தேர்வாய் புகன்றவா றுனக்குத் தந்தை
சிதவுரன் மகவாத் தோன்றிச் செழியனாய் முப்பா ராள்வான்.

துளங்குமீ னுயர்த்த லோடுஞ் சுலவுதென் மலையு யர்ப்பான்
வளங்குலாம் படமொன் றீந்தோர் வரைக்கொடிக்கோவெனும்பேர்
விளங்குறத் தந்தான் மேலும் விமலையுண் மகிழ வேறுன்
னுளங்குறிப் பதுமுண் டேற்கே ளுதவுவ லென்றிட் டானால். ()

கண்முத லனைத்து மின்பக் கடல்படிந் தன்பு மெய்யாய்
விண்முத லனைத்து மெச்சு வேந்தினித் தெங்கோ மானே
தண்முதிர் மதிக்கு லந்தான் றழைப்பநீ யம்மை யோடும்
பண்முது தவமா ரெந்தை பதியிதிற் றளிகொள் கென்றான். ()

௱௭௫. நனை—தேன், ௱௭௭. தாரும்—படையும்.

வேறு.

நுந்தையா கியகுல சேகர னிவ்விடை நோற்றெமைப் பூசை செய் திருத்த, மந்தநா ளிற்குல சேகர முடையவ ராய்க்கு ழல் வாய்மொழித் தாயாய், வந்தருள் செய்ததா லப்பெயர் கொண்டிவண் வதிகுவேங் கோயிலொன் றமைத்தி, முந்தவன் வேண்டுமவ் வாறுள தமைத்தபின் முதியநம் முலகினின் றிவர்ந்தே. (௱௮௨)

நாளைநின் மகவெனப் பிறந்துல காண்டுனை நயந்துதென் மலைக்கொடிக் கோப்பேர், கோளைதோர் மகவெனப் பயந்துமீ ளாதநங் குளிர்நறுந் தாணிழல் வாழ்வான், வேளையா கவினி யாங் கோயிலுக் கேகுவேம் விடைகொடென் றேற்றுவிண் விடைமேற், கேளையார் தாநடை கோடலிற் காட்டினன் கேடிலான் கோயிலுட் புகுந்தான். (௱௮௩)

அருளுறு நோக்கமா ருலகநா தத்தென னவிர்குல சேகர முடையா, ரொருகுழல் வாய்மொழித் தாயெனுஞ் சிவன்சிவைக் குறுதிருக் கோயிலொன் றமைத்து, மருமலர்த் தாள்வழி பட்டனன் விடைகொடு மாறன்மங் கலத்துவந் தமர்ந்தான், திருவயின் வாய்த்தபொன் மாலைநன் னாட்குல சேகர வழுதியைப் பெற்றாள். (௱௮௪)

வாழ்கவென் றுலகெலா மகிழ்ந்தன வானவர் மலர்மழை பொழிந்தனர் பண்டை, யூழ்கமழ் சைவநன் னெறிதமிழ் சிறந்தன வொத்திய லாரிய மலர்ந்த, கேழ்கனி தருதரு விளைபயி ரனைத்துமே கேடிலாப் பயன்மிகத் தந்த, பேழ்கவின் கற்பிய விறையருள் செழித்தன பெற்றவர் களித்தனர்வாழ்வார். (௱௮௫)

வேறு.

விசுவனே விசுவ நாதன் விசுவேச னுலக நாதன்
பசுபதி சிவன்ம கேசன் பராபரன் முக்கட் பெம்மான்
சிசுவரந் தருவோ னம்பன் சிவைமணா வாள னேற்றோன்
அசுதையார் நீல கண்ட னாதிதென் காசி நாதன். (௱௮௬)

விசுவையே விசுவ நாதை விசுவேசை விசாலாட் சித்தாய்
பசுபதி துணைம கேசை பராபரி யுமைமுக் கண்ணி
சிசுவரன் பனிமலை காம்பை சிவைகுழல் வாய்மொ ழித்தாய்
அசுதைதீர் வசந்த வல்லி யநாதைதென் காசித் தாயே. (௱௮௭)

௱௮௬. அசுதையார்—விடம்பொருந்திய. ௱௮௭. அசுதைதீர்—விடத்தை நீக்கிய.

சோடச நாமங் கொண்டுந் தொல்பெய ரனந்தங் கொண்டு
மேடவிழ் செண்பக க்கா விலங்குதென் காசிக் கண்ணே
நீடரு ளுலகம் மைபா னிலைகொளு முலக நாத
னுடலாத் திருமணச்சீ ரறிந்தவா றறைந்தே னென்றான். (௱௮௮)

எத்தனை பிறப்பெ டுத்தே யிலங்குதென் காசிக் கண்ணோர்
கத்தப மேனு மீனுங் கதிக்கொரு தவஞ்செய் தில்லை
யத்தலக் கதைகேட் டேயின் றதாலது காண வாவா
ருத்தம ரனேம் போய்க்கண் டெய்துவே மெனத்த வத்தர். (௱௮௯)

மகிழ்ந்தன ராயோ ரையம் வான்றிரு மணக்கா தைக்கண்
டிகழ்ந்ததஃதென்னென்றுலெஞ்சிவன்சிவையாண்பெண்ணாய்ப்பார்
புகழ்ந்திடப் புரியாட் டத்திற் புதல்வியுந் தாயு மாயோ
விகழ்ந்தில்லை றாயோ வாற்ற தென்னெனச் சொல்வான் சூதன்.

மிக்கறி வுடையீர் கேள்வி வியப்பிதே வுலகத் துள்ளா
ரொக்கவும் பெண்ணை வாணு முளவதா லாண்பெண் ணையாய்
நக்கனுட் டுளது ரண்டு நயனமு முன்பின் னைக்கோன்
வைக்கவேன்மறந்தானென்பார்வார்த்தையினிதுநீர்கேட்டீர். (௱௯௧)

பகன்மதி யிராவிற் பானு படைக்கினன் றென்பார் புந்தி
மிகன்மதி சூடி மூடம் வெளிப்படத் திரும்பல் போலும்
நகன்மதிப் பினராய்ப் பேசி னலம்பெற விலையா ராய்ந்து
புகன்மதி யிறைவ னாடல் புலப்படு மறிவு ளோர்க்கே. (௱௯௨)

சிவன்சிவை தன்னைப் பெற்றுஞ் சிவைசிவன் றன்னைப் பெற்றுஞ்
சிவன் சிவை தமிற்கு ழீக்காண் செகமெலாம் பெற்று மந்தச்
சிவன்சிவைக் கப்பன் மைந்தன் றேவனும் போற்சி வைத்தாய்
சிவனது தாய்ம கள்வல் லவியெனத் திகழ்வ துண்டால். (௱௯௩)

துளியருள் சிவையு மாவென் றொருபொருட் குறிகோள் சத்தி
யொளியின னருளோன் சைவ னுமாபதி சத்தி மானென்
றொளியவெண் குணங்கொ ளந்த வொருவனுக்குணியே தந்தை
யொளியகற் குணங்க டாயிவ் வுண்மைதேர் சைவர் மேலோர். ()

௱௯௰. இகழ்ந்தில்-மறக்கப்படாத. ஆற்றதென்-செய்யாததென்னை?
௱௯௩. தேவன்—நாயகன். வல்லவி—நாயகி.

தற்கிழ மையினென் றாய சமவாய சத்தி யந்தச்
சிற்குண சத்தி மானிற் றீர்ந்துவே றெவாறு மெனினிற்
பொற்கன லனுற்பூ தம்முற் பூதமென் றிருநி லைக்கொண்
டுற்கமிங் கறியத் தோன்றி யொளித்தலி னிறைபாட் டோர்மின்.

அருள்வினை யாட்டா லீச னறிந்திடப் படானே னுண்டென்
றொருமொழிக் கசையா நாவை யுரைப்பினஃ துண்மை யாமோ
திருவினை யாட்டாற் றன்மெய் நிகழ்த்திநிற் றவினம் பெம்மான்
பெருமைகுன் றாதா லன்பின் பெருக்கமே தோன்றுங் காண்மின்.

கடவுளுண் டுண்டென் றென்றுங் கடவுளின் றின்றின் றென்றுங்
கடவுளை யிகல்வார்க் கன்னோன் கண்டிடப் படானே யின்று
கடவுளுண் டறியோ னானென் றிடினவர் கழற வுண்மை
கடவுளை நேடிக் காணார் கதையெபாத் தீர்க்க லாமே. (௱௯௭)

தாமறி தாரப்போ னாலுந் தங்குரு மார்தம் முன்னோர்
தாமறிந் திருந்தாற் போதுஞ் சதாவறி யப்படாதோன்
தாமறி கடவு ளென்பார் சாற்றுபொய் யேனு மன்னோர்
தாமறிதற்கீவுண்டோர் தாதுதீத்தொடிற்சுடாய்போல். (௱௯௮)

சைவருக் கறியப் பட்டுந் தரைக்கறி யப்ப டாதுந்
தெய்வமொன் றுண்மை யாலச் சிவபெரு மான்ற மிழ்ப்பா
ருய்வதற் ககத்தி யன்பா லுயர்ந்தபா ரெனத்தேற் றிச்சீர்
கைவர மணக்கோ லங்கொள் காட்சியீ தெனவின் பார்ந்தார். ()

மேலுநித் தியகல் யாண னித்தியா னந்தன் வீற்ற
மாலுநான் முகனுங் காணா வான்றிரு மணத்தின் காட்சி
மாலுநான் முகனு மேனை வானவர் மனித்த ராருஞ்
சாலுமன் பாற்கண் டுய்யத் தந்தன னருளீ தாயால். (௨௱)

இதிலுசா வொன்ற யர்த்தீ ரேழுமா தருமன் பார்ந்து
துதிகுழல் வாய்மொ ழித்தாய் தோழிய ராய்வாழ்ந் தாரே
யதிபரு ளவருமீச னிணைபாற் கோயில் புக்குப்
பதிதா லானோர் நாளும் பகாதுஉஞ் சொற்றே னென்றான். (௨௱௧)

குழல்வாய்மொழியம்மை திருமணப்படலம் முற்றிற்று.

ஆகப்பாட்டு தூஙயசு.

௱௯௫. அனுற்பூதம்—தோற்றப்படாமை. உற்பூதம்—தோற்றந்தன்மை. உற்கம்—தீத்திரள். ௱௯௭.கதை—சொல். ௱௯௯.சவு—தேவசகை.

பதினைந்தாவது

மிருகண்டு வரம்பெற்ற படலம்.

உலக முழுவது முடையநங் கையையுல கேசன்
குலவு திருமணம் புரிகதை யிறுகுச்ச கன்சேய்
திலக தவமகன் மிருகண்டு செயும்பெருந் தவங்கண்
டிலகு நலனரு ளிறையருட் செயலினி யிசைப்பாம். (௧)

ஒன்றினுக் கொன்றுமே லாப்பல கதைசொலி யுவகை
நன்றிவை தரவருண் முனிவவெஞ் செவியுளம் நயப்பிரான்
றென்றிதென் மலையதென் காசிநா யகனருட் செல்வந்
துன்றிய வமிழ்தினுந் தருகெனத் தவர்சொலுஞ் சூதன். (௨)

பிடக நூல்தெரி குச்சகன் பெருந்தவப் பேறுய்க்
கடந கர்க்குமீன் றவர்க்குமே யுகந்தகா தலனாய்
வடக லைத்திறன் வண்டமிழ் மறைத்திறன் மலிந்து
குடக ராதியர் துதிபுரி கொள்கையிக் குடையோன். (௩)

வேறு.

அருந்தவர் முனிவர் யோக ரறிஞரா சிரியர் மெய்ச்ச
வருந்தனிக் குழவி யாகி வளர்பயிர் போல வோங்கிப்
பெருந்தவைக் கொருவேந் தேபோற்பெட்புறுகுணத்தின்மன்னித்
திருந்தநா ளுதித்தான் வேதசிரோன்மணி கடலூர் வாழ்வோன்,

குச்சிகன் றவத்தி னாலே பெற்றிடு குமரன் காலை
யுச்சிகாண் மாலை நாளு முஞற்றுவன் றருப்ப ணாதி
யெச்சியல் வழாத வந்தக் கௌசிகன் விரிநீர்க் கஞ்சம்
பிச்சிசெங் காந்தள் சூழோர் பெருந்தட மருங்கு சார்ந்தான். (௫)

கானத்திற் பிலத்தி னெய்திக் கடியதோர் தவசு காட்டா
ஞானத்தி னணுவுஞ் சார ரொழுக்கமே யுயர்வாக் கொண்டான்
மோனத்தி னாட்டம் வைத்தான் முழுதுமோர் குறையில் லாத
தானத்தி னியதி பூண்டான் றவந்தலைக் கிடைப்ப தோர்ந்தான். (,

௩. பிடகநூல்—வைத்தியக்கலைகள். (பிடகன்,பிடக்கு,பிடாரன்என்பனவயித்தியற்குப்பெயர்.) குச்சகன்—சிற்றில். (குடில்) வாழ்வினன்.
௫. குச்சிகன்—குடிலையிருப்பவன்,உடம்பின்வாழ்க்கையைத்தாண்டுபவன். (பிறவிநீர்பவன்)

வேறு.

குச்ச கன்றவக் கொள்கையுங் கோசிகன் றவமு
மிச்ச கத்திராப் பகலென வியங்கலி னிளவன்
முச்ச கத்தினு முதன்மைய சிவதவ முயன்று
துச்ச கற்றுவ லெனவுளந் துணிந்தன னாழால். (௭)

வேறு.

இருந்தபோ லிருந்த சூழ்கொண் டிமயவெற் பீசன் வில்லா
மருந்தனிக் கிரிமெய் யனப ரகங்களொத் தசையா வன்பு
தருந்திரு வருள்ப திந்து தனியகந் திருந்தித் தேவர்
விருந்தமிழ் தாழ்த்துந் தாரு மென்சினை வீழ்வீட் டுள்ளே. (௮)

காலினை மடித்து மூக்கி னுனியதிற் கண்க ளாட்டி
நாலினை யிழுத்து வாங்கி நுனைக்கதி ரேற்று வார்போ
லாலினை விழுதி னேழ்பத் திராயிர நாம்பி னைய
பாலினை தாச்சேர் நாடிப் பகுதியாம் பத்துந் தேர்ந்தான். (௯)

பிரிவுறு மிடையி னோடு பிங்கலை சுழிமுனை மூன்றிற்
றெரிவுறு பூர கப்பன னுறமாத் திரைபூ ரித்து
விரிவுறு கும்ப கந்தான் விளங்கெனான் குறக்கும் பித்தே
யிரிவுறு மிரேச கம்மெட் டேகவிட் டெளிதாத் தேர்ந்தான். (௰)

சரியையின் முற்றி யேறிச் சான்றபூ ரகமெட் டேற்றி
யரியகும் பகமெண் ணாங்கி னமைந்திரே சகப்பன் னாறுய்க்
கிரியையின் முற்றி யேறிக் கிளத்துமெண் ணான்கு பூரித்
தரியகும் பகமெட் டெட்டி னாறீஇயிரே சகப்பன் னாறுய். (௰௧)

௯. பாலினைதா—பகுதியினழகிதாக. பத்தும்—கண்ணினிற்கும்அத்தியும்,மூலந்தொட்டுஇடதுகாதளவுமேறிநிற்கும்அலம்புடையும், நாபியிற்றோன்றிக்கண்டத்தினேறிநிற்கும்எழுசுரநாடியாகியகாந்தாரியும், குய்யம்பற்றிநிற்குங்குகுவும், குறிபற்றிநிற்குஞ்சங்கினியும், செவியுற்றிருக்கும்புருடனும்,நாக்கினிற்கும்சிகுவையும், இடமூக்கினிற்கும்இடையும், வலமூக்கினிற்கும்பிங்கலையும், மூலாதாரத்தினின்று உச்சித்தொளையளவுமேறிநிற்குங்கநாடியாகிய சுழினையுமாகப்பத்துநாம்புகளும். ௰. மாத்திரை—கையினாலேமுழங்காலைச்சுற்றிமூன்றுசிட்டிகைபோடுங்காலம்.

யோகநின் முயன்றெப் போது முயிருளை நிறூஉநி ருத்தம்
பரகமா ரிவைமுன் முற்றும் பயின்றுபல் காலு மூக்கா
லேககா லிர்த்த டக்கி யிருந்தச நாடிக் கேற்றி
வாகதா மீட்டிப் பூரு மத்தியி னுக்கி யெண்ணி. (௰௨)

கபாலத்தி னின்றும் பின்னை சென்றேடுங் கலினுட் கண்ணிக்
கபாலத்தி னிவ்வா றேற்றி வாயுவை நிறைத்தல் கற்றுச்
சுபாலத்தி னிற்ற றேர்ந்து தூயயோ கமர்ந்தான் றேர்ந்த
சுபாலத்தி னின்று னந்த தூயவா ரியின்மூழ் குற்றான். (௰௩)

உடலினைச் சிதலின் புற்றுங் கொளித்திடத் தருத்த லுபூ
மடலினைத் தெனும றைப்ப மற்றதிற் கூடு கட்டிக்
கடலினை நிகராப் புட்கள் கனைத்துறப் பல்லாண் டாத்தன்
னுடலினை யோகத் தாக்கி யமர்ந்தனன் கௌசி கன்றான். (௰௪)

சிரத்தையிற் பிராண வாயுச் சிவாக்கினிக் கிடைவி டாமல்
விரத்தியா வுச்சிக் கீழ்ழ வெண்கதி ரமிழ்துற் றாழ்த்தாற்
பிரத்தியா காரத் துற்றுப் பிறங்குளின் பருந்தி வாழீ
தாத்திரு லீதேன் வைத்துண் டமர்தலின் வாழ்வே யாமால். ()

வேறு.

இப்படிக்கொ ளுஞ்சமாதி யின்கணுற்ற தன்மையான்
முப்படிக்க ணும்முன்வைக்கு மொய்த்தவக்கொ ழுந்தனுன்
கோப்படித்த ருக்கணீழல் கொண்டிவாற மர்ந்ததி
னப்படித்த வத்தமென்ற றிந்திலாப்புள் ளாதிய. (௰௬)

வல்லியக்கு டாவடிம லைமிளாக லேக்குலஞ்
சல்லியஞ்சி றுத்தைமான்கத் தைப்புலிகொ டிப்புலி
செல்லியங்க லிக்குவேழஞ் சிங்கமாதி மாக்கணம்
பல்லியந்து யங்குளாஞ்சிப் பற்றுமூற நீருமே. (௰௭)

௰௨-பூரு—புருவம். எண்ணி—தியானித்து. ௰௩-கண்ணி—தியானித்து. சுபாலத்தில்-கல்லபிரபையின். ௰௪-இனைத்தென—இத்தன்மைத்தெனப்படாது. ௰௫-பிரத்தியாகாரத்து-உபாதியைநீக்கியுண்ணேக்கமுறுதலின் வாழீந—வாழ்ந்துகொண்டிருக்கும் இங்கிலே. அரத்திருல்—குகையின்கணுள்ளதேன்கூடு. ௰௭-குடாவடி-கரடி. சல்லியம்—முட்பன்றி. சிறுத்தை-சிறுபுலி. கர்த்தைப்புலி—கழுதைப்புலி. செல்லியம்—மேகத்தொனிபோல. புல்—பல,

தேறிலாப்ப சுக்களுள்ளோர் தீபனுத்த மன்னரி
வேறிலாது சித்தமுற்ற விசுவனைத னுணையாற்
பேறினுன்ற கௌசிகன்பி றங்கியோக நிந்துகாப்
பாறிவர்ந்திவ் வுலகவாழ்வி னறிவைநாட்ட வந்தனன். (௰௮)

அருகுசென்று முனிவகௌசி காவனேக மாக்களும்
பெருகுமான வருமுடப்பு பேதமுற்றி ருப்பவு
முருகுசிந்தை யோடுயிர்க்கு ளைஞ்சொர்கல்லின் றாணமாய்
வருகுணங்கொ ளுன்றவத்தின் மாமகிழ்ச்சி கொண்டுளேம். (௰௯)

முருகுயிர்க்கும் பூம்பொழிற்புன் மூடுபன்ன சாலையுட்
பெருகுநற்ற வஞ்செயன்ப பெற்றவன்கு டிக்கிளைத்
தொருகுழந்தை வேண்டிநோன்பு ளுற்றியுன்னைப்பெற்றனன்
வருகுடிப்பி றப்புயர்த்து மாதவம்முன் செய்திலாய். (௨௰)

மணமுடித்து மகவையீன்று மகிழ்ந்துபற்றை விட்டுநீ
குணமுறப்ப யின்றுவிட்ட குறைமுடிக்க லாகுமாக்
கணமுளைஞ்சு தாணமாயோ கத்திருந்த லீங்கெனப்
பணமுறங்கு பாயலான்ப கர்ந்தனன்றெ ளிந்தெழீஇ. (௨௧)

வேறு.

சீதரா கேசவா வாசு தேவனே
பூதரா மாயவா வுந்தி பூத்தவா
மாதவா நீளம ணாள வாமனா
நாதமா லச்சுதா கண்ண நாரணா. (௨௨)

உவணமூர் கார்வணா வுவண கேதனா
வவிர்தரு நறுந்துழா யலங்க லாயநீ
தவறில்பஞ் சாயுதா தாம ரைக்கணா
விவரார வணைவள ரீச விண்டுவே. (௨௩)

ஓதிய வாறுற வுளக டுங்குதே
நீதிய வின்னிலை நெடிய துன்பிதிற்
பீதிய தகற்றிவைக் கென்னப் பேணுமால்
வேதிய மிருகண்ட வேதர் தள்ளிலாய். (௨௪)

காக்குமா லென்னுரை கடந்தி லாய்மது
வாக்குதென் மலையடி வாரத்தென் காசியோ
யாக்குல கம்மைகோ னடிப ணிந்தரு
டேக்குறக் கொடிமணஞ் செய்கென் றேகினன். (௨௫)

௨௧-பணம்—பாம்பு.

கவுசிகன் மான்மிரு கண்டென் றுடிய
வவுடத முண்டலா லரும்பி றப்புநோய்த்
தெவுகடப் பரிதெனத் தேர்ந்து பெற்றவர்
கவுமன மகிழமுன் னண்ணிக் கண்டனன். (உசு)

தாயடி தாழ்ந்தரு டந்தை தாள்பணி
சேயனைத் தழீஇயருள் சிறந்தெ னப்பனே
நீயரு மியோகிடை நின்ற தோர்ந்தியான்
காயலா யினன்குடி காத்தி யென்றனன். (உஎ)

உச்சிகான் முரண்டவ முஞற்றி நீபெறு
மிச்சிறி யேன்றவ மியற்றற் கண்டுமான்
மெச்சிவந் திவைசொல விட்டு வந்துளேன்
சச்சிதா னந்தனார் சாற்றென் றுன்மகன். (உஅ)

வேறு.

கவில்சச்சி தானந்த புரமாய தென்காசி நன்ன கர்க்கண்,
புவிமெச்சு முனிநாதர் தவராசர் சிவயோகர் பொருவில் சித்தர்,
கவிநச்சு தமிழ்வாசர் சிவசேவி மிகவாழ்வர் கழற வ்ண்போ,
யவிர்குச்ச மையான்முன் பிடகர்க்கு ளுயர்வாய தறிதி மைந்தா.()

உலகம்மை தவஞ்சய விசுவேச னருண்மல்கி யுறைதென்
காசி, யலகம்மை முதன்மும்மை புரிநன்மை யொவ்வொன்று
மளவி லாதா, யிலகம்மை யாரின்ப மீயுஞ்செய் தீதாற்ற வின்றி
மாயுங், கலகம்மை பற்றாது வயமோங்கு மதைவந்து காண்டி
மைந்தா. (௩௰)

அறிவோங்கு மனையாட்டி மணமாக்கு மகவாக்கு மறமன்
பாக்குஞ், செறிவோங்கு மொருமைக்கண் வரமாக்கு முமாக்
குஞ் செல்வ மாக்கும், முறிவோங்கு பிணிநீக்கும் முனைநீக்கும்
வெருணீக்கும் மூட நீக்கும், பறிவோங்கு மிடிநீக்கு மியல்பார்
தென் காசிக்கண் பார்த்தி மைந்தா. (௩௧)

உசு-தெவு-தெவ்வு (பகை) கவு-கவ்வு. (கன்மை) ௩௰ அலகம்மைமுதன் மும்மை—எண்ணப்பட்ட முற்பிறப்பும், இப்பிறப்பும், வருபிறப்புமாகிய முத்தோற்றத்தும். இலகம்மையாரின்பம்—விளங்காநின்ற அழகுநிறைந்தவின்பம். கலகம்மைபற்றாது—கலகமும் இருளுந்தொடராது. ௩௧-முனை—பகை, பறிவு—ஓட்டுகை.

குலசேக ரத்தென்னன் மகவீன்ற தவன்மைந்தன் குழவி
யாவந், துலகாளோர் குழல்வாய்மொ ழிப்பேர்கொ டளிர்மன்ற
லுற்ற தத்தாய், வலதாதை யைப்பற்கைப் புனுமாய தவன்மைந்தன்
மைந்த னுய, நலகில்மன் வழிபட்டு வரம் பெற்ற தென்காசி
யதிக மைந்தா. (௩௨)

தலமாயி ரத்தெட்டின் முதன்மைத்து முச்சீர்த்தி தழை
தென்காசித், தலமாம தைக்காணின் வினைதீரு நீராடிற் றகுமெய்
நன்றாந், தலமாம திற்றங்கி னறிவோங்கு முலகம்மை தவறப
ணிந்தாற், றலமாமெ தன்கண்ணு மாண்டொன்றி னுநலன்று
சாரு மென்றான். (௩௩)

வேறு.

ஐயனன் பார்ந்து சொற்ற தனைத்துமின் பாகக் கேட்ட
மெய்யனுன் றென்கா சிக்கு மேவுவ லெனவி யாமுஞ்
செய்யவுன் கூட வந்து சேவைசெய் வேமென் றின்னோ
ருய்யவா வுற்றெ ழுந்தாங் குடன்றொடர்ந் தனர்வந் தாரால்.(·)

பொதியமுந் தென்றல் வீசும் புதுமையுஞ் சந்த முன்னு
வதியகன் மாப்பூங் காவு மலரியீ கொசுக டந்தை
அதிகுள விகளின் றேன்பெய் தூபநீ ராற்று மாண்புங்
கதிவருங் கைதே மாமுன் கனிமா வளமுங் கண்டார். (௩௫)

மந்திரங் கணிதம் மர்மம் வாகடம் முத்தி றத்த
வெந்திர கருமஞ் சித்தி யெட்டுநல் வாதஞ் சால
தந்திரங் குறியி யோகந் தத்துவ ஞான மெல்லா
மிந்திர னஞ்சத் தேர்ந்த விருந்தமிழ்ச் சித்தர்க் கண்டார். ()

தென்மலே யிடைமுன் வாழ்குச் சிகன்மக வுடனுங் குற்ற
தன்மனு மகத்தி யன்முன் சார்ந்துமீ ளுைத்த ரத்து
முன்மலை மகண்ம ணங்காண் முனிவபின் றலோத்த ரத்து
மன்மகண் மணந்த மிழ்ப்பார் மகிழ்ந்துகாண் வணஞ்செய் காத.()

இருமலை மணந்து யர்ந்த தெம்மண மறைகென் றேத்த
வருமறைக் குச்ச காசேய் மணமவா விலனென் றுளுந்
திருமண புரத்தென் காசி சேவைசெய் தான்ம னப்ப
னொருமக விறவாச் சேயா வுயிர்ப்பன்மெய் காண்டியென்றான்

மேலுமா விமய மன்றல் விண்ணவர்க் குகப்பாந் தென்றற்
காலுலாம் பொதியச் சார்தென் காசிசெய் துலோத்த மந்தான்
சாலுமா கமியர்க் கின்பந் தருமணந் தாலி கட்டுண்
டாலுபர் தமிழ கத்தோர்க் கதேதிரு மணமா மென்றான். (௩௯)

வினுப்மகிழ் தந்தை தாய்சேய் குறுமுனி விரைம லர்த்தாள்
பனுதரத் தொடுபெ ணிந்து பகர்விடை கொடுமெ ழுந்தார்
தனுதரங் கொடுதேன் பூப்பொற் சண்பகக் காவந் தாங்கா
ரனுதிபா முலமே கைபா லமருல கேசற் கண்டார். (௪௰)

மாலையிற் சேவித் தங்கண் வைகினர் விடிந்தெ ழுந்தார்
காலைமுக் கூட லாதி மணிகரு ணிகையின் காறுஞ்
சோலைசூழ் சித்தி ரைக்கண் பேதீர்த் தங்க ளாடி
மூலையீ சான தீர்த்த மூழ்கியா லயத்தைந் தாடி. (௪௧)

தவமிரு கண்டு தந்தை தாயுடன் மகிழ்ந்தன் பார்ந்து
சிவசிவ சிவவென் றோடிச் சிவையுல கம்மை பாக
னவவடி விறந்த சைவ நாயகன் விசுவ நாத
னுவகைபார் திருமுன் வந்தா னுகந்துபூ சித்த மர்ந்தான். (௪௨)

நிட்டையி னமர்ந்த காலை நிமலன்முன் பரிவை யுய்த்தேங்
திட்டையிற் பெயல்போ லாகத் திருவருட் பயனீ துய்ப்பக்
கட்டழ காரோர் மின்னைக் கைப்பிடித தறிவார் செய்ப்பெற்
றட்டயங் கியோகா ரென்றுள் ளுணர்த்தின னுணர்ந்தெழுந்தான்.

வேறு.

நம்ப சச்சிதா னந்தபு ரத்தவ
வன்பர்க் கன்பகல் யாணப திச்சிவ
செண்ப கப்பொழிற் செல்வதென் காசிவாழ்
முன்ப சித்திர மூலபு ரீச்சுரா. (௪௪)

மயிலைப் பூங்கொடி வாழ்க்கையு மாபதி
பயிர்வ ளங்கொள்ப லாலிங்கப் பாடிய
குயின்கு டிப்பர மேச்சுர கோசிக
வெயில்வ ராவசந் தக்குடி யேந்தலே. (௪௫)

௪௫-வாழ்க்கை—பதி. பாடி—பதி. குடி—பதி. எயில்—பதி.

முத்துத் தாண்டவ மூதூர நாதியே
வத்த வானந்தக் கூத்தனைப் பாண்டவா
சித்தர் வாசத்த தென்புலி யூரவ
சத்த மாதரூர்ச் சங்கர சம்புவே. (௪௬)

சைவத் தொல்குறிச் சிக்கிரீ சாவரா
தெய்வச் சோடச நாமவா சேச்சுரா
வுய்வ னைந்தடுத் தாண்டிங் குணர்த்திய
மெய்வ ரப்படி வேட்டுவப் பேனரோ. (௪௭)

என்று பாடியின் பக்கணீ ராடியே
யொன்று மன்பனு கந்துகூத் தாடினன்
கன்று பெற்றவர் கன்னியெ னப்பனே
யின்று பெற்றதென் னென்றிரந் தாமரோ. (௪௮)

வேறு.

ஓதனு மைந்தா வேட்ட னுயர்தவ மதுதென் காசி
நாதனை யருளக் கேட்டா னன்சொலற் குளதென் னின்னே
காதலி தன்னைத்தேர் கற்புங் காவனு முடைய ளாயின்
மாதவ மில்ல றத்து வாய்ப்பதா மென்றான் றந்தை. (௪௯)

ஐபகட் டழகார் பின்னை யடையவே யிறையுஞ் சொற்றான்
செய்யநீ கற்புங் காப்புஞ் சிறந்ததாச் சொற்று யன்ன
மெய்யறி விப்பா யென்ன மிருகண்டு வேண்டத் தந்தை
தையலி னியல்சொல் வான்சேய் தலையமைத் தேகி னுனல். (௫௰)

சித்தார சிரமஞ் சென்று தேயுபூ சனைமு டித்தாங்
கொத்தவோர் சண்ப கத்தி னுழைபுகுந் தப்பன் முன்சேய்
வைத்தனன் சொல்வான் பெண்டான் மயிலன சாயல் மின்போன்
மைத்தமஞ் துளிர்போன் மேனி பைங்கதிர் முகத்தே னல்லாள்.

குளிர்முளா ரியிற்சி லந்து சங்காழி கொடிகு டைமீன்
மிளிர்வரை யமைந்து யாசசி மெலிவின்றிச் சமனுப் பந்தின்
றளிர்குதி யதாய்த்த னைந்து காண்மலி யிதழ்போன் மெல்லென்
றொளியதாய் வலிதாய் வாய்ந்த வுள்ளங்கா லுடையா ளல்லாள்.

௪௬-வைப்பு—பதி. ௪௭-குறிச்சி—மலைப்பதி-வாசம்—பதி.

நிறைமதி தாள வட்டம் நிகர்த்ததாய்ச் செவப்பார் வெண்மை
யுறைநிறக் கழுநீர்ப் பூப்போன் றொளிர்ந்துமெல் லென்றரத்தத்
திறைநக முடைத்தாய் நீட்சி குறைசம னிலவாய்ப் பெட்பென்
றறையவொன் றுக்கொன் றூழ்நல் லணியதாள் விரலாள் நல்லாள்.()

பொன்னிறை கோற்றட் டொத்து வட்டமாய்ப் பொதிந்து நாடி
யுன்னியோங் கிடாத்த சைந்து வனப்பமை காண்டை யுற்றுப்
பன்னிடா மையின்வெங் கூனோ படிக்குமே டோவென் றூர்ப்ப
மன்னரம் புளைகோ ணீட்டில் வணப்புற வடியா ணல்லாள்.(௫௪)

வற்றிடாத் தசைந்து தாளம் ஞெண்டுபோல் வட்ட மாவேர்
நிற்றடங் கியன்முட் டார்ந்து நெற்கிளை கிளைவ ராலம்
பற்றிடாத் தூணி போனன் றமைந்துநுண் டுளைந ரம்பேழ்
பெற்றிடாச் சமன்ப ரப்புப் பெறுங்கணைக் காலா ணல்லாள். ()

இளவாழை கரித்து திக்கை யெனவளம் பொருந்தி நாடி
கிளர்வின்றி மயிர்தோன் றாமற் கிளைத்தெழா தெலும்பு நல்ல
வொளிவீசி யுருண்டு மெல்லென் றுளங்கவர் வனப்பார்ந் தொத்த
வளவாய்ப் பிறர்கண் வீழா தவிர்செல்வத் தொடையா ணல்லாள்.

முருகும்பற் பிடரி யாமை முதுகென வட்ட மாய்த்தேர்
மருவுதட் டினினான் காறு விரலள வகன்று மன்னு
மிருதொடை யடியி ரண்டு பக்கமு மிசைவ ளங்கொள்
கருமண லொழுக்கார்ந் தின்பக் கடலன பகத்தா ணல்லாள். ()

இடுப்படி வெரிந்கீழ் மேடா வெறும்பிமத் தகமு ழாப்போன்
றெடுப்பாப் படந்தேர்த் தட்டு விசிறிபோற் குலாவ லேய்ந்து
வடுப்படாப் பருத்தி ரண்டு மொத்தவோர் வண்ண முற்றுத்
தொடுப்புளை யெழாச் செழித்த வல்குலார் தூயா ணல்லாள். ( )

மின்னவிற் றோன்றித் தோன்று மெலிந்ததாய் நடுக்கு றீஇய
சின்னவோ ருடுக்கில் வஞ்சிக் கொடியிழை யெனச்சி றுத்து
நன்னார்ந் திலையோ வென்ன நகிலிரு மலைதாங் காம
வின்னலாய்த் துவள லேய்ந்தே ரிடையுடை யவளே நல்லாள்.()

எழுதுநற் பலகை யோவா விலையோபொற் றட்டோ வட்ட
வொழுகுகண் ணாடி யோவென் றுரைப்பநன் றுய்க்கு ளந்தின்
குழூபடி நிகர்ம டிப்புக் கொண்டுமூ வரையுற் றூன்மால்
விழுதுஞ்சின் மயிரொ ழுக்கு மிளிர்வயி றுடையா ணல்லாள். ()

௫௮-வெரிந்-முதுகு. குலவல்—வளைவு. உளை-மயிர். ௫௯-இழை-நூல். ௬௰-விழுதுஞ்சின்—பெரிதுமுறங்கினாற்போல.

அயிலெலி மயிர்போன் மெல்லென் றடர்மயிர் நெருங்கி யோரா.
வயினடுச் சிறிது கன்றாழ் வனப்பதாய் நீர்ச்சு ழிப்போன்
றெயில்வலஞ் சுழித்து நாடி யெழாதலை முளைத்த லின்றி
யொயினந்தி யாவட் டப்பூத் தொளைக்கொப்பு ளுடையா ணல்லாள்.

நரம்பெலும் புளைதோன் றாது நடுத்தாழ்த லின்றி மெல்லென்
றரம்பெறத் தசைபொ ருந்தி யொன்பதிற் றிரட்டி யாய
வரம்பெறு விரற்க டைநீள் வளர்ந்ததாய்ச் சிறப்ப தாற்றுக்
தாம்படு மொளிய தார்ந்த தகைவிலாப் புறத்தா ணல்லாள். ()

தசைந்துரம் படச்செ ழித்துத் தகைவிர லளவி ரொன்பா
னிசைந்தகன் றுளைந ரம்பி னெழுச்சியின் றியன்மி தந்து
பசைந்திவ ரிரண்டு வெற்புப் பாரம திலாக்கா தென்றும்
நசைந்துதாங் கழகார் செம்மை நலத்தமார் புடையா ணல்லாள்.

அடிபரந் துயர்ந்து வட்ட மாத்திரண் டிறுகி மெல்லென்
றிடிதலின் றுறப்ப ருத்தீர்க் கிடையுமின் றடர்ந்தி ரண்டும்,
படிதலின் றிறுபாந் தொத்த படிவதா மெழினி றைந்து
கடிமுக மதிய மிழ்தண் ணிலாமுகி ளின்மே னோக்கி. (௬௪)

செறியவேங் கைபூத் தாற்போற் றேமலார்ந் தொளிர்ந்தா மாத
நறியகூர் கருத்துப் பூக நற்கமுக் கினி ரண்டு
நெறியபாக் கெனக்கு ழந்தை நீரிளங் குரும்பை செப்புப்
பறிமுடி சிமிழ்கொம் பீர்ம்பை பந்துநேர் தனத்தா ணல்லாள்.()

கழைகழை கமுகெ னச்சீர் காட்டெழில் கொளத்த சைந்து
ணிழைநரம் பெலும்பு ரோம மிவர்ந்திடா மொழிய மைந்து
தழைதாத் தடித்த லின்றிச் சமன்றிரண் டழகாய்க் கண்ட
வுழைமுனை யிசைகொள் சங்கேந் துரனொளிர் தோளி நல்லாள்.

கணுவமைந் துருண்டு நீண்டு சிறந்தவாய்க் கவின்செவ் வுற்றூர்ந்
தனுகிநீண் மயிர்ந ரம்பி னெழுச்சியின் றவிர்நால் யாழி
னொணுமிசை மகர யாழ்போன் றுறுமுன்னங் கையு டைத்தாய்
நணுகமு னெழாச் செழித்த நல்லுயர் முழங்கை வாய்ந்து.()

௬௧—அயில்—அழகு. வயின்—வயிறு. எயில்—மதில். ஒயில்—அலங்காரம். ௬௨-பசைந்து—ஆசைப்பட்டு. நசைந்து-ஒழுக்கமுற்று. ௬௪-இடிதல்—சரிதல். ௬௫-கூர்—நுனி. பறி—பொன். ஈர்ம்பை-இரும்பை.(குடம்) ௬௭-நால்யாழ்—செங்கோட்டியாழ், சகோடயாழ், மகரயாழ், பேரியாழ்.

வலம்புரிச் சங்கு கூர்ம மச்சமொன் பதுகோள் வட்டந்
துலம்பரி யானை தேரான் துரட்டிதா மரையு டுக்கு
குலம்பயி லுகக்கோல் யாழி சாமரங் குலிசஞ் சத்தி
நலம்பயில் வரைக ளின்ன நனியமைந் திலங்க லோடே. (௬௮)

தனமலை களிற்காண் டோன்றி தாமரை போலு மெல்லென்
றினனொளி வீசி நாடி மயிரெழா திடைய கன்று
மினநடு வாழ்ந்து சுற்று மேடதாய் முயல்வ யிற்றின்
வனமெது வாய்ச்செ ழித்து மலரகங் கைய மைந்து. (௬௯)

வள்ளைவா யொத்து ருண்டு வளர்ந்ததாய்க் கழுநீர்ப் பூவி
னுள்ளிதழ் போன்றொ ளிர்ந்து சரசப் புறுதல் பள்ளம்
புள்ளிகள் விழுத லின்றிப் பொன்மைவெண் மைகளில் லாதே
தெள்ளிய செம்மை வாய்ந்த சீரிய நகமு டைத்தாய். (௭௰)

இடைவிடல் வளைத னீடல் குறுகுத லின்றாய் மிக்கத்
திடமுறல் மெலித லின்றிச் சமனதாய்ச் செம்மை யுற்றே
யுடைநரம் பெழலு ரோம முறுதலின் றிரேகை நன்றார்ந்
தடைகளிற் றணிவி ரற்க ளமைந்தசெங் கையா ளல்லாள். (௭௧)

மென்மைய தசையான் மூடி மிகச்செழு மையதா யென்பு
பன்மைய நரம்பு ரோமம் படர்தலின் றழகாய் மிக்க
வன்மையாய் நெளிவு யர்ச்சி வளைவிலா தகல்வ ளங்கூர்
நன்மைய தாயொ ளிர்ந்து நயந்தரு முதுகா ளல்லாள். (௭௨)

சிறியபைங் கமுகு போன்று திரண்டுநால் விரலு யர்ந்து
நெறியமு வரைகள் ளார்ந்து நிமிர்வுறல் பருத்த னீடல்
குறியதா யிடன்ம டித்தல் கோணமெலி விலதா யென்பு
பரிமயிர் நரம்பெ ழாதே பணிலநற் கழுத்தா ளல்லாள். (௭௩)

வற்றிடல் நரம்பு வைத்தல் மயிரெழ னீட லாதி
குற்றமின் றழகு வாய்ந்து கொழுஞ்சமன் பிடரா ளல்லாள்
பற்றிரு விரன்மட் டார்ந்து பகனீடல் குறுக லாழ்கூன்
வற்றலின் மயிர்ந ரம்பில் வட்டமோ வாயா ளல்லாள். (௭௪)

௬௮-ஒன்பதுகோள்வட்டம்—நவக்கிரகச்சக்கரம். துலம்-தராசு. நுக
க்கோல்—நுகத்தடி. சத்தி-குடை. ௬௯-தோன்றி-செங்காந்தள். நாடி—நரம்
பு. ஆழ்ந்து-பள்ளமாய். ௭௰-உள்ளிதழ்—அகவிதழ். ௭௧-அடைகளிற்றணி—
நெருங்கியகளிற்றுமீன்வரிசைபோல. ௭௩-பணிலம்-சங்கு. ௭௪-பகல்—
பிளத்தல். ஆழ்—பள்ளமுறுதல். மோவாய்—தாடி.

விளக்கமாய்ச் சிறிது யர்ந்த மேலித ழொடுநன் றுச்சேர்ந்
திளக்கமின் றழக மைந்தா டிடைவிட லின்றித் துப்பின்
கிளக்கிரு திரட்சித் துண்டிற் கிடைச்சியின் மெதுவாய்க் கோவை
வளக்கனிச் செம்மை வாய்ந்து வயங்கிரு பாற்கு விந்தே. (௭௫)

இடையொரு வரையா ழாதேய்ந் தியலொளி முருக்கம் பூச்செவ்
வடையில வங்க மல்லி யலர்களிந் திராகோ பம்போன்
றுடையநன் றமைந்தொ ளிர்ந்தின் புதவமிழ் திவர்பற் போர்த்தின்
மடைமுறு ளுட் கொளச்சொல் லீய பகிழவிள் ளிதழா ளல்லாள். ( )

நெடுவிழிக் கடலெ றிந்த நிழற்பவ ளத்துண் டம்போற்
சுடரிதழ் களையு டைத்தாய்ச் சூதலர் செவ்வ ரத்த
மிடையசெம் மையதாய்க் கண்க ளிடுகிலாப் பற்க டோன்றாப்
படுகவுள் சுழியா நக்கும் பூண்மைய வாயா ளல்லாள். (௭௭)

இடைவிடல் பரவ ணெற்ற விறுசொத்தை யுறுத லோங்கல்
படரிவை யின்றிப் பாசி பற்றன்மஞ் சட்கு ளித்த
லடர்தார தணியி ரண்டி மழகிதொத் தொளிர்மு ருந்து
சுடர்மணி தளவம் பால்போற் றூயவெண் பல்லா ளல்லாள். (௭௮)

வெண்ணெய்போன் மெதுவாய்ச் சாதிலிங்கநேர் மிளிருஞ்செம்மை
வண்ணமாய்க் கருமை வெண்மை மருவிலா துயர்ச்சி நீட்சி
திண்ணமில் குறுகுண் ணுக்குந் திகழ்வதாய்ச் சாய்த னீடல்
புண்ணுற றடித்தல் வன்மை பொருந்துதன் முதற்கோ ளின்றி.

செவ்விய தன்மை வாய்ந்து செழித்ததாய்ச்சரச ரப்பின்
றெவ்விய நடுநி லைக்கொண் டொளிர்வதா யடக்க முற்று
நவ்விய கிளிகு யில்யாழ் நல்வரைக் குழலொ லித்தாங்
கெவ்விதத் தினுமி னிக்கு மின்சொலி நாவா ளல்லாள். (௮௰)

தொளைகளொத் திருபா லோங்கிச்சுடர்ந்துயர் முக்கோண் போன்று
வளைநுனி சிறுத்து ருண்டு வயங்குமெட் பூக்கு மிழ்ப்பூக்
களைநிகர்த் திருளல் சேத்தல் கவிதலற் றிடையுங் கூறு
மிளைதலாழ் தாலின் றேர்கட் கிடையணை மூக்கா ளல்லாள். ()

௭௫-இளக்கமின்று—தணிவின்றி. ௭௭-சூதலர்-செந்தாமரைப்பூ. ௭௮
-அணி-வரிசை. முருந்து-மயிலிறகினடிக்குருத்து, சுடர்மணி- முத்து,
தளவம்—முல்லையரும்பு. ௮௰-கவிதலற்று-வளைதலின்றி, இளைதல—மெ
லிதல், ஆழ்தல்-பள்ளமுறுதல்,

வட்டவா டியின்மெ தூஉஞ்செல் வணவொளி யுங்கூர் சீர்த்தாய்த்
திட்டமாத் தசைந்து பள்ளந் திண்ணமின் றுளேகு ருக்கா
துட்டயங் கெழின்வ ளத்தை யுடையதாய்ச் சிறந்து கண்டோர்
கட்டழ கியளெ னக்காண் கவுள்வடி வுடையா ணல்லாள்.(அஉ)

நீலநன் மணிநேர் நாப்ப ணிலாங்கரு மணித யங்கப்
பாலன வெண்மை சூழப் பயின்றிரு கடைகள் சேந்து
சீலகா தளவு மோடித் திரும்புத லுடைத்தாய் மால்பால்
வேலையிற் பாந்து மான்போல் மிளிர்மருட் பார்வை யெய்தி.( )

கணவனுக் கமிழ்தா நோக்குங் காமுகர்க் கால நோக்குங்
குணவினத் தவரைக் காணின் குலநடு நிலைநோக் குங்கொண்
டெணவொண்முப் பார்வை நீடியயனுவெண் டிரைக்கார்கோளோ
வணமிவர் வண்டோ வேலோ குவளைநன் மலரோ மீனோ.(அச)

மன்னுமம் போவா ளோமா வடுவகி ரோவெ னச்சீர்
பன்னுநல் வனப்ப மைந்து பருப்பிடை விடுத னீட்சி
துன்னிடா தடர்க ருப்புத் தொடர்மயி ரணியி மைக்கோ
ணன்னாரர்ந் துடன்மு தன்மை நயந்திவர் விழியா ணல்லாள்.( )

தடித்துநீண் மயிர்க ளின்றித் தழைந்திடை விடாநெ ருங்கிப்
பிடித்துமெத் தெனப்ப ணிந்து பிறங்குகார் மயிர ணிக்கொண்
டடித்தளர் ரொடிக ணிக்கு மிமையடி யழகாய் வாய்ந்து
வடித்தகண் ணம்பார் விற்போல் வளைபுரு வத்தா ணல்லாள்.(அரு)

வள்ளையின் றண்டு போனீண் டவிழ்தரு மலரி தழ்ப்போன்
றுள்ளிதா விரிந்து மெத்தென் றுறுசுழி வாய்ந்து தாழ்ந்து
தொள்ளையாய் மயிர்ந ரம்பு தோன்றிடா துயர்ந்து மேனைக்
குள்ளதா வளைதன் முற்கோ ளுறுதொளிர் செவியா ணல்லாள்.

பூவிரா லகன்று ளிர்ந்து முழுமதி வகிர்வட் டம்போன்
றேவுமொன் பதுகோள் வட்ட விரேகையார்ந் துளைநரம்பு
மேவிடா தளகக் கொண்டல் பெற்றவாள் வில்லே யொத்த
நீவுசிர் வனப்பு மைந்து நிறைந்தநெற் றியினா ணல்லாள். (அஅ)

அஎ-முற்கோள்-முதலியகுற்றங்கள். அஅ வவும்-உலகத்தைநடத்தும், நீவுசிர்-எப்பொழுதுந்தேய்க்குஞ்சிறப்பினையுடைய.

நிறைபிறை போற்கு ளிர்ந்து நிழற்பொலி வுற்றுக் கண்வண்
டிறைகொள்செந் தாம ரைப்பூ வெனமலர்ந் தொளிரும் வட்டத்
துறைவடி வமைந்து செல்வ மூறுகர்ப்பு வகைக ளார்ந்து
பொறைகொடுநீண்டின்போங்கும்புதுமுகப்பொலிவா ணல்லாள்.( )

சென்னிமாண் பிடரி நெற்றி நிகழுமிம் மூன்று றுப்பும்
மின்னிநோக் கற்கு நன்றாய் விரிதனீ டடல்ப ருத்தன்
மன்னிடா தழகாய் முட்டின் றுயர்ந்துநல் வட்ட மாய்மன்
கன்னிசீ மந்த ரேகைக் கற்புயர் தலையா ணல்லாள். (கூய)

கொண்டலின் செறிவு கூந்தற் பனையளிக் குழாய்போற் கார்த்து
வண்டகை முகநி லாவை வாரியுண் டடவி ராகு
வொண்டலி னெடிதி ருண்டங் குறுகணம் பிறக்கச் சுற்றுங்
கெண்டகைமைத்தாய்நெய்த்தின்பியைதாத்தழைத்துத்தாழ்ந்தே.

நெறித்துநீள் கடைகு ழன்று நெறிமணந் திதனின் மிக்க
செறித்திவர் கருப்பின் றென்று திகழ்வதா யழகு வாய்ந்து
குறித்தகூர் பிளத்தல் சிக்கல் குறுகலசெம் பட்டை யாதல்
வெறித்திடை வெளிற லின்றி மிளிர்கருங் குழலா ணல்லாள்.(கூஉ)

பொதுவிலக்கணம் முப்பத்திரண்டு.

முப்பதிற் றிரண்டா மின்ன முறைதமி ழகமின் னூர்க்கு
ளொப்பரு நல்லார்க் குள்ள வுடம்பிலக் கணமா மிப்பாற
செப்புநன் னிறமு றுப்புத் திருந்திய நிறைவு காண்கண
வைப்பழ குடைமை யாக்கை மணங்கருங் குழலி னுக்கம்.(கூங)

மென்னடை யுடைமை நாளும் விளங்குசா லாக்க முண்மை
யுன்னருஞ் சுவைத ருங்கை யாக்கநன் குடைமை வேலை
நன்னரார் திறமை யுண்மை நயக்குமுண் சுருங்கக் கோடன்
மன்னற வொழுக்கத் தேர்ச்சி வயங்குதுப் புரவு நாட்டம். (கூச)

அழுக்கிலா மனதி னீர்மை யரியசீர்ப் பொறுமை யுண்மை
யிழுக்கிலா வீகைத் தன்மை யேற்றமா ரமைதிச் செம்மை
வழுக்கிலா வின்சொன் னேர்மை வாய்மைநன் குடைமை நாளும்
தழுக்கிலாத் தாய்முன் னொன்கா நாடிவந் தெய்வம் பேணல்.(கூரு)

அகூ. இறைகொள்-இருப்புக்கொள்ளும். கக. எண்டகைமைத்தாய்-என்னுந்தன்மையதாகி. கூரு. தாய்முன்னொன்கா—தாய்தந்தைஆசிரியன் தெய்வமெனநாற்பாலதாக.

பெரியவர்ப் பணித லுண்மை பெருங்குடி நல்லார் கேண்மை
யுரியநல் லுயிர்க்கி ரக்க முடைமைபொய் புறங்கூ றல்கோள்
புரிபடாப் பழிசொல் வார்முன் புகநாணி யொதுங்குஞ் சீர்மை
திரிபுளக் கவடி லாத சிறப்பதா மடமை யுண்மை. (௬௬)

அபல்சொலும் பழிக்கு ளஞ்சு மச்சநன் குடைமை யேனோர்
பயநிழற் படினு முள்ளப் பயிர்ப்பெழீஇ யொதுங்கு நீர்மை
யுயர்குண முடைமை மேம்பா டுறுபெருந் தன்மை நாணு
மியலுமில் லறப்பற் றுண்மை யினியகற் புடைய மேன்மை. (௬௭)

இன்பவாய் நுகருந் தன்மை யிலையந்தன் றவனுந் தனு
மன்புவி ரொன்றி யாக்கை யாமிரண் டனினின் றூற்போற்
றுன்பினு மின்பி னுந்தாந் துய்த்தலா மொருமை யின்ன
தென்படு மியலெண் ணான்குந் திகழ்பொது வாகுங் காண்டி. (௬௮)

எக்குடிப் பிறந்தா ரேனு மெளிஞரே யெனினு மின்ன
சொக்குறு மியலார் நல்லார் தோள்சேர்த லருந்த வர்க்காம்
மிக்குப ரிவரீன் மக்கண் மேன்மக்க ளாவர் தீமை
புக்குறூர் முக்கட் பெம்மான் பொன்னடி மறவார் வாழ்வார். (௬௯)

புழுகுவீ சிடுமெய் தாழைப் பூமண வுடம்பு கோங்கின்
விழுமலர் நாற்ற யாக்கை வீசுமல் லிகைப்பூ மேனி
யொழுகுதேன் முல்லை மன்ற லுறுமுடற் பிச்சி வாசந்
தழுவுரு வுடையார் நல்லார் தகைபிதா மைந்த வென்றான்:(௭)

கேட்டலு நலனு ணர்ந்தேன் கிளத்துமிவ் வாறே தீது
காட்டலு மாமோ வென்றான் கண்டுவெந் தாயஃ தோதி
னாட்டவர் வாழ்விற் கூறும் நவின்றிலர் மேலோர் நிற்காத்
தாட்டனை மட்டிஞ் சொல்வேன் றலைவரை யவாறோர் கென்றான்.

வருக்கைவிச் சங்கற் றாழை மருவேம்பின் வம்பு சேற்றின்
றுருக்கடி சுண்ண வாவி தூரிபிற் படுமீன் பூதி
யிருக்குமெய்முடைமாயோண்மாரொளியபொய்புறணிகோள்தீங்
கருக்கலில் லாராய் நாண மாதிய குறைந்தே வாழ்வார் (௭௨)

௬௯—சொக்கு-அழகு. ௭௨—மரு-வாசனை, துருக்கடி-அழுக்கு நாற்றம். ஆவி-வாசனை. பூதி-துர்க்கந்தம். முடை-துர்க்கந்தம். பொய்—செய்ததைமறைத்து மற்றொன்றனைக்கூறுதல். புறணி—பழிகூறலாகிய தூற்றல், அல்லது புறங்கூறல். (நிந்தித்தல்.) கோள்-முன்புகழ்ந்துகாணாதவிடத்துஇகழ்தலாகிய பின்புறணி, அல்லது குண்டணி. தீங்கு—தீமையாகிய பொல்லாங்கு, படாப்பழிபோடல். அருக்கலில்லாராய்—சுருங்குதலில்லாதவராய்,

அடிப்பெரு விரறா னீளி னன்பனைத் துணைவி பேணும்
படியய னீளிற் பேணப் படுவளில் கணவ னாலே
கொடிவிரன் மேனைக் கும்பெண் குலத்தினுக் காகா னாடு
விடினகல் விரலாள் செல்வ மேன்மையே காண மாட்டாள். (௭௩)

பெருவிர லயல்வி ரற்கும் பெரிதிடை வெளியாள் சுற்றத்
தொருமையில் லாத கன்றே யுறைவதின் விருப்பங் கொள்வாள்
பெருவிர னிலத்திற் றேயாள் பிறனிடை நாட்டங் கொள்வா
ளிருவிர றேயா ளேனோ ரின்பமே விழைந்து துய்ப்பாள். (௭௪)

விரலெலா மேனைக் குற்றால் வெறுக்கைபோ மயலாற் சேர்வாள்
பெருவிரற் படிந்து நான்கும் பிழைத்துமே னைக்கிற் கைமை
பரவுசின் னரம்பெ ழுந்தாற் பாக்கியம் போஞ்சோர் வுண்டாம்
கரவடி வெளிறி னாக்காற் களவாடற் கஞ்சி டாளே. (௭௫)

அகவடி மறுவுண் டாயி னவள்பா தேசம் போவாள்
தகவடி யெட்டி வைப்போள் சத்தியந் தவறற் கஞ்சாள்
மிகவெடு வெடுந டைப்பெண் மிடிபெரி தடைவாள் பாத
வுகளநீள் குறடு போல்வாள் கைமையீண் டுரைத்தற் குண்டால்.()

ஆகலிற் பிழைதீர்ந் தோங்கு மழகுயர் நல்லாட் பார்த்து
வாகதா மணப்பித் துன்னை வாழ்விப்ப லென்றான் றந்தை
பாகமா வுண்மை தேர்ந்தேன் பானருள் வரமு முன்றன்
சேகாத் திருவுண் ணைக்குந் தெளிந்தனன் செல்வோ மென்றான்.

திருமக னொருப்ப டோர்ந்து சிந்தைமிக் குகந்தி வர்ந்து
பெருகருண் மகனோ டேதான் பிறங்குமில் லையும ழைத்து
முருகுயர் கடவூர் வந்து முதன்மருத் துவதித் தாயை
வருபிதாத் தொரந்தெடுத்து மணப்பித்து வாழ்வித் தானால்.(௭௮)

கனமுயர் குச்ச கன்சேய் கவுசிகன் மிருகண் டென்போன்
மனமகிழ் வுடன்றென் காசி வாழ்விசு வேசற் போற்றி
யினமுயர் வரம்பெற் றேகி யியனமருத் துவதித் தாய்வேட்
டனகனும் மார்க்கண் டற்பெற் றகங்களி சிறந்தான் வாழ்வான்.

மிருகண்டு வரம்பெற்ற படலம் முற்றிற்று.

ஆகப்பாட்டு ௭௯.

௭௯-அனகனும்—மாசில்லானாகிய

பதினாறாவது

தேவிக்குக் குடிலையுபதேசஞ் செய் தருளிய படலம்.

கவுசிக னுப மிருகண்டு வளர்தென் காசிநன் னகரிடை வந்து, கவுசிக வேச னருள்வரங்கொண்டு நயந்தநற் கதையிது சொற்று, மொவுமூல கம்மைக் குலகநா யகன்முன் புயர்குடி லையி னுபதேச, மிவுலக முய்வான் செண்பகக் காவி னியம்பிய தினியெடுத் தறைவாம். (௧)

சூதமா முனிவ ருரைத்தது கேட்டுத் துகளிலா நைமிச வனத்து, மாதவ ருள்ள மகிழ்ந்துகுச் சகனர் மைந்தருக் கிறைவசந் தருசீர்க், காதைநன் றென்று முகமனே டன்பாக் கழறிமேற் கதைசொல வேண்ட, வோதுவன் சூதன் பசித்தவர்க் கமிழ்த முளங்களித் தூட்டற வோர்போல். (௨)

ஓம்பொருள் சிவோமே யத்துச தாசி வோமென லாற் சிவ மாமா, லாம்பொது வுமாவோங் காரவாச் சியமோ யாவரவ் வடிவவாச் சியர்தென், பூம்பொழிற் கண்ணே சிவன்சிவை யாகிப் புகலவுங் கேட்கவு மமைத, ரும்பொழி லுய்வா னருள்விளை யாட றருமதை விளைவுவோர்க் கின்பாம். (௩)

அபனரி யானு மூவரின் மேலா யகாதியாய்த் துரீயமாஞ் சிவனு, மியலருட் பிழம்பா முத்தபிள் ளையுஞ்சீ ரிளையசே யும்பிர ணவமே, வயதுவம் ஞான மயமுனே ஞைவதனமுஞ் சுப்பிர மணியோஞ், செயவரு பெயரு மவரையோங் காரச் செல்வரென் றுணர்த்துவ தறிமின். (௪)

குடிலைவீட் டின்மூ வறைகளுண் டவற்றிற் குடிபுகு மூவரி லகாரக், கடியறை யயனு முகாரமா மறையிற் கண்ணனு மகாரமா மறையிற், றுடிபெறு மானு மாவமைந் தாக்க றெல்புவி காக்கல்பேரக் கல்கள், மடிவிலா தயர்வ மற்றமூ வறைகொண் மாளிகைக் குடிலையோன் சிவனே. (௫)

அகரமே யுகர மகாமூ வெழுத்து மறிஞரால் வியட்டி யென் றிடப்பட், டிகபாந் தருமாற் சமட்டியோங் கார மேற்றமாம் வீடுபே றருளுந், திகழுவாய் திறந்தா லகாரமா முகாரந் திறந்தவாய் குவித்துரைட் டிடினும், மகிழ்மூ டிடினு மகாரமிம் மாபின் வயங்குமான் மூவர்முத் தொழில்கள். (௬)

மூவரை யதிட்டித் தாக்கலா திபவர் முத்தொழில் புரிசியன் றானே, மேவகா ராதி வியட்டிகட் கும்மேல் மிளிர்சமட் டிக்குமே யுரியன், மாவகா ராதி மூன்றுருப் புடைய மந்திரராசவோங் காரம், பூவழுங் கொலியிற் பொதுவதா யிடினும் பொறிவடி வினிற்றமி ழாமால். (௭)

பிரசந்த வதன மெனுங்கரி முகமும் பிரத்தியக் கம்பிரமாசி, பரைதனு மறையிற் காண்டலின் வெற்பிற் பயில்கரி புழைக்கையைச் சிறிது, தாழுற மடித்தின் புடன்விளை வாடிற் றமிழினோங் காரமா மெழுத்தே, வாவுள வியல்பி னுண்மைகா ணறிஞர் வண்டமிழ் மறையதென் றறிவார். (௮)

ஒலிவரி வடிவ மொருமியாத் தமிழ்க்கே யுளவெழுத் திலாமொழி வடசொன், மலிபிர ணவந்தான் வடிவிலா தொழியின் மற்றதைப் பதிட்டைசெய் திறைஞ்சிக், கலிகவிர் வோரார் மயேச்சுர தலத்தோங் காரமே சிவார்ச்சைசெய் ததுவாப், பெரவிவுசெய் துரைக்கும் புராணமு முளதாற் புகலுமோங் தமிழகமறையே. (௯)

சிவனெழுந் தருளும் பிரணவ பீடந் திகழ்திரு வாசியென் றிடப்பட், டிவர்தரு வழக்குந் தமிழெழுனல் காட்டு மிந்தவோ மயனரி யரனைத், தலமெனக் கொளல்போற் பொருள்சொலு வழக்குந் தரையினுண் டஃதவ ரிருப்பா, னிவருவா சகமாந் தியேயசே வியற்கும் நிகழ்த்துசே வகர்க்குவே றறிக. (௰)

தூமறைக் கெல்லா முதலினுங் கடையுஞ் சொல்லுமோங் காரமா மறையைத், தாமகிழ்ந் தொலிக்கு மளவினிற் பாசந் தாண்டிமே லெழுப்பவி னோடாம், பூரனே படைபேற் காப்பதென் றியலோர் பொருளுமோங் தருப்பி ரணவப்பேர், சேமமா வுபிரை முடிவினி லிறைபாற் சேர்ப்பதென் றருத்சகல் கிடுமே. (௧௧)

ம—திவரு-உயர்கின்ற. தியேயசேவியற்கும்-தியானிக்கப்படுபவனை யேதலைவனுக்கும். சேவகர்க்கும்—தியானிக்கின்றவராகியதியாதா(அடிமை) கட்கும். மக-பூமன்—உலகத்திலேயிலைத்த.

படிந்தசஞ் சாரப் பற்றினைக் கடக்கப் பண்ணலாற் றாக
ம்மா, லொடிந்திலா விஃதேழ் கோடிமந் திரங்கட் குயிரதா
யெலாமியக் கிடுமாற், கடிந்தமா தவரு மிதன்புகழ் முற்றுங்
கழறவல் லாரில ரியார்க்கு, முடிந்தில திதனை யுலகநா யகிக்கு
முதல்வனன் கியம்புசீர் கேண்மின். (௰௨)

உமையவ ளுயர்ந்த பிரணவப் பெருமை யுணர்தர விழை
ந்தமை யறிந்து, கமையவிர் சிவனு ரிமையவெற் பனதென்
காசியாஞ் செண்பகக் காவி, னமைதியாய்ப் பதுமா தனத்தினு
யிரத்தோ டகவித ழுளபொகுட் டமர்ந்து, சிமைமயி லன்னா
ளுளங்குளிர் தருவான் றிருமலர் வாய்திறந் தருள்வான். (௰௩)

அன்னவுண் மையையிங் கியாவரு மறியா ராகலி னவ்விவ
ரத்தைச், சொன்னதார் கேட்ட தாரெனி னிலையாற் றொல்லுல
குடையவட் குரியன், பன்னயக் குடிலோ பதேசமொன் றியன்ற
பான்மையின் வழங்கலை யன்றி, யென்னது முறைக்கொ ணுமைய
தெனினு மினையசேய் கரந்துணர்ந் தனனே. (௰௪)

கரந்துகேட் டிருந்த குமரனு மகனைக் கண்ணுதல் பிதா
மக னிடம்போ, யுரந்தரு கல்வி யோதுக வென்றே யுரைத்தன
னப்பரி சுகந்தே, வரந்தரு மயனு மோதின னந்த வடிவுறு
குடிலையின் பொருளைத், திரந்தா மொழிதி யென்றனன் குட்
டிச் சிறைப்படுத் தாக்கல்செய் செய்தான். (௰௫)

பிரணவ மதுதான் வயிற்றுதி யென்றும் பேசிய தாமசி
யென்றும், முரணவிர் திருக்க ணுவிருத் தியுமா மூவித மூன்று
மாத் திரையா, யாரணமார் தருகாந் தாரத்தி னொலிபோ லள
வையா பிருசுவந் தீர்க்கங், காரணமார் புலுத மாயவுத் தமாதி
கனிநிகழ்ந் துச்சியி னிற்கும். (௰௬)

அறியினித் தகைய பிரணவந் தன்னை யழகிய வில்லதாப்
பணித்துச், செறியியல் சிறந்த திவ்விய வம்பாற் சிவனைப்
பூட்டியே பிரமக், குறியினி லிலக்கா யவ்விய மவித்துக்
கோதுதீ ரானந்த மயனும், நெறியினின் றேவிக் காலமுன்
றுணர்ந்தோர் நிலைபெறு முத்தியே சேர்வார். (௰௭)

௰௩—பொகுட்டு—தாமரைக்கொட்டை, சிமை—குடுமி.(உச்சிச்சூட்டு)
௰௬-வயிற்றுதி—குட்டையாகச்சொல்லும் இருசுவவொலியது. தாமசி—நெட்டையாகச்சொல்லுந்தீர்க்கசுரத்தது. திருக்கணுவிருத்தி—விரைவாகச் சொல்லும்புலுதத்தொனியது.

அகரமாத் திரைதா னொன்றதா யிலங்கி யகிலமுத் தாரி
க்கு மழகா, வுகரமாத் திரைதா னிரண்டதாய் வயங்கு முறைத்
திடு னுள்ளொளி யாய, மகரமாத் திரைதான் மூன்றதா
யெடுக்கும் வழுத்துமிம் மூவகை யறிந்தோர், பகரமாத் திரை
தேர்ந் தகாமய ராகிப் பரவுவர் துறக்கநா டடைவார். (௰௮)

மருவிய நாத மோங்கிமே லுறைய வைக்குமா லுருத்திர
லோகம், வெருவிடா விந்து சிவபதந் தனிலே விளங்கிவீற்
றிருந்திடச் செயுமால், கருவியா மிந்தக் குடிலையைச் சற்றுங்
கசடறக் கேட்டுளக் கனிவிற், குருவினா லுணர்ந்தோர் கறை
மிடற் றண்ணல் குளிரடி மலர்நிழல் வாழ்வார். (௰௯)

பிரணவ மகார முகாரமே மகாரம் பிந்துவு நாதமுங்
கூடிப், பரவுமைந் துறுப்பு தாமதின் மூன்று பகர்ந்தவை
யெழுத்துமற் றிரண்டு, வரவுறு வெழுத்துஞ் சேரவோ ரெனுங்
கால் வயங்கொலி நாதமா மதற்கா, மூனதோ ரெழுத்தே
விந்துவா முதன்மூன் றுடன்வரி யொலியுமா மைந்தே. (௨௰)

ஒன்றதா மிதேயே காட்சர மைந்தா வுரைப்பது முண்
டிதைத் தனித்து, நின்றிய லாற்றன் மிக்கவைந் தெழுத்தி
னீர்மையில் வோமினு முண்டா, னன்றுமந் திரரா சேச்சுர
மைந்து நவிலிது மந்திர ராசம், வென்றியோம் பிள்ளை யார்
திரு மேனி விளங்கிதொன் றுமறை யின்றால். (௨௧)

பிள்ளையார் சுழியென் றுயர்தமி ழகத்தோர் பிறங்கமுன்
வைத்தெதுந் தொடங்க, லுள்ளமை தொன்று தொட்டுள வழக்
கஃ துணர்ந்திலார் பிறபளுட் டவரும், நள்ளுமுற் சுழிவிந்
தடுத்திவர் கோடு நாதமோர் சுழியதன் முனையுங், கொள்ள
தூஉங் குடிலை வலியுடைத் தாக்கங் கூடுதல் சைவரே யறி
வார். (௨௨)

உரைத்தமாண் குடிலை யுண்மைநல் லாசா னுணர்த்தவோ
ர்ந் துருவதேற் றறிஞர், நிரைத்தநூ றிவுளி மகமியற் றுதே
நினைக்கினிந் திரனுமா வாரித், தரைத்தலை கமலத் திலைகளை
மலர்த்தத் தலைப்பெயு மழைத்துளி யாண்டுத், திரைத்தகல் வது
போற் கன்மசஞ் சிதங்க டெறித்திடக் காண்பரின் புறுவார். ()

௰௮-உத்தாரிக்கும்—கட்டளையிடும். அகாமயர்—பிணிநீங்கியவர்.
௨௰—வரி—ஓம்என்ற வரிவடிவெழுத்து. ஒலி-ஓம்எனவொலிக்குமொலிவடிவு. ௨௧-ஐந்தெழுத்தினீர்மை- நமசிவயவென்னும்பஞ்சாக்கரத்தின்றன்மை. ஐந்து- பஞ்சாக்கரம்.

இருந்திதை யுளத்திற் கருதுவோர்க் கரிதொன் றிலையிது
கைவரி னானும், வருந்தின காணி லறிவின ராவார் வயங்கு
தென் காசியிற் றேன்பான், மருந்திவை மூன்றும் பொருந்து
முக் கூடன் மணப்புன லாடியெம் மான்றாள், பொருந்தியர்ச்
சித்திக் குறியையுட் கணிப்போர் புண்ணிய ராகிவீ டடைவார்.

முக்கண னகில லிங்கமா யாழின் முனிமுகி லூர்திமுன்
பாவ, வக்கணத் தவர்க்குக் கண்டவை நின்றேழ்ந் தருளியாங்
கருள்வழங் கினான், மக்கணன் மாறர்க் குதிப்புனல் வரங்கள்
வழங்கினான் மணத்தவாத் தந்தான், தெக்கண காசிசிறந்தது
குடிலை சிறந்தது குடிலைதென் காசி. (உரு)

ஆதலின் குடிலை வடிவதென் காசி யரனடி தொழவலஞ்
சூழ்ந்து, போதலி னாக்கம் பெருகிடு மங்குப் புகுந்துறி னிந்
திர னாவார், காதலி னுமையொ டமரபதிக் காதி கயிலைவாழ்ந்
திருக்கைதென் காசி, யோதலி னாறி யுய்த்துணர் வாரவ்
வுண்மைதேர் வாரென மொழிந்தான். (உசு)

வேறு.

முயல ருந்தவர் முனிச வேண்முனை
னயனை வன்சிறை யாக்கியங் காக்கலைச்
செயலு மைக்குப தேசமெ மான்செய
வியமிறன் வெற்பிலென் றூடலென் னென்றனர். (உஎ)

பிரள யந்தொறும் பேதப்ப டுங்கதை
வரனுண் டென்னம காகாந்தங் கேட்டநீ
ரூரம கிழ்ந்திடஉ முண்டொர்கா லென்றுணர்
தான்ம றக்கிலி றென்றிறை தந்தனன். (உஅ)

வினாய ருந்தவர் விம்மித மெய்தினர்
தெனாய செண்பகக் காச்சிவன் றேவிபான்
முனாப வோம்பொருண் முன்சொல லின்மிகப்
பனாமு னீசமேற் பன்னென வேண்டினார். (உகூ)

தேவிக்குக்குடிலை யுபதேசஞ்செய்தருளிய படலம் முற்றிற்று.

ஆகப்பாட்டு ௲எஉ

உச-தேன்பான்மருந்து-தேனாறு, பாலாறு, தேவாமிழ்தவாறு. (செங்கோட்டைதிருக்குற்றாலதிபாதலநதிகள்.) இக்குறி—ஓம்

பதினேழாவது

தரணிபீடச்சிறப்புரைத்தபடலம்.

சிவன்பிர ணவஞ்சி வைக்குச் சிந்தைநன் குவக்கும் வண்ண
மிவர்தா வுபதே சித்த வியல்புட னதன்சீர் முற்றுந்
தவறிலா துரைத்தா மேலாத் தரணிபீ டச்சி றப்பு
நவமுற வினிதெ டுத்து நயந்தர வுரைப்பா மாதோ. (க)

அடிநடு முடியி னெல்லை யளக்கொணா வோரொ ளிப்பாற்
குடிலையாய் நாத மாகி நாதமேற் கொழுவிந் தாகி
வடிவுறு விந்திற் றோன்றோர் வடிவுகொள் விசுவ நாதன்
படிகவுண் ணாமைநூல் கோத்த பரிசினுச் சத்து நின்றான். (உ)

வேறு.

சுத்த மாஞ்சிவச் சோதியே மத்திய சோதி
நித்த மாமது நிட்கள நிறைவிந்நா தத்திற்
பெத்த மாமதிக் கிராந்தவிந் துகசத்தி பிறந்தா
ளொத்தன் னதிக் கிராந்தவிந் துகசிவ னுரியாள். (ங)

இப்ப ராசத்தி யிச்சிவ னிருவரீ ரிருவர்
தப்பி லாமலைந் தொழிலையும் நடாத்துவர் தாமே
யொப்பி லாகா ரியாண்டொரு நாளதா மும்பர்க்
கப்ப டிப்பிர மாண்டொரு கருப்பமா மவர்க்கே. (ச)

பிரம னோடிலக் குமிவலத் தோளினும் பெருமா
ளரியி னோடிடத் தோளினு முரத்தினி லரனுஞ்
சரசொ தித்தாயுந் தோன்றினர் தம்மிடை மாறி
வரன்மு றைப்படி மணந்தனர் மயேச்சுரன் முதல்வன். (ரு)

உ. உச்சத்து-குணங்குறிகடந்த மேனிலையில். ங. அதிக்கிராந்தவிந்துகசத்தி-சுத்த மாயையாகிய விந்துவுக்கு மேற்பட்ட விந்துவை அதிட்டிப்பவளாய், விந்துவை நீங்கிய இலய சிவத்தால் தோற்றுவிக்கப்பட்டவளாய், சிவபேதம் ஒன்பதனுள் முதலாவதாகவுள்ள பரசிவத்துக்குத் துணையாக நிற்பவளாயுள்ள பராசத்தி. அதிக்கிராந்த விந்துகசிவன்—ஆன்மாக்களுடைய அறிவுக்குப்புலப்படும்பொருட்டுத் தனது சிற்சத்தியின் சந்நிதி மாத்திரத்தில் சுத்தசிவனால் தோற்றுவித்த சிவபேதம் ஒன்பதில் முதலாவதாகிய நிட்கள பரமசிவம். ச. ஈரிருவர்—பராநாதம், அபரநாதம், பரவிந்து, அபரவிந்து என்னும் நால்வர். ரு. பெருமாள்-திருமால். அரி—உருத்திரி. மயேச்சுரன்-பரசிவன்.

வேறு.

துருவிய விசுவா ரூடி வாயிலாத் தூவெண் சித்தி
மருவிய வணிமா வோடு மகிமாவு மிலகி மாவும்
பெருவிய கரிமாப் ராத்தி பிராகாமி யம்மீ சத்வங்
கருவிய வசித்து வங்கள் கவினவச் சிவத்துண் டான. (௬)

இத்தகை யெட்டு மெட்டுத் திசையித ழெட்டின் மேவப்
புத்தகத் தாது வீசும் பொகுட்டதன் மேல்வட் டத்தின்
மத்தகத் திதழீ ரெட்டும் வாழ்வுற, டெய்வ வாழ்க்கை
முத்தகு வளையத் துள்ளே மொழிமிதழ் வெளியி ரண்டே. (௭)

குறுக்குவரை நீட்சிக்கு நெல் அளவுமுறை.

முரிவுறுச் சதுர ரேகை மூன்றுமேல் வாய்த ஞன்காந்
தெரிவுசெய் ததனுள் வட்டந் திகழுநாப் பண்கோ ணத்தி
லெரிவுசெய் பானுக் கீற்றிற் கிருபத்தஞ் சாம்நென் னீட்சி
யரிமதி வரைமுப் பானு லரைநென்னீ ளத்த தாமால். (௮)

பூமகன் றனக்கு நாற்பா னேழரை புதன்பன் னேழா
மேமனுங் குருவுக் குப்பன் னொன்றுவெள் ளிக்குப் பன்னேழ்
நேமமார் சனிக்கு நாற்பத் தேழரை நெல்லி னீளம்
நாமரா குவுக்கு முப்பா னுலரை னென்னீட் டாமால். (௯)

செவ்வைய கேது வுக்கை யைந்துநெல் செறிநீ ளந்தா
னிவ்வவைப் பானொன் பானெல் லெழிற்குறுக் கிரேகை நீளம்
வெவ்வன லோன்மூன் ஞக வெள்ளியீ ருக்கு றித்த
வவ்வக டாற ரைநெல் லளவிடை வெளிமுன் னண்டே. (௰)

---

௬. விசுவாரூடி வாயிலா—உலகமுன்னேற்றத்தின்வழியாக. ௭. புத்தகத்தாதுவீசும்–அகத்திலுண்டாம் புதிய மணங்கமழும். பொகுட்டு–தாமரைக்கொட்டை. மத்தகம்—தலையில். ௮. பானுக்கீற்று–ஞாயிறுரேகை. இது சத்திகோணத்திலுள்ள ஒன்பது வரைகளில் முதல்வரை. அரிமதி–ஒளிவடிவாகிய திங்கள். ௯. ஏமனும்—பொன்னனுகிய. நேமமார்சனி—முறைதிறம்பாத சனி. நாமராகு– கீர்த்தியுள்ளராகு. ௰–வெவ்வனலோன்—விரும்பத்தக்கஞாயிறு. அவ்வகடு–அந்நடு. இதே மேல் ௰௩ ஆம்பாட்டிற்கூறும் மூலையாம்போலும். நாற்பத்துமுக்கோணத்தை ஆராயுங்கால்,

பங்கிடு முறை.

இரவியி னிரேகைக் கீழா ராறுபங் கிடைநென் னீளம்
திரவியிந் திரேகைக் கீழஞ் சேகாறுபங் கிடைநென் னீட்டாம்
விரவிய செவ்வாய்க் கீழ்மூன் றரைநெல்லின் வெளிகி டப்ப
வரவிரி புதனி ரேகைக் கீழிரண் டரைநென் மட்டாம். (௰௧)

குருவின திரேகைக் கீழ்நா லரைநெற்கள் கொளவுட் காண்க
மருவிய வெள்ளிக் கோண்கீழ் மூன்றேமுக் காலென் மட்டாந்
துருவிலாச் சனியின் கோண்கீழ்த் தோன்றுறு நெல்லி னீட்டாம்
வெருவிலா விராகுக் கோண்கீழ் விளங்காறு நென்னீட் டாமால்.

நாற்பத்துமுக்கோண் விவரம்.

அன்னசீர்க் கேதுக் கோண்கீ ழாறுநெல் லளவி டங்காண்
பன்னயா றறைமு னைக்கிப் படியைம்பா னெற்பங் காமால்
மன்னிய சுற்றீ ரேழ்கோண மற்றிரண் டெட்டப் பத்து
நன்னரெட் டுண்ணு வொன்று நாற்பத்து முக்கோ ணுமால். (௰௨)

மூலை வந்துகூடுமுறை.

வெள்ளியா மாறுங் கோடு மிளிர்திங்க ளாமி ரண்டி
லுள்ளிய சனிகோ டாமே மூயர்விருத் தத்தி லொட்டு
மெள்ளிலெண் வரைய ராச்சூ ரியனதா முதற்கோட் டிங்க
ணள்ளிலான் பான்கோட் டார்கே தழல்வரை மூன்றிற் கூடும். ( )

---

1. இந்நூல்.			2. சிற்பநூல்.	3. கடைக்காண்டம்.		
	1	2	3		1	2	3

	1	2	3		1	2	3
ஞாயிறு பங்கு	௬	௬	௬ இ	வெள்ளிபங்கு	௩ஞ	௪	௪ இ
திங்கள் பங்கு	ருவ	௬	௬	சனி பங்கு	௬	௩	௩ஞ
செவ்வாய்பங்கு	௩ இ	ரு	ருவ	இராகு பங்கு	௬	௬	௬
புதன் பங்கு	௨ இ	௩	௩ இ	கேது பங்கு	௬	௬	௬
வியாழன் பங்கு	௪ இ	௩	௨ இ	மூலை பங்கு	௬ இ	௬	௬
				ஆக பங்கு	ருய	௪௮	ருய

இங்ஙனம் மூன்று வேறுபாடுகள் காணக்கிடக்கின்றன.

"ஈராறு மைந்து மிருமூன் றும் நான்மூன் றுஞ்
சீரான மூவாறுஞ் செப்பக்கேள்—வாரார்பூ
வட்டமுலை மாதே வடிவுடைத்தேங் காயிலிட்ட
கட்டமைவே சீசக் காம்"

என்னுஞ்சிற்பநூலாரது வெண்பாவுங்கிடைத்தது. சீசக்கரத்துரேகை ௧, வட்டம் ரேகை ௨, ஆக ரேகை ௰௧-க்கு பங்கு ௫௰ எனக் கடைக்காண்டத்தார் கூறுகின்றார். ஒரு அகலத்தை எட்டு ஒடி ஒடித்து, அதில் ஒரு ஒடியை ஆறாக முறித்தல் பகிடுமுறை யென்பர். ௰௩–௱–௩௰. ஆ–ஆக.

முதல்வரை ஞாயி றூறும் வெள்ளிகோட் டின்கண் முட்டும்
மதிவரை யாயி ரண்டோன் பான்கேது வரையிற் சேரு
முதிரன்கோ டாமுன் ேறாடி விருத்தத்தி லொட்டும் நாலாம்
புதன்வரை கருங்கோ ணெட்டிற் பொன்னேந்தேழ் சனியிற் கூடும்.

தரணிபீடஅமைதி.

மத்திமுக்கோண்முக்கோண்மேல்வளைவிணெட்டினிமுக்கோண்பப்
பத்திரு வளைவின் முக்கோண் பதினன்கு மேற்சூழ்ந் தப்பாற்
சுத்தித மெட்டீ ரெட்டுச் சுற்றிரு வெளிமு வட்டஞ்
சத்திநாற் பான்முக் கோண்மேற் சதுரமுத தரணி பீடம்.(௰௬)

அங்கிச அளவு.

ஒருபது தகட்டுப் பார வங்கிச முளவ தன்மே
லொருபது பந்த பற்ப வங்கிச முளவ தன்மே
லொருபது பந்த பற்ப வங்கிச முளவ தன்மே
லொருபது பந்த பற்ப வங்கிச முளவ தன்மேல். (௰௭)

விந்துவுள் படவே கம்பி யாறுக்கும் விளங்கு மம்சம்
பந்துவா மொவ்வொன் றுக்கா றூறுமுப் பானு றுகத்
தந்துவுற் றிடவு தான தன்மைத்தா முண்மேற் சுற்றின்
முந்துசக் காக்கூ றுக்கோண் பதினன்காய் மொழிவ தற்கே.

௰௬-இப்பாட்டு"பிந்துத்ரிகோண வசுகோணதெசாரயுகம்-மன்மஸ்ரகதளஸம்யுத சோடசாரம்| வ்ருத்தத்ரயஞ்ச தரணீசதனத்ரயஞ்ச—ஸ்ரீசக்ரமேவலிகிதம் பரதேவதாயாம்.| |" என்றசிற்பசுலோகத்தோடும் ஒத்துள்ளமைகாண்க-சிற்பநூலில் மூனைமூட்டுமுறைகூறுமிரண்டுவெண்பாக்களுங்கிடந்தன. அவைவருமாறு:—

"கேதுவொடு செவ்வாய்க்காங் கீழாவி ஞதித்தன்
றீதில்சனி வட்டத்திற் சேருமே—போதமார்
வெள்ளியுந் திங்களில் வேந்தன் சனியுடனு
மெள்ளி விதன்படி யீந்து."

"ஞாயிறு வெள்ளியொடாம் நற்றிங்கள் கேதுவொடாஞ்
சேயிவர் மாதுவட்டஞ் சேருமே—யேயிற
புதனே டிராகாம் புகழ்கூர் சிலைகோணிவ்
விதமாகக் கீழே விழும்"

முன்னையதில் 'வேந்தன் (வியாழன்) சனியுட' னுமென்றது கீழ்நோக்கிய முக்கோணமாகவுள்ள ஐந்து சத்திகோணங்களின் வைத்து எண்ணப்படாமல், மேனோக்கிய முக்கோணமாகவுள்ள

அங்கிசம் பன்னி ரண்டே யாகுங்கோ ணொருபத் திற்காங்
கங்கிசம் பன்னி ரண்டே யாகுங்கோ ணொருபத் திற்காங்
கங்கிசம் பன்னி ரண்டே யாகுங்கோ ணைன்ப திற்கவ்
வங்கிச மெட்டிற் காறே முக்கோண மதற்கெட் டாமே.

நிறவகை. முதல்வீதி.

புல்லிய பதினாற் கோணின் வண்ணத்தைப் புகலக் கேண்மின்
செல்லிய முதற்கோண் சேப்புக் கீழ்க்கோ ணுஞ் சிவப்பே யாகும்
சொல்லிய கீழ்க்கோண் காரி துலங்குகீழ்க் கோண்க றுப்பு
வெல்லிதன்கீழ்க்கோண் சேப்புவிளங்குகீழ்க்கோண்வெளுப்பே. ()

திருவியல் கீழ்க்கோண் சேப்புச் சிறந்தவெட் டாங்கோண் சேப்பு
வெருவிலா மேற்கோண் சேப்பு மேற்கோணம் வெள்ளை யாகும
கருவிமேற் கோண்சி வப்புக் கந்துமேற் கோண்க றுப்பு
மருவிதன் மேற்கோண் காரிமற்றிதன்மேற்கோண் சேப்பே. (௨௧)

இரண்டாம் வீதி.

இப்பதி னாற்கோ ணிற்க விதனயற் பத்துக் கோணி
லொப்பதின் முதற்கோண் வெள்ளை யுயர்தன் கீழ்க்கோண் காரி
செப்பதின் கீழ்க்கோண் காரி திகழுநா லாங்கோண் சேப்பு.
வைப்பதின் கீழ்க்கோண் வெள்ளை வயங்குமா றுங்கோண் காரி.()

மூன்றும் வீதி.

நயப்புரி மேற்கோண் வெள்ளை நவிலுமெட் டாங்கோண் சேப்பா
மியம்புமேற் கோண்க றுப்பா மேற்றமேற் கோண்க றுப்பு
வயம்புகு மடுத்த பத்தில் வயங்குமொன் றுங்கோ ணீலம்
கபப்புகல் கீழ்க்கோண் காரி கருதுமுன் றுங்கோண் சேப்பு.(௨௩)

நிலவுநா லாங்கோ ணீலம் நிகழ்த்துகீழ்க் கோண்சி வப்பு
குலவுகீழ்க் கோண்சி வப்பு கூறுமேற் கோண்சி வப்பு
செலவுமேற் கோணாம் நீலந் திகழுமொன் பான்கோண் சேப்பு
நலவுறு மேற்கோண் காரி நவிலிதே மூன்றும் வீதி. (௨௪)

நான்கு சிவகோணங்களின் வைத்துச்செலவிருக்கிறது. கீழ்க்கண்ட ௰௪, ௰௫ ஆம் பாட்டுகளில் கண்டுகொள்க. ஆறு கோணம் வட்டத்திற் கூடியும், எட்டுக்கோணம் கூடாதுமிருக்கும் இதில் இரண்டு ரேகை கூடின சந்தி ௨௪ (சர்மம்), மூன்று கூடின சந்தி ௰அ (வர்மம்) இதேடமருகம் எனப்படும். ௰௯. 'எட்டாங்கோண் சேப்பு' என இந்நூலாசிரியர் கூறுகின்றார். பிறர் எட்டாம் முனைக்குக்கறுப்பு, நீலம் என நிறங்கண்டுள்ளார். உண்மையாசிரியன் வழி ஆராய்ந்து கண்டு கொள்க.

நான்காம் வீதி.

நாட்டிய நாலாம் வீதி நடுமுக்கோண் பொன்சேர் செம்மை
தீட்டிய முதற்கோண் மஞ்சல் சிறந்தகீழ்க் கோணஞ் சேப்பே
கூட்டிமூன் றாங்கோண் மஞ்சல் கூறுநா லாங்கோ ணீலம்
நீட்டிய கீழ்க்கோண் சேப்பு நிகழ்த்துமா றாங்கோ ணீலம். (உரு)

நிரைத்தவே ழாங்கோண் மஞ்சனெடியவெட்டாங்கோண்சேப்பா
முரைத்தநாப் பண்முக் கோண்செவ் வொளியறை முதல னைத்து
மரைத்தழ கியம ருந்தா லவிர்தரச் செய்துள் விந்து
பரைத்தலம் பச்சை சாத்தி பரவெளி பச்சை சாத்தி. (உசு)

இதழ்களெட் டீரெட் டிற்கு மிலங்குசெந் தாம ரைப்பூக்
கதழ்வதா வடிவெ ளுத்து மேற்செம்மை கவினத் தீட்டி
முதல்வியை மருக்கொ ழுந்து முகையவிழ் பிச்சி முன்பல்
விதமல ராற்பூ சிக்கும் மெய்த்திரு தரணி பீடம். (உஎ)

இவளென் றறியொ ணுச்சி ரியையிவள் குடிலை யாவா
டவளநா மகளு மாவா டருணசெங் கமலை யாவாள்
பவளவாய்க் கௌரி யாவாள் பகர்மயேச் சொரியு மாவா
ளவளவின் மேன்ம னோன்ம ணியுமிவ ளாவாள் காண்மின். (உஅ)

வேறு.

ளாலே மாண்டிரி புரைபுவ னையெனுமூ வாத
சீலை யாயவி லளிதையாஞ் சிவையினெந் திரமா
மாலை யத்தைநாற் பத்துமுக் கோணமென் றறிந்து
காலை மாலைபூ சிப்பவர் கலிதவிர் வாரே. (உகூ)

வேறு.

நாவரு பிரமி யம்மை நாரணி ரவுத்தி ரேசை
யீவருட் பதங்க ளெல்லா மீந்திட லாகி மிக்க
மூவரும் நச்சுந் தாயாய் முகிலின்வா கனனு மேனைத்
தேவரு மெவரும் போற்றித் தெரிசிக்குஞ் சரணி பீடம். (கூ0)

உருவில் 'முதற்கோண் மஞ்சல்' என்று இந்நூலாசிரியர் கூறுகின்றார். பிறர் சிவப்பு, குங்குமம் என வண்ணங்கூறியுள்ளார். உகூ இப்பாட்டு 'ஸ்ரீபால திரிபுரசுந்தரி லலிதா ஸ்ரீசக்ரஸ்வரூபிண்யை நம:— ஸ்ரீசக்ரப்ர்யவாசநீம் பகவதீம் ஸ்ரீராஜ ராஜேஸ்வரீம் பக்தாநாம் அபயப்ரதாபவரநிதீம் அநந்த சந்தாயிநீம் | பரமே சாச்சுதாம் வர்நிதாம் முநிநுதாம் கந்தர்வசம்சேவிதாம் துவாந்தேவி திரிபுரே பராபரமயீ ஸ்ரீப்ர்ஹ்ம வித்யாம் சிவே.' என்றோர் வசனத்தோடு சிறிது ஒத்துப்போதல் காண்க.

மருவுமக் காமீ ராறுய் வளர்கண்ட மறைமூன் றுமீ
துருவுயர் முடியி னோரோர் மாயையோ டொன்றிச் செல்வக்
குருவுப தேச மாகிக் கோதிலாக் குணங்கண் மன்னித்
திருவுளச் செயற்கைச் சித்தி சித்திக்கும் சீலர்க் கம்மா. (கூக)

மருவிய சித்திப் பேற்றான் மகாசித்தி பீட மாகு
மொருவிலாக் கலைஞா னந்தந் தொளிர்கலா பீட மாகுந்
திருவிய லாறே மொன்றுந் திரிகோணற் போக பீடந்
தருமூரு வெலாமச் சீராற் றரணிபீ டம்மீ தென்றான். (கூஉ)

தரணிபீடச்சிறப்புரைத்தபடலம் முற்றிற்று.

ஆகப்பாட்டு கூஉஎச.

பதினெட்டாவது

சிலாதரன் மகப்பேறடைந்த படலம்.

ஓங்கருட் டாணி பீட வுண்மையு நாற்பான், முக்கோ
ணுங்கமை திறனு மேன்மை யனைத்துமே யறிந்த மட்டும்
பாங்கதாச் சொற்று மிப்பாற் பகர்சிலா தரன்பூ சித்துப்
பூங்கழன் மகப்பே றுற்ற பொருவிலோர் கதைசொல் வாமால். (க)

நேமியங் காவாழ் தூயோர் நெஞ்சகங் கனிந்தா னந்த
நாமகள் வாணு வான்போ னற்கதை யெடுத்தெ டுத்துக்
காமுறச் சொன்மு னீச கைமாறு காணே மெம்மை
நீமகிழ்ந் துய்வி யென்று நிலம்படிந் திரந்தார் சொல்வான். (உ)

சித்திரை நதிவ ளங்கூர் செண்பக மலர்க்கா வின்கண்
புத்திர வரங்கொ ளற்காப் புக்குவாழ் சிலாத ரன்றான்
மித்திரன் மதிதீ முக்கண் விசுவைகோன் விசுவ நாதன்
முத்திரக் குணங்க டந்த முதல்வனெண் குணன்று டாழ்வான். (கூ)

வேறு.

பகுதியவா மிடைகலைபிங் கலைசுழினை யொருவழிக்கொள் பயிற்சி முற்றித், தொகுதியவா மிரேசகபூ ரகும்ப கங்கணெறி துலங்க வாற்றித், தகுதியவா வடிமிசைநா டியையடுக்க வடுக்கமுய றாத்தா லேற்றி, மிகுதியவா முறைநிறீஇயெண் ணான்குவெளி விடத்தேர்ந்த விதியோ குற்றான். (ச)

பிருதுவியின் வசத்தாகு மிருமுக்கா லொன்றேகாற் பெரு
ப்பு னற்கு, விருதுபெறுந் தேயுவயத் தொன்றேயாங் காற்றி
னுக்கு வீசு முக்கால், கருதுபரா காயத்திற் கரையாகுங் கன்ன
லஞ்சு கணந்தப் பாக்காற், பொருந்துளத்தாய் மீண்டிருமுக் கினி
னடந்து சுழிமுனைநிலை புகல்கண் டுற்றான். (ரு)

பூரித்தே கொள்வதொரு பதினாறு மாத்திரையாம் பூர
கத்தப், பாரித்தே காந்தமுறுங் கும்பகமெட் டெட்டாகும்
பாங்குங் கண்டு, நேரித்தே மூலமுனை ருதார முகிழ்விரித்து
நிலனீர் தீக்கால், கூரித்தேய் வெளிமேலாந் தியானாதி கம்ப
ரமுட் கொண்டோ னானன். (சு)

நாசிப்பினம் முனைகோவி மதியிரவி யக்கினியி னட்டங்
குன்று, வாசியினன் னெறியொருமை யைம்புலனிற் பிரியாதே
வலமாச் செல்ல, வூசியினுண் முனைமயிரி னுனியினொழுங்
கொருவாதுள் ளுவந்து விந்து, வீசியுறற் றெள்ளமிழ்தி னனை
ந்துநாறை சோதியைநேர் விளங்கக் கண்டான். (எ)

வருகாத லோடுகண்ட தலந்தொறும்புக் காற்றுதவம் வள
ர்தென் காசிக், கொருகாத லெழுப்பியுய்த்த தத்தவத்தால்
வந்தவவ னோராண் டிங்குச், சருகாதி வாயுநுகர்ந் துலாமற்
புற்றருக்க டழைந்து மூடிக், குருகார்வத் தடையாயன் முது
குற்று லம்படிந்து குறுகன் றைக்கே. (அ)

எக்காலத் தெவ்விடத்தி னெவ்வெவரே யெண்ணினுமாங்
கிசைவோ னீறின், முக்காலம் பொருடானாய் முளைக்குமொரு
சோயஞ்சோதி முக்க ணற்றோண், மிக்காலம் பூதபவு திகங்
காட்டிச் சத்திவித்தாய் விடைமேற் றோன்றிச், செக்காலக்
கரும்பூற்று பாகன்னான் முனிவன்முன்பு திகழ்தலானான். (கூ)

எழுந்துவிடைக் கொடியானே யெம்மானே யிருமானை
யிடங்கொண் டோனே, யழுந்துகறை மிடற்றோனே யங்கையி
னோர் மழுவானே யபயத் தானே, செழுந்துழாயன் காணானை
தென்மலையா னேயென்று தெண்டா காரம், விழுந்துபணிந்
துவகையொடு வலம்புரிந்து துதித்துநின்றான் மெய்யன்பானான்.

சு- பாரித்து-பருத்து. நேரித்தே—அடுத்தே. கூரித்தேய்-
மிகுந்தொத்த. இற்றுச்சாரியை இத்து என மரீஇயிற்றப்போ
லும். தியானாதிகம்பரம்—தியானத்துக்குரிய மேலான சிதாகாசத்
தை, எ. விந்து-புருவநடு. கூ. மிக்காலம்பூதபவுதிகம்-மிகவகன்ற
ஐம்பூதங்களையும், பூதங்களாற் றோன்றிய பூதியங்கட்கடுத்தவற்
றையும். ௰ இருமான்-இளமானும், உமையும்.

வேறு.

ததலைநன் குடைய சிலாதர நீசெய் தவத்தைபோர்ந் துக
ந்தன மன்பான், மதலையை வேண்டி வந்தனை யுனக்கு வழங்
கின மொருமக வதுவும், விதலையிற் படாது நமக்குகந் தது
வாய் விளங்குமெஞ் ஞான்று மாயாது, முதலையுற் றோங்கு
மெனவரந் தந்தான் முனிமகிழ் தலைசிறந் தனனே. (௰௧)

பரிந்தரு ளிறைவ னின்பக்கூத் தாடம் பலத்தினின் றிவ
ர்ந்ததின் மறைந்தான், றெரிந்தறி வுடைய தவத்தனன் புரு
வாஞ் சிலாதரன் சிவனருள் வழியே, விரிந்தகூர் முகத்துக்
கொழுவினா லுழுத மேதினிக் கண்ணொரு பிள்ளை, புரிந்தகன்
றனைத்து முருக்கொடா னற்போற் பூத்தது கண்டனன் மகிழ்
ந்தான். (௰௨)

அன்னது காலை யருந்தவன் மகப்பே றளித்ததென் காசி
நன் னகர்வாழ், முன்னவ னுலகாள் பாகனை மறவான் முகிழ்
த்தகண் ணுடையசேய் காணக், கன்னலி னும்பர் துந்துமி
முழக்கிக் கடிமலர் மாரிகள் பொழிந்தார், மின்னவிர் டாற்றண்
கதிரொளி பரப்பி விளங்குமெய் யனைக்கண்டு கண்டு, (௰௩)

கண்டகண் குளிர்ந்துட் குளிர்ந்துவந் தடுத்தென் கவ்வை
தீர்த் தருளருட் கனியே, தொண்டனெற் கிறைவ னருளருட்
பதிந்த தோன்றலே சிவகலைக் கூறே, கொண்டன னுனையோர்
பொருளென வினியோர் குறைவுநான் காண்பதே யின்றுன்
மண்டலம் புகழு மைந்தனே யெனத்தன் மலர்க்கையா லெடுத்
துமார் பணைத்தான். (௰௪)

ஆருக்குந் தாதை யாகிய முதலோ வருமைநீ யான்கொளு
மவாவாஞ், சீருக்கு முகந்தோர் பிள்ளையாய் வந்த திறமது
மெத்தவச் சிறப்போ, பாருக்கு ணீரி லெழுந்தசெங் கமலம்
படிதிரு கலைமகள் பரவ, வூருக்குட் கொடுபோய்த் தன்ன
றச் சாலை யுறைந்தனன் றவத்தினுக் கொருவன். (௰௫)

ஒருவனிவ் வுலகி னுள்ளுடற் குயிர்போ லுதித்துநாற்
றிருபது வயதுப், பொருள் வரங் கிடைத்தான் மகிழ்வனிம்
மேலோன் பொன்றிலா மகப்பெறி னென்னாந், தருவள வா
னோர் முனிவரர் மக்கள் சகலரு மகிழ்ந்துகொண் டாட, வரு
வண மகவை மனைவிகைக் கொடுப்ப வாங்கினண் மலர்ந்தது
கொங்கை. (௰௬)

௰௧. ததலை-நிலை. விதலையில்—நடுக்கத்தில். முதலையுற்று -முத
ன்மையை யுடைத்தாய். ௰௩. கன்னலின்-நாழிகையில்.

மலர்ந்தன கைகண் முகமலர்ந் ததுகண் மலர்ந்தன வுள
மலர்ந் ததுவே, மலர்ந்தன விருபாற் குடங்களும் பொழிநன்
மணத்தபா லூட்டினன் மகிழ்ந்தான், மலர்ந்தருள் வாய்வைத்
திருகுடப் பாலுண் மகவக முகமலர்ந் தறிவு, மலர்ந்தருள்
பதிந்து மகிழ்தலை சிறந்து வளர்ந்தது வளர்பிறை போன்றே.

வேறு.

கையி லேந்திக்கொங் கையமிழ் தூட்டியே
மையி லேசற்றுக் கண்ணினி மைக்கிட்டுச்
செய்யி னேதுஞ்செ யத்தக்க செய்தொளித்
துய்யி னப்பணி சூட்டிநன் றாற்றுவள். (௰௮)

பெற்ற தாய்தந்தை பேணிய மாதவத்
துற்ற மைந்தற்கு நந்தியென் றோர்பெயர்
சுற்ற மேவர்க்கு மின்புறச் சூட்டினார்,
நற்ற வன்சைவ நந்தியம் மானென்றான். (௰௯)

சிலாதரன் மகப்பேறடைந்த படலம் முற்றிற்று.

ஆகப்பாட்டு ௲௨௨௩.

பத்தொன்பதாவது

நந்தி யுபதேசம்பெற்ற படலம்.

வளர்சிலா தமுனி சிவன்வ ரங்கொடோர்
தளர்விலா மகப்பெறு சரிதங் கூறினா
மொளிர்தவ மகவவ னுலகம் மையருண்
மிளிரொண்போ தகம்பெறல் விள்வன் மேலரோ. (௧)

நூலனைத் தினுமுன தனுக்கந் தேர்பரி
பாலனா நந்தியெம் மான்ப ழுங்கதை
சாலயாங் கேட்டிடுந் தவமு முண்டுகொன்
மேலசொல் கெனத்தவர் வேண்டச் சொல்லுவான், (௨)

நந்தியெம் மான்றமிழ் நாட்டுச் சைவர்தம்
முந்திய நீலவழா அர் முதல்வ னுக்கொள
வந்தியன் மேன்மக னவன்வ ளம்புயற்
சிந்திவர் பயிர்நிகர் செல்வர்க் கின்பமாம், (௩)

சிறந்துமோ டனவுயர் செழுமை வாய்ந்தரின்
மறுத்துநா வகன்றொளிர் மடிப்ப மைந்தெழி
லுறுத்தநற் சுழியதா யொழுகு மென்மயிர்
கறுத்தவாய் மேடதாய்க் காண்வ யிற்றினான். (௪)

திரண்டதாய் வலியதாய்ச் செழித்தொன் னார்க்கெதிர்
முரண்டழைத் திவர்வதாய் வெற்பின் முற்றற
னரண்டக வமைப்பதா யாடல் பூண்பதாய்ச்
சரண்டரு பொறைகொடு தழைத்த தோளினான். (௫)

இடுப்படிப் புறத்ததா மிருபிட் டத்தவா
பெடுப்பாப் படமென விவர்ந்த கன்றதாய்
மடுப்படல் சூய்புதல் வற்ற வின்றியோர்
கொடுப்பதாய்ச் செழித்தவல் குலாயி ருப்பினான். (௬)

ஆடிபோன் மெதுவதா யகன்ற தாய்ப்பரந்
தீடிவர் வயிரவெற் பெனவு சத்ததா
யோடிய நடுத்தணிந் துயர்ந்து செப்பமாய்
நீடியற் கருமயிர் நிரைநன் மார்பினான். (௭)

நெறிந்திவர் வரையதாய் நிழல்சி றந்ததாய்ச்
செறிந்துநன் றுயர்ந்ததாய்ச் சிறித கன்றதா
யறிந்தவ ருளங்கவ ரழக தாய்நவை
பறிந்ததாய்ச் செழித்தொளி பரந்த நெற்றியான். (௮)

மாதுளை மலரென வயங்கு நாள்சிறந்
தோதுசிர் நுனிவிரிந் தொளிர்ந்தி ரண்டகத்
தேதுளை சிறந்ததா யிவர்முக் கோணநேர்
கோதறு துயர்ந்தெழில் கூரு மூக்கினான். (௯)

ஓங்குமிவ் வாறுறுப் புயர்ந்த வாமிவை
தீங்குறா தமைந்துள செல்வ னெண்வகைப்
பாங்குபர் செல்வமும் படிநல் வாழ்வையுந்
தாங்குமேன் மகனெனச் சாற்று நூலரோ. (௰)

நெடியதாய்ப் பாற்கட னீலம் பூத்ததிற்
படிகநாக் கருமணி பதிந்த வண்ணமாந்
தடியிமை காக்கநன் றமைந்தொ ளிர்ந்துள
வடிவவாந் திருவமர் மணிச்செங் கண்ணினான். (௰௧)

வீணைபோ னெடியதாய் மிளிர்செங் கையினான்
கோணல னுடையதாய்க் குவிந்து மேலகன்
றேணடி சிறுத்துநீண் டிதழ்ம லர்ந்தொலி
யாணலன் காக்குறட் டைபின்விள் காதினான். (௧௨)

ஆடியேர் படைத்துநீண் டகல்க துப்பினா
னீடிவில் வளைந்ததி னிலைகொள் பூருவா
னீடிலிவ் வைந்துநீண் டிருக்குஞ் செல்வனே
கூடிய நலமெலாங் கொளுமென் பாரரோ. (௧௩)

தடித்திலாச் சிறுத்ததாய்த் தளிர்மெ துக்கொடு
வடித்ததா யழகுமெய் வயங்கு தோலினான்
றடித்தனு நீடனுஞ் சார்கி லாதெழில்
விடித்தணி சிறுத்தலை விரற்க ளுவ்வினான். (௧௪)

அகன்றிட னெடுகலின் றழகி தாச்சிறுத்
திகன்றகோ துறுதொளி யிவர்ந கத்தினா
னகன்றிட றெற்றலின் றணிய மைந்தெழிற்
கிகன்றகோ இலாச்சிறுத் திலங்கு பல்லினான். (௧௫)

குறுகனீ டிடன்மெலி கொளல்ப ருத்திட
லுறுதலில் சமன்சிறுத் தொளிர்க ழுத்தினான்
சிறுகுறுப் பைந்திவை சிறந்த செல்வனே
நறுமையார் நீண்டவா ளுள னென்பரால். (௧௬)

மூன்றிரு மூன்றுமும் மூன்று பன்னிரண்
டான்றிவர் விரற்கடை யளவு கூறவிற்
றோன்றிய முதன்மையிற் றுலங்கு மூவிர
லேன்றியற் குறீஇத்திரண் டெழில்கொண் மேட்டிரன்( )

நீடிலா தாழ்ந்திலா நிரைவ ளத்தசை
மூடிய கைக்குழி முகிழ்த்த வக்குளான்
தேடிய நடுநிலை திறம்பி லாதுசேந்
தாடிமன் குறீஇமிளிர்ந் தடக்க நாவினான். (௧௮)

அழகிதாய்க் கூனலின் றறவு நீண்டோம்
பழகிய தாய்க்குறீஇப் பாரவு வெங்கினான்
குழகினான் குறுப்புகள் குறீஇய மெய்யனே
வழுமையா வுளமகிழ் வளத்த னென்பரால். (௧௯)

௧௪.விடித்து—விடிக்கு. ௧௭.மேட்டிரம்—குறி.

பாந்தகன் றழகிதாய்ப் பாரவு சென்னியா
னிரந்தக னிறைமதி நிகர்மு கத்தின
னூரந்தரு மிலையகன் றற்ற மெய்யனே
தாந்திற னறிவுயர் தனைய னென்பரால். (௨௰)

காலகங் கையகங் கடைக்கண் வாயிதழ்
ஞாலமேட் டிரதுனி நகமிவ் வேழுமே
சீலவல் வதற்கிலை செம்மை வாய்ந்தெழி
லாலவுற் றிடின்மிளு ரவாஞ்சே யென்பரால். (௨௧)

பிள்ளையொ டம்மையும் பிரிப்பின் மேட்டிலுட்
கொள்ளமுன் கோக்கப்பட் டிருந்த கொப்புளுழ்த்
துள்ளவுந் திபின்சுழி வலங்கொ டுற்றெழி
லள்ளிய லாழ்ந்தொளி யவிர்கொப் பூழினன். (௨௨)

அடல்கொண்மார் பினிவடு வழகி தாழ்ந்துகண்
ணடன்மிளு ருளங்கவர் நடுச்செப் பத்தினா
னுடலொலி மூலமா முயிர்ப்புப் போய்வரு
மிடறது பதிந்தெழின் மிகுந்த தொண்டையான். (௨௩)

இன்னமூன் றுறுப்புமாழ்ந் திருப்பின் மேலவர்
நன்னர்கொண் டாடுமா நலனுண் டென்பரா
லுன்னத மாமெனான் குறுப்பி லக்கணம்
மன்னிய நந்தியெம் மான்வ ளர்ந்தனன். (௨௪)

வேறு.

வளரு நந்தியெம் மானைநன் மாதவர்
கிளரு மன்பினாற் கிட்டினர் போற்றுவார்
தளர்வி லாத்தவத் தந்தையை மெச்சுவார்
விளரிற் சைவமெய் வேட்கைகண் டேத்துவார். (௨௫)

என்றும் பொன்றிடா லிவ்வரச் சேயையீன்
றொன்று மின்பகத் தோங்குசி லாதான்
மூன்று னிந்தெழீஇ மொய்தவர் பிள்ளைமெய்
நன்று தானொராண் டுள்ளவா றுளென. (௨௬)

வினைய துஞ்சின மேற்கொடெவ் வாறுநீர்
பனுநின் றீரெனப் பண்ணவ ரஞ்சிமெய்
சொனுமெய்க் கூறுநூல் சொற்றவா றென்றனர்
தனுவுந் தேர்ந்ததாற் றட்பமுற் றோதுவான். (௨௭)

உலக முற்றமு ளுற்றுத வப்பய
னுலக முற்றுடை நங்கையோர் பங்கன்பா
ரிலக வுய்த்தத வன்றரு மிம்மக
னிலகன் மெய்பொன்றி னீசனு மில்லையால். (௨௮)

இம்மெய்க் கூறுநா லென்செயு மெம்முல
கம்மை பங்கன ளித்தவ ரந்துணை
செம்மை நிற்றலிற் செம்மறல் சீறினு
மம்மைச் சேயெதிர்த் தாடுர னென்றனர். (௨௯)

அஞ்ச லீமென வத்தவர் தாழ்ந்தெழீஇ
நெஞ்சை யத்துநி மிர்ந்தனர் சென்றனர்
மஞ்ச னன்புடன் வந்துதன் றந்தைபால்
விஞ்ச ருந்தவர் விண்டதென் னென்றனன். (௩௰)

முளைகட் பெற்றவர் மூன்றுல கத்தினும்
விளையுஞ் சீர்த்திவி ரித்தனர் வாழுவார்
முளைத ருப்பண முன்கடன் செய்தலிற்
றளைமுன் னோர்துவாங் கத்தினின் றேறுவார். (௩௧)

அணிசெய் தேநட மாடுசே யின்மனை
பணிசெ றிந்துப யில்காட தாகுமான்
மணிபொன் செய்முன்வ ளம்பெற்றி ருப்பினுங்
கணிசே யில்லார்பொன் காக்கும்பே யாவரால். (௩௨)

உண்டு டுத்தணி யுற்றும கிழ்மணங்
கொண்டுஞ் சேயிலார் கோமனை பாழ்மனை
யெண்ட குந்தொனூ லிவ்வணங் கூறலின்
மண்ட ருந்தவ மாடினன் வந்தனை. (௩௩)

உனக்கொ ராண்டுள தென்றிவ ரோதினு
னெனக்கொ ராறுத லெண்ணிகல் கென்றனன்
மனக்கொண் மைந்தன்ம கிழ்ந்தியான் பொன்றிலேன்
றனக்கொன் றைப்பிரான் சார்புள தென்றனன். (௩௪)

௩௧. துவாங்கம்-காகம். ௩௩. மாடினன்-செய்தேன். ௩௪. தனக்கொன்றை—பொற்கொன்றை.

தந்தை கேட்டுளந் தன்னிலின் பார்ந்தனன்
மைந்தன் றந்தைபான் மாதவஞ் செய்யயான்
புந்தி கொண்டனன் புண்ணிய நீவிடை
தந்த னுப்பெனத் தந்துவிட் டானரோ. (௩௫)

அவிர்தென் காசிய டைந்துமுக் கூடனீர்
கவின வாடிமுக் கட்டெரு மான்கழற்
செவிதழ்ப் பூசைதி ருந்தவு ஞற்றினான்
குவிகை யோடிறை கோயிலை நண்ணினான். (௩௬)

ஏத்தி யர்ச்சனை செய்தனந் திப்பிரா
னாத்த னுமுல கம்மையோர் பங்கனோ
வேத்தி ரக்கையன் வீழ்ந்துப ணிந்தெழீஇத்
தோத்தி ரம்பல சொல்லிநின் றனனரோ. (௩௭)

வேறு.

விரிசடைப் பகீரதி பிலைச்சுஞ் சென்னியா
யரிசன் மணியுல கம்மை பாகனே
கிரீசநற் றவர்க்குறு கேடு நீக்குவோய்
பரிசனர்க் கெதிரொழீஇப் பயத்தைத் தீர்ப்பவா. (௩௮)

வித்திய வற்புத வெளிய தற்பரா
நித்திய பசுபதே யதுல தேவனே
மத்திய மந்தமா தியில்வ ரத்தனே
யுத்திய சூக்கும வகார வோமயே. (௩௯)

நித்திய நிற்குண நின்ம லாபரா
சித்திய புத்திய சருவ திட்டியே
சத்திய சாந்தவே சகள நிட்களே
முத்திய பூரணே ஞான மூர்த்தயே. (௪௰)

வருவன போவன மலர்ந்து நிற்பன
தருவன வுயர்சரா சரத்தின் கூற்றினத்
தொருவன தொருத்தியென் றுலக மோர்ந்தறி
யருவரு வோருவ பேத வாதியே. (௪௧)

௩௭. வேத்திரம்-பிரம்பு. ௩௯. அதலதேவன்-ஒப்பில்லாதகடவுள்.

இரங்கவேண் டுதுமென விறப்பி லாமலே
யாங்கமா டியசிவ னபய நல்கிமுன்
வாங்களீந் திடவந்து வலக்கை சென்னிமே
லோங்கவின் பெறவைத் திஃ துரைப்ப தாயினன். (௪௨)

சிறுவகேள் பகடுடைத் தென்றி சைச்சண்ட
னிறுவபா சங்கொடுன் னிடத்தி னெய்திடான்
மறுவகன் மதிநிகர் வாழி யென்னலும்
நறுவடி வதின்முக்க ணற்கை தோன்றிற்றே. (௪௩)

திருந்தின னென்னைப்பின் றென்ன னீன்றவோர்
மருந்தன பூங்குழல் வாய்மொ ழித்திரு
பொருந்துசெம் மேனியெம் புனித னேக்கமிக்
கிருந்ததி னுலகம்மைக் கிதுசொல் வானரோ. (௪௪)

பூரணி யேயிவன் புதல்வன் ஞானமெய்க்
காரணீ வேதவா கமக லாதியைத்
தாரலிக் கண்ணிவன் றனக்கு நல்கென்றான்
நாரணி சேவடி நந்தி வீழ்ந்தனன். (௪௫)

விழுதலு மகமலர் வெய்தி மென்கையாற்
றெழுமகன் றனையம்மை தூக்கி முன்னிரீஇ
வழுவிலாச் சென்னிமேல் வலக்கை வைத்தருட்
பொழிவிழி சாத்திமெய்ப் போத மூட்டினள். (௪௬)

தழைத்தகோன் றையஞ்சடை தயங்கு செல்வனு
முழைத்தமைந் தனுக்கனு கூல மோங்கவே
யழைத்தமை வுறுகண னாத னைப்பொன்
னிழைத்தவி சிரீஇயபி டேக மாடினர். (௪௭)

உறைவள வுலகெலா முடைய நங்கைபா
லிறைவனே நந்தியெம் மானுக் கோர்மணி
நிறைமுடி சூட்டியே நீள்க ணத்திறை
முறையுநல் கினனந்தி முதன்மை பெற்றனன். (௪௮)

வேறு.

ஆய வேலையி னறவொழு கியதுழா யவற்குந்
தூய வேரியின் கமலமீப் பொலிந்தோன் றனுக்கு
மேய வேந்தென விண்ணவர் தொழுமக பதிக்குஞ்
சேய வேகமார் கணங்கட்குந் தெரிந்ததிச் செயலே. (௪௯)

தெரிந்த வக்கணந் தேவருங் கணங்களுந் திரண்டு
பரிந்த வன்பினாற் குழீஇக்குழீஇ வந்தனர் பணிந்தார்
புரிந்த மாண்விசு வேசனி ணையைப் புரந்து
சொரிந்த நல்லருள் வழிப்படுந் தூயரா யினரால். (௫௰)

அருமை நந்தியெம் மானைமந் திரநனி நாட்டிப்
பெருமை யார்கணத் தலைவனு வைத்தமை பெற்றோர்க்
கிருமை யுந்தரு செய்தியா வந்தது மின்பார்ந்
தொருமை யாகவந் தோங்குதென் காசியிற் கண்டார். (௫௧)

பெற்ற வர்க்குநந் திப்பிரான் காட்சிதந் தருளி
நற்ற வதிர்நீ ரும்முடை யயிற்றினன் றோன்றி
யுற்ற பேறுமை யுலகெலா முயர்த்துவ தாமால்
கற்றை யஞ்சடை யான்கழ லுமதெனக் காந்தான். (௫௨)

நந்தி யெம்பிராற் குலகநா யகியுல கேசன்
பந்தி நன்றருளிக் கதை படிப்பவர் கேட்போர்
புந்தி நன்றதா மிகபரம் பொருந்துவர் நாளு
மிந்தி ரன்றொழ வாழுவ ரென்றனன் சூதன். (௫௩)

நந்தி யுபதேசம்பெற்ற படலம் முற்றிற்று.

ஆகப்பாட்டு ௯௨௭௯.

இருபதாவது

நந்திக்கு முடிசூட்டு விழாப்படலம்.

உலக நாதனைக் குடனுல கம்மைபோ தகமு
மிலக நந்தியெம் பிரான்பெறல் சொற்றன மினியத்
திலக னுக்கெமான் மணிமுடி சூட்டிய சிறப்பை
யலக லாதவன் புடன்விரித் தினிப்பகன் கறைவாம். (௧)

நந்தி யெம்பிராற் கருடிற னயந்தமா தவர்கள்
சிந்தை யுட்களி சிறந்தன ரவன்றிரு மணமும்
பந்தி யாமுடி சூட்டுவை பவமுநன் றெடுத்துப்
புந்தி யார்தரச் சொல்கெனப் புகலுவான் சூதன். (௨)

திக்கி னைத்திக ழும்பர மாக்கொளுஞ் சிவனாற்
றொக்கி னைத்தொட ரூறுப்பொரீஇ நந்திமான் சோதி
முக்கி ளைக்கணாற் றோள்சடை முடிமுதற் றிகழ்ந்து
சொக்கி ளங்கதிர் மேனிபெற் றனனகணந் தொழவே. (௩)

ஆரி யற்படுத் திறைமக னுக்கொளப் பட்டு
நாரி யற்புத வுலகம்மை யருள்பெறு நந்திச்
சீரி யற்கையிற் செய்திடத் திருவுளங் கொண்டான்
வீரி யச்சிவன் கணமெலாம் வந்தனர் மிடைந்தார். (௪)

முனைத்த லைக்கொளு மூவிலை வேலுடை முதல்வ
நினைத்த மைத்தமை யென்கொலோ பகருதி நிரைத்துக்
கனைத்த வேலைகட் குடிக்குகோ கார்மலை யெடுக்கோ
வினைத்த லைத்தலை யெவ்விதஞ் செய்யுகோ விளம்பாய். (௫)

அடுக்கு மண்டரண் டங்களைப் பிடுங்குகோ வாழி
படுக்கு மாயனை யெழுப்புகோ பகைஞர்மேல் வாளி
விடுக்கு கோபிர மனையும்பந் தாடுகோ விண்ணி
னுடுக்கு லத்தினை யுதிர்க்குகோ திருவுள்ள மோதாய். (௬)

என்ன லுந்தவழ் கங்கையஞ் சடைமுத விறைதா
னுன்ன லுந்தெரிந் திடக்குறு நகைபுரிந் தமக்குப்
பன்ன லுண்டொரு செய்தியெண் டிசைக்கணும் படர்சீர்
மன்ன லுற்றநங் கணங்கணீர் கேண்மென வகுப்பான். (௭)

சொல்லு வானமுந் தொழுந்திற லுடையநீர் சுற்றுங்
கொல்லு வான்பகை யில்லையாற் கோமுறை யெங்குஞ்
செல்லு வானிந்த நந்திக்குத் திருமுடி சூட்டி
வெல்லு மாறவன் பணிசெயு மென்றனன் விமலன். (௮)

விதிய வாமடன் மலைவலஞ் சூழ்ந்திட விரைக்காற்
பொதிய மேமுத லெண்டிசை வரையும்பொன் பூத்த
திதிய வான்சுவர் நிறுவிநற் றோரணஞ் சிறப்ப
மதிய ருக்களு மிருபுற விளக்கென வயங்க. (௯)

௪—ஆரியற்படுத்து-பொருந்தியஒழுங்குபடச்செய்து.வீரியச்சிவன்-மகத்துவமுள்ள இறைவன். ௯-விதியவாமடன்மலை—செல்வங்களையுடையதாகும்வலியமேருகிரி,வேதாகமமுறைகளைவிரும்பும்வெற்றிமலை.

செழுங்கு ணக்கொடு தெற்குமேற் குத்தரஞ் சிவனா
லொழுங்கு பற்றியாங் கொருபது முழுழ முயர்த்துக்
கொழுங்கு றிப்பொடு குழகுயர் நிலைசத வுடைத்தாய்ப்
புழுங்கு றுதுகாற் றீரெண்காற் கொட்டகை போட்டு. (௰)

விரித்த சுற்றிலே நிரைசலும் பந்தரும் வேய்ந்துத்
தரித்த சுற்றினெண் ணுகமெண் கரிநிறீஇத் தாங்க
வரித்த கால்வளை விட்டமற் கூட்டுண்மா லிகையாப்
பரித்த மத்தியி னென்பதுக் கொன்பதாம் பதங்காம். (௰௧)

அவைக்கு மேற்சுற்றுப் பதமொன்றுண் டாக்கிமா டடுத்துச்
சவைக்கு ளோர்பிர காரஞ்சஞ் சரித்தற்கிட் டப்பாற்
கவைக்கு கந்திடு புரிசையிற் கமலமேற் கனிவாஞ்
சுவைக்கு ணப்பதத் திருபத்தேழ் சொன்னமட் கலசம். (௰௨)

அமைப்ப தவ்வத்த னத்திலே கீழ்த்திசை முதலா
வமைப்ப தாயவல் வடிவுசூ ரியன்முத லாக
வமைப்ப ரர்க்கிய பாத்தியங் கொடுத்தபி டேக
மமைப்ப தாகியொற் றுடைசாத் தினாலங் கரித்தார். (௰௩)

மருவு மண்டலேச் சுரற்கொன்பான் குடம்வைத்து மேற்கன்
புருவு றிட்டலிங் கத்துக்கொன் பதுவைத்து முநீசி
தருவு ழைத்தளி ரைந்துடன் றகைமருந் தைந்துந்
திருவு றைத்தரை மண்ணைந்துஞ் செய்யதோ லைந்தும். (௰௪)

நீரி னிற்றனி வகையஞ்சும் வைத்துநேர் கீழ்பாற்
பாரி னென்பதிற் பஞ்சகும பப்பதிப் பதுமாய்ச்
சீரி னிற்கிழக் கொனபதுந் தேவவர்த் தனைக்கென்
றேரிற் றெற்கினென் பதுபதத் திவர்குண்ட மென்ப. (௰௫)

இதனி னங்கிசீ டப்பிர வேசமீ தொன்பா
னதனின் மேற்கினு சாரியற் கொன்பதா மதன்மேற்
பதனி னங்குரார்ப் பணத்துக்கு மொன்பதாம் பகரிவ்
விதநி கழ்ந்திடி னென்பதுக் கொன்பதாய் விளங்கும். (௰௬)

௰௧-மாலிகையா—நிரல்படநிற்குங்குழுவாக. பதங்காம்—பிரிவாகும். ௰௨-பதம்-வேதி, சொன்ன-பொன்மயமாகிய ௰௪-உதீசி-வடக்கு, தளிரைந்து—ஆல்அரசுஅத்திமாமாவல்என்னும்பஞ்சபல்லவம், மருந்தைந்தும்—தாமரைவிட்டுணுக்கிராந்திசீதாசெங்கழுநீர்நாயுருவிஇந்திரவல்லிஎன்னும்பஞ்சௌஷதி. மண்ணைந்தும்-ஆனையடிகுதிரையடிதேரடிபன்றிக்கோடுகிண்டியஇடம்புற்றுஇதுதலங்களிலுள்ளபஞ்சமிருத்திகை. செய்யதோலைந்தும்-ஆல்அரசுஅத்திமாமாவற்பட்டைகளாகியபஞ்சதொக், ௰௫-தேவவர்த்தனைக்கு-சிவனுக்குஞ்சத்திக்கும், குண்டம்-அக்கினிகுண்டம் ௰௬-சீடப்பிரவேசம்—நந்தியிருக்குமிடம்.

இந்தி ராதியர் சூழ்மதிற் கமலமே விருப்ப
நந்தி ராகஞ்செய் மால்கன்னி திசையிலே நண்ண
மந்தி ராசல சத்தனீ சானத்தின் மன்னச்
சந்தி ரார்த்தக்கீழ்த் திசைகடு மயேச்சுரன் றயங்க. (௧௭)

இரவி சாந்திவித் தியைநிவிர்த் தியேபிர திட்டை
விரவி நந்திமா காளரே பிருங்கியே விநாயர்
தரவி னங்கிடப் பாகந்தாந் தேவியே சண்டன்
பரவின் வாத்துவின் பதிதிரு கணபதி குருக்கள். (௧௮)

வேறு.

ஆடகக் குடங்க ளவைபதி னாறு படிகொளு மைந்துவர்த்
தனையு, மீடக முடைய மரகதம் பவள மிமைத்திடும் வச்சிரம்
நீலம், நீடக வொளிகூர் முத்துமா ணிக்கம் நிலவெழும் மின்
மணி மாலை, யேடக மைந்து நிறவகைப் பட்டுஞ் சீரையு மிவை
க்கிணங் கினவும். (௧௯)

விருப்பையார் சிருக்குச் சிருவமுஞ் சார்வம் விளம்பிய
விதிசொல வளர்ந்த, தருப்பைநற் சாதி மாங்குழை மாலை தம
னியத் தகடாத் தினங்க, ளருப்பையார் மிருத்து முகிலெலாந்
தொலையெள டதத்தொ லையுற வறவு, மிருப்பையென் றோது
ங் குடஞ்சுசி யாக்கி யிவையெலா மவைக்குளிட் டினிதே. (௨௰)

அல்லியம் பொருட்டா யெழுதியே வைத்த வாங்கதன்
மேற்குட மமைத்துப், புல்லிய குபேர திசைக்கணே முன்
போற் புகனவ கோட்டத்துட் கும்ப, மெல்லிய லைந்தா யிலக
வே போற்றி யிரவிய தேமுத லெடுத்துச், சொல்லிய நிருதிக்
கணபதி தொகுத்த சுரபியைத் தலைமுறை தொடங்கி. (௨௧)

ஓதிய மிருதி சுருதியா கமத்தி னுத்தரித் துளதெய்வ
வுருவாய்ச், சோதிய திலகு சுடர்பணிக் குடங்க ளிலங்கவே
யிருகையான் மலரின், றாதிய னறவந் துளும்பிட வாங்கித்
தனித்தனி தாபித்துத் தயில, மாதிய பிட்டா மலகமார்ச் சன
மே யைவகைக் கவியமைந் தமுதம். (௨௨)

௧௮—வாத்துவின்பதி—பிரமா, ௧௯-சீரையும்—மரவுரியும், ௨௰—அருப்பையார்மிருத்து-தக்கத்தைப்பொருந்திஞ்சாக்காடு, முகிவு-வாணுண் முடிவு, ௨௨-பிட்டாமலகம்-மாக்காப்பு, நெல்லிக்காப்பு,

முருகுதிர் கனிதேன் சந்தன மிளநீர் முறைசொரிந் துல
ர்த்தியா டகத்தேர், பெருகுமே கலைகள் களபசிந் தூரநற்
பிணையல்க ளணிபொனூல் கனகத், தருகுகா ராமெனய் யனம்
பஞ்ச தாரை யுயர்பல வகைநிவே தனங்க, டருகுடங் கையி
ரூற் றூபதீ பங்கள் விசிறிசத் திரந்தருப் பணங்கள். (௨௩)

ஆற்றிய கவரி யிவையெலா மாடல் பாடலி னுடனழ
காகப், போற்றிய பின்னர் பொற்புறு புட்பார்ச் சனைகள்கற்
பூரபூ டணங்க, ளேற்றிய பூதி தரித்துவேண் டுவதி யாவையு
மியம்பித்தான் பெற்றுத், தோற்றியங் குறையு மூர்த்தியை
மனத்தாற் சூழ்ந்துதாழ்ந் திருகைபாற் றொழுதே. (௨௪)

வேறு.

களங்க றுத்தவ னகளங்க னெம்பிரான் கருணை
துளங்க லந்தருள் செய்திடிற் றுயரமே யின்று
துளங்க னிந்துமை யவளொடு முத்தரித் திறைவன்
விளங்க வேறுவே றிவையுளுற் றிடன்மறை விதியால். (௨௫)

கொழுந்து வெண்ணிலாக் கண்ணியோன் கூறிய வேவற்
கெழுந்து நான்முக னினிதுபொற் குடத்திவர் கங்கை
யழுந்து மாசகன் றிடச்சொரிந் தனைவி ராடை
விழுந்து தாழுற்று மெய்விரை வினிற்றுவர்த் தினரால். (௨௬)

வத்தி ரங்கொடு புலர்த்திப்பின் மேகலை வனைந்து,
முத்தி ரத்தினு திகளினு பாணமு முறையிட்
டத்தி ரத்துப வீதமுத் தரியமுட் டிணீசம்
பத்தி ரத்தணிந் தேகள பாதிமேற் பட்டா. (௨௭)

இலங்க வார்திரி புண்டரம் நுதலிடை யிரவி
துலங்க வைத்தபொற் றாயசிந் தூரமணிந் தணிகூர்
நலங்க லந்தொளி பாப்புசிங் காசன நடுவி
னலங்க ரித்துநந் தியையரி முடிகவித் தனனால். (௨௮)

கவித்த மாமணி மகுடமோ டுறைந்திடு காலை
செவித்த ருங்கயல் விழியுடைச் சுயேசையாந் திருவைப்
புவித்த லம்புகழ்ந் திடமுறை புரிவன புரிந்து
புவித்த மங்கல முழக்கொடு பலசிறப் பாற்றி. (௨௯)

௨௭. உட்டிணீசம்-தலைக்கட்டு,

திருத்தி யாமருங் கிருத்தியே திருமணஞ் செய்துள்
ளருத்தி யோடுவண் டுளவனு மன்புடன் வணங்கப்
பெருத்தி ருந்தவுந் தியங்கம லத்துறை பிரமன்
கருத்தி னித்திவர்ந் தடிக்கம லம்பணிந் தனனால். (௩௰)

பூரு வத்திறை யிந்திரன் பணிந்தனன் போதங்
கூரு வப்பொடு தேவர்கை கூப்பியே தொழுதார்
மேரு வன்மையார் கணங்களு முனிவரும் விஞ்சை
தேரு வன்பருஞ் செறிந்துவந் திறைஞ்சினர் நின்றார். (௩௧)

இங்க ணந்தியெம் மான்முடி சூட்டுநன் கியன்று
தங்க ணன்ற தென் காசிநன் னகரின்வைத் தருள்கூர்
செங்க ணேற்றினன் றிருமுனர்ப் புரியதி கார
துங்கன் கையையும் பொதியையு முளனெனச் சொற்றான்.

நந்திக்கு முடிசூட்டு விழாப்படலம் முற்றிற்று.

ஆகப்பாட்டு ௲௩௱௮.

இருபத்தோராவது

சிரும்பாசுரன்

திக்குவிஜயஞ்செய்த படலம்.

நந்தி யெம்பெரு மான்சு யேசைநன் னங்கை யைமணஞ் செய்ததும், மந்திரப்புன லாட்டி மாமணி மகுடஞ் சூட்டிய துஞ்சொனு, மிந்தி ரன்முத லோரை யாட்டியு மிறைக வர்சிரும பாசுரன், வெந்தி றற்கொடு போந்தெண் டிக்கினும் விசயஞ் செய்திறல் சொல்லுவாம். (௧)

நைமி சத்தவர் காங்கள் செய்தவ நன்மை நந்தியெம் மான்கதை, மெய்மி குந்திரு வாய்ம லர்ந்தரு ளிள்ளப் பெற்றன முய்ந்தன, மொய்மின் வண்டுக ளுழுநற் பூம்பொழிற் முதுதென் காசியின் சீரெலாம், பெய்மி னென்றரு குற்றி ரந்தனர் பிறங்கு சூதனும் பேசுவான். (௨)

மன்ன வல்லிரண் யாக்கன் வங்கிச வச்சி ரப்புய மாபெலன், றுன்ன வந்தனன் விருபாக் கிப்பெயர்த் தோகை யைமணந் தின்புதுய்த், தங்கல் லாளுடன் வாழு நாள்பொரு ளளவின் றுற்றுமோர் சேயிலாத், தன்ன கக்குறை தீர வேயிமதாணி போய்த்தவ மாடினான்: (௩)

மலர வன்றனை வேண்டி வச்சிர வாகு வில்லொடு மாதவ, மிலக வாற்றல றிந்து முன்வந்து மென்ன மென்னென வோதினு. ருலக மாக்குவோ னஞ்ச லீர்மக வுதவி னேம்புவி மூன்றுமா, ணலன ளித்தன மென்று சென்றன னயந்தெ ழீஇயவர் வந்தனர். (௪)

வருவில் வச்சிர வாகு வில்லொடோர் வளம டைந்தலர்த் தேர்நிழற், றருவி ருக்கம ருங்கொ துங்கினர் தகையும் வேர்வையு மாறுவா, ரொருவி லாததி தால கண்டவி ருடியு கந்தொரு சாருறன், மருவி னுருணர்ந் தாசி லாரவண் வைகினார்வெயி ருழ்வரை, (௫)

வேறு.

ஆங்க மர்ந்தநில மீதி லேகொழுந னுன வன்றுயில மர்ந்தனன், சோங்க ரும்புழலை யந்த லாள்குளிர்மை கொள்ள மெல்லநடை கூடியே, தேங்க மழ்ந்தசுனை வாச மேய்த்தவசு செய்யு மம்முனிவர் சென்னிமேன், வீங்க மண்டுவலை றும்பை வாரினள்வி ரைந்தெ றிந்துகொடு கொட்டினாள். (௬)

வேறு.

சிரித்து நின்றன ளவளை வெவ்வழற் சீக ரத்தினு வெம்பியார்ப், பரித்து றுக்கியு னக்கு மேவர பால னூசெறும் பாகவே, விரித்து ரைத்தனன் சாப மென்னவும் வெருள்கொ டேவிரு பாக்கிபோய், வரித்து ளும்புநீர் விழிய ளாய்வல வல்லவற்கதைச் சொற்றனள். (௭)

மன்னன் வச்சிர வாகு வாவிதென் வந்த தூழ்வலி யோவென, வின்ன றீர்தாத் தூல்கண்டசா ணச ரண்ணென வேத்திநேர், நன்ன ரன்பொடு சென்றி றைஞ்சின னங்கள் கோதுபொ றுத்தரு, ளன்ன வாகனன் வாதி றீஇமக வாக்கம் நல்கென வேண்டினான், (௮)

---

௭. வெவ்வழற்சீகரத்தினும்—கொடிய அக்கினிமழையினும், வரித்துளும்புநீர்—அக்கினியிற்கொதிக்கும்புனல்,

அன்ன காலையி லேய ருந்தவ தூல கண்டா கங்கணிந், தின்ன நீரா சேமெம் போன்றவ ரிட்ட சாபம்பொ லாதமே, மன்ன நீகலு னாத வின்பெரு மகன்மு கம்மெறும் பின்முகம், நன்ன ரார்தரு மெய்தி றங்கொளு நாமெய் யாவரம் நல்கி னேம். (௯)

உற்ப வித்திடு மைந்தன் மாபல போக னுய்ச்சிரும் பாசுர, னெற்ப வித்துல காள்வன் முற்றவு மினிது காவிரித் தென் கரை, பொற்ப விக்கிர கப்ப திட்டைநீ புரிந்து மேசிவ லிங் கனைச் சொற்ப வித்திர பூசை செய்துவாழ் துன்பு தீருமென் றோதினர். (௰)

அக்க ணத்தவண் விட்ட கன்றுதன் னகர மெய்தின ராங் குள், மக்க ணல்வர வாகக் கொண்டனர் மனைவி யாம்விரு பாக் கிதான், முக்க ணன்பணி யாற்ப ருக்கொடொர் முளையை யீன்ற னண் மற்றவன், றெக்க ணத்தொரு மேரு வந்ததிற் றேய மெச் சவ ளர்ந்தனன். (௰௧)

ஆங்க வண்சில நாளி லேவளர்ந் தான தன்பின்சி ருப்ப னின், போங்க வந்துபெற் றோரி டைத்தவ முனுற்று வான் விடை வேண்டினன், றுங்க ருத்துறு தூல கண்டர்சொற் றனை யு ணர்த்தது செய்துநீ, நீங்க ருந்திறல் பெற்று வாவென நீற ணிந்தன ருய்த்தனர். (௰௨)

கைத்த னுத்திறல் கற்ற வெஞ்சிறு காளை யாம்பரு வந்த னின், முத்த னுக்குயர் பூசை செய்திட வேமு யன்றனன் காவிரி, நித்த னுட்பவி யாப கத்தன ளிக்கை கேள்விதி கழ்த் தியே, யத்த னுக்கொரு கோயி லாக்கின னருளி லிங்கநி றீஇ யினான். (௰௩)

ஆலை யஞ்சிவைக் காக்கி யேசிவை யைப்ப திட்டைசெய் தின்பமாய்க், காலை யுச்சியு மந்தி யும்பிற கால மும்வழி பாடுகள், சோலை யம்புது மலா னேகசு கந்த மும்பொலி வாய்மணி, மாலை யும்புழு காதி யுஞ்சரி வாவ ழங்கினன் போற்றினான். (௰௪)

௰-எற்பவித்து-என்னவுண்டாகி, சொற்பவித்திரபூசை – சொல்லப் பட்ட தூயவழிபாட்டை, ௰௧-அகரம்-ககரம்,

ஆத லின்சிரும் பத்த லைப்பெறு மன்ன வன்பெரு கன் பினு, லீத லின்பொரு விடைபி னடி யேத்து மெய்த்தவங் கூடவே, காத லித்தருள் செய்யு மண்ணல்க டாட்ச வீட்ச ணஞ் செய்துவங், தோத லிற்கில னென்னை வேண்டுமென் றுசாயி னனது கண்டரோ. (௰௫)

எனக்கு வேண்டுவ வென்செங் கோலிரண் டேழு லோக முஞ் செல்லவுஞ். சினக்கு மன்னவர் கைத்தி றற்படை சிந்து வன்மையு மும்பரின், மனக்கு றூமாய்த் தவர்துப் பாலியான் மாய்ந்தி டாமையும் நாளுமென், றனக்கு மன்னதி கார மோங் கவுந் தீர்ழ்வில் வென்றியு மென்றனன். (௰௬)

பொருதி றத்தமா வாதி யாவுநீ புகன்ற வாறுமே பொன் றிடாத், தருதி றத்தவ ரம்மு னக்கியாந் தந்து ளேமென வெம்பிரான், றிருதி நல்கிம றைந்த னன்வா சித்தி பெற்றசி ரும்பனல், விருதி னேவலின் விழவு கொண்டுதன் வேவி புக் குநன் வாழுவான். (௰௭)

முதுவ ளப்பிர சண்டன் மந்திரி முன்ப மைச்சகே ளீதெனப், புதுவ னத்தகி லாண்ட நாயகி புணரொ மான்வழி பாடுநன், மதுவ னத்தலர்க் கொன்றை யாதிய வாரி யாற்றியி போகுறீஇ, விதுவ னைந்தவெம் மானெ திர்ப்பட வேண்டி னேன்பல்வ ரங்களே. (௰௮)

உருக்கன் பர்க்குவேண் டுவவ னைத்துநல் குத்த மன்ன ருள் பெற்றயான், மருக்க மழ்ந்தெறி மாலை வாசவன் வருணன் கூற்றெரி நைருதி, நெருக்க வாயுகு பேர னேவரும் நெடியன் வேதன்முன் யாவரும், பெருக்க மாயெதிர் செல்லுமாயினும் வெல்லு வேனெனப் பேசினன். (௰௯)

வேறு.

பழுத கன்றமக் திரியது கேட்டனன் பாயின னின தானை, பெழுத லத்தினு மேற்றுவ னிகன்றெவ செதிர்ப்பினு மவர்தம்மை, யழுத கன்றிட நொறுக்குவ னிறையிடை யாட்சி நீ பெறுகென்று, தொழுத கன்றனன் றந்தைபா லுணர்த்தி னன் சொல்லரு மகிழ்வுற்றான். (௨௰)

௰௭. திருதி-உறுதியாக. வேவி-நகரம்.

அரசன் வச்சிர வாகுவு மன்பினா லானருள் பெறுமைந்தன், வாச மர்த்தல கறியவுந் தான்றவ வழியினாட் கழித்தற்கும், சரச னாளறிந் தாட்சியை மகன்புயந் தனிற்சுமத் தினனப்பான், முரச திர்ந்திடத் திசையெலாம் வென்றிட முன்னினன் சிரும்போச்சன். (உக)

வேறு.

தலைவன் சிரும்பாசுரன்.

கருடவா கனத்தனாய்க் கையின்வ லப்புரி
மருடரு வாள்கதை வளைவின் னேமிகொ
டிருடபஞ் சாயுதத் திருவ னாய்ப்புவி
புருடவுத் தமனெனப் பொலிந்து தோன்றினான். (உஉ)

மகன் விரூபாக்கன்.

அன்னமும் வாகன மாக வேறினான்
பன்னருங் காத்திவர் பாச மூர்த்தமாய்
மின்னவிர் வெண்மைய வேத மாங்கொடி
துன்னமுன் றிலின்விரு பாக்கன் றோன்றினான். (உங)

மாமன் பிரவிருத்தன்.

உருப்பிர காசவெள் ளானை யூர்திதான்
மருப்பிரு பானுநான் கொளிரு மற்றதைத்
திருப்பினான் வச்சிரஞ் செங்கை யேந்தினான்
விருப்பினாற் றடற்பிர விருத்தன் வந்தனன். (உச)

மருகன் சடன்.

சிருவமுஞ் சிருக்குமே செங்கை யேந்திமாண்
வருவணத் தபயமும் வாத முங்கொடு
பொருவளம் பெறுகிடாய்ப் புறத்தி னேறிநீ
டுருவவக் கினியெனச் சடன்முன் னோங்கினான். (உரு)

மகளுக்கு மகன் கேசகேசரி.

இயங்கமே தியின்வெரி னேறிப் பாசமு
முயங்கவண் டண்டமு முறுகை யேமனாய்ப்
பயங்கர வக்கிர தந்தம் பாங்குற
வயங்கசு கேசரி வடிவுற் றார்த்தனன். (உசா)

மைத்துனன்கிருசனன்.

புரவியி னேறியே பொருந்து மங்குசம்
விரவிடப் பரிசையும் வேய்ந்து மேய்படு
வரவின னாகிமா மருத்தி ராசனா
வுரவியன் கிருசன னுருக்கொ டுற்றனன். (உஎ)

பேரன் புட்கரன்.

பொருளையச் சகத்திர விதழ்கொள் பூங்கைய
தருணனாய் மகரமே தாங்கு மூர்த்தியா
யருணனா மதியுவந் தடங்கு மாலலை
வருணனைப் புட்கரன் வடிவந் தாங்கினான். (உஅ)

தம்பி மகாந்தகாசுரன்.

குருத்துவந் துயர்சரா சரங்கை கூப்பவே
யுருத்துமாண் புறுகலை யூர்தி யேறியூர்
திருத்துவண் சீகரஞ் சிதறச் செவ்விறன்
மருத்துவாய் மகாந்தகா சுரன்முன் மன்னினான். (உகூ)

மகாந்தகனது மாமனாகிய முற்கரன்.

வல்லியன் மகாந்தகன் மனையைப் பெற்றவோர்
நல்லியன் மாமன்முற் கானற் றண்டொடு
செல்லியற் சிவிகையிற் சிறக்க வேறியே
வெல்லியற் குபேரனில் விளங்க லாயினான். (ஙO)

மயன், விகடன்கடன்மார், செடி.

தேவகம் மியனென மயன்றி கழ்ந்தனன்
மாவிக டன்கடன் வயித்தி யர்ப்பொர
மேவினர் செடியுமுன் விளங்கி நின்றனன்
கோவிவர் படையொடுங் குழீஇப்ப டர்ந்தனர். (ஙக)

அயன்பாற்போர்,

வாதமு மபயமு மலர்கை காட்டிமுன்
விரதமா விடபமே லேறி வெல்கொடி
சாதமாப் பிடித்தயன் றலைமை கொண்டிட
விரதமாக் குளிகனி லெதிர்த்து நின்றனன். (ஙஉ)

வேறு.

சோத னைக்கெதிர்த் தான்சிரும் பாசுரன் சொட்டை
சாத னைக்குடர் முசலமுன் பேவினன் றண்பூ
வேத னைத்தொட விடுத்ததைத் தடுத்தயன் விரைந்து
காத னைப்பொரு மொருசத்தி யேவினன் கடிந்தான். (ஙங)

உக. மருத்து-காற்று. ஙக. வயித்தியர்-அசுவினிதேவர்கள். ஙஉ. தலைமை-தலைமயக்கம். ஙங. சொட்டை-ஓராயுதம்.

பின்னு மன்னவன் பீத்திரா வணத்தனைப் பாசந்
துன்னு மாறறக் கோட்டினன் சுரும்பலர்ப் பிரமன்
வென்று ருனெதிர்த் தனன்பிர மாத்திரம் வீச
முன்னு னுக்கினன் சிரும்பன்காண் முண்டகன் வியந்தான். (௩௪)

எதிர்த்து வெஞ்சினத் தேறிமால் படையினை யேவி
விதிர்த்து வாளினத் திரத்தினாற் பிரமன்வீழ்த் தினனாற்
பொதிர்த்து திர்த்திடப் பொருமிருப் புலக்கையாற் புடைத்தே
யதிர்த்தி யாலயன் கமண்டல மண்டமேற் றினனால். (௩௫)

மாலை யேபடைந் தனையன் சிரும்பனு மணித்தேர்
மாலை யேவிமா னூர்புக வான்வழி வந்தான்
காலை யேமக னஞ்சிவந் ததுகண்ட கார்மால்
காலை யேயுளங் கொண்டனன் கலங்கினன் சூழ்ந்தான். (௩௬)

மாத வச்சிரும் பானவன் வந்தனன் மாயன்
சூதன் வஞ்சமே தணிந்தன னசுரர்கோன் றணிந்து
போத வஞ்சமும் வாணமும் விடுத்தனன் பூமேற்
பாத லங்களும் விடுக்குமாற் றடுத்திடைப் படுத்தான். (௩௭)

சுரிகை வாளயில் குலிசஞ்சக் கரம்பிண்டி சூல
மெரிகை யார்மழு வீரும்வாள் கவணிருப் புலக்கை
முரிகை யாற்றுதண் டிருப்புமுண் மூக்கரி கத்தி
கரிகை செய்சாம் முற்கரங் கணிச்சிநா ராசம். (௩௮)

படைக்க லங்களாற் றொளைபடப் பகைவர்நெஞ் சகழ்ந்து
மடைக்க லுங்குநீ ரோடுவ போல்வடி செந்நீர்
முடைக்க வந்தமுண் டாடுவான் முனைமுடு கசுர
னிடைக்க லந்திலப் பிரமன்மால் வரப்புகுந் தெதிர்த்தான். (௩௯)

சக்க ரத்திரு மாலின்மேற் சாந்தொடுத் தேவி
பக்க ரத்தினாற் றள்ளிடத் துள்ளிப்போ யகன்ற
வுக்க ரத்திறுங் கொடியவே லசுரன்விட் டுலப்பி
லெக்க ரத்தொலி சுரிசங்கைத் துளைக்கவெக் கினன்மால். (௪௰)

௩௪. பீத்திராவணத்தன்-வீம்பு பேசுதல் பாடினவன். ௩௫- மால்படை—மோகாத்திரம், ௩௬ மாலை—திருமாலை, மாலை-வரிசையை. காலை-கண்டகாலை, காலை-இருளை, ௩௭ வஞ்சம்—வாள்- வாணம்—அம்பு ௩௮, அயில்-கைவேல், கலப்பை, குலிசம்- வச்சிராயுதம், பிண்டி— பிண்டிபாலம், (எறியாயுதம்) முற்கரம்-ஓராயுதம், சம்மட்டி. கணிச்சி—கோடரி, முட்கோல், உளி, மழுவாயுதம், நாராசம்-இருப்பாணி' சலாகை, ௪௰. அக்கரம்-எழுத்து, (மறை) உக்கரத்திரம்—அஞ்சும்படி அரத்தை முறிக்கும். உலப்பில்லக்கரத்திவர்—கெடாது மேலேறப்பண்ணச்செவ்வி தொலிக்கும், எக்கினன்-வற்றிவளைந்தனன்.

வேறு.

தேவரு மிங்கிது கண்டுந டுங்கினர் திசைதோறு
மேவரு மஞ்சிய கன்றுட னோடின ரிவ்வேளை
பூவரு வோனுமொ ளித்தனன் சங்கணி பூணாழி
யேவரு மாயனு மோடினன் வேறெவர் வெல்வாரே. (௪௧)

அப்படி யோடிய பின்சிரும் பானரி யூராட்சி
கைப்படுத் தாண்டய னூர்முதற் றன்னவர் கையொப்பித்
திப்படி வல்லர சாவிருந் தாண்டன னிவனாண்மை
முப்படி யுஞ்செல மாறிய சீர்சொல முடியாதே. (௪௨)

அன்னவ னுக்கிறு காலமு மின்றிம னவனாள்
சொன்னவ சுந்தரை யோரிடர் துய்த்திட மாட்டாமற்
பின்னவ சந்தொலை வித்திட வெண்ணினர் பெறுகால
மன்னவ ருந்தல மேதென நாடயன் மால்சென்றார். (௪௩)

முக்கணர் தென்றிசை வில்வவ னத்தினு முன்னாதித்
தெக்கண காசிவ ளம்பொலி செண்பகப் பொழிலின்க
ணிக்கண மெய்திடி னெம்மிறை பங்கினி ருக்குந்தாய்
மைக்கண மல்லல றுக்குமென் றுற்றனர் மான்முன்னோர். (௪௪)

செங்கம லத்தின்ம லர்ந்தவ ருட்கணி திருமுன்போய்
தங்கரு ணீடுமீ னாட்சிதென் காசிவி சாலாட்சி
பொங்குக மாட்சியே யுன்னையன் றிங்கொரு புகலின்று
லெங்களை யாள்வது நின்கட னென்னவி றைஞ்சிட்டார். (௪௫)

அஞ்சலி ரஞ்சலி ரும்பர்க ளேயுமை யாளுள்வ
னெஞ்சமஞ் சாதிரு மென்றப யந்தர நிலைகொண்டார்
நஞ்சயர் கண்டனி டத்தல கம்மையெ னுதாநின்
றஞ்சமெ னுதிவ ரெனனிடை வந்ததென் சாற்றென்றாள். (௪௬)

என்னைம தித்தில ராகியி ரந்தவ ரினிதுய்ய
முன்னைவ ரக்கொடை பின்னையோர் கேள்வியென் முறையென்று
னன்னைம கிழ்ந்தெனி ரக்கம வாறுள தாலேது
முன்னைய லதிய லாதது முன்னுடை யுரனென்றாள். (௪௭)

௪௩-அவசம்-மயக்கம், மன்ன—நிலைபெற, ௪௪-வில்வவனம்—கடவம், அப்பர்-வில்வவனநாதர், அம்மை—நித்தியகலியாணி,)

சிரும்பனை சம்வரம் மேம்பட வைத்தமை தேர்ந்தின்னோர்
திரும்பத மாற்றலி றன்மைய றிந்தனர் தாமுய்ய
விரும்பிநின் பாலினி ரந்தனர் சூரனை வெல்லற்கோ
ரரும்பல னுன்னையன் றொருமி லாமையி னுய்த்தீண்டே. (சஅ)

மற்றவ னோளயி வன்வரு, வரனமர் வலிதாருங்
கொற்றமு னக்குறு மச்சிரும் பன்னமன் கொன்றோங்கும்
கற்றவர் பேறுநல் கென்றருள் செய்தன னம்பன்றான்
பற்றடி யார்க்கரு ளம்மைம கிழ்ந்தனள் பரிந்தென்றான். (சகூ)

சிரும்பாசுரன் திக்குவிஜயஞ்செய்த படலமுற்றிற்று.

ஆகப்பாட்டு ௲கூடுள.

இருபத்திரண்டாவது

சிரும்பாசுர சங்காரப் படலம்.

சிவனருச் சனைத்த வங்கூர் சிரும்பனீ ரேழ்பு விக்குந்
துவசவல் லாசாத் திக்கு விசயமா டியசீர் சொற்று
மவனெதி ருடைந்த யன்மா லாதியோர் சரண்பு கக்கரண்
சிவையப யந்தந் தந்தச் சிரும்பனை வெல்சீர் சொல்வாம். (க)

சூதமா முனிவன் கூறத் துகளினை மிசத்து மெய்யர்
மாதவன் முதலோர் சீர்த்தென் காசியின் வந்து வேண்டி
நுதரித் துலகம் மைகாத் தருளிய விரக்க மேனு
மோதசு ரன்மா சைவ னுவற்கொல லாமோ வென்றார். (உ)

சிரும்பசங் காரங் கேட்டாற் றிறனது வெளியா மன்னோன்
விரும்பலர்ச் சீறித் திக்கு விசயமா டினனென் றுனும்
வரும்படிக் கவ்வ வேந்து வழிப்படு மளவு மன்னுய்த்
திரும்பவொப் புவிக்கு மெண்ணஞ் சிறிதுமின் றெடுத்த லாமோ

குடிலநூ லொழுக்கு பற்றிக் குற்றவா ளிகளை வென்று
கடியிலன் னோர்தொட் டன்னோர் கால்களீ றுவேர் கல்லுங்
கொடிய னுய்த் தமர்க்கே யாக்கங் கொடுத்திடப் பார்ப்பானுற்
படிமுழு துடைய நங்கை பரிந்திடா திருத்தலாமோ. (ச)

இன்றுநீர் வினுபாங் கேயென் னிறைவியா தனின்பாற் கேட்டே
னன்றவ னிறைநன் றோதி யருளியாங் கறைவல் கேண்மின்
மன்றனை வென்றோ னுடி மகிழ்ந்திட வொழுக்கம் பேணி
நன்றுசெய் யன்றன் சுற்ற நயக்கவிட் டான்மாழ் குற்றான்.(ரு)

மன்னனுஞ் சிரும்பன் பானு ரதன்வர மகிழ்ந்தன் பாற்றி
யென்னகாண் புதுமை யென்று னிறைவதெங் காசி நாதன்
முன்னர்சே வைக்குச் சென்றேன் முகுந்தனு தியரைக் கண்டே
னுன்னத ரத்த வஞ்செய் துலகனை சரணு வுற்றார். (சு)

சிமையவெண் கயிலை புக்குச் சிவனையர்ச் சிக்கு மந்தச்
சமையநீ யேவரா லுஞ் சாவிலா வரம்பெற் றோயே
விமையமீன் றெடுத்த தெய்வ விளம்பிடி யிறைவன் பாங்கா
ருமையவ டனைவ ணங்கா துற்றது றுனக்கென் றிட்டான்.(எ)

குலவது கேட்டு மாற்றங் குறித்தடக் கினன கைத்துப்
புலவரை யுழைத்தன் னேரூர் புக்கா சாள்வித் தேயா
னிலவித முமைத்தாய்க் குள்ள மிரங்குவான் செய்வேனென்றான்
சொலவியாழ் முனிவன் மன்ன சொற்றதென் முறையீ தன்றே

ஒருத்தியைப்பெண்ணென் றெண்ணுளந்தளர்ந்தெளியவார்த்தை
திருத்தியின் மொழிந்தாய் மன்னர் செய்கையீ தோவெல்லல் வேந்தே
யிருத்திநீ யும்பர் தம்மி னியாவரே யுன்முன் னிற்பார்
கருத்தினை யேல்சி ரும்பா கடிந்துவாழ் கென்றான் சென்றான் ()

பொருவதற் கெழுப்ப யாழோன் போந்தமை யறிசி ரும்பன்
தருவள முயர்தென் காசிச் சண்பகா ரணியத் தும்போய்த்
திருவளர் தேவி முன்பூஞ் செப்புவா னிவன்பல் கோள்கள்
பருவா லுறுமும் பார்க்கும் பகருவான் பலவென் றோர்ந்தான்.(ώ)

காவிரிக் கரைக்கண் கோயில் கட்டியா னுமாப திக்கு
மாவிரி வாய பூசை மாடினன் வரம்பெற் றேன்மேற்
பூவிரி கைலை யும்போய்ப் போற்றினன் மறந்தி லேன்யான்
றேவியை நாா தன்சொற் றிறம்பின னென்றுள் ளாய்ந்தான்,(ωக)

உலகவாழ்க் கையைச்சி றப்பா வுகந்தவென் னினமென் போன்று
நலகந்த் திலாாய்ப் பார்க்கு ஞயம்படு செயலி மூந்தார்
விலகலார் தேவ ரென்பான் மீண்டியாந் திறைவேண் டாமற்
கலகநோக் கினரா னர்யான் காவலாற் றுயர்க்கா ளானேன்,(ωஉ)

ரு-மாழ்குற்றான்-மயக்கமெய்தினான்,ωக-மாடினன்-செய்தேன்.

இறப்பிலா வரம்பெற் றானு மிதரரும் பணிசா டாட்சிச்
சிறப்பிலா னானே னெற்குச் சிந்தையில் வெறுப்புண் டாய்த்தான்
மறப்பிலா வுமைபாற் றானே வலியபோ ராடி மேம்பா
டிறப்பிலா விலிங்கக் காய்க்கு மூர்புகு வேனென்றானால் (௰௩)

வேறு.

நாத னேங்குதென் காசி நண்ணினான்
பூத சாதி முதலோர் புன்கணீங்
கோதர் வேண்டியாங் குறைவர் முன்புகச்
சூதன் மந்திரனைச் சொல்லென் றார்சொல்வான். (௰௪)

அதர வொடுவிற லசுர னானவன்
சீதான் வைகுண்டத் திரட்சை செய்கிறான்
காதரந் தீர்மகன் கமலத் தோன்றொழில்
வேதாஞ் சகவிரு பாக்கன் செய்கிறான். (௰௫)

அங்கவன் மாமனும் பிரவி ருத்தனோர்
புங்கவ னிந்திரன் புரத்தைக் காக்கிறான்
தங்கவன் சகோதரி துணைவன் மைத்தனன்
றங்கவன் கிருசனன் மருத்திற் றாழ்கிறான். (௰௬)

உற்றவன் மருகனுஞ் சடனு தாசனன்
பெற்றவன் புயர்தொழில் பிறங்கச் செய்கிறான்
பொற்றவன் போனும் புட்க ரன்புனற்
கொற்றவ னுட்டைபாள் கோவ தாயினான். (௰௭)

மன்னவன் றம்பியா மகாந்த காசுரன்
தென்னவக் கிரகார சரிக்கஞ் செய்கிறான்
நன்னவா புவினகர் நயந்து முற்தர
னென்னமா மன்னள கையின்க ணெய்தினான். (௰௮)

இயக்குமன் மகடவத் தீன்ற மைந்தனும்
வயக்கேச கேசரி மறலி யாயினான்
நயக்குவல் லரசனி னண்ப னாஞ்செடி
செயக்கட லினுக்கதி காரஞ் செய்கிறான். (௰௯)

௰௩-இதரர்-அயலார். பிலாவிலிங்கக்காய்க்குமூர்—பலாமரம்இலிங்கமாகக்காய்க்குமூராகியதென்காசி, ௰௪-பூதசாதி-பிரமதேவன், ஓதர்—ஒருவழி.சூதன்மந்திரனை—சிரும்பாசுரனதுஅதருமத்தை· ௰௫- காதரம்—அச்சம், ௰௬-மருத்து—மருத்துச்சக்ரவர்த்தி. ௰௭-பொற்றவன்—அழகியமேலோனது,புனற்கொற்றவன்—வருணன்,௰௯இயக்குமன்-உலகத்தைநடாத்துஞ்சிரும்பன், மறலி-யமன், செடி- ஓரசுரன்· செயக்கடல்—வெற்றிவேலை,(சேனை,)

குடியிடத் துளமயன் கோவிண் டச்சனைப்
படியிரு தாவதி காரம் பண்ணுவா
ரிடியிசை விகடனுங் கடனு மென்றிவர்
வடியித மருத்துவர் பதந்தின் மன்னினார். (௨௰)

ஆயின ரீண்டதி காரஞ் செய்துமேற்
போயினர் தேவரைப் புகுந்து பற்றவு
மேயின செய்கையு ளெணிப்பிற் றைக்கிவண்
டேயினன் னுவமிரனுந் தெரிந்த தென்றனன். (௨௧)

அன்னவ னுங்களை யாண்டுங் கண்டிலன்
பொன்னவிர் சண்பகப் பூம்பொ ழிற்கணே
சொன்னவ கன்னிமார் சூழுந் தேவிபான்
மன்னவந் தமைநென்னன் மதித்துக் கொண்டனன். (௨௨)

திங்களைத் தாழ்த்தொளி திகழுஞ் செம்முக
மங்களை தஞ்சமா வதித றேர்ந்ததும்
வெங்களை களைவபோல் வேர்ப்பி டுங்கலா
வுங்களைக் கொடுசெல வுரத்தல் கண்டனன். (௨௩)

பழுதிலா வுமக்கதை யறியப் பண்ணவே
யெழுதிற லாற்றிவ ணெய்தி னேனென
வழுதிடு விழியரா யமரா ரஞ்சுமப்
பொழுதினி லவனிறு காலம் பூத்ததால். (௨௪)

நன்றியா ருலகெலா முடைய நங்கைதான்
வென்றிமைப் பொழுதினில் வீய்ப்ப துண்மையாற்
கன்றிலி ரஞ்சிலிர் கருணை நாயகி
முன்றிலின் பாமென மொழிந்து சென்றனன். (௨௫)

என்றவச் சிரவிரத் தினச்சிம் மாசனந்
தோன்றவ னருளணி மாதி சூழ்தர
வான்றவர்த் தனைக்கொளு வமரு மம்மைபாற்
சான்றவ னாதன் றனியெய் தேத்தினான். (௨௬)

௨௰-கோவிண்டச்சன்- விசுவகர்மா,இடியிசை — பேர்கேட்கநடுக்கந்தரும்புகழையுடைய, மருத்துவர்பதம்—வைத்தியர்பதவி,(அசுவினிதேவர்இடம்,)௨௧-பிற்றைக்கு—நாளைக்கு, ௨௨சொன்னவ-புகழ்ப்புதுமையையுடைய,சொல்லப்பட்டஒன்பது,நென்னல்—நேற்று.

வந்தனஞ் செய்தனன் வாய்பு தைத்துநின்
றெந்தநல் லுலகுமா ளிறைவி யேயிவ
ணந்தர விந்திர னயன்விண் டாதியோர்
வந்தனர் வாழுவார் வாமன் றேர்ந்தனன். (௨௭)

அடைக்கல மாகவந் தவரை யுய்த்தலாற்
படைக்கல முடனிவண் படர்வன் போலுமென்
றிடைக்கலந் ததிலெனக் கெட்டிற் றேறினன்
சடைக்கல னென்றனன் றுய்நக் குற்றனள். (௨௮)

சீரத நெறியவன் செலல்விட் டில்லனே
வீரதந் திரப்பெலன் மேவு வல்லனே
சூரதந் தளத்துனை சேர்வில் செல்லனே
நாரத கூறென நவிற்ற லாயினன். (௨௯)

எத்தனை யிருப்பினு மிறைவன் றந்தவே
வத்தனை யுமழும்மு னடல்கொள் வல்லவோ
பித்தனை யடைந்தவோர் பெண்ணென் றெண்ணினு
னித்தனை மணந்ததாய் நிலைமை தேர்கிலான். (௩௰)

என்றியம் பினனியாழ் முனிவ னெங்கணும்
நின்றியங் குயிர்தொறும் நிறைந்த வம்மைதான்
வன்றிற லவனையான் மதித்துஞ் சேறிநீ
நன்றினிக் காணென நயந்துற் றுளரோ. (௩௧)

பொறியுள வமரரைப் போது சூழ்குழற்
குறியுடை மாதராங் கோலங் கொண்டுறச்
செறியுநோக் கருளினு டேவி யப்படி
யறியுநல் லாரென வவருந் தோன்றினர். (௩௨)

வேறு.

கோடி தேரெழு கோடிகள் குஞ்சர
மாடி யேறும ருங்கதி வாம்பரி
சூடி யாயிர கோடிகள் சுற்றிட
நீடி யாள்களா நின்றன ரெண்ணிலார். (௩௩)

௩௩-சூடி—அலங்காரம்பண்ணி.

அன்ன வேலைசி ரும்பன னீகமுங்
கன்னல் வேலையிற் கத்தியோர் சார்வரச்
சின்ன வொற்றுவிட் டுண்மைதெ ரிந்தனன்
மின்ன னார்குழு மீறிநின் றிற்றென. (௩௪)

கால நன்றெனக் கண்டசி ரும்பனுள்
ளாலன் பாய்ப்புறத் தார்த்திவர்ந் தேயதர்ப்
பால தாயொரு தூதுப யிற்றிவிட்
டேல வார்குழ லீசியுட் டேருவான். (௩௫)

வேத ரஞ்சக னும்விரு பாக்கனற்
கீத லன்றனை யுய்த்தனன் கண்டுமை
தூத வந்ததென் சொல்லென பூர்வதே
வாத வர்தலை வன்சிரும் பாசுரன். (௩௬)

சைவ னீதித னுதவ னும்பரைத்
தெய்வ நல்வரங் கொண்டுசெ யித்தனன்
மெய்வ ளம்படை வீறில வர்முறை
செய்வ தற்கதர் தேர்ந்தில ரோடினர். (௩௭)

வெந்நிட் டாரைவி ரட்டல டாதென
நன்ன ரன்னவர் காடுமுற் றுண்டுளான்
பின்னர்ப் பேதக ராயவர் பீடுயர்
மன்ன னுக்கிடர் மாடவிக் குற்றனர். (௩௮)

பீடி லாவவர்ப் பேணலிற் றீதுபின்
பாடி னார்பொறுப் பம்மசொ லன்றவ
ரோடி டாவண மொப்புவி யல்லையே
வீடில் பேரெழு மெண்ணமெ னென்றனன். (௩௯)

மைந்த வுந்தைவ ழாஅநெறி நிற்பினும்
நொந்த டைந்தவர் நொய்மையு மற்றவர்க்
கிந்த நாடிட மீதலொண் ணாமையு
முந்த ரத்தறி விப்பினு ணர்த்திலான். (௪௰)

௩௪-அனீகம்—படை. கன்னல்வேலை—கருப்பஞ்சாற்றுக்கடல். வர—வரவும். சின்னவொற்று—சிறுபிள்ளைகளாகியவேவுகளை. ௪௰-உத்தரத்து—வழியாக.

ஆத லான்முன வர்க்கப யம்மியா
னீத லாய்த்தினி யென்செய லாஞ்சுரர்க்
கேதந் தீர்த்திட லென்கட னென்றனள்
வேத சத்திசொல் வேண்டின னோதுவான். (௪௧)

அம்ம வாண்மையும் பெண்மையு மாய்ந்திடிற்
செம்மன் மாரடு போர்செயல் சீரதோ
பொம்ம லார்க்கொடு போகுநங் காட்டுதி
பம்ம வர்க்கவர் பண்டனஞ் செய்கென. (௪௨)

மெய்ய வும்பரைக் காட்டிவி டற்கியான்
செய்ய வாக்கருள் செய்தில னென்றனள்
வைய வாண்சுரர் பெண்களாய் மாறினார்
னைய்ய வாண்பெணாய் நாடக மாடினும். (௪௩)

பூவை வேந்துருப் போட்டுந டிப்பினுங்
கோவைப் பெண்ணெனல் கோதையை ஆணென
லேவர் தேர்ந்தயா மின்றெதிர்ப் பேமினிப்
போவந் தாடெனப் போந்தனன் செல்வனே. (௪௪)

தனையன் வந்தனன் றந்தைகண் டப்பவிங்
கனையன் சொற்றன ளாடென வாடினான்
வினைய வாறின் மேலெனை செய்யலாம்
முனைமு யல்கெனத் தக்கைமு ழக்கினர். (௪௫)

சண்ட மாருதம் போன்றுத னித்தனி
மண்ட வான்கதிர் மாலைவ னைந்தமேதர்
கொண்ட வாணுதற் கோதைய ரேறினா
ரெண்ட னின்மருத் தேறிந டத்தினாள், (௪௬)

பூட்டு வாணுதற் பூஞ்சிலைக் கேகணை
யாட்டு வாள்விழி யண்டமுஞ் சூழ்வரக்
கோட்டி யீசன்கு றுஞ்சிரி போற்சினந்
தீட்டி நல்லவ ரெல்லவ ரும்மெழீஇ. (௪௭)

கருமு கிற்குலஞ் சூழ்கக னத்திடை
பெருமு ழக்கொடு பேர்ந்துமின் மின்னியார்த்
திருமு மாரிசொ ரிந்திட வுற்றபோற்
செருமு தானவர் சேர்களத் தெய்தினார், (௪௮)

௪௨-பண்டனம்—போர். ௪௬-எண்டனின்—மனவேகத்தில். ௪௭—ஈட்டி-குந்தம், சவளம். ௪௮-ககனம்-ஆகாயம். உருமு—இடியுடன். செருமு-நெருங்கிய.

செருக்க ளந்தனிற் செல்விரு பாற்படை
வருக்க மும்மலை யோடும லைபொரா
னெருக்க மொத்திய னீணிலை காண்பவர்
வெருக்க தங்கொள வெவ்வம ராயதே. (௪௯)

அத்தி யூனுடற் கங்குசந் தொட்டுயர்
சத்தி யூட்டுசண் டப்பிர சண்டன்மேற்
றுத்தி யாரூர கப்படை தூண்டினாள்
வித்தி யாவையொ டித்தனன் வில்லினால். (௫௰)

வித்தி யாவைவெ குண்டம்பு தூர்த்திட
வெத்தி யாயிர வெஞ்சர மேவினான்
கத்தி யாலவன் கண்டம றுத்தனள்
புத்தி யார்மடம் போக்கினள் விண்ணுற்றான். (௫௧)

ஆலம் போல்விழி யாள்பிரஞ் ஞைநுதற்
பாலம் போர்ந்துவிட் டான்விரு பாக்கனச்
சீலன் றீமைக டாவ வண்முனீஇச்
சூல மோச்சினள் சூரவிண் ணேறினான். (௫௨)

மிக்க நீள்வில்வ ளைத்துவி தக்கணன்
றொக்க தீச்சரந் தூர்ப்பவி ருத்தைதான்
றக்க வன்முச லங்கொடு சாடினாள்
புக்க கோற்கள் பொடிப்பொடி யாயவே. (௫௩)

எந்த வத்திர மேவினை யாயினு
மந்த முற்றுமிவ் வாறடிப் பேனென
முந்த வாண்மைமு டித்தனு ரைத்தவன்
சிந்த மண்டைநெ ரிப்பவிண் சேர்ந்தனன். (௫௪)

இருச னன்விரைந் தேகினர் காந்திமேற்
பொருச மத்தினிற் பூட்டினன் றண்டமே
யொருச ணத்திலொ டித்ததைக் காந்திவேல்
வருச மாவிட மாண்டுவிண் ணேறினான். (௫௫)

௪௯—வெருக்கதங்கொள—பயங்கொண்டு ஓடும்படி. ௫௨-முனீஇ—முனிந்து. சூரவிண்—வீரசுவர்க்கம். ௫௩. முசலம்-உலக்கை. கோற்கள்-அம்புகள்.

கருதி வெங்கொலைக் கச்சவி யாபினி
யொருதி றற்படை யூடுபு றங்கொடா
விருதி னன்புட்க ரன்விடு வச்சிரம்
பொருதி றந்தெரி போதெதி ராடினள். (௫௬)

வச்சி ரப்படை வந்ததை வாங்கியே
மூச்சி ரத்தயி லாலவன் முச்சிகீண்
டெச்சி றுந்தலை யெற்றியு ருட்டியே
யச்சி ரத்தனை யந்தரத் தேற்றினள். (௫௭)

கிருத்தி மப்புரை நேர்கெச கேசரி
கருத்தி னற்புத மாக்கட கத்திறற்
செருத்தி றத்தினைக் காட்டினன் சீரியத்
திருத்தி கண்ணெரி சிந்தி யெதிர்த்தனள். (௫௮)

நம்பன் முப்புர நக்கெரித் தென்னவே
வெம்பு கண்ணழல் வீசியெ ரித்தனள்
செம்ப தம்மவன் றீந்தமெய் தீண்டலின்
வம்ப ருமலர் வான்புக லாயினன். (௫௯)

அயிலை யென்பவன் முன்விக டன்வரா
வெயிலை யோட்டழல் வெஞ்சரம் வீசினன்
கயிலை யான்சரங் கையிலெ டுத்தெழின்
மயிலை நேரவள் வஞ்சனை வாட்டினள். (௬௰)

பக்க லாயிர பாணமெ டுத்துட
லொக்க வேறிட வேகட னேச்சினன்
சுக்க லாவவற் றைத்தொலைத் தூர்ச்சித
னுக்க நைத்துயி ரும்பருக் கேற்றினள். (௬௧)

ஆல காலவி டம்மனை யான்மயன்
பாலநேர் காண்டம் பைரவிக் கேவினன்
சீல மாரவள் சிந்தியவ் வம்பினைச்
சூல காகோத ரப்பாணந் தூர்த்தனள். (௬௨)

---

௫௭. மூச்சிரத்தயில்—சூலம், எச்சு—எய்த்து; ௫௮, கிருத்திமப்புரை—பூதகணங்களையுடையதிரிபுரை,திருத்திஎன்பவளுமஅந்தப்பூரணியே, ௬௰—வரா—வந்து. ௬௧—உக்க—இற்றுப்போகும்படி, ௬௨—பாலநேர்காண்டம்—நெற்றிக்குநேரம்பு, காகோதரப்பாணம்—நாகபாணம்,

மயனு மோடினன் வன்மைகொள் வீரிதான்
கயனு ரத்தெழுங் காலையெ திர்த்துமே
பயனு றுத்தழிக் கும்படி சக்கரச்
செயனு வன்றிட வேவிச்செ யித்தனள். (௬௩)

செடிய னென்றதி றற்படு தானவன்
படிய வேயரி சூரியைப் பத்தியான்
முடிய வேவினன் பார்த்தனன் முற்படஇக்
கொடிய கண்ணழல் கொட்டிவின் னேற்றினள். (௬௪)

சிங்க வாகினி யாள்வச் சிரப்படை
துங்க வாகுவைச் சூழ்ந்துசி தைத்திட
சங்க வார்குழை யாள்சரண் பெற்றவா
றங்க வன்மெய் யழிந்துவின் னேறினன். (௬௫)

சிரும்ப னுந்தவச் சீர்த்திகொண் மன்னவன்
விரும்ப வன்படை வீழ்ந்தமை காணவே
யரும்ப விழ்மல ரார்ந்ததே ரேறினன்
பொரும்ப டைக்கலத் தானைசூழ் போந்தன. (௬௬)

எட்டி லக்கவெண் டேர்பரி யெண்ணில
தொட்டி லக்கக யங்களுஞ் சூழ்வர
வொட்டி லக்கவை யத்தினு டுப்தெழீஇ
மட்டி லக்கறி யாச்சினன் வந்தனன்; (௬௭)

திசைய டங்கலுஞ் சேர்ந்தெழல் போலவன்
வசைய டங்கவ குத்தணி வந்துசூழ்ந்
திசைய வேழ்கடன் மாந்தெழு மங்குலிற்
பசைய றக்குடிப் பானினின் றனரோ. (௬௮)

கண்ட தேவராங் காரிகை மாசெலாங்
கொண்ட வச்சமீக் கூர்ந்தொரு வற்கிட
மெண்டி கைக்கணு மின்மைகண் டோவிடச்
சண்டி காதியர் சாத்தினர் கண்ணரோ. (௬௯)

ஒருவ ழிக்கொடு ரத்துநின் றூரவர்
பருவ ரற்குறி பார்த்துநக் குற்றசுர்த்
திருவ னுட்கொடு சிந்துசி னத்தனின்
மருவன் பான்மலர் வாளிமுன் றூர்த்தனன். (௭௰)

௬௭—வையத்தின்—தேர்களின்,

ஆரி யைக்கெதி ராயடுத் தானறி
வீரி கைக்கொடு வாள்பிறை விற்சாஞ்
சூரி வைத்தவை தொட்டெறிந் தார்த்தனள்
சாரி யைப்படி தானவன் சூழ்ந்தனன். (எக)

இட்ட பாதுகை யாளிட பத்தினள்
தொட்ட விற்சாஞ் சோர்விலள் வஞ்சனி
யட்ட வீரக லாபவெந் நார்ந்தெழீஇ
நட்ட மாடின னங்கைபொன் னங்கையே. (எஉ)

மாரி நீலிவ ராகிவ டேகிவெம்
போரின் வென்றிவர் பூவையர் தண்ணறு
நாரி லேறும லர்ப்புனை நாகமார்
தேரி லேறினர் சீறிமுன் வந்தனர். (எங)

அட்ட பைரவி யட்டமா காளிமா
துட்ட மாலினி சூலினி யோகினி
விட்ட வாணவில் வீசலந் தண்டகி
மட்டில் வன்கொடு வாளங்கு சத்தியே. (எச)

பாத்தி ரத்திக பாலத்தி பாம்பிடு
சூத்தி ரத்திபீத் ராவணி சூரிமான்
வேத்தி ரத்திரி வெஞ்சமு தாட்டியாள்
காத்தி ரத்தொனி யாள்சங்கு கன்னியே. (எரு)

அக்க மாலைய ளங்கையு லக்கையள்
பக்க மந்திர சுருணி பகவதி
மிக்க வெக்கலா வெம்மழு வோச்சுவாள்
துக்கை மான்சுடர் வச்சிரை சோபணி. (எசு)

சோனை மாரிய தாச்சொரி யத்திரம்
வானை மூடிவந் தேறிட வன்சமர்த்
தானை தேர்பரி தட்டழி யப்பெருங்
கானை யாறெனச் சோரிக டாவவே. (எஎ)

எச- வாணவில்—அம்பும்வில்லும், வீசலம்—வீசுங்கலப்பைப்படை. எரு பாத்திரத்தி-தகுதியுடையவள், பாம்பிடுசூத்திரத்தி—பாம்பை கழுத்திடுகயி றாகவணிந்தவள், பீத்ராவணி—வீம்பு பேசும்கரிய நிறத்தினள், சமுதாடு— ஓராயுதம். சங்குகன்னி—சங்கக்குழையையுடையவள், எசு- துக்கைமான் —துர்க்காதேவி, எஎ—சோரிகடாவ—உதிரவெள்ளஞ்செல்லவிட.

எடுத்த வல்லிடி யேயென வார்த்திடுங்
கடுத்த சொல்லினர் கண்ணழல் சிந்தநின்
றடுத்த டுத்தெதி ராரணி சாரியாத்
தொடுத்த தேர்பரி தூண்டினாட் பாற்றினர். (எஅ)

கோடி தேருள கோதையர் வெப்படை
மூடி யேதடு போர்செய்மு றைப்படி
யாடி னாடு போர்செய்சி ரும்பனு
மீடில் வன்சம ராடி யெதிர்த்துளான். (எகூ)

வட்ட வார்குழை மாதர்நெற் றிக்கெனத்
தொட்ட பாணமெமான் றுபிரந் தூவலாய்
விட்ட சூருளம் வெம்பவ றுத்தன
ரட்ட காளிகள் கண்டுருத் தாடினன். (அ0)

அந்த வாறுருத் தம்மைமார் கோல்விட
வந்த முற்றுமு றித்துவ யங்கினன்
விந்தை தனகொற்ற வேலைவி டுத்தனள்
சந்த மாரதிற் றப்பிநின் றனனோ. (அக)

எட்ட ருட்குணி தப்பிராட் டிப்போராய்க்
கிட்ட லாயினள் கேடில்சி ரும்பனன்
புட்ட துப்பியு கந்துகை கூப்பிநின்
றிட்ட காலரு ளேறுகண் சாத்தினள். (அஉ)

சிவைய ருட்செய நேர்ந்தசி ரும்பனச்
சிவைய ருட்கையாற் செத்துய னடினன்
சிவைய ருட்கணத் தேற்றிவர் வித்திடிற்
சிவைய ருட்பதஞ் சேர்பவ னென்செய்வான். (அங)

கோடி கோடிகொ டுஞ்சா மேவினன்
கோடி கோடிச ரங்கொட ழுத்தனள்
கோடி கோடிபல் கூழைபோ ராடினர்
கோடி கோடிநின் றீர்ந்தனர் கொம்பனார். (அச)

எஅ—சாரியா—உலாவாக ஞாட்பு—போர் எகூ-தடுபோர்—தடுத்தடிக்கும் போர். அடுபோர்—அடுத்தடிக்கும்போர். அஉ—நின்றிட்டகால்-நின்றிட்ட சமயம். அங—அருட்கணத்—அருட்கண்ணனது அந்த. அச-கூழை—படை வகுப்புக்கள். ஈர்ந்தனர்—பிழந்தெறிந்தனர்.

கோட்டி னாள்புரு வச்சிலை கோமளை
வீட்டி னாளென வெங்கனற் கட்பொறி
காட்டி னாள்பிறர் கண்டுக லங்கிடச்
சூட்டி னாள்சிரும் பற்கொரு சூலமே. (௮௫)

சூல மேய்க்களஞ் சூலவ னைப்பிடித்
தேல டற்சிரும் பாசுர னீச்சொரி
சால ருட்பதந் தன்னைய டைந்துதாழ்ந்
தோல மிட்டுணர் குற்றுயி ராயினான். (௮௬)

அன்ன போதுல கம்மைய ருள்கனிந்
தென்ன மைந்தநிற் கேதவா வென்றலும்
தன்னை யென்னைவெல் தம்பிராட் டிப்பெயர்
மன்ன விவ்விடை வைகிநீ யோங்கியே. (௮௭)

வாதை யாய்ப்பணி வார்க்கருள் வாயெனை
யாத னத்திருத் தாளின்வைத் தாண்டருள்
சாதை யேயெனத் தாயுண்ம கிழ்ந்தவா
றாத மாத்தர வின்பவாழ் வெய்தினான். (௮௮)

அந்தப் போரில ழிந்தவர் முற்றுமே
நந்த மம்மையுண் ணுடிய வாறும்பர்
வந்த மர்ந்தின்ப வாழ்க்கைய ராயினார்
சந்த மாண்சிரும் பற்குமை தாள்கதி. (௮௯)

பாண்டி யிற்சிரும் பற்கடி நல்கிடம்
பாண்டித் தம்பிராட் டிப்பனை கோயிலாம்
பாண்டித் தாயினைப் பற்றொடி றைஞ்சுவோர்
பாண்டி யிற்பெரும் பாக்கிய ராகுவார். (௯௰)

சிரும்ப னுக்கருள் செய்தம்பி ராட்டியே
வரும்ப லும்பர்ம கிழ்வடி வாய்த்திகழ்ந்
தரும்ப லர்க்கர சையரு ணங்கையாய்
விரும்பன் பர்க்குமுன் மேய்விழி சாத்தினாள். (௯௧)

௮௬—சூல—ளுடைய, ௮௭—என்னமைந்த—என்னுடைய பிள்ளாய். ௯௧—தம்பிராட்டி—வடக்குவாய்ச்செல்வி. அரசையருணங்கை—அரசருணங்கை. இக்காலத்தில்அரசூர்நங்கையெனவழங்குகிறாள். அரிகேசரி பராக்கிரமன் காலத்தில் கோயில்கட்டப்பட்டதால் அரிகேசரிநங்கையெனவும்இடைக்காலத்தில்வழங்கலாயினாள்.

பெண்மை நீங்கினர் பெட்புறு தேவர்கள்
வண்மை யாருல கம்மைமுன் வந்தன
ருண்மை யன்புகொ டோலமிட் டேத்தினா
ரெண்மை தீரவெ மக்கரு ளம்மையே. (௯௨)

அரச ருண்ணங்கை யாயிவண் வைகிநீ
பாசன் பர்க்கருள் பண்ணென வேண்டினார்
சரச மார்சுரர் தம்மிடை யானுமக்
கிரச காட்சிநல் கிங்குவேண் டாறுளேம். (௯௩)

புரங்க ளுக்குநீர் போய்ச்செருக் கின்றியுந்
தாங்கள் காத்தினிச் சைவராய் வாழ்மினென்
றாங்க ணல்கின ளுய்த்துல கம்மைதான்
சிரங்க ளித்துடன் சேர்ந்தனள் கோயிலே. (௯௪)

இங்கு சூழ்வரு மேழ்மாத ராதிய
நங்கை மாருல கம்மை நயந்திட
வங்க யற்கண்ணி யாயுல கம்மையாய்
மங்க லக்குழல் வாய்மொழி யாயநீ. (௯௫)

அரச ருண்ணங்கை யாய்ச்சுரர்க் காத்தனை
வாசி ரும்பனை மாய்த்துவாழ் வித்தனை
பாசு வென்றிப வித்தமர் வுற்றனை
சரத மாயெமைத் தாங்கினை யம்மையே. (௯௬)

வேறு.

நாங்கண்மேற் செய்தலை நாடிவிள் கென்றனர்
தாங்குதென் காசிவி சாலாட்சி கூடல்வாழ்
தேங்குமீ னாட்சிகாஞ் சிக்கண்கா மாட்சிநா
கோங்குநீ லாட்சியு லோகாட்சி சொல்லுவாள். (௯௭)

வாராகிகௌ மாரிம கேச்சுரி காளியிந்
திராணிநா ராயணி சிரபி ராமியேழ்
பராவனை மீருமைப் பாலிரீஇ யும்மினான்
விராயுறை வேனென விண்டுவப் பாக்கினாள். (௯௮)

மற்றுள தெய்வமின் மாதரை நோக்கிநீர்
வெற்றியார் நங்கனை வீரிக ளாயென்றுஞ்
சுற்றிநம் பானுறை வீரெனச் சொற்றனள்
கற்றவர் போற்றுதென் காசிவாழ் தேவியே. (௯௯)

தேவிவ ரங்கொடு தெய்வமின் மாலொலாங்
கோவில்கொண் டுற்றனர் கொட்டலர்ச் செண்பகக்
காவினிற் சைவரைக் காத்தவர் வாழுவார்
பாவிகட் காய்ந்தருட் பாலனுஞ் செய்வரால். (௰)

உயுத்தக ளத்திலு ளாண்டத லையுட
னியுத்தநி யுத்தமா நீள்பறை பேய்க்கணம்
வயிற்றைநி ரப்புறு வல்விருந் தாயுண
வயிற்றிடம் பட்சிகுன் றப்புலஞ் செப்புலம். (௰௧)

வெல்லுறுங் காலமொன் னார்களை வெல்லுவார்
செல்லுறு நாள்களிற் செங்கோல்செ லுத்துவார்
புல்லுறு நாள்களிற் போகமெ லாமுண்பார்
கல்லுமோர் கால்வரிற் கைவிடு வார்களை, (௰௨)

அம்மைவ ரங்கொடின் பார்சுர ரேவரும்
நம்மையரள் கோன்விசு வேசர்வாழ் நற்றளிச்
செம்மையா னந்தநி ருத்தம தாடியே
யம்மையப் பர்ப்பணிந் தர்ச்சைசெய் தேகினர். (௰௩)

சிரும்பாசுரன் சங்காரப்படலம் முற்றிற்று.

ஆகப்பாட்டு ௯௪௯.

இருபத்துமூன்றாவது

வாலி வரம்பெற்ற படலம்.

சிரும்ப னைச்செகுத் தருளிமா லயன்முதற் றேவர்க்
கரும்ப ணுடர சாட்சிநல் கியதிற னறைந்தாம
தரும்ப லத்ததென் காசிமா தலவெற்பிற் றவஞ்செய்
வரும்ப லங்கொள்வா லியின்கதை யினிவகுப் பாமால். (௧)

பாண்டித் தம்பிராட் டியாய்ச்சிரும் பனுக்கருள் பதத்தி
யீண்டி யும்பருக் கரசரு ணங்கையா யியல்சீர்
வேண்டி யாங்குருக் கொளுமொரு விமலையன் பெனத்தோர்ந்
தாண்டி னுங்கதை பவானின மெனத்தவர்க் கறைவான். (௨)

௰௧-நியுத்தம்-நியுதம். அது நூறாயிரமென்னும் பொருளது, அயிற்றிடம்—வெட்டியஇடம், பட்சிகுன்று—பட்சிபொற்றை,செம்புலம்—போர்க்களம், அஃதிற்றைக்குஞ்செம்மண்தரையாகவேயிருக்கும். ௰௨-கல்லும்-கின்னப் படும்.

பன்ன ரும்புகழ் கிட்கிந்தைப் பார்மன்னன் வாலி
துன்ன ருந்திறற் சைவனு வானுயர் தூயோன்
முன்ன ருந்துணை தாரையா மங்கதன் மூலையாம்
மன்ன ரும்பெரு வாழ்வின னுங்கவன் வானாள். (௩)

தம்பி சுக்கிரீ வன்னுளா னுடன்பார்த் தற்கென்
றெம்பி ரானருள் பெறுதவஞ் செய்யவுள் ளெண்ணி
வம்பி ருமலர்ப் பொழில்வளஞ் சிறந்ததென் மலைக்க
ணம்பி வந்துசெண் பகப்பொழி னலனுணர்ந் தமர்ந்தான். (௪)

மாவ ளத்ததென் காசியின் மாதவ கிரியாம்
மூவ ளக்குவ டாருமுக் கூடற்கோ வியனுந்
தேவ னம்மையோ டாடிய பொகுட்டதன் சீரு
மாவ றிந்துறைந் தானதே வாலியம் பொற்றை. (௫)

மற்ற வன்சுதன் பெரியவ னாகிவா லியென்பேர்
பெற்ற மாசைவன் வடவரற் குரங்கெனப் பேச
லுற்ற வேதுவூ னுணமையா மம்மையூ னுண்டு
தெற்ற சாம்புவந் தனமிளி றெனப்பட டேற்றும். (௬)

ஆபி னுஞ்சுவா வெனச்சொலா தென்னெனி னயல்சார்
மேபி னன்விரட் டாதுாய்க் கின்றுபோர் விறலவ்
வாயி னுடிபெள் ளிகலிடும் பெயர்ப்பொருள் வல்லார்க்
கேபி னுத்தரா தென்கசை வனையிகழ்ந் திடன்மின். (௭)

வாலி யென்றபேர் வான்முனைப் பித்தலின் மயங்கின்
வாலிப் பேர்பல ராமற்கென் வாலைவைத் திலையெண்
வாலி யென்னவா னின்னவெழின் வாலறி விறைக்கும்
வாலி ருப்பதா வெனுமப்பேய் மாற்றுதிர் வல்லீர். (௮)

வடவர் நூலைபா சாக்கொடு கோயிலின் வால்வைத்
திடவ மைத்திகழ் வாலியின் புகழ்பெரி திதுமேம்
படவ ளத்தநல் லாக்கமுண் டாக்குமிப் படிக்கண்
டிடவல் வாலியந் தருந்தவஞ் செய்வது துணிந்தான். (௯)

௫-வியனும்—பெருமையும். பொகுட்டு—மலையாகிய.ஆவறிந்து—ஆக (ஒக்க)அறிந்து, ௬-தெற்ற—மாறுபட்ட, மிளிறு—நாடி. ௭-ஆன்சுவா—பசுவும்காயும், அயல்சார்-தெவ்வுதன்மருங்கு. வாயில்—காரணம். இறுத்தாது-வெறுப்புத்தாது. ௮-எண்—எண்ணத்து.

சீல வாலிவெற் படுத்துதென் மருங்குசித் திராற்றின்
மூல மாயமுக் கூடலி னுடிமுக் கூடற்
பால வாலிநா தனைநிறீஇப் பணிந்துநா டொறும்போய்
நீல கண்டனும் விசுவநா தனையுநேர் கண்டே. (௰)

வாலி வெற்புறு குகையினுள் மன்னிமா தவஞ்செய்
மோலி மன்னனே ரயனம்வை கினன்றவ முற்றுங்
காலி னெம்பிரான் றம்பிராட் டியினெடு கனிந்து
பாலின் வந்தருட் காட்சிநல் கினன்பணி வாலி. (௰௧)

வேறு.

உண்மை ஞானமின் போருரு வாயவா
வண்மை யாளுல கம்மைம னுளனே
பெண்மை யாண்மைபே டில்லாத பெற்றியோ
யண்மை யாயரு ளம்மையப் பாசரண். (௰௨)

உலகெ லாமுடை மையெனக் கொண்டவா
விலகு யிர்க்கெலா மீசனாய் நின்றவா
நிலவு மெங்குமெ வற்றுநி றைந்தவா
வலகி லின்பரு ளம்மையப் பாசரண். (௰௩)

ஒப்பு யர்விலா வுத்தம னேசரண்
செப்பு மெட்டுருச் சேர்சிவ னேசரண்
முப்பு ரத்தைமு னிந்தவல் லோய்சரண்
அப்பு வெண்குணத் தம்மையப் பாசரண். (௰௪)

என்று கண்டினித் தேத்திய டிப்பாடி
நின்று கைதொழு நீடுமெய் யன்பனை
யன்று நோக்கிவா லிசெய ருந்தவம்
நன்று வேண்டுவ நல்குதுங் கேளென. (௰௫)

கிரீசன் கேட்கவுங் கேடிறென் காசியாண்
புரீச நீதால் போதுநல் கென்றன
னரீச வாலியம் மண்ணலு கந்துமந்
திரேச வைந்தெழுத் துண்மைமுன் செப்பினன். (௰௬)

௰௧, அயனம்—ஆறுமாதம்,௰௪-எட்டுருச்சேர்சிவன்—எட்டு மூர்த்தியாய் நிற்குமிறைவன், அப்புவெண்குணம்—கடல்போலுமெட்டுக்குணங்கள்,௰௬ போதம்—தகுதியாம், அரீசவாலி—சக்கரேச்சரனாகியவாலி, குரங்குத்தலைவ னென்பாருமுளர்,(அரி-சக்கரம்,குரங்கு)எதிர்த்தவன்மை—ஒளிசெய்யும்வலி மை, அதிர்த்து-சொல்லி,

எதிர்த்த வன்பலம் பாதியு னக்கெய்தக்
கதிர்த்த வன்மைதந் தேனெனக் —ணனுத
லதிர்த்த ருள்புரிந் தங்கு— —மந்தனன்
முதிர்த்த வன்ப— கம்மலர்ந் தேத்தினன். (௰௭)

நன்மை மிக்கதென் காசிந கர்வளன்
தொன்மை யாயதீர்த் தங்களின் றாவளன்
வன்மை கூரிலிங் கத்திரு வார்வளன்
பொன்மை மூன்றுமோர்ந் தான்மகிழ் பூத்தனன். (௰௮)

வலம்பு ரிந்துல கம்மைம னுளனை
நலம்பு ரிந்துசெய் பூசைந டாத்தினன்
றலம்பு றத்தினுஞ் சூழ்ந்துத ணந்தனன்
அலம்பு வீரக்க மூல்வாலி யண்ணலே. (௰௯)

அவனி றாடம்வாலி நாதனை யாய்ந்திலார்
அவன்கு ரங்கென்பார்க் காட்பட லாய்த்தொங்கந்
தவசொங் கஞ்சொக்க நாதனுச் சாற்றலாய்ச்
சுவசொக் கேசன்கோ யில்லெனச் சொல்வரே. (௨௰)

சொக்க நாதனுச் சொல்வாலி நாதனின்
மிக்க வாலைய மேய்வழி பாடுசெய்
தக்க மேலவர் தங்கிளை யோங்குமால்
செக்க ரஞ்சடைத் தேவருள் சேருமே. (௨௰௧)

அன்பர்க் கன்பனி னணைவ ழிப்படி
யின்ப மெய்துவ ரின்றெனிற் றுன்பமே
முன்ப ருண்ணன்மு யங்கன்ம கப்பெறல்
பின்ப ரன்பணி பேணன்முன் பெண்றனன். (௨௰௨)

வேறு.

ஆவ லார்தவர் சூதனை யன்பொடு மேத்திக்
காவல் வாலியின் கதைநல தவனிவண் கடந்து
மேவ லெங்கதை விளம்பிட வேண்டுமென் றிரந்தார்
பாவன் பார்தவச் சூதனுண் மகிழ்ந்தது பகர்வான். (௨௰௩)

௰௮-பொன்மை-அழகியதன்மையாக, ௨௰-தொங்கம்-குரங்கு,தொங் கல்-குதித்தல், தொங்குதல், ஆகலின் அத்தொழிலையுடையமுசு தொங்கெ னப்பட்டதுபோலும்,தொங்குநாதன்,தொங்கநாதன், சொங்கநாதன்,சொக்க நாதன் எனவழங்கலாயிற்று.ஆயினும்சொக்கநாதன்•விசுவநாதனேயாகலின் வாலி குரங்கலனென்பதைத்திருவருளேவிளக்கியதெனவறிக,

பிரம தேசத்து... ரதுமேற் காப்பிறழ் கடலைக்
கரைய டுத்தனன் வட...டின் றவாசியாக் கடுகி
வாகி ழக்கிவர் நதிவளங் கண்..ன் மகிழ்ந்து
பரவ ருச்சனை செயவிழைந் தவ்விடைப ..ந்தான். (௨௪)

அவ்வி டைச்சிவக் குறிநிறீஇ யருச்சனை புரிந்து
செவ்வி டைக்கொடிச் சிவனருள் பெற்றனன் சென்றா
னவ்வி டத்தைவா லீச்சுர மென்பராங் குறையும்
நவ்வி யங்கைவா லீசனைத் துநர்க்குநன் கருள்வான். (௨௫)

அத்த லத்தைவா லீசனை யவிர்திருத் தத்தை
முத்தர் மெச்சுவர் தோய்ந்திருந் தேத்துவர் முனிவர்
சித்த மாசிலா வாலியங் கிருந்துபோய்த் திகழுஞ்
சுத்த நீடுதென் சமுத்திர மாடுவான் றுணிந்தான். (௨௬)

தென்க டற்கரை சேர்ந்தனன் சிவார்ச்சனை செய்வான்
பொன்க ணெய்தலிற் றேடினன் புகழுயர் வாலி
முன்க லின்பெற வொருகுறி முளைத்தது கண்டான்
றன்க ணேடுளங் குளிர்ந்தவன் சமுத்திரங் குளித்தான். (௨௭)

பூசை செய்தனன் புந்தியின் பாயவ னுறைகா
லாசை கூறிலங் கேசன்வந் தவன்பினின் றிறுகத்
தேசை யார்மெய்யைப் பற்றினன் சினந்திவன் பற்றி
யோசை யாரக்குள் வைப்பமுச் சடக்கிவிண் டுகந்தான். (௨௮)

இகலி லான்படை யேந்திலான் சிரித்துமுன் னின்று
புகழும் வாலியை மெச்சினன் போற்றிலங் கேசன்
தகவு ளாயிலங் கேசநீ யகப்பட்டுத் தணந்தாய்
மிகலி லார்பிற ரெனவிவ னவனைமெச் சினனால். (௨௯)

வாலி ராவண சக்கிய மியன்றதிவ் வாறு
பேலி ராவணன் றிசைவெல நினைந்தமை விண்டான்
சூலி நற்றுறை முற்றிய சூரநீ யன்றிக்
காலி யாருளா ரெனமுதற் கனகமீய்ந் துய்த்தான். (௩௰)

அன்று செந்தமிழ்ப் பார்தெலிங் காணமா னழகார்
நன்றி லங்கைமுந் நாடுமொற் றுமைகொடு நட்பாய்
நின்று சைவமே வளர்த்தமை நீடில கெல்லாம்
வென்று வாழ்ந்தமை தமிழ்வலார் தேர்வது மெய்யால். (௩௧)

வேறு.

மாண்டவா லியாற்பூ சித்தும் வாலீச னெனமாட் டாம
லீண்டவன் பாற்றான் றோன்றி காதலென் றிசைத்தா னீள்பேர்
பூண்டவப் பேரெம் மான்பாற் பொருந்திய பரைத்தா யோடே
யீண்டருட் காட்சி நல்கி யெண்ணிலா வரங்க டந்தான். (௩௨)

வாங்கொடு தான்றோன் றீச வரதையாம் பரைத்தாய் நெய்தற்
சுராங்கனிந் திருப்ப வாலி தூவுளக் கேரியி விற்கொண்
டேங்களித் தடைந்தான் கிட்கிந் தாபுரி யுவனுற் கண்ட
தாங்கவே லைத்த லந்தான் தரைபுக ழுவரி யாமால். (௩௩)

அத்தலத் தான்றோன் றீச னுடுமேய்த் திடுமோ ராயன்
வைத்தபாற் குடமெ டுத்து வரினடம் பங்கொ டிக்கா
னித்தமுந் தடுப்பச் செய்து நிறையபி டேகங் கொண்டான்.
சுத்தனச் சாத்தன் வெட்டச் சுரந்தது செந்நீர் வெள்ளம் (௩௪)

அஞ்சினன் சாணி யாலே யடைத்தன னோடி மாறற்
குஞ்சிட வுரைத்தான் கேட்ட வுடன்பரி சனத்தோ டெய்தி
யெஞ்சிவ னிருப்பைக் கண்டா னிதையநெக் குருகித் தாழ்ந்து
பஞ்சவன் கோயி லாக்கிப் படித்தர மேற்ப டுத்தி. (௩௫)

நயந்துதான் றோன்றீ சற்கும் நாயகி பரையம் மைக்கும்
வியந்திட நாளும் பூசை விதித்தன னிலங்கள் விட்டு
வயந்திகழ் சைவப் பண்டா ரங்களின் வயத்தொப் பித்தான்
புயந்தழைத் துசிதன் சென்றான் புதுமைய துவரி யென்றான்

வாலி வரம்பெற்றபடலம்முற்றிற்று.

ஆகப்பாட்டு ௲௪௯௬

இருபத்துநான்காவது

கண்ணுவருக்கு ஆனந்தநடக்காட்சி யருளியபடலம்.

நயந்தவா லிக்கு லோக நாதன்மாண் வரங்க ளீந்த
வயந்தரு காதை சொற்றும் வாலியின் சிறப்புஞ் சொற்று
மியந்தழை கண்ணு வர்க்கிங் கெம்பிரான் விசுவ நாதன்
வியந்தனி யின்பக் கூத்துக் காட்சிநல் கியசீர் விள்வாம் (௧)

கண்ணுவன் பலத லத்துங் கண்ணுதல் பூசை யாற்றிப்
புண்ணிய னாய்த்தென் காசி புக்குநன் பழந்தேன் பூக்கள்
பண்ணமர் பாக்கள் பொன்னீர் மணிகளைப் பசுந்த ருக்க
ளுண்ணிறை யன்பர் கொண்டல் பொழில்வள முகந்து கண்டான்.

மங்குலே ழுழைப்பர் நீகல் மண்களும் பொழியு மென்ப
ரிங்குநா டொறுஞ்சிந் தேழ மினிதவர் காணார் போலும்
பொங்குமிவ் வாக்கங் காணின் புன்மைமுனை றொழித்துப்பார்த்தே
வங்குளிர் கனிசேர்த் *தாள்வ ரதிகமாந் தலமீ தாமல். (௩)

கண்டபல் சிவத லத்துங் காணருங் காட்சி யிங்கே
யுண்டான் குறிக்காய்க் காட்சிக் குறும்பலா வொளிர்த னன்றால்
பண்டவிர் பொற்பூ வார்செண் பகப்பொழில் வளமும் நன்றால்
மண்டொர்சண் பகம்ப டர்ந்த மயிலையின் பொலிவும் நன்றால் (௪)

செண்பக மலர்க்கீழ் மேவுஞ் சிவக்குறி பனாதி யாமால்
வண்பக ரதிற்ப டர்ந்த மயிலையி னடியி னம்மை
நண்பக லாள னாதி நங்கையா வாள வட்குப்
பண்பக னீழ னல்கும் பவளமல் லிகைசேர்த் தாமால். (௫)

ஆனந்த தீர்த்த மீதே யானந்த வனமா மீதே
யானந்த புரமு மீதே யானந்த மவாம்நான் சச்சி
தானந்த னருளால் வந்தே னானந்தக் கூத்திங் கேகண்
டானந்த முறுவே னென்றாங் கானந்த மார்ந்துற் றானால் (௬)

தீர்த்தங்க ளெல்லா மாடிச் சிவார்ச்சனை புரிந்து லோகான்
மார்த்தனை யுலகா டன்னை வபக்குல சேக ரேச
மூர்த்தனை யிசைக்கு ழல்வாய் மொழியனை தனைமெய் யன்பாற்
பார்த்தன னாகித் தென்கீழ் பாலொரு வளச்சா ருற்றான், (௭)

சித்திரை வடக ரைக்கண் செழியபூங் காவின் வைகி
முத்திற வளத்தென் காசி முதல்வனை மனக்கோ யிற்கண்
வைத்தன னருச்சித் தோங்கு மாதவத் தமர்ந்தான் முக்க
ணத்தனா னந்தக் கூத்துள் ளவாவியாண் டொன்றாய்த் தம்மா (௮)

உலகமுற் றுடைய வம்மை யுடனுல கேச னுள்ளத்
திலகருட் பெருக்க ரன்றே வெண்ணிய வெண்ணி யாங்கே
விலகிலா வன்பர்க் கீதல் விடுவரோ கண்ணு வற்கா
வலகிலா னந்தக் கூத்தாட் டவாவெழுந் தருளி னால். (௯)

௫. வண்பகர்-வளப்பமாகச் சொல்லப்பட்ட. நண்பகலாள்-உயிர்க்கருணையம் நீங்காதவள். பண்பனீழல்—குணமாகவிரிந்தநிழல்,

நித்தியா னந்தக் கூத்தர் நிறைந்துல காட்டுங் கூத்தர்
முத்தியீ முத்துக் கூத்தர் முதுசிற்றம் பலத்துக் கூத்தர்
வித்திய பெருவான் கூத்தர் வெள்ளிமன் றத்துக் கூத்தர்
சத்திகன் மன்றக் கூத்தர் தாம்பிர சபைமாண் கூத்தர். (௰)

இராவணற் காப்பு யங்க மாநட மியற்ற வுட்கொண்
டொராக்கயி லையின்க ணாடி யுகப்பருள் கூத்த ரின்னும்
பாவள விலாவண் கூத்தர் பயிலுமைந் தொழிலாள் கூத்தர்
முராரிநான் முகனுந் தேரா முதியகுற் றாலக் கூத்தர். (௧௧)

சிவனுல கிதுவெ னுந்தென் காசிநன் னகரிற் சித்தர்
தவர்முனி வாரி யோகர் தழைதா வுலகாள் பாக
னிவர்நட ராச னாகி யெழுந்தரு ளக்கா லும்ப
ருவகைமா லயன்முன் னோர்தம் புருவுநா ரதன்முன் னோரும்()

கணங்களுந் திருவு ளங்கொள் கணத்துவந் தனரி ரண்டு
துணங்கையார் வேற்கைப்பிள்ளை துதிக்கைப்பிள்ளை யுமுன்னின்று
றிணங்கரு ணந்தி வந்தா ரிமையவர் மலர்பொ ழிந்து
வணங்குதுந் துமிக ளார்த்தார் மாயன்மத் தளம டித்தான் (௰௩)

பாடினா ரிரங்கை வாணன் பருமுழா முழக்கி னால்
நீடிரண் டாயி ரங்கை நிரையினா யிரஞ்சங் கேந்திப்
பீடியல் பானு கம்பன் பெரிதொலி யெழுப்பி னான்
வீடிலா யிரமு கக்கங் கைகட லெனவார்த் தாளால். (௰௪)

பரம்பா னின்பக் கூத்தப் பயின்மக ரத்த மாவன்
றரம்பையர் கவரி யேந்தி யசைத்தனர் முனிவ ராரும்
வரம்பினின் றேத்தல் செய்தார் வானவர் புகழ்ந்தார்த் திட்டார்
தரம்பலாண் டிசைத்தார்த் தார்மா தவர்கணங் கடவி னார்த்த.

நாரதர் தும்பு ரேழு நல்லிசை யமிழ்த மெம்மான்
சீரவிர் செவிக்கு வார்த்தார் திருமறை யாயி ரங்க
ளோறம் பொருளின் பமீ டெடுத்துரைத் தார்ப ரித்த
கூரருட் புலியும் பாம்புங் குளிர்ந்தவுட் குளிர்ந்த கண்கள்.(௰௬)

* ௰, பெருவான்கூத்தர்—பேரம்பலக்கூத்தர். சத்திகன் மன்றக்கூத்தர்—திருவாலங்காட்டில்காளியோடு மணிமன்றத்திலாடிய கூத்தர். ௧௧. ஓரா—நீங்காத. ஒருவாவென்றது ஈண்டு எதுகைநோக்கி ஓராவென நின்றது. ௰௩. துணங்கையார்—திருவிழாவுக்குப் பொருந்தும். ௰௪. மகரத்தமா—தையமாவாசி. வரம்பினின்று—ஒழுங்காக நிலைகொண்டு. தரம்—தரம்போல, மேன்மையாக. ௰௬. புலி-வியாக்கிரபாதர். பாம்பு-பதஞ்சலி,

கோடிவெங் கதிரோர் காலை கூடிவந் துதித்தாற் போல
நீடிய செம்மே னிக்கண் ணிறையவெண் ணீறு பூத்துச்
சூடிய பிள்ளைத் திங்க டுலங்குவெள் ளொளிப ரப்பப்
பீடிய லறுகு வில்வம் பச்சையும் பிறங்கெல் வீச. (௰௭)

இளமைமா னொருகை யேந்தி யெரிமழு வொருகை தாங்கி
வளவா தாப யங்கண் மலரிரு கைகள் காட்டித்
தளர்விலா நாற்றோண் முக்கண் டழைதரு நீலகண்டங்
கிளர்சடை வயங்க முந்நூல் கேடில்கண் மணிகள் ஞால. (௰௮)

வளைக்குழை யிருதோ ளாய வரைகிடந் தூச லாடக்
களைக்குண பணித்த லைமாக் கடுவராக் கடக மாடத்
தளைக்குவெண் டலைமா லைகட் சார்தரப் பூண்டு மாட
விளைக்குமார் மத்தந் தும்பை வெள்ளெருக் கிதழி யாட. (௰௯)

எழுந்தரு ளுலகாள் பாக னினியநல் வரவு தேர்வான்
றெழுந்துணைத் தோள்வ லந்தான் றுடித்தது கண்ணு வற்கிங்
கழுந்துவல் லிருள்பொன் றிற்றூர்ந் தவிரொளி பாந்திற் றெங்குங்
கொழுந்தவிழ் பொழின்மாப் புட்கள் குளிர்ந்தியங் காநின் றிட்ட

கண்ணுவன் றவச்சா லைக்கண் கண்ணுதற் கூத்தன் றோன்றிப்
புண்ணியச் சிவைகண் டின்பம் பூத்திடக் குறண்மே லோர்காற்
றிண்ணிதி னூன்றி யோர்காற் றிகழ்தர மேலெ டுத்து
மண்ணிமான் றுடியா வார்த்து மாநடம் புரிந்தான் மன்னோ. (௨௧)

உடுக்கினி லாக்கல் காட்டி யமைப்பினி லோம்பல் காட்டி
மடுக்கனற் போக்கல் காட்டி வைத்ததாண் மறைத்தல் காட்டி
யெடுக்குமோர் தாளி னின்ப மீந்தருட் செயலைக் காட்டி
நடக்குமைந் தொழிற்கூத் தாட்டம் நடுணர் தாந டித்தான் ()

எண்சுவைப் பாக்கள் வாணி யின்னிசை பிறங்கப் பாட
வண்சுவைக் கவுரி தாளம் மாபினிற் பிடித்துத் தட்டப்
பண்சுவைக் கண்ணு வாதி பலதவர் முனிவர் சித்தர்
தெண்சுவை யோக ரும்பர் தெரிசனை செயந டித்தான். (௨௩)

சிவசிவ சிவவென் றோர்பாற் செயசெய செயவென் றோர்பாற்
றவர்முனி வரர்முன் னோர்த் தனரர வரவென் றோர்பா
லிவர்தரக் கலின்க லின்க லின்னெனக் கழல்க ளார்ப்பக்
குவலய முபத்த குந்த குந்தகு மெனந டித்தான். (௨௪)

௰௭. எல்—ஒளி. (பச்சொளி) ௰௯. களைக்குணம்-ஒளிக்குணத்தையுடைய. மாக்கடு-வல்விடம். தளைக்கும்—கட்டமைந்த. விளைக்கும்—மணம் விளையச்செய்யும். ௨௧. குறள்—குறளன். (முயலகன்)

எண்ணில்கண் படைத்தான் போலு மிறைவனா னந்தக் கூத்துக்
கண்ணுவன் கண்டா னந்தக் காட்சியிற் குளித்தா னந்தப்
புண்ணியன் பொருட்டாக் கூத்துப் புரிந்தமை கண்டோ ருய்யப்
பண்ணிய தென்கா சிக்குப் பணிந்திறை வனைப்ப ணிந்தார். (௨௫)

ஆனந்தக் கூத்தர்க் கங்க னமைத்தசிம் மாச னத்தி
னானந்த வல்லி யோடு மமர்ந்தினி திருந்தார் கண்டோ
ரானந்தக் கடலின் மூழ்கி யடிபணிந் துறமூழ் கும்பே
ரானந்தக் கண்ணு வன்றா னன்பதாய்த் துதிப்ப தானான். (௨௬)

வேறு.

நம்ப கண்ணுத னங்கையோர் பங்கனே
யன்பர்க் கன்பக றைக்களத் தண்ணலே
யென்ப ணிந்தவ வேந்துடுக் கார்ப்பவ
பொன்ப டாம்புலித் தோலுடைப் புண்ணியா. (௨௭)

வாத மாணப யாமழு வாழ்கையா
சுரகங் காதர சூழ்பணா கங்கணா
சிரச டாதர திங்கண்மு டித்தவா
வாசி வாபர மானந்தக் கூத்தனே (௨௮)

குறளன் மேலடி யூன்றிக்கு னிப்பவ
வறன தாமடி யொன்றுமே லானவ
திறன ருள்விழி செய்பவா யன்படி
யுறநல் லின்புவைத் துன்னிந டிப்பவா (௨௯)

சரண்ச ரண்சர ணென்றனன் றாழ்ந்தனன்
னான ருட்கணா ளித்தன்ப கண்ணுவ
பரசு நின்றவம் பார்த்துகந் தேனுனக்
கிரச நிர்த்தனக் காட்சியு மீந்தனன். (௩௰)

மேலும் வேண்டுவ வேண்டென வீசவென்
பாலு கந்தமை பாரறி வானிவண்
கோலு மாலயங் கொண்டருள் யான்பணி
காலு வாமணி கர்ணிகை கண்டருள். (௩௧)

௨௭. பொன்படாம்-அழகியஉடையாகிய, ௨௮ பணம்-பாம்பு, ௩௧ கோலும் இடங்கொள்ளப்பண்ணும், யான்பணி-யான்வணங்கியகாலுவா-கமலமாகிய தைஅமராவாசியை, மணிகர்ணிகை—தீர்த்தத்தை,

சீர்த்தென் காசியாஞ் சிங்கதிக் கிற்றலை
யூர்த்தி ரப்புலி யூர்கல்வேங் கைநிழ
னேர்த்தி யாடிவாழ் நீபுலி யூரெனன்
றூர்த்த பேர்கொட ருள்கென வேண்டினான். (௩௨)

வேண்டு வார்வேண்டல் வேண்டியாங் கிபிரா
னாண்டு கந்தருள் செய்தன னவ்விடை
நீண்டு றைந்திட னேர்ந்தும்பர்க் கின்புதந்
தீண்டுய்த் தானிவர்ந் தெய்தினன் கோயிலை. (௩௩)

இங்கி ருந்தல கெங்குமி ருப்பவன்
றங்கு மூர்பல சார்தனி கொண்டமை
யுங்கெ னற்புத மோங்கரு ளாட்டது
துங்க கண்ணுவன் சூழ்ந்தாந்தி ரஞ்சென்றான். (௩௪)

வேறு.

சிவத்தென் காசியாம் புலிநகர் சேர்ந்துதை யமாவிற்
சுவத்தன் சித்திரை மணிகரு ணிகைப்புன றோய்ந்து
தவத்த தென்புலி யூரனு மின்பக்கூத் தனைக்கண்
டுவத்த லாலிக பரமுண்டா முணர்வர்மா தவத்தோர் (௩௫)

விழிய ருட்கடன் மடைதிறந் தன்பரின் விருப்பம்
பொழியு மானந்தக் கூத்தனும் புவன நாயகனும்
பிழியி சைக்குழல் வாய்மொழி யாம்பிரி யையுமே
கழிப ரம்பொருள் கண்டவர்க் கின்பமே கதியாம். (௩௬)

அப்ப னண்டவ னவனரு ளம்மையாண் டவளாச்
செப்புஞ் சைவமே திருநெறி யருளரு ளாள
னெப்பி லாச்சிவன் சிவையெனல் கதிர்கதி ரோன்போல்
வைப்ப றிந்தவர் சத்திமான் சததியை மதிப்பார். (௩௭)

அம்மை யப்பனைக் கண்டுகொண் டாடுசை வருக்கே
யம்மை யப்பனு வடுக்கவந் தாடிநன் கருள்வா
னம்மை யப்பனி னருள்விளை யாடலா லுலக
மம்மை யப்பனை வைத்திவர் தலைத்தவ ரறிவார். (௩௮)

---

௩௨. புலியூர்-சிங்கநகர், வேங்கை-வேங்கைமரம், சிங்கதிசைத்தலைநகரதலினு லும், வேங்கைமரத்தினிழலினடியமர்ந்ததனாலும், தென்காசிக்குப்புலியூரெ னவும், பேரமையவேண்டுமென்பது அப்பெயர்இற்றைக்கும் வழங்கிவரு கிறது, வடக்கும் புலியூரிருத்தலின் இதுதென்புலியூரெனப்படும், ௩௪ஆந் திரம்-தெலுங்குநாடு,

ஆண்ட வன்றரு முறுப்பினுட் காதுகண் ணதிக
மாண்ட வன்புகழ் சொலுமறை யவர்க்குள காதே
யாண்ட வன்மறை வினைக்கோயில் காணுய ரறிஞர்க்
காண்ட வன்றரு மிரண்டுநன் றவிர்ந்தன வாமால். (௩௯)

காதுகண்படைத் தவர்கடென் காசிநா தனைக்கண்
டேது வேண்டினும் பெறுவரா விலாதவர்க் கியாரென்
றோது வார்குரங் குலாய்த்திரி தலிற்கிடந் துழல்வார்
நீது றுதமா தவரெலாங் கண்டின்பந் திளைப்பார். (௪௰)

இன்ன வாறுதென் காசியெம் மான்றிரு விளையாட்
டுன்ன ருட்பெருக் காற்றின முனூற்றுவன் றவங்கூர்
நன்னர் கண்ணுவற் காப்புரி கூத்துமூந் நாடும்
மன்னின் பார்தாக் கண்டுவாழ் வனவென வகுத்தான், (௪௧)

வினையின் பார்தவ் ரன்புரு வாகியே விழிநீர்
மனநின் றுய்ந்தன மெம்மையுய் விப்பவ வாலி
முனைநு றைந்தவெற் பம்மையோ டாடிய முதுவெற்
பெனநின் றுயதென் வேறுமுண் டோநட மென்றார் (௪௨)

நல்ல கேள்வியி னையன்மீர் நாட்டினம் மறத்தோர்
வல்ல வேதியன் மணிகரு ணிகையின்வந் தாடிச்
செல்லத் தையமாக் கூட்டத்துட் டிருடின னொளித்துக்
கொல்லம் போகவுட் குறித்தனன் கரைவழிக் கொண்டான் (௪௩)

தென்பு லிப்பதிச் சிவன்குல சேகர நாதன்
மன்பு றங்கொடு வலம்வரு மவற்கருள் வான
பின்பு ருச்சிவை யோடுல கேசனங் கிவர்ந்து
முன்பு வாலிவெற் பினின்விளை யாடிமுன் னின்றான். (௪௪)

வேறு.

வருமறை யவன்பூ ணூரோர் மங்கையோ டங்கு மூத்த
பருவனு நின்றாங் கேதென் படப்பணி கவர்வா னெண்ணி
யருகுற விடலைவீர னைநோக் கினன்வி யந்தச்
சுருவனு னன்வி டாதெங் குற்றனை திருடவென்றே. (௪௫)

---

௪௫. நின்றாங்கே-நின்றாற்போல, தென்பட-எதிர்தோன்ற,

அழைத்தனன் களவின் றெங்கே யகப்பட்ட தெனலோ கேச
னுழைத்தனன் றனைத்தேர்ந்தோனென் றுணர்ந்துமெய்சொற்றான்முற்றம்
பிழைத்தனை யென்றுமுன்வைப் பித்தனன் மன்னுந் தோன்றிக்
குழைத்தனனிறையான்பார்ப்பான்கொண்டடைத்திடலையென்றான்

களவியற் றிடலு மாமோ களவினிச் செயேனிற் றைத்தை
வளவுவாத் தீர்த்த மாட வந்தவர் பொருள்கவர்ந்தா
யிளமதி சூடி யைநோந் திடச்செய்தாய் விடேனென் றானுங்
களவினிச் செயேனென் கின்றாய் நம்பிடக் கால்சொல்லென்றான்.

சத்தியஞ் செய்வ லென்றான் றகாதுகள் ளனுக்கஃ தென்றா
னித்தினம் வேறு தேரே னென்னைநீ காத்தி யென்றான்
சித்தமம் மறையோ னுக்குத் திருத்திமே லுழைத்துண்பான்கண்
வைத்தனனுய்த்தான்கொண்டவத்தெலாமுடையோர்க் குய்த்தான்

ஒழிந்தன வெனும்பொ ருண்முன் னூளவிடை வந்தி ருப்பக்
கழிந்தவின் பார்தென் னற்றென் காசிநா தனைக்கொண் டாடிப்
பொழிந்தகண் ணன்ப னாகிப் பூசனை புரிந்து சென்றான்
மொழிந்தவவ் வாடல் கொண்டப் பெயரதம் முதுகுன் றென்றான்

கண்ணுவருக்கு ஆனந்த நடக்காட்சியருளிய

படலம் முற்றிற்று.

ஆகப்பாட்டு ௯௫௪௫.

௪௬· உழைத்தனன்—மிகமுயன்றான். குழைத்தனன்—மனங்குழையப்பண்ணினான் இறை—அரசே! ௪௭—தைவளவுவா—வளம்பொருந்தியதையமாவாசி, ௪௯—அம்முதுகுன்று—அந்தவாலியம்பொற்றை,

இருபத்தைந்தாவது

செண்பகபாண்டியனுற்பத்தி யாட்சிப்படலம்.

அருந்தவக் கண்ணு வர்க்கிங் கானந்த நடனக் காட்சி
திருந்துதென் காசி நாத னருளிய செய்தி சொற்றும்
பொருந்துசெண் பகமா றன்றான் புண்ணிய னருளாற் றோன்றி
யிருந்தவர் மெச்ச வாழ்சீ ரினியெடுத் தியம்பு வாமால். (௧)

மருவுமோர் நற்கா லத்து மதிகுலன் வமிச மோங்கத்
திருவுயர் கொடைசி றந்து செய்யமுத் தமிழ்செ ழிப்பப்
பெருவரங் கீர்த்தி யார்ந்தெம் பிரானுல கேச னுக்குங்
கருவுறு மகட்பெற் றீய்ந்து கண்ணிய மாம னானான். (௨)

அவன்குல சேக ரத்திறன் னவனரு ளுலக நாதன்
றவன்குழல் வாய்மொ ழித்தாய் தந்தையா மவன்ற வச்சே
யிவர்குல சேக ரன்று னீன்றசே யுலக நாதன்
சிவனருள் கூரின் னோன்கால் செழித்தெழுந் தவனி னத்தில்.(௩)

வேறு.

வீர பாண்டியன் சவுந்தர பாண்டியன் வெற்றிச்
சூர பாண்டியன் றாந்தர பாண்டியன் சுடர்வேற்
கோர பாண்டியன் குணநிதிப் பாண்டியன் குடைக்கீழ்
வார பாண்டியன் வழிமறித் தாண்டபாண் டியனே. (௪)

சுமுக பாண்டிய னுக்கிர பாண்டியன் சுசீல
சமுக பாண்டியன் சவுரிய பாண்டியன் சயந்த
விமுக பாண்டியன் கோவல பாண்டியன் விகிர்தக்
குமுத னுமடை யார்கண்ம தாந்தகோ டாரி. (௫)

செருகு வேம்பலர்க் குமணபாண் டியன்றிதி யுளகோக்
கருணை யாகரன் மகாதள கேசரி கங்கன்
பெருகு மாணதி செயபாராக் கிரமனும் பெயரோன்
வருகு லத்திவா கரனுயர் மங்கல வழுதி. (௬)

தரும சேகரன் பாஞ்செயன் றமோதரன் சகரன்
கருமபூடணன் காங்கயன் கண்டன்மாற் கண்டன்
குருமணிக்குண ராமன்கோச் செழியன்கூ டற்கோ
வருமசுந்தரன் சவுந்தரன் வாட்குச கீர்த்தி. (௭)

செயந்த மைந்தவிந் திரத்துய்ம னுக்கிர சேனன்
புயந்த ழேடம்பல பத்திரன் புரவலர் சிங்கன்
கயந்த ளிர்த்தமாண் வரதுங்கன் கவியதி வீரன்
வியந்த கோற்குல சேகரன் விக்ரம சிங்கன். (௮)

இலங்கு தென்னவ ரிவரெலா முளசிறப் பிவர்காற்
றுலங்கு விந்தனென் றொருவன்மன் னைம்முடி சூடிக்
கலங்கு மெண்மையர்க் கஞ்சலே புரிந்தருள் களிவால்
விலங்கு மொன்னலர்க் கேறென வாழ்ந்தனன் விளங்கி. (௯)

பொருத விற்றிற முடையரைப் புறங்கண்டு புகழ்கூர்
விருத மைந்தசீர்க் கழலினன் வீரமேற் கொண்டோன்
றருதண் கொண்டலி னிரவலர்க் களிக்குமாண் டகவோ
னொருவ லாண்மையாற் புவியெலா மெச்சுவாழ் வுடையோன் (௰)

பெற்றி டும்புதல் வரிற்புகழ் பிறங்குமா தவம்போ
லுற்றி டுங்குல தீபவத் தூங்கனின் முளைதான்
றற்றி டுந்தவச் சுதன்சுதச் சுதனெனத் தோன்றிக்
கற்றி டுங்கலை வலானவன் மங்கலன் காலான். (௰௧)

விதிக்கும் விந்தனும் பெயரிறை வாழ்புரி விந்தை
யுதிக்கு மன்னவன் றன்னகர் விளங்குதே ரூர்காற்
பதிக்குஞ் சாம்புவன் பூசிக்குஞ் சயம்புவைப் பணிந்து
துதிக்கும் போதவ னொருமொழி வானிற்றோன் றியதே. (௰௨)

வேறு.

சொன்னதென் னென்றாற் றென்மேற் றுலங்குதிக் கினிற்போய் நீவிர், மன்னவை குவிரிங் கென்றான் மகன்வடி வேலோன்வந்து, பின்னருள் புரிவ னுன்றன் பிள்ளையின் பிள்ளைக்கீது தென்னவ வுளங்கொள் கென்னத் தெரித்ததாம் வருமுன் செய்தி. (௰௩)

௰௧. சுதச்சுதன்—முறைமையுள்ள, (தவறாத) மைந்தன். மங்கலன்—மங்கலவழுதியினுடைய

அருங்கல னதுவே யாக வமைச்சருக் குரைத்தான் விந்தன், நெருங்கல முறுது நின்ற நிபுணரும் நிறுத்துத் தூண்டச், சுருங்கலன் றுயர்வாச் சேய்க்குச் சுடர்முடி சூட்டி யூரும், மருங்கலர் நாடுங் காக்க வழக்கிடிற் செங்கோ லென்றே. (௰௪)

வேறு

சிறந்தகொற் கையினிருந் திவர்ந்து செவ்விதி
னறந்தழை தருசெங்கோ லால வாயினும்
புறந்தழேடம் விந்தையம் புரிக்க ணுஞ்செயுந்
திறந்தரு மாட்சிதான் சிறக்கு மென்றெணி (௰௫)

வேறு

சத்திரஞ் சிவிகை பாய்மாத் தந்திகள் படைக டேர்கள்
சித்திரத் தானை வீரர் செம்மைகூ ரேவ லாள
ரத்திர வல்லார் வந்தோர்க் கருத்தறச் சாலை யெல்லாம்
புத்திரர்ப்பெறுமில்வாழ்வார்ப்புரப்பவர்பொறுப்பென்றோர்ந்து (௰௬

வேறு.

சந்தன மகிற்புகை சயன மெத்தைகள்
பந்தன வாயில்காப் பவர்க ளாகுமுன்
வந்தன வரதமும் மகிழ்ந்து தய்க்குமன்
மைந்தனன் குரத்தொடும் வாழ்வ தாய்ந்தரோ. (௰௭)

அரசுசெய் விந்தவேந் தகம கிழ்ந்துதன்
சிரசுள மணிமுடி சேய்க்கு நல்கினன்
முரசறைந் தவனுந்தன் முளைக்குச் சூட்டினன்
வரசுத னமவன் சவுரி மன்னனே. (௰௮)

வேறு

சவுரிய பாண்டி யன்றன் றனித்துணை மங்கலைத்தாய்
செவுரிய பொறுமைத் தாய சிலமார் வயிறு வாய்த்தாள்
கவுரியி னருளி னலே கனகமா மகுடந் தாங்கிப்
பவுரிகோ ளிரத மும்பல் பரிபடை சிறப்போன் றோன்ற. (௰௯)

குயிலுமான் புதனை வெள்ளி குருவைசே டிகமா மம்ச
மொயிலுற வேறிக் கேந்த்ர கோணமரர்ந் தமிச முச்சம்
பயிலுநல் வேளை தெய்வத் தங்கிசம் பரிவிற் பற்ற
வெயிலுடைப் புதல்வ னாக மிளிர்ந்தபத் தாந்திங் கட்கண். (௨௰)

௰௫. புறம்—மதில். ௰௭. ஆதுமுன்—சாமரமுதலிய. அனவரதமும்—நித்தியமும். ௰௮ சேய்க்கு—குலதீபரத்துங்கனுக்கு. முளை— அவன்மகனாகிய சுதச்சுதனுக்கு அவனே சவுரியபாண்டியன். ௰௯. செவுரிய—செல்வீதுபொருத்தமாகிய

இலக்கினே தயத்திற் கீர்த்தி மூர்த்திமா னிலக்கி னத்திற்
கலக்கமி லதிப னாட்சி யுச்சகட் பேறிக் காணத்
துலக்கமா கிலக்கி னாதி கேந்திரத் திரிகோண் போயாங்
கலக்கணி லிலக்கி னத்தை யதிபனே நற்கோள் பார்க்க. (உக)

கீர்த்திமேம் பாடு மிக்குக் கிளையுபர் வலிமை மிக்கு
மூர்த்திசே ரழகின் மிக்கு மொழிவளத் திறத்தின் மிக்குக்
கூர்த்திசை பணிசீர் மிக்குக் குழகனன் பார்தன் மிக்குப்
பார்த்திபர் மெச்சன் மிக்குப் பாவுசே யுதித்தா னந்நாள் (உஉ)

மருளறு கணித நூலோர் வல்லுநர் வலிமைத் தாய
வருளமை யுறுதி யெல்லா மறிந்துநன் றெடுத்துக் காட்ட
வெருளகல் சவுரி யப்பேர் வேந்தனுந் தாம்பூ லாதி
பொருளனை வருக்குந் தானம் புரிந்தனன் களிசி றந்தான். (உ௩)

அகவிதி யறந்தேர் தாய்க்குள் ளகமலர்ந் துவகை பூப்பச்
சுகவினைத் தாய ரைவர் துலங்கிறை மகற்கண் டின்பாய்ச்
சகவிதி வழக்காத் தூமஞ் சனமுழுக் காட்டி மற்றும்
மகவிழை வொடுமெய்த் தோம்பி வளர்த்தனன் வளர்வான் மைந்தன்

அருவமா யுருவ மாகி யருவுரு வாயப் பாலா
யிருவகைப் பவஞ்சத் தெந்த மெவற்றினு நிறைசி வன்றான்
பொருளவ னொருவன் றானே போற்றிடப் படுவோன் போற்று
மூருவினர் மக்க ளென்றே துயர்தரு நெறிதேர் சேய்க்கு. (உ௫)

ஆதியோ தெழுத்தாய் வான்போ லழுதலின் மகிழ்ந்து சேனைப்
பாதுகா வலனுஞ் சேனைப் பாலடை கொண்ட ருத்தி
வீதியார் செங்கை தாங்கி விழிக்கெதிர் கொளக்கண் டின்பார்ந்
தோதிமார் பணைத்து முத்தி யுச்சிமோந் தருமை செய்வார்.

பொருவின்முத் தவிநெய் நாளும் பொழியவுச் சிக்கிட் டூட்டி
வருவர்மெய் தூய்துற் றோங்க மதியிரண் டினிற்றெய் வக்காப்
பொருவவின் றியம்ப லைந்தி லுறுகைகா லூன்றிச் சென்னி
தருமுக நிமிர்த்த லேழி லூட்டலெட் டினிற்றால் பாடல். (உ௭)

உஉ. மூர்த்தி- உடம்பு கூர்த்திசை—மிக்கதிக்குகன். உ௪, தாயரைவர்-ஊட்டுந்தாய், கைத்தாய், செவிலித்தாய்; பாராட்டுந்தாய், நற்றாய் என்னும் ஐவர். உ௫, இருவகைப்பவஞ்சம்-சொற்பிரபஞ்சம் பொருட்பிரபஞ்சங்கள். உ௬. வீதி-விசாலம். உ௭ முத்து-ஆமணக்கு. அவிநெய்-அவித்துற்றியநெய். காப்பு-காப்புக்கூறும்பருவத்து(முகநிமிர்த்தல்)-சாணை (அணைபாடை) யிற்கிடக்கும் பிள்ளை, செங்கீரையாடல்-செவ்விய மழலையாடல் செங்கீரையாடலென்ப-சிலர் உடம்பைப்பின்ளையசைத்தலே செங்கீரையாடலாம், சொற்பயில்வு கூறுதல் ஆறுமாதத்திலாமென்பர். அப்படிப்பண்டை வழக்கிலிருந்ததாகத் தெரியவில்லை யென்பார் கிழவ

ஒன்பதாந் திங்க டன்னி லுளுற்றுசப் பாணி கொட்டல்
பின்பதாம் பதினொன் றன்கண் பிறங்குசீர் முத்த மாடல்
வன்பதா ராண்டி லிங்கு வருகென வழைக்கை யாசித்
தின்பதா மதியீ ரெட்டில் வாசிகை கூறி யேத்தல். (உ௮)

துருவிய மதிபன் னெட்டிற் றாயவம் புலிய ழைத்தல்
மருவிய விரண்டா மாண்டிற் சிறுபறை வயங்கத் தட்டல்
தருவியன் மூன்று மாண்டிற் சௌளகல் வினையங் காடல்
ஒருவிலா வவ்வாண் டின்க ணுகந்துசிற் றில்சி தைத்தல். (உ௯)

களங்கமி லுன்கா மாண்டிற் கவின்சிறு தேரு ருட்டல்
உளங்களி கூரான் டைந்தி லோதுபள் ளிக்கு வைத்தல்
விளங்கனி மணிப்பூண் பத்தா மாண்டினின் வியப்பாய்ப் பூட்டல்
துளங்குபன் னிரண்டா மாண்டில் வாண்முதற் றொழில்ப யிற்றல்

வழங்குமங் குலமென் பானோ டிரண்டுயர் வளர்ச்சி வாய்ந்து
புழங்குகுங் குமம்நெய் பூழின் புழுகிலா மிச்சி லாசந்
தழங்குவாய் நுரையின் வாசந் தனுதமர் முனையிற் காற்றின்
முழங்குகாற் றூடி யாழி யரியென முனைத்தே நூன்னி. (௩க)

சொல்லிய புருவத் தொன்று துலங்கிய நுதலி லொன்று
வெல்லியற் புயத்தி ரண்டு விளங்குறு சிரத்தி ரண்டு
புல்லிய தொடையி னான்கு புகல்சுழி பத்து மொத்த
நல்லியற் குதிரை யேற்றம் நலார்களின் மனம்போற் கற்றான்.

மருவிய முன்பு யர்ந்து பின்புதாழ்ந் தழகின் மன்னிப்
பொருவிறற் றுதிக்கை கால்கள் கொம்புவால் பொருந்து கோசக்
கருவிதாழ்ந் தருவி போலுங் கடம்பொழிந் தசைஇம நக்கா
திருவிழி கனற்கான் றோங்கு மெறும்பியேற் றத்துந் தேர்ந்தான்

போற்றுமைங் கணையை மீறும் புரவிபூண் டியர்தே ரோர்ந்தான்
நூற்றினம் பானி டால்க ணாறுநா றுளகற் றுடை
யீற்றினைப் பொதிந்து செம்பொற் சரிகையார்த் திலங்கு தூவி
யாற்றிகழ்ந் தொளிம ணிக்கொ ளழகுதேர் நடாத்த னன்றால்.

உ௮. வாசிகை-மாலை. இது நாமமாலை(அகவலடியும் கலியடியும் வந்து மயங்கிய வஞ்சிப்பாவால் பாடுவதும் சொற்சீரடியென்னும் கட்டுரைச் செய்யுளாற், குலமுறையிற்செய்தகீர்த்திமைப்பாடும் மெய்க்கீர்த்திமாலையும் ஆகிய இவற்றிலொன்றுப்போலும்) ௩க, பூழின்-பூழியின், சண்டுப்பூழிபூழ்என நின்றதுபோற்றது, இவாசம்-பொரி, உன்னி-குதிரைகளில், ௩௨, நடால்-நிகழ்த்தி,

வேறு.

இலங்கிய வில்லசி யீட்டி சக்கரங்
கலங்கிடுந் தண்டுவேல் கருவி முற்றவுந்
துலங்கிடும் பல்படை சூழ்சி லம்பமல்
வலங்கிளர் முதன்மைகொள் வளத்த ஞயினுன். (௩௫)

எண்ணனன் கெழுதலோங் கிலைகிள் ளன்மலர்
வண்ணமாத் தொடுத்தன்மா டகப்பண் வாசித்தல்
பண்ணலைந் தொழில்கைவிற் பனம்ப யின்றன
னண்ணல்கைச் சித்திர மகில மெச்சுமால், (௩௬)

பரந்தபார் மலைவனம் பவ்வ மாறுக
ணிரந்தமாப் போய்வர நிறைவன் பாக்கமார்
தாந்தமா யாசம்ப்ர தாயஞ் சாலநூ
லாரந்தரு தத்துவ வுணர்வுந் தேர்ந்தனன். (௩௭)

யோகினி சாலமோர்ந் துருவங் காட்டலும்
வாகினி வென்றிவர் வலிமை நாட்டலுஞ்
சாகினிக் கடாவிருல் சார்ப தாயுதம்
பாகினித் தாட்டிவெல் பதமு மோர்ந்தனன். (௩௮)

விழித்துள போதினு மெய்ம யக்கிவாய்
வழித்தரு முறையிலா துறங்கன் மானவாழ்
வழித்திவர் மோகன மறிந்து ளான்புவி
பழித்திடாத் தொடர்வசி யமும்ப டித்துளான். (௩௯)

தந்திரந் திகழ்மனத் தைரி யஞ்சிறந்
துந்திகல் கீழ்ப்பட வுறுதித் தத்துவப்
புந்திநன் றுற்றனன் புரியும் பேதனம்
மந்திரம் வைப்புகள் வரித்தல் கற்றனன். (௪௰)

வேறு

உரைத்திடுங் குய்யதந் திரமுடன் வெளிப்பட்ட வொன்றை
நிரைத்திவண் மறைந்தலு நெடுங்கலை வித்தையாம் வாதம்
வரைத்திரு மதனவித் தையுங்கலா சாரமும் வயங்க
விரைத்திவர் வருணவித் தையுமிகக் கற்றனன் விரைந்தே. (௪௧)

௩௫, அசி—வாள், ௩௬, இலைகிள்ளல்—பச்சிலைகளால்கிளிமுதலியனவ மைத்தலென்ப, மாடகம்—யாழ், நிரந்தமா—நெருக்கிடையாக, தாந்தமாயாசம் ப்ரதாயம்—கடல்போலும், மாயையாலுண்டாக்கும் விசித்திரவித்தையாகிய, ௩௮, யோகினிசாலம்—எளிசாலம், வாகினி—படை, சாகினிக்கடா—ஆட்டுக் கடா, இருல்—விடை, பதாயுதம்—சேவல். ௩௯, புயம்மோகனம்—ஆனைமயக்குந் தொழில், ௪௰, உறுதித்தத்துவம்—மனநிலைத்தத்துவம், ௪௧, குய்யம—இரகசியம்

வேறு

மண்டிய குண்டிகா மதம தென்பதும்
பண்டியல் குளிகையா விளமை பண்ணலும்
மிண்டிய வஞ்சன வித்தை செய்வதுங்
கொண்டியல் புதைபொருள் வெளிக்கொ ணர்தலும். (௪௨)

பாதுகை யேறியெண் படிக்குச் சேறலும்
போதுகைப் பாத்திரம் புறத்தோர் பாத்திரத்
தேதுகைத் தேறுவா வெனவ ரித்தலும்
கோதுறூர் நினைத்ததைக் குறித்துக் கூறலும். (௪௩)

விண்ணிய லும்பா காய வித்தையாம்
நுண்ணிய வுயிரின்மெய் நுழைந்து மீடலும்
திண்ணிய விரும்புமுன் சிலவு லோகங்கட்
பண்ணிய செம்பொனுப் படைத்துக் காட்டலும். (௪௪)

வேறு.

மந்தி ரத்தொடு கிரியைபா வனசத்தி வழியி
னெந்தி ரத்திறி யாவையு முணர்ந்தறி விசைகூர்
சந்தி ரன்குலந் தழைக்கவுந் துதித்தசண் பகனெனுந்
திந்தி ரன்பணி பாரக்கிர மத்தென்ன னிவனே. (௪௫)

வேறு

ஆறு முநும டுத்தகு டிப்பயி
ரேறு செங்நெல்வி ளைவிக்கு மிங்கிதன்
கூறு வாவியுங் கோயிலுங் கூவலும்
நாறு பூவனம் நாட்டிடுஞ் செவ்வியான். (௪௬)

உத்தி யானமு மோங்குமெண் ணுன்கற
வுத்தி யான வுபாக ளாகங்க
ளுத்தி யானவ முள்ளம னைகளு
முத்தி யானவ ளுதிய வாக்கமும். (௪௭)

ஆற்ற லைத்தலை வாழையு லாவெயி
லாற்ற லைத்தலை வானைய ளிக்கவே
யாற்ற லைத்தலைக் கொண்டவ ருந்தவத் (௪௮)
தாற்ற லைத்தலைக் கொண்டவச் சாயையும்

௪௨, குண்டிகாமதமது—குடமெனப்படும்மாயோனுடன்மதமது, ௪௩, போதுகைப்பாத்திரம்—மலர்போலும்விரிந்தகையாகிய பாத்திரத்தினிடத்து, எதுகைத்தேனும்—எத்தகையபொருளாயிருப்பினும். ௪௭, உத்தியானம்—பூந்தோட்டம், உத்தியான—செல்வமாகிய, அகளாகங்கள்—நிட்களமாகிய அறச்சாலைகளும், உத்தியால்—அறிவாலமைக்கப்பட்ட, உத்தியானவன்—சொற்றிருவி(புகழிலக்குமியி)னுடைய. ஓங்கும்எனக்கவியைமுடிக்க,

அஞ்சு மஞ்சத் தரிவைய ராடவர்க்
கஞ்சு மஞ்ச வகையுண வாற்றலு
மஞ்சு மஞ்சு மறிவுடை வைமந்தர்தா
மஞ்சு மஞ்சு மழகுற வார்ப்பவும், (௪௯)

கன்னி பாதம்ப ராவிக்கங் காநதி
கன்னி காசி முழுவதுங் காப்பவன்
கன்னி யானதி வீரங்கு லந்தருக்
கன்னி யாயப் படிச்செயக் கற்றுளான். (௫௦)

கண்ட மட்டொளிர் தாமர் மணிமுடி
கண்ட மட்டமா ராகை மெலியவே
கண்ட மட்டகற் றுந்திறற் கட்கத்தான்
கண்ட மட்டதி சைக்கொரு காவலான். (௫௧)

மாத ராசை யகற்றிம னுமுறை
மாத ராசை மணிமுடி வைத்தவன்
மாத ராசை யுலகின னென்னினு
மாத ராசை நிகருரை வாக்கினன், (௫௨)

கன்னல் வில்லி கனற்கண் கடாவுமுன்
கன்னல் வில்லியன் கட்டழ காயினன்
கன்ன லாடகக் கொங்கைக லந்துளான்
கன்ன லிற்கலை கற்கும கிழ்ச்சியான். (௫௩)

காம னுடுநிம் பத்தொடை கட்டியே
காம னன கவுரிய னைந்தருக்
காம னன கடவுள்சிங் காசன
காம னுமென் றிருந்த கருணையான், (௫௪)

சேல னுடல் புரிதிரு மேனியான்
சேல னுடர் திரையிடு சீரினன்
கோல மானவன் காத்தருள் கொள்கைபோற்
கோல மாநிலங் காக்குஞ்செங் கோலினன்: (௫௫)

வேறு.

இன்னவா றியற்றியே யியற்செங் கோன்முறை
மன்னவா வியகுடி வளமு மாசிலாத்
தன்னவா வுளமகிழ் தரணி யோரெலாம்
பொன்னவா விருக்கையரய்ப் பொலிந்த காட்சியால், (௫௬)

௫௫—சேலன்—காட்சிக்குளியனுகி.

ஒருவருக்கெவருமே யுறவிற் கூடுவா
ரொருவருக் கெவருமே யுதவி செய்குவா
ரொருவருக் கெவருமே புண்மை கூறுவா
ரொருவருக் கெவருமே யுயிரி னிற்பால். (௫௭)

ஆதவி னிங்கக ராசு மப்படிக்
காதலி னின்றுபார் காக்குங் காவலா
லோதலிற் கொடுமையிங் கொன்று மில்லையா
யீதலின் னுரையுயிர்க் கிரக்க மோங்குமே. (௫௮)

அவனியி லிவணா சாக்கம் போலவே
தவநிய மத்தரா மனித்தர் சார்ந்தனர்
எவர்நிதி குன்றினு மீன ராயிலார்
சிவநெறி யோங்கலிற் சிறந்த தின்பமே, (௫௯)

தேசுறு மந்தகர்ள் சிலர்வந் தோங்கலில்
வீசுதக் கைமலை விடர்கைச் சாரலின்
மாசுரத் திறங்கியே மறித்து முக்கிமுன்
னீசுரன் வைகைநாட் டினிற்செய் தென்றனர். (௬௦)

ஆசது கேட்டமைச் சாசற் கோதினன்
வாசகந் தேர்ந்துகை மலைக னுட்டினிற்
காசனஞ் செயற்கிறங் காமற் காப்பது
தேசமன் கடனெனச் சிந்தித் தானிறை. (௬௧)

பொருக்கென வடுபடை பொழியுந் தானையோ
டுருக்கெடுத் திடுந்தழ லுருக்கும் வேல்களோ
டருக்கெழாக் கபக்குழா மறவி லக்குவான்
றிருக்கெடித் தலத்துமன் செல்ல லாயினன். (௬௨)

வேட்டமா டுவன்கொலோ விஞ்சை வல்லமன்
காட்டகக் கயமெலாங் கனிந்த ழைத்தநம்
நாட்டடா துரையுவா னுகத் தோட்டுமோ
கூட்டமார் தானைகாண் குவமென் றுற்றனர். (௬௩)

௫௫ சேலன்-காட்சிக்குளியனுகி ௬௦ ஓங்கலில்-மலையினின்றும் விடர்கைச்சாரலில்-காட்டுப்பக்கமாகிய மலையடிவாரத்தில், மாசுரம்-பாலைவனத்தில் ௬௨ அருக்கெழா-அஞ்சுகையுண்டாகாமல், கெடித்தலம்-சேரற்கரியவிடம்.

போயினன் கடவுக டொருப்பு மைக்கையு
சாயினன் வரித்தனன் றடையிட் டப்புறம்
வாயினன் மறைமதில் வளைந்து நீயிரங்
கேயினற் பிழைபவ ணிருக்கென் றிட்டனன். (௬௪)

வேறு.

கல்லெனவு வாக்குழமன் கட்டளையை யேற்றே
யொல்லென மலைக்கணிவர் வுற்றனவொ துங்கி
செல்லெனவெ றித்தவொரு தெள்ளியது ருத்து
வல்லெனவி றங்கபிற வாழ்ந்தனமை றைந்தே. (௬௫)

எட்டினப டைத்திரளெ ழுந்தமத யானை
முட்டினகு ழாத்தொரிமு ழங்கியல றித்தான்
கட்டினநெ ருங்குபடை கைக்கொடுபி டித்தே
வெட்டினம ருப்பொடுகை வேழம்விழ வென்றே. (௬௬)

ஆனையின்கு ழாத்திவிதொ ரானைமத மீறித்
தானையினெ ருக்கடித ணைந்துமலை யேறிச்
சோனைபின்வ ளத்தபயிர் துன்னுமலை யாறாக்
கானையினி ழிந்துசெலல் கண்டுசெழி யன்றூர். (௬௭)

ஓடியக யத்தினைவி டாதுதொடர் வுற்றே
கூடியவ ளப்பில்படை கொண்டுதலை செய்ய
நாடியது கண்டசில வில்லாவ ணண்ணி
யீடியலி வேழமதை யாங்கள்விடே மென்றூர். (௬௮)

விட்டிடுதி சல்லதும வேந்தனொடு வந்திங்
கொட்டிடுதிர் போர்க்குவெல லும்மதெனி னீரே
கட்டிடுதிர் வேழமதை யல்லதுக டப்பீர்
பட்டிடுதிர் நிற்பினெனப் பார்த்திபன் மொழிந்தான். (௬௯)

அஞ்சலணி யூரினைய டுத்தனர்சில் வில்லர்
வெஞ்சலதி வெள்ளமென மீனவன்ப டைக்கண்
குஞ்சரம்வி டாதுசிலர் கூடினரி ருந்தார்
வஞ்சியதி பன்வினவி மந்திரியொ டோர்ந்தான். (௭௰)

௬௪ கடவு-வழி. ஊசானன்-ஆராய்ந்தன், மறைமதில-மந்திரக்கோட்டை ௬௬ ஒரீ-ஒரீஇ (நீங்கி) ௬௭ கானேயின்-காட்டாற்றின், செழியனூர்-பாண்டியன்படை ௬௮ தலைசெய்ய-விலங்கிவிட, வில்லர்-சேரன்படைகள் (சாணவர்)

குஞ்சரம வாய்வரின் கொடுக்குநினை யெள்ளி
மிஞ்சியகொ டிப்படையின் மீனவனை வெங்கண்
டஞ்சிநெறி யோருமறி வாக்கன்முறை யென்றே
கொஞ்சமதி நூலறிஞன் கூறினனென் செய்வான். (௭௧)

மன்னவனெ னச்சொலிம தித்தகள கர்த்தர்
பன்னலையு ளேற்றுரைசெய் பண்புணர்வி லாத
தென்னவனை வென்றிடுவல் சீக்கிரமெ னுங்கே
வுன்னதப டைத்திரளை யுய்த்தனனெ ழுந்தான். (௭௨)

வல்லவனெ னப்படுப ராக்கிரம மாறற்
கொல்லவுள குஞ்சுபடை கொண்டிவர்வன் சேரன்
செல்லதிர்த லொத்திகலல் செய்பறை முழக்கிச்
சொல்லருவ லாண்மைகொடு தோன்றினன்முன் வந்தான்

பாண்டியகு லத்தநிப ராக்கிரம நின்பேர்
காண்டியகி லத்தொடுக டாகமுந டுங்கத்
தூண்டியயு தப்படைசு டர்க்கதிரொ றிப்ப
வீண்டியடல் செய்வலென மந்திரிபி சைத்தான். (௭௪)

மந்திரிசொல் செண்பகமன் வாங்கியுளு கந்து
தந்திரிமு ருக்கெனவ யங்குபடை தாங்கி
முந்திரிவ ளைப்புறமு ழுப்பரிசை யொன்னூர்
வெந்திரிய வோட்டினர் விளைத்தனர்வன் சாரி. (௭௫)

அன்னவழி கண்டுதிய னற்றலொடு முட்டத்
தென்னவனெ ருப்புதிர்சி ரப்படைக ளேவிப்
பன்னவமொ டொன்பதனி ரட்டிபடை பாய்மா
மின்னவெதிர் கென்றுதன மேய்படவி டுத்தான். (௭௬)

மீனவனின் வெம்படைகண் மேலமர்செய் வஞ்சிக்
கோனவனி மெச்சுறு கொடுஞ்சிலை வளைத்துத்
தானவரு மஞ்சவிட வஞ்சிதலை தத்திப்
போனகரு மஞ்சிலர்பொ ருக்கெனவு ரைத்தார். (௭௭)

௭௧ ஒல்ல-பொருந்த ௭௪ கடாகம்-அண்டகடாகம் அண்டத்தோடு அபுதம்-பதினாயிரம் ௭௫ முருக்கு-எதிரிகளை அழி, முந்திரிவளைப்புற-முந்திரியென்னும் எண்ணின் எழுத்தைப்போலவளைப்புற்ற

பஞ்சவனி ருக்குமொரு பாசறைம ருங்கே
வஞ்சவடி வாளொடுகை வேலொடும றத்தா
னெஞ்சவயி ரத்தொடுநி ணைத்துதிர மோட
மிஞ்சவகிர் வித்தனர்வல் வில்லர்நைவு றற்கே. (எஅ)

பேரிகைய ழுந்தொனிபெ ருக்கினர்மு ழக்கேழ்
வாரிகைபெ டுக்குமுகின் மானவரு சேரன்
சேரிகைத வற்கெதிர்து ஞருடவி ளேடைச்
சாரிகைதி ரிந்தநிச மர்த்தொழில்வி ளைத்தான். (எகூ)

எட்டினப டைகள்கொடெ திர்த்தவன்முன் வந்து
வெட்டினர்வன் மாறனின்வி யன்கொள்படை வீரர்
கட்டினப தாகைகைகொள் காலுருள்கொ டண்டாற்
கொட்டினதி ரிந்தமலை யாளர்குட ரோட. (அ0)

வஞ்சியர்சி னப்படைவ ளைந்ததனை மாறன்
மிஞ்சியமர் செய்குவன்மி லைச்சியப னந்தார்க்
குஞ்சியலை யத்தொடர்கொ டுங்கணை விடுத்தா
னஞ்சியத டக்கியவ னைங்கணை விடுத்தான். (அக)

குஞ்சரந டுங்கரியெ னக்குலவு மாறன்
வெஞ்சரமெ டுத்தெறிய வில்லவனும் வில்லே
வுஞ்சரத மர்கவுட லூறுசெய விட்டான்
வஞ்சரக லங்கிழிய வாள்வழுதி யெய்தான். (அஉ)

வேறு

கடுமுட்கொடு கைதவன் கனலுக வெய்தான்
விடுமுற்கர வில்லவ னெல்லையின் மீண்டே
வடுமுற்றிட வூறுசெ யப்பினை வாங்கித்
தொடுமுச்சியி னின்றுமா லையின்வரைத் தூர்த்தான். (அங)

பாபத்தழ விட்டனன் வஞ்சியர் பதிமாக்
கோபத்ததி கோரசெ டும்படை குலைய
வாபத்தனை விஞ்சையி னம்புபொ ழிந்து
தீபத்தவிர் செண்பக பாண்டியன் சிரித்தான். (அச)

உதியப்பெரு மன்னனு மோடியொ ளித்தான்
கதியற்றன னென்றுக ருத்தழி வுற்றே
மதியக்குல மன்னவன் வஞ்சியின் மாழை
பொதியத்திரள் வைப்பிடை முத்திரை போக்கி. (அரு)

அங-கடுமுள்-நஞ்சூட்டியமுட்படை. முற்கரம்-சம்மட்டி, படைக்கலம்.

குடகத்துள செம்பொனும் வல்லவர் கொள்ளை
கடகத்தொடு முடுகுகள் சங்கிலி கவரி
படகத்திரை சேனைகள் கைமலை பாய்மா
வடகத்திரள் வரிசைக ளத்திர மனைத்தும். (அசு)

வேணத்தகு பணமுள முற்றவும் வேறு
பூணத்தகு பாயிழை பொன்மணி முற்றுங்
காணத்தகு மத்தனை யுங்கொடு காவின்
நாணத்தனை பூட்டின ஞகனை மாறன். (அஎ)

அமராற்றிடை கூடிவ ரும்படை யற்றைச்
சமராடியி றந்தவர் தந்தலை மீதே
குமாரவல்மி லங்குப ரிக்குழு வேற்றி
நமராமென வூர்ந்துந யந்துந டப்பார். (அஅ)

வேறு

மஞ்சலி வர்குட மன்னன்
எஞ்சலி லடிமுந் தேத்த
வஞ்சலி னூர்தொழ வண்ணல்
வெஞ்சலி லத்தனில் விட்டான். (அகூ)

கூடலி னூர்த்தகு மாமுங்
தேடலி லாப்பொருட் சேர்வும்
வாடலில் வென்றிவ ளத்தா
ராடலின் மாறனணைந்தான். (கூ0)

பாண்டியின் பாண்டியின் வந்து
வேண்டிய வென்றிவி ழாக்கொண்
டீண்டிய சீர்கொ டிலங்கி
யாண்டிவர் விந்தைய டைந்தான். (கூக)

அசு-வல்லவர்-கொள்ளை-சேரனைவென்றவல்லவராகிய பாண்டியன் படைகள் கொள்ளையாக. கடகம்-கங்கணம். முடுகு-மொடு அது, வெ[illegible] மதியாகவரும் கைப்பணிசங்கிலி-வீரசங்கிலி-படகத்திரை-திரைச்சீலை வட கம்-மேலங்கி, தோற்பரிசை-வரிசை-பெருமானப்பொருள். அத்திரம்-ம[illegible] திரபாணங்கள். அஎ-காகளை-மலையமானை அஅ-குமார் அழியானை[illegible] யுடைய. நமராமென-கண்டோர் எமன்மாரென்று சொல்ல அகூ-ம[illegible] மேகத்தாலுண்டாமிருட்டு.வெஞ்சலிலத்தன்-விரும்பப்பட்டதண்மையுடையனை.

வேறு.

மதிசெய பராக்கிர மனான பேரினைத்
துதிசெய நாடெலாந் துலங்க நாட்டினான்
திதிசெய வசந்தமா டமும்வண் செச்சையும்
விதிசெய வேலினான் வியப்ப வாழுவான். (கூஉ)

அரசரின் மதிப்புற வடல்செய் தானையான்
முரசதிர் முன்றிலான் முதிய முத்தமிழ்
பரசதி மதுரவண் பாடல் வல்லவன்
சரசசல் லாபன்பேர் தழைக்குஞ் சீரினான். (கூங)

துட்டரை யொடுக்குமுத் துங்கன் வாழறச்
சிட்டரை வளர்த்தவர் சிறப்பச் செய்தவன்
கட்டரை யுதவியாற் களிப்பிப் பான்பல
பட்டறை யவ்ரவர் பணிசெய் விப்பவன். (கூச)

தருமமே வளர்ப்பவன் றரைவ ரம்பினுள்
வருமனு நெறிபுரி வலான்பல் லாலயந்
திருமதின் மண்டபஞ் சிகரி வீதிக
ளொருமனப் பட்டிவர் வுறச்செய் மாதவன். (கூரு)

ஆலய பூசனை யாறு காலமாங்
காலையு தயமுச்சி யந்தி காலநான்
மேலைபி ராவரு வேளை யாமிரண்
டேலதி னாகமத் தியற்று விப்பனே. (கூசா)

திருதியில் லறந்துற வநஞ்செ ழித்திடக்
கருதிநல் லறவனாக் காக்குங் காவலான்
விருதிவ ரிவனைநேர் விபுலை யில்லெனப்
பருதியின் வாழுவான் பாண்டி மன்னனே. (கூஎ)

செண்பகபாண்டியன் உற்பத்தியாட்சிப்படலம் முற்றிற்று.

ஆகப்பாட்டு ௲கூசஉ

கூஉ-செச்சை-மாடத்தின் மேன்மாடம், விதி-அமைத்த கூங-சரசசல்லாபன், இனியகுணத்துடன் அளவளாவிப்பேசுபவன் கூச, உத்துங்கன்-மகத்துவன் கட்டரை-எளிமையினாற் கட்டுப்படுபவரை பலபட்டறை-பலப்பட்டுவரையறுத்திருக்கப்பட்ட, தொழிற்குடிகளை கூசா-ஐதின்-அழகிதாக கூஎ-திருதி-துணையாகிய விபுலை-உலகம்

இருபத்தாராவது

செண்பகபாண்டியன் குளிகை பெற்ற படலம்.

செண்பக மாறன் றோன்றித் திறனுறு மாட்சி செய்த
தண்பகா மாண்பு சொற்றூந் தகவுறு மவன்மே லன்பா
வண்பகர் பன்னி ரண்டு வளத்ததோ னுடையோன் பூசை
பண்படப் புரிந்து பெற்ற குளிகையாற் படர்சீர் சொல்வாம். (க)

இந்திர போகம் போனு மிருநிதிச் செல்வ மோங்கி
முந்திர தாதி நான்கும் முறைசிறந் தானை நீட
மந்திரப் பளிங்கு மாடம் வளரொளி விமானப்பந்தி
சந்திர காந்தக் கோயில் சார்கதிர் பருதி காட்ட. (உ)

சவுரிய. மிகுந்த செங்கோற் றரையெலாம் புகழ்ந்து போற்றக்
கவுரியர் முறைமை தாங்கிக் கருகலர் திறைக ளுய்த்துச்
செவுரிய கழலிற் றாழத் திறல்புரிந் துலகங் காக்கும்
பவுரியன் பராக்ர மப்பேர்ப் பஞ்சவன் மகிழ்ந்து வாழ்வான். (ங)

அயலவர்க் கொருதாய் போனு மாருடற் குயிரே போனுங்
கயலவிர் விழிநல் லார்க்கோர் காமனே போனுங் கல்விச்
செயலதிற் கும்பன் போனுந் தெருட்சியிற் சேடன் போனு
மயலறு செண்ப கப்பேர் வழுதியா மவன்வாழ் நாளில். (ச)

வேறு

திருவிந்தையி னுறைமாண்வழு தியினோங்கரண் மனையிற்
குருவிந்தம லையின்மன்னிய குலமேடையி னுள்புக்
கொருவிந்தென முருகோன்முனி யுருவங்கொடோர் நாளின்
வருவிஞ்சைம ணமளிப்புடை வளர்வான்விளை யாட்டால். (ரு)

க-தண்பகா-சாந்தத்தால் பிரிக்கப்படாத, வண்பகர்-மிகுதியாகச்சொல்லப்பட்ட ங-செவுரிய-செம்மையான உரிமையுள்ள, பவுரியன்-சைவவேடத்தையுடையவனாகிய ரு-குருவிந்தமலை:செம்மணிமலை, ஒருவிந்து ஒப்பற்றநெற்றித்திலகம் வளர்வான்-கண்வளர்தல் செய்வான்

அருகக்கணோர் வயின்வேந்தனு மறுகோணுறு முக்கோண்
பெருகக்கமொ டிதழொன்றனின் பெரிதாமுறைப் பெழுதி
வருகந்தனை யழகார்கய வலிவள்ளியம் மைகளோ
டுருகன்பொடு நவவீரரொன் றுரைவாரையுங் கண்டே. (௬)

வருவான்றொழு தவனன்றுசெய் வழிபாடிவர் தற்பின்
பெருவாழ்வருண் முருகோன்கடி பெரிதும்பர வியதால்
வெருவாமகிழ் வுறுவேந்தனும் வியனாறி வமைச்சுந்
திருவாசமி தெவனுண்டிது தெரிவோமென வெண்ணி. (௭)

சென்றாதி செயமென்றுளந் தெளியாவிரு கடிகை
மன்றாவர் திசையெட்டினு மணமீதென் றறிவான்
பொன்றாணி யலைவார்பிற புதிதொன்றறி யாமற்
பின்றாழ்பரி சனம்விண்டனர் பெருமானது கேளா. (௮)

மனையுட்டெரி குவமென்றிறை மணிமண்டப முதலாச்
சுனையும்பிற தலமுற்றவுந் துருவித்திகழ் வனமார்
நனையுற்றொளி மலர்செண்பக நகையாரிரு வாட்சி
புனையுங்குட மலிகைமரு புகழ்முல்லைசெங் காந்தள். (௯)

வகுளம்பொலி காமஞ்சரி புவளம்மலி கைநீர்த்
தெகுளங்குள வரைமுண்டகந் திகழ்பிச்சிசெ வந்தி
முகுளங்கொடி மாநீர்செடி முழுதுந்தெரிந் தப்பால்
வெகுளங்கொழி யறவோன்றளிர் விரைவேர்களுந் தேர்ந்தான்.

தெரியும்வகை தெரிவேந்ததி செயமீதென வெண்ணி
விரியும்மொழி யறைமேடையின் மிசையேறினன் வெட்சி
சொரியுந்திரு வடிவேலவன் றுயில்பள்ளியி னருகா
வரியும்புகழ் முருகோன்விழி யதுதுஞ்சலி னமர்தல். (௰௧)

கண்டானுடல் புளகங்கொடு கால்ரேகைகை ரேகை
யுண்டாமழ குணர்வான்முடி யுறுகைகொடு தாழ்வான்
பண்டாரணன் முதலோர்திரு விளையாட்டதிப் படியோ
தொண்டானவை கொளவோருகன் றுணிவீதென நினைவான். ()

௬-இதழ்-பொற்றகடுகயவலி-குஞ்சரவல்லி (தேவயானை) ௭-முருகோன்கடி-முருகப்பெருமானுடைய திருமேனிவாசனை ௯-சுனை-அரண்மனையகத்திருக்குளம் ௰-வகுளம்-மகிழமரம் காமஞ்சரி-காயுருவி, நீர்த்தெகுளம்-புனல்நிறைந்த வரை-கரை முண்டகம்-தாழை-தாமரை முகுளம்-மலரும் வெகுளங்கொழி-அவ்விடத்துக்கோபந்தீர்ந்த ௰௧-வெட்சிசொரியுந்திரு- வெட்சிப்பூமாலையை மிகவணிதலாலுண்டாகிய அழகினையுடைய வடிவேலவன்-பாண்டியன்

முருகன்றனை யுருகன்பொடு முக்கோணறு கோணின்
வருகம்பம தில்குஞ்சரி வள்ளிக்கிடம் வலமுந்
தருகந்தனை நவவீரருந் தாழ்வேலனை யேத்தி
யருள்கண்டம னெளிதாவரு மதுதான்பணி யுருவால். (௰௩)

காவிந்தவி தத்தேதுயில் கந்தன்றிரு மெய்கொண்
டாவிந்தமென் முகமண்டல மாம்பற்றிரு வாயின்
வாவிந்தவொ ருண்டைவெளி வரல்போற்குகன் வழுதி
யுரவிந்தைகொண் டனன்வாயிலிட் டுயர்வான்வெளி யுகுத்தான்.

துயிலைத்தொலைத் தம்மாமுனி சொல்வாளெனை யெவரு
மயிலைக்கீட வியவேலவன் மாபானவ னென்பார்
குயிலைப்பசுங் கிளியைக்குளிர் புனலைக்கொழி பொருனை
கயிலைப்பொதி யிலின்மேவுவல் காலைச்சிறு சாலை. (௰௫)

செல்லுந்தின மிதிலேயுன தில்லுந்திய சிறுகால்
வெல்லுந்தளிர் மலர்காய்கனி விரைசந்தவி ருக்கம்
புல்லுந்தழை பொதிபாசலக் குளிராவது போல
வொல்லுந்தரத் தாலேயித னுள்பாமுமுற் றனமால் (௰௬)

என்றிவ்வுரை முனிபோதிட வெண்ணித்தமிழ் வழுதி
நன்றிவ்வுரை பெற்றேனென நகையாடிரு யந்தே
கன்றிவ்வுயி ருக்கோர்பா கதிகாட்டுதி யையா
வொன்றிவ்வுழி முருகாவென வுறுதாள்பிடித் தன்றால். (௰௭)

கிடந்தான்கிடந் ததுகண்டதி கேண்மைத்தவ முனியுன்
னிடந்தாழ்வில தாதற்கென திதணுவுறு குளிகை
கடந்தாமத மிலதாயுளங் கருதுந்தலஞ் செலவா
னடந்தார்தலிற் சேர்க்குமிது நல்கிற்றென நல்கி. (௰௮)

பொதியார்குறு முனிதாழிலஞ் சியின்வாழ்புகழ் குமா
னதியார்வமொ டணிமாவெனு மொருசத்தியை யருளத்
துதியார்கலி யதனாற்காந் தொலைநாளினி லேந்தி
விதிபாசம னஞ்செய்துபின் வெளிவிட்டனன் வேந்த. (௰௯)

௰௩-கம்பம்-நடுக்கம் அது-முருகனது திருமேனி, ௰௪ காவு—கள்ளமாக துயில்—தூங்குதல்திருவாயின்வாவு—திருவாயினின்றும் வருவதாகிய உரவிந்தைகொண்டனன்——உள்ளக்கிளர்ச்சியைத்தரும் ஆச்சரியமுற்றவனாகி உகுத்தான்—உறக்கத்தின் வெளிப்பட்டாற்போல முருகன் உமிழ்ந்துவிட்டான் ௰௫ மாபானவன்-தன்மையையுடையவன் குளிர்விக்கும் கயிலைப்பொதியிலின்—கயிலையினும் பொதியிலினும் காலை ச்சிறு—சிறுகாலையின் (விடியற்காலத்தின்) சாலை—பாதைக்கண்ணே. ஆசமனஞ்செய்து—உட்கொண்டு

அதனுதா மறையும்முனக் கருள்வேமென வருளி
யிதனுற்புவி வசியப்படு மெவணீசெல வெணினும்
புதனுவிமை கொட்டும்முனர் புகலாம்விணி ஞரூ
மதனுமென வடிவந்தரு மறைவீதென விண்டான். (௨௰)

எனதாரித ழூமிழாவெளி யினில்வீழ்குளி கையின்சீ
ரனதாரக நிகாரங்கெவு னத்துக்கதி கமதா
முனதாகுல மதுதீர்ந்திடு மொருவற்குரை செயலை
மனதாலறி கெனமாறனுக் கீந்தான்முனி மறைந்தான். (௨௧)

வேறு

ஈய்ந்திடு குளிகையை யெடுத்து மன்னவன்
காய்ந்திடு நவமணிக் கலன்கொள் காப்பினுட்
டோய்ந்தசெப் பிடைத்துகில் சுற்றிச் சூழ்ச்சியோ
டாய்ந்ததை வைப்பிட மறிந்து வைத்தனன். (௨௨)

மந்திரி தளகர்த்தர் மாருஞ் சோபித
முந்திரி கைப்பழ மொழிநல் லார்களுந்
தந்திரி மார்களுந் தபங்க வேழிசைக்
கந்திரு வருமொளி கண்டு நாணுவான். (௨௩)

மதுரித பாடலே யரம்பை வாசிப்பப்
புதுமது வேம்பலர்ப் புயங்கள் விம்மவே
விதுவளர்ந் தெனக்கலை விளங்க வோங்கியே
பொதுவினிற் பராக்ரமன் பொலிந்து வைகினன். (௨௪)

அறந்தரு மாசிப லதுவ மாமலே
கறந்தபாற் சீனியிற் கலந்து நற்குடி
சிறந்தொருப் பட்டுவாழ் செல்வ னுய்த்தனே
மறந்திடான் மறையணி மாச்செ பித்துளான். (௨௫)

தனியிர வெலாஞ்செப தவத்தின் முற்றியோ
முனிவன தருளினன் முனைத்து வந்தவோ
கனியணி மாசத்தி கலத்தின் றன்மையோ
மணிவலி யோங்கிமாண் வளர்த்த னயினன். (௨௬)

௨௰-அதனுதரமறையும்-குளிகையோடு அகத்தியனுக்கருளிய மந்திரமூல (அவக்க) மாகியமந்திரத்தையும், புதனு-அற்புதமுடையவனுக தேவனுக. ௨௧-கெவனத்துக்கு-சித்தாது கெவன குளிகைக்கு இது வான்வழிக்கொடு செல்லற்குக்கருவியாகச் செய்துகொள்வது. ௨௨-காய்ந்திடும்-எறிக்கும் ௨௪ விது-சந்திரன்,

பெரிதுமுற் றவமுளான் பிசகில் லாமலே
யரியபே றிவனதா யதீதக் காட்சியுந்
தெரியமேம் பட்டனன் சித்த னுய்த்திகழ்ந்
துரியவன் முதற்பிறர்க் குரைத்தி லாதுளான். (௨௭)

சொல்லின னுதிக்குமுன் றாவோர் நாளிறை
நல்லியற் குளிகையி னலந்தி ளைத்திடப்
புல்லிவாய்க் கொடுகங்கை போய்க்கு ளித்தான்
மெல்லிய பூங்கழற் றெழுவி ருப்பினன். (௨௮)

குளிகையின் வேகமேழ் குவல யங்களை
வெளிகையி னடிபோல் விரைவிற் காட்டிடத்
தெளிகையி னற்பராக் கிரம தென்னர்த்
துளிகையின் கங்கைபோய்த் தோய்ந்து கந்தனன். (௨௯)

அந்திவா னிறத்திறை யருள்வெண் ணீறணி
புந்தியான் சிவசிவ புகன்று வில்வமும்
நந்தியா வர்த்தமு நறிய கொன்றையுஞ்
சிந்திய மல்லியுந் தெரிந்தெ டுத்தனன். (௩௰)

சூடியர்ச் சித்தவண் டுலங்கு மூர்த்தனை
நாடியே சூழ்ந்தன னயந்து கண்டனன்
பாடினன் றாழ்ந்தனன் பணிதென் னற்கருள்
கூடிய சிவன்விடை மேற்கொண் டேற்றனன். (௩௧)

அருள்வடி வாம்விசா லாட்சி யம்மையோ
டருள்விட கண்டனுங் கிவர்தல் கண்டிறை
தெருள்விரீந் தன்புமீச் சிறந்து வாழ்த்தினன்
பொருள்வளம் பலவரம் புரியப் பெற்றனன். (௩௨)

செய்யனு முத்தர காசித் தேவிறை
யுய்யலாம் படிபுரிந் துவண்ம றைந்தனன்
வையமாள் செண்பக மாற னேத்தியே
மெய்யவாய்க் குளிகையால் விரைந்து வந்தனன். (௩௩)

மருத்தினு மதிகதி வாய்ந்து செல்திறற்
பெருத்திறை யுலகெலாம் பேண்செங் கோல்செலத்
திருத்திகழ்ந் தாசுசெய் தென்னன் சைவநூற்
கருத்தினன் சித்தனிற் களித்து வாழுவான். (௩௪)

---

௨௭ உரியவள்-மனைவி. ௨௮ சொல்லினன்-புகழையுடைய சூரியன் ௩௰-சிந்தியமல்லி-உதிர்ந்தபவளமல்லிகைப்பூ. ௩௧ மூர்த்தன்-விசுவநாதன்.

மடங்கலின் மடங்கிலா வலிய வாண்மைகூர்ந்
தடங்கல படங்கிட வடக்குஞ் சீரினான்
கடங்கவிழ் யானைவரம் பரியன் காத்தருட்
டடங்கடல் புயலெனத் தருஞ்செங் கையினன். (௩௫)

இனந்தனி வடகாசி சென்று செய்கட
னனந்தலின் முடித்துவந் தாசர் வாழ்த்திட
மனந்தனி லதிசய மகிழ்ச்சி யேகொடு
கனந்தழைத் தாசுசெய் காட்சி யோங்கினன். (௩௬)

பன்னிரண் டாண்டுகள் படிய றிந்திடாத்
துன்னிய கங்கைநீர் தோய்ந்து வந்தனன்
நன்னிய மத்திது நடக்கு நாள்களின்
மன்னியோர் மந்திரி மதியி னுய்ந்தனன். (௩௭)

இபம்புவன் வேந்தமந் திரியு மீரிரு
நயம்புரி தலமொழுங் கீகை நாற்கல்வி
செயம்புரி திறற்படைச் செழுமை நான்கரண்
வயம்புகு கணிதநூன் மன்னர்க் காவன. (௩௮)

ஆனவை களிலமைச் சாயு ழைக்குமோர்
நானவை தீர்மொழி நவிறு ணைவனால்
கோனவை யறிதராக் குலாமொ ருண்மையை
மானவை யத்துநின் வயமு ணர்கிறேன், (௩௯)

எனக்கதை யுணர்த்துகென் றிறைஞ்சி வேண்டினான்
மனக்களி கொடுமனென் வலக்கை யேயெது
முனக்கொளிக் கிலன்சொல லுளத்து வைத்தியென்
றினக்குகன் செயல்பொது விசைத்திற் கேகினான். (௪௰)

மந்திரீ மகிழ்ந்துற மன்னன் றேவியா
மந்திரி சவுமியில் லவதி யென்றபேர்த்
தந்திரி போன்மொழித் தாய்க திர்மகள்
சந்திரி கையினிது தலைவற் கோதுவாள். (௪௧)

கலைகளெட் டெட்டுநீ கற்ற வல்லவன்
கொலைகளி களவுபொய் குருத்து ரோகிக
ளிலைகடிந் தானுத ளிருபர் தங்கடன்
மலைகடந் தலைகடந் தடுமொய் வன்மையோர். (௪௨)

சார்ந்தடுவ லாரிடைத் தடுமொய் வன்மையோர்
தீர்ந்தறை யிவரிலார் திருவ ரென்றனள்
சோர்ந்தவ ரடுசமர் தொடங்கி லார்புரிந்
தார்ந்தசீர் நாட்டுவோர்க் ககில மஞ்சுமால். (௪௩)

திக்குவெல் வயத்தவர் இருவர் சேரனை
யுக்குற வென்றதா லுந்தை யென்றனை
மிக்குகந் துன்றனை வேட்ட ளித்தனன்
புக்குயர் வூன்றுபின் பொறுமை வேண்டுமால். (௪௪)

என்றலு நாதநிற் கிகல டக்குந
னன்றமைந் துள்ளமை நாட றிந்ததான்
மன்றமைந் தினியிறை மலர்ப்ப தந்தொழ
லொன்றதே தவமென வுரைத்தி யென்றனன். (௪௫)

அறிவுய ருனைமனை யாவ டைந்ததாற்
குறியெனக் கெதோவதே குறித்துக் கூறினை
நெறியினி யதுபுரி நிலைநிற் பேமெனப்
பொறிவலா ரழைத்துசாத் புரிய நாடினான். (௪௬)

நிகமமா கம்முப நிடத வல்லவர்
தொகவரத் தலமுதற் றூய முப்புகழ்
துகளறு காசிபோய்ச் சுரகங் கைபடிந்
தகவிசு வேசனை யர்ச்சிப் பாமென்றார். (௪௭)

மனைவியோ டரசுசாய் மகிழ்ந்த மர்ந்தனன்
நினைவினு டொறும்து நேர்ந்தி யங்குற
றனைவிரி யாதுவேள் சாற்று மானையா
வினைவிலா மறைத்தா சிருந்து வந்தனன். (௪௮)

ஆசியெத் தலத்தினு மதிகங் காசியே
பாசுதீர்த் தங்களிற் பரமங் கங்கையே
சாசமார் விசுவநா தன்மிக் கோனதால்
விரசலிற் செலமனை வேண்டி வைகினாள். (௪௯)

இவ்வணந் தனித்தனி யெண்ணி வேந்தனு
மொவ்வா சியும்பொழு தோட்டிச் சிலபகல்
செவ்விது கழித்தனர் சிறந்து வாழ்ந்தன
ரவ்வணங் கூடகா ளாகு மட்டுமே. (௫௰)

செண்பகபாண்டியன் குளிகைபெற்ற படலம் முற்றி[illegible]

ஆகப்பாட்டு ௩௬௯௨

---

௪௭ நிகமம்-நிச்சயம். அர்ச்சிப்பு-ஆமென்றார் அர்ச்சித்தல் [illegible] என்றனர் ௪௮ அரசுஉசாய்-அரசனுங்கேட்டு

இருபத்தேழாவது

செண்பகமாறன் காசி கண்டபடலம்.

காசி கண்டுசுழி னைக்க ணுட்டமுறு நற்றவங்கைகொடு நாடொறு, மாசி கண்டுவி சுவேசன் பூசைசெய்தடக்க மார்குளிகை சேய்தா, நேசி கண்டுபெறு காதையீ தினியங் நிம்ப மாலைபுனை செண்பகன், காசி கண்டதென னென்றபேர்கொளொரு காதை யைக் கனிவோ டோதுவாம். (க)

காதை கேட்டதவ ரன்பு மல்கியுவ கைசி றந்தனர்வ ணங்கினர், கோதை வில்வவதி யாய சௌமியொடு கூடிமாறன்வடகாசி போய், மாதை யோர்புடைகொ ணுதன் சேவைபுரி வண்ணநன் கருள்கவென்றனர், மேதை யோர்நசையை மெச்சி மாதவனும் விள்ளு வான்களிசி றந்தரோ (உ)

பருதி கீழ்த்திசையெ ழும்பு முன்னரெழு பாண்டி யன்குளிகை யின்றுணை, தருதி றங்கொடுபு குந்து காசியின்வி சால நேத்திரித வேசனைக், கருதி யேத்திவா லோர்கி லாவாசிகணவ னின்பொடுரை காலையில், வருதி றந்தெரிய வாவி ;போய்மதியம் வருத லென்னையென வேண்டினாள். (ங)

வேறு

மந்தி ரத்தையும் மனைவியர் சுகத்தையும் வைப்புச்
சந்தி ரத்தையும் தனதுமா னத்தையுந் தகைய
வெந்தி ரத்தையு மந்திரி சொல்லையு மிகல்செய்
வெந்தி ரத்தையு முடையது விளம்பல சென்றான். (ச)

நயப்ப தைத்தெரி வியாமையி னாசியுண் ணுணி
யுயப்ப தைப்பறத் தெரிவலென் றன்றுவிட் டொருநாள்
பயப்ப தைந்தரு வினுமுய ரனதொரு பதியே
வியப்ப தைமறை யெனச்சொலா விடின்விடே னென்றாள். (ரு)

மன்னன் மேலுமம் மறைசொலொண் ணுதென மறுத்தான்
சொன்ன தால்வருந் தோடமென் சொல்லெனத் தொடர்ந்தாண்
மின்ன ளாரி வன்புதேர் தென்னன்செவ் வேளி
னன்ன ராணையவ் வாறுள தென்றன னயந்தாள், (சு)

க-ஆசிகண்டு-வாழ்த்துதல் செய்து, சேய்-முருகன், நேசி-அன்புடையவளுகி ச வைப்புச்சந்திரம்-புதையற்பொருள், எந்திரம் மறையெழுதிய கோணச்சக்கரம்வெந்திரம்-கொடிய வலிமை,

அன்று விட்டெனை யயர்த்துவே ளண்ணலை யாட்கொண்
டொன்று நன்மைசெய் தானதூஉம் பயனெனக் குதவு
மென்று கந்தன ளிருந்தன ளெனினுமவ் வுண்மை
நன்று ணர்வது கருதினள் சவுமியாம் நங்கை. (எ)

உறங்கு வாணிகர் விழித்துமே கிடந்தன ளுரியன்
கறங்கு மெல்லெழ வைந்துநா ழிகைக்குமுன் கதித்தங்
கறங்கு லாவுகை யாலொர்பெட் டியைத்திறந் ததன்கண்
பிறங்கு செப்பினுட் குளிகைவா யிட்டனன் பெயர்ந்தான். (அ)

மூன்றி னின்றுயோ கத்தனுய் மேலெழீஇ முதல்வன்
சென்றி யங்கினன் வடதிசை கண்டிலள் சிவச்சேய்
மன்றி ருத்தவங் கண்டருள் புரிந்தமை மதித்தாள்
நன்றி வண்குள மாடிவந் தாற்பொரா நடிப்பென், (கூ)

யாண்டு மென்றுளங் கருதின ளிருந்தன ளன்று
யாண்டும் போலவந் தாற்றினன் பூசனை யாசன்
வேண்டு வரன்வழித் தவன்வரு வேளையி லிங்கே
யீண்டு ருக்கரந் திறங்கிறை யுருவினுய்த் தினித்தாள். (ய)

சாயை யீண்டா சுலாவலி னிற்இயா சன்போய்த்
தூய காசிகண் டுடன்வால் வேளுடைத் தொழும்பா
னேயர் நேயனோர் குளிகைகல் லியதிற னிருப
னேய செய்தியை மறைவ்யன விஃதென விருந்தாள். (யக)

நித்தங் காசிபோய் வருமிறை நினைவுகொண் டெனைக்கொண்
டத்த லத்தையும் காட்டுமோ தொடர்ந்திடி னளியன்
கைத்த கற்றிடா னுட்கொளுங் குகனுநற் கருணைச்
சித்த னுகவி னியானிது செய்வலென் றாாத்தாள். (யஉ)

தூங்கு கர்விறை முந்திதன் முந்தியிற் றொடுத்துப்
பூங்கு யின்மொழி தூங்கினள் போன்றனள் கிடந்தா
ளாங்கு மன்னெழுங் கால்விழித் தனளெனை யழைத்துத்
தாங்க ளேகினல் லறனெனத் தாண்மிசைப் பணிந்தாள் (யங)

அ உரியன்-கணவன் கதித்து எழுந்து பெயர்ந்தான்-புறப்பட்டான் கூ. மன்றிருத்தவம்-அரசன் செய்தவல்லதவத்தினை நடிப்பென்-நடித்துக்காட்டுவதென்னை? ய வேண்டும்-விரும்பும், இனித்தாள்-மகிழ்ந்தாள், யக, சாயை-நிழலை, நேயன், அன்பர்க்கன்புளுகிய அந்தமுருகனேய-உடந்த, யஉ -அளியன்-அன்பன்,-

பைந்தொ டியுடை நுனிமுடிந் தெழுந்ததோர் பான்மை
முந்தொ ரீர்முறை கேட்டமை நோக்கிடின் முயன்று
வந்தொ ருப்படு நிலையெனத் தேர்குநன் மதிகூர்
நந்தொ ரன்புடை நின்றெறி வுரையென நயந்தான். (௧௪)

தெரிந்த நீர்மையை மறைத்திடா தறைந்தன டேவி
விரிந்த வன்புமன் முருகனை வேண்டியீ தென்னை
புரிந்து ளாயியா னுணர்த்திடா துணர்ந்தவிப் பூவை
பிரிந்தி லாளழைத் தேகுமா றருளெனப் பிறழ்ந்தான். (௧௫)

அந்த வேளைவேள் வந்தா சேயிவ ளறிஞன்
முந்த யர்த்ததா நினைந்தெனை முயன்றுனைத் தொடர்ந்தாள்
சிந்தை கொண்டிவட் கூட்டியே கெனவருள் செய்தான்
மந்தி ரத்துவன் மையினழைத் தேகினன் மன்னன். (௧௬)

தடத்த வாண்மணி கருணிகை தன்னிலே சார்ந்து
மடத்த மாண்புறு சவுமியைக் கொடுசொ னம்வாரி
யிடத்த யாவொடு கங்கைபுத் திரர்கா மேந்தத்
திடத்த வாவுறு மறைசொலி வீசினன் செழியன். (௧௭)

தருப்ப ணம்புரிந் தில்லவள் கைபற்றித் தைவ
விருப்ப கங்கையின் வாவியின் விதிப்படி மூழ்கிப்
பெருப்ப மாரற நெறிப்பட்டுப் பிறங்குநன் றனைத்துந்
திருப்ப யில்புயத் தென்னவ னன்பொடுஞ் செய்தான். (௧௮)

உந்தி யின்புற வருமுதற் சந்திகோ ளுளற்றி
நந்தி யின்றிரு வெழுத்துருக் காசிநா யகற்குப்
பந்தி யின்னமிழ் தாம்பல பலவகை படைத்துக்
கந்தி யின்கனி நறியதாம் பூலிகற் பித்தே. (௧௯)

ஆட கத்துகின் முன்புபோர்த் திபவான் றனக்கங்
கீட கத்துற நிவேதன வகைகளு மியற்றிப்
பாட கத்தடிச் சவுமியாந் தேவியாற் பண்பு
நீட கங்கையி னெல்லிபோ னிரப்பியின் பார்ந்தே. (௨௰)

௧௪ நின்றெறிவு-எவ்வாறுநீ தெரிந்தாயென்பதை, ௧௫-என். பிறழ்ந்தான்-என்று சொல்லலானான் ௧௭-தடத்தவாள்-பெருமையையுடையவொளி பொருந்திய, மடத்த-பேதமையையுடைய, இடத்தயா-விசாலமாகிய அருள், கொடுக்கவுண்டாகிய அருள் ௧௯-உந்தியின்புற- கடல்போலுமின்பமிக, கோள் -கோட்பாடு, கந்தி-கமுகு

ஆசித் தார்க்கருள் விசுவநா தனைப்பாணிந் தலையே
வீசித் தாழ்விலாக் கங்கையைத் துதித்தனர் மேலாப்
பூசித் தாரிரு வருமுனம் போலமே லெழீஇநன்
வாசித் தாரகக் குளிகையி னேடுமூர் வருவார். (௨௧)

வருவ ழிக்கணே வைகையின் றுறையயல் வருங்கா
லுருவ வோடரித் தடங்கணாள் பூத்தன ளுடனே
திருவ தின்தவக் குளிகையுஞ் செல்கிலா திறக்கித்
தருவ னத்துவிட் டிடவுண ரிருவருந் தளர்ந்தார். (௨௨)

ஆத னன்மையோ தீமையோ யாவர்முன் னறிவார்
நீதர் மேல்வந்துங் கீழ்ப்படு நிலைமைதா னென்னே.
வேத ரஞ்சகர் தமையிறை விளித்தனன் வினவக்
காத ரந்தொலைத் துயவழி கரைந்தனர் கண்டான். (௨௩)

தான மீவதுக் கிருந்தனன் சவுமியோ டிறைவன்
மீன நற்கொடி பறக்குமாங் கீரு விலக்க
மான, நாளிருந் தீறலமுழு கியபின னைந்தாம்
மான நாள்வர வதிந்தவன சொக்கனை வணங்கி. (௨௪)

பாண்டி யன்னுப வாசமச் சுந்தரன் பதப்பூ
வேண்டிக் காசிசெல் லாவழி யினுடொடர்ந் தியன்ற
தாண்டி ருந்தெணிக் கவலறமை யறிந்துமா பதிதா
னீண்டி யூர்க்கவண் காசிகா ணெனக்கனு விசைத்தான், (௨௫)

வழியு ணர்த்திலா மைற்றுயர் தீர்ந்திலன் வந்தான்
பொழியு ரத்திரை யிறைவியோ டெங்கணு புகுந்தான்
கழியு நான்குநா ளாவெனக் கலங்கியூர் கவனு
மொழியு ளம்புரா பொதத்தவன் பமைச்சரா முயல்கால். (௨௬)

நினைவ தாகிய மந்திரி தளகர்த்தர் நிலவூர்
மனைவந் தாமென வறிந்தது மகிழ்ந்துமுன் வந்து
முனைவ வேந்தருக்கு முதல்வநின் முகமதி காணு
தனைவ ரும்மகந் தேம்பினை மிவண்விட லாமோ. (௨௭)

௨௩-ஆதல்-உண்டாதல், காதரம்—தீவினையால்வருந்தொடர்பு. ௨௪ அறல்-புனல். ௨௬. உசா-ஆராய. முயல்கால்-தொடங்கும்பொழுது. ௨௭ மனை-அரசனை. முனைவ-இராஜருஷியே. அகம்-இதயகமலம்.

என்றி றைஞ்சிவேண் டினர்நிலை யறிந்துகந் திறைவ
னன்றி யன்றமை யனைவரு மறியவா டினனு
னன்றி யாரவர் மெய்யுணர்ந் தேகினர் நயந்தே
மன்றி னஞ்செலல் போற்செலா தமைந்தனன் மனையில். (௨௮)

இறைவ னூரடைந் தாங்குகாண் காசியென் றிசைத்தா
னிறைவன் பார்துணை யியின்றொடர் பாலிது நிகழ்ந்த
வறைவ ரரிவண் காசிகாண் வழியென வயர்காற்
றிறைவ ளத்தமன் யனத்தருட் செயலென்று தேர்ந்தான் (௨௯)

வளர்த வத்தர்வாழ் சண்பக வனத்துமா முனிவர்
கிளர்த போவனங் கிட்டினன் கேடின்மா தவத்திர்
தளர்தல் யானறத் தக்கணகாசிகாட் டுவாா
ருளர்த ராதலத் துமையன்றி யெனப்பணிந் துரைத்தான். (௩௰)

அத்த கைமொழி கேட்டனு முனிவரு மரசற்
கொத்த வன்பினு லருள்செய வும்பரி னொருசொல்
சித்த னுவல கேசன்வந் துனக்கருள் செய்வான்
னொத்த விர்ந்திடென் றனுங்கொண்டார் றவலரு முவகை. (௩௧)

வாய்ச்ச திங்கென முனிவர்பால் வணங்கினன் விடைபெற்
ஞச்சர் பத்துடன் வந்தன னரசனன் றிரவி
னீச்சு ரன்வர வேண்டியூ ணின்றிமெல் லணைநீத்
தோச்ச மேடையிற் றரைகிடந் துரங்கிலா னுனன். (௩௨)

உலக நாதனே காசிநா னிவ்வெனன வுரைத்தாங்
கிலக ருட்செய லாலிடங் காட்டுகென் றிருக்குந்
திலக செண்பக மாறனே சிவனெனக் தனனி
னலக னுவரு னினனெழுந் தருளினா னயந்தே. (௩௩)

மன்ன காசியி னிறக்கமுத் தியென நூல் வகுக்குந்
தென்னர் காசியிங் குளதுநீ தெரிகிலாய் போனு
மின்ன காசியே யிறப்பவர் பிறப்பவ ரிருப்போர்
நன்னர்க் காண்பவ ரெவர்க்குமே முத்திபை நல்கும். (௩௪)

௨௧ கிறைவன்பு-கற்பெனுந்திண்மை. ௩௰ மகள்-மகளுக்கு. உளர்த விட்டு-குரவையிட்டுக்கொண்டு. ௩௧ நொத்தவிர்ந்திடு-துன்பத்தினீங்கிவிடு ௩௨. ஓச்சம்-கீர்த்தியுள்ள.

ஒங்கு மாண்குழல் வாய்மொழி யாமுல கனையோ
டீங்கு மாண்குல சேகர நாதனு யிவர்ந்தே
நீங்கு நீர்குல சேகரத் தெனறகருள் செய்தேந்
தாங்கு சீரவன் மகவுநம் பெயர்கொடு தழைத்தான். (௩௫)

உலக நாதமன் மகள்குழல் வாய்மொழி யுலகா
ளிலக வந்தன ளவளையான் மணந்தவ னினிப்பத்
திலக னுமரு காயினன் மலைக்கொடி சிறப்ப
நலகண் வைத்தருள் செய்தன னமையெனே யயர்த்தாய். (௩௬)

மேற்றி லையரைக் காவதத் துள்மண விரிநீர்
மாற்கி ளர்ந்தசித் திரைக்கரை வளத்தசெண் பகக்கா
வேற்கி ருந்தவர் மேவுதென் காசியாங் கிருக்குஞ்
சூற்கி ளர்ந்தமை கண்டனுன் சொல்வது கேட்டி. (௩௭)

நாளை யிங்கிருந் தெறும்பொழுக் கொன்றவ ணடக்கும்
வேளை யின்றொடர்ந் தாங்குநீ வருதியேல் விளங்கக்
காளை யூரியாந் தோன்றிநேர் காட்டுது மென்றுட்
கோளைத் தேற்றியே கினனுடன் கோல்விழித தெழுந்தான். ()

வேறு.

இங்குதென் காசிவே றிருந்து மீச்சுர
னெங்குல தேவனு விருந்து மற்றவன்
பொங்குநம் பாலருள் பூத்துந் தேர்கிலா
தங்குநா டினனென தறிவென் னுயதே. (௩௯)

வேண்டுவார் வேண்டுவ வேண்டி யாங்கரு
ளாண்டவன் முருகனென் னவரவ ழிச்செயல்
காண்டுமாங் கெனக்கவாக் கதித்தனால் வலார்
தூண்டலி னுயதத் தொழும்பிஃ தீந்ததே. (௪௰)

என்றுமன் னெணிவிசு வேசன் றுடுதித்
தன்றுமந் திரிமுத லனைவ ருக்குமந்
நன்றுரைத் திவர்ந்திட நாடி னுனுடன்
றொன்றுராப் படையெலாந் துதைந்து நின்றனர். (௪௧)

௩௭-மால்-பெருமை. எற்கு-ஒப்புக்கு (எல்-ஒப்பு அது பொருத்தத்துக்கு எனப்பொருள் தரும்)

விந்த நன்னகர்க்கபன் மேற்கெ றும்பொழுக்
கெந்தவெல் லையிற்றொடர்ந் தெழுத லென்றும்போய்
வந்தறி விப்பவே வலரை விட்டனன்
சிந்தவர் பார்த்தறிந் திலர்வந் தோதினார். (௪௨)

வினைய்மயங் கினனிறை விவேகித் தெத்தவர்
சொனார்முத ளைவர்த் தொடர்ந்து வேண்டுவ
லெனவெழீஇ வேண்டினு னெழுந்தம் மாதவர்
முனைடந் தனர் தெனன் முகமலர்ந்தனன். (௪௩)

தொண்டக லாதமன் றொடர வின்புளங்
கொண்டமைச் சாதியோர் குழுமிச் சூழ்வரக்
கண்டன செறும்பொழுக் கதனைக் காதல்கூர்ந்
தண்டர்கோ னருட்செய லறிந்தி வர்ந்தனர். (௪௪)

வேறு.

சித்தர் கூட்டமோ சிவத்தொண்டாற்றுமாண்
பத்தர் கூட்டமோ பரிந்து சேறலை
யொத்தங் கூறெறும் பொழுக்குச் சித்திரைக்
கைத்த டங்கரைக் கண்பு குந்ததே. (௪௫)

எறும்பு போய்ப்புகு மெழிற்பு றைக்கய
லறும்புன் மேட்டில கம்மை வைகமாட்
டெறும்பு ராசியாக் கொளிப்ப முன்னுற
நறும்பு லந்தமா நந்தி கண்டனர். (௪௬)

பவள மல்லிகை பரந்த நீழலி
னவிர்சு டர்மயி லையின டிக்கணார்
புவன நாச்சிபாற் பூம்ப டர்கொடி
தவழ்நற் சண்பகத் தாருண் டோர்மடே. (௪௭)

நந்தி முன்னுள நவிலு மம்மடே
சிந்தி வர்பெரு வெள்ளஞ் செய்தது
முந்தி தூஉஞ்செயன் முதல்வ னடலே
யந்தி வண்ணனுட் டளர்ந்து சொல்வரார். (௪௮)

௪௬. அறும்புல்-அறுகம்புல்.

அமைச்சு மன்னனு பருந்த வர்முக
மிமைச்சு நோக்கின ரிருந்த வர்சிவன்
செமைச்ச ரண்மனஞ் சிந்தி யென்றனர்
தமைச்ச மாதிபிற் றுனிநீஇ யினோர். (௪௯)

சோதி யொன்றெழீஇத் துலங்கு மாபதி
சேதி யென்னெனத் திருமுன் றந்தன
னோதி நின்குறி யாங்கொ ளித்ததென்
றோதி வேண்டினு னுகந்து தென்னனே. (௫௰)

மதிவு ணின்றெழ வீர்த்துத் தந்தநி
னடிவு ருக்கரந் தனனெ னம்பனே
கடிவு றுந்திருக் களந்தன் பேனியை
யிடிவு ரக்கையா னெடுத்து நாட்டினன். (௫௧)

அருள் வளச்செய லறிந்து போற்றினன்
றெருள்வ ளங்கொடு சிவாக மம்பயில்
பொருள்வ ளந்தெரி புனித ராணிநீஇ
மருள்க ழன்றனன் மன்ன னென்றனன். (௫௨)

செண்பகமாறன் காசிகண்டபடலம்

முற்றிற்று.

ஆகப்பாட்டு ௲௭௱௪௰௪

௪௯. செமைச்சரண்-சேவடி

இருபத்தெட்டாவது

தென்காசித் திருநகராக்கிய படலம்

செண்பக பராக்கிரம தென்னவன்விசு வேச
னண்பொடுதென் காசிகண்ட நற்கதையு ரைத்தாம்
வண்படர்தென் காசிநக ராக்குவா லாறு
பண்பட்டவெ டுத்தினிது பார்மகிழ வின்வாம். (௧)

விந்தமனன் சொல்லுகதென் காசிநகர் மேன்மை
சிந்தையுற வென்னமுனி வோர்களுரை செய்வார்
முந்தமக வானுயர்மை நாகன்முனி வோர்கள்
வந்தருள்கோ டேகியவ ளத்ததுதென் காசி. (௨)

குற்றமில கத்தியற்கு ளிர்ந்திறைம ணங்கா
ணற்றல மம்மைகுழல் வாய்மொழிந பந்தன்
புற்றுலக நாதன்மக ளாய்பணமு கந்த
தற்பமின்ம லைக்கொடிய ளித்ததுதென் காசி. (௩)

இன்னவகை யேயருளி லங்கிடுதென் காசி
நன்னகரி லெத்தனைபேர் நாடினது பெற்றார்
முன்னவர முற்றுதவு முப்புகழ் சிறந்து
மன்னகர்பு குக்கியான் வாழ்தளிசெய் கென்றார். (௪)

ஓதலரி தென்னவனு ளங்களிது ளுப்பி
நாதனரு ணோதிந யப்பனிடை மூழ்கி
மாதலந னீர்குறிவ ரங்களைம தித்துக்
காதலுட னாரிறைவன் கற்கிசெய லானான். (௫)

அங்கிலைபி லிங்கமுயர் வாக்கியதி லீசன்
றன்னிலைய மாத்தகைய கெர்ப்பகிற கந்தான்
மன்னிடவ மைத்தனன்முன் மண்டபமெ லாஞ்செய்
துன்னியவ ணம்பாவு யர்ச்சியின்வ ளைந்தான். (௬)

நிருக்கணவி ருத்திமையவ யிற்றுதியை நீடு
வருக்கமுரு தாமசியை வாத்தவலை யத்துப்
பெருக்கமும தற்குண்டு விந்துநிலை பெற்றே
பருக்கமல சத்தியவை மன்னிடமு ளெண்ணி. (௭)

தேவிதலை தெற்கதுவ டக்கணிதி ருத்தாள்
பாவிதலை நீக்குறுவ கோமுகப தாந்தம்
மேவிதலை வற்றபுப மீப்பொலியு மத்தி
யாவிதலை பெற்றிடுச தாசிவம தாக (௮)

௪ அரண்வாழ்தளி-சிவாலயம். ௫ கற்கி-தேவர்கோயில். ௬.நிலையம்-தேவர்கோயில்

இன்னவகை துற்றமதி ணந்திகொடி யேறு
மின்னவள ராலையவி மானமிசை தூவிப்
பொன்னவம ணிச்சிகரி யூடுபொலி கண்டை
சொன்னவச னப்படிநன் னூலிகைது லங்க (௯)

வீதிகடி ருத்திவெளி மேடைவெளி யூடு
சோதிகவி னக்கமல மாலைதசம் வாய்தற்
காதிகத வங்களணி யாத்தெரிச னத்தார்
தாதிகனி வெய்துமுக சந்திரரு திக்கே. (௰)

அந்தரம ளப்பவள மார்நெடிய மாடச்
சுந்தரவெ ளிப்பிரபை வீசுசுடர் சொர்ன
மந்தரம திற்கதிர்கள் பன்னிருவர் மாறாத்
தந்தரமோ டங்கமைத றன்னைநிக ராயும். (௰௧)

மருவியுயர் வாமயில்வ ளைந்ததிசை வாய்தல்
பொருவிலிர விக்கொடியர் போதுமொரு பொற்றேர்
தருவிசையி டுஞ்சிறிய காறடவு கின்ற
திருவினொடு மேவதிசி றப்புறவ குத்தான் (௰௨)

ஈரிருதி சைக்குரிய காளிகளி ருத்தி
யீரிருதி சைக்குரிய சாத்தனையி ருத்தி
யீரிருதி சைக்குளக ணேசரையி ருத்தி
யீரிருதி சைக்குவடு கேசரையு நாட்டி. (௰௩)

பன்னருநன் மைகொடண்ட பாணியொரு பானுஞ்
சொன்னவடு கேசனுயர் சூலகரன் மேலா
மன்னருள்கொள் காலவயி ரச்சிவனோர் மாட்டும்
நன்னருற வன்பொடுந யந்துநிலை யிட்டான். (௰௪)

கன்னிசுதன் சுந்தரக யத்தன்செண்ப கச்சேய்
மின்வெயிலு கந்தபிள்ளை வேலவடியப்ப லச்சேய்
மன்னுமொப்ப னைச்சுதன்வ யங்கபிடே கச்சேய்
மின்னருள்மெய் கண்டபிள்ளை யெண்மர்பிள்ளை யாரும். (௰௫)

௯-கண்டை-பெரியமணிகள், ௰௫-கன்னிசுதன்- கன்னிதிசையிலிருக்கும்பிள்ளையார், சுந்தரகயத்தன்-சுந்தரவிநாயகர் (மேல்திசையிலிருப்பவர்) செண்பகச்சேய்-செண்பக விநாயகர் (இவர் வடமேற்றிசையிலிருக்கும் பிள்ளையார்) வெயிலுகந்தபிள்ளை-வடக்கு விநாயகர் அம்பலச்சேய்-பொன்னம்பலப்பிள்ளையார் (வடகிழக்கிலுள்ளவர்) ஒப்பனைச்சுதன்- அலங்காரப்பிரிய விநாயகர், (கிழக்கிலிருப்பவர்) அபிடேகச்சேய்-அபிடேகப் பிரிய விநாயகர்(தென்கிழக்கிலிருப்பவர்) மெய்கண்டபிள்ளை-மெய்கண்டபிள்ளையார் (தெற்கிருப்பவர்) இவர்திருவாடுதுறை மடத்துடன் சேர்ந்தனர்.

அங்கமணி மாலையென வாயளவ தாகிச்
சங்கமது டுத்தவட சானவிம ருங்காய்ப்
புங்கமலி பெண்ணெணொடு பூந்துறைகள் பத்தும்
பங்கமற மூழ்கிடமும் பாற்படவ குத்தான் (௰௬)

ஆகமமு ரைத்ததிரு பானொடிரு காலு
பாகமவை யொத்தபடி கோயிலின்ப ரப்பும்
மேகமது பூதபுத வொன்பதும்வி தித்த
வாகமலர் சேறைசிறு வாய்தலும டப்ப. (௰௭)

கிழுவமை யில்லதொரு கேணிலை பொன்மேரு
வாழுவண மாக்கியதின் வைத்ததென வோங்கி
யேழுவரை யுச்சியதி னேழுகுட மாக்கிச்
சூழுவகை யார்கதவ மேன்முகில்கள் சுற்ற. (௰௮)

சிகரியுயர் வித்தருகுசெய்த தெரு வீதி
பகரியலு றச்சதுர மாறெறிப டுத்தான்
மகரியல்பு றக்கொடிகொ டேர்முதல்வ குத்தான்
முகரிமையி ஞனகர முன்பினுயர் வாய்த்தே. (௰௯)

முன்னரும ருச்சகர்ப ராவுகுரு மாரிம்
முன்னவரு மன்னவரு முதுவணி கர்சீ
ரின்னவர்மு தன்மையவே ளாளரிவர் வாழு
நன்னருயர் வீதிகண லம்பெறவ குத்தான். (௨௰)

ஆதிசைவர் மாணவர்க ளாயமகர சைவர்
வேதியர்கள் வீதிகளு மேம்படவ மைத்தான்
போதியகு லாலர்சா லிப்பொதுவர் கீத
மோதிடுவ லாரியமு வச்சர்தெரு வாற்றி. (௨௧)

ஆறுமுரி யக்கடவு நீர்த்தடம னேகம்
வேறுமுக மாகவசி தீர்த்தமும் விளங்கக்
கூறுமுவ கைதருகு றிக்கொளறு பானுன்
கிறுமுறை யேயருளி ருந்தபடி செய்தான் (௨௨)

ஈசனையி லிங்கவிக வேசனையெ ழிற்கொள்
வாசனைசெ றிந்தமல ரர்ச்சனைவ ழங்கிப்
பேசனையி னுக்குமுரி மைப்படும பீட்ட
பூசனைபு ரிந்திடுபொ ருட்களைய ளித்தான் (௨௩)

மேகமுக டுறவி ளங்குபல சாலை
பூகமும னேககனி காய்பொலி மன்சாலை
பாகமுத சாலைபல பண்டநிறை சாலை
யாகமுறை செய்தலற மாடலிவர் சாலை. (௨௪)

ஆகியவி டங்கடோறு மானபொருள் வைத்தான்
போகியவ ணிற்செலவு பூர்த்திபெற மான
ராகியர்நி றீஇயினன விர்ந்தகரு வூலம்
பாகியர லாரதுகண் பார்வைகளில் வைத்தான். (௨௫)

பூசனைதொ டங்கிசிவ வேள்விபுரி சாலை
மாசறவ மைத்தனைதவ ளம்படவ னைந்தே
யீசரிடெ மம்மையுல காணல்விசு வேசன்
வீசருள்கொண் மன்கொணர்சை வாசிரியர் மேவி. (௨௬)

வேறு.

பொன்னி னீள்குடம் பூரிப்பர் நூல்சுற்றி
மின்னி னாற்றுமி ளிர்மலர் மாங்குழை
மன்னி நீடுமுக் கட்கனி வைத்ததிற்
பின்னி நாற்றிடு கூர்ச்சங்கள் பெய்தரோ. (௨௭)

தருப்பை மாலையைத் தாங்கிய பொற்குடத்
திருப்பை யேமெழுக் கிட்டுறை கோலமேர்
பருப்ப நீள்கத லித்தழைப் பானெல்லின்
மருப்ப நேரி வாலிதி னிட்டதன். (௨௮)

குடங்க ளாயிர மாயிரக் கால்கொண்ட
விடங்க ளூடுமெ டுத்துவைத் தர்ச்சித்துப்
படங்க டாங்குப டிம்மண்ட பத்தினி
விடங்க ளிட்டக்கி னிக்குண்ட மிட்டரோ. (௨௯)

ஓமத் தீவல மேசுழித் தோங்குற
நேமத் தீபநெய் யாதிநி ரப்பியே
பாமத் தீபநெய் வேத்யசெ பாந்தமே
லாமத் தீடுவி சுவற்க ளிப்பரால். (௩௰)

ஊக மண்டலக் குண்டத்து ளோமநெய்
யீக மண்டலித் திட்டெழும் பும்புகைப்
பாக மண்டப சாலைப்ப ரிப்புகை
மேக மண்டல மென்னவிண் மேவுமே. (௩௧)

வேத பாரகர் சந்துவி ளம்பலும்
சாத பாகத வாகம சைவர்கள
போத பாவன மந்த்ரப்பொ ருள்களை
யோத லாயசு பர்வமு மோங்குமால். (௩௨)

தொகுதி பல்பல சூழுமி டங்களி
விகுதி தித்துணை யென்றறி தற்கொணுத்
தகுதி யார்கும்ப வர்த்தனை சர்வமும்
பகுதி யின்படி பூசனை பண்ணினர். (௩௩)

படங்கள் கூர்ச்சம்பு ரோக்கணம் பண்ணிமெய்த்
தடங்கண் டேவிசு வேசன்வி சாலாட்சிக்
குடங்க லாவிழைத் திட்டம ணிய்யொடுங்
குடங்க ளாட்டினர் கோன்மகிழ் வானரோ, (௩௪)

வேறு

இருவுபாத் தியமு மாவா கனமுமா ரோக்ய மீயுந்
திருவுரை யருக்கி யத்தாற் செல்வமே பொருந்தக் காணு
முருவுள மஞ்ச னத்தா லுகந்திடு நலமுண் டாகு
மருவுமெட் டயில மாட்டிற் காமிய போக மல்கும். (௩௫)

சாலிமா வபிடே கித்தாற் றருவது குணமே நெல்லிக்
கோலிய வுரோகந் தீர்க்குங் குளவிந்தம் வசிய மாக்கும்
வாலிய கவ்வி யந்தான் மாபாத கங்கள் போக்கும்
பாலினு லட்ட சித்தி பலித்திடும் பாங்கி னாலே. (௩௬)

வகுத்திடுந் தயிரே யாட்டின் மனத்திடன் வெற்றி யுண்டாந்
தொகுத்தவா ரோக்ய மும்மாந் தூயதே னிசையுண் டாக்கும்
பகுத்திடு கருப்பஞ் சாறு செல்வத்தைப் படைக்கும் வாழை
யுகுத்திடுங் கனிகள் வேண்டும் பயிர்வள முதவு மன்னோ (௩௭)

கருதியே நிரள்பஞ் சாமிர் தந்தருங் கணத்திற் சீர்த்தி
வருதிறன் மாம்ப ழத்தால் மகாசெயம் வருஞ்சி றந்த
விருதியல் வருக்கைத் தீங்காய் வென்றிமுப் புவனத் துண்டாம்
பருதிகேழ் மாத ளைக்குக் கோபத்தைச் சமைப்ப டுத்தும். (௩௮)

வரும்காழு மிச்சுத் துக்க மாற்றிடு மெலுமிச் சுத்தா
ஞெருகொடு மிருத்து நாச முஞற்றிடு மிளநீ ருக்குத்
தருநலிந் திரபோ கந்தான் சாற்றிடுங் குச்சுப் புற்கோ
வருகொலைக் காமி யங்க ளாணவ மகன்றுபோமே. (௩௯)

௩௬. குளவிந்தம்—நறுமஞ்சள். ௩௮. பருதிகேழ்—பொன்னிறத்த

சகந்திர தாரை யாட்டச் சருவபாக் கியங்க ளுண்டாம்
மிகுத்திரள் வில்வச் சேற்றால் விளங்குசா லோக மெய்தும்
மகத்துவ மந்த்ர புட்பஞ் சந்தனக் குழம்மை வார்ப்பின்
செகத்துளார் சிவசா மீபஞ் சென்றுமே சிறப்பா ரென்றும். (௪௰)

தூபத்தைக் காட்டிற் பாப நாசமாந் துலங்கு கின்ற
தீபத்தான் மிருத்து நாசஞ் சாரூபஞ் சேரலாகும்
பூபத்தைச் சவாதைக் கோரோ சனைமருப் புழுகைச் சாற்றிற்
சாபத்தைத் தொலைத்துச் சாயுச் சியந்தரும் பூசனைக்கே. (௪௧)

தேசத்தைக் கொடுக்கு மாயுட் சீரையு முதவு மென்றோர்
நேசத்தை யுடைய வேந்த னிறையகல் கியபண் டங்க
ளீசத்தை யவண்வை யாம லெடுத்தெடுத் தபிடே கித்தார்
பாசத்தைக் கழித்தி சன்பாற் பாசமன் கண்டு கந்தான். (௪௨)

எடுத்தபி டேகஞ் செய்த வதனுங்கெண் மடங்கி மைப்பி
னடுத்தவப் பண்ட சாலை நிரப்பின ரமைச்ச ரன்னம்
மடுத்தனர் மடைய ரெள்ளு ததிசிறு பயற்று வர்க்கங்
கொடுத்ததிந் திருணிச் சாற்றாற் குழைவித்துக் குன்று குன்றாய்.

கறியிடு சம்பா ரன்னங் கம்மென வீச வெண்மைக்
குறியிசை யானைக் கொம்ப னரியன்னங் குவ்வை போலுஞ்
செறியிடை யாத்தி ராதி திகழுப கார வைப்பு
மறியிட விசுவ நாதர் மகிழமுன் னுறப்ப டைத்தார். (௪௪)

அளவிலாக் கதலி வாழை யிலைமிக வழைத்துத் தானந்
துளவிய சுத்தி செய்து தூயவாப் பரப்பிப் பன்னத்
தளவிரி வதிலே முன்னஞ் சமைத்தவை யெல்லாஞ் வெவ்வே
றுளவிதி முறைப டைத்தே முகத்துதி யொடுநல் குற்றார். (௪௫)

அம்பக மலரொந் தாய்க்கு மத்தனும் விசுவே சற்கும்
நம்பகத் தன்பாற் சாந்த நலத்தினன் ஏால மெய்ப்ப
வெம்பகல் விளக்குக் காட்டித் தூமத்தை விரையிற் செய்யச்
சம்பக மாற னீந்தா னிவேதனஞ் சாலச் செய்தான். (௪௬)

௪௧. பூபம்—பட்டாபிடேகம், பணிகாரம். ௪௩. மடையர்—மடைப்பள்ளியில்வேலைசெய்கிறவர். திந்திருணி—புளி. (இக்கவியில் மடையர்குன்றுகுன்றாய் மடுத்தனர் பின்முடிக்க. மடுத்தல்—நிறைத்தல்.) ௪௪. யாத்திராதி—திருவிழாமுதலியவற்றிற்கு. உபகாரணம்—உணவிடுதல். இதுமகேசுரபூஜையைக்குறிப்பதாம். மறியிடம்—மானையிடத்தின்வைத்து ௪௬. அம்பகமலர்—கண்மலர்.

அன்னவை யாவுங் கன்ன லமிழ்தெனக் கொள்வாய் வேடன்
தொன்னவை யூனூர் துய்த்தோய் துய்த்திசே பங்கொண் டுற்ற
வென்னவை தீர்த்தி யென்று னினியசெண் பகமா றன்றான்
முன்னவைக் குகந்து காட்சி முழுதுல கேசன் றந்தான். (சஎ)

நின்றது கண்ட மாற னிரைந்தபே ராசை யோடுங்
குன்றது குழைவாய்க் கொண்டாய்குற்றமுங் குணமாக்கொள்வா
யென்றலு திருவு ளங்கொண் டெம்முல கம்மை யோடு
மொன்றதாம் விசுவ நாத னுளமகிழ் சிறந்து சொல்வான். (சஅ)

உண்பது பூண்ப தார வுடுப்பவும் புனைவுங் கொள்ள
கண்பது கானம் பூக்க ணலனெலாந் திளைப்ப நீயுன்
பண்பது வுடைய மைந்தர் சகோதரர் பற்றோர் கற்பார்ந்
தெண்பது மையரு டன்வாழ்ந் திருத்தியா முகந்தோ மென்றும்

செய்யவாய் மலர்ந்து மேலுந் திருமுடி சூட்டு மாசான்
மையாறு தீக்கை யாசான் வயங்கொள்வித் துவவல் லாசான்
றுய்யபெள ரணிக வோசன் றுலங்குதத் துவப்ர காசன்
மெய்கண்டா னுமையோர் பாகன் மிளிர்பாஞ் சோதிகாவென்றும்

அருளினன் மறைந்தா னெம்மா னரசனுங் கமைத்துப் பார்காத்
திருளினு வதுதீர்த் தாண்டா னினியசெங் கோலோங் கிற்றல
தெருளினர் விசுவ நாதன் றிருத்தளி சிறக்க மேன்மேற்
பொருளினாற்பூர்த்திசெயதுபொருவிலான்வளர்த்தானென்றான். ()

தென்காசி திருநகராக்கிய படலம் முற்றிற்று.

ஆகப்பாட்டு ௬௭௯

இருபத்தொன்பதாவது

திருக்கோயின் மகிமை யுரைத்தபடலம்.

ஓங்குதென் காசித் திருநக ராக்கி யுலகமுற் றுடையநாச்
சியாாம், பாங்குல கம்மை யுடன்விசு வேசன் பரிந்தருள் செயப்
பராக் கிரமன், றங்குநற் கதையி தன்னதென் காசித் தலத்தி
ருக் கோயிலின் மகிமை, யீங்குகேட் பவர்க்கு நன்மையுண்
டாக வினிதெடுத் தினியறை வாமால், (க)

சஎ—வேடன்—கண்ணப்பநாயனார். சஅ. குன்று—மேருகிரி.

இமையவெற் பினைப்போ னிலவெற் பினைப்போ லெழுந்
தம யேந்திரத் தினைப்போற், சிமையமந் தாம்போன் மேரு
மால் வரைபோற் றென்றலஞ் சந்தனத் தேய்வை,' யமையவீற்
றிருக்கும் பொதியமால் வரைபோ லளவிலா முத்துபொன் பூ
நீர், குமையவீழ்த் தெழிலி கூதனுண் டிளிதூய்க் கொழிக்குங்
குற் றாலத்தொல் வரைபோல். (உ)

கொழுந்துகொண் டெர்ந்த கோபுரம் நீண்ட கொடிமாந்
திருமதில் வாய்த, லழுந்துமண் டபங்க ளாயிரக் காலி னதிசய
நூன்முறை யடைவி, னுழுந்துறை சாண்மற் றுளவிதழ்க் கம
லத் துள்ளொளி விரிந்திடு தாளத், தெழுந்துள சிங்கா சன
மபி டேக மியற்றிடு கற்கட்டி வின்ன: (௩)

வலையமென் சலசப் பொய்கைகள் குறிஞ்சி மணிக்கதிர்த்
திரளெறி தூவி, நிலையமுன் றதனுக் கயற்றிரு வீதி னீணி
லைத் தேர்செய்பொன் மணித்தேர், கலையவிர் மதியம் புகுநெடு
ங் கொடிகள் கன்னியர் நடப்பயில் கழகம், விலையவை பெருத்
த பணியவாஞ் செயத்தான் மிகுமொருள் வேண்டுமென் பீரோ.

ஒருவரு மிந்தப் படிசெயப் போகா தெனவுளன் மறுகி
டீர் புனிதப், பருவரா யுழைத்தார் செங்கலாவ் மண்ணுற்பற்
பல மடங்களு மீசன், மருவவே சோற்றுக் குவந்துசெய் தவ
ரே மலைமக ளொருபுற மல்கித், திருவளர் மதியம் புனைந்துறை
சிவனுற் சேவடிக் கமலமே சேர்வார். (ரு)

திகிரியந் தடக்கைக் கண்ணனம் புயங்க டேனெழுக் கூற்
றெழக்கொய்தே, வகிரிதழ் பொருந்த வருச்சனை செயவுண் மகி
ழ்வுறு மான்மழு வண்ணல், பகிரிகழ யோடு முறைதிருக் கோயி
லலகிடப் பரிவொடு மெழுகத், துகிலினை வி தானங் கட்டிடப்
பலன்கள் சொல்சாந்தி ராயணம் பலவாம். (சு)

உறைந்திடு சயம்பு லிங்கங்கள் வாண லிலிங்கங்கட் கொ
ன்றரைக்குரோசத், தறைந்திட விருடி சுரார்நர ரிலிங்க மமை
த்திடி னதற்கொரு குரோசம், நிறைந்தினி தான நிலத்தினு
ளொருவ னெறியுயிர் தணந்திடு வானேற், குறைந்தில வருள்
சேர்ந் தானடிக் கமலக் குளிர்நிழற் கயிலையி னடைவார். (எ)

உருவமிக் குறுசீர் பருவதந் தனிலு முயர்பிர யாகைய
தனிலுந், தருவளர் கேதா ரத்தினு விளங்கு சாலங்க கேத்திரந்
தனிலுங், குருவதி யாட கேச்சுரந் தனிலுங் கோச்சரங் கொங்
கணந்தனிலும், மருவசித் திடுஞ்சால் விமுத்தம தனிலு வளர்
மகேச் சுரத்திலு முன்னே. (அ)

இரணிய கருப்பத் தினுமதீ தத்து மியலுறு வாரணா சியி னும், அரணிரை புலியூர் மதுரைமா தலத்து மரணியத் தாரு கா வனத்தும், தரணியர்ச் சுனத்தும் புடார்ச்சுன புரத்துந் தன்னுயிர் தணந்தவர்க் கெல்லாம், முரணிலாக் கதிநல் கிடுத ன்மெய் யெனினு முதியதென் காசிமே லாமால். (௯)

வீடரு ளத்த னுறைதென்கா சியின்கண் வெவ்வழ லோ ம்பியவ் வழலிற், பீடருள் கீற்றுப் பிறைமுடி யோனைப் பிரச மென் மலர்கொண்டு தூவிற், றூடரு மென்ன வலஞ்செய்து தாழ்ந்து தணந்தவவ் வுடலதிற் றறிப்பிற், மூடருங் கதியே பெறுவரென் றுயர்சை வாகம வேதங்கள் மொழியும். (௰)

குறைவறு கோயிற் காண்டலின் முத்தி கூடிடும் பணிக்கு மும் மடங்கா, மிறைவனைப் பூசை செய்யினன் மடங்கா மிவ் விர தத்தொடு மிசைந்தே, பிறைவனை யண்ணா லைந்தெழுத் தோதிப் பெருகிமுத் தவத்தொடு தணர்ந்தோர், முறைவழு வாது பெறும்பய னுநும் முழுவது மொழிந்திடற் கரிதே. (௰௧)

நன்னக ரந்தென் காசியா லயத்து ளுற்கிண றூனந்தப் பொய்கை, யன்னவீ சான தீர்த்தநல் லாற்றி லாடினர் பிரம கத் திகண்முன், பன்னரும் பவந்தீர்ந் தோங்குமெய்ஞ் ஞானம் படைத்தனர் சிவனுல கடைவார், மன்னமுப் போதுந் தெரிச னை செய்வோர் வானகழ னீழல்வீற் றிருப்பார். (௰௨)

நித்திரை தெளிந்தே தேகசுத் தியினன் னியமத்தை முறை முறை நிறுவி, நத்திரைந் தீனு முத்தெறி தாங்க நதிக்க ணே நிரீக்கண முதலா, முத்திரை கொடுத்தும் மிருத்திரு மலக முறைசுசி பூசிச்சண் முகத்த, சித்திரை நதிநீ ராடினு ரிகத் திற் செயங்கொடு சிவனுல கிருப்பார். (௰௩)

௰௧. பணிக்கு—கோயிற்பணிசெய்தலுக்கு. ௰௨. நாற்கிணறு—அன்னபூரணிதீர்த்தமும், காசித்தீர்த்தமும் சகத்திரேசதீர்த்தமும், வயிரவதீர்த்தவுமுமாம். ௰௩. நிரீக்கணம்—பார்த்தன்முத்திரை. சண்முகத்தசித்திரை—மூழ்குவோர் தீமைகளைச்சண்ணுந்துறைமுகங்களையுடைய சித்திராநதி, (சண்ணுதல்—சபித்தழித்தல்.) அடுத்தபாட்டின்படி ஆறுநதிகள்வந்துகூடுமுகங்களுடையதுசித்திராநதி யென்னலுமாம். கூடுமிடம்—சங்கமுகமெனப்படுதலுங்காண்க.

சிவமது கங்கை யோங்குமைந் தருவி திகழ்தலை மலையைய ளுறு, பவமது தீர்க்குஞ் சதாசிவ நதிபார் பரவுநெல் லீச்சுர நதிமா, தவமது விழைந்தோர் படிதொல்குற் றாலத் தனியழ காறுசண் முகவிந், நவமது செறிந்த சித்திரா நதிதோய் நர ரெலாஞ் சுரர்களா வாரே. (௰௪)

சிவசரி லக்தொட் டுயர்தொல்குற் றாலந் திகழ்சதா சிவ கிரி நெல்லித், தவமலை வரையோங் காரநல் வடிவாந் தனித் திரு வாசியி னடுவே, நவவடி வாகின் றருளுல கேச னன்னக ராயதென் காசி, யுவகையே யுதவும் பிரணவ புராமா மூட்பொ ருள் காண்பவ ருயர்ந்தோர். (௰௫)

மந்தர முலைவெண் ணகைக்கயல் விழியாண் மலைமக ளொரு புற மன்னுங், கந்தர விடத்தெங் கண்ணுதற் பரமன் கவின் கொளா லயத்தின்முன் வந்து, தந்தர நந்தி பீடக்கீழ் முதலாத் தகைவலஞ் சோமசூத் திரந்தனுஞ், சுந்தர விடத்தம விடபமேற் சண்டனுஞ் சூழினிந் திறன்றொழ வாழ்வார். (௰௬)

திரவலத் தடிக்குப் பரிமகப் பேறு சித்தியுண் டெனமறை புகலும், விரவலா யீண்டுச் சூழுவோர் செல்வ வியப்பினை விள ம்பலாந் தகைத்தோ, வரவணி யிறைவன் றெரிசனை புரிவார்க் காகுமே நினைத்தவை யனைத்தும், பாவரு ணந்தி மார்க்கண்ட ன் றண்டி பத்தியான் மேம்படல் பாரீர். (௰௭)

பவளமு முருக்கும் பழிச்சிய வதரப் பைங்கொடி படர் புய மலையிற், றவளவெண் ணிலவு கொழிதிரு மேனி தயங் கிய முக்கணெம் மிறைசீ, ரிவளவென் றறியுந் தரமில ரேனு மேதகா ரணத்தியற் றமிழாற், றிவளவின் னிசைப்பாட் டருள் கவீச்சுரர்கள் சிவனுல கதனில்வீற் றிருப்பார். (௰௮)

௰௪, சிவமதுகங்கை—குற்றாலத்தாறு. ஐந்தருவி—குமாரகோயிலில் வந்துகூடுமாறு. தலைமலையையளுறு—செங்கோட்டையாற்றி னொருபகுதியிற்கூடுவது. சதாசிவநதி—புளியறை வழிவருஞ்செங் கோட்டையாறு நெல்லீச்சுரநதி—வடகரையாறு. அதுநெல்லிமலையூற்றுவந்துகூடுதலாலப்பெயர்பெற்றது. அது கூடுமிடம்வீரகேரளம்புதூர்ப்பக்கத்திலுள்ளது. தொல்குற்றாலத்தனியழகாறு—முதுகுற்றாலத்து அழகனாறு. அதுமணிகருணிகைதீர்த்தத்துக்குக்கிழக்கேவந்துகூடுவது

பெருகுபொன் னிலவு நவமணி பொடித்துப் பெயலன்றிப் பிண்டியா மருவு, மருகுதண் கமல மவிர்த மொன்பான் பன்னிரண் டவிழ்பதி ஞறு, முருகுற வெழுதி யதன்பொகுட் டுமையோ டுறைசிவ னொருபுறத் தமைத்தே, முருகுமொய் தளவ முதலவர்ச் சித்து முன்பணி பவர்நவை தீர்வார். (௬௬)

திருக்கோயின் மகிமையுரைத்தபடலம் முற்றிற்று.

ஆகப்பாட்டு ௩௮௭௪

முப்பதாவது

ஆசாரவிதி யுரைத்த படலம்.

தாங்குவன் புலவர் முகமனுப் பகருந் தன்மையிற் சொலாது மெய் யாவே, யோங்குதென் காசிக் கோயிலின் மகிமை யொருசிறி துரைத்தன மறிஞ, ரீங்குரைத் தாறே முயன்றுமெய்க் காண்டற் கினித்தமி ழகத்தினிற் சைவட், போங்குளார்க் குளவா சாரநல் விதியைப் புகலுவா மினிதெடுத் தன்பால். (௧)

வேறு

ஓதமுகார் சிவசயிலம் புளியரை நெல்லிவெற்பென் றுரைமுக் கூட, மாதிரமார் சயிலப்பன் சதாசிவனீச் சுரன்முப்பேர் மன்னி வாழ்வோன், வேததிரு வாசியதார் தென்காசி நன்னகர் வாழ் விசுவே சன்று, ணத்திரி கூடபதி சண்பகக்கா ரணவத்தி னடுவீ டாமால். (௨)

பேரியலங் நகர்முதன்முத் தமிழகத்துஞ் சைவரெனப் பிறங்குமேலோர், நேரியலா சிரியரு ளாசார விதியெடுத்து நிகழ்த்து வேனென், றூரியனுஞ் சூதனுரை கேட்டமைமி சத்தவரின் பார்ந்து போற்றிச், சீரியயா மதுகேட்டவ் வாறெழுக வருளெனவந் தித்தார் சொல்வான். (௩)

வேறு

கதிரெழற் கைந்து கன்னல்முன் னெழுந்து கண்ணுத லருள்வெண்ணீ றணிந்து, பொதியிலின் மருங்கார் புனிதந்தென் காசிப் புண்ணியை யுலகநா யகியோ, டதிர்கழ லுலக நாயகனுபய வமையைப் பனிநினைந் தேத்தி, மதியொடு புரியும் பொருளறங் கருதி யான்கமண் டலந்தடி யெடுத்தே. (௪)

குண்டிகை நிறையப் புனல்கொடு போய்த்தான் கூடிடை மடிகளோட் டிட்டுத், தண்டிகைத் தந்த நிலத்தினீர் தெளித்துச் சலம் வைத்துத் தலைத்துகில் சுற்றி, யெண்டிகை யதனி னிருந்துபோய்த் தென்பா லிராவட பாற்பக னோக்கி, கண்டிகை தலைமுந் நூல்செவி யேற்றிக்கை தட்டித் துரும்புபார்ப் போட்டே. ()

மலத்தினைக் கழித்தே னறுமணு னீரால் வழுவறக் குறிகுதங் கழுவி, பலத்திவர் கைகா லழுக்கிலா தலம்பிப் பல்விளக் கிடுதல்வேல் பூலால், நலத்தியை கொய்யான் மாவிலை யதனால் வன்குசெய் தொளிர்முகங் கழுவி, நிலததினி தழகாந் தூய்மைய ராகி னீணெறி பிசகிலா தாடி. (௬)

பன்னலுற் றிடாது பணைநெல்லித் தூளாற் படிந்துநீர் மடிகடோய்த் துடுத்தி, யுன்னலு மிருத்தை யிடக்கையின் முக்கூ றுருட்டிமந் திரித்துடற் பூசி, யன்னலும் நீரிற் சுற்றினுங் கவரைந்து வ்தனங்கன் மூக்கினைப் பிடித்துக், கன்னலுண் மூழ்க்க காயமே துவர்த்திக் கலையிற் சந்தியைக் கழித்தே. (௭)

படித்தலை வீசு வெள்ளநீ ரதனின் பயங்கொள்ளும் பத்திலைக் கழுவிப், பிடித்ததன் வாயின் வேண்டுகில் பொதிந்து பின்புவா யமிழ்ந்துறப் பிறணீர் வடித்தலை யெடுத்துக் கொண்டுவந் ததனால் மகிதலந் திரவியஞ் சுசியாய். முடித்தமு தமைத்தே முதல்வற்குப் பூசை முயலுதன் முறையெனலாமால் (௮)

அலகிடும் போதும் மெழுகிடும் போது மரியதோர் காய்கனி யதனை, யுலகினி லரியும் போதினு மடிசி லாக்கிட வட்டினும் போதும், விலகினில் லாமம் லோடுநீ ருடனே மீன்புழுச் செந்துறுங்குடத்துள், ளிலகியவ் வுயிற்குக் கொலையுரு மதனாலெடுத்துநீர் வடித்திடல் வேண்டும். (௯)

ஒருவரு முயிரைக் கொலைசெய லாகா தூறுசெய் தவர்வருந் பிறப்பில், வெருவவர் தழிக்குங் கன்மமா முருவாய் விங்ருந் பிறப்பில், வெருவவர் தழிக்குங் கன்மமா முருவாய் விங்குமவைச் சைவரை வாழ்த்துவ, ருருவளர் கோயில் களிலுயிர் செருக்குங் கொலைஞரைத் தேவுகள் கொடிய, கருவழித் திடுமா பதகராக் கருதிக் கடிந்திடு மெனமறை கழறும். (௰)

௫. மடிகள்—உடைகளை. தண்டிகைத்து—கைத்தடியை நட்டு. கண்டிகை—கண்மணிமாலை, முந்நூல்—பூணூல்.

முறையிலா முறையி னடப்பவர் தமக்கு முவரு மியற்ற லும் முறைநூ லறைவகை வினவி மன்னர்கள் கோற லாற்ற லங் கொலையிலை யருளாஞ். சிறையுயிர்ச் செருக்கு மகத்தினிற் சிறிய தெய்வவூட் டருளவிற் கொலையின், றுறைபற மாமென் றுரைப்பரு முளரா லவாற முவர்க்குநன் றென்க. (௰௧)

கொலைபிற்கொ டியாரை வேந்தொறுத் தல்பைங் கூழ்களை கட்டத னொடுநேர், தலைமறைத் தமிழ்தேர் பழையனுங் களை கொய் தவிற்புடை பெயர்த்தயல் வைத்தல். நிலையற மாக் கொள் வழக்கறி மேலோர் நிருபருக் குங்கொலை யறமென், றலை வுரைக் கில்லா ஈதலாற் கொலையை யுடபெனல் புறமறை யாயால்.

நிரைதரு பிரம மறிந்தவர் செய்யு நியமமா தியிற்றளர் வுறி னுங், குறையென லாகா தறிஞரிற் குறைகாண் குபதரா காது லங் குறைகண், டறையதிற் றீர்த லழகென வறிக வறிஞரை நடத்துத லருளாண், முறையிலா ரவரை யெள்ளிடி னரகின் மூழ்குவர் நலோர்துதித் துய்வார். (௰௩)

பிடியன நடையார் தமைக்குரு மாரைப் பேசிலாப் பசுக்க ளை யாசை, மடியிலாத் தமிழ்தேர் புலவரை யழித்தல் மனங் கொதிப் பித்திடல் வதைத்தல், நெடிதெதிர்த் தாட லுதவிடா திருத்தல் நீசரின் செய்கையாம் மேலோர், படியிலந் நீசர்ப் பார்த்திடிற் பாவம் பரிதிபைப் பார்த்தொழித் துய்வார். (௰௪)

வேறு

மாசிலாதி சைவர்வாழி மறைகள் வாழி தமிழ்மறைத்
தேசம்வாழித் திசைகள்வாழி செந்நெல்வாழி யுலகுமை
காசிவாழி யுலகநாதர் கருணைவாழி கோன்மைகற்
பாசிலாது வாழியீச னடியர்வாழி வாழியே. (௰௫)

௰௨, பழையன்—பாண்டியன். அயல்வைத்தல்—வேறிடத்தில் நிலையிடுதல். அதுபயிர் வளர்ச்சியைக்கெடுக்கும் களைகளை வேரொடுபிடுங்கி பிறிதோரிடத்தில் வைத்தல் போல மக்கள் வளர்ச்சியைக் கெடுக்குமாக்களை அவர்களுக்கு இடையில் வைக்காமல் நாடு கடத்திவிடுதல் -செங்கோலுழவர்க்குக்கடமைஎன்பதாம். நிருபருக்கும்— அரசருக்கும். இதில்வரும் உம்மையால்வேள்விசெய்வோருக்கும், பேய்க்கூட்டுக் கொடுப்பவருக்கும் கொலை அறமாதல்போலஎன முன்வருவித்துக் கொள்க. தமிழகத்தரசர் வேட்டையாடினர் என்பதும் புறந்தழீஇயோர் வழக்கெனவறிக.

இக்கதைக்க ணன்புவைத்தெ டுத்திசைப்பர் கேட்பவர்
பக்கணட்பு வைத்துவேண்டும் பரிசினல்கும் மேலவர்
மிக்ககாமி யங்கள்யாவும் விசுவநாத னன்புநன்
மக்களுஞ்சி றப்பவெய்தி மன்னர்மெச்ச வாழ்வரே. (௰௬)

வேறு

ஆயிரத்துப் பதினாறு மாண்டிற்பங் குனியினிரு பத்தேழா நாள், ஞாயிரதி சோதிதுலா லக்கினத்திற் றென்காசித் தொல் புராணம், பாயிரத்தோ டாயிரத்தெண் ணூற்றிருபத் தெட்டுப் பாப் பகர்ந்து முற்றிற், றீறயிரவும் பகலுவிசு வேசனன்பார் கு லாக்கி யெழுது மீதே. (௰௭)

ஆசாரவிதி யுரைத்த படலம் முற்றிற்று

ஆகப்பாட்டு—௲௮௱௧.

தென்காசித்தலபுராணம் முற்றுப்பெற்றது

சிவம் சிவம் சிவம்

22.5.61